# சிகிச்சாரத்நதீபம்

என்னும்

வைத்திய நூல்.

T
6594

T.6594



இஃது

வைத்திய வித்வன்மணி

சி. கண்ணுசாமி பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை :

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

உ

கடவுள் துணை.

# சிகிச்சாரத்நதீபம்

என்னும்

## வைத்திய நூல்.

இரண்டாம் பதிப்பு

இஃது
ஆயுர்வேதத்தைக் கற்க விரும்பும் வித்தியார்த்திகளுக்குப்
பயன்படுமாறு சாஸ்திர யுக்தமாகவும்,
அனுபவபூர்வ மாகவும்

வைத்திய வித்வன்மணி
சி. கண்ணுசாமி பிள்ளை யவர்களால்
இயற்றப்பட்டதை,

சென்னை:
B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்
அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

1922

ரிஜிஸ்தர் செய்தது. விலை ரூபா 2-8.

Sun Of India Press, Choolai Madras.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்,

"சிகிச்சாரத்நதீபம்'' என்ற தலைமைப் பெயர்வாய்ந்த இந்நூலின் ரிஜிஸ்தர் சுதந்தரத்தை 1919௵ செப்டம்பர்மீ 1௳ சி. கண்ணுசாமி பிள்ளை அவர்களிடத்திலிருந்து கிரயத்திற்கு வாங்கியிருப்பதால், இனி இந்நூலை யாவரேனும் எமது அனுமதியன்றி பதிப்பித்தவர்களும், பதிப்பிக்கிற அச்சுக்கூடத் தலைவர்களும்,1887-ம் வருஷத்து 25-வது ஆக்டின் 20-வது பிரிவில் 6-வது விதியின் பிரகாரம் சகல நஷ்டங்களுக்கும் பாத்தியப்படுவார்கள். அல்லாமலும் காபிரைட்டை உல்லங்கணம் செய்த குற்றத்திற்கும் ஆளாவார்கள்.

இப்படிக்கு,

**B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,**

புஸ்தக வியாபாரிகள்,

7-34, நைனியப்ப நாயக்கன் வீதி,

பார்க் டவுன், சென்னை.

# விளம்பரம்.

## சிகிச்சாரத்நதீபம்

## இரண்டாம்பாகம்

### விலை ரூபா 3—0—0

பல வைத்திய சிரேஷ்டர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க இந்நூல் அநேக நால் ஆருய்ச்சியுடன் மிகுந்த உயர்ந்த பல முறைகளை யொருங்கத்திரட்டி வைத்திய வித்வன்மணி ம-ா-ா-ஸ்ரீ, கண்ணுசாமி பிள்ளை அவர்களால் ஆயுர்வேதத்தைக் கற்க விரும்பும் வித்தியார்த்திகளுக்கு பயன்படுமாறு சாஸ்திரயுக்தமாகவும், அனுபவ பூர்வமாகவும் எழுதி அச்சிட்டு வருகிறது. கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் முன்னதாக ஆர்டர் செய்துக் கொண்டால் அவரவர்களின் விலாசத்தை பதிவு செய்துக்கொண்டு புஸ்தகம் அச்சுமுடிந்தவுடன் வி. பி. போஸ்டு சிலவின்றி அனுப்பி வைக்கப்படும்.

எமது விலாசம் :

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,

புஸ்தக வியாபாரிகள்,

பார்க் டவுன், சென்னை.

# அரும்பத அகராதி

---

| | | |
|---|---|---|
| அங்கி | - | கவசம் |
| அடுக்களை | - | அடுப்பு |
| இருமஞ்சள் | - | மஞ்சள், மரமஞ்சள் |
| இருநன்னாரி | - | சிறுநன்னாரி, பெருநன்னாரி (மாவிலங்கிழங்கு) |
| கிராசம் | - | சிறிது சிறிதாகப் போடுதல் |
| குழி அம்மி | - | கல்வம் |
| சட்டை | - | அதரு |
| சமாதி | - | பூமியில் புதைத்தல் |
| சாதுர்சாதம் | - | இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, நாகேசரம் ஏலம் |
| சுருக்கு | - | சிறிது சிறிதாக மூலிகைச் சாற்றை விட்டுக்கொண்டு வருதல் |
| சூப்பு | - | மாம்ஸ சம்பந்தமான சத்துநீர் |
| தசமூலம் | - | வில்வவேர், மின்னைவேர், ஈச்சுரமூலி, பாதிரிவேர், பெருமரவேர் பட்டை, கண்டங்கத்திரி, இருவிதம், ஈரிலைத்தாமரை மூவிலைத்தாமரை, நெருஞ்சி |
| ததிமஸ்து | - | தைரிலிருந்து வடித்த ஜலம் |
| தானியபுடம் | - | கேழ்வரகு, கருங்குவை யரிசி முதலியவைகளின் இடையில் வைப்பது |
| திரிகடுகு | - | சுக்கு, மிளகு, திப்பலி |
| திரிபலை | - | கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய் |
| திரிசாரம் | - | சர்ஜ சாரம், எவாச்சாரம், நவாச்சாரம் |
| பஞ்சமூலம் | - | திப்பலிமூலம், பேரரத்தை, சித்திரமூலம், சுக்கு, சிறுதேக்கு |
| பஞ்சலவணம் | - | இந்துப்பு, வளையலுப்பு, சோற்றுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு |
| பழரசம் | - | எலுமிச்சம்பழரசம் |
| பிரஞ்சிகாடி | - | பிரான்சு தேசத்திலிருந்து வரும் திராட்சைரசம் |
| பிஸ்மல்லா | - | கடவுளின் பெயரால் அருப்பணம் செய்து |
| முக்கூட்டு எண்ணெய் | - | பசுவின் நெய், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய் |
| வெப்புநீர் | - | ஆவிநீர் |
| ரவிபுடம் | - | சூரியபுடம், வெய்யலில் வைத்தல் |

# அளவின் விவரம்

அங்கிலேய குறிக்குத் தமிழ் இலக்கம்

1 - க (ஒன்று); $\frac{3}{4}$ - ா (முக்கால்); $\frac{1}{2}$ - உ (அரை); $\frac{1}{4}$ - வ (கால்)

$\frac{1}{8}$ - ஞ (அரைக்கால்) ; கொண்டது.

| | |
|---|---|
| $3\frac{3}{4}$ குன்றி | 1 பணவெடை |
| 32 குன்றி | 1 வராகனெடை |
| 8 குன்றி | 1 மாஷா |
| 40 குன்றி | 1 கழஞ்சி |
| 1 தோலா | 1 ரூபாய் |
| 3 தோலா | 1 பலம் |
| 24 தோலா | 1 கச்சா சேர் |
| 72 தோலா | 1 பக்கா சேர் (படி) |
| 40 தோலா | 1 ராத்தல் |
| $3\frac{1}{4}$ வராகனெடை | 1 தோலா |
| 10 வராகனெடை | 1 பலம் |
| $1\frac{1}{4}$ வராகனெடை | 1 கழஞ்சு |
| 1 வராகனெடை | 9 பணவிடை |
| 8 பலம் | 1 கச்சா சேர் |
| 40 பலம் | 1 வீசை |
| 16 பலம் | 1 நாழி |

# ஆக்கியோன் குறிப்பு.

அறிவுப்பெருஞ் செல்வர்காள் !

**நா**ன் அறிவுபெற்ற காலந்தொட்டு ஆயுர்வேத வித்தையில் பேரவாக் கொண்டு பல ஆன்றோரை அடுத்துத் தொண்டுபுரிந்தும் பண்டிதர்களோடு கலந்துறவாடியும் அளவளாவியும் அனுபவசித்தமாக உயர்ந்த பலமுறைகளைக்கற்று பெரும்பொருள் செலவிட்டு அவிழ்தங்களை முடித்துத்துன்புறும் நோயாளிகளுக்குக் கொடுத்து அவர்களடைந்த பெருங்குணங்கண்டுப் பேரின்ப மெய்தினேன். பண்டைக்காலத்து நம் ஆன்றோர்கள் எத்தனையோ நுட்பமாகவும் சுருக்கமாகவும் அறிவுக் கண்கொண்டு நூல்கள் எழுதியிருப்பினும் அவற்றை நன்குணராதும் அனுபவமுடைய தேசிகன்பால் சேர்ந்து கைப்பாகம் என்னும் செய்பாகத்தைக் கற்றுணராமலும் இத்துறையில் இறங்கித்தமக்கும் பிறர்க்கும் கேடுசூழச்செய்து கொள்வதுமன்றி அத்தகைய பெருநூல்களுக்கும் குறை யுண்டாக்குகின்றனர். ஆதலின் "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்." என்னும் கருத்துக்கிசைய என்பெரியோர்கள் அனுபவசித்தமாகக் கையாடி வந்த பலமுறைகளையும் வடநூலின்கண் சரகஸம்ஹிதை, சாரங்கதர ஸம்ஹிதை, பைஷஜ்யரத்நாவளி, பரிபாஷை முதலியவற்றில் செய்தனுபவப்பட்ட சிலவற்றையும் இந்துஸ்தானியில் கூறப்பட்ட அனுபவமான சில ஔஷதங்களையும் பதினெண் சித்தர்களால் இயற்றப்பட்ட தமிழ்க் கிரந்தங்களில் பெரும்பான்மை அனுபவ பூர்வமாக ஏற்பட்ட பாகங்களையும் ஒருங்குதிரட்டிச் செய்பாகம் பிறழாது முடிக்கும்வண்ணம் சித்திரங்கள் வாயிலாகக் கருவிகளின் உபயோகங்களை வரைந்திருக்கின்றேன். இவை யாவும் நன்குணரத் தக்கன. இந்நூலில் கூறப்பட்டுள்ள எடைகள் சில இடங்களில் சாஸ்திரத்திற்குச் சிறிது முரண்பாடாயிருப்பின் பிழையென்று எண்ணலாகாது. காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு மருந்தின் வீரியத்தைப் பெருக்கவோ அல்லது சுருக்கவோ வெண்ணிச் செய்தடைந்த நற்பயனை முன்னிட்டு

எழுதலாயிற்று. இந்நூல் அச்சிட்டு முடியும் வரையில் என்னால் அதிக ஊக்கத்துடன் பார்வையிடப்பட்டது. தவிர பலவைத்திய சிரேஷ்டர்கள், அனுபூதிமான்கள் கண்ணோட்டம் அமையப்பெற்றுள்ளது. இம்முறைகளைப் புத்திமான்கள் அங்கீகரித்துச்செய்து நலம்பெறவும், இந்நூல் இடையூறின்றி முடிந்தமை நோக்கியும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை மனம் மொழிமெய்களால் சிந்தித்து வந்தித்து வணங்குகின்றேன்.

“எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு”

இங்ஙனம்:

வைத்திய வித்வன்மணி

சி. கண்ணுசாமி.

ஸ்ரீரஸ்து

பர : ப்ரஹ்மணே நம:

# பாயிரம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருவளஞ்சேர் நந்தேயஞ் செழிப்புறவும்
மிடிதேய்ந்து திகைப்பே கொண்டு
மருவளஞ்சேர் நம்மாட்டே நணுகாது
மறைந்தொழிய மாட்சி யோங்க
உருவளஞ்சேர் மெய்யதுதா னுறுநோயி
னுலையாம லூற்றங் கொள்ள
குருவளஞ்சேர் பெருமுறைகள்
கூறுவதே யெந்தமதா மாயுர் வேதம்.

**ப**ண்டைநாள் தொடங்கிப் பரதகண்டமெனப் பெயர் பெற்று நிலவும் நமது இந்திய நாட்டில், ஜீவராசிகள் பலவகைப் பட்ட பிணிகளாலும் நலிவுறாது, திடகாத்திர முடையவர்களாய் வாழுதற்கு, ஆதிகாலத்தில் நான்முகக் கடவுள் இந்திரனுக்கு உப தேசிக்க, இந்திரன் அஸ்வினி தேவர்களுக்கு அருளிச்செய்ய அஸ்வினி தேவர்கள் பூலோகத்தில் தன்வந்திரி பகவானுக்குப் போதிக்க, தன்வந்தரி பகவான் ஆத்திரேயருக்கும், ஆத்திரேயர் சரக முனிக்கும் புலப்படுத்த, இவ்வாறு விரிந்து பரந்து இந்தியா முழுதும் இணையற்றபடி புகழும் பெருமையும் சீரும் பேரும்பெற்று, உலகமெங்குமே உண்மை தோன்றவும், நலியும் கலியும் நாசமடைந்து போகவும் விளங்குகின்றது. ஆயுர்வேத மென்னும் அரிய வைத்ய சித்தாந்தம் ! திவோதாசனென்னும் மறு பெயர் வாய்ந்த தன்வந்திரி பகவானியற்றியது, அரமேகலா என்னும் அழகிய நூலாகும். இவரது சீடராகிய சரகரியற்றியது சரகமேன்னும் அரிய நூலாகும் இன்னும் பின்னோரியற்றிய நூல்க ளெண்ணிறந்தன; தேகக்கூற்றையும் நோய்களின் பாகுபாடுகளையும் அவைகட்குப் பொருத்த முடையனவாய் இன்றியமையாதனவாய், கெடுதி

பயக்கும் தன்மையிலவாயுள்ள சிகிச்சா விசேஷங்களையும் சுருதி, யுக்தி, அனுபவ சித்தமாய் அன்னோர்கள் அருளிச் செய்துள்ளார்கள்.

இத்துணைப் பெருமை வாய்ந்த ஆயுர்வேத ரகஸ்யங்களை இடம் பொருளேவல், காலபேதங்களுக் கிணங்கத் தக்கோர்பாலும், கற்றோர்பாலும், பயின்றோர்பாலும் நெறி முறையாக வுணர்ந்து, உயர்ந்த ஔஷதங்களைத் தகுந்த முறையாய்ப் பெரும்பொருள் செலவிட்டு முடித்தும் பெரும்புகழ் படைத்தவர், எனது நண்பரும் இவ்வரும் பெரும் நூலை எளிதினுணருமாறு இனிதின் முடித்தவருமாகிய ம-௱-௱-ஸ்ரீ சி. கண்ணுசாமிப் பிள்ளை என்பாரே யாவர்.

நவீன நாகரீகம் மேற்கொண்டு நிலவும் நமதம் நாட்டில், அதனுடைய சீதோஷ்ண நிலைமைக்கும் தேகதத்துவத்தின் அமைதிக்கும், நம்மனோர்பால் அநுபவம் மிகுத்துள்ள நம் ஆயுர்வேத பண்டித ரத்னங்கள் அளித்துள்ள அருமையான முறைகளே அனைத்திற்கும் சுககரமானவையாய் நிற்கப் பெரும்பாலோர் தற்காலம் இதனைப் பாராட்டிச் சீராட்டாது, புறநாட்டு முறைகளைக் கையாடி வருவது குறையான செய்கையா மென்றும், ஏனைச் சில்லோர் எதனையுமே யுணராது, ஆன்றோர் நூல்களை யறியாது, அநுபவ மென்பதையே யடையாது, கற்றறிந்தோர்பால் கணமேனுந் தரியாது, தலைமாட்டு வைத்தியர் கால்மாட்டு வைத்தியர்போல அறியாமையிலேயே அகம்பாவம் படைப்பது அதனினும் கொடிது கொடிதாமென்றும், ஈண்டு யான் இயம்பவேண்டியிருக்கின்றது.

இத்தகைய குறைகளை வேரோடு களைந்து வெந்நீர்வார்க்க நேராக வந்தது சீரான இந்தச் "சிகிச்சா ரத்நதீபம்"! இதனைக்கற்றோரும் மற்றோரும் கண்ணுற்று, அதனுள் காணப்படும் அருமையான முறைகளைக் கையாண்டு, பேரானந்த மடைவார்களென இவண் பிரார்த்தியா நின்றதோடு, இன்னும் இதனைப்போன்ற அரிய பெரிய நூல்களை மேலும் மேலும் இயற்றி, (குன்றிலிட்ட விளக்கைப்போல் வெளிப்படையாகாது குடத்திலிட்ட விளக்கைப் போல் மழுங்கி அழுந்திக் கிடக்கும்) செய்ம்முறை, கைம்முறை, மூலிகைகள் முதலியவற்றை, அனைவரு முணர்ந்து ஆனந்த முறும்படி, நமது நண்பர் கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் செய்வார்களென யான் பெரிதும் விரும்புகிறேன்.

இந்நூலைத் தமிழுணர்ந்த ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டுகின்றேன். யான் கூறவேண்டுவது மற்றொன்றுண்டு. அதைக்கூறி இதை முடிக்கிறேன். ஆயுர்வேத சாஸ்திரம் அகஸ்தியர் நாள் தொட்டு, இந்நாட்டில் நிலாவிக் குலாவுகின்றது. அகஸ்தியர், புலஸ்தியர் முதலிய மஹருஷிகளால் இந்நாட்டில் பிரவசனஞ் செய்து, பின்னர் பதினெண் சித்தர் முதலானவர்களால் பாகுபாடு செய்யப்பட்ட இவ்வருமையான முறையை நாம் இழப்பதினும் கேடு பயப்பது வேறொன்றில்லை. பொன்னே போல் அதனைப் போற்றி, மின்னே போன்ற இக்காயத்தை மின்னே போலாக வொட்டாது, நீண்ட ஆயுளும் குறைவற்ற சுகமும் நிறைவுற்ற செல்வமும் ஒவ்வொருவரும் அடைவராக வென்று ஓங்கியுலகளந்தவனைப் பாங்குபெறச் சிந்தியா நின்றேன்.

இங்ஙனம்,

N. C. ஸ்ரீ கண்ணபிரான்,

ஆரியமத உபந்யாசகன்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை, முத்தியால்பேட்டை ஹைஸ்கூல்

**தலைமைத் தமிழ்ப் புலவரும், பாவலராற்றுப்படை ஆசிரியரும்,**

**சைவசித்தாந்த மஹாசமாஜ கௌரவ உபந்நியாசகரும்**

அத்தியக்ஷருமாகிய

ஸ்ரீமான்

**மணிமங்கலம்-திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்**

இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

அறுசீரடி விருத்தம்

திப்பியஞ்சேர் தமிழ்நாடு செய்ததவந் திரண்டமைந்த செல்வ மென்ன
வெப்பொருளு மருத்துவத்தி லெடுத்துரைக்கு மியல்பினு லேற்ற மேய
செப்பரியதருவென்னச்செழுந்தமிழோர்வைப்பென்னத் தரையில்யார்க்கு
மொப்பரிய வமிழ்தமென நுனித்தறியு மருப்புலவ ருவந்து போற்ற. (1)

வெய்யபிணி பலவற்று னெஞ்ஞான்று நனிவருந்தி வெதும்பு வார்கள்
செய்யமுறைபலப்பலவாய்ச்செப்பமுறத் தெளித்துரைத்தசெவ்விநோக்கி
யுய்யுநெறி பெற்றேமென் றிருதோளு மினிதுதட்டி யேமாப் பெய்த
நொய்யமருத் துவர்புழுங்கி யடிவயிற்றைப் பிசைந்துமனநோயுங்கொள்ள.

கற்றவர்க்குங்கல்லார்க்குமங்கையர்க்குஞ்சிறுவருக்குங்கருத்துத்தோன்றப்
பொற்றவுரைநிகழ்த்தலொடு பலபடமும் பொற்புறவே பொறித்துக்காட்டி
யற்புமிக வற்புதமா முறையெவையும் வெளிப்படுத்தி யருளுங் காட்டும்
நற்பெறுநூ லிஃதென்றே நிதியமென மனையமைக்க நாட்டங்கொள்ள(3)

உலகுதொழு குறுமுனிவ னுவந்துரைத்த நூற்பொருளு முண்மை மேவு
மலகில்புகழ் சித்தர்களு மேனையநற் புலவோரு மளந்து கூறு
பலபொருளும் வடமொழியி னுண்பொருளு மநுபவமும் பகுத்து ரைத்து
நலமுறவே நாடியொடு செய்பாகங் கைப்பாக நலக்கச் சேர்த்து. (4)

கற்பவர்க்குக் களிதுளும்பத் தைலஞ்சிந் தூரம்பற்பங் கவினக் கூட்டி
நற்பொருளும் பூரிப்பப் பாயிரமா வவ்வவற்றின் நுணுக்க நாட்டிப்
பொற்புறுநற் கண்ணாடி யெனவிளங்க முடிக்குமுறை பொலியத் தீட்டி
யற்புதநூல் சிகிச்சாரத்ந தீபமென வருள்செய்தா னவன்யா ரென்னில்(5)
மருத்துவநூல் பலமொழியி லாராய்ந்து மதிநுட்ப மதனை வாய்ந்தோன்
திருத்தமுறு கைம்முறையில் துறைபோகிக்குரவனெனத்திகழுஞ்செம்மல்
பொருத்தமுறவனுபவத்தின் நுண்பொருளை வருத்துரைக்கும் புலமைமிக்
கருத்துறநோய்நாடியது தணிக்கும்வாய் நாடிச்செய் கல்விவீரன். [கோன்
அன்பீகை யடக்கமின்சொற் பொறைமுதலா மருங்குணங்களான்றதூயன்
இன்போடு முகமலர்ந்தே பயன்நோக்கா தின்மருந்து மினிதி னீவோன்
என்போடு முயிர்கனியு நட்புடையா னெவ்வெவரு மேத்து நீரன்
பொன்போலுங் குணமுடையா னெனக்கூறும் புகழ்மைமிகு புந்தியாளன்.
தமிழ்ச்சுவைதேர் புலவருக்குப்பயன்றூக்கா நன்றிபல த்கவிற்செய்வோன்
அமிழ்தெனவே வுறையளித்தென்பாலன்புமிகக்கொண்டவருமைநண்பன்
இமிழ்திரைசூழ் வையகத்து லென்னிருகண்மணியென்ன விலங்குமேந்தல்
கமழ்தருசீர் கண்ணுசா மிப்பெயரிற் கவின்றிடுநற் கலைவல் லோனே. (8)
சீர்கலியை யாயிரத்துப் பதினைந்து பதினுறிற் செல்லா நின்ற
ஏர்பெறுநல் லானந்த வகவையினின் மகரரவி யிலங்கு பூசம்
பேர்பெறுமோர் சிகிச்சரத்ந தீபநூல் பேருவகை பெற்று வாழப்
பார்தன்னிற் கண்ணுசா மிப்புலவன் செய்தளித்துப் புகழ்பெற்றானே. (9)

---

ஓது

தாயுமான சுவாமிகள் பாடல்
மெய்கண்ட விருத்தியுரை யாசிரியராகிய
சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்
ஸ்ரீலஸ்ரீ கலியாண சுந்தர யதீந்திரர் அவர்கள்
இயற்றிய

பன்னிருசீர்க்கழி நெடில் விருத்தம்

கடல்போலுமுலகதனில் விரிந்தொளிரும் வைத்தியநூல்களைநன்காய்ந்து
கருணையுட னேதிரட்டி மாந்தர்பா ழேய்கள்பல கண்டபோது
திடவறிவா லருமவிழ்த மேமுடித்துத் தாங்களே தீர்த்துக் கொள்வான்
திகழ்சிகிச்சாரத்னதீ பப்பனுவல் புவிவியக்கச் செவ்வேசொற்றான்
இடரொழித்தி டுமொயுர் வேததிவா கரனென்ன விருஞ்சீர் கூற்றோன்
இனியசொல்சாந்தகுணமீகைதயை யுயர்ஞானவேற்றம்வாய்ந்தோன்
சுடர்தருமுக்கண்ணுதலோன் றிருத்தாள்க ளுளமதனிற் றுலங்கநின்றோன்
துதிகோமளீஸ்வரன்பேட் டைக்கண்ணுசாமிப்பேர்த் தூய்மையோனே.

இது

திருப்போரூர்

ஸ்ரீ கந்தஸ்வாமியார் தேவஸ்தான ஸ்வாதீன தர்மகர்த்தரும்,

மடாதிபதியுமாகிய ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகளாதீனம்

பதினோராவதுபட்டம்

## ஸ்ரீமத் - திரு. சிவப்பிரகாச சுவாமிகள்

இயற்றிய

### ஆசிரிய விருத்தம்

மதிக்க பரனுமைக் கருளுமாயுள் வேசத் தொகுதி மாண்பிற் றேர்ந்தே
யுதிக்குமனுபவ வழியிற் சிகிச்சா ரத்தின தீப மூரைத்தான் பாரிற்
கதிக்கு மனற்குலன் கண்ணுசா மியெனுங் கவிவல்லோன்கற்றோர்மற்றோர்
பதிக்க வுளத்தந் நூல் வெற்பிடுதீப மெனவுலகில் வாழ்க மாதோ.

---

வித்வான் ஸ்ரீமான்

## ம. இராஜகோபால பிள்ளையவர்கள்

இயற்றிய

### சந்தவிருத்தம்.

உற்றா னளவும் பிணியளவு முரைசெய் காலத் தினதளவும்
முற்றா சறநூலுணர்வுகொடு முறையோர்ந் தவர்போற் பலர்பன்னூல்
சொற்றா ரெனினு மினுநுட்பந் துலங்கா தலமந் தழல்கின்றார்
நற்றா ரணியோ ரிக்குறைதா னலிய நலனேங் கிடநெடுநாள். (1)

கற்றுங் கேட்டும் வரன்முறையிற் கடைபின் றனுபோ கங்கொண்டும்
முற்றுந் துறந்த முனிவர்கண மொழிநூன் முந்நீர் மூழ்கிக்கிஞ்
சிற்றுங் குறைவா கடமெய்தாத் திறத்தின் முறைக டெரிந் தெளிதிற்
பற்றும் பரிசி னனிவிளக்கிப் பயந்தா னொருநூல் பார்மினரோ. (2)

பிணிய னதுதீர்ப் பானவிழ்தம் பிழையா வகைசெய் வழியறியும்
பணிய னெனுமிப் பகுதிதிறம் படைத்த கண்ணு சாமியெனும்
புணிய னெழிற்கோ மளநகரிற் பொலிலோ கநாத வள்ளறரும்
இனிய னரிதிற் செய்தளித்த சிகிச்சா ரத்ன தீபமிதே. (3)

ஸ்ரீமத் - வித்வான்

## ஆ. மே. சென்னகேசவுலு நாயுடவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

பொன்பூத்த தாமரைவாழ் நான்முகனுர் படைத்திட்ட பூமியின்கன்
மின்பூத்த மாடமலி கோமளேச் சுரபேட்டை மேவத் தோன்று
மன்பூத்த வன்னியர்தங் குலதிலகன் மாண்புகழின் மலிந்த சீர்சால்
கொன்பூத்த லோகநா தக்குரிசில் புரிதவத்தின் குலவ வந்தோன் (1)

அம்புவியில் வந்துதித்த கண்ணுசாமிப் பெயர்கொ ளறிவின்மிக்கோன்
வெம்புபிணி வாதபித்தஞ் சிலேத்துமத்தால் வருமென்று விளம்பு நூலை
நம்பியதி னவின்மருந்தை சித்தர்நூல் பலதேர்ந்து நலமா யெல்லா
மும்பர்களு மதிசயிக்கச் சிகிச்சாரத் தினதீப மியற்றி ஞனல் (2)

இத்தகைய பெருநூலை யியற்றினவ னுரென்னி லிருநீர் வைப்பின்
சுத்தமுடனறிவடக்கம் பொறைவாய்மை சொலற்கரியசுகுணமுற்ருன்
எத்தகைய ராயிடினு மெவ்வளவு பேதமின்றி யினிமையோடு
மொத்தமன முடனடக்குங் கண்ணுசாமிப் பெயர்கொளா ரியோ னம்மா(3)

---

ஸ்ரீமான் ஆ. மே. சென்னகேசவுலு நாயுடவர்கள்

மாணுக்கருளொருவராகிய

செந்தமிழ்க்கவி

## பிரம்மஸ்ரீ சி. கி. சுந்தராச்சாரியாரவர்கள்

இயற்றிய

விருத்தம்

சீர்பூத்த குறுமுனிகொங் கணர்சித்தர் முதலானோர் சொற்றிடுமா
யுர்வேத சிறந்த நூலை
ஆர்பூத்த மனமாரப் படித்தறிந்து கற்றவணம் பற்பலமா
வவுடதங்க ளரிதி யற்றி
நார்பூத்த வுலகோர்க டமக்குற்ற பிணிக்குதவி யநுபவமாய்க்
கைவந்த நன்மை யெல்லாம்
பேர்பூத்த யாவர்க்கு முதவசிகிச் சாரத்ந தீபமெனு
மொருநூலைப் பிறங்கச் செய்தான். (1)

செய்தவன்வன் னியகுலத்து லோகநா தக்குரிசில் செய்தவமே
யோருருவாய் செனித்த சிலன்
பொய்தபுமெய் யுடையானற் றெய்வவழி பாடுடையான் பொலிவுடையான்
பொறையுடையான் புவியிலியுங்
கையுடையா னெற்குமிக வன்புடையான் கலையுணருங் கனிவுடையான்
புகழுருங்கண் ணுச்சாமிப்பே
ரையுடையா னறிவுடையா னிவன் றிறத்தை யவனியில் கூறிடவிங்
கார்வல்லா ரறைகுவீரே. (2)

---

சென்னை பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப் பண்டிதர்

## கா. ரா. கோவிந்தராஜ முதலியார் அவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

நோயு நோயின் றன்முதலு நோக்கியதனைத் தணித்திடற்கு
வாயும் வகையும் வகுத்துணர்ந்து மதிக்கும் வகையே வைத்தியஞ்செய்
ஆயமுறைகள் பலவிளக்கி யளித்தா னகத்தா ரருளதனுல்
ஏயசிகிச்சா ரத்தின நற்றீப மென்னு மியனூலே. (1)

எண்ணு மியலி னலமுணர்ந்தோ னிலகு முலகி னிலையுணர்ந்தோன்
நண்ணும் வியன்சீர் வாகடமென் னலஞ்சார் பனுவல் பலவுணர்ந்தோன்
மண்ணுக் கினிய வன்னிய குல மகிழவந்த குணதிலகன்
கண்ணுசாமி யெனும் பெயரோன் கவிஞர் விழையு நாவலனே. (2)

---

சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப் பண்டிதர்

## கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

எண்ணுகின்ற பண்டிதரு ளிவர்சிறந்தார் மருத்துவத்தி லென்று கூறுங்
கண்ணியமார்ந் திடுபுலவன் கண்ணுசா மிப்பெயரன் கற்றோ ரேற்க
மண்ணிலுளார் பிணியகன்று வாழமனங் கொண்டுபின் னூன்மரபினுய்ந்து
ய்ண்யசிகிச் சாரத்ந தீபமியற் றிப்புகழான் பொலிந்தான் மாதோ. (1)

மாதர்கலாசாலை, தமிழ்ப்பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபருமாகிய

## ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியாரவர்கள்

இயற்றியது.

வெண்பா

உடலை யுடற்ற வுறுநோய்க ளாய்ந்து
நடவுஞ் சிகிச்சைகளை நாட்டி—விடலில்சீர்
கண்ணுசா மிப்புலவன் காட்டினு னெப்பறுநூல்
நண்ணுபல மேற்கோளா னன்கு.

---

ஜாகீர் ஆரணி காமக்கூர்
தமிழ்ப் பண்டிதர்

## ஸ்ரீமான் மு. சுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

எந்தநூல் களுமுன்னர் குறுமுனிவற் கருள்புரிந்த வெழில்வேற் கந்தன்
கந்தமார் மலரடியைப் பணிகண்ணு சாமியெனுங் கவின்கொள் சீமான்
வந்தநோய் தீருமொரு வழிதெரியா தலையுலக மாந்தர்க் காமோர்
சந்தமார் நெறிசிகிச்சா ரத்தின தீபம் வரைந்து தந்தான் மாதோ.

---

"மணிமேகலா" நூலாசிரியரும் சைவப்பிரசாரகருமாகிய

## M. A. சோமசுந்தர முதலியார் அவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சிவஞான மணங்கமழுஞ் சித்தாந்த சாத்திரத்தின் சீர்மை காட்டி
யவஞான மலமகற்று மங்கணர்த மருளுருவா மம்பி கைக்கு
நவஞான உபவேத மெனுமாயுர் வேதமதை நல்க வொப்பி
றவஞானம் பழுத்தொழுகுந் தனிநந்தி யுணர்ந்தருளத் தந்த தம்மா.

அத்தகைய வருமருந்தென் றறைதருமவ் வருமையெலா மகத்தியர்க்கு
முத்தமரா முனிவரர்க்கு முளத்துவகை பூப்பவரு ளுண்மை யாய்ந்தோன்
புத்தமுத மெனப்போற்றிச் சித்தமுரு கிடவெவரும் புனைந்து தந்தான்
எத்திசையும் புகழ்மணக்க வெழில்சிகிச்சா ரத்நவிளக் கென்னு நூலே.

விண்ணாட்டுப் புலவர்குழாம் வியக்கமருத் துவநுட்பவிஞ்சை கற்றோன்
மண்ணாட்டுப் புலவர்மனப் புலநிரம்ப மகிழ்ந்துபெயு மாட்சி பெற்றோன்
கண்ணாட்டம் வைத்துலகங் கடைத்தேற விருந்தளித்த கருணைவள்ளல்
உண்ணாட்டுமன்புபழுத் தகம்பழுத்தோனருள்பழுத்தே யொளிரநின்றோன்.

அன்னவன்யா ரெனின்வன்னிக் குலதிலக னென்னவரு மழக னப்பி
லென்னிரண்டு கண்மணியா யென்னிதயத் திலங்கிமிளி ரினிய நண்பன்
பொன்னனையகுணமுடையான் புலவாணர்தமைப்புரக்கும்புயலேயன்னான்
தன்னரிய பெயர்கண்ணு சாமிமா லெனவிளங்குந் தயைமிக் கோனே.

---

சிதம்பரம் தளவரிசை

ஆயுள்வேதபாஸ்கர சுப்பிரமணிய பண்டித ரவர்கள் குமாரர்

## சி. த. முத்தைய பிள்ளையவர்கள்

இயற்றியது.

ஆசிரிய விருத்தம்

திருவள ரவனி யுதித்திடுங் கண்ணுசாமிநற் றினகரன்றனியி
னிருளறுத் தின்ப முலகுறச் சிகிச்சாரத்தின தீபநற் சுடரை
யருளினன் முன்னோர் மறைவழியுறைக ளறிஞரும் பிடகரு மகிழ
மருளிலா மனத்தினுறைவடி வேலெம் மயிலிறைமலரடிப்பணிந்தே.

---

ஆயுர்வேத பூஷணம்

## K. சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்கள்

அபிப்ராயம்.

வட நூலாசிரியர்களும், அகத்தியர் பாரம்பரியமாக விளங்கிய சித்தர்களும் யூநாநி பண்டிதர்களும் இயற்றியருளிய மருத்துவ முறைகளில் தம் அனுபவத்திற்குப் பொருந்தினவாயும் சாரமுடையனவாயு முள்ளவற்றைச் சுருக்கமாக அடியிற் குறிப்பிட்ட பண்டிதர் அவர்கள் ஒரு நூலாக தமிழிற் செய்து வெளிப்படுத்தினார்கள். இஃது ஆயுர்வேதத்தில் தேர்ச்சியுடைய பண்டிதர்களுக்குச் சிகிச்சா ஞானத்தை மேம்படுத்தற்குப் பயனுடையதாகும்.

தவிர, அகத்திய முனிவர் முதலான ஆன்ருேரான் அருள் செய்யப்பெற்று, வைத்திய பாரம்பரியமாக நடைப்பெற்று வந்த ஔஷதங்களை இடைவிடாது முடித்துக் கண்ணுடியில் தோன்றும் நிழலைப்போல் நோயாளிகட்கு அளித்து அவற்றின் சிறந்த குணங்களை அறிந்த கண்ணுசாமிப்பிள்ளை என்னும் பண்டிதரால் சிகிச்சா ரத்தினதீபம் என ஒரு கிரந்தம் இயற்றியது லோகோபகாரத்திற்கு இன்றியமையாதனவாய் நன்கு விளங்குகிறது.

இது சிகிச்சா கிரமத்தையே பெரும் நலமாகக் கருக்கொண்டு பண்டிதர்கட்குக் கீர்த்தியையும் ரோகிகட்கு விம்மிதத்தையும் தருவதாகவும் உள்ளது. இனி இஃது அமிர்தமே ஒருருக்கொண்டாற் போல் இனிது பொலிந்து மருத்துவர்கட்கு ஒருவழி காட்டியாகவும் விளக்க முறுகின்றது.

எங்ஙனம் ரத்தினமானது தன்னொளியைப் பரப்பி இருளைத் துரக்குமோ அஃதே போல் இந்நூலும் தன்கண் உணர்த்தப்படும் பல முறைகளாகிய ஒளியைப் பரப்பி நோய் என்னும் இருளைத் துரக்கும் என்னும் பொருள் பொருந்தச் "சிகிச்சாரத்ந தீபம்" என்னும் தன் பெயர்க்குத் பொருந்த சிந்தூரம், பற்பம், இரசாயனம் முதலியவற்ருல் ஒளியுற்று மிளிர்கின்றது. இந்நூல் தமிழின் கண் முத்திரீ கரிக்கப்பட்டு என்னுல் முற்றும் பார்க்கப்பட்டது. இதுகாறும் வெளிவந்த பன்னூலுள்ளும் இதுவே சாலச்சிறந்தது. இது திங்கள் ஞாயிறு உள்ளவரையில் மேம்பாடுற்றுச் சிறக்கக் கடவுள் அருள் செய்வாராக.

---

இது

திருவாலூர்

ஆயுர்வேத பூஷணம்

## N. சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்கள்

அபிப்ராயம்.

இந்தக் கிரந்தத்தில் குவாதம், கல்கம், ஸ்வரசம், கிருதம், மாத்திரை, இலேகியம், சூரணம், அவலேகம், தைலம், ஸ்னேகம், ஆசவம், அர்க்கம், திராவகம், மகத்தான பற்ப சிந்தூரங்களின் பிரயோகம், பத்தியாபத்தியம் பாலசிகிச்சை முதலியவற்றைக் கண்ணுசாமி என்கிற பண்டிதர் அவர்கள் வைத்தியர்களுடைய நன்மையைக் கருதினவராய் அச்சிலிட்டு வெளிப்படுத்தினர்.

அங்ஙனம் வெளிவந்த கிரந்தம் முக்கியமாய் வைத்தியர்களுக்கும் மற்றோர்க்கும் பயன்படத்தக்கது. மிகவும் சிறப்புற்றோங்க யுகம் வரையில் கடவுள் கிருபைசெய்வாராக.

---

விட்டோபா ஔஷதசாலை

ஆயுர்வேத பண்டிதர்

## ஸ்ரீமான் பொ. சுப்பராய முதலியா ரவர்கள்

இயற்றியது.

அறுசீரடி விருத்தம்

நிலம்பூத்த பலநூலி னுண்பொருளு மநுபவமு நிலவப் பார்மேல்
நலம்பூத்து நனிவிளங்க நற்சிகிச்சா ரத்நவிளக் கென்றே வன்னிக்
குலம்பூத்த கண்ணுசாமிப்புலவ னுடிமுதற் குலவச் சொற்று
னிலம்பூத்த விளக்கென்ன விதைப்பெற்றே யெவ்வெவரு மிலங்கமன்னே.

---

ஆற்காடு நீலகண்டாச்சாரியர் குமாரர்

ஆயுள்வேத பண்டிதரும், தமிழ்வித்துவானுமாகிய

பிரம்மஸ்ரீ சுப்பராய ஆச்சாரியவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

மாமேவு மூலகமதின் மன்பனைதகட் குற்றபிணி மாசொ ழிக்கத்
தாமேவுபண்டிதனுரெனி லவனைச்சத்தியமாய்ச் சாற்றக்கேண்மோ
தூமேவு கண்மூன்று சிரநான்கு முகமைந்து துன்னுங் கைகள்
பாமேவு மிருமூன்று மெய்யெட்டுப் பாதங்கள் பத்தாய் நிற்கும்.

இப்பயனைத்தாமுணர்ந்தார்பண்டிதனென் றேபெரியாரியம்புவார்கள்
அப்பயனெல்லாமுணர்ந்தோன் சென்னைகோ மளபுரி யாரரன்றுட்
செப்பரிய புகழ் லோகநாதன்செய் தவத்தில்வருஞ் செல்வனெற்கு
மொப்பரியபெருநண்பன் கண்ணுசாமிப்பெரியா னுகந்துமாதோ.

புகழ்மேவுயூனியாயுர்வுறுவேதந்தெலுங்குபொன்றுச்சீர்சால்
மகிழ்மேவுதண்டமிழ்வாகடமுதல்நூலனைத்தினையுமாண்பிற்கற்றே
திகழ்மேவுமறிவுடையோ ரையமெலாம் வைத்தியத்திற்றெளியும்வண்ணம்
நிகழ்மேவுநற்சிகிச்சாரத்தினதீபம்மெனுநூ னிலவச்செய்தான்.

வேறு

ஐயகேளின்னூலி லையமொன்றில்லாம லறியலா மவையாதெனின்
அரிதாகவே சொல்பிண் டோத்பத்தி பாலருட னுகிய விருத்த ருக்கும்
மெய்யிலாம் பிணிகெடக் கியாழமொடுமாத்திரை கண்மிளிர்லேகியந்தைல
மேன்மைசேர் ரசயான திராவகம் பஸ்பமொடு மேவுநற்சிந்தூரமும்[மும்
துய்ய நற்கலிக்கமு மிவைகளின் முறைகளுஞ் சொந்தவனுபவமாகவே
சோதித்துவெளியிட்ட நூலிதாதலின்வெறுஞ்சொல் மாத்திரத்தினின்று
பொய்யல்லயான்சொல்வதிதனைஒவ்வொருவரும்புந்திகொடுபார்த்திந்நூலை
புகழ்மனையில்வைத்தனுபவித்துவருவீர்களேல் புன்பிணியகன் றுய்வீரே.

ஆற்காடு, குயப்பேட்டை ஆயுள்வேத பண்டிதரும்
தமிழ் வித்துவானுமாகிய ஸ்ரீமான் நெல்லி

## அப்பாசாமி உடையாரவர்கள்

இயற்றியது.

நேரிசை வெண்பா

சென்னைகோம ளீச்சுரன் பேட்டைத் திருவமர
மன்னுகண்ணு சாமிமலை மாதவனே-யுன்னரிய
சித்தர்நூற் றேர்சிகிச்சா ரத்ந தீபஞ் செப்பினான்
முத்தரையு மேற்க முயன்று.

---

பாலயோகியும் ஆயுள்வேத பண்டிதருமாகிய

## வி. ஆர். சுந்தரம் அவர்கள்

இயற்றியது.

விருத்தம்

இயல்வினையி னுறுவதுறு திருக்கவுல
கித்தியற்றி யினிதருந்துஞ்
செயலுணவின் குறைமிகையாற் செறிபிணிக
டெறுமார்க்கஞ் சிந்தித் துய்ய
மயல்விடுத்த சித்தர்குழா மகிழ்ந்துரைத்த
மருத்துவநூல் வழியி னய்ந்து
வியன் முறைகள் கைக்கனியில் விளக்கியொரு
நூலெளிதாய் வெளியிட் டானல். (1)

வெளிவருமிந் நூற்பெயரும் விளக்கினவன்
றிருப்பெயரும் விரிக்க வேண்டின்
தெளிவருளுஞ் சிகிச்சாரத் தினதீபம்
செழுமையினிற் சிறந்தெஞ் ஞான்றும்
ஒளியுறுங்கோ மளநகர்வாழ் லோகநா
தக்குரிசி லுயர்தவத்தின்
அளிவழங்குங் கண்ணுசா மிப்புலவ
னென்றறிஞ ரறைவார் மாதோ. (2)

கண்ணமங்கலம் வல்லநகர் ஆயுர்வேத பண்டிதர்

## ஸ்ரீமான் மந்திர மூர்த்தி அவர்கள்

இயற்றியது.

### விருத்தம்

மாகடல்வை யகம்புகழ மன்னுமகத் தியருடனே மாண்பார் சித்தர்
வாகடமும் யூனானி யாங்கிலமு முதலாய வன்னூல் கற்றே
தேகநிலை நோய்தன்மை வாதமுதன் மூன்றின்குணம் தெளிந்து செய்தாய்
பாகநிறை சிகிச்சா ரத்ந தீபம் படிப்பவர்க்குப் பண்புண்டாக.

### நேரிசை வெண்பா.

பூமேவு சென்னை புகழ்கோ மளபுரிவாழ்
தூமேவு லோகநா தச் செம்மல்-தாமேவும்
செய்தவத்தால் வந்துதித்த செம்மல்கண் ணுச்சாமிமால்
செய்தநூல் கண்டெனவே செப்பு.

---

ஆயுள்வேதப் பண்டிதர்

## ஸ்ரீமத் அ. பெரியசாமி முதலியார் அவர்கள்

இயற்றியது.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

நல்லமருத் துவநூல்கள் பலவாய்ந்து நம்மனோர் நலிவு தீர
வெல்லுவதற்கரியபிணிவிதமனைத்து மொழிக்குமுறைமிகவுணர்ந்து
கல்விசெறி கண்ணுசாமிப்புலவன் கலைமகளுங் கண்டு வப்பச்
செல்வசிகிச்சாரத்ந தீபம்வரைந் திம்மைநலஞ் சேர்த்தான்மன்னே.

---

உ

கடவுள் துணை

# சிகிச்சாரத்நதீபம்

## மங்கல வாழ்த்து.

### விநாயகர் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

இந்தினிளம் பிறைமானுந் தனிக்கோடு
மிருமதமு மிலங்கா நின்ற
தந்திவத னப்பெருமான் றண்கமல
மலர்பாதந் தனைவ ழுத்திச்
சந்தமுற நெஞ்சிருத்தித் தலைச்சூடி
நல்லறிவாஞ் சவியைப் பெற்று
முந்தறிவோர் மொழிபொருளு மநுபவமுந்
தலைப்பெய்து மொழிகு வேமால். (1)

### முருகப்பெருமான் வணக்கம்

வேறு

மாறுநல் லசுரர் தம்மை மடங்கலி னேன்று வென்று
வீறுபொன் னாடர் தம்மை வித்தக வாழ்விற் கூட்டிக்
கூறுமா வடிவங் கொண்டு குலவுபல் லாட லாற்று
மாறுமா வதன வள்ள லணியடி வாழி மிக்கே. (2)

## சிவபிரான் வணக்கம்

உலகிலைந் தொழில் நடத்த வுளந்தனி னினைவு கொண்டே
யலகிலாக் கருணை தன்னை யருட்சிவ சத்தி யாக்கி
நிலவிடு பாகம் வைத்து நித்திய வாழ்வ ளிக்குங்
குலவிய சிவத்தின் றாள்கள் குறித்துளந் திருத்து மன்றே (3)

## வழிபடுகடவுள் வணக்கம்

திருவினை மார்பு கொண்டு சிவந்திடு மெழிலும் பெற்று
மருவிடு மிந்தி ரர்க்கு மகிழ்பதம் வழங்கு மாழி
யுருதிகழ் காந்தள் சேர்த்த வுத்தம முகில தாகுங்
கருமுறை காத்த ளிக்குங் கரியமால் கழல்கள் போற்றி (4)

## அகத்தியனாரும் பதினெண் சித்தர்களும்

பொதியநற் பொருப்பில் வைகும் புண்ணியப் பொருளை வாழ்த்தி
விதிமுறை வையக் கெல்லாம் விளக்கினிற் றுலங்கி யோங்கு
மதிமிகு பதினெண் சித்தர் மலரடி சிரத்திற் றாங்கிப்
பதிதரு சிகிச்சா ரத்ந தீபத்தைப் பகர்வன் மாதோ (5)

## நூற்பயன்

முன்னுறு மான்றோர் சொற்ற முறைகளாங் கடல் கடைந்து
துன்னுறு சிகிச்சா ரத்ந தீபத்தைத் துலங்கச் சொன்னே
னின்னலி லிந்நூ லாள்வோ ரெளிதினிற் சிகிச்சை யெல்லா
மன்னவே யுணர்ந்து மேலாம் வாழ்வையு மேவு வாரால் (6)

## அவை யடக்கம்

பாற்கடற் றன்னை வாயாற் பருகுவ லென்றற் போலும்
வாற்படு விண்மீன் தம்மை வயங்குகை மேவல் போலும்
நூற்படு பொருளி னுட்ப நுவலுதற் கெழுந்த வென்றன்
பாற்படு பேதை மைக்குப் பரிவிலா ருளரோ வம்மா (7)

# நூல்

## ரோக நிதான விலம்பகம்

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

*மதித்திடற் கருமை வாய்ந்த மாண்பரி கார மெல்லாந்*
*துதித்திட வுணர்ந்தா னேனுந் துகளறப் பிணியின் றன்மை*
*பதித்திட வுணரா னாகிற் பயனுறு னாக லானே*
*விதித்திடு பிணித்தி றத்தை விளம்புது முதற்கண் மன்னோ* (8)

## பஞ்சபூதம்

### பிண்டோற்பத்தி

மங்கையர்கள் பூத்த நாள்முதல் * பதினாறுதினம் வரையில் கருக்குழி மொக்கானது மலர்ந்திருக்கும்; அக்காலத்தில், சுக்கிலம், வாயு தேயுக்களின் இயக்கத்துடன் கருக்குழியில் சென்று தரித்து சுரோணிதத்துடன் சம்பந்தப்பட்டுக் கருமலர்குவியும் ; அந்நாள் தொடங்கி வாயுவானது உருவற்ற கருவைத் தாது வேறு தோஷம் வேறாகப் பிரிக்கும். தேயுவானது வாயுவினால் வேறுபிரிக்கப்பட்ட தாது தோஷங்களை உருவாக்கும். அப்பானது தேயுவினால் உருவாக்கப்பட்ட தாதுதோஷங்களுக்கு வாயுதேயுக்களின் கூட்டுறவாலுண்டான சுவாலையைத் தணிக்கும் பொருட்டு, ஈரத்தால் காக்கும். பிருதிவி என்னும் பூதம் அப்பு பூதத்தால் காக்கப்பட்ட தாது தோஷங்களுக்கு ஈரத்தால் கெடுதி வாராவண்ணம் காக்கும். ஆகாசமானது சிருஷ்டிக்கப்பட்டும் வளர்க்கப்பட்டுமுள்ள உருவங்களை நாளா வட்டத்தில் விருத்தியடைய இடங்கொடுக்கும். அஃதெவ்வாறெனின் :—

### பாலவாகடம்

*ஆகநாள் விந்துவிட்ட ஐந்தாநாள் குமிழி போலாம்*
*போக ஈரைந்தா நாளில் பொருந்திய முட்டை போலாம்*
*ஏக மாதத்தில் பிண்டம் இரண்டினில் மார்பு மட்டாம்*
*பாகமாய் மூன்றுந் திங்கள் பகருந்தி மட்டுமாமே* (9)

---

* மங்கையர்கள் பூத்த நான்குநாள் வரையில் அசுத்தமான காலமாதலானும் தோஷத்தை யுண்டாக்கு மாதலானும் அதனை விலக்கி 12-நாளே சந்தானத்திற் குரிய காலமாகப் பாவித்தல் வேண்டும்.

மட்டுடன் நாலாந் திங்கள் வளர்ந்திடும் பாத மெங்கும்
கட்டுடன் ஐந்தாம் மாதம் கருவு பூரணமாம் ஆறில்
தட்டுடன் எலும்புசீவன் தலைமயிர் நரம்பு ஏழாம்
எட்டுடன் அறிவாம் ஒன்பதியல் தசம் பிறவித்தானே. (10)

என ஆன்றோர் கூறுவாராயினர்.

## தாது

இச்சரீரம் இரசம், இரத்தம், மாமிசம், அஸ்தி, சுக்கிலம், மச்சை, மேதை ஆகிய ஏழு தாதுக்களையும் கருவியாகக் கொண்டுள்ளது. இவைகள் தத்தம் தொழிலைச் செய்யவும், தீங்குகள் வாராவண்ணம் பாதுகாக்கும் பொருட்டும் உண்ணும் உணவினிடமாக உள்ள சத்தினைப் பஞ்சபூதங்கள் கவர்ந்து முதல்நாள் இரச தாதுவை நனைத்தும், இரண்டாம் நாள் உண்ட அன்னரசம் இரச தாதுவிலேற முன் ஊறி நின்ற இரசம் இரத்த தாதுவிலேறும். இங்ஙனமே மூன்றாம்நாள் மாம்ச தாதுவிலும், நான்காம்நாள் மேதோ தாதுவிலும், ஐந்தாம்நாள் அஸ்தி தாதுவிலும், ஆறாம்நாள் மச்சை தாதுவிலும், ஏழாம் நாள் சுக்கில தாதுவிலும் சென்று ஒவ்வொன்றையும் பலப்படுத்தி எட்டாம் நாள் தேகத்திற்குக் குன்றாத வலிமையை யுண்டாக்கும்.

## தோஷம்

சரீரமானது சப்த தாதுக்களால் ஆக்கப்பட்டதென்று முன்னமே கூறியிருக்கின்றனம். இது பெரும்பான்மையாகப் பிருதிவியென்னும் பூதத்தாலானது. கேவலம் மந்தகுணமும் அசையாத் தன்மையும் கனதியுமான பதார்த்தமானதால், இதனை இயக்குதற்கு வேறு மூன்று பூதங்கள் உபயோகப்படுவனவாம். எங்ஙனமெனின் அப்பு என்னும் பூதமானது உட்கொள்ளும் ஆகாரத்தினுடைய சத்தினுள்ள கபத்தை இரையாகக்கொண்டும், தேய்வு பூதமானது பித்தத்தினை இரையாகக்கொண்டும் வாயுபூதமானது வாதத்தை இரையாகக்கொண்டும் தாதுக்களைப் போஷித்து வரும். ஆகையால் இம்மூன்று பூதங்களுடைய குணங்கள் யாவும் தோஷங்களாகிய கப பித்த வாதத்திற்குப் பொருந்து மாதலால் இவைகளை சரீரத்தினிடமாக மூன்றுவிதச் சத்திகளாகக் கொள்ளல்வேண்டும்.

தாதுக்களினுலான சரீரத்திற்கு வெளிப்புறமிருந்து ஒழுங்கீன ஆகாரத்தினுலும் அச்சக்திகள் குறைவதற்கும் மிகுவதற்கும் காரணமான தொழிலைச் செய்தலானும் சரீரத்திற்கு அன்னியமான கப பித்த வாதம் முதலியவை அளவுக்கு மிஞ்சி உட்செல்லுமேயாயின் அவைகளுடன் மூன்று சக்திகளில் ஒன்றிரண்டோ அல்லது அனைத்துமோ போராடி அன்னியமான மிகுதியை வெளிப்படுத்த முயலும். அவை பலவீனப்பட்டிருப்பின் எளிதில் போக்கியும் மிகுந்திருப்பின் சப்ததாதுக்களின் தொழிலை மாறுபடச்செய்து அவ்வவற்றிற் கேற்ற தன்மைகள் குறைந்தும் மிகுந்தும் போகும். அப்போது தேகத்தின்கண் உண்டாகும் குணங்களின் காரியமே வியாதி எனப்படும். இக்கருத்தினைப் பற்றியே ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவனுரும்

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று"

என்றருளிச் செய்வாராயினர்.

இனி இவ்வியாதிகளைப் பகுத்தறியும் முறைமை
நாடியினுலுணரப்படும் என்க.

## நாடி இலக்கணம்

பாரே நாடி அறிந்துணர்ந்து பரமன்செயலும் பிணிமுறையும்
நீரே ஓடும் சலமலமும் நிறமுங் குணமும் முகக்குறியும்
காரே யிளகுங் குழல்மடவீர் காலதேக வயதிளமை
நேரே யறியு முகநாடி நெறியும் தெளிவும் சொல்வாமே (11)

தேகத்தின் கண்ணுள்ள எல்லா உறுப்புக்களிலுஞ் சிறந்தது இருதயம். இதன் மூலமாகத்தான் பெரும்பான்மை தாதுக்கள் போஷிக்கப்படவேண்டும். இதுவே தேகம் சுகநிலையிலிருப்பதற்கும் இல்லாமைக்கும் காரணம் இதன் தொழில் வேறுபாடுகளை நாடிகள் உணர்த்தும்; எவ்வாறெனில் இருதயத்தின் இடது சடரம் குவியும்போது இரத்தங் கண்டரையின் வழியாகச்சென்று எல்லா நாடிகளுக்கும் பரவும்; அப்போது நாடிகள் விரியும். பின்னர் அது விரியும்போது நரம்புகளிலிருக்கும் இரத்தங் குறைந்து நாடி சுருங்கும்; இவ்வாறு இருதயம் குவிதலானும் விரித

லாலும் இருதயத்தைச் சார்ந்த நாடிகள் இயங்கி அத்தன்மைகளை அறிவிக்கின்றன. இவைகளை

"தாது முறைகேள் தனித்த குதிச்சந்தோடு
ஓதுறு காமியம் உந்தி நெடுமார்பு
காது நெடுமூக்குக் கண்டங் கரம் புருவம்
போதுறும் உச்சிபுகழ் பத்தும் பார்த்திடே" (12)

என்னும் திருமூல யோகிகள் திருவாக்கின்படி குதிச்சந்து, காமியம், உந்தி, மார்பு, காது, மூக்கு, கண்டம், கரம், புருவம், உச்சி, என்னும் பத்திடங்களிலும் பார்த்தறியலாம் எனினும், கரமே சிறந்ததாகலானும் எளிதிலறியத்தக்க தாகலானும் பெரும்பான்மையும் கரமே நாடிக்குரிய இடமாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

ஆகலின் பிணியாளனுடைய வலக்கரத்தையேனும் இடக்கரத்தையேனும் பெருவிரற் பக்கமாக ஆரை யென்பின் மேலோடும் நாடியை மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் தள்ளி மேலாக மூன்று விரல்களால் சமமாக மெல்லென அழுத்தியும் தளர்த்தியும் பார்க்க ஆட்காட்டி விரலிலுணர்ந்தது வாதமெனவும், நடுவிரலிலுணர்ந்தது பித்தமெனவும், பௌத்திர விரலிலுணர்ந்தது ஐயமெனவுமுணர்க. இவைகளுள் *வாத மதிகமானல் அதற்குரிய நோய்களையும் பித்தமதிகரிப்பின் அதற்குரியவற்றையும் ஐயமிகின் அதற் கேற்றவைகளையும் அடியிற் குறிப்பிட்டுள்ள செய்யுட்களால் இனிதுணர்க. இது சுலபமாகச் சின்னட் பழக்கத்தில் யாவரானும் அறியப்படும். இதனை நம் இந்து தேசத்தில் பெரும்பான்மையோர் நன்குணர்வர்.

## வாத ரோகங்கள்

அகத்தியனார்

வாதமே கதித்தபோது வாயுவு மெழும்புங் கண்டீர்
வாதமே கதித்தபோது வந்திடுஞ் சன்னி தோஷம்

---

* அதாவது அவைகளிருக்கவேண்டிய மாத்திரை அளவிற்கு இரண்டு பங்குமிகுந்திருத்தலாம். இதனையே சித்தர்கள் வாதத்தில் வாதமெனவும், பித்தத்தில் பித்தமெனவும், ஐயத்தில் ஐயமெனவும் கூறுவர். மாத்திரையின் அளவு முதலியவைகளைத் தொந்த நாடியைச் சொல்லுமிடத்து விரிவாய்க் காணலாம்.

வாதமே கதித்தபோது வந்திடும் வியாதி மேலும்
வாதமே கதித்தபோது வல்லுடல் மெலிந்து கொல்லும் (13)

வேறு

சொல்லவே வாதமது மீறிற்ருனல்
சோர்வடைந்து வாயுவினல் தேகமெங்கும்
மெல்லவே கைகால்க ளசதியுண்டாம்
மெய்முடங்கும் திமிரவொண்ணுத் திமிருண்டாகும்
வெல்லவே யுடல்பொருமும் வயிறுளைக்கும்
விரும்பி யன்னஞ் செல்லாது விந்து நஷ்டம்
கொல்லவே நாப்புளிக்குங் கழிச்சலுண்டாம்
கூறினர் மலையமுனி கூறினரே (14)

திருமூல நாயனர்

அறியவிம் மூன்றின தாண்மைசொன்னர் நந்தி
எறிய நல்வாத மெறிக்குங் குணங்கேளு
குறியெனக் கைகால் குளைச்சு விலாச்சந்து
பறியென நொந்துடற் பச்சைப் புண்ணகுமே (15)

புண்ணய் வலிக்கும் பொருமுங் குடலோடித்
தண்ணு மலத்தைத் தம்பிக்கும் போக்காது
ஒண்ணன ஆசன முறவே சுருக்கிடும்
பண்ணர் குளிர்சீதம் பகுத்திடும் வாதமே (16)

## பித்த ரோகங்கள்

அகத்தியனர்

பித்தமே கதித்தபோது பெருத்திடும் வாதமுண்டாம்
பித்தமே கதித்தபோது பெருத்திடும் வயற்றில் வாயு
பித்தமே கதித்தபோது பிதற்றிடும் பித்தேகேளு
பித்தமே கதித்தபோது பிறந்திடும் பிணியநேகம் (17)

வேறு

கூறிடவே பித்தமது சீறிற்ருனற்
கொடுங் காந்தலுடல் வறட்சி நடுக்கமுண்டாம்
மீறிடவே வரோசியந்தா னவறட்சி
மேலான சேடமது விக்கல் மூர்ச்சை
தூறிடவே கிறுகிறுப்புக் காதடைப்புத்
தொந்தமாங் கசப்புடனே மண்டைக் குத்து
மாறிடவே நெஞ்செரிவு அக்கிமந்தம்
மகத்தான குளிர்சுரமுங் காய்தலாமே (18)

ஆமேதான் அஸ்திசுரம் பாண்டு சோகை
அழலான விடாச்சுரமும் பிரமேகந்தான்
போமேதான் காமாலை பித்த வெட்டை
பொல்லாத பாண்டுடனே சிவந்த நீராம்
தேமேதான் சிவப்பாயு மஞ்சளாயும்
சிறுசிறுத் திருண்டுவருங் குழிவிழுந்து
நாமேதான் சொன்னோமே பித்தக் கூறு
நவின்றிட்டார் வாசமுனி நவின்றிட்டாரே (19)

திருமூல நாயனுர்

பகுத்திடிற் பித்தம் பலபல சிந்தையாம்
வகுத்திடும் வாந்தியும் வாய்நீர் மிகவூறும்
மகுத்திடு மேனியில் மாட்டி யெரிப்பேறும்
மிகுத்த வனிக்கு மிகவிடங் கைக்குமே (20)

## கபரோகங்கள்

அகத்தியனுர்

ஐயமே கதித்தபோ தணுகிய வியாதி யுண்டாம்
ஐயமே கதித்தபோ தறிந்திடுந் தோஷமாகும்
ஐயமே கதித்தபோ தையமாஞ் சன்னியாகும்
ஐயமே கதித்தபோ தவ்வையமே மெலிந்து கொல்லும் (21)

மன்னிய சேத்ம மீறு மாகாயம் வெளுக்கும் வற்றும்
பன்னியே யன்னஞ் செல்லாப் பருவிக்க விருமல் சத்தி
யுன்னியே மூர்ச்சை யீளை யூசிநீர் வழுவழுத்து
கன்னியே விலாவும் நெஞ்சுங் கடுப்புட னேயுமாமே (22)

திருமூல நாயனுர்

விடங்கிய வைய மேலிரைப் பேற்றிடும்
தடங்கி யிருமிடுந் தன்விலா விரண்டு நேரம்
அடங்கிச் சுரங்காயு மளவற்ற கோழைநீர்
இடங்கி யுடல்வற்றி யிரத்தமுங் கக்குமே (23)

இங்ஙனம் நாடியின் தன்மையைச் சித்தர்க ளியற்றிய நான்முகமாய் இதனைப்போன்ற பலசெய்யுட்களையும் செவ்வனே அறிந்து பின்னர் ஒவ்வொரு தோஷங்களையும் குறிக்கின்ற நாடியுடன் வேறு தொந்தங்கள் இருக்கின்றனவா வென்பதை யுணர்தல் வேண்டும்; ஆகையான் நாடியின் வன்மை மென்மையை நன்குணர்ந்தாலன்றித் தொந்தங்கள் அறியப்படாமை பற்றி நாடியின் துடிப்பிற்கு அளவின்னதென்று அறிவிப்பான் வேண்டி

## குணவாகடம்

### னவத்திய சாரம்

செய்கின்ற நாடி பெருவிரலின் மேலாய்
 திருந்திழை மூன்றங் குலத்தி னடுவதாக
தைகின்ற கோதுமை யரிசி போலச்
 சர்வம் வியாபித்திருக்கு மதுதான் கூறில்
கையடியுங் காலடியும் நாடி நிற்குங்
 * கன்னியருக் கிடப்புறமாங் கணவர்க் கங்கே
மைகின்ற வலப்புறமாம் வாத நாடி
 வந்து முன்னே நடக்கு மப்பால் வகை சொல்வேனே (24)

என நாடியின் மாத்திரை கோதுமை யரிசிப் பிரமாணம் எழுந்து அடங்குவதற்குள்ள காலவளவை மாத்திரையின் இலட்சண மென்று குணவாகடத்தில் கூறப்பட்டது மல்லாமல் தேகத்தின் கண் முத்தோஷங்களும் இருக்கவேண்டிய அளவை

வழங்கிய வாதம் மாத்திரை யொன்றாகில்
 தழங்கிய பித்தந் தன்னிலரை வாசி
அழுங்குங் கபந்தா னடங்கியே காலோடில்
 பிறங்கிய சீவர்க்குப் பிசகொன்று மில்லையே (25)

எனத் திருமூலநாயனார் முதலான சித்தர்களும் கூறுவாராயினர். அவ்வண்ணம் வாதம் ஒன்றாகவும் பித்தம் அரையாகவும் கபம் காலாகவும் உருத்தல் வேண்டும். இதனையே சித்தர்கள் மேற் கோளாய் நூல்களில் ஆங்காங்கு ஜந்துக்களின் நடையை உப மானமாக அமைத்துக் கூறினாராயினும் ஒருவர் கூறியபடி மற்ற

* இச்செய்யுளில் பெண்களுக்கு இடது கரமே விசேடமென்று கூறியிருக்கின்றது மல்லாமல் அவர்களுடைய நாடியின் பேதத்தினையும் ஆயுர்வேதக் கிரந்தங்களில் சில இடங்களில்

பாம்பென வாத நாடி பகுப்புடன் சர்ப்பம் போலும்
 வேம்பெனப் பித்தந் தானும் விரும்பு மண்டூகம் போலும்
சாம்பெனச் சிலேத்ம நாடி சடுதியி லன்னம் போலும்
 நாம்பெனப் பெண்க ளுக்கு நாடிதா னடக்குந் தானே

எனக் கூறியுளாராகையான் நுண்ணறிவால் ரோக சாத்தியத்தைப் பகுத் துணர்ந்து சிகிச்சை செய்வது ஜீவகாருண்ணியத்தையே பெரும்பயனாக்க் கருதிய பண்டிதன் கடமை.

வர்கள் சிலவிடங்களில் கூறவில்லை; காரணம் என்னையோவெனின்; அவரவர்கட்டு உள்ளத்தில் உதித்தவாறு

வைத்திய சாரசங்கிரகம்

ஆகிய வாத நாடி யன்னம்போற் குயிலைப் போலும்
ஏகிய பித்த நாடி யெழிலாமை யட்டைப் போலும்
போகிய சிலேத்ம நாடி பொல்லாத பாம்பு போலும்
பாகுடன் முனிவர் தாமும் பாடினர் நாடிதானே என்றும் (26)

குறியடையாள நாடி

வாகினி லன்னங் கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய வாமை யட்டை யிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளைப் பாம்பு போலவாஞ் சேத்து மந்தான்
ஆகிய நாடி மூன்று மமர்ந்திடிற் சன்னி யாமே என்றும் (27)

கூறியதனால் ஒருநாடிக்கு ஒரு ஐந்துவையே அளவாகக்கொண்டதாகத் தோற்ற வில்லை யாயினும் அச்சீவராசிகளின் நடையை ஒன்றாகவே பாவிக்கவேண்டும். ஏனெனில் நூலை ஆராய்ச்சி செய்யுங்கால் வாதத்தின் நடையை மயில், அன்னம், கோழி, ஓணன், குயில், கொக்கு, முதலியவைகட்கு ஒப்பிட்டிருப்பதாகக் காணப்படுகிறது. பெரும்பான்மை இவைகள் யாவும் நிதானித்து மனிதரைப்போல் அடிவைத்து நடக்கக்கூடியன. இதற்கு மாத்திரை அளவு கூறின் ஒன்றாகும். பித்தத்தின் நடை ஆமை, அட்டை, புழு முதலியவற்றின் நடைக்கு உபமானமாகக் கூறப்பட்டுள்ளது. இவைகள் நகர்ந்து செல்லக் கூடியவை யாதலால் ஒன்றுக்கொன்று பொருத்தமாகும். இதற்கு மாத்திரை கூறின் அரையாகும். சிலேத்துமத்தைக் கூறிய இடங்களில் தவளை பாம்பு, வெட்டுண்ட அரணைவால் முதலியவை கொள்ளப்பட்டன. இவைகள் முறையே, குதித்தல், சீறல், துடித்தல் என்னும் செய்கையை யுடையவை யாதலால் பொருத்தமாகும். இதற்கு அளவு கூறின் காலாகும். தவிர கிரந்தங்களில் ரோக சாத்திய சாத்தியங்களைக் குறிக்கு மிடங்களில் நாடியின் வன்மை மென்மையை யுணர்த்துமாறு நிமிர்ந்து நின்றதென்றும் சுடர் முனை போ லசைவுற்றதென்றும் சிதறிற்றென்றும் வெட்டுண்ட தேள் கொடுக்குப்போல் துடிக்கப்பெற்றதென்றும், சுழல் வண்டு, பம்பரம்போல் சுழன்றதென்றும், கழுவினி லகப்பட்டவன் சிரம் குன்றுதலை யொத்ததென்றும், பலவாறாக நய விசேடத்தால்

கூறப்பட்டது. ஆதலின் மனதைச் சிதறவிடாமல் சமயோசிதமாய் யோசித்து நாடியின் தொந்தங்களை அறிதல் வேண்டும்.

தொந்தமின்னதெனல்

## வல்லாதியின் நாடி

தானென்ற வாத மாத்திரை தானிரண்டு
    தப்பாது பித்தமது தானொன் றேறில்
வேனென்ற வாதபித்தந் தொந்திப்பாகும்
    மிருவாத மிரண்டுஞ் சிலேத்ம மொன்றால்
ஊனென்ற வாதமையந் தொந்திப்பாகு
    முற்றபித்தம் இரட்டித்துரை கபமொன்று சேரில்
கோனென்ற பித்தமுடன் வாதஞ் சேர்த்துக்
    கொண்டதிந்த ரோகமெனக் கூறே (28)

கூறுவேன் பித்த மாத்திரை யிரண்டாகில்
    கொடிய சிலேற்பன மொன்றுதிக்கு மாகில்
ஆறுவேன் பித்த சிலேத்து மந்தா னென்றுந்
    துலங்கு சிலேத்தும மிரண்டு வாதமொன்றுந்
தேறுவேன் சிலேத்தும வாதந்தா னென்றுஞ்
    சிலேத்தும மிரட்டித்துப் பித்த மொன்று சேரில்
வேறுநீ நினையாதே சிலேத்தும பித்த
    மிருந்திடுமே சுரம் பேதி மிகுதியாமே (29)

என்றபடி ஆறுவித தோஷங்களையும் நன்குணர்ந்த பின் அவைகளால் எவ்விதமான ரோகங்களுண்டாகும் என்பதைப் பகுத்துணர்தல் கடனாம். அதனை அடியில் கூறப்பட்டுள்ள செய்யுட்களாலும் பிறவற்றாலும் உணர்க.

வாத பித்த தொந்த ரோகங்கள்

## வைத்திய சதகம்

பொருளான வாதத்தில் பித்தஞ் சேர்ந்து
    பொருந்து குணங்களா முஷ்ண வாயுசத்தி
செறியாமை புளித் தேப்பம் பெருகுநீரிற்
    சிவப்புமல மிறுகலுறுந் தாது நட்டம்
கருவான தேகமதி லுளைச்சல் சோம்பல்
    கைகால்கள் தெறிப்பு நாக்கசக்குமன்னம்
பரிவான வூண்குறைதல் ருசிகே டாதல்
    பல நோயும் வருத்திவைக்கும் பாங்கு தானே (30)

## வாத கப தொந்த ரோகங்கள்

பாங்கான வாதத்திற் சேத்தும நாடிப்
பரிசித்தால் திமிர் மேவு முளைச்சலாகும்
தீங்கான இருமலுடன் சன்னி தோஷம்
சேர்ந்த விஷ வெடிசூலை யிறுத்து ரோகம்
வாங்காத ஈளை மந்தார காசம்
வலியுடனே பிறவீச்சு வீச்சுவீக்கம்
ஓங்குநல் சுரமுடனே சுவாச காசம்
உண்டாகும் வெகுநோய்க்கு முறுதி தானே (31)

## பித்த வாத தொந்த ரோகங்கள்

சிறப்பான பித்தத்தில் வாத நாடி
சேரிலுறு தாது நட்ட முதிரபீடை
உறைப்பாகச் செறியாமை குன்மஞ் சூலை
உற்ற சுரங்கிராணி வயிற்றிரைச்சல் மந்தம்
அறைப்பான ஓங்கார பிறநீர்க் கோவை
ஆயாச மிறக்கமொடு மயக்கம் மூர்ச்சை
முறைக்காய்வு விஷ வீக்கம் மூலவாயு
முருடான நோய்பலவு முடுகும் பண்பே (32)

## பித்த சிலேத்தும தொந்த ரோகங்கள்

பண்பான பித்தத்தில் சேத்துமங் கூடிப்
பரிசித்தால் அத்திசுர மிளைப்பே யீளை
கண்காது நயனமலம் நீரும் மஞ்சள்
கனவயிறு பொருமல் மஞ்சள்நோய் கண்ணோவு
உண்போது மறுத்தல் ரத்தவிப்புருதி தானு
முளமாந்தை பீனிசமு ரத்த வீக்கம்
நண்பான காமாலை சோகை வெப்பு
நணுகி வந்த பலபிணியும் நண்ணுந்தானே (33)

## சிலேத்தும பித்த ரோகங்கள்

இடமான சேத்துமத்தில் பித்த நாடி
எழுந்தணுகில் விஷமுடனே வீக்க முண்டாம்
திடமான குளிர்காய்ச்சல் மஞ்சள் நோவு
தேகத்தி லுளைச்ச விளைப்பிருமல் வாந்தி

விடமான நெஞ்சடைப்பு சுவாசம் விக்கல்
வெகுசுரமும் நாவறட்சி பாண்டு ரோகம்
அடமான குவளை ரத்தம் அதிசாரந் தான்
அணுகு வெகுபல நோய்க்குத் தடங்கண்டாயே (34)

## சிலேத்தும வாத ரோகங்கள்

கண்டாயோ சிலேற் பனத்தில் வாதநாடி
கலந்திடுங் கல்வயிறு பொருமல் கனத்த வீக்கம்
உண்டாலோ ஓங்கார சத்தி விக்கல்
உறுந்தி ரட்சி வாயு வலிசன்னி தோஷம்
விண்டாலோ இளைப்பிருமல் சோகை பாண்டு
விஷபாகம் விஷசூலை பக்கவாதம்
திண்டாடு நாசிகா பீடங் கக்கல்
சிரநோய்கள் பலவும்வந் துதிக்குந் தானே (35)

என்றபடி தோஷங்களின் நடையை ஒழுங்காக வுணர்ந்தபின் காலத்தையும் வயதையும் கவனித்து ஒரு முறைக்கு இருமுறை வெவ்வேறு காலங்களில் நாடியின் தன்மையை நுண்மையுடன் பகுத்துணருதல் மிக்க ஆவசியகமானது. எங்ஙனமெனின்:—

## வைத்திய சாரசங்கிரகம்

காலையில் வாதநாடி கடிகையிற் பத்ததாகும்
பாலையாம் பித்தநாடி பகருச்சி பத்ததாகும்
மாலையாம் சேத்மநாடி மதிப்புடன் பத்ததாகும்
வாலையாம் மனோன்மணிக்கு வகுத்துமே தொகுத்ததாமே (36)

என்று கூறியபடி சாதாரணமாகக் காலை 6 மணிமுதல் 10 மணி வரையில் வாதத்திற்கு அரசுகாலமாதலால் வாதமிகுதியையும், காலை 10 மணிமுதல் பகல் இரண்டுமணி வரையில் பித்தத்திற்கு அரசு காலமாதலால் பித்த மிகுதியையும், பகல் இரண்டு மணியி லிருந்து மாலை 6 மணிவரையில் கபத்திற்கு அரசு காலமாதலால் கப மிகுதியையும் குறிக்கும். அத்தன்மையாகவே இரவில் முதல் 10 கடிகை வாதமும் அதற்குப் பின் 10 கடிகை பித்தமும், அதற் குப்பின் சூரியோதயம் வரையில் கபமும் நடக்கும். இதனால் அறிவைச் சிதறவிடாமல் மனதைத் திடப்படுத்திக் கூறுவதுமன்றி

## வைத்தியசதகம்

*தானவனு மமைத்தபடி வயதுநூறு*
*சகலருக்கும் இளமையிலே சிலேத்துமமாகும்*
*ஆனநடு வயதுபித்த மப்பால் வாதம்*
*ஆறஞ்சி மூவாண்டு மாதம் நான்கு*
*ஈனமற மூவருமே மூன்றுபங்காய்*
*இப்படியே நடந்துகொள்வா ரிறையோன் முன்னாள்*
*ஏனமுற மமைத்தவண்ண மாண்டுமாத*
*மியைவான நாள்கள் தப்பி மறிப்பதாமே* (37)

வயதிற்குத் தக்கபடி திரிதோஷங்களின் வன்மை மென்மைகளை யும் மற்றுமுள்ள நாடியின் விசேடங்களையும் எழுதப்புகின் பெரும் நூலாக விரியு மாதலால் குருபரம்பரையாக நன்குணர்ந்த தேசிக ரிடம் சென்று பழகி நுண்ணறிவாலும் அனுபவத்தாலும் அறிதல் வேண்டும்.

## அஷ்டவிதபரீக்ஷை

### சத்தம்

### தேரையர் வெண்பா

*வீணையிசை நத்தோசை வேயோசை நாயோசை*
*வீணையிசை நத்தோசை வெற்போசை—வீணையிசை*
*தாரையியம் பேரியியந் தப்பாதொான் றுதிலக்கந்*
*தாரையியம் பேர்கனல்வீ தான்* (38)

ஆயுள் வேதத்தில் பூரண பாண்டித்தியம் வாய்ந்த ஒருவன் பிணி யாளன் பேசும் ஒலிக் குறிப்பினை அளந்தறிந்து கூறுவது எங்ஙன மெனின், ரோகியின் ஓசை தம்புரு, கின்னரி, வீணை முதலிய வற் றின் ஓசைபோன்றும், சங்கினோசைபோலும், புல்லாங்குழலிசை யைப் போன்றும், பாய்ச்சிகை உருட்டுங் காலத்துண்டாகும் இசைபோன்றும், வீணை யடித்தல்போல் நாவின் நுனியும் பல்லின் அனியும் பொருந்துவதா லுண்டாகும் சப்தம் போலும், மலையின் கண்ணிருந்து வரும் கடலோசையின் எதிர் தொனியைப்போன் றும், கிணற்றிற்குள் இருப்பவன் பேசும்தொனியைப் போன்றும், பேரிகை முழங்கும் சப்தம் போன்றும், கேட்கப்படும். இவ் வோசை வேறுபாடுகளைப் பிணியாளன் தேகம், நிலைமை என்னும்

இரண்டையும் கூட்டிச் சாத்தியா சாத்தியங்களை ஊகித்துணர்க.

எவ்வாறெனில், பிணியாளன் சொல் வீணையிசையை ஒத்திருக்கின் ஒரு நாழிகையிலும் நத்தோசையை ஒக்கின் பத்து நாழிகையிலும் சங்கநாதத்தை ஒத்திருப்பின் இருபது நாழிகையிலும் பெரிய சப்தத்தோடு எதிர் தொனியாக உண்டாயின் ஆயிரம் நாழிகையிலும் பாய்ச்சிகை உருட்டும் சப்தத்தை ஒத்திருப்பின் நூறு நாழிகையினும் இறுதிவருமென்பது.

## ஸ்பரிசம்

நேரிசை வெண்பா

இடங்கரா மைமயிலை யிந்துமத்தி வெம்மை
இடங்கரா மைமரங்க லித்தை—யிடங்கரா
நாள முளியரமு நாலேமெழட் டொன்பானை
நாள முளியரமா நாடு (39)

ரோகியின் சரீரத்தைத் தொட்டுப் பார்க்கும்போது முதலையின் முதுகைப் போலிருப்பின் 12 நாளிலும், ஆமை முதுகைப்போலிருப்பின் 56 நாளிலும், மயிலை மீனினது வாற்புறத்தைப்போலிருக்குமாயின் 45 நாளிலும் இறுதிவருமென்று உறுதியாகச் சொல்லலாம்.

இனி, குளிர்ச்சி மிக்கிருப்பின் 12 ஜாமத்திலும், நடுத்தரமான வெம்மையும் குளிர்ச்சியும் தொந்தித்து வேகத்துடனிருப்பின் 56 ஜாமத்திலும், அதிக உஷ்ணமாக விருப்பின் 45 ஜாமத்திலும், ஆனைத் தோலைப் போலிருந்தால் 12 நாழிகையிலும், மரத்தைப்போலிருந்தால் 56 நாழிகையிலும், கல்லைப்போலிருந்தால் 45 நாழிகையிலும், தாமரைக் கொடியின் முள்ளைப் போலிருப்பின் 12 விநாடியிலும், தச்சன் உளியைப்போல் கூர்மையாக இருப்பின் 56 விநாடியிலும், அரத்தைப்போல் கூர்மையாக இருப்பின் 45 விநாடியிலும் இறுதிவருமென்று கூறுக.

## ரூபம்

நேரிசை வெண்பா

என்றுமதி செவ்வா யிரணியன்சுங் கன்காரி
யென்றுமதி செவ்வா யிவையொடுமை—யென்றுமதி

யஞ்சுமா தக்கணமே லாறுதிங்க ளாமினுக்கே
லஞ்சுமா தக்கணமே யாம்

ரோகியின் சரீரம் சூரியனைப்போற் சிவந்தும் மினுமினுத்து மிருப்பின் 2 மாதத்திலும், சந்திரனைப்போல் சிவந்த வெண்மை நிறத்துடன் மினுமினுத்திருப்பின் 3 மாதத்திலும், செவ்வாயைப்போற் சிவந்த அக்கினி சொரூபமான நிறத்துடன் மினுமினுத்திருப்பின் 4 மாதத்திலும், குருவைப்போல் பொன்னிறத்துடன் மினுமினுத்திருப்பின் 5 மாதத்திலும், சுக்கிரனைப்போல் சுத்தவெண்மையாக விருப்பின் 6 மாதத்தினும், சனியைப்போல் கறுத்த நிறத்துடன் மினுமினுத்திருப்பின் 7 மாதத்திலும் மரண முண்டாகுமென்று துணிந்து கூறலாம்.

## ரசம்

### தேரையர் வெண்பா

கைப்பினிமை யாம்பிரமை காரலுவர் கார்ப்பாறுங்
கைப்பினிமை யாம்பிரமை கான்மாறிற்—கைப்பினிமை
வாரமதி பக்கமின்றி வைக றிதியிருத்தை
வாரமதி பக்கமாள் வார் (41)

ரோகிக்குக் கசக்கும் பண்டம் கசவாமல் வித்தியாசப்படினும் மற்றெப்பண்டத்தைப் புசிக்க கசக்கினும் ஒரு வாரத்திலும், தித்திப்புப் பண்டத்தை உட்கொண்டபோது தித்தியாமல் வித்தியாசப்படினும், மற்றப் பண்டங்கள் எதைப் புசிக்கினும் தித்திக்குமாயினும் ஒரு மாதத்தினும், புளிப்புப் பண்டம் புளிக்காமல் வித்தியாசப்படினும், மற்றப் பண்டங்கள் புளிக்கினும் 15 நாளையிலும், கார்ப்புடையது கார்ப்பின்றியும் ஏனைகாரினும் ½ நாளிலும், உவர்ப்பது உவர்க்காமல் ஏனையன உவர்ப்பினும் ஒரு நாளையினும், துவர்ப்பது துவராமல் மற்றவை துவர்ப்பின் ஒரு நாழிகையினும் இறுதியுண்டாகு மென்று உறுதியாகக் கூறுக.

## கந்தம்

### தேரையர் வெண்பா

ஆம்பல் கணிதாழை யார்மதலை சாதிமனை
யாம்பல் கனுகடிகை யாமிதிதி—யாம்பல்கணி
திங்க ளிருதயனஞ் செப்புமா ணக்குறிப்பு
திங்க ளிருதயன்றாள் சேர் (42)

ரோகி, மூங்கிற்பூ முதல் எல்லாப் பூக்களையும் நாசியினல் முகரும் போது அவை தமக்குரிய மணத்தை ரோகி முகராமல் வேறு மணத்தை முகருவானாயின் மரணம் நேரிடும். மூங்கிற்பூவிற்கு 7 விநாடிக்குள்ளும், வேப்பம் பூவிற்கு 7 நாழிகைக்குள்ளும், தாழம்பூவிற்கு 7 சாமத்திற்குள் ளெனவும், ஆத்திப்பூவிற்கு 7 நாளையிலும், கொன்றைக்கு 7 மாதத்திலும், சிறு சண்பகப் பூவிற்கு 14 மாதத்தினும் மரணமென்று திடமாக உணர்ந்து சொல்லுக.

## மலம்

தேரையர் வெண்பா

சாகப் புழுக்கை தனிலு முறுகுமெனிற்
சாகப் புழுக்கையறி சற்றுநன்று—சாகப்பு
செம்பாகா நன்மை திடமா மதினுமிகச்
செம்பாகா நன்மையென்று தேர் (43)

மலம் வெள்ளாட்டுப் புழுக்கையைப் போலுலர்ந்து வறண்டுபோயிருப்பின் அவன் மரணமடைவதற் கேதுவானவ னென்றும், பருவ பக்குவான குழம்பைப் போலிருப்பின் சிறிது நன்றென்றும், வெண்மை நிறமாகவிருப்பின் நன்மையென்றும், செம்மண்ணின் நிறமாக இருப்பின் மத்திம மென்றும் கறுப்பு நிறமாக இருப்பின் தீமையென்றும் சொல்லுக.

## நீர்

தேரையர் வெண்பா

மாணிக்கம் பால்பிரச மஞ்ச ளிலீதுபிர
மாணிக்கம் பால்வரிசை மாறுநீர்—மாணிக்க
முத்தம மாதி யொருநாலு மந்தமுனே
யுத்தம மாதிமதி யுன் (44)

நீர் மாணிக்கத்தைப்போற் சுத்த சிவந்த நிறத்தைப் பெற்றிருப்பது அசாத்தியக் குறியாம். வெண்மை நிறமாகப் பாலைப்போலிருப்பினும் அசாத்தியக் குறியாம்; தேனைப்போல் நிறம் பிரிப்பின்றிக் கலந்திருப்பின் தாமதசாத்திய மென்றும் கூறுவர். எனினும், அந்நோய்தீர நாட்செல்லும். மஞ்சளைப் போற் பொன்னிறமாக இருப்பின் பிணி தீருவதற் கையஞ் சிறிதுமில்லை யென்றறிக.

## எச்சில்

### தேரையர் வெண்பா

எச்சிற் பரிவா யிளநீர்பால் வெண்ணெயளே
யெச்சிற் பரிவா யிலகுநுரை—யெச்சிற்
களியடைமா நன்றமுதற் கண்ணுன்கு முன்னிக்
களியடைமா மேவுபிட கா (45)

நோயாளியின் உமிழ் நீர் இளநீர் போலிருப்பின் மிகவும் உத்தமம். பாலைப்போ லிருப்பின் உத்தமம் வெண்ணெயைப்போல் அழுந்தியிருப்பின் மத்திமத்தில் உத்தமம். தயிரைப்போலழுத்தமாகவும் வெண்மையாகவு மிருப்பின் மத்திமத்தில் மத்திமம். குதிரையின்வாய் நுரையைப் போன்றிருப்பின் அதமம். என்றுணர்க.

## அகஸ்தியர் நீர்ப்பரீக்ஷை

உடலுறு பிணியைக் காண வுண்மை வாகடநூற் சொல்லும்
படரு மூத்திரக் குறிப்பைப் பார்க்குங்கால் வாதம் வெள்ளை
திடமுறு பித்தஞ் சற்றுச் சிவப்புடன் மஞ்சள் போலும்
புடமிகச் சிவப்பு மஞ்சள் போன்றிடிற் காமாலை யாமே (46)

நிலைக்கு நற்கபமே யாகில் நீர்நுரை போன்றி ருக்கும்
இலகுமா மூத்திரத்தி லெண்ணெயை விட்டுப் பார்க்கில்
கலக்கஞ் செய்வாதத் தோர்க்குக் காணவே நீளமாய்ப் போம்
பிலனுறு மெய்யை வாட்டும் பித்தமே சிதறிக் காட்டும் (47)

சாற்றிய கபந் தனக்குச் சல்லடைக் கண்போல் காணும்
தோற்றிய திரிதோஷந் தான்சொல் மூன்று குணமுங் காட்டும்
வேற்றொரு துளியாய் நின்றால் வெகுதாம சாத்தியந்தான்
ஆற்றி மெள்ளப் படர்ந்தா லதுசுக சாத்ய மாமே (48)

நீரினி லமுழ்ந்திப் போனால் நிகழ்த்திடு மசாத்தியந் தான்
வாரிடு முலையாய் கேளாய் வளையப் பாத்திரத்தி லேனும்
பாரினிற் குயவன் செய்மண் பாத்திரந் தனிலரா னாலும்
சாரவே பிடித்து வெய்யிற் றனில்வைத்துப் பார்ப்பாய் தானே (49)

இன்னமுங் குறிகள் கேட்கி லிப்படி பலவா யுண்டு
இன்னுமந் நீரி லெண்ணெய் விட்டுநாம் பார்க்குங் காலை
மன்னிய வவயவங்கள் மனிதர் போல் மச்சங் கோயி
லுன்னிய பிரகா ரங்க ளுயர்த்திடும் யானைபோல (50)

மலைகுடை விருட்சம் வெண்சா மரையுடன் தாம ரைப்பூ
கொலை செய்யு மானைக் கொம்பு சூல்லாய் கண்ணாடி சங்கு
மலைவிழி யாளே கேளாய் மகரதோ ரணமே பூமி
தலைமைவாழ் வீணை போலும் சவுக்கமா மனையைப் போலும் (51)

பாகலி னிலையைப் போலும் பகர்வண்டி தாமரையின் மொக்கு
ஏக சிங்கா தனந்தா னிவைகள்போ லுருவங்க கண்டால்
தேக மானிட ரிடத்தில் சேர்ந்திருந் திடுக்கண் செய்யும்
ரோகமே நிற்கமாட்டா துரைக்குஞ் சாத்தியக் குறிப்பே (52)

மத்தளங் கொடியே பானை மலமுண்ணும் பன்றிக் காட்டில்
வைத்திடு மிருக நாட்டி வாழ்ந்திடுங் குயவன் பண்ணுஞ்
சுற்றுமச் சக்கரம்போல் தோற்றிடு முருவங் கண்டால்
சத்தியமாகச் சொன்னேன் தாம சாத்தியந் தானுமே (53)

நாலுகா லொருகா லிந்த ஞாலத்தி லுரைக்கு மூன்று
காலுள மனிதர் காயம் கனக்கவே பெருக்க மாந்தூண்
மாலுறத் தலையில் லாத மாந்தர் முன்னுகைக் கத்தி
சூலமே யுலக்கை வில்லு தோன்றிடு மரிவாள் பாம்பே (54)

பூனையே யெலியே யம்பு புகல்கெண்டை சுரக்காய் கோழி
கானிடைப் புலி குரங்கு கண்ணாடிற் போலுஞ் சிங்க
மீனமில் குதிரை நாகம் வெற்றிலைக் கொடியு மல்லா
லீனமில் லெருது காட்டி லுழன்றிடுங் கரடி தானே (55)

பறந்திடு பட்சி யாமை பகருந்தே ளிவையே போலுஞ்
சிறத் தெண்ணெய் விட்டபோது சின்னதாய்ச் சிறுகி னாலும்
புறந்தருங் கூந்தல் மானே பொங்கியே மறைந்திட் டாலும்
தறந்திடிற் குறிக ளெல்லா மசாத்தியக் குறிப்பு தானே (56)

இவ்வித மூத்தி ரத்தி னிலக்கண முற்று மாய்ந்து
செவ்விய வாயுர் வேதஞ் செப்பிய வகைக ளெல்லாம்
நவ்வி நேர் விழியி னாளே நாட்டினில் மனிதர்க் காக
அவ்விய மில்லா நெஞ்சத் தகத்திய ருரைத்த தாமே (57)

## * தோஷக்குறிகள்

வெண்பா

கையின் மணிக்கட்டைக் காட்சி நுதனடுவில்
ஐய மறவைத் தணிவிழியான்—மையின்றி
நோக்கிற் பெருத்து நுவலளவிற் காட்டுமேல்
காக்குமுயிர் போய்விடுமே காண்

கருத்து

கையின் மணிக்கட்டைப் புருவநடுவில் நாசியோடு சேரும் யடிவைத் திரண்டு விழிகளால் நோக்கும்போது, அக் கரமானது தன்னளவிற் சிறுத்துக் காணில் நலம்; பெருத்துக் காணில் மரணம் நேருமென்று அறிவுடையோர் கூறுவர்.

பிணியாளன் றன்செவியைப் பின்னின்று கிள்ளத்
திணிதோள் துடியாது தோன்றில்—அணியிழாய்
எச்சிற் றனைத்துப்பி னேகாது வாய்தவறின்
இச்சை புயிர்போ மியம்பு (59)

(க - து) பிணியாளனுக்குப் பின் புறமாக நின்று திடுக்கென்று அவன் செவியைக் கிள்ளும்போது அவனது இரண்டு தோள்களும் துடிக்கின் நன்று. அங்ஙனம் துடியாவிடின் மரணத்துக் கேதுவாம். அன்றியும் நோயாளி எச்சிலைத் துப்பும்படி செய்யும்போது சிதறி விழாமல் வாயோடு இலயித்து நின்றால் தீதாகும்.

ஓசை யடங்கி லுயிர்போமே யேழ்நாளில்
தேசில் விழியடங்கில் தேரைந்தில்—நாசி
யுயிர்ப்படங்கில் மூன்றி லுயர்நா விரண்டி
லயிர்க்கு முடல்வெறுக்கி லன்று (60)

(க - து) நோயாளியின் செவிகளை இரண்டு கைகளாலும் மூடியுற்றுக் கவனித்தால் அவனுக்குக் கடலொலியைப் போன்ற ஒலி கேளாதுவிடின் ஏழுநாட்களிலும், கண்கள் பார்வை யிழப்பின் ஐந்து நாட்களிலும், நாசி ஒரு பொருளை முகராது போயின் மூன்று நாட்களிலும், நாக்கு ருசியை அறியாது விடின் இரண்டு நாட்களிலும், உடலில் ஸ்பரிச உணர்ச்சி இல்லாமலொழியின் ஒரு நாளிலும் மரணம் என்று ஐம்புலன்களின் வகையினை உணர்ந்த ஆன்றோர் கூறுவர்.

வண்செவியோ டேநாசி வல்லென்று தண்ணெனினும்
தண்புயங்கள் நன்கு சரிந்திடினும்—திண்மார்பு
மேடிடினுங் கண்மலரில் வெண்மாசி தோன்றிடினும்
தேடு நமன்றமருஞ் சென்று (61)

(க - து) நோயாளியின் செவிகளும் மூக்கும் விறைத்துச் சில்லென்றிருப்பினும், புயங்கள் சரிந்திருப்பினும், மார்பு உயர்ந்

திருப்பினும், கண்களின் மணிகள் வெளுத்திருப்பினும் உயிருக்குக் கெடுதிவரு மென்பர்.

கறுத்துமலம் போயின் கலைமாறு தேகின்
வெறுத்துப் புரண்டுமண் வேண்டின்—செறித்துமலம்
நீரிற்கு முன்னர் நிகழ்ந்திடிற் றீதென்று
பாரித் துரைத்தனரே பண்டு (62)

(க - து) நோயாளிக்கு மலம் கறுத்துக் கழியுமாயினும் இடைகலை, பிங்கலை மாறாமல் ஒன்றாகவே ஓடினாலும், படுக்கையை வெறுத்துப் புரண்டு மண்ணில் படுத்துக்கொள்ளினும், நீர் போவதற்குமுன் மலம் போகுமாயினும், தீமைவிளையுமென்று தொல்லாசிரியர் துணிந்துரைத்தனர்.

தன்னறிவு தப்புந் தனைத்தூக் கெனமொழியும்
பன்னிப் பெருங்குரலே பண்பாக்கும்—உன்னியிடின்
நீர்த்தடிக்கும் நெய்யாம் நீளெரியிலு மெரியும்
பார்க்கிலுல கொழியும் பண்பு (63)

(க - து) நோயாளியின் அறிவு மாறித் தூக்கு தூக்கு, என்னும் பதத்தைப் பிரயோகிப்பினும், விகாரமான ஒலியோடு பெருங்குரலிடினும் மரணம் வரும். நீரானது நெய்போலத் தடித்திருப்பினும், நெய்யோடு உறவாகும் தன்மை பெற்றிருப்பினும், அதனை ஒரு வர்த்தியிற் புரட்டிக் கொளுத்த எரிந்தாலும் உலகை விட் டொழியுங் காலக்குறி என்பர்.

வெப்புப் பிணியில் வெம்மேகத் தால்வருத்தின்
தப்பு மிகைநீரே தானிறங்கின்—செப்பும்
கிராணியிற் பாண்டில் கிளர்நீர்ச் சுருங்கிற்
பிராணன் பிரியுமெனப் பேசு (64)

(க - து) நோயாளிக்குச் சுரரோகத்தினும் மேக ரோகத்தினும் நீர் அதிகரித் திறங்கினாலும், கிராணி ரோகத்தினும் பாண்டு ரோகத்திலும் நீர் வரத் தடையானாலும் உயிருக்குத் தீது என்பர் ஆயுர்வேதமுணர்ந்த பெரியோர்.

மண்ணி விறந்திட்ட மக்க ளுடன்பேசல்
வண்ண விமானந்தான் வந்ததெனல்—நண்ணினர்
தூத ரெனவுரைத்தல் தூய நிலங்கீற
லோது பிழையாகா வுன் (65)

(க - து) இறந்த பந்துக்களோடு பேசுதல், விமானம் வந்த தென்று தாவிச் செல்லுதல், யமதூதர் வந்துவிட்டார் என்று பலகால் சொல்லுதல், நிலத்தைக் கீறுதல் ஆகிய இக் குறிகள் தீமை என்பர் ஆயுர்வேத முணர்ந்த பெரியோர்.

முதுகுபுறங் கைகாலு முன்னுறவே வீங்கிக்
குதமுடனே நெஞ்சினிலுங் காணில்—குதமோடு
கோச மிகவீங்கிக் கூறுமவை சில்லிடினும்
நாச மவர்க்கெனவே நாடு (66)

(க - து) முதுகுபுறம், கைகால் வீங்கி நெஞ்சுவரை செல்லி னும், குதமும் கோசமும் வீங்கிச் சில்லிட்டாலும் நற்குறி யன் றென்பது.

நாசிவளி தண்ணெனினு நல்லதிரு வாயினின்றும்
வீசுவளி வெம்மைதனில் வீறிடினும்—பாசமிகு
தாக மிகுந்திடினுஞ் சாருந் துடியிடையாய்
மாகம் புகுந்தேகு மாண்பு (67)

(க - து) நாசியினின்று வரும் சுவாசம் குளிர்ந்திருப்பினும் வாயினின்று வரும் சுவாசம் உஷ்ணமாக இருப்பினும் தாக மதிகரிப்பினும் மரணம் என்க.

பாண்டு பிரமேகம் பன்வாத சூலைகுன்மம்
வேண்டும் க்ஷயம்ஜன்னி வெண்சோகை—நீண்ட
அதிநீரே காமாலை யானபிணி தம்மு
ளதிசார மாகா தறி (68)

(க - து) பாண்டு, பிரமேகம், வாதசூலை, குன்மம், க்ஷயம், ஜன்னி, சோகை, நீரிழிவு, காமாலை முதலிய பிணிகளில் வருந்தும் போது அதிசார ரோகம் உண்டாகில் துன்பமென் றறிக.

ஜன்னி விஷசோகை சார்குன்மம் நீரிழிவு
துன்னுங் கிராணி சுரம்பேதி—பன்னுபிர
மேகம் க்ஷயமீவற்றுள் மூச்சுவிக்கல் வீக்கமிவை
யாகி னுயிர்போ மறி (69)

(க - து) ஜன்னி, விஷசோகை, குன்மம், நீரிழிவு, கிராணி, சுரம், அதிசாரம், பிரமேகம், க்ஷயம் இந்த ரோகங்களில் சுவா சம், விக்கல், வீக்கம், முதலியவை உண்டாயின் தீமை என்பது.

மேகத்தில் நீரிழிவு மேவுமதில் வாதநோய்
வேகவா தத்துள் வயிற்றுளைவு—சோகவிக்கல்
பன்னுவிக்கல் தன்னிற் பகரிளைப் பாங்கதனிற்
றன்னீளை யாகாது சொல் (70)

(க - து) மேக ரோகத்தில் நீரிழிவும்; நீரிழியில் வாதமும்; வாதத்தில் வயிற்றுவலியும், விக்கலும்; விக்கலில் இளைப்பும்; இளைப்பில் சுவாசமும் காணப்படின் தீமை என்க.

நீரிற் பிளவை நிகழ்பிளவை யில்தாக
மோருமதில் தேகத் துறுமனலுந்—தேருமதில்
நல்ல மயக்க நவில்மயக்கத் தில்வேர்வை
யல்லல் செயுமென் றறி (71)

(க - து) நீரிழிவில் பிளவையும், பிளவையில் தாகமும், தாகத்தில் தேகவனலும், தேகவனலில் மயக்கமும், மயக்கத்தில் வியர்வையும் தீயகுறிகள் என்க.

இதுவுமது

வேர்வை தனிற்கபமு மேவுமதில் விக்கல்நோய்
கார்முகில்நேர் கூந்தலாய் கண்டிடுமேல்—சீர்கொள்
மருத்துவத்திற் றேர்ந்த மதியுடையோ ராவி
தரித்திரா தென்பர் சரி (72)

(க - து) மேலே கூறப்பட்ட முறையானே வந்தநோய்களுள் வியர்வை மிகுந்தபோது கபத்தினுடன் பத்திரவமும் விக்கலுங் காணுமாயின் உயிர் பிழைப்பது அரிதென்று மருத்துவ நூலில் மதிநுட்பம் வாய்ந்தோர் கூறுநிற்பர்.

வாதத்திற் குன்மம் வளர்குன்மத் திற்பேதி
யாதலதிற் பொருமலாங்கதனில்—வேதனைசெய்
பொல்லாக் கபமும் புணருமதில் விக்கல்நோய்
கொல்லு மதின்மயக்கங் கூறு (73)

(க - து) வாதரோகத்தில் குன்மமும், குன்மத்திற் பேதியும், பேதியிற் பொருமலும், பொருமலில் கபமும், கபத்தில் விக்கலும் காணுமாயின் தீதென்க.

கபத்திற் சுரரோகங் காணுமதில் வாயு
சுபமன் றதிற்பேதி சொல்லின்—விபத்தேயாம்
பேதி தனில்வீக்கம் பேசுமதின் மெய்குளிர்ச்சி
கோதி லிவையாய்ந்து கொள் (74)

(க - து) கபத்திற் சுரமும், சுரத்தில் வாயு தொந்தமும், வாயு தொந்தத்திற் பேதியும், பேதியில் விக்கமும், வீக்கத்தில் தேகக் குளிர்ச்சியும் தீமை பயக்குமென் றுணர்க.

இதுவுமது

மெய்யின் குளிர்ச்சிதனின் மேவுகப மீதூறல்
வெய்ய வதின்மயக்கம் விக்கல்நோய்—ஐயமிலை
தோன்றிற் றுவர்வாய்ச் சுகமயிலே கூற்றுவனுர்
தோன்றுங் குறிகளெனச் சொல் (75)

(க - து) மேலே கூறப்பட்ட வரன் முறையில் வந்த பிணிகளுள் தேகக் குளிர்ச்சியில் கப மதிகரிப்பினும், கபத்தில் மயக்கமும் விக்கலுங் கண்டாலும் யமன் போதருங் காலமென் றுணர்க.

சொல்லுபித்தத் திற்சோகை சோகைதனில் வாயுதொந்தம்
வல்ல வதிற்பாண்டு வன்பாண்டில்—நல்ல
வயிற்றுக் கடுப்பு வளர்கடுப்பிற் சீதம்
பயிலிற் கெடுதியெனப் பன் (76)

(க - து) பித்தத்தில் சோகையும், சோகைதனில் வாயு தொந்தமும், வாயு தொந்தத்திற் பாண்டு ரோகமும், அப்பாண்டு ரோகத்தில் வயிற்றுக் கடுப்பும், வயிற்றுக் கடுப்பிற் சீதமும், தீமைபயக்குங் குறிகளென உணர்ந்து கொள்க.

இதுவுமது

சீதந் தனிற்கபமுஞ் சேர்கபத்தில் விக்கலுட
னோது மயக்கமிவை யுற்றிடினு—மாதேகேள்
கோது தனைநீக்கிக் கூறுலகோர் தாம்போற்றத்
தீதி லுலகுபுகுந் தேர் (77)

(க - து) முன் கூறிய முறையி லுண்டாகிய பிணிகளுள் சீதத்திற் கபமும், கபத்தில் விக்கலும் மயக்கமும் உண்டானால் இவ்வுலகவாழ்வை அநித்திய மென்று வெறுத்து இந்திர போகத்தை அடைவாரென்று அறிக.

## தூது லக்ஷணம்

செந்துகிலை மேற்கொண்டு செங்கைகாற் றுன்சொரிந்து
வெந்தந்தத் தைக்குற்றி விண்பார்த்துச்—சந்தமுற
வைத்தியன் செய்யுரைக்கும் வேளைகளிற் போயழைக்கில்
சைத்தியத்தாற் றீதென்றே சாற்று (78)

(க - து) சிவப்பு வஸ்திரத்தை உடுத்திக்கொண்டும், கைகால்களைச் சொறிந்துகொண்டும், பல்லைக் குற்றியும், ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டும் வந்தழைத்தாலும், வைத்தியன் எண்ணெயிட்டுக்கொண்டிருக்கும் போதழைப்பினும் நோயாளிக்குச் சீதளரோகத்தால் தீமை என்றறிக.

கம்பம் பிடித்துக் கவின்சுவ ரும்பற்றித்
தும்மிக் கரநெட்டைத் தான்விட்டுச்—செம்மையில்
கொட்டாவி விட்டுமே கூப்பிட்டால் நோயாளி
விட்டாவி போகும் விரைந்து (78)

(க - து) கம்பத்தைப் பிடித்துக்கொண்டும், சுவரைப்பிடித்துக் கொண்டும், தும்மியும், நெட்டைவிட்டும், கொட்டாவி விட்டும் வைத்தியனை அழைப்பின் நோயாளிக்குத் தீங்கு வருமென்பது.

விரிந்த தலையும் வியன்தடியார் கையும்
பரிந்த வுடல்சொரிந்தும் பையப்—புரிந்த
நகங்கிள்ளிக் கைகட்டி நாடி யழைக்கி
னிகபோக நீங்கு மியம்பு (79)

(க - து) தலையை விரித்தும், தடியைக் கைக்கொண்டும், உடம்பைச் சொறிந்தும், நகத்தைக் கிள்ளியும், கைகளைப் பின்கட்டாகக் கட்டிக்கொண்டும் பரிகாரியை அழைக்கின் நோயாளி தேறுவது கடினம் என்க.

## மருந்துண்ணும் காலம்

காரிபுதன் திங்கள் கருதமருந் தாகாது
பாரினிற் சுங்கன் பரிகாரம்—நேரன்று
தேரகுரு சேயுந்தான் தீதில்லை யென்றாலும்
பேரருக்கன் நன்றெனவே பேசு (80)

(க - து) சனி, புதன், திங்கள் ஆகிய இவ்வாரங்களில் மருந்துட் கொள்ளல் ஆகாது; வெள்ளிக்கிழமை உட்கொள்ளின் பிணி மிகுதிப்படும்; வியாழம், செவ்வாய் இத்தினங்களில் அருந்துவது நன்றேயாம். ஞாயிற்றுக்கிழமை எல்லாவற்றினுஞ் சிறந்ததென்க.

---

* இப்பாடல்கள் கண்ணுசாமீயம் எனப் பெயரிய நூலின்கண் ஒரு பகுதியாக உள்ளவை.

## சுத்திக்கிரம விலப்பகம்

### நீர்வகை

1. பனிநீர்—மெல்லிய சலவைசெய்த சல்லாத்துணியை சுத்த ஜலத்தில் கசக்கிப் பிழிந்து, தூசுபடாம லுலர்த்தி, அதனை நெற்பயிரின் மீதேனும் அருகம்புல்லின் மீதேனும் இரவில் விரித்து வைத்துக் காலை சூரியோதத்திற்கு முன் படிக பாத்திரத்தில் பிழிந்து வடிகட்டிக் கொள்க.

2. ஆலாங்கட்டி—இதனைப் படிக பாத்திரத்திலேனும் மட்பாண்டத்திலேனும் போட்டுச் சிறிது கறிமஞ்சள் தூள் சேர்த்து 7 நாள் சூரியபுடம் வைத்துச் சீலையில் வடிகட்டிக் கொள்க.

3. வெண்ணீர்—கரிநெருப்பில் தக்கபடி காய்ந்தநீரை மூன்று முறை கறுத்த நிறமுள்ள சீலையால் வடிகட்டுக.

4. சுத்தஜலம்—இதனை 7 மடிப்பாக மடித்த முரட்டுத்துணியால் 7 முறை வடிகட்டுக.

5. கழுநீர்—அரிசியை இரண்டாவது கழுவும் நீரை ஒரு ஜாமம் தெளிய வைத்து வடித்துக் கொள்க.

6. காடி—காடியுள்ள பாண்டத்தை வாய் மூடி, 3 தினம் கடும் ரவியில் வைத்து மறுநாள் வண்டலை நீக்கி வடிகட்டிக் கொள்க.

7. இளநீர்—மரத்தினின்றும் கொண்டுவந்த இளநீரைக் கல்லில் மோதி உடைக்காமல கத்தியால் சீவிச் சலத்தை உடனே வடிகட்டிக் கொள்க.

8. கோசலம்—வேண்டிய அளவு கோசலத்தை ஒரு புது பாண்டத்தி விட்டு மத்தினால் ½ நாழிகை கடைந்து அதிலுண்டாகும் நுரைகளை நீக்கிக் கெட்டியான சீலையில் வடிகட்டிக் கொள்க. இவ்வாறு 7 முறை செய்க. இது போலவே வெள்ளாடு, எருது, கழுதை, குதிரை, யானை, நாய் முதலியவைகளின் நீர்களையுஞ் சுத்திகரித்தல் வேண்டும்.

9. அமுரி—உலக இன்பம் இன்னதென உணராத மக்களுடைய நீரை அவர்கள் பெற்றோருக்கு மேக முதலிய ரோகங்கள்

இல்லாதிருப்பதைக் கவனித்துக் கோப்பையிலேனும், மட்பாண்டத்திலேனும் வடிகட்டிக் கொள்க.

### பால்வகை

10. பசும்பால்—கன்று ஊட்டிய பின் அதன் வாய்பட்ட வேகம் தணியப் பசுவின் மடியைச் சுத்த ஜலத்தால் கழுவிக் கறந்து, நுரை யடங்கிய பின் வடிகட்டுக.

11. வெள்ளாட்டுப்பால்—இதனை 7 முறை முரட்டுத் துணியால் வடிகட்டுக.

12. முலைப்பால்—இதனிற் கொஞ்சந் தும்பைப் பூவைப் போட்டுக் கால் நாழிகை சென்றபின் வடிகட்டிக்கொள்க. அல்லது ஒரு வெள்ளிக் கிண்ணத்தை நெருப்பனலிற் சூடேற்றி அதனிற் பாலை விட்டு உடனே வடிகட்டிக் கொள்க.

13. தயிர்—தோய்ந்த தயிரினின்று பிரிந்த ஜலத்தை விலக்கி உபயோகப்படுத்துக

14. மோர்—இதனில் அளவுபோல் சிறிது லவணம் சேர்க்கச் சுத்தியாம். அதிலுள்ள துவர்ப்பினுல் தோஷமில்லை.

### நெய்வகை

15. வெண்ணெய்—இதனைச் சுத்த ஜலத்தில் புளிப்பறப் பிசைந்து பிசைந்து கழுவிக்கொள்க.

16. நெய்—வெண்ணெயைப் பாண்டத்திலிட்டு; அடுப்பேற்றி அதிலுள்ள ஜலம் சுண்ட நெய் காந்தாமல் காய்ச்சி வடிக்கட்டுக.

17. வாதுமை எண்ணெய்—இதனை ஒரு படிக பாத்திரத்தில் நிரைத்து, அரைப்பாகம் மறைய மணலிற் புதைத்து, 2 ஜாமம் இரவியில் வைத்து, அடிவண்டல் கலங்காமல் தெளிவை மாத்திரம் பஞ்சினுல் தோய்த்துத் தோய்த்து மறு குப்பியில் பிழிந்து வடிகட்டுக.

18. ஆமணக் கெண்ணெய்—குப்பியில் வைத்துக்கால் குப்பி மறையும்படி மணலிற் புதைத்து இரண்டுநாள் ரவிபுடம் வைத்துத் தெளிவை வடிகட்டுக. இவ்வாறே மற்ற எண்ணெய்களையும் சுத்தி செய்துகொள்க.

19. புன்கின் நெய்—இந்த நெய்க்குச் சமமாக இதன் பாலை விட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்க.

20. தேங்கின் நெய்—இந்த நெய்க்குச் சமமாக இதன் பாலை விட்டுக் காய்ச்சி வடித்துக்கொள்க.

21. இருப்பை நெய்—எழுத்தாணிப் பூண்டுக் கஷாயத்தை இதற்குச் சமமாகக் கூட்டிக் காய்ச்சி வடித்துக் கொள்க.

22. வேம்புநெய்—வேப்பம் பட்டையை இடித்துக் கஷாயம் வைத்து இதற்குச் சமமாகக் கூட்டி எரித்து வடித்துக் கொள்க.

## வேர்வகை

23. இவை தம்மை ஆற்று ஜலத்தில் கழுவிக் கொள்க.

## கிழங்குவகை

24. இவைகளை நன்றாகக் கழுவி மேல் தோலையும் உள் நரம்பையும் நீக்கித் துடைத்துக் கொள்க.

## பட்டைவகை

25. சிலையால் துடைத்துச் சிறிய கத்தியால் மேல் தோலை மிருதுவாகச் சீவிக் கழித்தல வேண்டும்.

## இலைவகை

26. இவைகளைத் தண்ணீரில் கழுவாமல் சுத்த வஸ்திரத்தால் துடைத்துப் பழுப்பு, அழுகல் முதலியவற்றை நீக்கல் வேண்டும்.

## புட்பவகை

27. காம்பு, புல்லிதழ், மகரந்தம் முதலியவைகளை நீக்கி இதழாக எடுத்துக் கொள்க.

## கடைச்சரக்குவகை 64.

28. சுக்கு—ஓர் எடை சுக்குக்கு இரண்டு எடை சுன்னக்கல்லைச் சேர்த்துத் தாளித்து, ஒரு ஜாமம் சென்றபின் கழுவி, உலர்த்தி, மேல் தோலைச் சீவிக் கழிக்க வேண்டும்.

29. மிளகு—புளித்த மோரில் ஒரு ஜாமம் ஊறப்போட்டு, எடுத்துலர்த்திக் கொள்க.

30. திப்பலி—கொடிவேலி இலைச்சாற்றில் ஒருநாழிகை ஊற வைத்துப் பின்னர் இரவியி லுலர்த்திக் கொள்க.

31. திப்பலி மூலம்—கணுக்களைப் போக்கி உலரவைத்துக் கொள்க.

32. ஆனை திப்பலி—காடியில் ஒரு ஜாமம் ஊற வைத்துப் பின் இரவியி லுலர்த்திக் கொள்க.

33. செவ்வியம்
34. மஞ்சள்
35. மர மஞ்சள்
36. அதி விடையம்
37. சிறு தேக்கு
38. ஜாதிக்காய்
39. அரத்தை

இவைகளை மேல்தோல் சீவிச் சிறு துண்டுகளாக நறுக்கி இரவியிலுலர்த்தி வைத்துக்கொள்க.

40. சித்திரமூலம்;
41. கறுப்புச் சித்திரமூலம்

உள்நரம்பை நீக்கி மேல் பட்டையை மாத்திரம் இடித்துச் சூரணம் செய்து, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் பால்விட்டு, ஏடுகட்டி, அதன்மேல் சூரணத்தைப் பரப்பி, மேல்சட்டி மூடி, ஒரு ஜாமம் சிறுக எரித்துச் சூரணத்தை எடுத்துலர்த்தி, மறுபடியும் கல்வத்தி லிட்டரைத்து வைத்துக் கொள்க.

42. ஓமம்—இதனைச் சுன்ன நீரில் நனைத்து உலர்த்திக் கொள்க.

43. புளி—கொட்டை, கோது முதலியவற்றை நீக்கி மூன்று நாள் இரவியி லுலர்த்திக்கொள்க.

44. கோறுக்காப்புளி—ஜலம் தெளித்துப் பிசரி, நிழலில் ஒரு நாள் ஆறப்போட் டெடுத்துக் கொள்க.

45. சீரகம்—மண் முதலியவை யின்றி ஆய்ந்து புடைத்து இரவியி லுலர்த்திக் கொள்க.

46. கருஞ்சீரகம்—நன்றாய் ஆய்ந்து இரவியி லுலர்த்திப் பொன் மேனியாக வறுத்துக்கொள்க.

| | |
|---|---|
| 47. சதகுப்பை<br>48. வாய்விளங்கம்<br>49. தாளீசப் பத்திரி<br>50. சிறு நாகப்பூ<br>51. ஏலம்<br>52. கிராம்பு<br>53. சடாமாஞ்சில்<br>54. சாதிப் பத்திரி<br>55. காட்டுச் சதகுப்பை | இவைகளில் வேறொன்று மின்றி ஆய்ந்து இரவியி லுலர்த்தி வைத்துக் கொள்க. |

56. வெந்தயம்—நீராகாரத் தெளிவில் அரைநாழிகை ஊறப் போட் டுலர்த்திக் கொள்க.

57. கொத்தமல்லி—வெந்நீரிலேனும் பழ ரசத்திலேனும் கிழிகட்டி எரித்து இரவியு லுலர்த்துக.

58. வசம்பு—சுட்டுக் கரியாக்கிக் கொள்க.

59. கடுக்காய்—இதனைக் கழுநீரில் ஊறப்போட்டு, மஞ்சள் நீரைப் போக்கிக் கொட்டையை நீக்கி உலர்த்துக.

60. நெல்லி வற்றல்—பால்விட்டு வேகவைத்துக் கொட்டையை நீக்கி உலர்த்துக.

61. தான்றிக் காய்—தானழ விழுது : சாற்றில் ஒரு ஜாமம் ஊறவைத்து, விதையை நீக்கி இரவியி லுலர்த்துக.

| | |
|---|---|
| 62. கடுகு<br>63. வெண் கடுகு | நன்றாய் ஆய்ந்து கடுவெயிலில் இரண்டு நாள் உலர்த்துக. |

64. கடக ரோகணி—வேப்பிலைச் சாற்றிலேனும் நொச்சிலைச் சாற்றிலேனும் ஒரு ஜாமம் ஊறவைத்து இரவியி லுலர்த்துக.

| | |
|---|---|
| 65. மந்திட்டி<br>66. கிச்சிலிக் கிழங்கு | இவை யிரண்டனையும் கடுவிரயி லுலர்த்தி இடித்துக்கொள்க. |

67. கற்கடக சிங்கி—வாதுமை எண்ணெயில் வறுத்துக் கொள்க.

68. அதிமதுரம்—சுத்த ஜலத்தி லலம்பி மேல் தோலைச் சீவிச் சிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்திக் கொள்க.

69. கார்போக அரிசி—திருநீற்றுப் பச்சிலைச் சாற்றில் நனைத் துலர்த்துக.

70. வாலுழுவை
71. சிறு வாலுழுவை } சோற்றுக் கற்றாழைச் சாற்றில் கழுவி, இரவியி லுலர்த் துக.

72. பெருங்காயம்—இதனைக் கரிநெருப்பில் பொரித்தேனும் தாமரை இலைச்சாற்றில் ஒரு நாழிகை ஊறவைத் துலர்த்தியேனும் உபயோகிக்க.

73. செங்கோட்டை—இதனுடைய மூக்கை வெட்டிக் கழு நீரிலும் எருமைப் பாலிலும் ஒவ்வொரு ஜாமம் ஊறவைத்து, ஜலத்தி லலம்பி இரவியில் உலர்த்துக.

74. கங்குட்டம்
75. கெந்த மாஞ்சில் } இவைகளைக் கடுரவியில் ஒரு நாழிகை உலர வைத்துக்கொள்க.

76. அரக்கு—இதனை நறுக்கி உள்ளிருக்கும் குச்சுகளை நீக்கி உபயோகிக்க.

77. தமால பத்திரி—இதிலுள்ள பெரு நரம்புகளைக் களைந்து இரவியி லுலர்த்துக.

78. கோஷ்டம்—இதனில் வேறொன்று மில்லாமல் ஆய்ந்து இரவியி லுலர்த்துக.

79. தேன்மெழுகு—உருக்கித் தெளியவைத்து வடிகட்டிக் கொள்க.

80. குங்குலியம்—திரிபலாதி கஷாயத்தில் தோலாந்திரமாகக் கட்டி இரண்டு ஜாம மெரிக்க. எல்லாவிதக் குங்குலியங்களையும் இவ்வாறே சுத்தி செய்து கொள்க.

81. குக்கில்—வேப்பம் பட்டை, கண்டங்கத்திரி, சீந்தில், கோரைக்கிழங்கு, நில வேம்பு, ஆடா தோடை, வெண்ணொச்சி, பேய்ப்புடல் இவ் வெட்டினையும் ஒவ்வொரு பிடி ஒரு மட்கடத்தி

விட்டு ஜலம்விட்டு, ஏடுகட்டி அதன்மேல் குக்கிலே வைத்து, மேல் சட்டி மூடி, ஒரு ஜாமம் எரித்தெடுக்க

82. குந்திரிக்கம்—சாராயத்தில் ஒருநாள் ஊறவைத்தெடுக்க.

83. கூகை நீர்—ஏழு முறை ஜலம் விட்டுக் கரைத்துக் கழுவித் தெளிந்தபின் வடிகட்டி, இரவியி லுலர்த்திக் கொள்க.

84. கஸ்தூரி
85. கோரோசனை

இவைகளுக்குச் சுத்தியின்றேனும், இயற்கைச் சரக்கிற்கும் வைப்புச்சரக்கிற்கும் உள்ள வித்தியாசம் அறிந்து சேர்த்தல் நலம்.

86. குங்குமப்பூ—இதனைக் கடுதாசியின்மேற் பரப்பி, நெருப்பனலில் காட்டி, நறுங்கும் பதத்தில் எடுத்துக் கொள்க.

87. சந்தனம்
88. செஞ் சந்தனம்
89. கறுப்பு அகரு

வைரப் பாகத்தை எடுத்துக் கொண்டு ஏனைப் பாகத்தைக் கழித்துவிடுக.

90. தூநீயாங்கிசம்—(பிசின்) இதனைக் கடுரவியி லுலர்த்திக் கொள்க.

91. செவ்வள்ளி—இரவியி லுலர்த்திக் கொள்க.

## வனமூலிகை

92. காட்டு மிளகு—வெற்றிலைச் சாற்றி லரைநாழிகை ஊறப் போட்டு இரவியி லுலர்த்திக் கொள்க.

93. வால் மிளகு —காம்புகளை ஆய்ந்து இரவியி லுலர்த்துக.

94. கஸ்தூரி மஞ்சள்
95. அக்கரகாரம்
96. பீத ரோகிணி
97. வட்டத் திருப்பி

இவைகளின் மேல்தோலைச் சீவிச் சிறு துண்டுகளாக நறுக்கி இரவியி லுலர்த்திக் கொள்க.

98. பறங்கிச் சக்கை
99. அமுக்கிராங் கிழங்கு
100. நிலப்பனங் கிழங்கு
101. தண்ணீர் விட்டான் கிழங்கு

இவைகளை நன்று யுலர்த்தி, தனித் தனி இடித்துச் சூரணஞ் செய்து ஒரு புது பாண்டத்தில்

பாலை விட்டு, * சீலையால் ஏடுகட்டி, அதில் இச்சூரணத்தைவைத்து மேல் சட்டி மூடி, ஒரு சாம மெரித்த பின் சூரணத்தை ரவி முகத்தில் உலர்த்தி அரைத் தெடுத்துக் கொள்க.

102. மகரப்பூ—அடிக் காம்பையும் நடுவிலிருக்கும் மகரந் தத்தையும் விலக்கிக் காயவைத்து எடுத்துக் கொள்க.

103. இலவங்கப் பட்டை
104. இலவங்கப் பத்திரி
104. தக்கோலம்
106. வெட்பாலை அரிசி
} இவைகளை இரவியிலுலர்த்தி எடுத்துக் கொள்க.

107. சிற்றேலம்—பொன் வறலாக வறுத்துக் கொள்க.

108. புகையிலை—அகத்திக் கீரையின் மத்தியில் புகையிலை யைச் சுருட்டிவைத்து, ஜலம்விட்டு, எரித்து இரவியி லுலர்த்திக் கொள்க.

109, கெஞ்சா—விதை, காம்பு முதலியவற்றைப் போக்கி ஓரிரவு சுத்த ஜலத்தில் சிறிது சோற்றுப்புச் சேர்த்தூறப்போட்டு அடுத்தநாள் ஏழு முறை பிசைந்து பிசைந்து கழுவிக் கெட்டிசீலை யிற் பிழிந்து, விடுதிகளாகச் செய்து இரவியி லுலர்த்திக்கொள்க.

110. இருவி—இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சிறு நீரில் மூன்றுநாள் ஊறப் போட்டெடுத் துலர்த்துக.

111. நாவி—இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கோநீரில் மூன்றுநா ளூறப் போட்டுக் கோநீரை வடித்து இரவியி லுலர்த் துக.

112. வெட்டிவேர்
113. விலாமிச்சுவேர்
} சிறு துண்டுகளாக நறுக்கி, இரவியி லுலர்த்திக் கொள்க.

114. தேவதாரு
115. அகில்
} வைரப் பாகத்தை மட்டும் எடுத் துக்கொண்டு, பொன்வறலாக வறுத்து உபயோகிக்க.

116. குரோசானி ஓமம்—இதனை நன்குய்த் தேய்துப் புடைத்து, மண்ணைப் போக்கி உலர்த்திக் கொள்க.

* இவ்விதக் கிரியையைப் புட்டு அவியல் எனக் கூறுவர்; இஃது இவ் விலம்பக முடிவில் காட்டியுள்ள சித்திரத்தால் இனிது விளங்கும்.

5

117. வாளம்—எருமைச் சாணியில் வேகவைத்து எடுத் தலம்பி ஒவ் வொன்றையும் பிளந்து, தோலை நீக்கி, நஞ்சென் னும் முளையையும் நீக்கி, தளர்ச்சியாக மெல்லிய சீலையில் முடிந்து, பச்சரிசியுடன் சேர்த்துப் பொங்கி, அரிசி வெந்ததும் அம் முடிச் சியை எடுத்தலம்பி மறுபடியும் முன்போல் முடிச்சு கட்டிப் பாலி லெரித்துக் கழுவி, நிழலி னுலர்த்தி, ஒரு சட்டியில் கொஞ்சம் சிற்றாமணக்கெண்ணெய் தடவி, அதில் போட்டு வறுத் தெடுத்துக் கொள்க.

118. சிவதை வேர்—இதனடுவி லிருக்கும் நரம்புகளைக் களைந்து பாலில் போட்டு அடி காந்தாமல் வேகவைத் தெடுத்து இரவியி னுலர்த்துக.

119. நாகணம்—இதனை வில்லை வில்லையாக அறுத்து, ஒரு சட்டியில் நெய் தடவி, அதனிற் போட்டு வில்லைகள் வளையும் படி வறுத் தெடுத்துக் கொள்க.

120. சீந்தில்—இதன் மேல் தோலைச் சீவிக் கழித்துக் கொள்க.

121. சமுத்திரசோஷி விதை—ஓடு நீக்கி உள்பருப்பை எடுத் துக்கொள்க.

122. கடலுராய்ஞ்சிப் பட்டை
123. வலம்புரிக்காய்
124. தலைச்சுருளிப் பட்டை
125. கோரைக் கிழங்கு
126. நிலவேம்பு

} இவைகளைக் கடுரவியி னுலர்த்தி எடுத்துக் கொள்க.

127. எட்டிக் கொட்டை—இதனை நெல்லுடன் சேர்த்தவி த்து, சிறு கீரைச் சாற்றில் ஒரு ஜாமம் ஊறப் போட்டுக் கழுவி எடுத்துக் கொள்க.

128. தேற்றான் கொட்டை—இதனைப் பசும் பாலில் ஒரு நழிகை ஊறப் போட்டு, ஜலத்தி லலம்பி உலர்த்துக. அல்லது தேற்றான் கொட்டை எடைக்கு நான்கு பங்கு சிறு கீரைச் சாறு விட்டு அதினில் தேற்றான் கொட்டையைப் போட்டு அரைப் பாகம் சுண்ட எரித்துச் சுத்த ஜலத்தி லலம்பி எடுத்துக்கொள்க.

129. கழற்சிவித்து—இதன் மேலோட்டை நீக்கி, வெந்நீரில் கழுவி உலர்த்திக் கொள்க.

130. ஊமத்தை வித்து } இவைகளைப் பழரசத்தில் ஒரு ஜாமம் ஊறவைத்து இரவியி லுலர்த்துக.
131. மருள் ஊமத்தை வித்து

132. கரும்பு—மேல் தோலையும் கணுக்களையும் கழித் தெடுத்துக் கொள்க.

133. சர்க்கரை—அம்மியில் வைத்துக் கட்டியெல்லாம் நுறுங்கும்படி அரைத்து முறத்திலிட்டுக் கொழித்துக் கொள்க.

134. காட்டாத்திப்பூ—இதிலிருக்கும் இலை, காம்பு முதலியவைகளை நீக்கி ஆய்ந்து இரவியி லுலர்த்தி வைத்துக் கொள்க.

135. நிலஆவாரை—இதனை இடித்துச் சூர்ணித்து ஒருபாண்டத்தில் பால்விட்டு, ஏடுகட்டிச் சூரணத்தை வைத்து, மேல் சட்டி மூடி, ஒரு ஜாம மெரித் தெடுத்துக் கொள்க.

136. பிரண்டை—கணுக்களைத் தரித்து மேல் தோல் சீவிப் புளிப்பு மோரில் சிறிது உப்புச் சேர்த்து மூன்று நாள் ஊறப்போட்டு இரவியி லுலர்த்திக் கொள்க.

குறிப்பு. வனமூலிகை இத் துணையென வரையறுக்க முடியாமையான் அவைகளுள் ஈண்டு வேண்டுவன சிலவற்றிற்கே சுத்தி கூறப்பட்டுள்ளது.

## காரசாரம்

137. சமுத்திர லவணம்—மோர் விட்டுக் கலக்கிக் கடும் ரவியில் சுண்டவைத்து எடுத்துக் கொள்க; அல்லது ஒரு புது ஓட்டில் போட்டு வறுத்துக்கொள்க.

138. பிடா லவணம்—மோரிலேனும், கோநீரிலேனும் ஊறப்போட்டு, இரவியி லுலர்த்துக.

139. இந்துப்பு—காடியில் மூன்று நாள் ஊறப்போட்டு, இரவியி லுலர்த்துக.

140. வேடியுப்பு—வெடியுப்பின் அளவிற்கு நான்கு மடங்கு சலம் விட்டு காய்ச்சி கொதிக்கும்போது புளிப்பு மோரை சிறிது விட்டு கலக்க அழுக்குத் தள்ளும். அவ்வழுக்கை மேலாகச் சல்லிக்கரண்டியால் அப்புறப்படுத்தி மீண்டும் காய்ச்சும்போது ஒரு துளி ஓலையின் மீது விட உறையும் அப்பக்குவத்தில் கீழ் இறக்கி ஒரு இரவு ஆறவிட கம்பி கம்பிகளாக உறையும் இவைகளை அகல பீங்கான் தட்டுகளிலிட்டு ரவியில் உலர்த்தவும். எடுத்த கம்பிகள்போக மிகுதியுள்ள சலத்தோடு மறுவலும் நான்குமடங்கு சலம் விட்டு முன்போல் காய்ச்சி ஆறவிட்டு கம்பிகளாக வரும் உப்புகளை

எடுத்துலர்த்தி முன் உப்போடு கூட்டவும். இப்படி உப்பு கிடைக்கும் வரையில் காய்ச்சிக் காய்ச்சி எடுப்பதே சுத்தி. இங்ஙனம் செய்து ஒருங்குச் சேர்த்த உப்பிற்கு ஒரு தீட்சை முடிந்த தென்பர். இப்படி ஏழு முறை செய்யின் உயர்தரமான சுத்தியாம்.

141. அட்டுப்பு—இதற்கு நான்கு பங்கு ஜலம் விட்டுக் கரைத்து, வடிகட்டி, சுண்டக் காய்ச்சி இரவி லுலர்த்துக.

142. வளையலுப்பு—காடி ஜலத்தில் ஒருஜாமம் ஊறவைத்து இரவியில் உலர்த்துக.

143. உழமண் உப்பு—இதற்கு நான்கு பங்கு ஜலம் விட்டுக் கரைத்து, மறுநாள் வரையில் அசையாமல் வைத்து, அதிற் தெளிவை வடித்துச் சுண்டக் காய்ச்சி இரவியி லுலர்த்துக.

144. பூநீர்—இதற்கு நான்கு பங்கு ஜலம் விட்டுக் கரைத்து 4 அல்லது 5 மணி நேரம் தெளிய வைத்து, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் விட்டு இரவியில் காயவைக்க.

145. சத்திசாரம்—காடியில் மூன்றுநாள் மத்தித்து, இரவியில் உலர்த்துக. அல்லது முன்போலவே வெள்ளாட்டு நீரில் மத்தித் துலர்த்துக.

146. ஏவாச்சாரம்—இதனை வெள்ளாட்டு நீரில் கரைத்து வடிகட்டி இரவியி லுலர்த்துக.

147. சவுக்காரம்—கோநீரில் புட்டு அவியலாக அவித் துலர்த்துக.

148. வெங்காரம்—பொரித்தேனும் அல்லது ஜலத்தில் தோய்த்து ஈரத்தைத் துடைத்தேனும் சேர்த்துக் கொள்க.

149 படிகாரம்—வெங்காரத்தைப் போலவே சுத்தி செய்து கொள்க.

150. நவாச்சாரம்—சோநீரில் கரைத்துச் சுண்ட எரித் துலர்த்துக.

151. கருப்பூரம்
152. பச்சைக்கருப்பூரம்
} இவைகளைச் செங்கழுநீர்ப் பூவிதழ்ச் சாற்றில் ஒரு நாழிகை ஊறவைத் துலர்த்திக் கொள்க.

153. கல்லுப்பு—காடி ஜலத்தில் பிசரி, ஈரத்தைத் துடைத் துலர்த்திக் கொள்க.

குறிப்பு—காரசாரம் இருபத்தைந்துள் பெரும்பாலும் பழக்கத்தில் இருப்பனவற்றின் சுத்திக் கிரமமே ஈண்டுக் கூறப்பட்டது.

## பாஷாணம்

154. வெள்ளைப் பாஷாணம் } உழமண்ணைக் கரைத்
குதிரைப்பல் பாஷாணம் } துச் சீலையில் நனைத்து
ஒரு பலம் பாஷாணத்தின்மேல் தேங்காய் பிரமாணத்திற்குக் கனமாகச் சுற்றி, ஒரு பெரிய பானையில் $\frac{3}{4}$ பரகம் ஜலம் விட்டுத் * தோலாந்திரமாக மூன்று ஜாம மெரிக்க.

155. கௌரி—சிறுநீரில் மூன்று நாள் ஊறப்போட்டு, எடுத்துச் சுத்த ஜலத்தில் அலம்பி உலர்த்துக.

156. தொட்டிப்பாஷாணம்—பொடிசெய்து, சீலையில்முடிந்து கோநீரில் தோலாந்திரமாக நான்கு ஜாம மெரிக்க. இங்ஙனமே மும்முறை செய்க.

157. எலிப்பாஷாணம்—இதனைத் தேனில் போட்டுக்காய்ச்சி எடுத்துக் கொள்க.

158. இலிங்கம்—முலைப்பாலில் 30 நாழிகை ஊறப்போட்டுப் பாலை நீக்கி மறுபடியும் புதிதாகப் பாலைவிட்டு, முன் போல் ஊறவைக்க. இவ்வாறு மும்முறை செய்க.

159. ரசம்—ஒட்டடை, வெல்லம், திரிகடுகு, மஞ்சள், கடுகு, செங்கல், உப்பு இவைகளில் ஒவ்வொன்றையும் தனித் தனியாகக் கொஞ்சம் போட்டு அரைத்துக் கழுவிப், பின்னர் ஊமத்தைச் சாறு, தயிர், சுண்ணநீர் இவைகளில் தனித்தனி ஒவ்வொரு ஜாமம் அரைத்து அலம்பி எடுத்துக் கொள்க.

160. இரச கருப்பூரம்—இதற்குச் சமனெடை வெற்றிலையும் மிளகும் சேர்த்தரைத்துத் தண்ணீரில் கலக்கி அதனில் பூரத்தைக் கிழிகட்டி தோலாந்திரமாக எரிக்க.

161. சவ்வீரம்—இதற்கு மூன்று பங்கு அதிகமான மிளைகைக் கஞ்சி ஜலம்விட்டு மெழுகு பதமாக அரைத்து, வீரத்திற்கு

---

* இதன் விவரம் இவ்விலம்பக முடிவில் சித்திரத்தால் விளக்கப்பட்டுள்ளது.

அங்கி பூட்டிச் சீலையில்முடிந்து, இளநீரில் அழுந்தாமல் தோலாந்திரமாகக் கட்டி அரை ஜாமம் எரிக்க.

162. இரச சிந்தூரம்—முலைப்பாலில் 30 நாழிகை ஊறப் போட்டெடுக்க.

163. கந்தகம்—சந்தனக் கியாழம், கோவையிலைச் சாறு சோற்றுக்கற்றாழைச் சாறு, புளியாரைச் சாறு, இவைகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஜாமம் கிழிகட்டி எரிக்க. அல்லது நெய் விட்டுத் தீப்பற்றாமல் உருக்கிப் பசும்பாலில் 7 முறை சாய்க்க.

164. தாளகம்—இதனைச் சிறு துண்டுகளாகச் செய்து கற்சுண்ணத்தின் மத்தியில் வைத்து, பனங்கள் விட்டுத் தாளித்துக் குழம்பாக இருக்கும் பதத்தில் கலக்கி ஒரு ஜாக மெரித்தெடுக்க. இங்ஙனமே மும்முறை செய்க

165. மனேசிலை—இஞ்சிச் சாற்றில் ஒரு ஜாம மரைத்து, மாத்திரைகளாகச் செய்து உலர்த்திக் கொள்க.

குறிப்பு: பாஷாணம் முப்பத்திரண்டில் பழக்கத்திலுள்ள ஒரு சிலவே ஈண்டு எடுத்துக் கூறப்பட்டன.

## லோகம்

166. சொர்னம்—இதனை மெல்லிய தகடாகத் தட்டிச் செம்மண் தடவிக் காய்ச்சி எடுத்துக் கொள்க.

167. தாம்பரம்—இதனைத் தகடடித்துப் பழுக்கக் காய்ச்சி, மோர், காடி, புளியிலைச்சாறு, குப்பை மேனிச்சாறு, இவைகளில் முறையே தனித்தனி ஏழுதரம் தோய்த்தெடுக்க. அல்லது முருங்க இலையை அறைத்துக் கற் சுண்ணத்துடன் சேர்த்து, ஜலம் விட்டுக் கரைத்ததனில் 7, 14, 21, முறை தோய்க்க விசேஷ ஊறல் நீங்கும்.

168 நாகம்—இருப்பைப் புண்ணாக்கைக் கரைத்துக் குழம்பாக வைத்துக்கொண்டு, நாகத்துடன் இருப்பெண்ணெய் விட்டுருக்கி, ஏழுமுறைக்குக் குறையாமலும் இருபத்தொரு முறைக்கு அதிகப்படாமலும் சாய்க்க வேண்டும்.

169. வெள்வங்கம்—இதனில் வேண்டுமளவு நல்லெண்ணெய் விட்டு, உருக்கிக் கல்லுரலில் புளித்தமோர் பெய்து அதன்மீது

யந்திரத்தின் மேற் கல்லால் மூடி, அதன்மேலிருக்கும் துவாரம் வழியாகச் சாய்க்க. இங்ஙனம் ஒவ்வொரு முறையும் புதிதாக மோர்விட்டு மூன்று விசை சாய்க்க. இவ்வாறு கொள்ளுச் சாற்றிலும் மஞ்சட் சாற்றிலும் சாய்த்தல் நன்று

170. கருவங்கம்—பிரண்டையை அரைத்துக் கோநீரில் கலக்கி, முன்போலவே உரலில் விட்டு 7 முறை சாய்க்க.

171. வெண்கலம்—இதனைக் காய்ச்சிப் புளியிலைச் சாற்றில் மூன்றுதரமும் கொள்ளுச் சாற்றில் ஏழுதரமும் தோய்க்க.

172. இரும்பு—இதனை அராவிப் பழச் சாற்றில் மூன்றுநாள் ஊறப்போட் டரைத்துக் கழுவி எடுத்துக் கொள்க.

173. பித்தளை—குப்பைமேனிச்சாறு, புளியிலைச்சாறு, வெள்ளாட்டுப்பால், கொள்ளுச்சாறு இவைகளைத் தனித்தனியாக வேனும் ஒன்ருகக் கலந்தேனும் வைத்துக் கொண்டு, பித்தளையைத் தகடடித்துச் சிவக்கக் காய்ச்சி மூன்றுதடவை தோய்த்து எடுக்க.

174. வெள்ளி—இதற்குச் சமன் கருவங்கம் சேர்த்து, வங்கம் போக ஊதி எடுத்துக்கொள்க.

## உபரசம்

175. துருசு
176. துத்தம்
177. பால் துத்தம்

} இவற்றைப் பொடிசெய்து தனித்தனி கிழிகட்டி, ஒரு பானையில் சுண்ணநீர் விட்டுக் தோலாந்திரமாக எரிக்க அல்லது வெளுக்க வறுத்துக் கொள்க. அல்லது தயிரிலரைத்து அடைதட்டி, ஓட்டில் வைத்துக் காய்ச்சி எடுக்க.

178. கபரி
179. கல்கபரி

} இவற்றைப் பொடிசெய்து, சீலையில் முடிந்து நாய் மூத்திரத்தில் ஏழுஜாமம் எரித் தெடுக்க. அல்லது கோநீரில் ஊறவைத் தெடுக்க.

180. பொன்நிமிளை—இதனைத் தேனில் மத்தித்து, இரட்டைமடிப்பு முரட்டுச் சீலையில் முடிந்து, கொள்ளுச்சாறு, கோநீர், காடி இம்மூன்றிலும் தனித்தனி ஒவ்வொருநாள் கிழிகட்டி எரிக்க. இத்தகை சுத்தியே எல்லா நிமிளைக்கும் என்றறிக.

181. கிருஷ்ண அப்பிரகம்—இதனை வேண்டியமட்டும் காடியி லரைத்துத் தெளியவைத் திறுத்துப் பின்பு, கழுநீரில் சாறுவிப் பத்துக்கொரு பங்கு கொடிவேலிவேர் சேர்த்து அரைத்து, ஒரு குடுவையிலிட்டு, வாய்மூடிச் சீலைசெய்து, பெரும்புடமாகப் போட்டெடுக்க.

182. வெள்ளை அப்பிரகம்—உலையில் பழுக்கக் காய்ச்சிப் பாலில்போட்டு ஆறினபின் இதழ் இதழாகப் பிரித்துச் சிறு கீரைச் சாற்றில் எட்டு ஜாமம்ஊறவைத்தெடுக்க.

184. காந்தம்—வரகு வைக்கோலில் சேர்த் தெரித்து எடுக்க.

184 கற்பூரசிலாசத்து—கற்றாழைச் சாற்றில் ஒரு ஜாமமரை த்து இரவியி லுலர்த்திக் கொள்க.

185. கல்நார்—இதனைக் கோங்கிலவம் பட்டைச் சாற்றில் ஒரு ஜாமம் ஊறப்போட்டெடுக்க.

186. சாஸ்திரபேதி—இதனைச் சீலையால் மூடிந்து நெருப்பன லில் சுட்டெடுத்துக் கொள்க,

187. கல்மதம்—இதனைச் செங்கழுநீர் கிழங்குச் சாற்றில் இரண்டுநாள் ஊறவைத்தெடுக்க.

188. அஞ்சனக்கல்—இதனைம் புளியாரைச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத் தெடுக்க.

189. படிகம்—இதனைப் பச்சைப் பசும்பாலில் 7 நாள் ஊற வைத் தெடுத்துக் கொள்க. பிரதி தினமும் பழைய பாலை வடித்து விட்டுப் புதிதாக விட்டு வரவேண்டும்.

190. உரோமம்—நரை உரோமத்தை விலக்கிச் சிகைக்காய் ஜலத்தில் போட்டுக் கொதிக்க வைத்துக் கசக்கி ஜலம் விட்டு அலம்பிக் கொள்க.

191. ஆமை ஓடு—நெருப்பனலில் சுட்டெடுத்துக் கொள்க.

192. குஞ்சுபொரித்த முட்டை ஓடு—இதனுடன் பூநீரைக் கூட்டி ஜலம் விட்டு ஒரு ஜாம மெரித்து, சவ்வை நீக்கி இரவியி லுலர்த்துக.

193. கலைமான் கோம்பு—சிறு துண்டுகளாக நறுக்கிக் கோ நீரில் மூன்றுநாள் ஊறவைக்க.

194. பூநாகம்—இதனைச் சட்டியில் போட்டுப் பசும்பால் விட்டு, மூன்று ஜாமம் வைக்க மண்ணெல்லாம் கக்கிவிடும். ஜல த்தி லலம்பி எடுத்துக் கொள்க.

195. இந்திரகோபம்—இதிலிருக்கும் தைலப்பசை போகா வண்ணம் படிக பாத்திரத்திலிட்டு உலர்த்துக.

196. சங்கு—இதனைப் பசுமோரில் 7 நாள் ஊறவைத் தெடுக்க.

197. முத்துச் சிப்பி—பூநீரைக் கரைத்து, முத்துச் சிப்பியை அதினில் போட்டு நெருப்பில் கொதிக்க வைத்துக் கழுவி எடுத் துக்கொள்க.

198. முத்து—இதனைச் சங்கம்பழ ரசத்திலேனும், புளியம் பழச் சாற்றிலேனும் மூன்றுநாள் ஊறவைத் தெடுக்க.

199. பவழம்—இதனைப் பழரசத்தில் ஒரு நாள் ஊறப்போட் டெடுக்க.

200. கோமேதகம்—இதனைக் கறுப்புப் பெண் குதிரை நீரி லும் தும்பைப்பூச் சாற்றிலும் தனித்தனி மூன்று நாள் ஊறப் போட்டெடுக்க. அல்லது குதிரை மூத்திரத்திலும் நிலக்குமிழ் வேர்ச் சாற்றிலும் மூன்று நாள் ஊறப்போட் டெடுக்க.

201. புஷ்பராகம்—இதனை வெள்ளாட்டு மூத்திரத்திலும் புளி யிலைச் சாற்றிலும் ஒவ்வொரு ஜாமம் ஊறவைத் தெடுக்க.

202. வைரம்—இதனை வெள்ளாட்டு மூத்திரத்தில் போட்டுக் காய்ச்சி எடுக்க. அல்லது பிண்டைச் சாற்றி லூறப்போட் டெடுக்க.

203. மரகதம்—இதனைச் சிறுபூளைச் சாற்றி லரைத்து வில்லை செய்து, உலரவைத்துக் கொண்டு பின்பு அதன் வேரை அரை த்து மூசை செய்து, அதனிலிட்டுச் சீலை செய்து, பத்து எருவில் புடமிடுக. இங்ஙனமே ஏழுபுட மிடுக.

204. நீலம்—இதனைக் கழுதை மூத்திரத்தில் ஒருநா ளூறப் போட்டு, மறுநாள் இரவியி லுலர்த்துக. அல்லது நிலக்குமிழ் வேரை அரைத்து மூசை செய்து, அதனில் நீலத்தை வைத்து, இரண்டொரு சீலைசெய்து கோழிப்புடமிட் டெடுத்துக் கொள்க.

205. மாணிக்கம்—இதனைக் கறுப்புப் பெண் குதிரை மூத்தி ரத்தி லூறப்போட்டு, மூன்றுநாள் சூரியபுடம் வைத்தெடுக்க.

அல்லது மாணிக்கத்தை ஒட்டிலிட்டுச் சிவக்கக் காய்ச்சி, வெள்ளாட்டுப் பாலில் அக்கற்களைத் தள்ளுக. இங்ஙனமே ஏழுமுறை காய்ச்சிக் கொள்க.

206. வைடூரியம்—இதனைக் கறுப்புப் பெண் குதிரை மூத்திரத்திலும், பூசணிக்காய்ச் சாற்றிலும் தனித்தனி ஒவ்வொருநாள் ஊறவைத்தெடுக்க.

207. அன்னபேதி—இதனைப் புது ஒட்டிலிட்டுச் சிவக்க வறுத்தெடுத்துக்கொள்க.

208. உவர்மண்—சுத்த ஜலம் விட்டுக் கரைத்து, தெளிவை இறுத்துச் சுண்டக் காய்ச்சி, இரவியி லுலர்த்திக்கொள்க.

209. கடல்நுரை—இதனைக் கிளிஞ்சல் சுண்ணத்துடன் தாளித்துக் கழுவி எடுத்துக்கொள்க.

210. பவழப்புற்று—ஆவின் பாலில் ஒரு ஜாமம் கொதிக்க வைத்தெடுத்துக் கொள்க.

211. கடல்பாசி—இதற்குச் சுத்தி வேண்டுவதில்லை.

212. காவிக்கல்—இதனை இளநீரி லரைத்துக் கரைத்து வடித்து அகலப் பீங்கான் தட்டில் வார்த்து, இரவியி லுலர்த்துக.

213. மயிலிறகு—இதனைச் சட்டியி லிட்டுக் கரியாகும்படி எரித்தெடுத்துக்கொள்க.

214. பலகறை—இதனை நெருப்பனலில் சுட்டெடுத்துக் கொள்க.

215. கிளிஞ்சல்—இதனை உவர்மண் கரைத்த ஜலத்தில் இரண்டு ஜாமம் கொதிக்கவைத் தெடுத்துக்கொள்க.

216. அபினி—வெங்காயத்தில் துவாரம் செய்து, அதனுள் அபினியை வைத்திரண்டொரு சீலைசெய்து, வெங்காயம் வெந்து கரியாகாமல் அவிபுடமாக வைத்தெடுத்துக் கொள்க. அல்லது அபினியுடன் சிறிது நெய் சேர்த்து மத்தித்து, வெற்றிலையில் தடவி நெருப்பனலில் வெதுப்பி யெடுத்துக்கொள்க.

குறிப்பு. உபரசம் 112 உபயோகத்திலுள்ள சிலவற்றிற்கே ஈண்டுச் சுத்திக்கிரமம் கூறப்பட்டுள்ளது.

## அவியந்திரம்




சித்திர விளக்கம்

1. கீழ்ப் பாண்டம்
2. அதனில் விட்ட திரவப் பொருள்
3. சீலைகட்டி யிருக்கும் வாய்ப்புறம்
4. நடுவில் குவித்துள்ள சரக்கு
5. மேலே மூடிய சட்டி

ஒரு பாண்டத்தில், பாகத்தில் கூறியவாறு ஜலத்தையேனும் பாலையேனும் மூலிகைச் சாற்றையேனும் விட்டுப் பாண்டத்தின் வாயை மெல்லிய சீலையால் கட்டி அதன் நடுவில் சூரணத்தையோ அல்லது புட்டு அவிக்கக் கூறப்பட்ட வேறு பொருளையோ குவித்து மேல்சட்டி மூடி ஈரத்துணியால் இவ்விரண்டு சட்டிகளின் வாய்ப் பொருத்தத்திற்கு உள் ஆவி வெளிபோகாது சுற்றி, சிறு தீயால் அடியில் விட்ட திரவம் முக்கால் பாகம் சுண்ட எரித்து எடுத்துக் கொள்க. இதுவே புட்டு அவியல் என்பது.

சாதாரணமாகப் பாகங்களில் குறிப்பிட்டபடி இலை, பூ, வேர், பட்டை, காய், கொடி, கிழங்கு முதலியவைகளை உலர்த்தி இடித்து வஸ்திரத்தால் அரித்து இத்தகைய யந்திரத்தில் பசும்பால் விட்டுச் சீலைகட்டிச் சூரணத்தை வைத்து எரித்து எடுப்பதுண்டு இதனால் அவ்வவ் மூலிகைகளுடைய வெவ்வேறு குணங்களெல்லாம் ஒரு மிக்க ஏககாலத்தில் உறவாகி உட்கொள்வதற்குச் சுத்தி பெற்றதாகும். அன்றியும் இச்சூரணம் வியாதியைக் கிளரித் துன்பத்தை யுண்டாக்காமல் எளிதில் நற்பயனைப் பயக்கத்தக்க குணமுடையதாகும்.

# தோலாயந்திரம்




சித்திர விளக்கம்

1. மட்பாண்டம்
2. இட்டதிரவம்
3. மண்மூடி
4. மண்மூடியின் மத்தியில் துவாரமிட்டுக் கயிற்றைச் செலுத்தித் தடை கட்டியிருப்பது
5. கயிற்றின் மறுமுனையை அளவு எடுத்துச் சரக்கைக் கட்டிருப்பது

சித்திரத்தில் குறிப்பிட்டபடி ஒரு மட் பாண்டத்தில் ஜல ரூபமான ஏதேனுமொரு திரவத்தை விட்டு வாய்க்குப் பொருத் தமான மண்மூடி யொன்றின் மத்தியில் சிறு துவார முண்டாக்கி அதன் வழியாக ஒரு கயிற்றைச் செலுத்தி மேற்புரத்தில் தடை கட்டிப் பாண்டத்தை மூடும்போது மற்றொரு முனையில் சரக்கை, முறையில் கூறப்பட்டபடி திரவத்தில் ஆழ்ந்திருக்கவோ, ஆவி படும்படியாக மேலிருக்கவோ, அளவெடுத்துக்கட்டிப் பாண்டத் தை அடுப்பின்மீது வைத்து எரிக்க. இதுவே தோலாந்திர கிரி யை என்பது.

விசேடமாகச் சுத்திக் கிரம விலம்பகத்தில் சரக்குகளைக் கிழிகட்டி எரிக்கும்படியாகக் கூறப்படும். அதன் விவரம் ஒரு சரக்கைச் சீலையில் தளர்ச்சியாக முடிந்து தொங்கவிட்டு எரிப்ப தாம். தவிர அணுத்துவமாகியவைகளைக் கஷாயமிடவும் இரண்டு மூன்று சரக்குகளை ஒருங்கே வேகவைத்து ஒன்றை பிரித்துக் கொள்ளவும் கிழிகட்டி எரிக்கக் கூறப்படும். இவ்விதக் கிரியை களில் தோலா யந்திர விதிப்படி தொங்கவிட வேண்டுவதில்லை.

# பாகவிலப்பகம்

பக்குவபா கத்தையுறு பஞ்சின்மருந் தும்பிறழ
பக்குவபா கத்துப் பருமருந்து—மெய்க்குறுங்கா
லக்கால மும்பருணு மாழிமருந் துஞ்சேடன்
கக்கால மும்பொருந்துங் காண்.

இலகுவான முறையினுற் செய்யப்பட்ட ஔஷதங்களே யானுலும் பக்குவ பாகத்தைப் பொருந்துமானல், அது தேவர்களுண்ணத் திருப்பாற் கடலில் உண்டான அமிர்தத்திற் கொப்பாகும்; கனமான முறையினுற் செய்யப்பட்ட ஔஷதங்களே யானுலும் செய்பாகம் கெடுமாயின் அக்காலத்தில் ஆதிசேஷன் கக்கிய விஷத்திற் கொப்பாகும். என்று தேரையர் கூறி யிருக்கின்றனராகையால் ஔஷதங்களைச் செய்ய ஆரம்பம் செய்வதற்கு முன்னே ஒழுங்காகச் செய்பாகங்களைக் கூடிய வரையிலும் சாஸ்திர மூலமாகவேனும் தேர்ந்த ஆசிரியன் மூலமாகவேனும் தெரிந்து கொள்ள வேண்டியவை பல இருப்பினும் இங்கு வரைந்துள சில அம்சங்களை நன்குணர்வாராயின் செய்பாகம் கெடாது முடியுமென்பதே துணிபு.

## கஷாயம்

கஷாயம்—ஸ்வரசம், கல்கம், ச்ருதம், சீதம், பாண்டம் என ஐவகைப்படும்.

இவற்றுள் பாண்டத்தை விட சீதமும், சீதத்தைவிட ச்ருதமும், ச்ருதத்தைவிட கல்கமும், கல்கத்தைவிட ஸ்வரஸமும் சிறந்தது.

## மதாந்தரம்

ச்ருதத்திற்குக் க்வாதமென்றும், சீதத்திற்கு ஹிமம் என்றும், ஒரு சார் ஆசிரியர் கூறுவர்.

## ஸ்வரசம்

இலை, கொடி, வேர், பட்டை, கிழங்கு முதலியவற்றில் எத்தகைய குற்றமுமின்றிச் சுத்திகரித்து, ஆய்ந்து உரலிலிட்டு, மெதுவாக இடித்து வஸ்திரத்தால் பிழிந்தெடுப்பது ஸ்வரசம் எனப் படும். இது குணத்திற் சாலச் சிறந்த தாகையால் வேளைக்கு $\frac{1}{2}$ பலம் உட் கொள்வது சாலும்.

நான்கு பலம் பட்டையின் சூர்ணத்திற்கு 8 பலம் ஜலம் விட்டு, ஒரு இரவும் பகலும் ஊறவைத்துப் பிழிந்தெடுப்பது சிறப்பெனச் சிலர் கொள்வர். சில திரவியங்களில் இரசம் கிடைப்பது கடினமாக இருப்பின் மீண்டும் அதனில் 8 பலம் ஜலம் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொள்வர். இதனை வேளைக்கு ஒரு பலமாக உட் கொள்ளலாம்.

## கல்கம்

திரவியங்களைப் பச்சையாகவேனும், உலர்ந்ததாக வேனும் ஜலம்விட்டு நெகிழ அரைதது வழித்தெடுப்பது கல்கம் எனப் படும். இதனில் கால் பலம் உட்கொள்ளல் வேண்டும்.

## ச்ருதம் (க்வாதம்)

ஒரு பலம் கஷாய திரவியத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி இடித்து, ஒரு மட்பாண்டத்தி லிட்டுச் சரக்கிற்குப் பதினாறு பங்கு ஜலம் விட்டு, எட்டில் ஒருபங்காகக் காய்ச்சி வடித்துக்கொள்வது ச்ருதம் எனப்படும். இதனில் ஒரு பலம் உட்கொள்ளல் வேண்டும்.

## சீதம் (ஹிமம்)

ஒரு பலம் கஷாய திரவியத்தைப் பொடிசெய்து ஒரு மட் பாண்டத்தில் போட்டு ஆறு பலம் சலம் விட்டு ஓர் இரவு மூடி ஊற வைத்து மறுநாள் வடிகட்டி எடுத்துக் கொள்வது சீதம் எனப்படும். இதனை வேளைக்கு இரண்டு பலம் உட்கொள்ளல் வேண்டும்.

## பாண்டம்

ஒரு பலம் கஷாய திரவியத்தைச் சக்கைச் சக்கையாக நறுக்கி, ஒரு மட்பாண்டத்திலிட்டு, 4 பலம் வெந்நீர் விட்டுச் சூடு தணிய வடித்துக் கொள்வது பாண்டம் எனப்படும். இதனில் 2 பலம் உட் கொள்ளல் வேண்டும்.

ஒரு பலம் ஓஷதி திரவியத்தைப் பஞ்சுபோலிடித்து, ஒரு மட் பாண்டத்திலிட்டு 4 பலம் குளிர்ந்த ஜலம் விட்டு, மத்தால் கடைந்து வடித்துக் கொள்வது முண்டு. இதனை மந்தகல்பனை என்று கூறுவர் ; இதனையும் முன்னளவே கொள்க.

## மதாந்தரம்.

போஜ மதத்தின்படி கஷாயம் 14.

விவரம்.

1. பானகஷாயம்—(பருகுவது) எட்டிலொன்ருய்க் காய்ச்சி வடித்துக் கொள்வது.

2. கண்டூஷ கஷாயம்—(கொப்பளிப்பது) ஐந்திலொன்ருய்க் காய்ச்சிக்கொள்வது.

3. பானீய கஷாயம்—(குடிப்பது) நான்கிலொன்ருய்க் காய்ச்சிக்கொள்வது.

4. ஸேக கஷாயம்—(தேகத்தில் வியர்வை உண்டாக்கத் துவட்டுவது) எட்டிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

5. ஆச்யோதன கஷாயம்—(கண்ணுக்குவிடுதல்) ஆறிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

6. விரணபிரக்ஷாளன கஷாயம்—(விரணம் அலம்புவது)பன்னிரண்டி லொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

7. முகப்பிரக்ஷாளன கஷாயம்—(முகம் அலம்புவது)ஒன்பதிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

8. உஷ்ணோதக் கஷாயம்—(குளிப்பதும் குடிப்பதும்) மூன்றிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

9. ஆஸ்தாபன கஷாயம்—ஆசனம் வழிச் செலுத்துவது) ஏழிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

10. வமன கஷாயம்—(வாந்திக்கு) இரண்டி லொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

11. விரேசன கஷாயம்—(பேதிக்கு) எட்டி லொன்ருய்க்காய்ச்சிக் கொள்வது.

12. ஸ்நாந கஷாயம்—(ஸ்நாநம்செய்ய) இரண்டி லொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது

13. எவாகு கஷாயம்—(கஞ்சி காய்ச்சுவது) திரவியத்திற்கு 64 பங்கு ஜலம் விட்டு எட்டிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

14. ஸ்நேக கஷாயம்—(தைலம், கிருதம் முதலியவைகட்கு) நான்கிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

## சரக்கமதத்தின்படி காயம் 7.

### விவரம்

1. ஸேக கஷாயம்—(கைகால் பிடிப்புகருத் தாரையாய் ஒழுக விடுவது) இரண்டு பங்கு ஜலத்தை ஒரு பங்காகக் காய்ச்சிக் கொள்வது.

2 ஸ்நேக காயம்—(எண்ணெய், கிருதம் முதலியவை காய்ச்சுவது) நான்கிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

3. பான கஷாயம்—(குடிப்பது) எட்டிலொன்ருய்க் காய்ச்சிக்கொள்வது.

4. விரணபிரக்ஷாளன கஷாயம்—(விரணங் கழுவது) பதினுறிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

5. ஆச்யோதனம்—(நவத் துவாரங்களில் செலுத்து மெண்ணெய்) ஐந்திலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

6. கண்டூஷம்—(வாய் கொப்புளிப்பது) ஆறிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

7. நிருகம்—(அந்தரங்க ஸ்தாநத்திற் செலுத்துவது) முப்பத்திரண்டிலொன்ருய்க் காய்ச்சிக் கொள்வது.

### கஷாய பாண்ட இலக்கணம்

வடநூலார் பொற் பாத்திரம் உத்தமமென்றும், வெள்ளிப் பாத்திரம் மத்திமமென்றும், தாமிரப்பாத்திரம் அதமமென்றும் கூறுவர்; எனினும் மட்கலமே மிகச் சிறப்புடைத்தாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது யாவரும் ஒப்ப முடிந்த உண்மை.

வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்ருகிய பிணிகட்கு முறையே வெண்கலம், தங்கம், செம்பு முதலியவற்ருனியன்ற கலங்களை உபயோகிக்க வேண்டும் என்பது ஒரு சார் ஆசிரியர் கொள்கை. ஆனுல் தேரையர் இவைகளை மருந்துண்ணுங் கலங்களாகவே கொள்ளல் வேண்டுமென்றும், கஷாயம், கிருதம், தைலம் முதலியவற்றைக் காய்ச்சுதல் கூடாதென்றும், எவ்வாற்ருனும் சிறந்தது மட்கலமே என்றும் அதுவே ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொன்று உபயோகப்படுத்தற்

கேற்ற அநுகூல முடையதென்றும் கூறுவர். ஆகவே, மட்கலமே தக்கதென்க.

## பருகுமுறை

பித்த தேகிகள் காய்ந்து ஆறின கஷாயத்தையும் வாத கப தேகிகள் பொறுக்கத்தக்க வெப்பத்தோடும், வாத பித்த கபம் சமமாக உள்ள தேகிகள் சிறிது வெப்பமாகவும் பருகுதல் வேண்டும் என்பது சிலர் கொள்கை.

## ஜலம் காய்ச்சு முறை

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ஜலத்தை எட்டிலொன்றாக வும், மற்ற மாதங்களில் இரண்டிலொன்றாகவும் காய்ச்சிப் பருகு தல் வேண்டும்.

கஷாயத்தையேனும், ஜலத்தையேனும், மற்றெதனையேனும் ஒரு முறை காய்ச்சி யாறினபின், மறுமுறை காய்ச்சுவது விஷத் திற் கொப்பாகும் என்க.

## அளவு

கஷாயம் செய்யத்தக்க திரவிய மெல்லாவற்றையும் சிறு துண்டுகளாக நறுக்கித் தண்ணீரி லூறப்போட்டு நனைத்து, ஒரு மட்கலத்தில் மட்டமாய்ப் பரப்பிக் கஷாயம் எவ்வளவு இறக்க வேண்டுவதோ அவ்வளவிற்குத் தண்ணீர் விட்டு மையத்தில் ஒரு கோலை விட்டு, ஜலத்தின் ஆழத்தைக் கோலின் மேல் குறித்து, பின்னர்ப் பிரயோகத்தில் விடவேண்டிய முழு அளவு ஜலத்தை யும் விட்டு, சிறு தீயி லெரித்துக் குறிப்பிட்ட கோலி னளவிற்கு ஜலம் சுண்டி வரும்போது உடனே வடித்துக் கொள்ளல் வேண்டும்.

## இன்னின்ன திரிவியத்தை இவ்விவ்வாறு காய்ச்ச வேண்டு மென்பது

1. கிழிகட்டி எரிக்கற்பாலன—கொம்பரக்கு, பிசினி, சிறு இதழ்களையுடைய மலர்கள், மாவுகள், அணுத்துவமான வித்துக் கள், ஜலத்தில் மிதக்கக்கூடிய திரவியங்கள் முதலியன.

2. தனித்தனிக் காய்ச்சற்பாலன—மாமிசம், பட்டை, இலை, பழம், காய், தானியம் முதலியன.

ஃ: னையை இடித்துத் தண்ணீரிலூறினபின் காய்ச்சற்பாலன— மரம், செடி, கொடி, புல், இவற்றுள் வேர் வைரமான பாகங்கள் முதலியன.

மரம், செடி, கொடி முதலியவற்றின் வேர், கிழங்கு, பட்டை, கட்டை, பிசின், இலை, பூ, கனி, வித்து ஆகிய ஒன்பது பதார்த்தங்களையும் காரசாராதி திரவியங்களையும் ஒருங்கு இடித்துக் காய்ச்சுவது அடைகஷாயம் எனக் கூறப்படும்.

### இவற்றை இவ்வாறு காய்ச்சச் சத்திறங்குமென்பது

வன்மையான வேரினங்களை ஏழுநாளும், கொடி நரம்புகளை மூன்றுநாளும், இலை, பட்டை, மாமிசம், கிழங்கு, தானியம் முதலானவைகளை ஒவ்வொரு நாளும் காய்ச்சச் சத்திறங்கும்.

## கல்கம்

பஞ்சபூத சம்பந்தமான வேர் முதல் வித்தீறாகிய ஒன்பது பதார்த்தங்கள், அறுசுவை, ரச முதலிய பாஷாணம், சொர்ணாதி லோகம், உபரசம், நெய், வாசனை, சுக்கு முதலிய 64 சரக்குகள் ஔஷத பிரயோகங்களில் கல்கமென்று கூறப்படும்.

## சூர்ணம்

### பாகம்

பஞ்சபூத சம்பந்தமான உலர்ந்த வேர், கிழங்கு, பட்டை, கட்டை, பிசின், இலை, பூ, கனி, வித்து முதலியவைகளையுங் காரசாராதி திரவியங்களையும் இடித்து வஸ்திரத்தாலேனும் சல்லடையாலேனும் அரித்துச் சுத்தப்படுத்துவது சூர்ணம் எனப்படும்.

### சூர்ண விதி

பிரயோகத்தில் கூறப்பட்ட திரவியங்களை வெவ்வேறாய்ச் சிறு துண்டுகளாக்கி இரவியிலேனும் நிழலிலேனும் நன்றாயுலர்த்தித் தனித்தனிக் கல்லுரலிலிட்டுக் கடப்பாரைகொண் டிடித்து, வஸ்திரகாயம் செய்து, வேண்டும் அளவிற்குக் கொள்ளல் வேண்டும். சுருக்கமாகச்செய்யும் பொருட்டு யாவற்றையு மொருங்கே சேர்த்திடித்தல் எவ்விதத்திலுங் குணந்தரக்கூடிய விசேஷ சூர்ணமாகா தென்பது தெளிக.

## கல்கங்களை வறுக்கும் பதம்

பிரயோகத்தில் வறுக்கச் சொன்ன இடங்களில் மெதுவான தீயில் மட்பாண்டத்தை வைத்து, ஒவ்வொரு இனங்களையும் தனித் தனிப் பொன்மேனியாக வறுத்து ஆறவிட்டு இடிக்கவேண்டும். எக்காரணத்தாலும் பலவற்றையும் ஒருங்கு சேர்த்து வறுக்கக் கூடாது. ஏனெனில் பெருந்துண்டுகளாகிய திரவியங்கள் பதம் வருமுன் சிறு திரவியங்கள் தீயும். இதனால் அதற்குள்ள குண முங் கெடும்.

கரியாக்கச் சொன்ன இடங்களில் சாம்பலாகப் பூக்கவிடா மல் கருகின பதத்திலேயே தீயை ஆற்றி வைத்துக்கொள்ளல் வேண்டும்.

## எண்ணெய்த் திரவியங்களைச் சூர்ணிக்கும் விதி

ஜாதிக்காய், நீரடிமுத்து, கசகசா முதலான திரவியங்களை இடித்து, வஸ்திரகாயம் செய்யும்போது சல்லடைக் கண்களை அடைத்துக்கொள்வது மன்றி, அதனிலுள்ள தைலமுஞ் சேதப் படுமாதலால் இவைகளின் மேல் தோல் முதலியன போகும் வரை யில் நன்ருய்த் தேய்த்துச் சுத்திசெய்து அம்மியிலேனும் கல்வத்தி லேனும் சூர்ணத்திற்கு நிகராகும்படி மசிய அரைத்து மற்றவைக ளுடன் சேர்த்துக்கொள்க.

## சூர்ணத்துடன் சர்க்கரை சேர்த்தல்

வேண்டும்போது பிரயோகங்களில் கண்ட அளவின்படி சர்க்கரையை அவ்வப்போது கொஞ்சங் கொஞ்சமாகக் கலந்து உபயோகித்தல் வேண்டும். சர்க்கரையை ஒரே மட்டாகச் சேர்க் கினும், சூர்ணத்தை நாட்பட வைத்திருப்பினும் சூர்ணத்தின் குணங்கெடும்.

## சூர்ண அனுபானம்

சூர்ணத்தை அளவின்படி உட்கொண்டபின் ஒரு மிடை ஜலம் பருக வேண்டும் இதனால் உட்கொண்ட சூர்ணம் எளிதில் ஜீர்ணமாகித் தன் தொழிலைச் செய்யும்; இத்தகைய தவறுதல் களுக்கு அதன் சுயகுணம் அறியப்படாவாம்.

## தூ ப ய ந் தி ர ம்




சித்திர விளக்கம்

1. மட்பாத்திரம்
2. தூபத்திற்காக இட்டசரக்கு
3. சீலைகட்டி யிருப்பது
4. சூர்ணம்
5. மேல்சட்டி கவிழ்த்திருப்பது

ஒரு மட்பாத்திரத்தில் தூபத்திற்காகக் கூறப்பட்ட சரக்கை யிட்டு, வாய்க்கு மெல்லிய சீலையைக் கட்டி, அதன் மத்தியில் சூர்ணத்தைக் குவித்து மேல் சட்டி மூடிச் சீலைசெய்து மிருதுவான தீயால் எரிக்க அடிப் பாண்டத்திலிட்ட சரக்குப் புகைந்து மேலெழும்பிச் சூர்ணத்தோடு கலக்கும். இதனைப் பற்றிய பிரயோகத்தைச் சூர்ண இலம்பகத்தில் காண்க.

## மா த் தி ரை

### பாகம்

கற்க திரவியங்களைத் தனியாக வேனும் பற்ப சிந்தூரங்களுடன் சேர்த்தேனும் ஜலம், கஷாயம், மூலிகைச்சாறு இவைகளுள் ஏதேனு மொன்றினால் நன்று உறவாகும்படி அரைத்துக் குறிப்பிட்ட அளவின்படி மாத்திரை செய்வதாம்.

### அரைப்பு விதி

மாத்திரை செய்வதற்காக நியமிக்கப்பட்ட கற்கங்களைத் தனித்தனியாகச் சூர்ணித்து, அளவின்படி கல்வத்திலிட்டுப்

பசை யுண்டாகக் கூடிய திரவிய மொன்றினால் நனையும்படி பிசறிக் கல்வத்தின் கீழ்க்கையில் வைத்துக்கொண்டு, கொஞ்சங் கொஞ்சமாகக் கல்வத்திற்கு மேல்கையில் ஏறும்படி தள்ளி அரைக்கவேண்டும். இப்படிக் கீழ்க்கையிலிருந்த சரக்கெல்லாம் மேலேறியபின் மீண்டும் படிப்படியாகக் கீழ்க்கைக்கு வரும்படி தள்ளித்தள்ளி அரைத்தல் வேண்டும். இங்ஙனம் குறித்த காலம் வரையி லரைப்பின் நிர்த்தோஷமான மாத்திரையாகும்.

### மாத்திரை திரட்டும் பாகம்

அழுத்தி யரைக்கும் போது, சரக்கு கல்வத்தில் சிறிதும் பற்றாமல் குழவியுடன் புரள வேண்டுவது மன்றி, அது கல்வத்திற்கும் குழவிக்கும் சம்பந்த மில்லா திருத்தல் வேண்டும்.

### வாசனைத் திரவியங்கள் சேர்க்குங் காலம்

கஸ்தூரி, கோரோசனை, அம்பர், குங்குமப்பூ, பச்சைக் கருப்பூரம் முதலானவைகளை மாத்திரை திரட்ட ஒரு நாழிகைக்கு முன் சேர்த்தரைப்பதே நன்று. அங்ஙன முடிந்த மாத்திரைகளை நிழலி லுலர்த்தி, உடனே கல்கார்க் சீசாவில் பதனஞ் செய்தல் வேண்டும்.

### அரைப்பில் முன்பின் சேர்க்க வேண்டுவன

பிரயோகத்தில் அரைப்பதற்கு எது கடினமானதோ அதனைக் கல்வத்தி லிட்டரைத்து, அது பக்குவமானபின் மற்றவைகளைப் படிப்படியாக ஒன்றன்பின் னொன்றாகச் சேர்த்து அரைத்தல் வேண்டும். வாளம் முதலிய பருப்பினங்கள் சேரும் பொழுது மாத்திரை திரட்ட ஒரு ஜாமத்திற்குமுன் சேர்த்தல் வேண்டும். ஏனெனில், தாளகத்தைப் போன்ற கடின சரக்குடன் மத்திமமான சரக்கு சம்பந்தப்படின், தாளகம் எளிதில் அரைபடாது. வாள முதலியவை நீண்ட அரைப்பிற் புகின் மாத்திரை செய்துலரும் போது, அதனின்றும் தைலம் வெளிப்படும். அதனால் அதன் வன்மையும் குறையும்.

## இலேகியம்

### பாகம்

பிரயோகத்தில் குறிப்பிட்ட திரவியங்களைச் சூர்ண விதிப்படி பாகப்படுத்திப் பின்னர் இதில் சேர்க்கப்படும் சர்க்கரையில் ஜல

மேனும், பாலேனும், கஷாயமேனும் பிரயோகத்திற்கு இசைந்த வாறு சேர்த்துத் தந்து பாகத்திலிறக்கிச் சூரணங்களைக் கொஞ் சங் கொஞ்சமாகப் போட்டுக் கிளறித் தேன், நெய் முதலியவற்றை விட்டுப் பிசைந்து கொள்வது இலேகியம் எனப்படும்.

## கற்கத்திற்குச் சர்க்கரை முதலியவற்றின் அளவு

சூர்ண அளவிற்குச் சர்க்கரை இரண்டு பங்கும் சர்க்கரைக்கு நெய் அரைப்பங்கும், நெய்க்குத் தேன் அரைப்பங்கும், சேர்த்தல் வேண்டும்.

## சர்க்கரைக்கு ஜலத்தின் அளவு

சர்க்கரையுடன் சேர்க்கப்படும் பால், கஷாயம், ஜலம் இவற் றைத் தனித்தனியாகச் சேர்ப்பினும், இரண்டை ஒன்றாக வேனும் மூன்றையு மேனும் சேர்ப்பினும் அது சர்க்கரையின் அளவிற்கு நான்கு மடங்கிருத்தல் வேண்டும்.

## தந்து பாக விளக்கம்

சர்க்கரையுடன் திரவரூபமான ஏதேனு மொன்றைச் சேர்த் துக் காய்ச்சும்போது, பாகை ஒரு விரலால் தொட்டு, மறு விர லால் அழுத்தி எடுக்கும்போது அப்பாகு நூல் போல் ஆறுதல் தந்துபாகமாம் அல்லது தாம்பாளத்தில் ½ அங்குலம் ஆழ மிரு க்க ஜலம்விட்டு அதன்மேல் காய்ந்து கொண்டிருக்கிற பாகினின் றும் துளி துளியாக விட்டால், அத்துளி ஜலத்தில் கலந்துபோகா மல், கீழிறங்கி வில்லையாக நிற்கும் அது விரலாலசைக்க அசை யும், இதுவே சூரணம் கொட்டிக் கிளறுவதற்குப் பக்குவமான தந்து பாகம் எனப்படும்.

## எண்ணெயுள்ள விரை, பருப்பு முதலியவற்றைச் சேர்க்குமுறை

சாரப்பருப்பு, வாதுமைப்பருப்பு, சில்கூஜாபருப்பு, பிஸ்தா பருப்பு, அக்ரூட் பருப்பு, வெள்ளரி விதை முதலியவைகளை இலே கியத்தில் சேர்க்கும்போது கூடிய வரையில் மேல் பொட்டைப் போக்கிப் புடைத்து, வெந்நீரில் ஊறப்போட்டு, அம்மிக் கல்லி லிட்டு, 4, 5 முறையாக ஜலம்விட் டரைத்துப் பிழிந்து, சல்லடை யில் வடித்துப் பாலாக எடுத்துச் சர்க்கரையுடன் சேர்த்தல் வேண்டும்.

## இடிக்கும் பாகம்

முதலில் கல்லுரலில் கொஞ்சம் வெல்லமிட்டு அதனுடன் கொஞ்சம் சூர்ணம் சேர்த்துப் பூணில்லா உலக்கையால் இடிக்க வேண்டும். மறுபடியும் கீழ் மேலாகப் புரட்டி யிடிக்கவேண்டும். இவ்வாறே கொஞ்சம் வெல்லமும் சூரணமுமாகச் சேர்த்துச் சேர்த்து இடித்து, எல்லாவற்றையும் ஒருமிக்கச் செய்தெடுத்துக் கொண்டு, சுத்திகரித்த அம்மியில் இந்த முழு அளவையுமிட்டுக் குழவியா லொருவ ரிடிக்க மற்றொருவர் இலேகியத்தைப் புரட்டிப் புரட்டிக் கொடுத்துக் கொண்டுவர வேண்டும். இங்ஙனம் முடிவு பெற்றதே நற்குணத்தை உடையதாகும்.

# தைலம்

## பிறப்பு

தைலம் பலதிறப்பட்ட பரியாயப் பெயர்களைப் பெற்றிருப்பினும், கொதித்தல், உருகல், புடம், தீநீர், ஆதவம், பூமி, மரம், மலை, ஜலம், சுடர், யந்திரம் முதலியவற்றின் காரணமாகக் குறியிடப்பட்டு ஆன்றோரான் ஆளப்பட்டு வருகின்றது.

| | |
|---|---|
| முடித்தைலம் | சிரசிற்கிடுவது |
| குடித்தைலம் | குடிப்பது |
| பிடித்தைலம் | சருமத்தின்மிசைத்தடவிப்பிடிப்பது |
| துளைத்தைலம் | நவத்துவாரங்களிற் செலுத்துவது |
| சிலைத்தைலம் | விரணங்களுக்குப் போடுவது. |

## தைலத்திற் சேர்க்கப்படும் கஷாய விதி

மிருதுவாக இருக்கும் கற்கத்திற்கு ஜலம் நான்கு மடங்கு விட்டு ஒன்றாகக் காய்ச்சுதல் வேண்டும்.

மத்தியமாக இருக்கும் கற்கத்திற்கு ஜலம் 6 ஆகவும், கடினமாக இருக்கும் கற்கத்திற்கு ஜலம் 8 ஆகவும், அதி கடினமாக இருக்கும் கற்கத்திற்கு ஜலம் 16 ஆகவும், சேர்த்து அதனில் ஒன்றாகச் சுண்டக் காய்ச்சுதல் வேண்டும்.

## கற்கங்களுடன் பால்சேர்க்கும் விதி

சுத்த ஜலத்துடன் தைலம் சேர்த்துச் செய்யின் பாலை நான்கி லொருபங்கும், கஷாயத்துடன் தைலம் கூட்டிச் செய்

யின் அதனை ஆறிலொருபங்கும், மூலிகை ரசம், மாமிச ரசம், தயிர், மோர் இவை தம்மோடு தைலஞ் சேர்த்துச் செய்யின் எட்டிலொரு பங்கும் சேர்த்துக்கொள்க.

## கஷாய மளவிற்குத் தைலமளவு

கடின திரவியங்களாற் காய்ச்சப்படும் கஷாயத்திற்குச் சுத்தமாக ஆடின எள் நெய்யையேனும் சிற்றாமணக் கெண்ணெயையேனும் அரைப்பாகமாகவும், மிருதுவான வஸ்துக்களால் காய்ச்சப்பட்ட கஷாயங்களுக்கு அவைகளைச் சமவளவாகவும், மூலிகைகளின் இரச வர்க்கங்களோடு சேர்ப்பின் அவை தம்மையே நான்கிலொன்றாகவும் சேர்ப்பது உத்தமம் எனினும், அவரவர் அனுபவத்துக் கேற்றவாறு பெரும்பான்மையுங் கொள்வது மிகச்சிறந்தது. ஆகலின் அவ்வப் பாகங்களில் உரைக்கப்பட்ட பாகங்களையே கொள்க.

## முடித் தைலத்துக்குச் சிறப்புவிதி

ஏலம், சந்தனம், குங்குமப்பூ, அகில், மரு, தக்கோலம், ஜடாமாஞ்சில், கிச்சிலிக்கிழங்கு, மட்டிப்பால், பச்சிலை, பச்சைக் கருப்பூரம், கஸ்தூரிமஞ்சள், நகம், புனுகு முதலியவற்றை அடுக்களையினின் றிறக்கிய பின்னர் சேர்த்தல் வேண்டும்.

## தைலபாகம்

தைலத்தோடு கூடிய கற்கத்தைச் சில்லி அகப்பையால் எடுத்துப் பார்க்கின் கொஞ்ச நீருடன் மெழுகு பதமாகக் காணப்படின் மிருதுபாகமாம். கற்கத்தைத் திரட்டக் கையிலொட்டின் பதம் சிக்குபாகமாம். கல்கம் தைலத்திற்கு மேல் மிதக்காமல் மணலைப்போற் காணப்படின் கரகரப்புப் பாகமாம். மிருது பாகத்துக்கு முற்பதமும், கரகரப்பு பாகத்திற்குப் பிற்பதமும் பயன் தராது போதலோடு தீமையையும் பயக்கும் என்க.

## இவைகளின் உபயோகம்

மிருதுபாகம் வாத சரீரிகட்கும், சிக்குபாகம் பித்த சரீரிகட்கும், கரகரப்புப்பாகம் சிலேத்தும சரீரிகட்கு உத்தமோத்தமாம். ஒரு முறை காய்ச்சிய தைலத்தை எக்காரணம் பற்றியும் மறுமுறை காய்ச்சுதல் கூடாது.

## தைலசுத்தி

1. ஸ்நானத்திற்குக் கூறப்பட்ட கல்கத்தைத் தைலத்தி லிட்டு, அத்தூளின் நிறம் தோன்றக் காய்ச்சி, உடனே தேய்த்து முழுகும் தைலங்கட்கு அழுத்தித் தேய்ப்பதே சுத்தியாம்.

2. குடிப்பதற்கும், முழுகுவதற்கும் கல்கங்களை அரைத்து அடைதட்டி, எண்ணெயிற் போட்டுக் காய்ச்சும் தைலங்கட்கு எல்லாம் ஆறுவதே சுத்தி என்க.

3. கஷாயம், பால், இலை ரசம் முதலியவற்றை ஒருங்கு கலந்தாதல், தனித்தனியாதல் காய்ச்சும் தைலங்களில் ஏழு சர க்குகளில் அடங்கியிருப்பின் அதனை முப்பது நாழிகைக்குள் ளுபயோகிக்காமல் மூன்றுநாள் வரை சும்மா வைத்திருப்பதே சுத்தியாம்.

4. மிகுந்த கல்கங்களான் முடிவுபெற்ற தைல கிருதாதி களை மூன்று நாளைக்குமேல் நாற்பதுநாள் வரையில் ஒரு வருடத் திய கருங்குருவை நெல்லிற்குள் (அறுபதுநாள் சம்பா) தானியப் புடமாக வைத்தெடுப்பதே சுத்தியாம் என்பது.

## தைல விறகு

சுர முதலிய பிணிகட்கு ஆவாரை,சிற்றுமுட்டி விறகும், கண், நாசி, செவி முதலிய உறுப்புகட் குபயோகிக்கும் தைலங்கட்கு உசிலம், இலந்தை விறகும் தேகத்தில் பூசும் உஷ்ண தைலங்கட்கு இருப்பை, புளி விறகும் வேண்டப் படுவனவாம்.

இவைகள் கிடைக்கப்பெறாக் காலங்களில் தைலங்களின் தன் மைகட் கேற்றவாறு ஏதேனு மொரு ஜாதி விறகால் எரிக்கவும்.

## தைலபாண்டம்

சுவர்ணாதி லோகங்களால் இயன்ற பாண்டங்களினும் மட் கலமே சிறப்புடைத்து. இதனை அதிக திரவியஞ் செலவிட்டுக் காய்ச்சும் மஹாதைலங்கட்கு ஏதும் இடையூறு நேராவண்ணம் தந்திக் கம்பியால் பூரண கும்பத்திற்கு நூல் சுற்றுவதைப்போற் சுற்றி அதன்மேல் செம்மண்ணும் சாணமுங்கலந்து, பூசி உலர வைத்து உபயோகித்தல் பெரிதும் நன்று. அன்றியும் ஏதேனும் சிறிது இடையூறு உண்டாகினும் உடனே அதனைப் பரிகரிக் கற்கு இதனைப் போல் மற்றொரு பாண்டம் எப்போதும் கைவச மிருப்பது இன்றியமையாதது.

## மெழுக்குத்தைலக் கருவி




### சித்திரவிளக்கம்

1. கழுத்து நீண்ட பெருங்குடம்
2. சிறுகடம்
3. பெரிய கடத்தின் மேற்பாகத்தின் துவாரம்
4. சிறியகடத்தின் அடிப்புறத்தில் நெருங்க இட்ட 3 துவாரங்கள்
5. சாணம் அப்பிய இடம்
6. சிறுகடத்தினின்றும் தைலம் சேர்க்க வைத்த பாத்திரம்

சித்திரத்தில் குறித்த வண்ணம் 4, 5 படி கொள்ளத் தக்க கழுத்து நீண்ட பெருங்கடத்தில் பாகத்திற்கு உரிய சரக்குகளைப் போட்டு, அதன் வாய்க்குப் பொருத்தமான வாயுள்ளதும்,

மேல் கடத்திற்கு நான்கிலொரு பங்கு அளவுள்ளதுமான மற்றொரு சிறு கடத்தைக் கவிழ்த்து, பொருத்துவாய்க்கு மண்பூசி, நூலினால் இரண்டு கடங்களின் வாயைச் சேர வலித்துக்கட்டி அதன் மேல் ஏழு சீலை செய்து, இவ்விரண்டு கடங்களின் நடு இடங்களில், பெரிய கடத்திற்கு மேற்புரத்தில் சுண்டு விரல் நுழையத்தக்க துவாரமும், சிறிய கடத்திற்குக் கீழ்ப்புறம் ஒரு பெரு உழுந்து நுழையத்தக்க இரண்டு மூன்று துவாரங்கள் நெருங்கச் செய்து, மேல் துவாரத்தால் (பெருங் கடத்திற் செய்த துவாரம்) புகை வெளிப்படா திருக்க, ஒரு சிறு ஓட்டினால் மூடி, அதன் மேல் பசுஞ்சாணத்தை அப்பி, அவ்விடம் மேற் புறமாகவும், சிறுகடத்திலிட்ட துவாரம் கீழ்ப்புறமாகவும் இருக்கப் பெருங் கடத்தை ஒருக்கணித்து, புகை அடுப்பின்மேல் வைத்து, அடுப்பிற்கும் கடத்திற்கு முள்ள இடைவெளிக்கு மண்ணறைந்து பூசி, சிறு கடத்தின் கீழ்முகத் துவாரத்தின் வழியாகப் பாத்திரத்தை வைத்து, எரிக்கப் புகையோடு தைலமிறங்கும். தைலம் காணும் வரை எரிப்பதுடன் எரிக்கும் தீத் தைலத்தோடு வரும் புகையோடு சம்பந்தப்படாது கவனமாக நோக்கிவருதல் அத்தியாவசியகம். இல்லையானால், இப்புகை எரியுந்தன்மைத் தாகலின் கடத்திற்குள் தீச் சென்று முற்றும் நஷ்டமாகும்படி வெடித்து, செய்பவர்கட்கும் தீங்கை விளைவிக்கும்.

## தைல வேறுபாடு

இவ்வாறு தைலமிறக்குவதில் ஒருமுறை இறங்கும் தைலமானது சில தினத்தில் உறைந்தும் ஒருமுறை உறையாதும் எக்காலத்தும் நீராக விருக்கும். இதற்குக் காரணம் சிறுகடமானது அதிகமாகக் கீழ்நோக்கி யிருக்கப் பெருங் கடத்திலிட்ட சரக்கு சிறு தீயினின்றே புகை சேகரமாகித் தைல ரூபமாக வடியின் அது சில தினத்திற்குள் உறையும். இது மேல் பூசுதற்கு மிக்க குணமுடையதும் அவ்விடத்தில் வியர்வையை யுண்டாக்கக் கூடியதுமாக விருக்கும். உள்ளுக்குக் கொடுக்கப் பயன்படாது. இரண்டு கடங்களும் சரி மட்டமாக இருக்க உள்ளிட்ட சரக்கு நன்றாக தீய்ந்து தைலங் காணின் எக்காரணத் தானும் உறையாது இதனைப் பிரயோகத்தில் கூறிய வண்ணம் பிணிகட்கு உள்ளுக்குக் கொடுக்கலாம்.

## வேறுவிதக்கருவி




சித்திரவிளக்கம்

1. கழுத்துச் சிறுகிய மட்கடம்
2. வாயை மூடிய அகல்
3. கழுத்தின் உண்டாக்கிய துவாரம்
4. மண் சீலை செய்த குழை
5. புகை அடுப்பின்மீது வைத்துப் பொருத்து வாய்க்கு மண்பூசப் பட்ட கடம்
6. கடத்தைச் சூழமண்ணும் சாணமும் கூட்டி அப்பியது
7. தைலம் சொட்டு வாயில்

கழுத்துச் சிறுகிய ஒரு மட்கடத்தில் மெழுக்குத் தைலத்திற்காகப் பாகங்களில் கூறப்பட்ட சரக்குகளைப் போட்டு, வாயை ஒரு அகலால் மூடி, சீலை வலுவாகச் செய்து, உலரவைத்து, கழுத்தின்கண் ஒரு துவாரம் உண்டாக்குக. பின்னர், மூன்று முழம் நீளமுள்ள ஒரு பித்தளைக்குழை, ஒரு முனை கையின் பெருவிரல் நுழையும் அளவிற்கும் மற்றொரு முனை சுண்டுவிரல் நுழையும் அளவிற்கும் செய்வித்து, மண்சீலை ஏழு சுற்றுச் செய்து, காய வைத்து, பருமனன முனையைக் கழுத்துத் துவாரத்துள் ஒன்று அல்லது ஒன்றரை அங்குலம் உட்செல்லும்படி சொருகி, சந்துக்கு மண்பூசி, நன்கு காயவைத்து, புகை அடுப்பின் மேல்வைத்து,

பொருத்துவாய்க்கு மண் பூசுக. இப்பால், களிமண் நான்கு பங்கும் பசுவின் சாணம் ஒரு பங்குமாகப் பிசைந்து, கழுத்தினின்று அடுப்பின் மேலோரம் வரை, கடத்தைச் சுற்றி அப்பி, ஓரிரவு ஆற விட்டு, மறுநாள் எரிக்கக் குழை வாயிலாகத் தைலம் துளிக்கும் அதனைத் தக்கபடி சேகரித்துக் கொள்க.

குறிப்பு: வீரம். பாஷாணம் முதலியன கலந்து செய்யத் தக்க பாகங்களுக்கு இம்முறை உரித்தன்று. அவைகட்கு மேற் கூறிய பாகமே உரித்தாம்.

காரணம் பித்தளைக் குழையை வீரம் முதலியன கரைக்கும் ஆகலான் மருந்தின் குணங்கெடும் என்பதாம்.

## குழித் தைலக்கருவி




சித்திரவிளக்கம்

1. குடுவை
2. துவாரமிட்டபாகம்
3. பூமியில் புடமிடத் தோண்டிய குழி
4. சிறுபள்ளஞ் செய்து, பளிங்கு பாத்திரம் வைத்திருப்பது

ஒரு குடுவையின் அடியில் 3 சிறு துவாரங்களிட்டு, பாகத்தில் தைலமாக்க வேண்டும் திரவியத்தைப் போட்டு, வாய்க்கு ஓடு மூடி, சீலைசெய்து, பூமியில் குடுவைக்கும், அதனைச் சுற்றி எரு அடுக்கிப் புடமிட வேண்டியதற்கும் எவ்வளவு இடம் வேண்டுமோ

அவ்வளவு பள்ளம் தோண்டிச் சுத்தப்படுத்தி, அதனடியின் நடுவில் ஒரு சிறு பள்ளமுண்டாக்கி, அதனில் ஒரு பீங்கான் அல்லது பளிங்கு பாத்திரத்தை வைத்து, அதன்மீது குடுவையின் துவாரமிட்டபாகம் நடுவாக இருக்க அமைத்து, மண்சீலையால் பீங்கானுக்கும் குடுவைக்குமுள்ள இடைவெளியைச் சுற்றிக் குழி நிரம்ப எரு அடக்கிப் புடமிட்டுச் சாங்க சீதளமான பின் பக்குவமாக எருச்சாம்பலை யெல்லாம் வெளியாக்கிச் சீலையை நீக்கிச் சாம்பல், மண் முதலியன அடியிலுள்ள பீங்கானில் விழா வண்ணம் முன்னோக்கமாக மேல் குடுவையை எடுத்துப் பின்னர் பீங்கானில் வடிந்த தைலத்தை உடனே வடிகட்டிப் பத்திரப்படுத்துக.

## வேறுவிதம்




சித்திர விளக்கம்

1. குடுவை
2. துவாரமிட்ட பாகம்
3. பூமியில் குழிதோண்டிப் பாத்திரம் வைத்திருப்பது

ஒரு குடுவையின் அடியில் மூன்று சிறு துவாரங்களிட்டு, அதனில் தைலமாகக் கொள்ளவேண்டிய சரக்குகளையிட்டு, வாயை மூடிச் சீலை செய்து, பூமியில் ஒரு சிறு பள்ளந்தோண்டி அதனில் பீங்கான் பாத்திரத்தை வைத்து, அதன் நடுவில் முன் சித்தப்படுத்திய குடுவையின் அடிப்பாகத்தி லிட்ட துவாரம் நடுவிலிருக்க

அமைத்து, வாய்ப்பொருத்தத்திற்குச் சீலை செய்து குடுவை மறைய எரு அடுக்கிப் புடம் போடுக. இதனையும் முன்போல் ஜாக்கிரதையாக அடியிலிருக்கும் தைலத்தைப் பத்திரப் படுத்துக.

## குப்பிப்புடத்தைலம்




சித்திரவிளக்கம்

1. புட்டி
2. புட்டியின் கழுத்தும் சிக்குண்டு செருகிய கம்பியும்
3. சால்
4. சாலின் அடிப்பாகத் துவாரம்
5. இருப்படுப்பு
6. அடுக்கப்பட்ட எரு
7. பீங்கான் பாத்திரம்

சிறு வித்துக்களில் இருந்தேனும், கந்தகம், இரசம், பாஷாணம் முதலியவற்றை அரைத்து மாத்திரையாகச் செய்தேனும் தைலமாக இறக்க வேண்டும் பாகங்களில் ஒருபுட்டிக்கு ஏழுசீலை மண் செய்து, காயவைத்து அதனுள் சரக்கைச் செலுத்தி வாயி

னின்றும் கழுத்துவரை சிக்குண்ட பிராந்தி புட்டியின்மேல் கட்டப்பட்டிருக்கும் கம்பியை உள்ளிட்ட சரக்கு வெளிவராதிருக்கும்படி அடைத்தாவது சுப்பல்களைத் தளரக் கற்றையாகக் கட்டிச் செருகியாவது வைத்துக் கொள்க.

ஒருசாலின் அடிப்புறத்தின் மத்தியில் புட்டியின் கழுத்து நுழையும் வண்ணம் துவாரம்செய்து அதனை ஒரு இருப்படுப்பின் மேல் வைத்துச் சரக்கிட்ட புட்டியின் வாயைத் துவாரத்தின் வழியாகச் செருகிச் சந்திற்கு மண்பூசிப் புட்டியைச் சுற்றி அரையடி கனமிருக்க எரு அடுக்கிப் புடமிட உள்ளிட்ட சரக்கு தீய்ந்து வாயின் வாயிலாகத் தைலம் துளிதுளியாக இறங்கும். அதனை ஒரு தூய்மையான பீங்கானில் வாங்குக.

## சுடர் தைலம்




சித்திரவிளக்கம்

1. சரக்கு அல்லது திரி
2. சலாக்கு
3. சுடர்
4. கோப்பை
5. நெய்யைச் சுடரின்மேல் பெய்தல்

சுடர் தைலமாகச் செய்யத்தக்க பாகத்துக்குரிய யாதானும் ஒரு சரக்கை எண்ணெயில் முன்னரே ஊறப்போட்டு, வைத்திருந்தேனும் அல்லது சில சரக்குகளைக் கல்வத்திலிட்டு

நெய் முதலியவற்றைப் பெய்து, அரைத்து ஒரு சீலையில் தடவித் திரியாகச் சுற்றியேனும், ஒரு நீண்ட குறட்டினாலேனும் அல்லது சலாக்கினாலேனும் குற்றிப்பற்றிக் கொண்டு, தீவைத்து எரியச் செய்து, அதனடியில் ஒரு கோப்பையை வைத்துப் பாகங்களில் குறித்த நெய்வகைகளில் ஏதேனும் ஒன்றைச் சுடரின் மேல் கொஞ்சங் கொஞ்சமாகப் பெய்து கொண்டுவர, எரிந்து கீழ்ச் சொட்டும். இதனைப் பத்திரமாக வடித்து வைக்க.

## கிருதம்

மூலிகைச் சாறு, பால், கடைச் சரக்குகளின் கஷாயம், முதலியவைகளைப் பசு நெய்யுடன் சேர்த்துப் பதமுறக் காய்ச்சி வடித்தாவது, வடிக்காமலாவது வடித்தபின் கற்கங்களைச் சேர்த்தாவது உபயோகிப்பது கிருதம் எனப்படும்.

### நெய்யினளவு

சரக்கி னளவிற்கு நெய் இருமடங் கிருத்தல் வேண்டும். வடித்தபின் கற்கம் சேரவேண்டி யிருப்பின் நெய் கற்கத்திற்கு நான்கு பங்கு அதிகரித்திருத்தல் வேண்டும்.

### பாகம்

வடிக்கும் நெய் தைல பாகத்தை ஒத்தும், வடிக்காம லுபயோகிக்கும் நெய் கற்கம் சிவந்து மணக்கும் பதத்தும் இருக்கும் செவ்வி நோக்கிச் சூடு ஆறுவதற்கு மறு பாண்டத்தில் மாற்றப்பட வேண்டும்.

கிருதத்திற்கு நுரை யடங்கின சமயமும், தைலங் கட்டு நுரை உண்டாகும் சமயமும் பக்குவப்படும் காலங்களென்றறிக.

### கிருத அளவு

கற்கங்களுடன் சேர்ந்த எல்லாக் கிருதங்களையும் வேளைக்கு இரண்டு உச்சிக் கறண்டி விகிதமும், தனி நெய்யாயின் வேளைக்கு ஒரு உச்சிக் கறண்டி விகிதமும் தின மிருவேளை உட்கொள்ள வேண்டும். கிருத மெல்லாம் முடிந்த மூன்று நாட்களுக்குப் பின் மூன்று மாதங்களுக்குள் உபயோகப்படல் வேண்டும். இதற்கு மேற்படின் தம் குணத்தைத் தரா.

## பற்பம்

இரசாதி பாஷாணத்தையேனும் சொர்ணாதி லோகத்தையேனும் நீறுக்குவதற் குரிய உபசாரத்தையேனும் பற்பமாக்கும்படியான மூலிகையைக் கொண்டாவது காரசாரங்களைக் கொண்டாவது அல்லது அவற்றின் சாறு, ஜெயநீர் விட்டரைத்தாவது வில்லைசெய்து காயவைத்து, அகலிலடக்கிற் சீலை செய்து, காய்ந்தபின் அகல் சிவக்கும்படி புடத்திலிட்டாவது துருத்திக்கொண்டு ஊதியாவது எடுக்க வெளுத்திருத்தல் வேண்டும். இதனையே பற்பமெனக் கூறுவர்.

### புடமிட வேண்டிய அகலிற்குச் சீலை செய்யும் விதம்

ஒரே விதமான அகல்களை வாய் பொருந்து மளவு மட்டமாய்த் தேய்த்து, அதனுள் வில்லையை வைத்து, வாய்பொருத்தமான சந்திற்குக் களிமண், வறுத்த நாட்டுக்கல்நார், சிறுமணல் இவைகளைச் சமனெடையாக அரைத்துப் பூசி, அதன் மேல் சீலையில் தடவி ஏழுசுற்றுச் சுற்றிக் கையாலழுந்தப் பார்த்து இரவியி லுலர்த்தல் வேண்டும்.

இந்நூலிற் கூறப்பட்ட எருவின் அளவு சென்னையில் கிடைக்கும் *கைவறட்டி ஒன்றுக்கு ஐந்து பலம் நிறை யுடையது. இதனையே இங்குச் செய்வோர் கவனிக்கவேண்டும். தேசங்கள் தோறும் தட்டப்படும் வறட்டிகளின் அளவிற்குத் தக்கவாறு சிறிதேறத்தாழப் பாகத்திற் குறிப்பிட்ட எருவின் மொத்த எடைக்கு இயைய அவற்றை நிறுத்துப் புடமிடுதல் நன்று.

### எரு மிகினும் குறையினும் நேரும் கேடுதி

எருவானது அதிகப்படின் சில சிட்டம்போலும் சில உருகியும், சில உருகாமல் கடினமாகவும் தோன்றும். இதனை மறுவலும் முயன்று வழிக்குக் கொண்டுவர முடியவே முடியாது. முடியினும் கூறியபடி பயன் தராது.

எருவானது குறையின் போதுமான வெளுப்பும் பூப்பு (மென்மை)ம் இல்லாமலிருக்கும். அதனை முன்போலரைத்து வில்லை செய்து சற்று எருவை மிகுத்திப் புடமிடப் பற்பமாகும் குணமுங் கெடாது. இவ்வாறே சிந்தூரத்திற்கும் கொள்க.

---

* கையினால் எவ்வளவு சாணமெடுத்துத் தட்டக்கூடுமோ அவ்வளவுடைய வறட்டியே ஈண்டுக் கைவறட்டி எனப்பட்டது.

## புடங்களை வைக்கவேண்டிய விதி

எருவை யடுக்கிப் புடமிடும்போது, காற்று அதன்மீது மோதாவண்ணம் கூடியவரையி லடக்கமாய் இருத்தல் வேண்டும். ஏனெனில் காற்று மோதுதலால் தீயானது ஒருபக்கத்தில் அளவிற்கு மிஞ்சி உறைத்தும் மற்றொரு பாகத்தில் குறைந்தும் போகும். இவ்விகற்பத்தினாலேயே ஒரே அகலில் ஒருபுரம் பற்ப சிந்தூரங்கள் நல்ல நிறமுடையனவாகவும், மற்றொரு பாகம் நிறங் குறைந்துங் காண்பதுண்டு. இதுபற்றியே பெருத்த புடங்களை யெல்லாம் குழித்தோண்டி அதனி லெருவடக்கிப் போடுதல் வழக்கம். இதனால் தீயானது விரைவில் அணையாது. அகலின் நாற்புரமும் ஒரேவிதமான தீப்பொருந்தியு மிருக்கும்.

## சிந்தூரம்

இரசாதி பாஷாணம், சொர்ணாதிலோகம், பொருத்தமான உபரசம் இவைகளை மூலிகைச் சாற்றினாலேனும் ஜெயநீரினாலேனும் அரைத்துச் செந்நிறம் காணும்வரை எரித்தாவது புடம் போட்டாவது ஊதியாவது சித்தப்படுத்துவது சிந்தூரமாம்.

## வாலுகாயந்திரம்




சித்திர விளக்கம்

1. மட்கடம்
2. மணல்
3. குப்பி

சித்திரத்தில் கூறப்பட்ட விதமாக ஒரு மட்கடத்தில் இரண்டு மூன்று விரற்கடை மணற்கொட்டி, அதன்மீது எழு சீலை செய்து, மருந்திட்ட காசிக்குப்பியை வைத்துக் கழுத்தளவு மணல் கொட்டிப் பரப்பிப் பாகத்தில் கூறியவண்ணம் குப்பியின் வாயை மூடியும், மூடாமலும் காலவளவுபோல் முத்தியாக எரித்தெடுத்தலாம்.

## வேறு




சித்திர விளக்கம்

1. மட்கடம்
2. மட்கடத்தி னடிப்பாகத்தி லிட்ட துவாரம்
3. குப்பி
4. மருந்திட்ட குப்பியின் பாகம் துவாரத்தின் வழி இறக்கியிருப்பது
5. மணல்

சித்திரத்தில் கண்டவாறு ஒரு மட்கடத்தின் அடிப்பாகத்தினடுவில் வட்டமாகத் துவாரம் செய்து, சீலைசெய்த குப்பியில் மருந்து நிறைந்த பாகம் வரையில் நுழையும்படி செய்து, சந்திற்கு மண்பூசிக் கழுத்தளவு மணல்கொட்டிப் பாகத்தில் கூறியபடி வாய் மூடியும் மூடாமலு மெரித்தெடுப்பதாம்.

## குப்பிக்குச் சீலை செய்யும் விதம்

களிப்புசெம்மண், உமிக்கரி, வறுத்த நாட்டுக் கல்நார், சிறு மணல் இவைகளைச் சமவளவாக மொத்த எடைக்குச் சுத்தமான பருத்திப் பஞ்சைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு, நெகிழ வரைத்துக் குப்பிக்கு ஒருமுறை பூசி யுலர்த்துக. அது நன்றாய் காய்ந்தபின் மற்றொரு முறை அதன்மீது பூசி உலர்த்துக. இங்ஙனம் பத்துப் பன்னிரண்டு முறை செய்யத் தீயின் வேகத்தால் குப்பி வெடிப்பினும், மருந்து சேதப்படா திருப்பதற்குச் சிறந்த சீலையாக இருக்கும்.

## மணலின் இலக்கணம்

குப்பியைச் சுற்றியிடும் மணல் சற்றேறத்தாழ, மிளகு பருமனுக்குக் குறையாமலும், கடலைப் பிரமாணத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

## சிந்தூர தைல கிருதங்கட்கு அடுப்பமைக்கும் வகை




சித்திர விளக்கம்

1. மட்சால்
2. தரைமட்டம் பள்ளஞ் செய்து அமைத்தது
3. சாலைச் சுற்றிக் செங்கல் கட்டடம்
4. மேல்புறத்தி லமைத்த வட்டாகாரம்
5. விறகு எரிக்கும் சாலின் வாய்

சித்திரத்தில் குறிப்பிட்டபடி ஒருமட்சாலே சிறிது தரைமட்டத்திற்குப் பதியும் வண்ணம் பள்ளம் செய்து வைத்து, அதன் வாயிலாக விறகுவைத் தெரிப்பதற்கு வசதியாகிக்கொண்டு சுற்றிச் சதுரமாக ஒற்றைச் செங்கல்லால் கட்டடம் கட்டிச் சந்து கட்கு மண்ணறைந்து பூசி, மேற்புறத்தின் நடுவில் அரையடி குறுக்களவிருக்க வட்டாகாரமாகச் சந்து செய்து, மண்பூசிச் சிலநாள் உலரவிட்டுச் சாணத்தால் மெழுகி, இஷ்ட தெய்வத்தைக் கோரி அக்கினிப் பிரவேசம் சுபதினத்திற் செய்க.

## புகை அடுப்பு




சித்திர விளக்கம்

1. ஒற்றைச் செங்கற் கட்டடம்
2. முன்பார்வையும் விறகு இடும் வழியும்
3. உட்பக்கத்தின் நான்கு மூலைகட்கும் மண்ணறைந்து வட்ட வடிவமாகச் செய்தது.
4. பாத்திரம் வைத்து எரிப்பதற்காக மேல்புறம் செய்வித்தது.
5. மேல்புறத்தின் பின்புகை குழை அமைந்தது.

சற்றேறக் குறைய 18, 20 அங்குலம் அகலம், நீளம் உயரத்திற்கு மேற்படாமல் சதுரமாகச் சித்திரத்தில் குறித்தபடி, ஒற்றைச் செங்கல்லால் கட்டுவதால் முன் பார்வையில் அகலத்தின் மூன்றி லொரு பாகத்தையேனும் அல்லது அவ்வளவோடு இரண்டு மூன்று அங்குலம் அதிகப்படுத்தி விறகு எரிப்பதற்கு வசதியாக நடுவில் இடம் செய்துகொண்டு, உள்ளமைந்த நான்கு மூலைகளுக்கும் மண் அறைந்து, வட்டாகாரமாக நடுவில் செய்வதில் மேல்புறம் சுற்றிக் குவியும்படி செய்து, நடுவில் 7, 8 அங்குலம் குறுக்களவு இருக்கும்படி பாத்திரங்கள் பொருத்தத் தக்கதுமாகவேனும் ஏற்படுத்தல்வேண்டும். தவிர, பாத்திரத்தை அடுப்பில் சேர்த்து, இடைவெளிக்கு மண்ணறைந்து, எரிக்கும் பாகங்களில் புகையும் தீயும் விறகிட்ட வழியாக மோதுண்டு வரு மாதலால், சித்திரத்தில் குறிப்பிட்டபடி, மேற்புறத்தின் பின் ஒரு மூலையில் கைநுழையும் துவாரம் உள் வட்டாகாரத்தை எட்டும்படி செய்தல் நலம். இத்தகை அடுப்பே மெழுக்குத் தைலம் முதலியன எரிப்பதற்குச் சிறந்தது.

இதனுலுறைக்கும் தீ, குப்பிச் சிந்தூர பாகங்களில் குறிப்பிட்ட காலவளவில் முடிக்கவும், நல்ல சிந்தூர நிறத்தைக் கொடுக்கவும் ஏதுடையது. சிறுமணலா யிருப்பின் சிறிது நேர மதிகமாக எரிக்கவேண்டிய ஆவசியகம் உண்டாம். அதனுன் முடியும் மருந்தின் நிறம் வேற்றுமைப்படும்.

### கங்காஜலக் குப்பிக்குப் பிரதி

புராஞ்சு தேசத்தினின்று வார்னிஸ் வரும் அடிமட்டமுள்ள கறுப்புப் புட்டியை யேனும் அல்லது கழுத்தினிடமாகத் தடையிட்ட கனத்த சோடா புட்டியையேனும் கங்காஜலக் குப்பி கிடைக்கப் பெறுதபோது அதற்குப் பிரதியாக உபயோகித்துக் கொள்ளலாம்.

### குப்பி எரிப்பில் பழுதுண்டாயின் செய்ய வேண்டுவது

சாதாரணமாக இரண்டாவது வாலுகா யந்திரத்தில் குப்பியில் மருந்திட்டுச் சட்டியின் கீழிறக்கி நேர் தீயிலெரிக்கும் பாகங்களிற் சிலசமயம் 1-1½ நாழிகைக்குள் குப்பியானது கீறல் விட்டுக் கந்தக முதலிய யாவும் பற்றி எரிவதுண்டு. அச்சமயம் காலந் தாழ்க்காமல் சட்டியைக் கீழிறக்கி, மணலைக் கொஞ்சங்

கொஞ்சமாக அப்புறப்படுத்தி, ஆறவிட்டுக் குப்பியினின் றெடுத்த மருந்தை மறுபடியும் அரைத்து முன் போல் வேறு குப்பியிலிட் டெரித்துப் பக்குவஞ்செய்க. இதனால் மருந்து சிறிது சிதறுமே யன்றிக் குணம் பெரும்பாலும் கெடாது.

சில சமயங்களில், புட்டியி னடிப்பாகம் வட்டமாகக் கீற லிட்டு, மருந்தோடு நெருப்பில் விழுந்து வீணாகும். ஆதலால் அடுப்பேற்றியது முதல் 1½ நாழிகை வரை அடிக்கடி குப்பியின் மேலேயே நாட்டமாக இருந்து நன்கு கவனித்தல் வேண்டும். பின்னர்ப் பயமின்றி எரிக்கலாம். ஏதும் கெடுதியும் உண்டாகா தென்றறிக.

### சிந்தூர இலக்கணம்

யாதா மொன்றைச் சிந்தூரஞ் செய்யப் புடமிடின் சிவந்த நிறம் காணப்படும் வரையில் புடமிடவேண்டும். சுவர்ணாதி லோகங்கள் சிவப்பினும் சத்திருக்க லாகாது. அங்ஙன மிருப் பின் அவ் ஔடதங்கள் அவைகட்குரிய பூரண பலனையுந் தரா.

### சிந்தூரம் எரிக்கும் சட்டி




சித்திர விளக்கம்

1. அடிச்சட்டி
2. மேல்சட்டி
3. அடிச்சட்டியின் வாய் விளிம்பு

ஒருமுழ அகலமும், ஒரு சாண் உயரமுமுள்ள இரண்டு சட்டிகளைக் குயவன் கைவழிக்கும் மண்ணினுல் அடி மட்டமாகவும், ஒரு சட்டியின் வாய்க்கு மற்றொன்று பொருந்துமாறு சித்திரத்தில் குறிப்பிட்டபடி வரம்புள்ளதாகவும் தனியாகச் சொல்லிச் செய்வித்த பாண்டங்களே அயச் சிந்தூரம், காந்தச் சிந்தூரம் முதலிய முறைகட்கு, வில்லைதட்டி எரிக்கும் சமயங்களில் ஏற்றவையாகும்.

## ஊது யந்திரம்




சித்திர விளக்கம்

1. பூமி மட்டம்
2. குடுவையைப் புதைத்தது
3. கழுத்தில் துவாரமிட்டுத் துருத்தியின் குழையைச் செருகியது.
4. அகலில் மூன்று துவாரமிட்டுக் குடுவையின் வாயை மூடியது.
5. சுற்றி மண்ணறைந்து உலைவாய் கட்டியது.

பூமியில் ஒரு குடுவையைப் புதைத்து அதன் கழுத்தில் துருத்தியின் குழை நுழையும்படியான துவாரம் செய்து செருகிச் சந்திற்கு மண்பூசித் துருத்தியைத் தரமட்டத்தின் மேல் ஊதுவதற்காக வசமாய் அமைத்துக்கொள்க.

பின்னர், குடுவையின் வாய்க்குப் பொருத்தமான ஒரு அகலின்மத்தியில் மூன்று சிறு துவாரமிட்டு வாயைமூடிச் சந்தில்லாமல் மண்பூசிச் சித்திரத்தில் குறிப்பிட்டபடி அதனைச் சுற்றி நாலு

ஐந்து அங்குல முயரமுள்ளதாய் மண்மேடிட்டிருக்க உலைவாய் கட்டவும். இங்ஙனம் செய்யப்பட்ட உலையே லோகங்களை உருக்கவும், சிந்தூரம் சுன்ன முதலியவை முடிக்கவும், ஊது யந்திரமாக உபயோகப்படும்.

## மெழுக்கு

இரச கந்தக பாஷாணாதிகளைத் தனியாக மூலிகை, ஜெயநீர் முதலியவைகளால் சுருக்குக் கொடுத்தேனும், அவை தம்மோடு கடைச் சரக்குகளைச் சேர்த்துத் தேன், முலைப்பால் முதலிய வற்றால் அரைத்தேனும் திரட்டப் பக்குவமான பசையுடையது மெழுக்காம்.

## உட்கொள்ளு முறை

அவ்வப் பாகங்களில் குறிப்பிட்ட அளவின்படி தேக வன்மை, மென்மைக் கிசைந்தவாறு முறையே மிகுத்தும் குறைத்தும் பனைவெட்டினை நன்கு பிசைந்து மெழுகுபோற் செய்து, சுண்டக் காய்ப் பிரமாணத்தி னடுவில் வைத்துருட்டிச் சாப்பிடவேண்டும். எவ்வளவு சிறந்த மெழுக்கேனும் மூன்றுநாள் ஆறுவேளை உண்ட பின் வாயில் நீர்ச்சுரப்பு, தொண்டை நோய் முதலிய தோஷங்களைச் செய்திருப்பின் நிறுத்துக. இல்லையேல் இரண்டொரு வேளை அதிகமாகக் கொள்க. அவ்வாறு கொண்ட சில தினங்கட்குப் பின் மீண்டும் அவசியமாக இருப்பின் மற்றொரு முறை சாப்பிடவேண்டும். பேதியாகக்கூடிய மெழுக்காயின் தினம் ஒரு வேளை மூன்று நாட்களுக்குமேல் உட்கொள்ளல் ஆகாது. சரீரத்துக்குத் துர்ப்பலம் செய்யுமெனத் தோன்றின் ஒருநாள் இடையிட்டுச் சாப்பிடுதல் வேண்டும்.

## மெழுக்கின் நாட்பட்ட குணம்

மெழுக்கைச் செய்தவுடனே பிணியாளிகட்குப் பிரயோகித்தல் கூடாது. இங்ஙனம் செய்யின் பல உயர்ந்த குணமுள்ள சிறந்த மெழுக்குகளும் நற்குணம் காட்டாமல் பிணிகளைக் கிளறிப் பலவித துர்க்குணங்களைக் காட்டும். ஆகலின் முடித்த மெழுக்கை ஆறுமாதம் காறும் கையாடாமல் வைத்திருந்து உபயோகிக்கவேண்டும். அப்போது மெழுக்கோடு ஒற்றுமையுற்ற எல்லாச் சரக்குகளும் நன்று உறவாகிக் கலந்து, வேகமுந் தணிந்து, ஒரே வழியாக நோயைப் பரிகரிக்கும்.

## ஷர்பத்

பழ ரசங்களாலும், கடைச் சரக்குக்களின் கஷாயம் அல்லது ஆவி நீரானும் சர்க்கரையேனும் கற்கண்டேனுங் கூட்டி மது பாக மாகக் காய்ச்சும் மருத்துமுறை ஷர்பத் எனப்பெறும்.

### பாகம்

காய்ச்சும்போது ஒரு துளி ஷர்பத்தை ஒரு கடுதாசியின் மேல் விடின், அது பரவாமலும் ஊறாமலும் இருக்கும் செவ்வி (பதம்) மதுபாகம் (தேன்பாகம்) எனக் கூறப்படும்.

### சர்க்கரையின் அளவு

புளிப்பான பழரசமாயின் அதனளவிற்குச் சர்க்கரை இரண் டல்லது மூன்று பங்கும், இனிப்புள்ள பழ ரசங்கட்குச் சமவள வும், உலர்ந்த வேர், பட்டை, பூ, இலை இவைகளின் கஷாயங்களு க்கு இரண்டு பங்கும் அவற்றின் ஆவி நீராயின் சமவளவாகவுஞ் சேர்த்துக் கொள்ளல் வேண்டு மென்க.

### கடைச் சரக்குகளின் கஷாய விதி

புதிய புஷ்பமாயின் ஸேக கஷாயமாகவும், உலர்ந்த புஷ்ப மாயின் சிநேக கஷாயமாகவும் வேர், பட்டை, வித்து முதலிய வையாக இருப்பின் பான கஷாய்மாகவும் காய்ச்சுதல் வேண்டும்.

### பாக முதிரின் பக்குவப் படுத்து முறை

ஒருமுறை காய்ச்சிய ஷர்பத்தானது மதுபாகத்திற்கு மிஞ் சித் தந்து பாகமாய் விடின் அதனோடு ஏதேனும் திரவரூபமான வஸ்தைச் சேர்த்து, காய்ச்சினால் அந்த ஷர்பத் சிலநாட்களில் கொஞ்சம் உறைந்து சர்க்கரை, கற்கண்டு, வெவ்வேறாகவும் ஜலம் வேறாகவும் பிரிந்து காட்டும். ஆகலின் அச் சமயங்களில் ஷர்பத் துக்கு ஏற்றவாறு ஏதேனு மொரு திரவியத்தை ஜலத்துடன் கலந் தேனும், வெறும் தண்ணீரையேனும் வாலையில் விட்டு ஆவி ரூபமாக இறக்கி, அதனைச் சிறிது சிறிதாகச் சேர்த்துக் குலுக்கிப் பதத்திற்குக் கொண்டுவரலாம். இந்து எத்தனை மாத மிருப்பி னும் கெடாது.

## தீ நீர்

வேர், பட்டை, விதை, இலை, புஷ்பம், மாமிசம், பழம், லவணம் இவற்றைத் தனியாக வேனும் அல்லது பாகத்திற்கு ஒத்தபடி கலப்பாக வேனும் நைய நறுக்கி, ஜலத்திலிட்டு, ஊற வைக்கவேண்டி யிருப்பின் ஊறவைத்து மட்கடத்தி லிட்டும், இன்றேல் அப்போதே மட்கூடத்தி லிட்டும், அதற்குப் பொருத்தமான வாலையைச் செருகிச் சீலை செய்து அடுப்பின்மீது வைத்தெரித்துக் கொண்டு, வாலையின் மேற்பாகத்தில் எப்போதுங் குளிர்ந்த வண்ண மிருக்க உடனுக்குடன் தண்ணீர் வார்த்துக் கொண்டுவந்து, ஆவி நீருக்காகச் செய்துள்ள குழையின் 'வழியாகச் சேகரிக்கும் நீர் தீநீர் எனக் கூறப்படும்.

### தீநீரின் அளவு

மட்கடத்தி லிட்ட ஜலத்தி னளவில் அரைப்பாகம் வரையில் சேகரிப்பதே நலம். அதற்கு மேலிடின் குணந் தராது. அன்றியும் தீநீர் புகை நாற்றங் கொள்ளின் கெடுதி விளைக்கும்.

### தீநீர் உட்கொளு மளவு

வாத பித்த கப தோஷங்கட்கு உண்ணும் ஆவி நீரை யெல்லாம் வேளைக்கு நான்கு மணி நேரத்திற் கொருமுறை ஒரு பலம் விகிதம் சாப்பிடவேண்டும். இரத்த விருத்தியின் நிமித்தம் உட்கொள்ளும் மாமிச வகைகள் சேர்ந்த ஆவிநீரை வேளைக்கு ஒரு பலம் விகிதம் தினம் முப்போது உண்ணல் வேண்டும்.

### இலவணத் தீநீர் (திராவகம்)

இலவணங்களின் கூட்டுக்களாலுண்டாகும் தீநீருக்குத் தண்ணீர் சேர்ப்ப தில்லையாகலின், இதன் தன்மை புளிப்பினுல் காரமுடையதாக இருக்கும். இதனுள் ஒருதுளியைத் தரையின் மேலாதல். துணியின் மேலாதல் விடின் பொங்கிக் கெடுக்கும். இதனை 5 முதல் 15 துளிவரை ஒரு மிணர் ஜலத்தில் வளாவிப் பிணிகட்குப் பிரயோகிக்கவேண்டும் தினம் இருவேளையாவது நான்கு மணி நேரத்திற் கொருமுறையாவது மொத்தம் 30 துளிகட்கு மேலிடாமல் தண்ணீருடன் கலந்து கொடுத்துவருதல் வேண்டும்.

## திராவக மேடுக்குமளவு

அவ்வவ் முறைகளிற் குறிப்பிட்ட இலவணங்களை நன்றாகப் பொடிசெய்து, மட்கடத்திலிட்டு வாலையை அமைத்து, சீலைசெய்து முன்போல் தீநீர் வாங்குவதில் எவ்வளவு கிடைக்கக்கூடுமோ அவ்வளவு நேரம் எரித்து வாங்க வேண்டும். முதலிலிறங்கும் திராவகத்தினும் முடிவிலிறங்குவதே சாலச் சிறந்தது. ஆகவே இவ்விரண்டினையு மொருங்கு கலந்துகொள்க.

## சீலையின் தன்மை

திராவகத்திற்காக வாலையைச் சரக்கிட்ட கடத்தினுடைய வாயினுள் செருகும்போது அழுத்தமாகச் செல்லக் கூடியதாகவும் சந்தில்லாது பொருந்தக் கூடியதாகவும் கவனித்துக் களிப்பு மண்ணும் சிறுமணலுங்கூட்டி அரைத்துப் பொருத்து வாய்க்குப் பூசி, பின்னர் வலுவாய் ஏழு சீலை செய்து நன்றாய் உலர்ந்தபின் தீயி லேற்றுக. இதனைக் கவனியாது அவசர நிமித்தம் சரியாய் வாலையைக் கடத்திற் செருகாமலும், செய்த சீலை உலராமலுமிருக்க, எரிக்கப்புகின் உள்ளுண்டாகும் ஆவியானது சந்தின் வழியாக வெளியாகி மண் சீலையை நனைத்துக் காரத்தால் வேகவைத்து அதன் வன்மையைக் குறைத்துத் திராவகமாகக் கூடிய ஆவியெல்லாம் இதன் வழியாகத் தானே சென்று எதிர் பார்க்கக் கூடிய திராவக அளவில் பெரும் நஷ்டத்தை யுண்டாக்கும். ஆதலின் பொறுமையோடு கவனமாகச் செய்தல் வேண்டும்.

## திராவக மிறங்காக் குறி

முற் கூறியபடி திராவக மிறங்கியபின், உப்புகள் படபடெனமட்கடத்திற்குள் வெடிக்க ஆரம்பிக்கின், உப்பில் சத்தில்லை யென்றும் அப்போது திராவகம் வெளிப்படா தென்றும் இனிதின் உணர்க.

## திராவக பாத்திரம்

திராவகங்களைக் * கல்கார்க்குச் சீசாவில் காற்றுப் போகாமல் அடைத்தல் வேண்டும். இன்றேல் காரங் குறைபடும்; சடை கார்க்காயின் மருந்தின் வேகத்தால வெந்து குழைந்து திராவகத்தில் விழுந்து கெடுத்துவிடும்.

---

* சீசாவின் வாய்க்கடைக்கு மூடி.

## தீநீர் திராவக வாலை




சித்திர விளக்கம்

1. கடம்
2. தீநீருக்கு இடப்பட்ட சரக்கு
3. வாலை
4. வாலையின் மேற்பாகத்தில் ஜலம் வெளியாகும் மேல் குழை.
5. குளிர்ந்த நீர் விடும் பாகம்
6. திராவகம் தங்கும் உள்ளிடம்
7. திராவகம் அல்லது தீநீர் வெளிப்படும் கீழ்க்குழை.

தீநீராகவேனும் திராவகமாகவேனும் பாகங்களில் குறிப்பிட்ட சரக்குகளை, ஒரு கடத்துள் இட்டு, அதற்குப் பொருந்தும் மண் வாலையை அமைத்து, சீலை செய்து, காய்ந்தபின் அடுப்பேற்றி, எரிக்கும்போது வாலையின் மேல் குழையை அடைத்து, குளிர்ந்த ஜலம் விட்டுவைக்க மேல் ஊற்றிய தண்ணீர் வெப்பமாகும்போதெல்லாம் குழையைத் திறந்து நீரை வெளியாக்கி, மீண்டும் குழையை அடைத்துப் புதிதாகக் குளிர்ந்த

நீர் விட்டு, எரிக்க. உட்புறமாக எழும் ஆவி, நீராக உள்ளிடத்தில் நிரம்பிக் கீழ்க்குழையின் வழியாகச் சொட்டும். அதனைத் தக்கபடி வசதியான பாண்டத்தில் சேகரிக்க. இனி, சுகந்த திரவியங்களைக் கட்டமுறைகளிருப்பின், கீழ்க் குழையின் நுனியில் கட்டுதல் வேண்டும்.

## மடக்கு வாலையந்திரம்




சித்திர விளக்கம்

மேற் கூறப்பட்ட இலக்கணங்களோடு 8 என்னும் விசேஷ உறுப்பை யுடையது.

முன்னரே வாலையையும் அடிப்பாண்டத்தையும் செய்முறைமையையும் கூறி இருக்கின்றனம். இனித் திராவகங்களாக இறக்கி அதனைக் காரமுண்டாக்குவதற்காக மடக்க வென்றால் கிரமமாக ஒருமுறை எவ்வளவு சரக்கினின்று திராவகம் எடுக்கப்பட்டதோ அவ்வளவு வேறு சரக்கை இடித்து அதனுடன் முன்னிறக்கிய திராவகத்தை விட்டு ஒரு கோலால் கிளறிக் கடத்தில் போட்டு வாலையை அமைத்துச் சீலைசெய்து எரிப்பதுண்டு. ஆனால் இச்சீலை உலருவதற்குள் திராவகமானது கடத்தில் நன்றாய் ஊறி, எரிக்கும்போது திராவகம் நஷ்டமடைவதுடன் சில சமயங்களில் கடத்திற்கே பழுது நேருகின்றது. ஆதலின் முற்கூறப்பட்ட வாலையிலேயே ஜலம் விடும் மேற்பாகத்தின் நடுவில் சித்திரத்தில் குறிப்பிட்டபடி ஜலம் தங்கும் அளவிற்கு மேல் உயரமிருக்கும் பொருட்டுக் குயவனிடஞ் சொல்லி ஒரு

குழை அமைத்துச் செய்வித்தல் நன்று. ஒரு முறை சரக்கிட்டுத் திராவகத்தைப் பெற்றுக்கொண்டு மீண்டும் அதே யளவாகச் சரக்கைக் கடத்திலிட்டு வாலையைச் செருகிச் சீலைசெய்து காய்ந்த பின் அடுப்பேற்றி எரிக்குந் தறுவாயில் நூதனமாக அமைக்கப் பெற்ற குழையின் மூலமாக முன்னிறக்கிய திராவகத்தைவிட, அடிக் கடத்திற்குச் சென்று சரக்குடன் கலக்கும்; பின்னர் அக் குழையைச் சடையால் (கார்க்கு) அடைத்து மேல் பாகத்தில் சலம் வார்த்து முறைப்படி எரிக்கத் திராவகம் விரைவில் சொட்ட வாரம்பிக்கும்.

இந்தத் திராவகத்தையும் முன்போல் அதேயளவு சரக்கில் விட்டு எரிக்கவும். இஃது அதிக காரமுடையதாக இருக்கும். இதனையே மடக்குத் திராவகம் என்பர். தவிர ஒருமுறையில் உப யோகப் படுத்திய அடிகடத்தை மறுமுறைக்கு உபயோகித்தல் ஆகாது. உப்பின் சத்தூறியதால் பலவீனப்பட்டிருக்கும் வாலையை மாத்திரம் ஒவ்வொரு முறையும் திராவகம் வாங்கியபின் அது மூழ்கும்படி ஜலத்தில் 3 மணிநேரத்திற்குக் குறையாமல் ஊறப் போட்டுக் கழுவி உலர்த்தி உபயோகப்படுத்தல் வேண்டும்.

## மடக்குத் திராவகத்தின் பயன்

இந்தத் திராவகமானது அதிக காரமுடையது. இதனைப் பிணி கட்கு உள்ளுக்குப் பிரயோகிக்க வேண்டின் சாதாரணமாக ஒரு முறையிற் கிடைக்குந் திராவகத்தினுடைய அளவில் மூன்றி லொரு பாகத்தினும் சிறிது குறைத்தே கொடுத்தல் வேண்டும். இத்தகைய திராவகங்களைப் பற்றி விசேடமாக ரோகங்கட்குச் சிகிச்சை கூறினர் இல்லை எனினும் குணத்திற் சிறிதும் குறையாது என்றறிக.

இனி, ஔஷத பாகங்களுக்காகக் கூறின் இரச கந்தக பாஷாண லோகங்களை இத்திராவகத்தால் நன்கு அரைத்து வில்லை செய்து உலர்த்தி எரித்தாவது, புடமிட்டாவது பாகத்திற் கிசைந்த வாறு பற்பச்சிந்தூரங்களாக்கி உபயோகப்படுத்தல் வேண்டுமென நூல்களில் கூறப்படும்.

## தீ நீர் வாலையந்திரம்




சித்திரவிளக்கம்

1. பித்தளை ஜோடுதவலை
2. கைப்பிடி
3. வாய்ப் புறத்தைச் சுற்றிக் கட்டிய கயிறும் அதனி னின்றும் கட்டித் தொங்கவிட்ட கயிறுகளும்
4. பிரம்பு வளையம்
5. வாயகன்ற மட்கலமும் அதன் வாய்ப்புறத்திற் கட்டிய குறுக்குக் கயிறுகளும்.
6. தீ நீராக்கப் படும் திரவியம்
7. புனலைப் போன்ற மேல்மூடி
8. வளையம் அமைப்பு
9. வளையத்தி னின்று தொங்கும் சுகந்த முடிச்சு
10. குளிர்ந்த நீர் விடப்பட்ட மேற்பாகம்

மாமிசத் தீநீர் முதலியவற்றை அதிக அளவாகச் செய்யவேண்டின், முதல் வாலையந்திரத்தைவிட இரண்டாவது மிகச்சிறந்தது

எளிதில் சேகரிக்கத் தக்கது. இதன் விளக்கம் வருமாறு:— இருபது அல்லது இருபத்தைந்து படி நீர் கொள்ளத்தக்க ஜோடு தவலை ஒன்றுக்கு ஈயம்பூசி, வாய்புறத்தைச் சுற்றிக் கயிறு கட்டி, அதனி னின்று மூன்று கயிறுகளை உரிபோல் தொங்க விட்டு அதனடியில் ஒரு பிரம்பு வளையத்தை முடிந்து, அதன் மீது ஒரு வாயகன்ற மட்கலத்தையாயினும், கோப்பையை யேனும் அமைத்து, மட்கலம் அல்லது கோப்பை வாய்ப்புறத்திற்கு ஜோடு தவலையின் வாய்ப்புறத்தைச் சுற்றிக் கயிறு கட்டுவது போலக் கட்டி, அதனினின்று குறுக்கே ஒன்றன் மீது ஒன்று செல்லும்படி இரண்டு கயிறுகளைக் கட்டுக.

இனி, பாகத்துக்காகச் சித்தஞ் செய்த சூப்பையாவது, தீநீராகக் கொள்ளவேண்டிய வேறு எதனையாவது, உரியில் தொங்கும் மட்கலத்திற்கு, நாலைந்து விரற்கடை கீழிருக்கும்படி அளந்து விடுக. பின்னர் ஜோடுதவலையின் வாய்க்குப் பொருத்த முள்ளதும் துவார மில்லாததும், கைப்பிடி யுள்ளதும், புனலைப் போல் வாயுள்ளதுமாகத் தகரத்தினால் ஒரு மூடி செய்வித்து, அதனடியில் மோதிரத்தைப் போல ஒரு தகர வளையத்தைப் பற்றவைத்து அதனடியில் பாகத்துக் கேற்றபடி அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, ஏலரிசி, பச்சைக் கருப்பூரம் முதலிய மண முள்ள பொருள்களை ஒரு சீலையில் தளர்ச்சியாக முடிந்து, கட்டுக.

ஜோடுதவலையை அடுப்பின்மீது ஏற்றி, அதன்மீது மூடியை, அதன் கீழே இருக்கும் சீலை முடிப்பு, உள்ளே தொங்கவிட்டிருக்கும் மட்கலத்தில் நடுவிற்கு ஒரு அங்குலம் மேல் நிற்கும்படி அமைத்து, வாய்ப்புறமாக உள்ளாவி வெளி போகாது ஒரு துணியைச் சுத்த ஜலத்தில் நனைத்துப் பிழிந்து, வாய்க்குச்சுற்றி, மூடியின் வாயில் நிறைய நீர் விட்டு, எரித்துக்கொண்டு வருக.

மேல் ஊற்றிய நீர் சூடானபோது ஓர் கறண்டியால் முகந்து வெளிப்படுத்திக் குளிர்ந்த நீரை விட்டுக்கொண்டு வருக. இங்ஙனம் அரை அல்லது முக்கால் மணிநேரம் எரித்தபின், மேல் நீர் முழுமையும் சிறிதும் தங்காமல் வெளியாக்கி, வாய்ப்புறத்தைச் சுற்றியுள்ள ஈரத் துணியையும் நீக்கி, மூடியின் கைப்பிடியால் தூக்கிப் பார்க்கின், விட்ட திரவியத்தின் நீரானது ஆவியாக மேல் கிளம்பி, முடிச்சின் வழியாகச் சொட்டி, மட்கலத்துள் தீநீர் நிரம்பியும் ஆவி மிகவும் வெப்பமாக மேலெழும்; அப்போது ஒரு நீண்ட

இரும்புக் கம்பியின் முனையைக் குறடுபோல் வளைத்து, பொறுமை யாக அக்குறட்டை மட்கலத்தில் வாயின்கண் குறுக்காகக் கட்டி யுள்ள கயிறுகளின் நடுவில் மாட்டித் தூக்கி வெளிக்குக் கொண்டு வந்து, வேறு பாத்திரத்தில் வடித்துக் கொள்க. மீண்டும் இவ்வா றே அளந்து விட்ட திரவியத்தின் அரைப்பாகம் கிடைக்கும் வரை தீநீர் வாங்குக.

இனி, திரவிய மிருந்திருப்பின் பாத்திரத்தைச் சுத்திகரித்து அதனையும் இவ்வாறே அளந்துவிட்டு, முன்போல் தீநீர் இறக்குக.

வேறு




சித்திரவிளக்கம்

1. குடுவை
2. புட்டி
3. துவாரம்
4. புட்டியின் கழுத்திற்கும் குடுவையின் கழுத்திற்கும் கம்பிக் கட்டியிருத்தல்
5. புட்டியின் வாய்ச்சடை (கார்க்கு)
6. திராவகம் தங்கும் உள்ளிடம்

சிற்றளவாகத் திராவகம் இறக்க வேண்டின், ஒரு குடுவையில் அரைப்பாகத்திற்கு மேற்படாது சரக்கைப் போட்டு, அதன் வாய்க்குப் பொருத்தமுள்ளதும், அடிமட்டமின்றி, உள் குவிந்திருப்பதுமான புட்டியின் நடுவில், ஒரு துவாரஞ் செய்து, குடுவையின் கழுத்தில் சொருகி, புட்டியின் கழுத்திற்கும் குடுவையின் கழுத்திற்கும் வலிவாகக் கம்பியால் கட்டி, இவ்விரண்டு பொருத்து வாய்க்குஞ் சீலை செய்து காய்ந்தபின் அடுப்பேற்றி எரிக்கும்போது, புட்டியின் வாயைச் சடையால் அடைத்து, ஒரு துணியைத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து, புட்டியின் மேல் சுற்றி வைக்க. மறுவலும் துணி வெப்பமாகும்போதெல்லாம் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து முன்போல் சுற்றுக.

இவ்வமயம், சரக்கினின்றெழும் ஆவி, புட்டிக்குள் ஏறி நீராக வடிந்து உள்ளிடத்தில் திராவகம் தங்கும். அதனைப் பக்குவமாகப் புட்டியின் சடையை மெல்லக் கழற்றி, புட்டியை அசையாது சாய்த்து, திராவகத்தைக் கொண்டபின் மீண்டும் முன்போல் போதிய திராவகம் கிடைக்கும் வரை எரித்து வாங்குக.

## இலிங்கரசம் எடுக்கும் முறை




சித்திரவிளக்கம்

1. சரக்கிட்ட அடிச்சட்டி
2. மேல்கவிழ்த்த சட்டி
3. சீலைமண்செய்த பாகம்

5 பலம் இலிங்கப் பொடியையும் 2 பலம் அயப்பொடியையும் 1 பலம் கல்சுண்ணும்பையும் ஒன்று சேர்த்தரைத்துச் சித்திரத்தில் குறிப்பிட்டபடி ஒரு சட்டியிலிட்டு, மேற்சட்டியின் உட்புறத்திற்கு நாமக் கட்டியையாவது சீமைச் சுண்ணத்தையாவது பூசி மூடிச் சீலைசெய்து, காய்ந்தபின் அடுப்பேற்றி இரண்டு ஜாமம் காடாக்கினியாக எரித்து, ஆறவிட்டு மறுநாள் சீலையைப் பிரித்து மேற் சட்டியிலும் அடிச் சட்டியிலு முள்ள இரசத்தைப் பன்றி மயிரினுல் சுத்தமாய்ச் சுரண்டி, எடுத்துப் பிழிய ரசம் மிகுதியாகக் கிடைக்கும். இதனையே வாலை ரசமென்பர்.

## சாம்பிராணிபூ எடுக்குமுறை



சித்திர விளக்கம்

1. கோப்பை
2. கடுதாசியினுல் தொப்பியைப்போல் செய்து ஒட்டியது.
3. சட்டியில் மணலிட்டுக் கோப்பை வைத்தது.

ஒரு கோப்பையில் 5 பலம் உயர்ந்த சாம்பிராணியைப் பொடி செய்துபோட்டு, மேலே கடுதாசியினுல் தொப்பியைப் போல் ஒருமுழ நீளம் செய்து, கோப்பையின் வாய்க்குச்செருகி, உட்புகை வெளிப்படாம லிருக்கும்படி, பசையாலொட்டிக் காய்ந்தபின் ஒரு அகன்ற சட்டியில் மணலை இரண்டு அங்குலம் கனதியாய்ப் போட்டுப் பரப்பி, அதன் மத்தியில் கோப்பையைவைத்து, அதன் விளிப்புவரையில் மணலைக் கொட்டிப் பரப்பி, அடுப்பேற்றித் தீபாக்கினியாக நான்கு ஜாமம் எரிக்கப் பதங்கம் வெண்மை நிறத்தோடுங் கூடிக் காரமுடையதாக மேற் கடுதாசித் தொப்பியின் உட் புறத்தில் பிடித்திருக்கும்.

## சாம்பிராணிப் பதங்கமும் தைலமும் எடுக்கும் முறை




சித்திர விளக்கம்

1. பெரிய கடம்
2. கடத்தினது அடிப் பாகத்தின் மத்தியில் மட்குழை வைத்திருப்பது.
3. கோப்பையும் அதனில் சலம் விட்டிருப்பதும்
4. சாம்பிராணிப் பொடியைக் குழையச் சுற்றிப் போட்டிருப்பது.
5. சலம்விட்டு மேல்வைத்த வேறு கடம்
6. பொருத்துவாய்

ஒரு கடத்தினது அடிப்பாகத்தின் மத்தியில் இரண்டு அங்குலம் உயரமுள்ள சிறு கற்களை அடுப்பைப் போல் வைத்தாயினும் அல்லது அதே யளவு உயரமுள்ள மட்குழையாயினும் வைத்து அதன்மீது ஒரு கோப்பையை அசையாமல் படியும்படி வைத்துக் குழையச் சுற்றிச் சாம்பிராணித் தூளைப் போட்டுப் பரப்பிக் கடத்தின் வாய்க்குச் சந்தில்லாமல் பொருந்தக் கூடிய மற்றொரு வேறு கடத்தைவைத்து அதில் நிறையக் குளிர்ந்தசலம் விட்டுப் பொருத்துவாய்க்கு மண்சீலை வலுவாகச் செய்து அடுப்பின்மீது ஏற்றிச் சாம்பிராணி தீப்பற்றி எரியாமல் புகையும் வண்ணமாகச் சிறுதீயில் 8 சாமம் எரிக்க, பதங்கமானது கோப்பையிலிட்ட சலத்தின்மீது மிதந்தும் தைலமானது சலத்தின் கீழுமாகக் காணும் மேல் கடத்தில் விட்ட சலமானது சூடாயின் சல

த்தை அகப்பைகொண்டு வெளியாக்கிச் சூடாறும் பொருட்டுக் குளிர்ந்த சலம் சேர்க்க தைலத்தையும் பதங்கத்தையும் எடுத்துக்கொண்ட பின்னர் சாம்பிராணிச் சிட்டத்தை நெருப்பின் மீது போட்டுப் பரீட்சிக்கப் புகைந்தால் மீண்டும் முன்போல எரிக்கத் தைலமும் பதங்கமும் கிடைக்கும்.

## வேறு




சித்திரவிளக்கம்

1. கோப்பை
2. துணிகட்டியது
3. மண்ணால் தடிப்பாகக் கட்டியது
4. அப்ரகத் தகட்டை அமைத்தது

சித்திரத்தில் குறிப்பிட்டபடி ஒரு கோப்பைக்குச் சல்லடைக் கண்ணுக்கு ஒப்பான துணியால் சிறிது தளர்ச்சியாகக் கட்டி ஒரு பலம் பளிங்கு சாம்பிராணியைப் பொடி செய்து போட்டுக் கோப்பையின் விளிம்பைச் சுற்றிக் கனதியாகக் களிப்பு மண்ணால் கட்டி அதன்மீது வாய்க்குப்பொருத்தமான அப்ரகத் தகட்டைவைத்துச் சீலைமண்செய்து சற்றுலரவைத்து அதன் மீது கரிநெருப்பிட்டு விசிறியால் விசிறிக்கொண்டிருக்கத் துணியின் அடியில் பதங்கம் சேரும். இங்ஙனமே கருப்பூரத்தினின்று பதங்கத்தையும் எண்ணெய் பதார்த்தத்தை மிகுதியாக வுடைய சிறு வித்துகளை இடித்துவைத்து தைலத்தையும் இக்கருவியைக் கொண்டு சேகரிக்கலாம்.

## கஷாய இலம்பகம்

### 1. சுகபேதி கஷாயம்

ரோஜா மொக்கு தோலா 1, பிஞ்சு கடுக்காய் தோலா 1, சோம்பு தோலா ½, அதிமதுரம் தோலா ½, நெல்லி வற்றல் தோலா ½, சுக்கு தோலா ¼, வெள்ளரிவிரை தோலா ¼.

இவை தம்மை யெல்லாம் ஒன்றிரண்டாய் நறுக்கி, ஒரு பாண்டத்திலிட்டு, * அரைப்படி தண்ணீர்விட்டு, அரையாழாக் காகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி, அதனோடு சீமை இந்துப்பு அல்லது நாட்டு இந்துப்பு இவை யிரண்டனுள் ஒன்றைத் தேகநிலைமைக் கேற்றபடி ¾ அல்லது 1 தோலா அளவு சேர்த்துக் கலக்கிச் சாப்பிட ஐந்தாறு முறை பேதியாகும். தேகம் உஷ்ணப்படாது, பேதி நின்றபின் வேண்டிய உணவைக் கொள்ளலாம்.

### 2. சுரக் கஷாயம் (ஷடங்கம்)

நிலவேம்பு, கோரைக்கிழங்கு, கடுகுரோகணி, பற்பாடகம், சீந்திற் கொடி, வேப்பம் பட்டை வகைக்கு தோலா 1.

இவையிற்றை ½ படி ஜலத்திலிடித்துப்போட்டு, 2 மணி நேரம் ஊறின பின்பு § ½ ஆழாக்குக் குறையாமற் காய்ச்சி, அதனை மூன்று வேளைக்குப் பகுத்து 4 மணி நேரத்துக்குக் கொரு முறை உட்கொள்ளக் குளிர்சுரம் முதல் எல்லாவகைக் காய்ச்சல்களும் குணப்படும்.

இதனோடு, சுரத்தைப் பரிகரிக்கத் தக்க ஏதேனும் ஒரு சிந்தூரத்தையேனும், மாத்திரையையேனும் உட்கொள்ளின் நோய் விரைவில் நீங்கிச் சுகம் உண்டாகும்.

---

* 60 தோலா (ரூபாய்) எடை ஜலம் கொள்ளக்கூடிய அளவு. இஃது ஆங்கிலேய பெய்தலளவையில் ஏறத்தாழ 24 அவுன்ஸ் கொண்டது.

§ 7½ தோலா அல்லது 3 அவுன்ஸ் அளவை யுடையது.

### 3. சுரக் கஷாயம்.

தூதுவளை ஈர்க்கு, பூனைக்காய்ஞ்சொறி வேர், சீந்தில்கொடி, பற்பாடகம், நொச்சி ஈர்க்கு, பேராமுட்டிவேர், சிற்றாமுட்டிவேர், கடுக்காய்த்தோல் வகைக்குப் பலம் ¼.

இவைகளை ஒன்றிரண்டா யிடித்து ½ படி ஜலத்தில் போட்டு 2 மணி நேரம் ஊறவைத்து ½ ஆழாக்காகச் சுண்டக் காய்ச்சித் தினம் இருவேளையாகப் பகுத்துச் சாப்பிடுக. இப்படி 3 நாள் சாப்பிட எத்தகைய நாட்பட்ட காய்ச்சலும் பரிகாரமாகும்.

குறிப்பு:—சுரத்தோடு பேதியாயின் கடுக்காய்த்தோலை நீக்கிக் கஷாயஞ் செய்துகொள்க.

### 4. சுரக் கஷாயம்

(பித்தச்சுரம் மிகுந்திருப்பின்)

பூனைக்காய்ஞ்சொறி வேர், வில்வவேர், விலாமிச்சு வேர், நெருஞ்சிவேர், நன்னாரிவேர், அதிமதுரம், சோம்பு, நெற்பொரி, திராக்ஷை, இருப்பைப்பூ, சுக்கு வகைக்கு வராகனெடை **2**.

இவையிற்றை ஒன்றிரண்டாய் நறுக்கி, ½ படி ஜலத்தில் போட்டு 2 மணிநேரம் ஊறின பின் ½ ஆழாக்காகக் காய்ச்சி, வடிகட்டி, அதனை இருவேளையாக 3 நாள் பருக, குளிர்சுரம், நாவறட்சி, பித்த மிகுதி முதலியவை குணமாகும்.

### 5. வாதசுரக் கஷாயம்

கொட்டைக் கரந்தைப்பூ வராகனெடை 2½, சுக்கு வராகனெடை 4, கழற்சிப்பருப்பு வராகனெடை 2½, துளசிவேர் வராகனெடை **2½**.

இவைகளை நறுக்கி ¼ படி ஜலத்தில் போட்டுச் சிறிதுநேரம் ஊறவைத்து அரைவீசம் படியாகக் காய்ச்சி, வடிகட்டிச் சாப்பிடுக. இப்படித் தினம் இருவேளை மூன்றுநாளுட்கொள்ள சுரம், தேகக்கடுப்பு, குடைச்சல், குளிர், கணுக்களின் நோய், பிடிப்பு முதலியன நீங்கும்.

### 6. வேறு

சுக்கு, மிளகு, பிரப்பங்கிழங்கு, பறங்கிச்சக்கை, வாய்விளங்கம், கடகரோகணி வகைக்குத் தோலா 1.

இவையிற்றை நறுக்கி ½ படி ஜலத்தில் போட்டு ½ ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி, வடித்து இருவேளையாகப் பகுத்துக் சாப்பிடுக. இங்ஙனம் 3 நாள் சாப்பிட முற்கூறப்பட்ட உபத்திரவத்தோடுங்கூடிய சுரம் குணப்படும்.

### 7. பித்தசுரக் கஷாயம்

பேய்ப்புடல், கிராம்பு, சுக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கொத்தமல்லி, வகைக்குத் தோலா 1.

இவைதம்மை ½ படி ஜலத்தில் நறுக்கிப் போட்டு 2 மணி நேரம் ஊறவைத்து ½ ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடித்து அதனை இருவேளையாகப் பங்கிட்டுச் சாப்பிடுக. இப்படி 3நாள் உட்கொள்ளப் பித்தசுரம் நீங்கும்.

### 8. உஷ்ணசுரக் கஷாயம்

நன்னாரிவேர், பறங்கிச்சக்கை, சுக்கு, தாமரைப்பூ, சீரகம், சோம்பு வகைக்குத் தோலா 1.

இவைகளுள் கடை மூன்று சரக்கையும் பொன்மேனியாக வறுத்து, மற்றவற்றை ஒன்றிரண்டாய் இடித்து, ½ படி ஜலத்தில் போட்டு, ½ ஆழாக்காகச் சுண்டக் காய்ச்சி, வடித்துத் தினம் அதனை இருவேளையாகச் சாப்பிடுக. இவ்வாறு 3 நாள் அல்லது 7 நாள் சாப்பிடக் குணமாகும்.

### 9. சர்வசுரக் கஷாயம்

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், அதிமதுரம், வெட்பாலையரிசி, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், சந்தனத்தூள், உஸ்தகதோஷ், பனப்ஷா, சீர்மை சாமந்திப்பூ, சிற்றரத்தை, பேரரத்தை, பூனைக்காய்ஞ்சொறி வேர், கண்டங்கத்திரி வேர் வகைக்கு வராகனெடை 1.

இவைகளை நறுக்கி, ½ படி ஜலத்தில் போட்டு, 2 மணிநேரம் ஊறினபின் ½ ஆழாக்காகச் சுண்டக் காய்ச்சி வடித்து அதனை

2 வேளையாகப் பகுத்து 3 நாள் பருகத் தனிச்சுரம், குளிர் சுரம், முறைச்சுரம், முதலியன தீரும்.

### 10. சுரக் கஷாயம்
(மலபந்த மிருப்பின்)

மேன்முறையிற் குறிப்பிட்ட சரக்குகளுடன் சிவதைவேர், வாய்விளங்கல், கடகரோகணி, வகைக்கு வராகனெடை ½ அல்லது 1 தேகவன்மைக்கு இசைந்தவண்ணம் சேர்த்து, முன்போல் கஷாயமிட்டு, மல சோதனையாகும் வரையில் கொடுக்கத் தீரும்.

பின்னர் இதனை நிறுத்தி முற்குறிப்பிட்ட தனிச்சுரக் கஷாயத்தைக் கொடுக்க. இது சீதளமிகுந்த சுரத்திற்கே சிறந்தது.

### 11. சுரக் கஷாயம்
(மலபந்த மிருப்பின்)

மேலே 9 ஆவது முறையிற் குறிப்பிட்ட சரக்குகளோடு ரோஜாமொக்கு, நிலஆவாரை, வகைக்கு வராகனெடை 1 அல்லது தேகவன்மைக்கு ஏற்றபடி சிறிது அதிகப்படுத்திச் சேர்த்து முன்போல் கஷாயமிட்டு மலசோதனை யாகும் வரையில் பருகுக. பின்னர் இதனை நிறுத்தித் தனிக்கஷாயத்தைக் கொடுத்துக் கொண்டுவர சுரம் நிவர்த்தியாகும். இது குளிர் சம்பந்தமில்லாத சுரங்கட்கே உபயோகமானது.

### 12. கபசுரக் கஷாயம்

செம்மரத்தூள், பற்பாடகம், கோரைக்கிழங்கு, குருவிவேர் வேட்டிவேர், சுக்கு வகைக்குத் தோலா 1 இவைகளை நறுக்கி ½ படி ஜலத்தில் போட்டு, இரண்டுமணி நேரம் ஊறவைத்து ½ ஆழாக்காகக் காய்ச்சி அதனைத் தின மிருவேளை 3 நாள் கொள்ளத் தீரும்.

### 13. சுரக் கஷாயம்
(கை, கால் வீங்கி மலசலங் கட்டி யிருப்பின்)

பொன்மேனியாக வறுத்த கருஞ் சீரகம், மிளகு, கரசணுங் கண்ணி வகைக்குப் பலம் ¼ இவற்றுள் ½ படி ஜலம்விட்டு அதில்

சுக்கு, சிற்றரத்தை, கடுக்காய்த்தோல், வகைக்குப் பலம் ½ நறுக்கிப்போட்டு ½ ஆழாக்காகக் காய்ச்சி, வடித்து, இருவேளையாகப் பகுத்து உட்கொள்ள மலங்கழியும்; இன்றேல், மறுமுறை காய்ச்சுங் கஷாயத்தில் ஒரு வராகனெடை இலவங்கப் பொடியையும் இரண்டு சிட்டிகை பொரித்த வெங்காரத்தையும் போட்டுக் கொடுக்கச் சிறுநீர் தாராளமாக இறங்கி, வீக்கம் வாடும்.

## 14. தோந்தசுரக் கஷாயம்

ஆடாதோடை தேர், நிலவேம்பு, சீந்தில்கொடி, பற்பாடகம், கண்டங்கத்தரிவேர், சுக்கு, பேய்ப்புடல், ஏலக்காய், முக்காவேளைவேர் வகைக்குப்பலம் ¼, திராட்சைப்பழம் 10.

இவைதம்மை யிடித்து ½ படி ஜலத்தில் போட்டு அரை ஆழாக்காகக் காய்ச்சி அதனை இருவேளை உட்கொள்ளச் சுரம், இருமல், வீக்கம், விக்கல், முதலியவை குணமாகும். வீக்க மதிகரித்திருப்பினும் சுரம் அதிக நாட்பட்டதாக இருப்பினும் இதனோடு கண்டுபாரங்கியையும் சேர்த்துக் கொள்க. மலச்சிக்கலிருப்பின் நெற்பொரியைச் சேர்த்துக் கொள்க.

## 15. சுரக் கஷாயம்

நிலவேம்பு பலம் ½ சிற்றரத்தை பலம் ¼ இவை யிரண்டையும் ஒருமிக்க இடித்து ½ படி தண்ணீரில் போட்டு இரண்டுமணிநேரம் ஊறவைத்து ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடித்து அதனை ஆறுவேளையாகப் பங்கிட்டு நான்குமணி நேரத்திற்கு ஒருமுறை சாப்பிட்டுக்கொண்டு வர 3 நாளில் தருணச்சுரம், குளிர்ச்சுரம் முதலியவைகளும் அதனு லுண்டான கைகால் அசதி, நோய் முதலியவும் நீங்கிக் குணமாகும். இக்கஷாயம் கருப்பிணிமுதல் யாவருக்கும் பயமின்றி உபயோகிக்கத்தக்கது.

## 16. இருமல் கஷாயம்

சிற்றரத்தை, பேர்ச்சங்காய், சுக்கு, அதிமதுரம் வகைக்கு ¼ பலமாக நறுக்கி ஒரு சீலையில் தளர்ச்சியாய் முடிந்து அதனைக் கால்படி பசுவின் பாலில்போட்டு அதனோடு ¼ படி தண்ணீருங்கூட்டிச் சிறுதீயில் எரித்து, விட்ட தண்ணீர் சுண்டக் கவனித்துவடித்து ½ பலம் சீனாகற்கண்டைப் பொடித்துப்போட்டுக்

கலக்கிச் சாப்பிடுக. இங்ஙனம் தினம் இருமுறை 5 அல்லது 7 நாள் சாப்பிட நாட்சென்ற இருமலாயினும் உடனே தீரும்.

## 17. இரத்தக்காசத்திற்குக் கஷாயம்

சூரத்துக்கடுக்காய், காட்டாத்திப்பூ, திராட்சை, மாசிக்காய் வகைக்குச் கழஞ்சி விதம் நறுக்கி ஒரு பழகிய புதுசட்டியில் போட்டுக் கால்படி ஜலம்விட்டு அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி வைத்துக்கொள்க.

பின்பு எருமைச் சாணத்தை மெல்லிய சீலையில் பிழிந்து எடுத்த ஜலத்தோடு உயர்ந்த பன்னீரைச் சமமாகக்கலந்து முன் காய்ச்சிய கஷாயம் ஏழு பங்கிற்குப் பின் சித்தப்படுத்தியது ஒன்றாக இருக்கும்படி கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு அவுன்ஸ் (சற்றேறக்குறைய ¾ பலம்) விகிதம் தினம் 3 வேளை 3 நாள் கொடுக்க எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாக்கின இரத்தவாந்தி இருமலாயினும் குணமாகும்.

குறிப்பு: இக் கஷாயத்தைப் பருகும்போது அடியிற் குறிப்பிட்டவைகளில் ஏதேனுமொன்றைச் சிறிது நெய்யுடன் மத்தித்துச் சாப்பிட்டு வருதல் அளவற்ற குணத்தை எதிர்ப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தம்முள் எக்வின் | 8 குன்றியிலிருந்து | | 24 குன்றிவரையினும் | |
| ஈஸ்வர்த் பார்தங் | ... | ... | ... | ... |
| * காருபா | 1 | ... | 4 | ... |
| பட்டுத்துணிச்சாம்பல் | 8 | ... | 24 | ... |
| பூங்காவி | 24 | ... | 48 | ... |
| அகாகியா | 8 | ... | 24 | ... |
| காசிக்கட்டி | 24 | ... | 48 | ... |

## 18. விக்கல் கஷாயம்

பசுமுன்னை இலை, பச்சைப் பயிறு, நெற்பொரி, வில்வ இலை வகைக்குப் பலம் 1 ஏலம் பலம் ¼. இவையிற்றை ஒரு பழகிய புது சட்டியில், இலை வகைகளை அரிந்தும், ஏலத்தை நுணுக்கியும் போட்டு, ஒரு படி ஜலம் விட்டு, அரைக்கால் படியாகச்

* காருபாவைமாத்திரம் பன்னீரில் 7 நாள் அரைத்து உலர்த்தியும் மற்றவைகளை அரைத்தும் உபயோகப் படுத்தல் கிரமம்.

சுண்டக் காய்ச்சி, வடிகட்டி ஆறுமணி நேரத்துக் கொருமுறை முக்கால் பலம் கியாழம் கொடுத்து வர விக்கல் நீங்கும்.

## 19. சுரக் கஷாயம்

(கருப்பிணிகட்கு)

சீர்மை நிலவேம்பு, அதிமதுரம், சந்தனத்தூள், கோரைக் கிழங்கு, ஆடா தோடை, சீந்தில்கொடி, விஷ்ணுகிராந்தி, உஷ்தக தோஷ், சீர்மை சாமந்திப்பூ வகைக்குப் பலம் $\frac{1}{4}$.

இவையிற்றை ஒன்றிரண்டா யிடித்து, $\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு 2 மணிநேரம் ஊறினபின் அரைக்காற்படியாகச் காய்ச் சித் தினமிருவேளை 3 நாள் கொள்ளச் சுரம் நீங்கும்.

## 20. சுரக் கஷாயம்

(அதிதாகமிருப்பின்)

கோரைக் கிழங்கு, அக்கரகாரம், அதிமதுரம், கோஷ்டம், ஏலம், கிராம்பு, சித்திரமூலம், சுக்கு, மிளகு, திப்பலி, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், வெட்பாலையரிசி, சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு வராகனெடை $2\frac{1}{2}$.

மிளகை ஒரு புதுசட்டியில் போட்டு வறுத்துச், சாம்பலாக்கி, இருவித சீரகங்களையும் போட்டு, வெடிக்கவிட்டு, ஒருபடி ஜலம் விட்டு, மற்றச் சரக்குகளை ஒன்றிரண்டாக நறுக்கிப்போட்டு அரைக்காற்படியாகச் சுண்டக் காய்ச்சி,வடிகட்டி, அதனைத் தினம் 3 வேளை 3 நாள் கொள்ள, சுரம் 64, தோஷம் 7, தாகம் முதலிய யாவும் நீங்கிக் குணமாகும்.

## 21. இருமல் கஷாயம்

உஷ்தகதோஷ் வராகனெடை 1, அதிமதுரம் வராக னெடை 1, ஜூபா வராகனெடை $\frac{1}{2}$, நறுவிளம்பிஞ்சு (உலர்ந் தது) 5, அத்திப்பழம் 2.

இவைகளை ஒன்றிரண்டாய்த் தட்டிப்போட்டு $\frac{1}{2}$ படி ஜலம் விட்டு அரைக்காற்படியாகச் சுண்டக்காய்ச்சி, வடிகட்டித் தினம் 2 வேளை 3 நாள் கொள்ள எவ்வித இருமலும் குணமாகும்.

## 22. பித்த வாந்திக்குக் கஷாயம்

ஏலக்காய் தோலா $\frac{1}{4}$, திராட்சைப்பழம் தோலா $\frac{1}{4}$, சோம்பு தோலா 1

இவையிற்றை நறுக்கி $\frac{1}{4}$ படி ஜலத்தில் போட்டு, அரை ஆழாக்காகச் சுண்டக் காய்ச்சி வடித்து, சுண்ணும்பு நீங்கிய இஞ்சி ரசம் ஒரு காசெடை, புதினரசம் ஒரு காசெடை, தேன் ஒரு காசெடை விட்டுக் கலக்கி நான்கு பாகமாகப் பகிர்ந்து 2 மணி நேரத்திற்கு ஒரு முறையாக வாந்தி குணமாகிற வரையில் கொள்க.

## 23. சந்தனக் கஷாயம்

(பித்தத்திற்கு)

சந்தனத்தூள், குருவிவேர், வெட்பாலையரிசி, கோரைக் கிழங்கு, சுக்கு வகைக்குத் தோலா 1. இவைகளை நறுக்கி $\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு அரைக்காற் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, சர்க்கரை $1\frac{1}{4}$ பலங் போட்டுத் தினமிருவேளை பருகுக.

இதனல் நீர்க்கடுப்பு, சுரம், பித்தம், தாகம், காமாலை முதலியவைகள் நீங்கும்.

## 24. காமாலைக்குக் கஷாயம்

கீழ்வாய்நெல்லி, கரசனுங்கண்ணி, பேய்ப்புடல், வெண் மிளகு, சோம்பு, வில்வவேர், வகைக்கு வராகனெடை $2\frac{1}{2}$.

இவையிற்றை $\frac{1}{2}$ படி ஜலத்தில் நறுக்கிப் போட்டு அரை ஆழாக்காகக் காய்ச்சி வடிகட்டித் தினம் 3 வேளை மூன்றுநாள் பருகுக. இதனேடு சிந்தூர வகுப்பில் குறிப்பிட்ட திருமூர்த்தி, காந்தம், தசமுக வுதயாக்கினி சிந்தூரம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொடுப்பது நலம். இதனல் பாண்டு, சோகை, காமாலை முதலியன தீவிரத்தில் குணப்படும்.

## 25. பித்த கஷாயம்

விலாமிச்சுவேர், வெட்டிவேர், சீந்தில்கொடி, விரையில்லாத திராட்சை, வில்வவேர் அல்லது வில்வவோடு, நன்னரிவேர் வகைக்குப் பலம் $\frac{1}{4}$, கருவேப்பிலை ஈர்க்கு, ஏலக்காய்த் தோல் வகைக்குப் பலம் $\frac{1}{8}$ (அரைக்கால்) ஆல்பகராபழம் 3.

இவையிற்றை $\frac{1}{2}$ படி ஜலத்தில் நறுக்கிப் போட்டு, அரைக் காற்படியாகக் காய்ச்சி வடித்து, தினத்திற்கு 3 வேளை 3 நாள் பருகுக. பித்த அழலை, எரிச்சல், மயக்கம், தேகக்குத்தல், வாந்தி முதலியன தீரும்.

## 26. வீக்கத்திற்கு கஷாயம்

(கருப்பிணிகட்குக் காணும் வீக்கத்திற்கு)

கண்டதிப்பிலி, அதிமதுரம், சோம்பு, காவஸ்பான் இலை வகைக்குத் தோலா 1. இவைகளை நறுக்கி $\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு, அரைக்காற்படியாகக் காய்ச்சி வடிகட்டித், தினம் 3 வேளை 3 நாள் சாப்பிட மல ஜலங்கழிந்து வீக்கந் தீரும்.

## 27. ஜன்னி கஷாயம்

(பிரசவித்த ஸ்த்ரீகட்கு ஜன்னி, இசிவு காணின்)

கண்டங் கத்திரிசமூலம் பலம் 1, உத்தாமணி வேர் பலம் 1, சதகுப்பை பலம் 1, சித்திரமூலம் பலம் $\frac{1}{2}$, முக்காவேளை பலம் $\frac{1}{4}$.

இவைகளை நறுக்கி ஒரு பாண்டத்திலிட்டு ஒரு படி சிறுநீர் விட்டு, அரை ஆழாக்காய் காய்ச்சி, வடிகட்டிக் குடிக்கும்போது தாங்கக்கூடிய சூட்டுடன் 1 வராகனெடை சதகுப்பையை அரைத்துக் கலக்கி, தினம் இருவேளை குடிக்கத் தீரும்.

## 28. வேறு

தூதுவளை, பிராயன் இலை, சுக்கு, திப்பிலி, மிளகு, பொன் குருன்னி, இவையிற்றைச் சம எடையாக ஒரு மிக்க இடித்துப் பிட்டு அவித்து, சாறு பிழிந்து தினமிருவேளையாக வேளைக்கு ஒரு பலமாகக்கொள்க.

## 29. சூதகத்தை உடைக்கக் கஷாயம்

ஓமம், சதகுப்பை, மூங்கிலிலை, மாவிலிங்கம் பட்டை, பறங்கிச்சக்கை, சுக்கு, திப்பிலி, சித்திரமூலம்வேர், சித்திரமூல வேர்ப் பட்டை, கருஞ்சீரகம், இவைகள் வகைக்கு வராகனெடை 1.

இவை தம்மை நறுக்கி $\frac{1}{2}$ படி ஜலம் விட்டு, அரைக்காற்படியாகச் சுண்டக்காய்ச்சி, தினமொருவேளை 3 நாள் சாப்பிடுவதற்குள் மாதவிலக்கு ஒழுங்காக வரும்.

## 30. பிரசவித்தவர்கட்கு அழுக்கு வெளிப்படக் கஷாயம்

இரண்டரைப் பலம் வரமுள்ளியைப் பொன்மேனியாகச் சிலங்கைச் சப்தம் உண்டாக வறுத்து அதில் கருஞ்சீரகத்தை ஒரு பலமிட்டு வெடிக்குந்தறுவாயில் இரண்டுபடிஜலமும் இரண்டரைப்

பலம் பின்வெட்டையும் சேர்த்து ½ படியாகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ¼ படி கஷாயத்தில் கோதுமை ரொட்டியை ஊறப் போட்டுச் சாப்பிட்டு மிகுதியுள்ள கஷாயத்தைக் குடிக்க. இங்ஙனம் இரண்டு மூன்று வேளை சாப்பிட்டுக் கொண்டுவர அழுக்குக் காணும்.

குறிப்பு:—பிறந்த குழந்தைக்குக் கருஞ் செவ்வாபு இல்லா திருப்பின் மேற்கூறிய கஷாயத்தில் ஒரு தோலா கறிமஞ்சளைத் தூள் செய்து போட்டுக் காய்ச்சி கொடுத்தல் பெருங்குணத்தைக் கொடுக்கக்கூடியது.

### 31. குளிகுளித்தவர்கட்கு அழுக்கு வெளிப்படக் கஷாயம்

சீர்மை சாமந்திப்பூ, சன்னலவங்கப்பட்டை வகைக்குப் பலம் ½. இவைகளை நறுக்கி அரைபடி ஜலத்தில் போட்டு அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சி, தினமிருவேளை உட்கொள்க. அழுக்குச் சுத்தமாக வெளிப்பட்டபின் கஷாயத்தை நிறுத்திக்கொள்க.

### 32. நீரெரிச்சலுக்குக் கஷாயம்

வால்மிளகு, ஏலம், தணியா, வகைக்குப் பலம் ½ இவையிற்றை இடித்து ½ படி இளநீரில் போட்டு, அரைக்காற் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, ½ பலம் பனங்கற்கண்டு சேர்த்துக் கலக்கி வடிகட்டி, இரண்டு வேளையாகப் பருக உஷ்ணம் தணியும்; தாகம் அடங்கும்; நீர்த்தாரையின் எரிச்சல் முழுவதும் குணமாகும்.

### 33. நீரிறங்கக் கஷாயம்

வெள்ளைச்சார் வேளைச்சாறு வராகனெடை 9 பசும்பால் ரூபா எடை 12 இவ்விரண்டையும் கலக்கி வடிகட்டிக் குடிக்கப் பத்து நிமிஷத்திற்குள் நீர் தாராளமாக இறங்கும்.

### 34. பெண்களுக்குப் பால்பெருகக் கஷாயம்

தண்ணீர்மிட்டான் கிழங்கின் மேல் தோலையும் உள் நரம்பையும் நீக்கி, இரும்புபடாமல் அரைத்தேனும் இடித்துப் பிழிந்தேனும் கொண்ட அரைக்கால்படி இரசத்தோடு அப்பட்டமாகக் கறந்த அரைக்கால்படி பசுவின்பாலிற் கலந்து சூடு போகாமல்

உடனே பருகுக. இவ்வாறு மூன்றுநாள் காலை வேளைகளில் பருகிப் பாலன்னந் தவிர வேறொன்றும் உண்ணாமல் பத்தியம் இருப்பின் அமிதமாகப் பால் சுரக்கும்.

### 35. பாண்டுவுக்குக் கஷாயம்

வெள்ளைச் சாட்டரணை சமூலம், வேப்பம்பட்டை, பேய்ப்புடல், சுக்கு, கடகரோகணி, சீந்தில்கொடி, மரமஞ்சள், கடுக்காய்த் தோல் வகைக்குப் பலம் ¼ இவைகளை ஒன்றிரண்டாயிடித்து ½ படி ஜலத்தில் போட்டு இரண்டு மணிநேரம் ஊறவைத்து அரை ஆழாக்காகச் சுண்ட எரித்துப் பிசைந்து வடிகட்டித் தினம் ஒரு வேளையாக 5 நாள் கொடுக்க ஜ்வரம், பேதி, காசம், வீக்கம், மயக்கம் முதலிய தோஷத்தோடு போராடிக் கொண்டிருக்கும் பாண்டு ரோக மெனினும் குணமாகும். இந்தக் கஷாயத்தைக் கொடுக்கும்போது இந்நூலில் கூறப்பட்டுள்ள தசமுக உதயாக்கினிச் சிந்தூரம், காந்தச் சிந்தூரம் முதலியனவற்றில் ஏதேனு மொன்றைத் தினம் இருவேளை கொடுத்துப்பாலன்னம் தவிர யாதொன்றையும் புசியாது பத்தியம் வைத்திடில் வியாதி எவ்வளவு கொடிய நிலைமையி லிருப்பினும் குணமாகும் என்பதில் சந்தேகம் சிறிதும் வேண்டுவதில்லை.

### 36. சுரச கஷாயம்

(அதிநீருக்கு)

ஐவன இலையை நன்கு அரைத்து, ஒருமணிப் புன்கங்காய்ப் பிரமாணத்தைக் காற்படி பசும்பாலில் கலக்கி, இரண்டு மூன்று முறை வடிகட்டித் தினமிருமுறை சாப்பிட ஆறுவேளைக்குள் அதிநீர்வருதல் நீங்கிக் குணமுண்டாகும். நீர் இயல்பாகவரும் வரை கஷாயம் கொள்க. பத்தியம் பாலன்னம் தவிர வேறொன்றும் உட்கொள்ளல் கூடாது.

### 37. விரணப்பிரக்ஷாளன கஷாயம்

(மேகவிரணம் அலம்புகிறதற்கு)

பெருங்கடுக்காய் பதினைந்தைத் துகள் செய்து 1½படி ஜலத்திலிட்டு, ¾ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து, ஒரு கல்வத்தில் 3 வராகனெடை கருப்பூரம், 3 வராகனெடை துருசு இவைகளைப் போட்டு, கஷாயத்தினாலேயே நன்றாக அரைத்து, மீண்டும் அத

னைக் கஷாயத்தில் கரைத்து வைத்துக் கொள்க. விரணமிருக்கும் இடத்தில் இக்கஷாயத்தைச் சிறிது சிறிதாக ¾ படியையும் விட்டு வருக. இங்ஙனம் செய்வதில் கஷாயம் சேதமாகாதபடி விரண மிருக்கும் இடத்தின்கீழ் ஒரு * பேசின் அல்லது சட்டியையைவைத்து பிடித்துக்கொள்க. இப்படிச் சேகரித்த கஷாயத்தை மறுவலும் 6 மணிநேரம் பொறுத்து ஒருமுறை விட்டுவருக. இவ்வாறே ஏழுநாள் தினம் மூன்று வேளைக்குக் குறையாமல் உபயோகித்து வர, கிருமிகளுள்ள விரணங்களும், எலும்பைப் பற்றிய மஹா விர ணங்களும் குணமாகும்.

## 38. வேது கஷாயம்

இரண்டுபிடி உத்தாமணியிலையும் இரண்டுபிடி தும்பையிலை யும் 16 படி ஜலத்தில் போட்டு 4 படியாகக் காய்ச்சி வியாதியஸ் தனை ஒரு முக்காலியின்மேல் அமர்த்தி அவனுக்கு முன் இக்கஷா யத்தை வைத்துக் கம்பளத்தினாலேனும் இரட்டுத் துணியினாலே னும் தன்னையும் கஷாயப் பாத்திரத்தையும் உள்ளடங்கும்படி போர்வையிடச் செய்க. இதனால் மிகுந்த வியர்வை யுண்டாகும் உடனே அடுப்பில் சிறு துண்டுகளாகச் செய்த செங்கல்லைச் சூடா கும்படிபோட்டு வைத்திருந்து ஒரு கல்லைக்குறட்டினால் பிடித்துக் கொண்டுவந்து போர்வையை நீக்கி மெல்லக் கஷாயத்தில் போட ஆவியதிகரிக்கும்; வியர்வையும் அதிகமாகக் காணும். இப்படி வியாதியஸ்தன் சக்திக்குத் தக்கபடி மூன்றுகல் வரையிலும் கஷா யத்திலிட்டுப் பிடிக்கலாம். இவ்வாறு செய்வதில் ஒருகால் களைப் பும் மூர்ச்சையும் உண்டாயின் உடனே காலதாமதம் செய்யாமல் குளிர்ந்த ஜலத்தைக்கையினால் அள்ளிவேகமாக முகத்தில் அடிக்க வும். இப்படி இரண்டு மூன்றுவிசை அடிக்கத்தெளியும். இவ்விதச் சிகிச்சையால் விடாச்சுரம், சிரபாரம், தலைவலிமுதலியன குண மாகும்.

## 39. வேறு

ஒருபலம் சுக்குத்தூளையாவது நான்குபிடி நொச்சியிலையை யாவது 16 படி ஜலத்தில் போட்டு 4 படியாகச் சுண்டக் காய்ச்சி முன்போல் வேது பிடிக்க, சுரம், சயித்தியம், தலைவலி முதலியன குணமாகும்.

---

* வாயகன்ற பாத்திரம்.

## 40. கண்டூஷ கஷாயம்

(வாய் கொப்பளிக்க)

கரசனாங்கண்ணி ஒரு * பிடி பிரமியிலை ஒருபிடி சூரத்துக் கடுக்காய் பலம் 1, வெள்ளுள்ளி பலம் $\frac{1}{2}$, சுக்கு பலம் $\frac{1}{2}$, அதிமதுரம் பலம் $\frac{1}{2}$ இவைகளை நறுக்கி, $1\frac{1}{4}$ அல்லது $1\frac{1}{2}$ படி ஜலத்தில்போட்டு $\frac{1}{4}$ படியாகக் காய்ச்சி வடித்து ஒரு மிணர் கஷாயத்தை வாயிலிட்டு இரண்டு மூன்று நிமிஷம் வரையில் கொப்பளித்துக்கொண்டிருந்து உமிழ்ந்து விடுக. இங்ஙனம் இக்கஷாயத்தை யெல்லாம் பலமுறையாக ஒரு நாளுக்குள் கொப்பளிக்க மருந்தின் வீறினாலுண்டான வாய்விரண மெனினும் தேகவெப்பத்தினாலான வாய்விரண மெனினும் இரண்டு மூன்றுநாள் பிரயோகத்திற்குள் குணமாகும்.

குறிப்பு:—இந்தச் சரக்குகளையே ஒருபடி வெள்ளாட்டு நீரிலாவது ஆவின் நீரிலாவது போட்டு $\frac{1}{4}$ படியாகக் காய்ச்சி இரண்டு பாகமாகப் பங்கிட்டு அந்தி, சந்தி 3 நாள் சாப்பிட பிற நீர் கோவை, மகோதரம், பாண்டு முதலியவை குணமாகும்.

## 41. வேறு கஷாயம்

மூன்றுபிடி சிறு துத்தியிலையைச் சிறுக அரிந்து $1\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு $\frac{1}{4}$ படியாகக் காய்ச்சி வடித்து ஒரு மிணர் கஷாயத்திற்கு ஒரு சிட்டிகை பொரித்த படிகாரங்கூட்டி வாய் கொப்பளிக்க விரணம் ஆறும்.

## 42. வேறு

மூன்று பலம் ரோஜாமொட்டை $\frac{3}{4}$ படி ஜலத்தில் போட்டு அரைக்கால் படியாகக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி முன்போல் கொப்பளித்துக் கொண்டுவர வாய் விரணம் ஆறும்.

## 43. வேறு

வேப்பம்பட்டை பலம் 1, படிகாரம் தோலா $\frac{1}{2}$, மாசிக்காய் பலம் $\frac{1}{2}$, கடுக்காய்த் தோல் பலம் 1, இவைகளை $\frac{3}{4}$ படி ஜலத்தில் போட்டு அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி முன் போல் கொப்பளித்துக் கொண்டுவர வாய் விரணம் ஆறும்.

---

* எறத்தாழ 4 பலம் எடையுள்ளது

இந்தப் பாகத்தில் படிகாரத்தை நீக்கி ஸ்திரீகட்கு உண்டாகும் மர்மஸ்தான விரணத்தை அலம்ப உபயோகப் படுத்துக.

## 44. பல்வலிக்குக் கஷாயம்

இரண்டுபிடி வெள்ளறுகுச் சமூலத்தை $1\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு அரைப்பாகம் காய்ச்சி வடித்துத் தினம் 3 நேரம் வாய் கொப்புளிக்கப் பல்வலி நீங்கும். தவிர, வாய் கொப்பளிக்கக் கூறிய கஷாயங்களை யெல்லாம் ஒவ்வொரு வேளையும் சிறிது வெதுப்புண்டாக்கி உபயோகப் படுத்தல் வேண்டும்.

## 45. ஸ்நான கஷாயம்

வேப்பிலை, நுணாயிலை, நொச்சியிலை, ஆடாதோடையிலை, மாவிலை, வகைக்கு இருபிடியாக 36 படி ஜலத்தில் போட்டு 18 படியாகக் காய்ச்சித் தேகம் பொறுக்கக்கூடிய சூட்டில் இலைகளை யெல்லாம் வெளிப்படுத்தி ஸ்நானம் செய்விக்க.

## 46. முகப்பிரக்ஷாளன கஷாயம்

(பிரசவித்த ஸ்த்ரீகட்கு)

கொண்டைக் கடலைப்பருப்பு, மொச்சைப்பருப்பு, எவை கோதுமை, கிஷாஸ்தா, முள்ளங்கி விதை, இவைகளை வகைக்கு ஒருபலம் விகிதம் $4\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு $\frac{1}{2}$ படியாகச் சுண்டக் காய்ச்சித் தினம் இருநேரம் முகத்தை அலம்பிவர முகம் கண்ணாடி போல் பளபளப்பாய் கண்களைப் பறிக்கத்தக்க அழகோடு விளங்கும்.

குறிப்பு:—இச்சரக்குகளையே சமமாகக் கொஞ்சம் கல்வத்தி லிட்டாவது அம்மிகல்லி லிட்டாவது பால்விட்டு நெகிழ அரைத்துச் சிறிதுநேரம் முகத்திற்குப் பூசிவைத்து மேல் கூறப்பட்ட கஷாயத்தால் அலம்புவதும் உண்டு.

## 47. வமனக் கஷாயம்

ஒன்று அல்லது ஒன்றரைப் பலம் மரக்காளானை $\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு $\frac{1}{4}$ படியாகக் காய்ச்சி வடித்துச் சாப்பிடுக. சிறிது நேரஞ் சென்ற பின்னர் ஜலம் சாப்பிட வாந்தியாகும். இப்படி எவ்வளவு ஜலம் சாப்பிட்டுக்கொண்டு வந்தாலும் உள் தங்காமல் வாந்தியையே யுண்டாக்கும். வாந்தியை நிறுத்த விரும்பின் ஜலரூபமாக இல்லாத அன்னத்தைப் புசிக்க நிற்கும்.

### 48. வேறு

நஞ்சுமுரிச்சான்கொடி சமூலத்தை அரைத்து நெல்லிக்காய் பிரமாணம் பாலில் கலக்கிச் சாப்பிட்டுச் சிறிது நேரஞ்சென்றபின் பச்சைப்பயறும் பச்சரிசி நொய்யும் கலந்து கஞ்சி செய்து வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டுவர உள் தங்காமல் வாந்தியாகிக்கொண்டே இருக்கும். நிறுத்த வேண்டின் வெறும் அன்னம் குழம்புடன் புரட்டிச் சாப்பிடுக. எவ்விதத்தினும் ஜலரூபமான ஆகாரங்கூடாது. வாந்தி நின்றபின் மனம்போல் சாப்பிடலாம்.

### 49. * ஸேக கஷாயம்

சதுரக்கள்ளி, தழுதாழை, எருக்கு, நொச்சி, வகைக்குப் பலம் 10. ஒரு மட்பாண்டத்திலிட்டு 2 படி ஜலம் விட்டு ஒரு படியாகக் காய்ச்சிக் கைகால் பிடிப்பு நோய் குடைச்சல் முதலியன உண்டான இடங்களில் தாளக்கூடிய வெதுப்புடன் தாரைதாரையாக விட்டுக் கொண்டுவர இரண்டு மூன்றுநாள் பிரயோகத்தில் குணமாகும்.

### 50. வேறு

புனலித்தண்டு, திருகுக்கள்ளி, சுடுதுரத்தி, தழுதாழை, முடக்கத்தான், வேப்பம்பட்டை, சங்கன்வேர், உத்தாமணி, வெண்ணொச்சி, வெள்ளிண்டு, பிரப்பங்கிழங்கு வகைக்குப் பலம் 5 இடித்துப் பாண்டத்தில் போட்டு 3 படி ஜலம் விட்டு $1\frac{1}{2}$ படியாகச் சுண்டக் காய்ச்சி முன்போல் விடுக.

### 51. வேறு

மாவிலங்கு, நொச்சி, ஊமத்தன் இலை, கழற்சியிலை, முருங்கப்பட்டை, விழுதிலை, இலைக் கள்ளி, தழுதாழை, சதுரக் கள்ளி, வகைக்குப் பலம் 5. இவைகளை நறுக்கி, மட்பாண்டத்திலிட்டு 3 படி ஜலம் விட்டு $1\frac{1}{2}$ படியாகச் சுண்டக் காய்ச்சி முன்போல் விடுக.

### 52. வேறு

அரை வீசை வாதநாராயணன் இலையை 1 படி ஜலத்தில் போட்டு அரைப்படியாகச் சுண்டக் காய்ச்சி முன்போல் விட்டுப்

---

* வாத ரோகத்தைப் பரிகரிக்கக் கூடிய ஏதேனுமொரு பிடித் தைலத்தைக் கொண்டு நோயுள்ள பக்கத்தில் நன்றாகத் தேய்த்துப் பின்னர் இக்கஷாயத்தை மேல் விடுதல் வேண்டும்.

பின்னர் அவ்விலையைப் பிழிந்து ஜலம் போக்கி நோயுள்ள இடத்தில் வைத்துக் கட்டவும். வாயு சம்பந்தத்தாலுண்டான நோய்கள் குணமாகும்.

### 53. மருந்தின் வேகத்தாலுண்டான உள்விரணத்திற்குப் பூநாக கஷாயம்

பூநாகத்தைக் கொண்டுவந்து, பாலிலாவது மோரிலாவது சுத்திகரித்துக் கழுவி, ஒரு புதுசட்டியில் போட்டு, கருகவறுத்து அதனெடைக்குப் பன்னிரண்டு பங்கு நீர் விட்டு, மூன்றிலொன்றுகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, மூன்று மணிநேரத்துக்கொரு முறை முக்கால் பலம் வீதம் கொடுத்தும் முலைப்பாலை ஆகாரமாகக் கொடுத்தும்வர, நாபி முதல் நாவுவரை உண்டான விரணங்கள் ஆறும். மேக அழலையும் இரசபாஷாணாதிகளின் வேகமும் தணியும்.

### 54. வேறு

ஒரு கோழிமுட்டையின் வெண்கருவை அரைப்படி ஜலத்தில் விட்டுக் கலக்கி ஒரு புட்டியில் செலுத்தி வாய்க்குச் சடையிட்டு அடைத்துக் கால்மணி நேரம் கையோயாமல் குலுக்கி அவ்விரண்டும் உறவானபின் வேளைக்கு இரண்டு பலம் விகிதம் 12 மணி நேரத்திற்குள் சாப்பிட்டு வரவேண்டும். இப்படி 5 நாள் சாப்பிட வீரம், பாஷாணம் முதலியவற்றாலுண்டான உள் விரணம் ஆறும்.

### 55. இரசபாஷாண மருந்துகளின் வீறுதணிய கஷாயம்

அவுரியிலை, பிரமியிலை வகைக்குப் பலம் 1. மிளகு தோலா ½. இவற்றுள் இலைகளை அரிந்தும், மிளகை நுணுக்கியும் ஒரு படி ஜலத்தில் விட்டு, அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சி, தினம் மூன்று வேளையாகப்பங்கிட்டு மூன்று நாளைக்குச்சாப்பிட மருந்துகளின் உக்கிரம் தீரும்.

### 56. சிந்துரங்களின் வீறுதணிய கஷாயம்

அறுகம்வேர் பலம் 1, மிளகு பலம் 1, இவைகளை நறுக்கி இரண்டுபடி நீரில் போட்டு, கால்படியாகக் காய்ச்சி, வடிகட்டி அதில் பூ மாதளம்பூ, அதிமதுரம், காட்டெருமைப்பால் வகைக்கு ஒரு வராகனெடையாக கல்வத்திலிட்டுக் காய்ச்சிய கஷாயத்தில்

சிறிது விட்டு நெகிழ அரைத்துக் கலக்கி, அரை தோலா பசு வெண்ணெய் போட்டு, மூன்று பங்காக்கி வேளைக்கு ஒரு பங்காக, காலை பகல் மாலை மூன்று காலங்களில் பருகின் மூன்று தினத்துள் சிந்தூரங்களால் உண்டாகிய வெப்பம் தணியும்.

## 57. வேறு

அரைப்பலம் கெட்டிமிளகைப் புதுசட்டியி லிட்டுச் சாம்பலாக்கி, அதில் அரைத் தோலா சீரகத்தைக் கலந்து, வெடிக்கும் போது, அரைப்படி ஜலம் விட்டு, பறங்கிச்சக்கை, சுக்குவகைக்கு ¼ தோலா நறுக்கிப் போட்டு அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டிக் கொஞ்சம் பனங்கற்கண்டும் நெய்யும் கூட்டியேனும் அல்லது கஷாயத்தில் பாலும் பனங்கற்கண்டும் சேர்த்தேனும் தினம் இருமுறைப் பருகின் மூன்று நாட்களில் மருந்தின் வெப்பத்தால் நேர்ந்த இருமல், வயிற்றுப் போக்கு முதலியன தீரும்.

## 58. மருந்தின் வேகத்தாலுண்டான வயிற்றுவலி, இரத்தபேதி, சீதபேதி முதலியவற்றிற்குக் கஷாயம்

பருத்திக் காய்ச்சாறு, பழச்சாறு, ஆவின் பால், வகைக்குப் பலம் $\frac{1}{2}$. இவைகளை ஒருமிக்கக் கலந்து, அதில் சீனிச்சர்க்கரையைச் சிறிது சேர்த்துத் தினம் இருவேளை மூன்றுநாள் பருகக் குணமாகும்.

## 59. வேறு

முருங்கை ஈர்க்குப் பலம் 2, ஆவிரம் வேர்ப்பட்டை பலம் 1, வெள்ளை வெங்காயம் பலம் $2\frac{1}{2}$. இவைகளைச் சிதைத்து ஒரு புதுசட்டியில் போட்டு இரண்டுபடி ஜலம் விட்டு அரைப்படியாகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டி, வேளைக்கு ஒன்று அல்லது ஒன்றரைப் பலம் வீதம் உட்கொள்ள குணமாகும்.

## 60. சுகபேதிச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—சுக்கு | பலம் 1 | வாய்விளங்கம் | பலம் 1 |
| மிளகு | ... 1 | அதிமதுரம் | ... 1 |
| திப்பலி | ... 1 | இலவங்கப்பத்திரி | ... 1 |
| வால்மிளகு | ... 1 | கோரைக்கிழங்கு | ... 2 |
| | | கடுக்காய்த்தோல் | ... 10 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஒன்பது சரக்கினையும் நன்கு இரவியிலுலர்த்தி இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேண்டுமானபோது காலை நேரத்தில் படுக்கைவிட்டெழுந்து கால் நாழிகைவரை உலாவிக் கொண்டிருந்த பின்னர் இச்சூரணத்தில் ஒரு தோலா நிறையும் இதே நிறையாக நாட்டுச் சர்க்கரையும் சேர்த்து, இளஞ் சூடுள்ள தண்ணீரில் கலக்கிச் சாப்பிடக் குமட்டல், ஆயாசம், ஆசனக்கடுப்பு, முதலிய துன்பங்களின்றிச் சுகமாய்ப் பேதியாகும்.

தேக பேதத்தினால் ஒருகால் பேதி அதிகமாகவேனும்குறைவாகவேனும் ஆகுமானால் மறுமுறை உட்கொள்ளும்போது முறையே சூரணத்தைக் குறைத்தும்அதிகப்படுத்தியும் சாப்பிடல் வேண்டும். இது வாத பித்த கபரோகங்களாலுண்டாகும் எல்லாப் பிணிகளையும் ஒருவாறு சாந்திசெய்து, பிணியாளன் கடினநிலைக்கு போகாவண்ணம் பரிகரிக்கும்.

பத்தியம்:—அதிக காரசாரமில்லாததும் எளிதில் செறிக்கற்பாலதுமாய ஆகாரம் உட்கொள்ளல் வேண்டும்.

## 61. நீர்பேதிச் சூரணம்.

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—ரேவல்சின்னி | தோலா 1 | சீரகம் | தோலா 1 |
| சிறுநாகப்பூ | ... 1 | வெடியுப்பு | ... 1 |
| இலவங்கப்பட்டை | ... 1 | படிகாரம் | ... 1 |
| பறங்கிப்பட்டை | ... 1 | சீனாகற்கண்டு | ... 1 |
| ஏலக்காய் வித்து | ... 1 | இஜால்யேஊத் | ... 1 |

செய்பாகம்:—இக்கூறிய சரக்குகள் பத்திளேயும் இடித்துச் சூரணிக்கத் தக்கவற்றைச் சூரணித்து, கல்வத்தி லிட்டு அரைக்கத் தக்கவற்றை அரைத்து, இரண்டளேயும் ஒருமிக்கக்கலந்து வைத்து கொள்க

பிரயோகம்:—காலேநேரத்தில் ஒரு தோலா சூரணத்தைப் பசும்பாலிற் கலக்கிச் சாப்பிட்டு பின்னர் ½ படி பாலுடன் ½ படி ஜலங் கலந்து சிறிது சிறிதாகப் பருகிவர, நீர்அதிகமாகப்போகும் இங்ஙனம் மூன்றுநாட்கள் காலேயிற் பருகிவர, நீர்ப்பையி லுண்டான கொதிப்பையும் அங்குத் தங்கியுள்ள வண்டல்களேயும் சுத்தி கரிக்கும்; பிரமேகங்களுக்கேற்ற ஏதேனுமோர்மருந்துண்ண அதி தீவிரத்தில் பிணிநீங்கும்.

பத்தியம்:—பாலன்னமின்றி ஒன்றும் உண்ணல் கூடாது. பாலும் நீரும் கலந்து எவ்வளவுக் கெவ்வளவு உட்கொள்ளு கிருரோ அவ்வளவுக் கவ்வளவு நீரை மிகுதியாகப் பெருக்கி யழுக்கை யகற்றி நன்மைதரும்.

## 62. பூநாகச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—* பூநாகம் | பலம் | 1 | நெல்லிவற்றல் | பலம் | $\frac{1}{8}$ |
| சுக்கு | ... | $\frac{1}{4}$ | தான்றிக்காய் | ... | $\frac{1}{8}$ |
| மிளகு | ... | $\frac{1}{4}$ | சித்தரத்தை | ... | $\frac{1}{8}$ |
| திப்பலி | ... | $\frac{1}{4}$ | கற்கடகச்சிங்கி | ... | $\frac{1}{8}$ |
| கடுக்காய்த்தோல் | ... | $\frac{1}{8}$ | மூங்கிலுப்பு | ... | $\frac{1}{8}$ |
| சீந்தில்கொடி | ... | $\frac{1}{2}$ | தூதுவளே சமூலம் | ... | 1 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பன்னிரண்டு சரக்குகளேயும் சூரணித்துச் சமனெடை சீனுகற்கண்டின் சூரணமும், கண்டங் கத்திரியை அரைத்து அதனிடையில் வைத்துப் பற்பஞ்செய்த பவழத்தில் ¼ பலமும் கூட்டிக் கலந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—இச்சூரணத்தில் வேளேக்கு ¼ தோலா வீதம் தினம் இருநேரம் பசும்வெண்ணெயில் அயச்சிந்தூரத்துடனுவைது

* பூநாகத்தைப் பாலிலாவது, மோரிலாவது சுத்திசெய்து மண்ணில் லாமல் நன்கு உருவிக் கடுவெயிலி லுலர்த்திப் பொன்மேனியாகவறுத்துச் சூரணித்துக் கொள்க.

காந்தச்சிந்தூரத்தினோடாவது மத்தித்துச் சாப்பிட க்ஷயம்,காசம், பாண்டு, குன்மம், நீராம்பல், கிராணி, மூலம், சூதகவாயு,இரத்தக் காசம், மேகஅழலை முதலிய வியாதிகள் அவைகளினது நிலைமைக் குத் தக்கவாறு 10, 20, 40 நாட்களில்குணப்படும்.

பத்தியம்:—மோர், புகையிலை சம்பந்தம், புளி, பூண்டு, கடுகு, எள்ளு இவைகள் ஆகா. பால், நெய், வறுத்த உப்புமுதலிய வற்றையும் மற்றவைகளையும் சமயமறிந்து சேர்த்துக்கொள்க.

### 63. கபாங்குசச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—கசகசா வராகனெடை | 5 | கபாஜி பருப்பு வராக | $2\frac{1}{2}$ |
| பேதாணு ... | 5 | துத்திவேர்ப்பட்டை | $2\frac{1}{2}$ |
| சுரைப்பருப்பு ... | 5 | கருவேலம்பிசின் ... | 2 |
| மூங்கிலுப்பு ... | $4\frac{1}{2}$ | அதிமதுரம் ... | $1\frac{1}{2}$ |
| பருத்திப்பருப்பு | 4 | * பவழபற்பம் ... | $1\frac{1}{2}$ |
| வெள்ளரிப்பருப்பு ... | $3\frac{1}{2}$ | நிசாஸ்தா ... | $1\frac{1}{2}$ |
| தர்பூசனிப்பருப்பு | $3\frac{1}{2}$ | பாதம்பிசின் ... | 1 |
| சந்தனத்தூள் ... | 3 | மூலாம்பழப்பருப்பு | $3\frac{1}{2}$ |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பதினாறு சரக்குகளில் பருப்பு வகைகளைக் கல்வத்திலிட்டு நன்று நெகிழ அரைத்தும் மற்றவை களை இடித்தும் சூரணித்து ஒருமிக்கக்கலந்து வைத்துக்கொள்க.

பிரயோகம்:—இந்தச் சூரணத்தை வேளைக்கு $\frac{1}{4}$ தோலா வீ தம் சமனெடை கற்கண்டு சூரணம் சேர்த்து வெள்ளாட்டுப்பாலில் கலக்கித் தினம் இருநேரம் சாப்பிட்டுப் பின்னர் கூடுமாயின் வெண்டாமரை ஷர்பத்து பின்னருந்திவர க்ஷயம், உஷ்ண இரு மல், உட்காங்கை, கை கால் எரிச்சல் முதலிய பிணிகள் நிவாரண மாகும்.

பத்தியம்:—காரசார பதார்த்தங்களை விசேடமாக உட்கொள் ளாமல் நெய், பால் முதலியவைகளை ஆகாரத்துடன் சேர்த்துண்க.

---

* முன்முறையில் சேர்த்த பவழ பற்பத்தையே இம்முறையினும் சேர்த்தல் வேண்டும்.

### 64. சுரக்கட்டிச் சூரணம்

சரக்கு:—கறிமஞ்சள் பலம் 5 மஞ்சட்கடுக்காய்த்தோல் பல 5
மிளகு ... 5 தோல்சீவி விதைபோக்கி-
கரியுப்பு ... 5 உலர்த்திய துமட்டிக்காய் ... 5

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஐந்து சரக்குகளையும் இரவியில் நன்ருக உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு ¼ தோலா வீதம் தினம் இருநேரம் 20 நாள் சாப்பிட சுரத்தின் வேகத்தாலுண்டாகிய ஈரல்களின் வீக்கங்கள் நாளடைவில் குறைந்துபோகும். சுரமிருப்பின் அதை நீக்கத்தக்க வேறு அவிழ்தம் உண்டு குணப்படுத்திக் கொண்டு இதனை ஆரம்பித்தல் வேண்டும். இங்ஙனம் 20 நாளுண்டபின் எக் காரணத்தாலும் சுரம் வராதென்பது துணிபு.

பத்தியம்:—இச்சாபத்தியம். புளியைக் கூடியவரையிற்குறைத் துச் சேர்த்தல் நலம்.

குறிப்பு:—இச்சூரணம் உண்ணின் ஒருமுறை மலபிரவிர்த்தி நன்ருக ஆகும்; அங்ஙனமாகாவிடின் மருந்தினளவை சிறிது அதிகப்படுத்த வேண்டுவது ஆவசியகம்.

### 65. மேகசாந்திச்சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—பறங்கிச்சக்கை | பலம் 1 | கடுக்காய் | பலம் ½ |
| அமுக்கிராக்கிழங்கு... | 1 | கண்டுபாரங்கி | ... 1 |
| வெள்ளருகு ... | 1 | சோம்பு | ... ½ |
| தும்ராஷ்டம் ... | 1 | ஏலம் | ... ½ |
| சங்கம்பட்டை ... | 1 | வாய்விளங்கம் | ... ½ |
| மூக்கத்தாரிப்பட்டை | 1 | அன்ருசிப்பூ | ... ½ |
| மிளகரணைப்பட்டை... | 1 | செவ்வியம் | ... ½ |
| சித்திரமூலவேர்ப் பட் | ½ | அதிமதுரம் | ... ½ |
| சுக்கு ... | 1 | கோஷ்டம் | ... ½ |
| திப்பலி ... | ½ | மோடி | ... ½ |
| தான்றிக்காய் ... | 1 | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட இருபத்தொரு சரக்குகளையும் நன்கு இரவியிலுலர்த்தி இடித்துச் சூரணம்செய்து அதற்குச் சமமாகச் சீனி சர்க்கரை கூட்டிவைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு ½ தோலா விதம் தினம் காலை மாலை 40 நாள் சாப்பிட மேகவாயு, பிடிப்பு, சூலை, கிரந்தி, மேகப்படை மேக ஊறல் முதலியவைகள் குணப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 66. பாஸ்கர லவணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சரக்கு:—திப்பிலி | பலம் 2 | மிளகு | பலம் | 1 |
| மோடி | ... 2 | சுக்கு | ... | 1 |
| தாளிசப்பத்திரி | ... 2 | ஓமம் | ... | 1 |
| தணியா | ... 2 | இலவங்கப்பட்டை | ... | ½ |
| கருஞ்சீரகம் | ... 2 | ஏலக்காய் அரிசி | ... | ½ |
| இலவங்கப்பத்திரி | ... 2 | மாதளம் ஓடு | ... | 4 |
| இந்துப்பு | ... 2 | கறியுப்பு | ... | 3 |
| வளையலுப்பு | ... 2 | சீரகம் | ... | 2 |
| சிறுநாகப்பூ | ... 2 | கறுப்பு உப்பு | ... | 2 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பதினெண்சரக்குகளில் உப்பு வகைகளைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்தும், மற்றவைகளை இடித்துச் சூரணித்தும் ஒருமிக்கக் கலந்து காற்று நுழையாத புட்டியில் பத்திரப்படுத்திக் கேழ்வரகில் மூன்றுவாரம் தானியப் புடம் வைத்துப் பின்னர் உபயோகிக்க.

பிரயோகம்:—போஜனத்திற்குப்பின் தினம் இருநேரம் புளிப்புமோரில் வேளைக்கு ¼ தோலா விதம் 20 நாள் உட்கொள்ள பித்தவாயு, அஜீரணம், பரிநாமசூலை முதலிய பிணிகள் நீங்கும்.

பத்தியம்:—வாயு பதார்த்தங்களைத் தள்ளி ஆகாரஞ் செய்தல் வேண்டும். தவிர கண்விழித்தல், அதிக குளிர்ச்சியான ஜலம் சாப்பிடுதல், தேகப்பயிற்சி, ஸ்த்ரீபோகம், மலஜல மடக்கல் முதலியன கூடாவாம்.

## 67. சந்தனாதிச் சூரணம்.

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—கிச்சிலிக்கிழங்கு | பலம் 1 | கோரைக்கிழங்கு | பலம் 1 |
| கார்போகஅரிசி | ... 1 | அகில்கட்டை | ... 1 |
| நீரடிமுத்து | ... 1 | தேவதாரு | ... 1 |
| மைலாலக்கடி | ... 1 | கிளியூரம்பட்டை | ... 1 |
| பூஞ்சாந்து | ... 1 | சந்தனத்தூள் | ... 1 |
| வெட்டிவேர் | ... 1 | பளிங்குச்சாம்பிராணி | 1 |
| குருவிவேர் | ... 1 | கௌலா | ... 1 |
| கஸ்தூரிமஞ்சள் | ... 1 | கல்பாச்சி | ... 1 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பதினாறு சரக்குகளையும் இரவியிலுலர்த்தி நன்கு இடித்துச் சூரணம் செய்துகொள்க.

பிரயோகம்:—ஸ்நானம் செய்யும்போதெல்லாம் இச்சூரணத்தைத் தண்ணீருள் குழப்பித் தேகமெங்கும் நன்றாகத் தேய்த்து 5 அல்லது 10 நிமிஷம் வரையில் ஊறவிட்டுப் பின்பு தண்ணீர்விட்டுக்கொள்ள, ஒருவார உபயோகத்திற்குள் எத்தகையசொறி சிரங்குகளும், நமைச்சலும், முள்ளினைப்போன்ற தவளைச் சொறி, படை, கருமேகம், இரத்தக் கெடுதலால் தோலில்காணும்பலவகைப்பட்ட நிறமுடைய வடுக்கள் முதலியவும்உண்டாகா. தவிர, நல்ல மணத்தையும் மன மகிழ்வையும் தருமஸ்த்ரீகள் இதனுடன் பச்சைப் பயிற்றைச் சேர்த்தரைத்து உபயோகிப்பின் தேகத்தில் மாசு மறுவின்றி நல்ல அழகு உண்டாகும்.

பத்தியம்:—கிடையாது.

குறிப்பு:—வெந்நீரிலேனும் தண்ணீரிலேனும் ஸ்நானஞ்செயயலாம்.

## 68. இரசோத்தமாதி

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—இரசம் | கழஞ்சி 1 | மஞ்சள் | கழஞ்சி 1 |
| கந்தகம் | ... 1 | மரமஞ்சள் | ... 1 |
| மனோசிலை | ... 1 | மிளகு | ... 1 |
| சீரகம் | ... 1 | பூரம் | ... ½ |
| கருஞ்சீரகம் | ... 1 | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஒன்பது சரக்கினையும் ஒன்றன் பின்னொன்றாகச் சேர்த்தரைத்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேண்டும்போது சூரணத்திற்கு இரண்டு பங்குத் தேங்காய் எண்ணெயில் கலக்கி சொறிசிரங்கு, படை முதலிய இவைகட்குத் தினம் இருவேளை பூசிவரக் குணமாகும்.

குறிப்பு:—இதனை இரண்டாமுறை உபயோகிக்குமுன் சிகைக்காய் அல்லது அரைப்பிட்டுத் தேய்த்துக் கழுவிப்பின்னர்ப் பூசுக.

## 69. ஐங்காயச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—திப்பிலி வாரகனெடை | 1 | மாவீர்க்கு வராகனெடை | 1 |
| நாகேசுரம் ... | 1 | கருவேப்பிலை ஈர்க்கு ... | 1 |
| செவ்வியம் ... | 1 | நுணா ஈர்க்கு ... | 1 |
| சித்திரமூலம் ... | 1 | நெல்லி ஈர்க்கு ... | 1 |
| தும்ராஷ்டம் ... | 1 | கோஷ்டம் ... | 1 |
| சீரகம் ... | 1 | காட்டத்திப்பூ ... | 1 |
| கருஞ்சீரகம் ... | 1 | கடுக்காய்ப்பூ ... | 1 |
| ஓமம் ... | 1 | மாசிக்காய் ... | 1 |
| நெல்லிவற்றல் ... | 1 | வெட்பாலை யரிசி ... | 1 |
| அக்கரகாரம் ... | 1 | பூவரசம்பட்டை ... | 1 |
| தாளிசப்பத்திரி ... | 1 | மாதளை ஓடு ... | 1 |
| ஏலம் ... | 1 | அதிமதுரம் ... | 1 |
| கிராம்பு ... | 1 | வசம்பு ... | 1 |
| இலவங்கப்பட்டை | 1 | இலவம்பிசின் ... | 1 |
| இலவங்கப்பத்திரி | 1 | அதிவிடயம் ... | 1 |
| ஜாதிக்காய் ... | 1 | கிச்சிலிக்கிழங்கு ... | 1 |
| ஜாதிப்பத்திரி ... | 1 | கருவேப்பிலை ... | 1 |
| தணியா ... | 1 | கஞ்சா ... | 2 |

திப்பிலிமூலம் வராகனெடை 1

செய்பாகம்:—இக்கூறப்பட்ட முப்பத்தேழு சரக்குகளில் கஞ்சாவை ஏழுதரம் சுத்தஜலம் விட்டுப் பிசைந்து பிசைந்து அலம்பி, விதை காம்பு இவைகளைப் போக்கி, உலரவைத்து, பொன்மேனியாக வறுத்தும், ஈர்க்குவகைகளைத் தனித்தனிவாசனை காணும் வரையில் பொன்மேனியாக வறுத்தும், அதி விடயம், வசம்பு,

இவ்விரண்டையும் சாம்பலாகாமல் சுட்டுக்கரியாக்கிக் கொண்டும், ஏனையசரக்குகளுடன் சேர்த்திடித்துச் சூரணம் செய்து கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ தோலா விகிதம் தினம் இரு முறை கொள்ளின் அஜீரணபேதி, பழையகிராணி, பக்கசூலை. வயற்றுநோய், அக்கினிமந்தம், உஷ்ணபேதி முதலியவை குணப் படும்.

பத்தியம்:—பிணியின் நிலைமைக்குத் தக்கபடி கஞ்சி, புனற் பாகம், முதலியவற்றைக் காரசாரமின்றி உட்கொள்ளல் வேண்டும்.

## 70. வேறுமுறை (குழந்தைகட்கு)

| | | | |
|---|---|---|---|
| சரக்கு-(1)சுக்கு | பலம் 4 | இலவம்பிசின் | பலம் $\frac{1}{4}$ |
| மிளகு | ... 3 | புளியங்கொட்டைதோ | 1 |
| திப்பிலி | ... 2 | தான்றிக்காய்த்தோல் | $\frac{1}{2}$ |
| ஜாதிக்காய் | ... $\frac{1}{4}$ | கடுக்காய்பிஞ்சி | ... 1 |
| ஜாதிப்பத்திரி | ... $\frac{1}{4}$ | நுணாஈர்க்கு | ... $\frac{1}{4}$ |
| மரமஞ்சள் | ... $\frac{1}{4}$ | புளியம் ஈர்க்கு | ... $\frac{1}{4}$ |
| தேற்றான்வித்து | ... $\frac{1}{4}$ | வேப்பம் ஈர்க்கு | ... $\frac{1}{4}$ |
| மாசிக்காய் | ... $\frac{1}{4}$ | பிரமி ஈர்க்கு | ... $\frac{1}{4}$ |
| வெட்பாலையரிசி | ... $\frac{1}{4}$ | ஓதியம் ஈர்க்கு | ... $\frac{1}{4}$ |
| வேலம்பிசின் | ... $\frac{1}{4}$ | கஞ்சா | ... 1 |
| (2)கருஞ்சீரகம் | பலம் $\frac{1}{2}$ | (3) கிராம்பு | பலம் $\frac{1}{2}$ |
| சீரகம் | ... $\frac{1}{2}$ | வெட்பாலைப்பட்டை | ... $\frac{1}{4}$ |
| குரோசானி ஓமம் | ... $\frac{1}{4}$ | மாங்கொட்டைப்பருப்பு | 1 |
| ஓமம் | ... 1 | நெல்லிவற்றல் | ... $\frac{1}{4}$ |
| | | அதிவிடயம் | ... $\frac{1}{4}$ |

செய்பாகம்:—முதலங்கத்தில் குறிக்கப்பட்ட 20 சரக்குகளில் கஞ்சாவைமாத்திரம் 7 முறை ஜலம்விட்டுக் கழுவி, விதை காம்பு இவைகளை நீக்கி உலர்த்தி, ஒவ்வொன்றையும் தனித்தனி பொன்மேனியாக வறுத்திடித்துச் சூரணம் செய்து கொள்க.

இரண்டாவது அங்கத்தில் குறிப்பிட்ட 4 சரக்குகளைத் தனித் தனி ஜலம் தெளித்துப் பிசிறிவைத்து, மேல் பொட்டுப் போகத்

தேய்த்துப் புடைத்துப் பொன்மேனியாக வறுத்திடித்துச் சூரணம் செய்துகொள்க.

மூன்ருவது அங்கத்தில் குறிப்பிட்ட 5 சரக்கினுள் முதல் மூன்று சரக்கை இரவியிலுலர்த்தியும், கிராம்பை மொட்டு நீக்கியும், அதிவிடயத்தைச் சுட்டுக் கரியாக்கியும், இடித்துச் சூரணம் செய்துவைத்துக் கொள்க.

இங்ஙனம் முடிந்த மூவகைச் சூரணங்களுடன் $\frac{1}{4}$ பலம் பொரித்த வெங்காரச்சூரணஞ் சேர்த்துக் கல்வத்திலிட்டு நன்ருகக் கலக்கும்படி அரைத்து, சீசாவில் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—குழந்தைகட்கு ஸ்நானம் செய்விக்கும்போதெல்லாம் குழந்தையின் பருவத்துக்குத் தக்கபடி $\frac{1}{8}$ முதல் $\frac{1}{4}$ வராகனெடை சூரணத்தை வெந்நீரில் கலக்கிக் கொடுப்பின் அஜீரணம் சகல மாந்தம், வயிற்றுச் சங்கடம், சீதபேதி, மலக்கட்டு முதலிய பிணிகள் நீங்கிச் சுகம்பெறும். தவிர குழந்தைகள் சவலைபோயினும் இம்மருந்தால் நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம். பாலுண்ணும் குழந்தையாயின் தாய் பத்திய மிருத்தல் வேண்டும்.

### 71. பறங்கிச்சக்கைச் சூரணம்.

சரக்கு:—பறங்கிச்சக்கை வீசை 1 ஓமம் பலம் $2\frac{1}{2}$
அமரிசிலை கந்தகம் பலம் 8 வசம்பு ... $2\frac{1}{2}$
வெண்நாவி பலம் $2\frac{1}{2}$

செய்பாகம்:—பறங்கிச் சக்கையை ஒன்றிரண்டா யிடித்து, முக்கால் பாகத்திலடங்கக் கூடியதும் கால்பாகம் இடமிருக்கக் கூடியதுமான ஒரு மட்கடத்தில் போட்டு, அதின்மீது 4, 5 துவாரமுள்ள ஒரு குடுவையை வைத்து அதனுள் கந்தகத்தைப்போட்டு அதன்மீது முன்போல் துவாரமிட்ட மற்ருேர் குடுவையை வைத்து, அதனுள் வெண்நாவி, வசம்பு, ஓமம், இவைகளைப்போட்டு, வாய்க்குப் பொருத்தமான அகல்மூடி, சீலை செய்து, அடியிலிருக்கும் குடுவைகள் இரண்டின் வாய்ப்புறங்கட்கு வலுவாகச் சீலைசெய்து, இரவியில் காய்ந்தபின் அசையாமலடிகடத்தைப் பூமியில் மறையும்படி புதைத்து, மேலே உள்ள இரு குடுவைகள் மறைய சுற்றிலும் அரையடிக்கு எருவடுக்கி, உச்சியில் தீ யிடுக. புடமானது சாங்க சீதளமானபின் அடிகடத்துள்ள பறங்கிச் சக்

கையைப் பார்க்க நாவி முதலியவற்றின் தைலத்தோடு கந்தகமும் உருகிப் பாய்ந்து உறைந்து நிற்கும். இதனை அப்படியே கல்லுரலி லிட்டு இடித்துச் சூரணம் செய்து கொள்க. ஒருமுழ அகலமும் சாண் உயரமுள்ள ஒரு சட்டியின் பக்கத்தில் ஒரு இருப்புக் கறண்டி நுழையத்தக்க துவாரமிட்டு, வாயில் வல வல என்ற ஒரு துணியால் எடுகட்டி அதன்மீது முன் சித்தப்படுத்திய சூரணத் தைக் கொட்டிக் குவித்து, பொருத்தமான மற்றோர் சட்டியால் மூடி, சீலைசெய்து, முன்னே பக்கத்தில் செய்துள்ள துவாரத்தின் வழியாய் இரண்டு ஆலக்கறண்டி யளவு கரிநெருப்பிட்டு, அரைப் பலம் சாம்பிராணி தூளைத் தூவிப் புகை வெளிப்படாமல் வாயை அடைக்க. இவ்வாறு ஒவ்வொருமுறையும் புகை அடங்கப்பார்த்து முன்னிட்ட கரிநெருப்பை வெளிப்படுத்தி, புதிதாக நெருப்பிட்டுச் சாம்பிராணி தூளைத் தூவி வருக. இங்ஙனமே அரைவீசை சாம்பி ராணி தூளைப்பதங்கமேற்றுக. பின்னர் சூரணத்தையும், மேற் சட்டியில் பலவிடங்களிலும் தங்கியுள்ள பதங்கத்தையும் சிதறாமல் சுரண்டிக் கல்வத்திலிட்டு, நன்றாக அரைத்துப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{8}$ தோலா நிறையுள்ள சூரணமும், அதே அளவு சர்க்கரையும் கூட்டி நெய்விட்டு மத்தித்துத் தினம் இருவேளை இருபது நாள் சாப்பிடுக. இதனால் மேகப்படை, திமிர்வாதம், கிரந்தி, மேகவிரணம், ஆரம்பமானகுட்டம், செம் மேகம், கருமேகம் முதலிய பிணிகள் தீரும். இதனை உண்ணுங் காலத்து இடையே இரண்டொருநாள் மருந்தை நிறுத்தி, ஸ்நாநம், சௌளம் முதலியன செய்துகொண்டு மீண்டும் ஆரம்பித்துச் சாப் பிடலாம். ஸ்நானத்திற்கு மாத்திரம் இந்நூல் தைல இலம்பகத் துள் கூறப்பட்டுள்ள (ஆயில்) எண்ணெயை உபயோகித்தல் சால வும் நலம் பயக்கும்.

பத்தியம்:—துவரம்பருப்பு, சிறுபயிறு, நெய், பால், வாழை, புடலை, அத்தி அவரை, முதலியவை சேர்த்துக்கொள்க. மஞ்சள், கடுகு, எண்ணெய், மீன், மாமிசம், புகை, போகம் முதலியவை களைக் கண்டிப்பாய் நீக்கல் வேண்டும்.

குறிப்பு:—பறங்கிச் சக்கையைச் சிறு துண்டுகளாக நறுக்கி, இரண்டுபடி பசும்பாலிற் போட்டு மெதுவாக எரித்துப் பால் சுவறின பதத்தில் இரவியில் உலர்த்திக்கொள்க

அமரிசிலே கந்தகத்தை உருக்கிப் பசும்பாலில் பத்துமுறை சாய்த்துச் சிறுதுண்டுகளாக உடைத்துக் கொள்க.

நாவியைக் கோநீரில் மூன்றுநாள் ஊறப்போட்டு, ஜலம்விட்டலம்பி, நிழலிலுலர்த்திச் சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்க.

## 72. வேறு

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—பறங்கிச்சக்கை | பலம் 8 | மோடி வராகனெடை | 3 |
| சுக்கு | வராகனெடை 3 | பேரரத்தை ... | 3 |
| மிளகு | 3 | சிறுதேக்கு ... | 3 |
| திப்பலி | 3 | தணியா ... | 3 |
| ஏலம் | 3 | சீரகம் ... | 3 |
| வாய்விளங்கம் | 3 | கருஞ்சீரகம் ... | 3 |
| சன்னலவங்கப்பட்டை | 3 | அதிமதுரம் ... | 3 |
| ஓமம் | 3 | வெட்டிவேர் ... | 3 |
| குரோசானி ஓமம் | 3 | விலாமிச்சுவேர் ... | 3 |
| சித்தரமூலம் வேர்ப்பட் | 3 | முத்தக்காசு ... | 3 |
| சிற்றரத்தை | 3 | கிச்சிலிக்கிழங்கு ... | 3 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட இருபத்திரண்டு சரக்குகளையும் தனித்தனி இடித்துச் சூரணஞ்செய்து மேல்கண்ட நிறையாகக்கலந்து, மொத்த எடைக்கு நிகராகச் சீனி சர்க்கரையைக் கலந்து வைத்துக்கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ தோலா விதம் தேக திடத்திற்குத் தக்கவாறு தினம் இருவேளை 20, 40 நாள் சாப்பிட சூதகவாயு, படர் கிரந்தி, கைகால் பிடிப்பு, வெட்டை, படை, வண்டுகடி, கருமேகம், மெய்வெளுப்பு, சொறிசிரங்கு, கரப்பான் முதலியவைகள் குணப்படும்.

பத்தியம்:—முன்முறையிற் கூறியதே.

## 73. வேறு

| | | | |
|---|---|---|---|
| சரக்கு.—பறங்கிச்சக்கை | பலம் 8 | சிவனார் வேம்பு | பலம் 4 |
| சங்கம்வேர்ப்பட்டை... | 2 | வெள்ளருகு ... | 2 |

செய்பாகம்:—ஒரு மட்பாண்டத்தில் சதுரக்கள்ளி, திருகுக்கள்ளி, இவ்விரண்டையும் வகைக்கு ஒரு தூக்காகச் சிறுதுண்டுகளாக நறுக்கிப்போட்டு, 16 படி ஜலம்விட்டு, அதன் வாய்க்கு

மெல்லிய சீலையால் ஏடுகட்டி, அதன்மேல் பறங்கிச் சக்கையைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் குவித்து, மேல்சட்டி மூடிச் சீலை செய்து, இரண்டு ஜாமம் எரித்துச் சக்கையைநிழலிலுலர்த்தி இடித்துச் சூரணம் செய்க. மற்றச் சரக்குகளையும் தனித்தனி இரவியிலுலர்த்தி இடித்துச் சூரணம்செய்து, மேல்காட்டிய நிறைபோல் கலக்குந் தறுவாயில் 10 பலம் சர்க்கரையுங் கூட்டிக்கலந்து புது குடுவையில்போட்டு தானியபுடம் 10 நாள் வைத்துப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{3}{4}$ தோலா வீதம் தினம் இருவேளை 20 நாள் சாப்பிடக் கிரந்தி, சூலை, மேகம், வெட்டை, வண்டுகடி, படைகள், விரணங்கள், கண்டமாலை முதலியவைகள் குணமாகும்.

பத்தியம்:—மஞ்சள், கடுகு, எண்ணெய், மீன், மாமிசம், பழைய அன்னம், புகை, போகம் நீங்கலாக எல்லாம் ஆகும்.

## 74. அசுவகெந்தி சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—கிராம்பு | பலம் | 1 | தணியா | பலம் | 7 |
| சிறுநாகப்பூ | | 2 | மிளகு | ... | 7 |
| ஏலம் | | 3 | திப்பலி | ... | 16 |
| இலவங்கப்பட்டை | | 4 | சுக்கு | ... | 32 |
| இலவங்கப்பத்திரி | | 5 | அமுக்கராக்கிழங்கு | | 64 |
| சீரகம் | | 6 | | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பதினொரு சரக்குகளையும், இரவியிலுலர்த்தி இடித்துச் சூரணஞ்செய்து இவைகளின் மொத்த நிறைக்கு நிகரான சீனிசர்க்கரை சேர்த்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ தோலா வீதம் தினம் இருவேளை 20 அல்லது 40 நாள் பாலிலேனும் நெய்யிலேனுமுட் கொள்ள மேக அஸ்திசுரம், அஸ்திவெட்டை, சுவாசம், ஈளை, பாண்டு, மேகவூறல், அரோசிகம் முதலியவை குணமாகும்.

பத்தியம்:—நீடித் துண்ணக்கூடிய ஔஷதங்களுக்கெல்லாம் இச்சாபத்தியமென பண்டிதர்கள் ஒருவாறுகூறினும், இத்தகைய சூரணங்கட்கு புளியை நீக்கி ஆகாரஞ் செய்தல் எவ்விதத்தினும் நன்மை என்றறிக.

## 75 தசதீபாக்கினி சூரணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—பெருங்காயம் | பலம் | 1 | கடுக்காய்த்தோல் | பலம் | 6 |
| வசம்பு | ... | 2 | சித்திரமூலம்வேர்ப் பட் | | 7 |
| வாய்விளங்கம் | ... | 3 | கோஷ்டம் | ... | 8 |
| இந்துப்பு | ... | 4 | திப்பலி | ... | 9 |
| ஓமம் | ... | 5 | சீரகம் | ... | 10 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட 10 சரக்குகளையும்பொன்மேனி யாகத் தனித்தனி வறுத்திடித்துச் சூரணித்துப் பின்னர்எல்லா வற்றையும் ஒருமிக்கக் கலந்து வைத்துக்கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ தோலா விகிதம் தினம் இருவேளை உண்ண அஜீரணம், இருமல் சுரம், பேதி, பாண்டு, அரோசிகம் முதலியவைகள் நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 76 ஆடாதோடைச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—பேரரத்தை | பலம் | 1 | அரிசிதிப்பலி | பலம் | 3 |
| சிற்றரத்தை | | 1 | சாம்பிராணிபதங்கம் | | $\frac{1}{2}$ |
| ஆடாதோடைபூக்கதிர் | | 4 | கறிமஞ்சள் | ... | 1 |
| ஆடாதோடைவேர்ப்பட் | | 2 | மிளகு | ... | 1 |
| பூனைக்காய்ஞ்சொறிவே | | 2 | கோஷ்டம் | ... | $\frac{1}{2}$ |
| வாய்விளங்கம் | | 1 | காட்டாத்திப்பூ | ... | $\frac{1}{2}$ |
| சிறுதேக்கு | | 1 | தூதுவளை இலை | ... | 2 |
| கோரைக்கிழங்கு | | 1 | கண்டங்கத்திரி இலை | ... | 1 |
| இச்சிப்பட்டை | | 1 | | | |

செய்பாகம்:—இக்கூறிய பதினேழு சரக்குகளில் சாம்பிராணி பதங்கம் நீங்கலாக மற்றவைகளை இரவியி லுலர்த்தித் தனித்தனி யிடித்துச் சூரணித்து மேற்கண்ட அளவின்படி ஒருமிக்கக் கலந்து சாம்பிராணி பதங்கத்தையும் கூட்டி நன்றாகக் கிளரி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{8}$ தோலா வீதம் பாலில் கலக்கித் தினம் இருவேளை 20 நாள் சாப்பிடச் சீதள சம்பந்தத்தாலுண் டான சுவாசகாசம் நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 77. முடித்தைலச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—சடாமாஞ்சில் | பலம் | 1 | கார்போக அரிசி | பலம் | 1 |
| கோஷ்டம் | ... | 1 | சிறுநாகப்பூ | ... | 1 |
| பூலாங்கிழங்கு | ... | 1 | கஸ்தூரிமஞ்சள் | ... | 1 |
| தேவதாரு | ... | 1 | சண்பகப்பூ | ... | 1 |
| செம்பூராம்பட்டை | ... | 1 | சிறுதேக்கு | ... | 1 |
| செவ்வியம் | ... | 1 | அகிற்கட்டை | ... | 1 |
| கருஞ்சீரகம் | ... | 1 | வெட்டிவேர் | ... | 1 |
| சீரகம் | ... | 1 | குருவிவேர் | ... | 1 |
| நன்னாரி | ... | 1 | சந்தனத்தூள் | ... | 1 |
| கொம்பரக்கு | ... | 1 | சிற்றாமுட்டி | ... | 1 |
| பச்சை இலை | ... | 1 | சாம்பிராணி | ... | 3 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட இருபத்திரண்டு சரக்குகளையும் ஒருமிக்க இடித்துச் சூரணஞ்செய்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—ஒருபலம் நல்லெண்ணெயில் ஒரு வராகனெடை சூரணத்தைப் போட்டுச் சிறுதீயில் காய்ச்சிச் சூரணஞ்சிவக்கும் பதத்தில், மறு பாத்திரத்தில் எண்ணெயை வடித்து ஆறவிட்டு ஸ்நாநஞ் செய்யச் சீதளசம்பந்தத்தா லுண்டான கழுத்து நரம்புகளின் இழுப்பு, பிடரிவலி, தலைநோய், மண்டைகுடைச்சல் முதலானவைகள் நீங்கும்.

பத்தியம்:—ஸ்நாநமான வுடன் காரசாரத்துடன் ஏதேனும் ஆகாரம் கொள்ளுக.

## 78. இலகுசுதர்சனச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—சீந்தில்கொடி | பலம் | 2 | சுக்கு | பலம் | 2 |
| திப்பலிமூலம் | ... | 2 | கிராம்பு | ... | 2 |
| திப்பலி | ... | 2 | வேப்பம்பட்டை | ... | 2 |
| கடகரோகணி | ... | 2 | சந்தனத்தூள் | ... | 2 |
| கடுக்காய் | ... | 2 | நிலவேம்பு | ... | 18 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பத்துச் சரக்குகளையும் தனித்தனியிடித்து முடிவில் ஒன்றாகக்கலந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் காலை மாலை $\frac{1}{4}$ தோலா விகிதம் ஒரு பினர் தண்ணீருட னுண்டுவர இருபது நாளில் எவ்வித பழைய

மினர் சுரமும் வராது. சுரமிருக்கும்போது மாத்திரம் வேறு ஏதேனும் ஒரு சிகிச்சையினல் நிறுத்திக் கொண்டு பின்னர் இச்சூரணத்தை ஆரம்பிக்க.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 79. மகாசுதர்சனச் சூரணம்

| | |
|---|---|
| சரக்கு :—கடுக்காய் | வெட்பாலை அரிசி |
| தான்றிக்காய் | அதிவிடயம் |
| நெல்லிவற்றல் | சிற்றுமுட்டி |
| மஞ்சல் | தேவதாரு |
| மரமஞ்சல் | பேய்ப்புடல் |
| கண்டங்கத்தரி | மூங்கிலுப்பு |
| முள்ளிக்கத்தரி | ஜாதிபத்திரி |
| சுக்கு | சந்தனம் |
| மிளகு | வாய்விளங்கம் |
| திப்பலி | சித்திரமூலம் |
| தகரவிதை | செவ்வியம் |
| மருளங்கிழங்கு | கிராம்பு |
| சீந்தில்கொடி | தாளிசபத்திரி |
| கடகரோகணி | * ஜீவகம் |
| பற்பாடகம் | * ருஷபகம் |
| கோரைக்கிழங்கு | * காகோலி |
| வேப்பம்பட்டை | கழற்சிப்பருப்பு |
| ன்திமதுரம் | கிச்சிலிக்கிழங்கு |
| குரோசானி ஓமம் | பூனைக்காய்ஞ்சொறிவேர் |
| சிறுதேக்கு | குருவேர் |
| முருங்கவிதை | குடசப்பாலை |
| வசம்பு | உவர்மண் (பூநீறு) |
| இலவங்கப்பட்டை | தாமரைக்கிழங்கு |
| கிரந்தித்தகரம் | அல்லிக்கிழங்கு |
| வெட்டிவேர் | வெண்தாமரை |
| ஓரிலைத்தாமரை | மூவிலைத்தாமரை |

* இம்மூன்று சரக்குகள் இப்பிராதங்களில் கிடைக்காமையான் இக்குணங்களை முறையேயுடைய சீந்தில், நிலப்பூசனி, தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளைச் சேர்த்துக்கொள்க.

செய்பாகம்:—இக் கூறப்பட்ட 52 சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடையும் நிலவேம்பு 26 வராகனெடையும் எடுத்துக்கொண்டு காயவைத்து இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்க.

பிரயோகம் :—தினம் காலை மாலை ¼ தோலா விகிதம் வெந்நீரில் கலக்கிச் சாப்பிட்டுக் கொண்டுவரச் சரீரத்தில் குடிகொண்டுள்ள நாட்பட்ட வாதசுரம், பித்தசுரம், கபசுரம், தொந்தசுரம், அஸ்திசுரம், பலவித மாறல்சுரம், இரத்தக் கெடுதல், மார்வலி, காமாலை, பக்கசூலை, சுவாசகாசம் முதலியவைகள் பரிகாரமாகும். சுரமிருக்கும்போது அதனை விரைவில் பரிகரிக்கத் தக்க ஏதேனும் ஔடதமுண்டு பின்னர் இச்சூர்ணத்தை உபயோகிக்க. இவ்வாறு 20 அல்லது 40 நாள் சாப்பிடப் பின்னர் எக்காரணத்தானும் சுரம் வராது.

பத்தியம் :—இச்சாபத்தியம்.

## 80. மல்லிச் சூரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| சரக்கு.—பறங்கிச்சக்கை | பலம் 1 | ஏலம் | பலம் 1 |
| அதிமதுரம் | ... 1 | சன்னலவங்கப்பட்டை | 1 |
| கருஞ்சீரகம் | ... 1 | கிராம்பு | ... 1 |
| சீரகம் | ... 1 | விரையில்லாத்திராக்ஷை | 1 |
| சாஜிரா | ... 1 | தனியா | ... 9 |

செய்பாகம் :—இக் கூறப்பட்ட 10 சரக்குகளில் தனியாவை நன்கு இரவியிலுலர்த்தியும் மற்ற 9 சரக்குகளையும் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணித்துச் சமனெடை கற்கண்டு சூரணம் கலந்து வைத்துக்கொள்க.

பிரயோகம்:—வேளை ½ தொலா விகிதம் தினம் இருவேளை வெந்நீரிலேனும், பாலிலேனும் கலக்கிச்சாப்பிடத் தொண்டைப் புண், விக்கல், வாந்தி, காதடைப்பு, தொண்டைக்கம்மல், அதிக வியர்வை விடுதல், சுக்கில சுரோணிதக்கெடுதல், மூத்திர எரிவு, கைக்கால் எரிச்சல், அரோசிகம் முதலிய யாவும் குணமாகும்.

பத்தியம்:—இதைக் கொள்ளுங்கால் காரசார ஆகாரங்களை கூடியவரையில் தவிர்த்து ஸ்திரீசங்கமத்தில் எண்ணங்கொள்ளாதிருத்தல் வேண்டுமென்றறிக.

## 81. தாளிசபத்திரி சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—மிளகு வராகனெடை | 2½ | கல்நார் வராகனெடை | 2½ |
| தாளிசபத்திரி ... | 12½ | கோஷ்டம் ... | 2½ |
| சுக்கு ... | 2½ | சிவதைவேர் ... | 2½ |
| திப்பிலி ... | 2½ | மாசிக்காய் ... | 2½ |
| கடுக்காய் ... | 2½ | கருடன்கிழங்கு ... | 2½ |
| தான்றிக்காய் ... | 2½ | கடுகரோகணி ... | 2½ |
| நெல்லிவற்றல் ... | 2½ | சன்னலவங்கப்பட்டை... | 2½ |
| சிற்றரத்தை ... | 2½ | ஓமம் ... | 2½ |
| ஜாதிக்காய் ... | 2½ | சாத்திரபேதி ... | 2½ |
| ஜாதிபத்திரி ... | 2½ | இஞ்சி பலம் | 2 |
| அதிமதுரம் ... | 2½ | சீரகம் ... | 2 |
| கிராம்பு ... | 2½ | கூகைநீர் ... | 3 |

செய்பாகம்:—இக்கூறிய இருபத்துநான்கு சரக்குகளில் இஞ்சியை மேல்தோல் சீவிச் சிறு துண்டுகளாக நறுக்கி நெய்விட்டு வறுத்தும், சீரகம், கூகைநீர் இவ்விரண்டையும் ஒருநாள் பசும் பாலி லூறப்போட்டு, மறுநாள் பாலை வடித்தும், மற்றவைகளுடனிவை தம்மையும் இரவிலுலர்த்தி யிடித்துச் சூரணம் செய்து சமனெடைச் சீனி சர்க்கரை சேர்த்து வைத்துக்கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு ½ தோலா விகிதம் தினம் இரு வேளை பசும்பாலிலேனும் நெய்யிலேனும் இருபதுநாள் உட்கொள்ள உஷ்ணவாயு, மூலவாயு, உஷ்ணசுரம், அஷ்டகுன்மம், மயக்கம், மேகசுரம், பித்தசுரம், தாகம், கைகால் எரிச்சல், வியர்வை, நெஞ்சடைப்பு, அக்கினிமந்தம், கிறுகிறுப்பு, ஏப்பம், வாய்நீரூறல் (சுரக்கணைரோகம்) மார்நோய் முதலியவை குணப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 82. இலகுகங்காதர சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—வில்வவேர் பலம் | 1 | லோத்திரா பலம் ... | 1 |
| கோரைக்கிழங்கு ... | 1 | இலவம்பட்டை ... | 1 |
| வெட்பாலரிசி ... | 1 | காட்டாத்திப்பூ ... | 1 |

செய்பாகம்:—இக்கூறிய ஆறு சரக்குகளையும் இடித்துச் சூரணம் செய்துகொண்டு அதனோடு சமநிறை சக்கரையுங்கூட்டி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் காலே மாலே ½ தோலா விகிதம் சாப்பிட்டு உடனே புளிப்புமோர் பருகுக. இதனுல் அதிசாரம், கிராணி, பழையபேதி, சீதபேதி முதலியன பரிகாரமாகும்.

பத்தியம்:—காரசார மற்றதும் எளிதில் ஜீரணிக்கத் தக்கதுமான ஆகாரம் உட்கொள்ளல் வேண்டும்.

## 83. வ்ருத்தகங்காதர சூரணம்.

சரக்கு:—கோரைக்கிழங்கு — இலவம்பட்டை
வாகைப்பட்டை — வட்டத்திருப்பி
சுக்கு — வெட்பாலேயரிசி
காட்டாத்திப்பூ — குடசப்பாலே
லோத்திரா — அதிவிடயம்
வெட்டிவேர் — மாம்பருப்பு
வில்வவேர் — தொட்டால்சிணுங்கி

செய்பாகம்:—இக்கூறிய பதினுன்கு சரக்குகளேயும் சமநிறையாக இடித்துச் சூரணித்துக் கொள்க

பிரயோகம்:—தினம் இருவேளே காலே மாலே ½ தோலா சூரணத்தில் தேன்விட்டுக் குழைத்தேனும், அரிசி கழுவிய ஜலத்துடன் கலக்கியேனும் சாப்பிட்டுவர அதிசாரம், கிராணி, பழையபேதி முதலியன தவருமல் குணமாகும்.

பத்தியம்:—முற்கூறியதே.

## 84. சிதோபலாதிச் சூரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| சரக்கு—கற்கண்டு | பலம் 16 | ஏலரிசி | பலம் | 2 |
| மூங்கிலுப்பு | ... 8 | இலவங்கப்பட்டை | ... | 1 |
| திப்பலி | ... 4 | | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஐந்து சரக்குகளேயும் இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—இச்சூரணத்தில் வேளேக்கு ¼ தோலா விதம் தினம் இருவேளே பாலில் கலக்கிச் சாப்பிட்டுக் கொண்டுவர அஸ்திஜ்வரம், இருமல், இரத்தப்பித்தம், அருசி, வாந்தி, அக்கினிமந்தம், கைகால் எரிச்சல் முதலியவைகளேக் குணப்படுத்தும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

குறிப்பு:—இந்தச் சூரணத்தின் எடைக்கு ½ பாகம் அதிமதுரச் சூர்ணமும் ஆடாதோடையிலைச் சூரணமும் கூட்டி உபயோகிக்கில் ஆரம்பமான க்ஷயகாசம், நாட்பட்ட இருமல் முதலியவை குணமாகும்.

## 85. இலவங்காதி சூரணம்

சரக்கு:—

| | | | |
|---|---|---|---|
| கிராம்பு | வராகனெடை 1 | ஓமம் | வராகனெடை 1 |
| இலவங்கப்பட்டை | ... 1 | கோஷ்டம் | ... 1 |
| சதகுப்பை | ... 1 | குரோசானி ஓமம் | ... 1 |
| மகரப்பூ | ... 1 | வாய்விளங்கம் | ... 1 |
| கருஞ்சீரகம் | ... 1 | மாசிக்காய் | ... 1 |
| ஏலம் | ... 1 | அக்ரகாரம் | ... 1 |
| தணியா | ... 1 | சமுத்திரப்பழம் | ... 1 |
| சீரகம் | ... 1 | சிறுநாகப்பூ | ... 1 |
| தாளிசபத்திரி | ... 1 | அரத்தை | ... 1 |
| சிறுதேக்கு | ... 1 | சுக்கு | ... 1 |
| திப்பலிமூலம் | ... 1 | மிளகு | ... 1 |
| செவ்வியம் | ... 1 | திப்பலி | ... 1 |
| ஜடாமாஞ்சில் | ... 1 | பொன்முசுட்டைவேர் | 1 |
| ஜாதிக்காய் | ... 1 | விலாமிச்சுவேர் | ... 1 |
| ஜாதிப்பத்திரி | ... 1 | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட இருபத்தொன்பது சரக்குகளையும் இரவிலுலர்த்தி நன்று யிடித்துச் சூரணஞ்செய்து சமனெடையான சர்க்கரை கூட்டி வைத்துக்கொள்க

பிரயோகம்:—வேளைக்கு ½ தோலா விகிதம் தினம் இருவேளை இருபது நாள் உட்கொள்ள சூதகவாயு, பேதி, சுரம், தாகம், கைகால் எரிச்சல், இருதய அடைப்பு, மயக்கம், மூலம், பெரும்பாடு, இருமல், இரைப்பு, எலும்புருக்கி முதலிய வியாதிகளைப் பரிக்ரிக்கும்

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 86. தபாஷீர் சூரணம்

சரக்கு:—

| | | | |
|---|---|---|---|
| ஏலரிசி | பலம் 1 | கற்கண்டு | பலம் 4 |
| மூங்கிலுப்பு | ... 1 | அசல் சீந்தில் சர்க்கரை | ... 1 |
| பூமாதளம்பூ | ... 1 | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஐந்து சரக்குகளையும் இடித்துச் சூரணித்துக் கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு ¼ தோலா வீதம் தினம் இருவேளை பசும்பாலிற் கலக்கிச் சாப்பிடப் பத்துநாளில் க்ஷயத்திற் கண்ட மேக அழலை, மது மேகத்தாலுண்டான அதிதாகம் இவைகள் நிவர்த்தியாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்

## 87. அக்கினிமுகச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—பெருங்காயம் | பலம் | 2 | ஓமம் | பலம் | 10 |
| வசம்பு | ... | 4 | கடுக்காய் | ... | 12 |
| திப்பலி | ... | 6 | சித்திரமூலம் | ... | 14 |
| சுக்கு | ... | 8 | கோஷ்டம் | ... | 16 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட எட்டுச் சரக்கினையும் முறைப்படி யிடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க.

பிரயோகம்:—இதனை ½ தோலா வீதம் தினம் இருவேளை ஒரு மிணர் தண்ணீருடனுண்ண வயிற்றிலுண்டாகும் பற்பல சங்கடங்களை நிவர்த்தித்து அஜீரணத்தை நீக்கிப் பசிதீபனத்தை உண்டாக்கும்.

## 88. காய்ச்சுக்கட்டி சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—காய்ச்சுக்கட்டி | பலம் | 3 | கிராம்பு | பலம் | 2 |
| இலவங்கப்பட்டை | ... | 3 | ஜாதிக்காய் | ... | 1 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட நான்கு சரக்குகளையும் தனித்தனிச் சூரணங்களாகச் செய்து ஒருமிக்க யாவற்றையுங் கலந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு 5 முதல் 10 குன்றிநிறை நெய், சர்க்கரை முதலியவற்றில் கலந்து தினம் 3 நேரம் 3 நாள் கொள்ள சீதபேதி, இரத்தபேதி குணமாகும்.

பத்தியம்:—க்ஷாரமில்லாததும் எளிதில் ஜீரணிக்கக்கூடிய கஞ்சி முதலியவைகளாம்.

## 89. அருதா மாத்திரை

சரக்கு:—மிளகு வராகனெடை 2 கோரோசனை வராகனெடை 1
குங்குமப்பூ ... 1 உரித்த வெள்ளைப்பூண்டு 2
பச்சை சதாப்பு இலை 8

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்குகள் ஐந்தையும் கல்வத்தி லிட்டுக் கையோயாமல் ஒரு *ஜாமம் அரைக்க. மெழுகு பதத்திற்கு வரப்போதிய ஈரமில்லாவிடின் நோயற்ற ஸ்திரீயின் முலைப் பால் சிறிது சேர்த்து அரைத்து, பச்சைப்பயிறு அளவில் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் புட்டியில் பத்திரமாக வைக்க.

பிரயோகம்:—ஒருவயதுக் குட்பட்ட குழந்தைகட்கு வேளைக்கு ஒரு மாத்திரை விகிதம் தினம் ஒன்றுக்கு இரண்டு அல்லது மூன்று வேளை முலைப்பாலில் கொடுக்க, சுரம், வலி, மாந்த இருமல் முதலிய பிணிகள் தீரும்.

பத்தியம்:—தாய் இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

## 90. பாலசஞ்சீவி மாத்திரை.

| | | | | |
|---|---|---|---|---|
| சரக்கு:—சுக்கு | பலம் $\frac{1}{4}$ | ஓமம் | ... | $\frac{1}{4}$ |
| மிளகு | ... $\frac{1}{4}$ | கிராம்பு | ... | $\frac{1}{4}$ |
| திப்பலி | ... $\frac{1}{4}$ | இலிங்கம் | ... | $\frac{1}{4}$ |
| | | வெங்காரம் | ... | $\frac{1}{4}$ |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஏழு சரக்குகளையும் தனித் தனிச் சூரணமாக்கிக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றில் இரண்டு ஜாமம் அரைத்து உழுந்து பிரமாணமாக மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—குழந்தை பிறந்த பதினைந்துநாட்கள் தொடங்கி ஒரு வருடம்வரை தேகக்கூற்றுக்குத் தக்கவாறு இரண்டு அல்லது மூன்று மாத்திரை மூன்று நாள் ஆறுவேளை முலைப் பாலில் கொடுக்கச் சுரம், ஜன்னி தீரும்.

---

* ஜாமம்—மூன்றுமணிநேரம்.

துளசி அல்லது கஞ்சாங்கோரையைப் பிட்டு அவித்துப் பிழிந்த இரசத்தில் கொடுக்கக் கடுமையான சுரங்கள் தீரும்.

பத்தியம்:—பாலுண்ணும் குழந்தைகட்குக் கொடுக்கும்போது தாய் புளிநீக்கி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:—இலிங்கத்தை மூன்றுநாள் முலைப்பாலில் ஊற வைக்க. வெங்காரத்தைப் பொரித்த பின்னரே எடைகொள்க.

## 91. ஆநந்தபைரவ மாத்திரை.

சரக்கு:—சுக்கு, மிளகு, திப்பலி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், மாசிக்காய், வெங்காரம், இலிங்கம், கந்தகம், வெண்நாவி

செய்பாகம்:—இக்கூறிய சரக்குகள் பத்தையும் சமநிறையாகச் சூரணித்துக் கல்வத்திலிட்டு மூன்றுநாள் பழச்சாற்றிலரைத்து மிளகு அளவாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்துக.

பிரயோகம்:—தும்பைப்பூரசம், தேன், இஞ்சிசுரசம், முலைப்பால் இவைகளுள் ஏதேனும் ஒன்றிற் கொடுக்க, சர்வ சுரங்களும் மாந்தமும் தீரும்.

மாத்திரையின் பிரமாணம்

| | |
|---|---|
| குழந்தை பிறந்ததுமுதல் மூன்றுமாதங்காறும் | $\frac{1}{4}$ மாத்திரையும் |
| மூன்று மாதத்திற்குமேல் ஆறுமாதவரை | $\frac{1}{2}$ மாத்திரையும் |
| ஆறு மாதத்திற்குமேல் ஒருவருடம்வரை | 1 மாத்திரையும் |

கொடுத்தல் நன்று.

பத்தியம்:—பாலுண்ணும் குழந்தைகளாக இருப்பின் தாய் புளிநீக்கி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

## 92. பச்சைக்கருப்பூற மாத்திரை.

சரக்கு:—ஜாதிக்காய் கழஞ்சி 2, சுத்திவாளம் கழஞ்சி 6, பச்சைக்கருப்பூறம் ... 2, இலவங்கப்பட்டை ... 2

செய்பாகம்:—இக்கூறிய சரக்குகள் நான்கினையும் கல்வத்திலிட்டு குமரிச்சாற்றால் இரண்டு சாமம் அரைத்து உழுந்து அள

வாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—குழந்தைகளின் பருவத்திற்கு இசைந்தவாறு 1 அல்லது 2 மாத்திரையை நுணிக்கிச் சிறிது சர்க்கரையுடன் கலந்தேனும் தேனில் மத்தித்தேனும் காலைநேரத்தில் கொடுக்க மூன்றே முக்கால் நாழிகைக்குள் விரேசனமாகி சுரம் விடும்.

பத்தியம்:—பாலுண்ணுங் குழந்தைகளாக இருப்பின் தாய் புளி நீக்கி இச்சாபத்தியங் கொள்ளல் வேண்டும்.

## 93. கஸ்தூரி மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—கோரசனை வராகனெடை | $\frac{1}{4}$ | இலவங்கப்பட்டை ... | $\frac{1}{4}$ |
| பச்சைக் கருப்பூறம் ... | $\frac{1}{2}$ | ஜடாமாஞ்சில் ... | $\frac{1}{4}$ |
| குங்குமப்பூ ... | $\frac{1}{2}$ | ஜாதிக்காய் ... | $\frac{1}{4}$ |
| சாம்பிராணிபதங்கம் ... | $\frac{1}{4}$ | கஸ்தூரி குன்றிஎடை | 3 |
| தாளிசபத்திரி ... | $\frac{1}{4}$ | ஜான்னு ... | 4 |
| திப்பலி ... | $\frac{1}{4}$ | * இரச சிந்தூரம் ... | 8 |
| அக்கரகாரம் ... | $\frac{1}{4}$ | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பதின்மூன்று சரக்குகளுள் சூரணிக்கத் தக்கவைகளைச் சூரணித்தும் ஏனையவற்றை வெறுமனே கல்வத்திட்டும் ஈசுவரமூலிகை கஷாயத்திலரைத்துப் பச்சைப்பயிறு, உழுந்து பிரமாணமாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—குழந்தைகட்கு உண்டாகும் எத்தகைய சுரங்கட்கும் துளசி சாற்றிலேனும் நாய்துளசி சாற்றிலேனும் இவ்விரண்டும் கிடையாக்காலத்து முலைப்பாலிலேனும் உறைத்து தினம் இரண்டுவேளையாக மூன்றுநாள் கொடுக்க.

குழந்தைகட்கு மார்பில் கோழை மிகுந்திருப்பின் முசுமுசுக்கைச் சாற்றில் இரும்பைச் சிவக்கக்காய்ச்சித் தோய்த்து வடித்த இரசத்தில் உறைத்துக் கொடுக்க நிவர்த்தியாகும்.

குழந்தைகட்கு இழுப்பு,ஜன்னி சம்பந்தப்பட்டபோது துளசி தும்பைப்பூ இவ்விரண்டையும் பிட்டு அவித்துப் பிழிந்த சாற்றில் கொடுக்கத் தீரும்.

---

* இரச சிந்தூரமுறையைச் சிந்தூர இலம்பகத்திற் காண்க.

குழந்தைகட்குத் தலைபிடி இருப்பதாக உணரின் இம்மாத்திரையில் இரண்டைக் காடியிலேனும் பிராந்தியிலேனும் உரைத்து நெற்றியில் பற்றுப்போட உடனே நீங்கும்.

குழந்தைகட்குக் கொடுக்கும் அளவு:—பிறந்ததுமுதல் ஆறுமாதம் வரை வேளைக்கு ½ மாத்திரையும், ஆறுமாதத்திற்குமேல் ஒருவருஷம் மட்டும் ¾ மாத்திரையும்,ஒருவருடத்திற்குமேல்ஐந்து வருடங்களும் ஒருமாத்திரையும், அதற்குமேல் வயதுக்குத்தக்கவாறு இரண்டு மூன்ருகவும் அறிந்து கொடுக்க. இவ்வளவில் மிகினுங் குறையினும் தீங்கின்று.

பத்தியம்:—பாலுண்ணும் குழந்தைகட்குக்கொடுக்கும்போது வியாதி நீங்கும் வரைக்கும் புளி, தேங்காய், மாங்காய், மாப்பண்டம், முட்டை, கடலை, மொச்சை, பழைய அன்னம், மீன், கருவாடு, எள்ளு, கொள்ளு முதலியவற்றைத் தாய் சேர்த்தல்கூடாது.

குறிப்பு:—குழந்தைகட்கேயன்றிப் பெரியோர்கட்கும் பயன்பட இம்மாத்திரைகளில் இரண்டு அல்லது மூன்றைத் தேனில் இழைத்துத் தினம் இருவேளை மூன்றுநாள் உட்கொள்ளக் கடுமையான ஜலதோஷம், சுரம், தலைவலி,பிடரிவலி, கைகாலசதி சைத்தியம் முதலியவைகள் நீங்கும். தவிர, வேளைக்கு ½ குன்றிஇலிங்கச் சிந்தூரத்துடன் இம்மாத்திரையி லொன்றைச் சேர்த்துத் தேனில் மத்தித்துத் தினம் 2, 3, வேளையாக 3 நாள் சாப்பிட அசாத்திய சுரங்களும் குணப்படும்.

## 94. கஸ்தூரி மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—கஸ்தூரி வராகனெடை | ⅛ | அதிமதுரம் வராகனெ | ½ |
| கோரோசனை ... | ¼ | திப்பலி ... | ½ |
| குங்குமப்பூ ... | ½ | கோஷ்டம் ... | ½ |
| பச்சை கருப்பூறம்... | ½ | அக்கர காரம் ... | ½ |
| இலிங்கம் ... | 1 | கிராம்பு ... | ½ |
| | | பொரித்தவெங்காரம் | ½ |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்குகள் பதினொன்றையும் கல்வத்தில் போட்டு முலைப்பாலிலும் இஞ்சிச் சாற்றிலும் தனித்தனி இரண்டுஜாமம் கையோயாமல் அரைத்து மெழுகு பதத்தில் உழுந்தளவு மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்துக.

பிரயோகம்:—குழந்தைகட்கு உண்டாகும் எத்தகைய சுரங்கட்கும் துளசி சாற்றிலேனும் நாய்த்துளசி சாற்றிலேனும் இவ்விரண்டும் கிடைக்கப் பெறுதகாலத்தில் தேன் முலைப்பாலிலேனும் கொடுக்க தீரும்.

பத்தியம்:—பாலுண்ணும் குழந்தைகட்குக்கொடுக்கும்போது வியாதி நீங்கும்வரையில் தாய் இச்சாபத்தியமாக விருப்பதுடன் புளியைச் சேர்க்காது இருத்தல் மிக்ககுணத்திற்கு இடமென்றறிக.

## 95. கோரோசன மாத்திரை.

சரக்கு:—வெள்ளை அப்பிரகநவநீதம் ஏலம்

| | |
|---|---|
| பூரம் | கிராம்பு |
| இரசசிந்தூரம் | கோஷ்டம் |
| கோரோசனை | சுக்கு |
| குங்குமப்பூ | மிளகு |
| பச்சைக்கருப்பூரம் | திப்பலி |

செய்பாகம்:—இக்கூறிய சரக்குகள் பன்னிரண்டினையும் சமனிறையாக எடுத்துக் கொண்டு சூரணிக்க வேண்டியவற்றைச் சூரணித்தும் பிறவற்றை வெறுமையாகவும் வைத்துக்கொள்க. பின்னர் முதன் மூன்று சரக்குகளைக் கல்வத்திலிட்டுச் சந்தனக்கஷாயத்தால் இரண்டு அல்லது மூன்று ஜாமம் அரைத்து, அப்பிரகத் தளுக்குமாறியபின் மற்றை ஒன்பது சரக்குகளையும்முறையே ஒன்றன்பின் னொன்றாகச் சேர்த்து, அச்சந்தனக்கஷாயத்தினாலேயே மற்றுமொரு ஜாமம் கையோயாமல் அரைத்து, மறுநாள் சண்பகப்பூ கஷாயத்தினால் ஒருஜாமமும் குங்குமப்பூ கஷாயத்தினால் ஒருஜாமமும் அரைத்து, மிளகு அளவேனும் குன்றி அளவேனும் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—வயதுக்குத் தக்கவாறு $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1, மாத்திரையாக தேன், முலைப்பால், இஞ்சிசுரசம் முதலியவற்றில் உரைத்துக்கொடுக்க ஜன்னி 32, தொண்டைக்கட்டு 96, மண்டையிடி, சூலை, தோஷசுரம் முதலிய பிணிகள் நீங்கும்.

பத்தியம்:—நோயின் தன்மைக்கு ஏற்றவாறு புளிநீக்கியும் நீக்காமலும் இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:—வெள்ளை அப்பிரகத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி அதற்கு நான்குபங்கு எடைகொண்ட சேமைக்கிழங்கோடு கல்லுரலில்போட்டு, கடப்பாரையான் நன்கு இடித்துச் சிதையாமல் ஒரு சிறுமட்குடத்தில் வழித்துக்கொண்டு, சிறிது தண்ணீர்விட்டுக் கரைத்து ஒரு ஜாமம் எரித்துப், பின்னர் ஜலம்விட்டுக்கிழங்கின் வழுவழுப்பு நீங்கும்வரை நன்ருகக் கரைத்துத் தெளிவையிறுத்து அடியிலுறைந்திருக்கும் அப்பிரகத்தை மறுவலும் கல்வத்திலிட்டுஅரைக்க விரைவிலரைபடும். இவ்வாறு முடிக்கப்பட்டதே இங்கு அப்பிரகநவநீதம் எனப்படும்.

இனி, அப்பிரகத்தைத் தனியே சேர்த்தல் தீமை பயக்கும் என்னுங் கருத்தான் பலர் சிந்தூரமாகவேனும் பற்பமாகவேனும் உபயோகிப்பர். அவ்வாறுதொல்லாசிரியர் கூருமையானும், தனி அப்பிரகம் இரசவர்க்கங்களோடு சேர்ந்து தீமை எதும் பயவாமையானும், இங்ஙனம் முடிக்கப்பட்ட ஔடதப்பிரயோகத்தான் மிக்க நன்மைவிளைதல் அநுபவத்தான் அறியப்படுதலானும், அப்பிரகம் தனியாகச் சேர்த்தலே சிறந்தது என்க.

## 96. கோரோசனை மாத்திரை

| | | | | |
|---|---|---|---|---|
| சரக்கு:—கோரோசனை வராகனெ | $\frac{1}{2}$ | சுக்கு | பலம் | $\frac{1}{8}$ |
| குங்குமப்பூ | $\frac{1}{2}$ | அதிமதுரம் | ... | $\frac{1}{8}$ |
| கஸ்தூரி | $\frac{1}{4}$ | அக்கரகாரம் | ... | $\frac{1}{8}$ |
| பச்சைக்கருப்பூரம் | $\frac{1}{2}$ | கோஷ்டம் | ... | $\frac{1}{8}$ |
| சாம்பிராணிப்பதங்கம் | $\frac{1}{2}$ | ஏலம் | ... | $\frac{1}{8}$ |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பத்துச் சரக்கினையும் கல்வத்தில் போட்டு மாசிப்பத்திரிச்சாறு, குங்குமப்பூ, சந்தனம், வெட்டிவேர் இவைகளின் கஷாயத்தால் தனித்தனி ஒவ்வொரு சாமம் அரைத்துப் பயறு அளவு மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்துக.

பிரயோகம்:—குழந்தைகட்கு வயதுக்குத் தக்கபடி $\frac{1}{2}$, 1 ஆக தேன், முலைப்பால், இஞ்சிசுரசம் முதலியவற்றில் கொடுக்க ஜன்னி, தொண்டைக்கட்டு, தோஷசுரம் முதலிய பிணிகள்யாவும் நீங்கும்.

பத்தியம்:—குழந்தையினது நோயின் தன்மைச் கிசைந்தவாறு புளிநீக்கியும் நீக்காமலும் இச்சாபத்தியமாக தாய்இருத்தல் நன்று.

## 97. அமுர்தாதிக் குளிகை

சரக்கு:—அதிமதுரம், வெட்டிவேர், சண்பகப்பூ, கோஷ்டம், ஏலம், மாசிப்பத்திரி, கோரோசனை, விலாமிச்சுவேர், சாத்திரபேதி

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்குகள் ஒன்பதையும் சமனெடையாகக் கல்வத்தில் போட்டு, ஆதொண்டைச்சாறுவிட்டு, ஒருஜாமம் கையோயாமல் அரைத்து உழுந்து, குன்றி பிரமாணம் மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்தவும்.

பிரயோகம்:—இதனைக் குழந்தைகட்கு முலைப்பாலில் கொடுக்க எட்டுவித மாந்தமும், நாவரட்சி, சுரம், தோஷம் முதலியவைகள் யாவும் நீங்கும்.

பத்தியம்:—பாலுண்ணும் குழந்தையாக இருப்பின் தாய் புளித்தள்ளி இச்சாப்பத்தியமாக இருக்கவேண்டும்.

## 98. வேறு

சரக்கு:—அதிமதுரம், சாத்திரபேதி, கோஷ்டம், சண்பகப்பூ, ஏலம், மாசிக்காய், கோரோசனை, கிராம்பு

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்கு எட்டினையும் வகைக்குப் பலம் $\frac{1}{4}$ கல்வத்தில்போட்டு மாசிப்பத்திரிவேர், வெட்டிவேர், கருந்துளசிவேர், விலாமிச்சுவேர் சமனாகக்கூட்டி 8 மடங்கு ஜலம்விட்டு ஒன்றாகக்காய்ச்சிய கஷாயத்தால் இருஜாமம் கையோயாமல் அரைத்து முன்போல் மாத்திரை செய்து நிழலில் உலர்த்திச்செப்பிலிடுக.

பிரயோகம்:—மாத்திரையை மாசிப் பத்திரிக் கஷாயத்தில் கொடுக்க, எட்டுவித மாந்தம் தீரும். கிராம்புக் கஷாயத்தில்கொடுக்க மாந்தசுரம், வாந்தி தீரும். முலைப்பாலில் கொடுக்க, குடல்படுவன், நீர்பாடு, வயிற்றுப்பிசம், இருமல், நாவரட்சி, வயிற்றெரிவு முதலியவை நீங்கும்.

பத்தியம்:—முற்கூறியவாறே.

## 99. லக்ஷ்மீநாராயண மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—நிர்விஷம் | பலம் 1/4 | மிளகு | பலம் 1/4 |
| தாளகம் | ... 1/4 | திப்பலி | ... 1/4 |
| நாவி | ... 1/4 | மனேசிலை | ... 1/4 |
| இரசம் | ... 1/4 | காந்தம் | ... 1/4 |
| கடுக்காய் | ... 1/4 | கந்தகம் | ... 1/4 |
| தான்றிக்காய் | ... 1/4 | பூரம் | ... 1/4 |
| நெல்லிவற்றல் | ... 1/4 | சுத்திசெய்தவாளம் | ... 1 |
| சுக்கு | ... 1/4 | இலிங்கம் | ... 1/4 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பதினாறு சரக்குகளையும் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாற்றில் ஆறு ஜாமமரைத்து, உழுந்து அல்லது மிளகுப் பிரமாணத்தில் மாத்திரைகள்செய்து, நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—

சன்னிக்கு—பழச்சாற்றில் கலிக்கமிடுக. மாத்திரையைத் தூள்செய்து நாசியில் வைத்தூதுக சிறுநீரில் உள்ளுக்குக் கொடுக்க. சிற்றரத்தையை ஜலம்விட்டு அரைத்துப் பொங்கவைத்து வடித்த கஷாயத்தில் மாத்திரையுடன் கோரோசனை சேர்த்துக்கொடுக்க.

தேள்கொடுக்கு—சுண்ணநீரி லுரைத்துக் கொட்டுவாயில் தடவி அனலில் காய்ச்சுக.

மூலக்கிராணிக்கு—நெல்லிக்காய்ச் சாற்றிற் கொடுக்க.

வயிற்றுக்கழிச்சலுக்கு—எருமைத்தயிரில் கொடுக்க.

எரி துன்மந்திரத்திற்கு—சீரகச்சூரணத்தில் சர்க்கரைக் கலந்துகொடுக்க.

ஒற்றைத்தலைவலிக்கு—பழச்சாற்றில் கொடுக்க.

சுரத்திற்கு—வேப்பிலைக்கஷாயத்தில் கொடுக்க.

சன்னிபாதத்திற்கு—காடி அல்லது சாராயத்தில் கொடுக்க.

வீக்கத்திற்கு—நீலிச்சாற்றில் கொடுக்க.

வலிதுன்மந்திரத்திற்கு—சர்க்கரை அல்லது நொச்சிச்சாற்றில் கொடுக்க

அஸ்திசுரம்—புளியம்பட்டைக் கஷாயத்தில் கொடுக்க.

அஜீரணம்— ... ... ... ...

பாண்டுக்கு, காமாலைக்கு—கோநீரில் கொடுக்க.

இரத்தப் பிரமேகத்திற்கு—எருக்கிலை, உப்பு, மிதிப்பாக விலைப்போட்டு இடித்துப் பிழிந்த சாற்றில் கொடுக்க.

பித்தப் பிரமேகத்திற்கு—வெள்ளாட்டுப்பாலில் சக்கரையிட்டுக் கொடுக்க.

பீலிகைக்கு—நீலிச்சாற்றில் கொடுக்க.

மகோதரத்திற்கு—தேனில் கொடுக்க.

இரசமருந்து தோஷத்தி னுண்டான பிடிப்புக்கு—தேங்காய்ப் பாலில் கொடுக்க.

வயிற்றெரிச்சலுக்கு—நொச்சிச் சாற்றில் கொடுக்க.

வாயுக்கு—தேனில் கொடுக்க.

குழந்தைகள் மாந்தத்திற்கு—முலைப்பாலில் கொடுக்க.

முறைசுரத்திற்கு—இஞ்சிச்சாற்றில் கொடுக்க.

முடக்குவாயுக்கு—திப்பலிக் கஷாயத்தில் தேன் சேர்த்துக் கொடுக்க.

ஊதுகாமாலைக்கு—வெள்ளாட்டு நீரில் கொடுக்க.

விடாசுரத்திற்கு—கையாந்கரைச் சாற்றில் கொடுக்க.

கீல்வாயுக்கு—வசம்பும் ஓமமும் சேர்ந்த சூரணத்தில் கொடுக்க.

சூலைக்கு—மேல்தோல் நீங்கிய சிந்தில்கொடி, சுக்கு, தணியா, திப்பலி, இவைகள் சேர்ந்த கஷாயத்தில் கொடுக்க.

பெரியோர்கட்கு மாத்திரையின் அளவு.

குன்றிப் பிரமாணமுள்ள மாத்திரையில் இரண்டுமுதல் மூன்றுமாத்திரை உட்கொள்க. பேதியாகாத சுபாவமுடையோர் மறுமுறை உட்கொள்ளுங்கால் ஒன்றிரண்டு அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தைகட்கு மாத்திரையின் அளவு.

உழுந்தளவான மாத்திரையில்

| | |
|---|---|
| உற்பவமுதல் 3 மாதம் வரை | $\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ மாத்திரை |
| 4 மாதமுதல் 6 மாதம் வரை | 1 முதல் $1\frac{1}{2}$ மாத்திரை |
| 7 மாதமுதல் 1 வருடம் வரை | $1\frac{1}{2}$முதல் $2\frac{1}{2}$ மாத்திரை |
| 2 வருடமுதல் 5 வருடம் வரை, | 2, 3, அல்லது 4. |

பத்தியம்:—நல்லெண்ணெய், கடுகு, புளி, தேங்காய், மாங்காய், மாப்பண்டம் முதலியவைகளை நீக்கி இச்சாபத்தியம் கொள்க. பாலுண்ணும் குழவிகட்குக் கொடுக்கும்போது தாய் பத்தியமாக இருத்தல்வேண்டும்.

## 100. இலவங்காதி குளிகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—கிராம்பு | வராகனெடை | 6 | இரசம் | வராகனெடை | 1 |
| மிளகு | ... | 4 | கந்தகம் | ... | 1 |
| பூரம் | ... | 1 | வெங்காரம் பொரித்தது | | 2 |
| இலிங்கம் | ... | 1 | சுத்தி வாளம் | ... | 10 |

செய்பாகம்:—இக்கூறிய சரக்குகள் எட்டினையும் கல்வத்திலிட்டு, இரண்டு பலம் கடுக்காய்த் தோலை அரைபடி ஜலத்தில் போட்டு அரைக்கால் படியாகக் காய்ச்சி, வடித்த கஷாயத்தில் இரண்டு ஜாமம் அரைத்து மொழுகு பதத்தில் உழுந்து, மிளகு பிரமாணமுள்ள மாத்திரைகள்செய்து, நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—குழந்தைகட்கு வியாதிக் கேற்றவாறு அநுபான பேதம் செய்துகொடுக்க, மாந்தம், சுரம், இழுப்பு, ஜன்னி தோஷம் முதலியன நீங்கும். தவிர, இம்மாத்திரைகளை மாதத்திற்கிரண்டுமுறை விரேசனம் கொடுத்துவர, எத்தகைய நோயும் அணுகவொட்டாமல் பாதுகாக்கும்.

பத்தியம்:—நோயின் வன்மை மென்மைக் கேற்றவாறு கடின பத்தியமாகவும், இச்சாபத்தியமாகவும் இருத்தல் வேண்டும்.

## 101. கார மாத்திரை

| | |
|---|---|
| சரக்கு:—ஓமம் | செவ்வியம் |
| கருஞ்சீரகம் | இலவங்கப்பட்டை |
| சுக்கு | மிளகரணைப்பட்டை |
| சிற்றரத்தை | கொஞ்சிப்பட்டை |
| மோடி | வெள்ளைக்காக்கட்டான் |
| வால்மிளகு | வேர்ப்பட்டை |
| கடகரோகணி | வெண்கடுகு |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பதின்மூன்று சரக்குகளையும் தனித்தனிச் சூரணித்து வகைக்குக் காற்பலமாகக் கல்வத்தி லிட்டு, நெட்டைப் பிரமட்டைச் சாற்றில் இரண்டு ஜாமம் அரைத்து, மிளகு பிரமாணமாக மாத்திரைகள் செய்து, நிழலி லுலர்த்தி வைத்துக்கொள்க.

இவ்வண்ணமே முற்கூறிய பதின்மூன்று சரக்குகளையும் சம னிறையாகக்கொண்டு இவைகளின் மொத்த எடை அளவுக்குச் சுத்திசெய்யப்பட்ட வாளம் சேர்த்து, மேற்கூறிய மூலிகைச் சாற்றினாலேயே அரைத்து உழுந்து பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—குழந்தைகட்கு ஸ்நாநஞ்செய்விக்கும் தினம், வாளம் சேராத முதல் மாத்திரையை வெந்நீரிலேனும் முலைப் பாலிலேனும் உரைத்துக்கொடுக்க, மற்றக் காலங்களில் குழந் தைகட்கு மாந்தம், கோழைக்கட்டு முதலியவைக ளிருப்பின் வாளஞ் சேர்ந்த மாத்திரையை முன்போல் உபயோகிக்க. இவ் வித இரண்டு பிரயோகங்களாலும் குழந்தைகட்கு உண்டாகும் நோய்கள் பலவற்றையும் நிவிர்த்தித்துக் கொள்ளலாம்.

## 102. வேறு முறை

சரக்கு:—ஜாதிக்காய்
கிராம்பு
சுக்கு
மிளகு
வசம்பு
கறிமஞ்சள்
ஏலம்
சடைக்கஞ்சா
தாளிசப்பத்திரி
சீனக்கற்கண்டு
மாசிக்காய்
தான்றிக்காய்த்தோல்
சீரகம்
ஓமம்
திப்பலி
ஆமையோடு
பூண்டு

செய்பாகம்:—இக்கூறிய பதினேழு சரக்குகளையும் தனித் தனிச் சூரணித்து வகைக்குப் பலம் $\frac{1}{4}$ ஆகக் கல்வத்திலிட்டு வெந் நீரால் இரண்டு ஜாமம் அரைத்து, மிளகு, குன்றி பிராமாணத்தில் மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—குழந்தைகட்கு ஸ்நாநஞ் செய்விக்கும்போ தெல்லாம் இம்மாத்திரையில் ஒன்றை வெந்நீரில் உறைத்துக் கொடுக்க, எல்லாவிதமான மாந்தங்களும் தீர்வதுடன் சவலை யுள்ள குழந்தைகளின் தேகமும் செழுமை பெறும்.

பத்தியம்:—வயதுக்குத் தக்கவாறு எளிதில் ஜீரணிக்கத் தக்க ஆகாரத்தை கொடுத்தல் வேண்டும்.

குறிப்பு:—இம் மாத்திரையைச் செய்யும்போது வசம்பைச் சுட்டுக் கரியாக்கியும், கஞ்சாவை ஏழுதரம் தண்ணீர் விட்டுக் கசக்கிக் கழுவி விதையையும் காம்பையும் நீக்கி உலரவைத்துப் பொன்வறலாக வறுத்தும், ஆமையோட்டைச் சுட்டும் சேர்த் தல் வேண்டும்.

## 103. * காக்கட்டான் மாத்திரை

சரக்கு:—சுக்கு
மிளகு
திப்பலி
கடுக்காய்த் தோல்
காக்கட்டான் வேர்ப்பட்டை
தான்றிக்காய்த் தோல்
நெல்லிவற்றல்
கந்தகம்
இரசம்

செய்பாகம்:—இங்குச் சொல்லப்பட்ட சரக்குகள் ஒன்பதை யும் தனித்தனிச் சூரணஞ்செய்து வகைக்கு வராகனெடை ஒன் றாகக் கல்வத்தில் போட்டு அதனோடு ஆறுவராகனெடை சுத்தி செய்யப்பட்ட தாளத்தைச் சேர்த்துக், கையாந்தகரைச் சாற்றில் நான்கு ஜாமம் அரைத்து, மிளகு பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—குழந்தைகட்கு இம்மாத்திரையில் ஒன்று அல்லது இரண்டு, பருவத்துக்கு இசைந்தபடி முலைப்பாலிலே னும், வெந்நீரிலேனும் கொடுக்க, ஒன்றரைமணி நேரத்துக்குள் விரேசனமாகிச் சுரம் முதலிய பிணிகள் போகும்.

பத்தியம்:—பாலருந்தும் குழந்தைகட்குக் கொடுக்கும் போது தாய் புளியை நீக்குதல் வேண்டும்.

---

* இதனைப்போன்ற பேதியாகக்கூடிய மாத்திரைகளை தினம் ஒரு வேளைக்குமேல் பிரயோகித்தல் கூடாது.

## 104. வேறு முறை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—சுக்கு | பலம் $\frac{1}{2}$ | பூரம் | பலம் 1 |
| காக்கட்டான்வேர்ப் பட்டை | ... 2 | சுத்திசெய்யப்பட்ட வாளம் | ... 1 |
| திப்பலி | ... $\frac{1}{2}$ | இலிங்கம் | ... 1 |
| கண்டங்கத்திரி வேர்ப்பட்டை பலம் $\frac{1}{2}$ | | | |

செய்பாகம்:—இக்கூறிய சரக்குகள் ஏழினையும் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றில் நான்கு ஜாமம் அரைத்துப் பச்சைப்பயிறு பிரமாணத்திற்கு மாத்திரைகளாகச் செய்து நிழலி லுலர்த்திக் கொள்க.

பிரயோகம்:—குழந்தைகட்கு உண்டாகும் சகல மாந்தரோகங்கட்கும் வெந்நீரிலாவது, முலைப்பாலிலாவது இம்மாத்திரையில் ஒன்றை உறைத்துக் கொடுக்க நீங்கும்.

பத்தியம்:—குழந்தைகளுக் குண்டான நோயின் வன்மை, மென்மையை, அறிந்து தாய் கடினபத்தியமாகவும் இச்சாபத்தியமாகவும் இருத்தல் வேண்டும்.

## 105. பூர மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—பூரம் | பலம் 3 | பூநீர் | பலம் $\frac{1}{4}$ |
| மொட்டுநீக்கிய கிராம்பு | $\frac{3}{4}$ | ஓமம் | ... $\frac{3}{4}$ |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்குகள் நான்கினையும் கல்வத்திலிட்டுத் தும்மட்டிக்காய்ச் சாற்றில் பன்னிரண்டு ஜாமம் அரைத்து மெழுகுபதத்தில் உழுந்து, மிளகு பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—குழந்தைகட்கும் பெரியோர்கட்கும் பருவத்துக்கு ஏற்றபடி அரைப்படி ஜலத்தில் சோம்பு பலம் ஒன்று, திராக்ஷை பலம் ஒன்று ஆகிய இவ்விரண்டினையும் போட்டு * அரையாழாக்காகக் காய்ச்சி அதனோடு ஒரு மாத்திரையை உறைத்துக் கொடுக்கப் பழைய மலத்தை வெளிப்படுத்திச் சிறுநீரைப் பெருக்கி எப்பருவத்தினரும் நோயற்றவாழ்வை அநுபவித்தற்கு இன்றியமையாத் திவ்ய ஔஷதமாகும்.

---

* குழந்தைகட்கு அரையாழாக்குக் கஷாயத்தில் பத்திலொருபங்கு உபயோகித்தல் வேண்டும்.

அன்றியும், குழந்தைகட்கு உண்டாகும் சகல மாந்தம், கரப்பான், முதலிய பிணிகளையும், பெரியவர்கட்குண்டாகும் மேகவாயு, கைகால் பிடிப்பு, சர்வாங்கவலி, குடைச்சல், முதலிய பிணிகளையும் குணப்படுத்தும்.

பத்தியம்:—புளிப்பு நீக்கி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

## 106. கருப்பூர மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—ஏலரிசிசூரணம் | வராகன் 1 | கருப்பூரம் | வராகன் ¼ |
| சுத்திசெய்த கந்தகம் | ... 1 | சிற்றண்டத்தைலம் | துளி 120 (¼-அவுனஸ்) |

செய்பாகம்:—இக்கூறிய நான்கு சரக்குகளையும் கல்வத்திலிட்டு அரைத்து முப்பது மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—ஒரு வருடத்துக் குட்பட்ட குழந்தைகட்கு ½ மாத்திரையும் அதற்கு மேற்பட்ட குழந்தைகட்கு 1 மாத்திரையுமாகத் தேனிலாவது மூலைப்பாலிலாவது தினம் இருவேளை மூன்றுநாள் கொடுக்கக் குழந்தைகட்கு உண்டாகும் கக்கு இருமல் குணமாகும்.

பத்தியம்:—ஆகாரம் உட்கொள்ளும் குழந்தைகளாக இருப்பின் உப்பு, புளி நீக்கல் வேண்டும். பாலுண்ணும் குழந்தைக்குத் தாய் புளி நீக்கி இச்சாபத்தியம் கொள்ளல் வேண்டும்.

## 107. ஜான்னு மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—வெண்மிளகு | கழஞ்சி 1 | பெருங்காயம் | கழஞ்சி 1 |
| குங்குமப்பூ | ... 1 | அக்கரகாரம் | ... 1 |
| ஜான்னு | ... 1 | குரோசானி ஓமம் | ... 1 |
| ஜாதிக்காய் | ... 1 | வாதுமைப்பருப்பு தோலுரித்தது | ... 8 |
| அபினி | ... 1 | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்குகள் ஒன்பதினையும் கல்வத்திலிட்டு மெழுகு பதத்திற்குப் போதிய ஈரமுண்டாக மூலைப்பால் சிறிதுவிட்டு அரைத்துக் குன்றியளவில் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—பெரியவர்கட்குச் சிரசில் உண்டாகும் சீதள சம்பந்தமான தலைவலி, பிடரிவலி, ஜலதோஷம் சைத்தியம், காது குத்தல், முதலிய பல நோய்கட்கு வேளைக்கு ஒரு மாத்திரை விகிதம் தினம் இரண்டுவேளை மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

பத்தியம்:—கிடையாது.

### 108. விஷ்ணுசக்கர மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—இரசம் | கழஞ்சி 1 | காந்தம் | கழஞ்சி 1 |
| இலிங்கம் | ... 1 | அரிதாரம் | ... 1 |
| கந்தகம் | ... 1 | மனோசிலை | ... 1 |
| நாவி | ... 1 | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஏழு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றினால் மூன்றுஜாம மரைத்து, மிளகு பிரமாணத்தில் மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் இருவேளை பிணிக்குத் தக்கவாறு தேன், திரிகடுகு, இஞ்சிரசம் முதலிய அனுபானங்களிற் கொள்ளப் பக்க சூலை, வாதரோகம், பதின்மூன்று வகைப்பட்ட ஜன்னி தோஷங்கள் தீரும்.

பத்தியம்:—புளிநீக்கி ஆகாரங் கொள்ளல் வேண்டும்.

### 109. அயத்தங்க மாததிரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—அயத்தங்கச்சிந்தூரம் | தோலா 1 | கோரோசனை | தோலா 1 |
| பச்சைக் கருப்பூரம் | ... ½ | குங்குமப்பூ | ... 1 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட நான்கு சரக்குகளையும் கல்வத்திலிட்டு முலைப்பாலிலரைத்து உழுந்து அளவில் மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—இதனைத் தினம் இரண்டுவேளை ஒவ்வொரு மாத்திரையாகத் தேனிலேனும், அல்லது வெற்றிலை ஒன்றினால் மடித்து மென்றேனும், மூன்றுநாள் உட்கொள்ள குளிர்சுரம், ஜல தோஷம், தலைவலி, கைகாலசதி, முதலிய நோய்கள் தீரும். இதனை ஏழுநாள் ஒருமுறையாக நெய்யிலுறைத்துச் சாப்பிட்டு, ஸ்நானம், சௌளம் முதலிய சௌகரியங்களின் நிமித்தம் ஏழு

நாள் இடைவிட்டுப் பிறகு முன்போலவே ஏழுநாள் சாப்பிடுக. இங்ஙனம் ஆறுமுறை உட்கொள்ள நரம்புக்கூடுகள் வலுப்பட்டு, வீரியவிருத்தி உண்டாக்கும்.

மேற்படி மாத்திரையினுல் உஷ்ணம் ஏற்படின் மாத்திரையின் அளவைக் குறைத்துக் கொள்க.

பத்தியம்:—நல்ல ஆகாரங்களை வேளை தவறுமல் சாப்பிடல் வேண்டும். லாகிரி வஸ்துகள் உபயோகித்தலையும் ஸ்த்ரீ போகத்தையும் நீக்கல் வேண்டும்.

## 110. மண்டூர மாத்திரை

| | | | | |
|---|---|---|---|---|
| சரக்கு:—புங்கம்பட்டை | பலம் $\frac{1}{2}$ | செவ்வியம் | பலம் | $\frac{1}{2}$ |
| தேவதாருபட்டை | ... $\frac{1}{2}$ | கடுக்காய் | ... | $\frac{1}{2}$ |
| கறிமஞ்சள் | ... $\frac{1}{2}$ | நெல்லிக்காய் | ... | $\frac{1}{2}$ |
| மரமஞ்சள் | ... $\frac{1}{2}$ | தான்றிக்காய் | ... | $\frac{1}{2}$ |
| இலவங்கப்பட்டை | ... $\frac{1}{2}$ | சுக்கு | ... | $\frac{1}{2}$ |
| வால்மிளகு | ... $\frac{1}{2}$ | மிளகு | ... | $\frac{1}{2}$ |
| சித்திரமூலம்வேர்பட்டை | $\frac{1}{2}$ | திப்பலி | ... | $\frac{1}{2}$ |
| கோரைக்கிழங்கு | ... $\frac{1}{2}$ | சுத்திசெய்தமண்டூரம் | | $7\frac{1}{2}$ |
| கோநீர் | ...120 (மூன்றுபடி) | | | |

செய்பாகம்:—இக்கூறிய பதினேழு சரக்குகளுக்குள் முதலில் ஒரு பழைய பாண்டத்தின்கண் கோநீரைவிட்டுக் குழம்பு பதமாகக் காய்ச்சிப் புங்கம்பட்டை முதல் திப்பலி ஈருக உள்ள சரக்குகளின் சூரணங்களைப் போட்டுக் கிளறிப் பின்னர் மண்டூர சூரணத்தை அதனேடு சேர்த்து இரண்டு மூன்று நிமிஷம் கிளறி உடனே கல்வத்திலிட்டு * மெழுகுபதம் வருகிறவரை செவ்வையாக அரைத்துக் குன்றிப் பிரமாணத்தில் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—இம்மாத்திரையைத் தினம் காலை, மாலை ஒவ்வொன்றுகச் சாப்பிட்டு இரண்டுமணி நேரத்திற்குப் பின் மோர் சாதம் சாப்பிடுக. பிறகு வேண்டியவற்றை யுண்ணலாம். இத

---

* மெழுகு பதம் அரைப்பதற்குப் போதுமான ஈரம் இல்லாதிருப்பின் வேண்டுமான அளவு கோநீர் சேர்த்து அரைத்தல் சிறந்தது.

னால் மண்ணீரல் வீக்கம், காமாலை, பாண்டு, ஊருஸ்தம்பவாதம், மூலரோகம், சுரம் முதலிய பிணிகள் குணப்படும். இது இரத்தத்தை சுத்திகரித்துப் பெருக்கித் தேஜஸை உண்டாக்கும் இதை இருபது நாட்களுக்குக் குறையாமல் ஒருமண்டலம்வரை உட்கொள்ளின் சாலவும் பயன் தரும்.

பத்தியம்.—மோரன்னம் உண்ட பிறகு இடைவேளைகளில் உணவுகொள்ள வேண்டின் புளியை நீக்கி இச்சாபத்தியமாகச் சாப்பிடுக.

## 111. தாம்பூல மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—குங்குமப்பூ | பலம் | 1 | இலவங்கப்பட்டை | பலம் | $\frac{1}{4}$ |
| பச்சைக்கருப்பூறம் | ... | $\frac{1}{4}$ | ஜாதிக்காய் | ... | $\frac{1}{4}$ |
| இலிங்கம் | ... | $\frac{1}{4}$ | கோஷ்டம் | ... | $\frac{1}{4}$ |
| பூரம் | ... | $\frac{1}{4}$ | ஏலரிசி | ... | $\frac{1}{4}$ |
| கிராம்பு | ... | $\frac{1}{4}$ | அக்கரகாரம் | ... | $\frac{1}{2}$ |

செய்பாகம்:—இக்கூறிய பத்துச் சரக்குகளுக்குள் சூரணிக்கத் தக்கவற்றைச் சூரணித்து மற்றவைகளை வெறுமனே சேர்த்துக் கல்வத்திலிடுக.

ஒருபடி ஜலத்தில் சந்தனம் பலம் $2\frac{1}{2}$, கிராம்பு, கோரைக் கிழங்கு, ஜடாமாஞ்சில், சிறுநாகப்பூ, இவைகள் வகைக்குப் பலம் $\frac{1}{4}$ ஆக ஒன்றிரண்டாய் இடித்துப்போட்டு அரை யாழாக் காய்க் காய்ச்சி வடித்த கஷாயத்தில் முன் கல்வத்திலிட்ட சரக்குகளை மெழுகுபதமாக நான்கு ஜாமம் அரைத்து உழுந்து பிரமாணத்தில் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—தினந்தோறும் போஜனஞ் செய்தபிறகு தாம்பூலத்தோடு இம்மாத்திரையி லொன்றை உபயோகித்து வரச் சீதளமணுகவொட்டாமல் தேகத்தை நல்ல நிலையில் வைத்திருக்கும்; அன்றியும் வாய்நாற்றத்தை நீக்கி இரத்தத்தைப் பரிசுத்தப் படுத்தும்.

ஸ்திரீகட்குக் கருதரித்த ஆறுமாதமுதற்கொண்டு கரு வுயிர்க்குமளவும் இம்மாத்திரையைக் கொடுத்துவரப் பிரசவத்திற்குப் பின் னெளிநிலுண்டாகும் சீதள சம்பந்தமான நோய்களைத்

தடுப்பதோடு உற்பவித்த மகவும் கரப்பான், மாந்தம், சுரம், வலி முதலிய பிணிகளால் துன்புறாமல் செழுமையாக வளரும்.

பத்தியம்:—கிடையாது.

## 112. சோடச மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—வீரம் | வராகனெடை | 1 | மிளகு | வராகனெடை | 1 |
| பூரம் | ... | 1 | கடுக்காய் | ... | 1 |
| தாளகம் | ... | 1 | சேங்கொட்டை | ... | 1 |
| இலிங்கம் | ... | 1 | அன்னபேதிச்சிந்தூரம் | | 1 |
| இரசம் | ... | 1 | காந்தச்சிந்தூரம் | ... | 1 |
| கந்தகம் | ... | 1 | பச்சைக்கருப்பூரம் | | 1 |
| சுக்கு | ... | 1 | குங்குமப்பூ | ... | 1 |
| திப்பலி | ... | 1 | சுத்திசெய்தவாளம் | | 2 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட பதினாறு சரக்குகளையும் கல்வத்திலிட்டு வெள்ளருகுச் சாற்றில் இரண்டுநாள் எட்டுஜாமம் அரைத்து மிளகு பிரமாணத்தில் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—எத்தகைய சுரங்கட்கும் தினமொரு மாத்திரை ஒருமிணர் ஜலத்துடன் மூன்றுநாள் காலைவேளைகளிற் கொடுத்து வர, இரண்டொருமுறை விரேசனமானதும் சுரம் நீங்கும்

பத்தியம்:—புளிநீக்கி இலகுபோஜனம் செய்க.

## 113. மரகத மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:—இரசம் | தோலா | 1 | * மாயேசுத்துரு | தோலா | 1 |
| கந்தகம் | ... | 1 | கோரோசனை | ... | 1 |
| நாவி | ... | 1 | குங்குமப்பூ | ... | 1 |
| மிளகு | ... | 1 | பச்சைக் கருப்பூரம் | ... | ½ |
| § ஜாப்னு | ... | 1 | கஸ்தூரி | ... | ¼ |
| வெள்ளைப்பாஷாணம் | | ¾ | | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்குகள் பதினொன்றையும் கல்வத்திலிட்டுச் சிற்றரத்தை, திப்பலி, கஷாயத்தால் ஒவ்வொரு ஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் கடுகு, பயிறு பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக் கொள்க.

§ ஜாப்னு-நீர்நாய் விதை. * மாயேசுத்துரு-ஒட்டை கோரோசனை.

பிரயோகம்:—வேளைக்கு ஒருமாத்திரை வீதம் தினம் காலை மாலை இருநேரம் தக்க அனுபானத்தில் கொடுக்க எவ்விதமான ஜன்னி சுரங்களும் 24 மணிநேரத்தில்: குணப்படும். தவிர முறை சுரம், குளிர்சுரம் முதலியவற்றிற்குச் சிறந்த மாத்திரையாம்.

பத்தியம்:—பால் சேர்ந்த கோதுமை, அரிசி ரவைக் கஞ்சி முதலியவைகள் சேர்க்கலாம். சுரம் இருக்கும் காலம் வரை அறு சுவையுடன் கூடிய அன்னம் காய், கறி, பதார்த்தங்கள் சேர்க் கவே கூடாது.

குறிப்பு:—இம்முறையில் சேர்க்கப்படும் பாஷாணத்தை முறைப்படி சுத்திசெய்து பெருமரத்தின் (பீநாறிமரம்) இலையை இடித்துச் சாறுபிழிந்து இரண்டுஜாமம் சுறுக்கு கொடுத்து, பின் னர் அவ்விலையை நெகிழ அரைத்து அங்கிப்பூட்டிக் கரி நெருப் பின்மேல் மூலிகை வெந்து கரியாகும்படி புரட்டிப் புரட்டி வெது ப்பி மேல் அங்கியைக் கழற்றி மீண்டும் மூலிகை விழுதால் கவ சித்து அனலில் வாட்டவும் இங்ஙனம் ஏழுமுறை செய்த பாஷா ணத்தைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து அதனில் பாகத்திற்கு வேண்டுமளவைக் கொள்க.

## 114. சுவர்ணபூபதி குளிகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரக்கு:— | கந்தகம் | பலம் 1 | கருநாவி | பலம் 1 |
| | வாலைஇரசம் | ... 1 | பவழம் | ... 1 |
| | படிகாரம் | ... 1 | மனோசிலை | ... 1 |
| | வெங்காரம் | ... 1 | பாஷாணம் | ... ½ |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட எட்டுச் சரக்குகளையும் கல்வத் திலிட்டுப் பழரசத்தில் மூன்றுநாளும், குமரிச்சாற்றில் மூன்று நாளும் அரைத்து ஒரே வில்லையாகத் தட்டி யுலர்த்திடுக. ஒரு சட்டியி லிரண்டங்குல வுயர மிருக்கும்படி மேல்தோல்சீவிய குமரி மடலைப் போட்டு அதன்மீது முன்னே தட்டிய வில்லையை வைத்து, அதன்மேல் முன்போலவே குமரிமடலைப் போட்டு மேல்சட்டிமூடி முத்தீயாக இருபத்துநான்குமணிநேரம் எரித்து ஆறவிட்டுத் திறந்து, கற்றாழைமடற் சாம்பலுட்பட எல்லா வற்றையும் சுரண்டிப் பக்குவமா யெடுத்துக் கல்வத்திலிட்டு,

அதனோடு தங்கரேக்து, வெள்ளிரேக்து, இலிங்கம், பவழம், உநத்தி ராக்கம், கெட்டிமுத்து, அக்கிராகாரம், பச்சைக் கருப்பூரம், இவை களை வகைக்கு ஒன்றேகால் வராகனெடை சேர்த்து, முலைப் பால், பூமாதுளம் பூச்சாறு, கருந்துளசிச் சாறு முதலியவற்றால் ஒவ்வொருநா ளரைத்துச் சிறு வில்லைகளாய்த் தட்டி நிழலிலுலர வைத்துப் பூவரசம் பழுப்பிலையில் வைத்து, நூலால் கட்டி இருபது நாள்வரை தானியப்புடம் வைத்துப் பின்னர் சுகந்த பனிநீரால் நான்குஜாமமரைத்துப் பச்சைப்பயிறு பிரமாணம் மாத்திரை செய்துவைத்துக் கொள்க.

பிரயோகம்:—ஒருமாத்திரையை வியாதிக்கிசைந்த அநுபா னங்களிற் கொடுக்கச், ஜன்னிதோஷம், ஈளை, காசம், நீரிழிவு, மகோதரம், கவுசி, பாண்டு, முகவாதம், எலும்புருக்கி முதலிய கொடிய நோய்கள் குணமாகும்.

பத்தியம்:—புளிநீக்கி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:—இம்மாத்திரை மிக்க நன்மைதரத் தக்கதேனும், அதிக ஜாக்கிரதையின்றி உபயோகிப்பின் பலவித தீமைகளுக்கு இடமுண்டாகும். தேகத்தின் தன்மையையும், நோயின் வன்மை மென்மையையும், கால நிலைமையினையும், உய்த்துணர்ந்து, அதிக அளவாகவும் நீண்ட நாட்களும் கொடுக்காமல் இடைவிட்டு இடைவிட்டு, மருந்து பிரயோகத்தால் உண்டாகும் குணங்களை யறிந்து, செவ்வையாகக் கவனித்து நோயாளியின்பால் அன்பு பாராட்டிக்கொடுத்துவரும் மருத்துவன் இம்மை, மறுமைப் பய னெய்துவா னென்பது ஆன்றோர் வாக்கு.

## 115. மஹாவாத வித்வம்சனி

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—வாலை இரசம் | பலம் 1 | திப்பலி | பலம் 1 |
| கந்தகம் | ... 1 | அப்பிரகச்சிந்தூரம் | ... 1 |
| கருவங்க பற்பம் | ... 1 | பொரித்த வெங்காரம் | ... 1 |
| வெள்வங்கபற்பம் | ... 1 | மிளகு | ... 1 |
| உலோகசிந்தூரம் (அல்லது பற்பம்) | ... 1 | சுக்கு | ... 1 |
| தாமிரபற்பம் | ... 1 | சுத்திசெய்யப்பட்ட நாவி | ... 2 |

செய்பாகம்:—இக் கூறப்பட்ட பன்னிரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுத் திரிகடுகு, நிலப்பனங்கிழங்கு, சித்திரமூலவேர்ப் பட்டை, கோஷ்டம், கஞ்சா முதலியவற்றின் கஷாயத்தால் தனித் தனி நான்குஜாம மரைத்துப் பின்னர்க் கையாந்தகரை, நொச்சி, இஞ்சி, ஆடாதோடை, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றில் முன்போலவே நான்கு ஜாம மரைத்து உழுந்தளவேனும் மிள களவேனும் மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தேனிலாவது இஞ்சி சுரசத்திலாவது வேளைக்கு ஒரு மாத்திரையாகத் தினம் இருவேளை மூன்று அல்லது ஐந்து நாள் கொடுக்க, வாதரோகம், சூலை, சிலேத்மரோகம், கிரகணி, ஜன்னிபாதசுரம், மண்ணீரல் வீக்கம், அபஸ்மாரம், பித்தசீதளம், சூதகவாயு, சூதகஜன்னி முதலிய நோய்கள் நீங்கும். கருவுயிர்த்த பெண்களின் வயிற்றிற்றங்கிய அழுக்கை அறவே வெளிப்படுத்து வதற்கு இது கைகண்டது.

பத்தியம்:—நோயின் வன்மை, மென்மைக் கிசைந்தவாறு முறையே கடும்பத்தியமாகவும் இச்சாபத்தியமாகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:—இம்மருந்தை முடித்தற்கு வேண்டிய பற்ப சிந்தூ ரங்களின் முறைகளை அவ்வவ்விலம்பகத்திற் காண்க.

## 116. தாமிரபூபதி குளிகை

| | | | | |
|---|---|---|---|---|
| சரக்கு:— | கடுக்காய் | பலம் $\frac{1}{2}$ | அதிமதுரம் | பலம் $\frac{1}{2}$ |
| | நெல்லிவற்றல் | ... $\frac{1}{2}$ | கோஷ்டம் | ... $\frac{1}{2}$ |
| | சுக்கு | ... $\frac{1}{2}$ | ஜாதிக்காய் | ... $\frac{1}{2}$ |
| | திப்பலி | ... $\frac{1}{2}$ | மோடி | ... $\frac{1}{2}$ |
| | மிளகு | ... $\frac{1}{2}$ | தணியா | ... $\frac{1}{2}$ |
| | கிராம்பு | ... $\frac{1}{2}$ | * தாமிரமெழுகு | ... $1\frac{1}{4}$ |

செய்பாகம்:—இக் கூறப்பட்ட பன்னிரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுத் திரிபலாதி கஷாயத்திலும், கையாந்தகரை, குமரி இவைகளின் சாற்றிலும் தனித்தனி நான்குஜாம மரைத்து மெழுகு

* இம்முறையை மெழுக்கு இலம்பகத்திற் காண்க.

பதத்தில் தூதுளங்காய் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—இம்மாத்திரையை வேளைக்கொன்றாகத் தினம் ஒருவேளை ஒருமிணர் ஜலத்தோடு சாப்பிட்டுக் கொண்டுவர, பிடிப்பு, சர்வாங்கவலி, தமரகவாயு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய பிணிகள் நீங்கும்.

பத்தியம்:—பசிதீபனத்துக்குத் தக்கவாறு நல்ல ஆகாரங்களை இச்சாபத்தியமாக உட்கொள்ள வேண்டும்.

## 117. தீபாக்கினி மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—சீரகம் | பலம் 2 | ஏலம் | பலம் 2 |
| பொரித்தபெருங்காயம் | 2 | சுத்திசெய்த கஞ்சா ... | 2 |
| இந்துப்பு ... | 2 | மிளகு ... | 2 |
| கிராம்பு ... | 2 | சுக்கு ... | 2 |

செய்பாகம்:—இக் கூறப்பட்ட எட்டு சரக்குகளையும் தனித் தனிச் சூரணமாகக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றி லிரண்டு ஜாம மரைத்துச் சிறு சுண்டக்காய் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—பசிதீபன மில்லாவிடினும் அஜீரணமாக விருப் பினும் ஒரு மாத்திரையை ஒருமிணர் ஜலத்துடன் கொடுக்கச் சில நிமிஷங்களுக்குள் ஜீரணமாகிப் பசிதீபன முண்டாகும்.

பத்தியம்:—இயல்பாயுள்ள ஜீரணசக்தி ஏற்படும்வரை கடின பதார்த்தங்களை நீக்கி இலகுவான ஆகாரஞ் செய்தல் வேண்டும்.

## 118. காடிக்கார மாத்திரை

| | |
|---|---|
| சரக்கு:—இரசச் சிந்தூரம் | பலம் 1 |
| வெள்ளிக் காடிக்காரம் வராகனெடை | 1 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்கு இரண்டினையும் கல்வத்தி லிட்டு இரண்டுமணி நேரம் கையோயாம லரைத்து இரவிமுகத்தில் இரண்டுமணிநேரம்வைக்க, மறுவலும் இரண்டுமணிநேர மரைத்து இரண்டுமணிநேரம் இரவிமுகத்தில் வைக்க. இங்ஙனமே ஏழுமுறை செய்து இதனெடைக்கு இரண்டு மடங்கு எடைகொண்ட சூரத்துக்

கருப்பூரங் கூட்டி, தேனைத் துளித்துளியாகவிட்டு மெழுகு பதத்திலேயே ஒருநாளெல்லா மரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலி லிரண்டுநாள் உலரவைத்து, அவைகளொன்றோ டொன்று சேராவண்ணம் கோதுமைமாவைச் சிறிது தூவித் திரட்டிப் புட்டியிற் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—வாந்திபேதி கண்டால் இம்மாத்திரையி லொன்றைத் தேனிலுரைத்துக் கொடுக்க, அடங்கினவாதம் மீண்டும் எழும்பி, தேகத்தி லுஷ்ணத்தை இரண்டுமணி நேரத்திற்குள் உண்டாக்கி, பேதியை நிறுத்தும். குறித்தகாலத்தில் பேதிகுணப்படாவிடில் முன்போலவே ஒருமாத்திரை கொடுக்க. நோயாளி எத்தகைய கடின நிலையிலிருப்பினும் மூன்று மாத்திரையில் திருவருளால் குணமாதல் திண்ணம்.

பிரயோகம்:—பேதியின் கொடுமையால் தாகமும் பசியும்மிகுதிப்பட்டு களைப்பு உண்டாயின் பார்லி அரிசியையுடைத்து ஜலம் மிகுதியாக விட்டுக் கஞ்சிசெய்துமேல் தெளிவைமாத்திரம் வடித்துக் கொஞ்சம் உப்பைச் சேர்த்து வேண்டும்போ தெல்லாம் சிறுகச் சிறுகக் கொடுத்துவருக. மறுநாள் இக்கஞ்சியையே சிறிது குழம்பாகக் கொடுக்கலாம். பேதிகண்டது முதல் இரண்டுநாள் வரை எக்காரணத்தை முன்னிட்டும் அன்னம் சேர்த்தல் கூடாது. மூன்றும்நாள் பசிதீபனம் ஒழுங்குக்கு வந்திருப்பதாகத் தெரிந்தால் இருமுறை வடித்த அன்னத்தைக் காரசாரமற்ற ஏதேனுமொரு குழம்புடன் சேர்த்துக் கொடுக்க.

## 119. விஷபேதி சங்காரணி

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—இலிங்கம் | பலம் $\frac{1}{4}$ | ஜாதிக்காய் | பலம் $\frac{1}{4}$ |
| * அபினி | ... $\frac{1}{4}$ | வெட்பாலரிசி | ... $\frac{1}{4}$ |
| பச்சைக்கோரைக்கிழங்கு | $\frac{1}{4}$ | சூரத்துக் கருப்பூரம் | $\frac{1}{4}$ |

செய்பாகம்:—இக்கூறிய ஆறுசரக்குகளையும் தனித்தனிச் சூரணித்துக் கல்வத்திலிட்டுக் கஞ்சா கஷாயத்தால் நான்கு ஜாம

* இதனைக் கொஞ்சம் நெய்விட்டுக் கலந்து ஒரு வெற்றிலையின்மேல் வைத்து விளக்கெண்ணெய் விளக்கின் சூட்டில் வெதுப்பிச் சேர்த்துக் கொள்க.

மரைத்து மெழுகுபதம் வந்ததும் துவரைப் பிரமாணத்தில் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—இம்மாத்திரையினை இரண்டு மணி நேரத்திற் கொருமுறையாகத் தேனிலிழைத்துக் கொடுத்துவர, வாந்திபேதி, அஜீரணபேதி முதலியவைகள் தவறுதலின்றிக் குணப்படும்; பேதி நின்றபின் மாத்திரை கொடுக்கவேண்டிய ஆவசியகமின்று.

பத்தியம்.—பேதிமுற்றிலும் நிற்கும்வரை கஞ்சி, புனற்பாகம் தவிற வேறொன்றும் உட்கொள்ளல் கூடாது.

## 120. இந்திரியத்தம்பனக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—ஜாவன்னு | தோலா $\frac{1}{2}$ | கஸ்தூரி | தோலா $\frac{1}{4}$ |
| மாயேசுத்துரு | ... $\frac{1}{4}$ | அபினி | ... $\frac{1}{4}$ |
| அம்பர் | ... $\frac{1}{4}$ | ரூமஸ்தகி | ... $\frac{1}{2}$ |

செய்பாகம்:—இக் கூறப்பட்ட ஆறுசரக்குகளையும் கல்வத்தி விட்டுத் தேனைத் துளித்துளியாகவிட்டு மெழுகுபதத்திற்குவர நன் கனம் அரைத்துக் கடலைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாகச் செய்து, நிழலி லொருபகலாறவைத்து வாசனை போகாமல் புட்டி யில் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—ஸ்த்ரீசங்கமஞ் செய்யவிரும்பிய நாளின் மாலை ஆறு அல்லது ஏழுமணிக்கு ஒருமாத்திரையை சாப்பிட்டுக் காய்ச் சிய காற்படி பசுவின்பாலிற் கற்கண்டின் சூரணம் போட்டுப் பரு கல் வேண்டும். இவ்வா றுட் கொள்வதால் கலவியில் மிக்க இன்ப முண்டாகிப் பெண்களின் விருப்பத்துக் கிசைந்தபடி யிருக்கக் கூடும்.

பத்தியம்:—அன்றைய இராப்போஜனத்தில் புளிப்பு சிறிதும் சேர்க்காமல் மிட்டாய், பால், பழம் முதலிய இனிப்புள்ள பண் டங்களை உட்கொள்ளல் வேண்டும்.

## 121. வேறு முறை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—கஸ்தூரி | வராகனெடை $\frac{1}{2}$ | அபினி | வராகனெடை 1 |
| வாலை இரசம் | ... $\frac{1}{2}$ | கடல் நுரை | ... 1 |
| ஜாதிக்காய் | ... 1 | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஐந்து சரக்குகளையும் கல்வத்திலிட்டு நரம்புகளை நீக்கிய ஐந்து ஊமத்தம் பூவையுங் கூட்டி வெள்ளாட்டுப்பால் கொஞ்சங் கொஞ்சமாகவிட்டு மெழுகுபதம் வரும்படி இரண்டுமணிநேர மரைத்துக் கடலைப் பிரமாணத்தில் தொண்ணூறு மாத்திரைக்கு மேற்படாமற் செய்து நிழலி லுலர்த்திப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—
பத்தியம்:— } மேற்கூறியபடியே செய்க.

குறிப்பு:—அபினி சம்பந்தமான மாத்திரைகளை குறிப்பிட்ட அளவின்படி உட்கொள்ளும்போது சில தேகிகட்கு மதிமயக்க முறச்செய்யின் மறுமுறை உண்ணும்போது அளவைக்குறைத்துக் கொள்க. மாத்திரையின் குறிப்பிட்ட அளவுகொண்டும் முற்கூறப்பட்ட குணமுண்டாகாவிடின் அளவை அதிகப்படுத்திக் கொள்க.

## 122. சந்தனாதி குளிகை.

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—*மூங்கில் உப்பு தோலா | 1 | ஏலரிசி தோலா | 1 |
| வெள்ளைக் காசிக்கட்டி | 1 | வால்மிளகு ... | 1 |
| மாசிக்காய் ... | 1 | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஐந்து சரக்குகளையும் தனித் தனிச் சூரணித்துக் கல்வத்திலிட்டுக் கலப்பில்லாத உயர்ந்த சந்தன அத்தரைச் சிறிது சிறிதாக விட்டரைத்துத் தூதுளங் காய்ப் பிரமாணத்தில் மாத்திரைகளாகச் செய்து ஒருநாள் நிழலில் ஆறவைத்து, வாசனை போகாமல் குப்பியில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—இம்மாத்திரையினை வேளைக்கொன்றாகத் தினமிரண்டுவேளை உட்கொண்டு, உடனே காய்ச்சிய அரையாழாக்குப் பசும்பாலிற் கற்கண்டு சூரணமிட்டுச் சாப்பிடுக. ஒருமுறையாக ஐந்து நாட்களுக்குக் குறைவின்றி யுண்ணப் புதிதாக வுண்டான வெள்ளை, மஞ்சள், இரத்தம் முதலிய பிரமேகங்களும், ஆண்குறி வீக்கம், விரையின் வீக்கம், எரிச்சல், நீர்போதல்

---

* இதனை உயர்தரமான சுகந்தப் பனிநீரில் ஏழுநாளரைத்து வில்லைகளாகச் செய்து உலரவைத்துப் பின்னர் இந்தப்பாகத்தில் சேர்த்தல் நலம்.

(அல்லது) நீரிறங்குதலைப்போன்ற உணர்ச்சி, எழுச்சியினும் இந்திரிய ஸ்கலிதத்தினும் மிக்கபாதை முதலிய துன்பங்களும் அறவே நீங்கும்.

பத்தியம்:—பாலன்னமொழிய மற்றொன்று முட்கொள்ளவொண்ணாது.

## 123. வேறு முறை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—மூங்கிலுப்பு | தோலா 1 | சங்கேமாயி | தோலா 1 |
| வெள்ளைக்காசிக்கட்டி | 1 | சங்குஜிரா | ... 1 |
| எஜரல்யேஹூத் | ... 1 | படிகாரம் | ... 1 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஆறுசரக்குக்களையும் தனித்தனிச் சூரணித்து, அளவின்படி கல்வத்திலிட்டுப் பரிசுத்தமான வுயர்ந்த சந்தன அத்தரைக் கொஞ்சங் கொஞ்சமாகவிட்டு மெழுகு பதமாக அரைத்துத் தூதுளங்காய் பிரமாணம் மாத்திரைகள் செய்து ஒருநாள் நிழலிலாறவிட்டு வாசனை போகாமல் குப்பியிலிடுக.

பிரயோகம்:—
பத்தியம்:— } முற்கூறியவாறே கொள்க.

## 124. இலிங்க மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—இலிங்கம் | பலம் 1 | சிவனார்வேம்புவேர் | பலம் 5 |
| நாவி | ... 1 | நல்லெண்ணெய் | ... 5 |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட நான்கு சரக்கில் நாவியைச் சுத்தநீர்விட்டு நெகிழ அரைத்து இலிங்கத்திற்குக் கவசமிட்டு, அதன்பின் சிவனார் வேம்பு வேரைச் சுத்த நீராலரைத்து முன் போலவே மற்றொருமுறைக் கவசமிட்டு, இரண்டுமணிநேரம் கடுவெயிலிலுலர்த்தி, அதன்மேல் பட்டுத்துணியாற் சுற்றிவைத்துக் கொள்க.

ஒரு இரும்புக் கரண்டியில் நல்லெண்ணெய் விட்டு நெருப்பின்மேல் வைத்துச் சூடேறினவுடன் முன் சித்தப்படுத்திய இலிங்க உருண்டையை அதில்போட்டு எண்ணெய் எல்லாம் சுண்டச் சுண்டப் புரட்டிக் கொண்டுவருக. மேல்கவசம் கரு

கின பதத்தில் உள்ளிருக்கும் இலிங்கத்தை வெளிப்படுத்திக் கல்வத்திலிட்டு அரிசிவெந்த கொதிநீரில் இரண்டு மூன்று மணி நேரம் மெழுகுபதம்வர அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—ஆவாரம் இலைச் சாற்றிலேனும், ஆவாரங் கொழுந்தை அரைத்துச் சமனளவு பசுவெண்ணெய்க் கூட்டியேனும், சுமார் புன்கங்காய் பிரமாணத்தில் வேளைக்கொரு மாத்திரை விகிதம் தினமிரண்டுவேளையாக ஏழுநாள் அல்லது பத்துநாளுட் கொள்ள பகுமூத்திரம், மதுமேகம் முதலிய பிணிகள் நீங்கும்.

குறிப்பு:—இம்மாத்திரையை மதுமேக இலேகியத்துடன் உண்ண மிக்க நன்மையைப் பயக்கும். இதனை இலேகிய இலம்பகத்தின்கண் உரைக்கப் பட்டுள்ளது.

### 125. சுவாசகாச மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| சரக்கு:—கிராம்பு | தோலா 1 | மூசாம்பரம் | தோலா 1 |
| பொரித்த வெங்காரம் | 1 | திப்பலி | ... 1 |
| வெளுக்கவறுத்த துருசு | 1 | அபினி | ... ½ |
| * வெள்ளைப்பாஷாணம் | ¼ | | |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட ஏழு சரக்கினையும் கல்வத்திலிட்டு வெள்ளாட்டு ஏழுபிச்சியினின்றெடுத்த நீரினால் மெழுகுபதமாக வரைத்துப் பச்சைப்பயிறு அளவில் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—சீதளத்தினால் மார்பில் கோழை மிகுந்து இருமலினாலாவது இழுப்பினாலாவது துன்பப்படும்போது மூன்றல்லது நான்குமணிநேரத்திற் கொருமாத்திரையாக வாயிற் போட்டு விழுங்காமல் நாவினாற் சுவைத்து உமிழ் நீரைக்கொஞ்சங் கொஞ்சமாக விழுங்கக் கோழையை விரைவில் கரைத்து, எளிதில் வெளிப்படச் செய்வதுமன்றி வியாதியின் உபத்திரவத்

* இப்பாகத்தில் ஒரு தோலா சங்கு அல்லது வெள்ளைப்பாஷாணத்திற்குக் கீழும் மேலும் இரண்டு தோலா வெங்காரப் பொடியை அகலிலமைத்து, சீலைசெய்து 10 வறட்டியிற் புடமிட, இவ்விரண்டு முருகி வெளிர்ப்பச்சை நிறமாகவும் கண்ணாடியைப்போல் பளபளப்பாகவுமிருக்கும் இத்தகைய முறையினால் பெற்ற வெள்ளைப்பாஷாணத்தையே உபயோகித்துக் கொள்க.

தையும் இரண்டு மூன்றுநாள் பிரயோகத்தில் பூர்ணகுணமடை யச் செய்யும்.

பத்தியம்:—தேகநிலைமைக்குத் தக்கபடி ஒவ்வாத பதார்த் தாதிகளை ஒழித்தல் வேண்டும்.

## 126. கிராணிகேசரி குளிகை

| | |
|---|---|
| சரக்கு:—சூதம் | விளாம்பழ ஓடு |
| கந்தகம் | கோரைக்கிழங்கு |
| அப்பிரக பற்பம் | ஓமம் |
| உலோக சிந்தூரம் | சித்திரமூலம் வேர்ப்பட்டை |
| ஜாதிக்காய் | மாதளை ஓடு |
| இலிங்கம் | பொரித்த வெங்காரம் |
| அதிவிடயம் | வெட்பாலரிசி |
| நாவி | ஊமத்தை வித்து |
| சுக்கு | கழற்சிப்பருப்பு |
| மிளகு | இலவம் பிசின் |
| காட்டாத்திப்பூ | வில்வவேர் |
| கடுக்காய் | திப்பலி |

செய்பாகம்:—இக்கூறப்பட்ட இருபத்துநான்கு சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு, அதனுடன் அபினி எட்டு வராகனெடைசேர்த்து, ஊமத்தை இலை இரசத்தால் நான்குஜாம மரைத்து உழுந்து பிரமாணத்தில் மாத்தி ரைகள் செய்து நிழலிலுலரவைத்துப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—இதனைத் தேனிலேனும் நெய்யிலேனும், உரைத்துத் தினம் இருவேளை கொடுக்க எத்தகை அசாத்திய மான கிராணியாயினும் ஐந்து நாட்களில் குணப்படும். எக்கார ணத்தை முன்னிட்டும் வேறு ஔடத பிரயோகஞ் செய்யாமல் இதனைப் பொறுமையுடன் கொடுத்துவர, எத்தகைய மருந்துகளா னும் எதிர்பார்த்தற்கரிய அற்புதகுணம் உண்டாகு மென்பதற்குச் சிறிதும் ஐயப்பாடு இல்லை.

பத்தியம்:—பார்லி அல்லது அரோரூட் மாவிற் கஞ்சி செய்து பால்சேர்த்துச் சாப்பிட்டு வருதல் வேண்டும். பேதி குணப்பட்டபின் இலகு போஜனமாகக் காரசார மின்றிச் சில நாட்கள் ஆகார முட்கொள்ளல் வேண்டும்.

## 127. மூர்ச்சா நிர்வாபனவடி

சரக்கு:—சுத்தி பாஷாணம்
சுத்தி நாவி
சுத்தி கந்தகம்
சீரகம்
மிளகு
சுத்தி இலிங்கம்

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்கு ஆறினையும் சமனெடையாகக் கல்வத்தில் போட்டுப் பழச்சாற்றில் கையோயாமல் நான்கு ஜாமம் அரைத்து $\frac{1}{2}$ பயிறு அளவு மாத்திரைகளாகச் செய்க.

பிரயோகம்:—இதனை வேளைக்கொன்றாகத் தினம் இருவேளை மூன்றுநாள் தனிச் சீரகச்சூரணத்தில் கொடுக்க. காக்கைவலி, மூர்ச்சை முதலியவை குணமாகும்.

முதல் மூன்றுநாள் கொடுத்தபின் மீண்டும் கொடுக்க, ஆவசியகமுண்டாயின் ஒரு மாதம் சென்றபின் கொடுத்தல் வேண்டும். எவ்வளவு அசாத்தியமான பிணியாயினும் 3 முறையில் குணமாவது திண்ணம்.

பத்தியம்:—மருந்து கொண்ட தினம் முதல் 6 நாள்வரை புளி தள்ளி இச்சாபத்தியம் கொள்க. பசுவின்மோர் வேண்டும்வரை சேர்த்துக் கொள்க.

## 128. கட்டுவாய் மாத்திரை

சரக்கு:—

| | | | |
|---|---|---|---|
| இலவம்பிசின் கழஞ்சி | $1\frac{1}{2}$ | வில்வப்பழம் கழஞ்சி | 3 |
| அதிவிடயம் ... | $1\frac{1}{2}$ | காய்ச்சுக்கட்டி ... | $1\frac{1}{2}$ |
| ஜாதிக்காய் ... | $1\frac{1}{2}$ | கிராம்பு ... | $1\frac{1}{2}$ |
| ஜாதிப்பத்திரி ... | $1\frac{1}{2}$ | இலிங்கம் பணவெடை | 2 |

செய்பாகம்:—இவைகளைக் கல்வத்திலிட்டு ஊமத்தன் இலைச்சாற்றில் ஒருஜாமம் அரைத்து மருந்தை நிரைதூக்கி 3 பங்கு நீர் முள்ளி விரையைக்கூட்டி மேல்கூறியசாற்றில் மீண்டும் ஒருஜாமம் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்க.

பிரயோகம்:—தினம் காலை மாலை ஒவ்வொரு மாத்திரையை நெய்யில் கொள்ள எவ்வித பேதியையுங் கட்டும்; பரிட்சிக்க வேண்டுமாயின் ஒரு குடுவையில் இரண்டொரு சிறு துவாரங்களிட்டு ஜலம் விட்டு ஒரு மாத்திரையைத் தூள்செய்து போட்டுக்கரைத்து

விட ஜலம் கொட்டாது. அங்ஙனமே பேதியையும் நிறுத்துவது திண்ணம்.

பத்தியம்:—கிராணிகேசரிக் குளிகைக்கு கூறியவாறென்றறிக

129. நாசிகாபரண மாத்திரை

சரக்கு:—வாலைரசம் கருநாவி
கந்தகம் வெங்காரம்

செய்பாகம்:—இக்கூறிய நான்கு சரக்கினையும் சமனெடையாகக் கல்வத்திலிட்டு நொச்சியிலைச் சாற்றில் நான்கு ஜாமம் அரைத்துக் குன்றியளவாக உருண்டைகள் செய்து நிழலி லுலர்த்தி ஏழு சீலைசெய்த குப்பியிலிட்டு வாயைப் பலவக்கல்லா லடைத்து வாலுகா யந்திரத்தில் நான்குஜாம மெரித்து எடுத்துக்கொள்க. பின்னர் மருந்தைச் சிறிதுஞ்சேதமின்றிச் சுரண்டிக் கல்வத்திலிட்டுக் கருவூமத்தைப்பூச் சாறு, நொச்சியிலைச் சாறு, நாய்ப்பாகற்சாறு, முலைப்பால் முதலிய ஒவ்வொன்றினும் ஒவ்வொருநாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகளாகச் செய்துலர்த்தி வைத்துக்கொள்க.

பிரயோகம்:—ஒரு மாத்திரையைப் பொடிசெய்து நாசியின் வலப்புறமூத அப்பாரிசத்திலிருக்கும் சுரம் நீங்கும். அங்ஙனமே இடது நாசியில் ஊதச் சுரம்முற்றும் நீங்கும் இம்மருந்து மருத்துவருக்கு ஒரு விருதுபோன்றதாம்.

பத்தியம்:—ஏதுமின்று

130. வேறு முறை

**கவி**

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வங்காளத் தாறுமலை யாளத்தாறுடனே
வாழ்ந்தகீழ்க் கரையாறு வடக்குடன்மேற் காறுஞ்
சிங்காரமானதொரு வுள்ளூரி னாறுஞ்
சேர்ந்த*நெடி ‡கோடி கரை யிற்செறிவோர் மற்றுஞ்

---

* காரத்தை உடையது அது மிளகாய்.

‡ கோடிகரை வேதாரண்யம். இங்கு விளையும் புகையிலை குணத்திற் சிறந்தது.

சங்காரம் பண்ணியதைச் சிமிழதனில் வைத்தே
சங்கையிலா தேயூதச் சார்நாசி தன்னிற்
றங்காது சன்னிபதின் மூன்றுமென வுமைக்கே
சங்கரனுங் கண்ணுதலோன் சாற்றுமொழி யீதே.

பொருள் விளக்கம்

சரக்கு:—

| வங்காளத்து 6 சரக்கு | மலையாளத்து 6 சரக்கு | கீழ்க்கரையின் 6 சரக்கு |
|---|---|---|
| இலிங்கம் | கொச்சிவீரம் | கல்லுப்பு |
| பச்சைக்கருப்பூரம் | மிளகு | இந்துப்பு |
| குங்குமப்பூ | திப்பலி | பொட்லுப்பு |
| படிகாரம் | ஏலம் | அப்பளகாரம் |
| சாரம் | கிராம்பு | பலகறை |
| சுக்கு | சிற்றரத்தை | கடல்நுரை |

| வடமேற்குத் தேசத்து 6 சரக்கு | உள்ளூரின் 6 சரக்கு |
|---|---|
| கோதளங்காய் (சமுத்திராப்பழம்) | சௌரிப்பழம் |
| கடுக்காய் | தூதுளம்பழம் |
| சிகைக்காய் (சீக்காய்) | பிரண்டைப்பழம் |
| பொன்னங்காய் | கண்டங்கத்திரிப்பழம் |
| தேற்றான்வித்து | கோவைப்பழம் |
| வலம்புரிக்காய் | இந்திரக்கோபப்பூச்சி |

தனிச்சரக்கு:—காரமுள்ள மிளகாய்
புகையிலை.

செய்பாகம்:—இக்கூறப்பட்ட முப்பத்திரண்டு சரக்குகளையும் சமனெடையாகக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலால் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திக் காற்றுப் போகாத சீசாவில் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—ஒரு மாத்திரையைப் பொடியாக்கி நாசியில் வைத்து ஊதப் பதின்மூன்று விதமான ஜன்னி தோஷங்களும் நீங்கும்.

பத்தியம்:—இம் மருந்துக்காகத் தனியே பத்தியமின்று; எனினும் காலத்துக்கேற்றவாறு அப்போது கொடுக்கும் மருந்தின் பத்தியமே இதற்குப் பத்தியமாகக் கொள்க.

## 131. காய இலேகியம்

சரக்கு:—பெருங்காயம், கிராம்பு, வால்மிளகு, சிற்றரத்தை, கோஷ்டம், அதிமதுரம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், செவ்வியம், கண்டுபாரங்கி, ஜடாமாஞ்சில், வாய்விளங்கம், கருஞ்சீரகம், சோம்பு, சதகுப்பை வகைக்குப் பலம் ½; சுக்கு, மிளகு, திப்பலி, மோடி, தாளிசப்பத்திரி, கசகசா வகைக்குப் பலம் ¼; பறங்கிப்பட்டை பலம் 1; ஓமம் பலம் 2½; ஜாதிக்காய் பலம் ⅛.

செய்பாகம்.—இவைகளைப் பொன்மேனியாக வறுத்துச் சூரணஞ்செய்து 20 பலம் பனைவெட்டில் ஜலம்விட்டுக் கொதிக்கவைத்து வெல்லம் கரைந்தபின் வடித்து மறுபாண்டத்திலிட்டுச் சிறுதீயாக எரித்துத் தந்துபதத்தில் சூரணத்தைச் சிறிது சிறிதாகத் தூவிக் கிண்டி 5 பலம் நெய்யிட்டுப் பிசரி இறக்குக.

பிரயோகம்.—காலை மாலையாகிய இருவேளையும் வேளைக்கு ½ தோலா விகிதம் சாப்பிடப் பிரசவித்த ஸ்த்ரீகட்கு உதிரச்சிக்கலுண்டாயின் அதனை வெளிப்படுத்திச் சீதள சம்பந்தமானவியாதிகள் யாவையும் அணுக வொட்டாமற்றடுக்கும். இதனை உட்கொள்ளும் ஸ்த்ரீயின் பாலினைப் பருகும் குழவிகட்கும் ஜ்வரம், ஜன்னி, இசிவு, மாந்தம் முதலிய பிணிகள் வரவொட்டாது.

பத்தியம்.—பிரசவித்த ஸ்த்ரீகட்கு உதிரச் சிக்கல் இல்லையென்று தெளிந்த பின்னரே அன்னம் சேர்த்தல் வேண்டும்.

## 132. முருங்கப்பூ இலேகியம்

சரக்கு:—(1) சுத்தமான முருங்கைப்பூ படி 1, பசுவின்பால் படி ½, தேங்காய்ப்பால் படி ¼, பருத்தி விரைப்பால் படி ¼, இளநீர் படி ½, சர்க்கரை பலம் 15.

(2) கசகசா, சுக்கு, சீரகம், தேற்றாங்கொட்டை, வால்மிளகு, ஏலரிசி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, மிளகு, அதிமதுரம்,

இலவங்கப் பட்டை, பூனைக்காலி விதை, கிராம்பு, நிலப்பனங் கிழங்கு, பூமிசருக்கரைக் கிழங்கு, மராட்டி மொக்கு வகைக்குப் பலம் $\frac{1}{4}$.

(3) நெய் பலம் $2\frac{1}{2}$, தேன் பலம் $2\frac{1}{2}$.

செய்பாகம்:—முதலங்கத்தில் கூறப்பட்ட சரக்குகளில் சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை ஒரு பாண்டத்திலிட்டுச் சிறுதீயில் எரித்துப் புஷ்பம் வெந்து குழையும் பக்குவத்தில் பிசைந்து வடிகட்டி, அதில் சர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்சித் தந்து பதத்தில் இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்ட சூரணங்களைப் போட்டுக் கிளறி, இறக்கினபின் மூன்றாவது அங்கத்தில் கூறப்பட்டவைகளை விட்டுப் பிசரிவைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் இருவேளை $\frac{1}{2}$ தோலாவிகிதம் சாப்பிட்டு வரத் தாதுபுஷ்டி யுண்டாகி உஷ்ணம் சமனமாகும். போதிய சக்தி உண்டாகுமளவும் ஸ்த்ரீ சங்கமஞ் செய்தல் கூடாது.

பத்தியம்:—நல்ல ஆகாரங்களை உட்கொள்ளல் வேண்டும்.

## 133. குமரி இலேகியம்

சரக்கு:—(1) மேல்தோல் சீவி ஏழுதரம் அலம்பி யெடுத்த சோற்றுக் கற்றாழை வீசை 1, சீனாகற்கண்டு வீசை 1, பசுவின் பால்படி $\frac{1}{2}$, 8 பலம் நன்னாரியை ஒருபடி ஜலத்தில் போட்டு $\frac{1}{8}$படியாகக் காய்ச்சி வடித்த கஷாயம், 8 பலம் சுசகசாவை ஜலம் விட்டரைத்துப் பிழிந்தபால்.

(2) சீமை நீர்முள்ளிவிதை, சப்ஜாவிரை சன்ன இலவங்கப் பட்டை, சீரகம், வால்மிளகு, ஜாதிக்காய் வகைக்குத் தனித்தனிச் சூரணம் பலம் 1, இலேசாயரிந்த பேரீச்சங்காய் பலம் 4.

செய்பாகம்:—முதலாவது அங்கத்தில் கூறப்பட்ட எல்லாவற்றையும் ஒரு இருப்புக் கடாயில் விட்டு அடி காந்தாமல் கிளறிக் கொண்டிருந்து கற்றாழை நீர் சுண்டி, சருக்கரைப் பாகினைக் கவர்ந்து பொன்னிறமாகும் பதத்தில், இரண்டாவது அங்கத்திற் குறிப்பிட்ட சூரணங்களைக் கொட்டிக்கிளறி 10 பலம் நெய்விட்டுப் பிசைந்து வைத்து, மறுநாள் கல்லுரலிலிட்டுப் பூணில்லா உலக்கையால் எல்லாம் ஒன்றாகும்படி இடித்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ தோலா விகிதம் தினம் இருவேளை இருபது நாளுண்ண மேகசம்பந்தமான உஷ்ணம், கணச்சூடு முதலியன குணமாதலுடன் தாதுபுஷ்டியும் உண்டாகும். இதனைப் பெண்களுக். குபயோகப்படுத்தக் கருப்பாசயம் பலப்பட்டு மாதவிடாயி லுண்டான பலப்பல பிணிகள் நீங்கிச் சந்தான பாக்கியம் உண்டாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியமாக நல்ல உணவுப் பொருள்களை வேளை தவறாமலுட்கோடல் வேண்டும்.

## 134. மதுமேக இலேகியம்

சரக்கு:—எள்ளுப் பிண்ணாக்கு பலம் $\frac{1}{2}$, ஆவிரம்பட்டை பலம் $\frac{1}{2}$, பருத்திப்பருப்பு தோலா 4, வால்மிளகு தோலா 2, இலவங்கப்பட்டைத் தோலா 2, மாசிக்காய் தோலா 1, சிறுநாகப்பூ தோலா 1, பறங்கிப்பட்டைத் தோலா 2, பசுவின்பால் சேர் $\frac{1}{2}$, நல்லெண்ணெய் தோலா 6, பழையவெல்லம் பலம் $7\frac{1}{2}$.

செய்பாகம்:— இக்கூறப்பட்ட சரக்குகளைச் சூரணித்துப் போதிய அளவு பால் விட்டரைத்து வைத்துக் கொள்க. பால் மிகுந்திருப்பின் அதனோடு தண்ணீர் கலந்துவெல்லத்தை அதிற் கரைத்து வடிகட்டித் தந்துபாகம் வரும்வரை காய்ச்சி முன்சுத்தப் படுத்தியதைப் போட்டுக் கிளறி இலேகிய பதத்திலிறக்கி நல்லெண்ணெய்விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ தோலா விகிதம் தினம் இருவேளை சாப்பிட வெகு மூர்த்திரம், மதுமேகம், இந்திரிய நஷ்டம் முதலிய பிணிகள் தீரும்.

இந்த லேகியத்துடன் இந்நூலிற் கூறப்பட்ட இலிங்கமாத்திரையைக் கூட்டிச் சாப்பிட்டுக் கொண்டுவர, மேற்கூறிய பிணிகள் தீவிரத்தில் பரிகாரப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 135. ஆட்டுத்தலை இலேகியம்

சரக்கு:—வெள்ளாட்டுத்தலை 3, ஏலம் பலம் $\frac{1}{2}$, ஜாதிக்காய் பலம் $\frac{1}{2}$, ஜாதிப்பத்திரி பலம் $\frac{1}{4}$, குங்குமப்பூ தோலா $\frac{1}{4}$, இலவங்கப் பட்டை பலம் 1, நாட்டுச் சர்க்கரை வீசை 1, நெய் பலம் 1, வெள்ளிரேக்கு 50.

செய்பாகம்:—வெள்ளாட்டுத் தலையின் தோலை உரித்துச் சிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டு, பத்து படி ஜலம் விட்டு மாமிசம் குழையும் வரையிலெரித்து, இரண்டு மூன்று தடவை எலும்புத் துண்டுகளில்லாமற்படி வடித்து பின் மற்றொரு மட்பாண்டத்திற் போட்டு, அதனோடு சருக்கரை கலந்து இலேகியபதம் வரும்வரையி லெரித்து, ஏல முதலிய இலவங்கப்பட்டை யீறுகவுள்ள சூரணங்களைக் கொட்டிக் கிளறி, இறக்கினபின் நெய்யினையும் வெள்ளி ரேக்கினையுஞ் சேர்த்துப் பிசைந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ தோலா விகிதம் தினமிரு வேளை புசித்துவர மூளையின் பலஹீனத்தா லுண்டாகிய ஞாபகக் குறைவு நீங்குதலோடு தேகம் கொழுமை பெற்றுத் தாது விர்த்தியாகி, நல்ல தேஜசு உண்டாகும்.

பத்தியம்:—இலேகியம் உட்கொள்ளும்வரை நல்ல ஆகாரம் சாப்பிட்டுப் போகத்தைக் கருதாதிருத்தல் வேண்டும்.

## 136. ஆட்டுக்கால் இலேகியம்

சரக்கு:—கொழுத்த ஆட்டுக்கால் 40, தணியாபலம் 10, வெங்காயம் பலம் 10, கசகசா பலம் 10, கருங்குறவை யரிசி பலம் 10, வெள்ளாட்டுப்பால் படி $\frac{1}{2}$, பசுவின்பால் படி $\frac{1}{2}$, தேங்காய்ப்பால் படி $\frac{1}{2}$.

வாதுமைப்பருப்பு பலம் 20, சாரப்பருப்பு பலம் 5, பேரீச்சங்காய், பிஸ்தோப்பருப்பு, அபேஜம்ஹு, பிஸ்தாபருப்பு, சல்கூஜா பருப்பு, சாலாமிசிரி, போஜாந்தான்மிசிரி, நெருஞ்சிமுள், பஹமேணிசுபேத், கருஞ்சீரகம், தூதரிசுபேத், ஜல்தால்பழம், நிலப்பனங்கிழங்கு, சீமை அக்கரகாரம், ரூமஸ்தகி, துஃமேகந்தான், துஃமேபாரஸ், துஃமேசல்ஜம், இலவங்கப்பட்டை, திப்பிலி, சுக்கு, அஸாரூன், சீமைக்கிச்சிலிக்கிழங்கு, சக்காக்குள்மிசிரி, சந்தனத்தூள், ஜகன்கோர், வகைக்குப் பலம் 1, பூனைக்காலிவித்து, பூமிசர்க்கரைக் கிழங்கு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி வகைக்குப் பலம் 2; ரேக்மாய் பலம் $\frac{1}{4}$.

செய்பாகம்:—ஆட்டுக்காலைக் கொதிக்கின்ற ஜலத்தில் தோய்த்து, மேல்மயிரைச் சுரண்டிச் சுத்திகரித்து நெருப்பில் வாட்டிச்,

சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு ஈயம் பூசிய பெரிய பாத்திரத்திற் போட்டுப் பன்னிரண்டுபடி தண்ணீர்விட்டு அதில் தனியாவை ஜலம்விட்டு நெகிழ அரைத்தும், வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக அரிந்தும் போட்டுச், சிறு தீயிலெரித்துக் கொண்டிருக்க மேற்படி கால்கள் நன்றாய் வெந்து, ஜலமானது இரண்டுபடியாகச் சுண்டியிருக்கும் சமயத்தில் எல்லாவற்றையும் ஒன்றாகப் பிசைந்து சுத்தமாக வடிகட்டி அதனுடன் கசகசாவை ஜலம்விட்டு அரைத்துப் பிழிந்தெடுத்த பாலையும், கருங்குறவை அரிசியை ஊறப் போட்டரைத்துப் பிழிந்தெடுத்த பாலையுஞ்சேர்த்துச் சிறு தீயாக எரித்துக் கொண்டிருக்க. பின் அவை எட்டில் ஒருபாகமாகச் சுண்டியதாகத் தெரியின் வெள்ளாட்டுப்பால், பசுவின்பால், தேங்காய்ப்பால் இவைகளை அதனோடு கலந்து, அடிபிடிக்காமலும், நீர் சுண்டும்படியும், பக்குவமாய் இலேகியபதம் வரும்வரையி லெரிக்க. பிறகு, இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்டவைகளில் பருப்பு வகைகளை அரைத்தும், மற்றவைகளை இடித்துச் சூர்ணித்தும் ஒன்றின்பின்னொன்றாகச் சேர்த்துப் பத்துப் பலம் நெய்விட்டுக் கிளறி இறக்கி ஆறவைத்துப் பாத்திரத்தில் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு ½ தோலா விகிதம் தினமிருவேளை சாப்பிட்டுவர 40 நாளில் சர்வராஜகருவிகளும் வலுப்பட்டு, தேகங் கொழுமை பெறுவதோடுமுன் எதிர்பாராதபடி அளவிறந்தபோக சக்தி உண்டாகும்.

பத்தியம்:—வேளை தவறாமல் நல்ல ஆகாரங்களை உட்கொள்ளல் வேண்டும்.

## 137. மஹாமதனகாமேசுர இலேகியம்

சரக்கு:—சுக்கு, பெருஞ்சீரகம், அதிமதுரம், கிராம்பு, மிளகு, வால்மிளகு, அரிசிதிப்பலி, ஆனைத்திப்பலி, நீர்முள்ளிவிதை, பூனைக்காலிவித்து, இலவங்கப்பத்திரி, கோஷ்டம், தனியா, தாளிசப்பத்திரி, கருஞ்சீரகம், உழுந்து, திராக்ஷை, நிலப்பனங்கிழங்கு, தக்கோலம், கசகசா, சிறுநாகப்பூ, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், ஏலம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, அசுவகெந்தி, சண்பகப்பூ, கஸ்தூரிமஞ்சள், இலவம்பிசின், வகைக்குப் பலம் 1.

ஒருபலம் கஞ்சாவை விதைநீக்கி எழுதரம் ஜலம்விட்டலம்பி இரண்டுபடி ஜலமும் காற்படி நெய்யும் விட்டு நன்றாகக் காய்ச்சிக் காற்படிஜலம் இருக்குஞ் சமயத்தில் நெய்யைப் பிரித்து வைத்துக் கொள்க.

செய்பாகம்:—நாற்பத்தைந்து பலம் சருக்கரையில் ஒருபடி பசுவின் பாலைவிட்டுத் தந்துபதம்வரக் காய்ச்சி, முதல் அங்கத்திற் கூறப்பட்ட சரக்குகளின் சூரணங்களைச் சிறிது சிறிதாகப் போட்டுச் சட்டுவத்தாற் கிளறி இறக்குந்தறுவாயில் இரண்டாம் அங்கத்திற்கூறிய நெய்யுடன் போதுமான தேன் கலந்து பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—இரவில் போஜனஞ் செய்தற்கு அரைநாழிகைக்கு முன் தேகதிடத்துக்குத் தக்கவாறு கழற்சிக்காய்ப் பிரயாணத்திற்குக் குறைத்தும் மிகுத்தும் சாப்பிட்டுப் பின்னர் ஆழாக்குப் பசுவின்பாலில் கற்கண்டு போட்டுப் பருகுக.

இங்ஙனம் இருபது அல்லது நாற்பதுநாள் உண்ண ஈளை, இருமல், அக்கினிமந்தம், சூலை, நெடுநாட்சுரம், முதலிய பிணிகள் நீங்கி வீரியவிருத்தியும் நல்ல தேஜசும் உண்டாகும்.

பத்தியம்:—பால், பழம், மிட்டாய், முதலிய இனிய பண்டங்களையும் நல்ல ஆகாரங்களையும் உட்கொள்ளல் வேண்டும்.

## 138. நரசிம்ம இலேகியம்

சரக்கு:—(1) அதிமதுரம், திப்பலி, தாளிசப்பத்திரி, மகரப்பூ, சுக்கு, மிளகு, சடாமாஞ்சில், அரத்தை, தனியா, ஏலம், நெல்லிவற்றல், கிராம்பு, வெள்ளைக்குங்குலியம், பால் சாம்பிராணி, ஆலம்வித்து, அரசுவித்து, இச்சிவித்து, பூமிசர்க்கரைக் கிழங்கு வகைக்குத் தோலா 1.

(2) ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, பேரீச்சங்காய், வகைக்குப் பலம் 1, சுத்திசெய்த மருளூமத்தன்வித்து தோலா 1, நல்ல வேளை வித்து தோலா 1.

(3) கெஞ்சா பலம் 2, கசகசா சேர் 1, அபினி வராகனெடை $1\frac{1}{2}$, பசுவின்பால் படி $\frac{1}{2}$.

செய்பாகம்:—மூன்றாவது அங்கத்தில் குறிப்பிட்டுள்ள சுத்தி கரித்த கஞ்சாவுடன் $\frac{1}{4}$ படி பசுவின்பால் விட்டு வேகவைத்துப் பிசைந்து பிழிந்து கஞ்சாவை நீக்கிப் பாலை பத்திரப் படுத்துக. பின்னர் மிகுதியுள்ள பாலையும் சமசலமும் விட்டுக் கசகசாவை நன்குஅரைத்துப் பிசைந்து பாலை எடுத்து வைத்துக்கொள்க. இவ்வாறு சேகரித்த பால்களை ஒருமிக்கக்கலந்து இதனில் அபினியைக் கரைத்து 4 பலம் சீனாகற்கண்டு சூரணம் சேர்த்து குழம்பு பதமாகக் காய்ச்சி முதலிரண்டு அங்கங்களில் குறிப்பிட்ட சரக்குகளில் அணுத்துவமான வைகளை நீக்கி மற்றவைகளைப் பொன் மேனியாக வறுத்து எல்லாவற்றையும் சூரணித்துக் கொஞ்சங் கொஞ்சமாய் போட்டு $\frac{1}{4}$ படி தேனும் $\frac{1}{4}$ படி பசுவின் நெய்யும் கூட்டி இலேகிய பதமாக இறக்குக.

பிரயோகம்:—இதனை வேளைக்குத் தேற்றாங்கொட்டைப் பிரமாணம் அந்திசந்தி சாப்பிட்டுக் கொண்டுவர அதிகபசி யுண்டாகும். வாதரோகம், நரம்புகளின் தளர்ச்சி முதலியவை குணப்படுவதுடன் தாதுபுஷ்டி யுண்டாகும்.

பத்தியம்:—இந்த இலேகியத்தை கொள்ளும் ஒவ்வொரு நேரமும் $\frac{1}{4}$ படி பசுவின்பாலில் $\frac{1}{4}$ படி ஜலம் சேர்த்து ஜலம் சுண்டக்காய்ச்சிச் சீனாகற்கண்டு போதிய அளவு இட்டுண்ணல் வேண்டும். புளியை எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்கின்றனரோ அவ்வளவுக் கவ்வளவு நற்பயனைப் பெறுவர் என்றறிக.

## 139. சாலாமிசிரி இலேகியம்

சரக்கு:—வாதுமைப்பருப்பு தோலா 12, பிஸ்தாபருப்பு தோலா 5, சல்கூஜாபருப்பு தோலா 3, அக்ரோட்பருப்பு தோலா 3, பிந்தோக் பருப்பு தோலா 3, கசகசா தோலா $1\frac{1}{2}$, சுரைப்பருப்பு தோலா 5, பருத்திப்பருப்பு தோலா 3, முள்ளங்கிவிரை தோலா 2, துஃமே சல்ஜம் தோலா $2\frac{1}{2}$, நீர்முள்ளி விதை தோலா 3, குறுபாவிதை தோலா 2, சத்தாவர் தோலா 2, முசிலிசியா தோலா 2, மூஸ்லி தோலா 2, துஃமேமோச்சரஸ், தோலா 3, சாலாமிசிரி தோலா 6, ஷக்காகுல்மிசிரி தோலா 4 சுக்குதோலா 2, ரூமஸ்தகி தோலா 3, குந்தர் தோலா $1\frac{1}{2}$, தபாஷீர் தோலா $1\frac{1}{2}$, தாதரிசுபேத் தோலா $1\frac{1}{2}$, பூஜித்தான்

தோலா $1\frac{1}{2}$, பிகேபன் தோலா 1, தார்ச்சின்னி தோலா $1\frac{1}{2}$, காரேகுஸ்க் தோலா $1\frac{1}{2}$, துஃமேகவிஞ்ச் தோலா 2.

செய்பாகம்:—பருப்பினங்களை வெந்நீரில் ஒருமணி நேரம் ஊறப்போட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகப் பால்விட்டுப் பலமுறையாக அரைத்துப் பிழிந்த பாலில் ஒரு தோலா அபினியைக் கரைத்துவிட்டு அதனோடு ஒரு வீசை சர்க்கரை சேர்த்துச் சிறு தீயில் எரித்துத் தந்துபதத்தில் மற்றச் சரக்குகளின் சூரணங்களைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறிப் பத்துப் பலம் நெய்யைச் சேர்த்துப் பிசைந்து கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ தோலா விகிதம் தினம் இருவேளை இதனைச் சாப்பிட்டுக் கொண்டுவர நீர்மயமாய் இளகிய இந்திரியம் கட்டுப்படும்; போகத்தில் இன்பம் விளையும்; நல்ல இரத்தமும், தேஜசும் உண்டாகும்.

பத்தியம்:—நல்ல ஆகாரங்களை உட்கொள்ளல் வேண்டும்.

## 140. சிட்டுக்குருவி இலேகியம்

சரக்கு:—ஆண்சிட்டுக்குருவி 8, ஜாதிக்காய் பலம் 1, ஜாதிப் பத்திரி பலம் $\frac{1}{2}$, ஐவனவிதை பலம் $\frac{1}{2}$, கடுக்காய் பருப்பு பலம் $\frac{1}{2}$, அபினி வராகனெடை 1, குங்குமப்பூ வராகனெடை 1.

செய்பாகம்:—சிட்டுக் குருவிகளை பிஸ்மல்லா செய்து சிறகுகள் ஒன்றில்லாமல் அப்புறப்படுத்தி அவற்றின் வயிற்றைக் கிழித்து உள்ளுறுப்புகளை நீக்கி முற்கூறிய சரக்குகளை யெல்லாம் நன்றாய் அரைத்து எட்டுப் பங்காகச் செய்து ஒவ்வொன்றிலும் செலுத்திப் பட்டு நூலிலாகினும் மெல்லிய கம்பியாலாகினும் சுற்றிக்கட்டிப் பசுவின் நெய்யில் காந்தாமல் பொரித்துச் சற்றேறக் குறைய நீர் வற்றின சமயம் கல்லுரலில் இட்டு அவைகளின் எலும்பு உட்பட மசியும்படி இடித்து பின்னர் கல்வத்திலிட்டு தேன்விட்டு இலேகிய பதத்திற்கு அரைத்தும் சுண்டக்காய் பிரமாணம் மாத்திரைகளாகத் திரட்டி ஒரு கோப்பையில் போட்டு அவைகள் முழுகத் தேன்விட்டு வைக்க.

பிரயோகம்:— வேளைக்கு ஒரு உருண்டை இலேகியமாக அந்தி சந்தி 17 நாள் சாப்பிட குறைவுற்ற ஆண் தன்மை மீளும்.

பத்தியம்:—மருந்து கொள்ளும் காலம்வரை ஸ்திரீபரிசம் இல்லாதிருத்தல் எவ்விதத்தினும் பெரும் பயனை உண்டாக்கு மென்க.

## 141. இடிவல்லாதி இலேகியம்

சரக்கு:—(1) வாலைரசம் பலம் $\frac{1}{2}$, கெந்தி பலம் $\frac{1}{2}$, இலிங்கம் பலம் $\frac{1}{2}$.

(2) பறங்கிப்பட்டை, அமுக்ராக்கிழங்கு, வகைக்குப் பலம் $2\frac{1}{2}$.

நிலப்பனங் கிழங்கு, பூமிசர்க்கரைக் கிழங்கு, சித்திரமூல வேர்ப்பட்டை, பேரீச்சங்காய், கருஞ்சீரகம், மெருகன் கிழங்கு வகைக்குப் பலம் $1\frac{1}{4}$. திரிகடுகு, அரத்தை, கோஷ்டம், அதிமதூரம், ஓமம், குரோசானி ஓமம், கசகசா, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வாதுமைப்பருப்பு, பூனைக்காலிவிதை, சதகுப்பை, பளிங்குசாம்பிராணி, இஸ்பகோல்விதை வகைக்குப் பலம் $\frac{1}{4}$.

(3) பத்துப்பலம் சேங்கொட்டையை மூக்குவெட்டி ஒரு குடுவையிற்போட்டு, எருமைச் சாணத்தைக் கரைத்து வடித்துவிட்டு அதனோடு சிறிது புளியிலையும் போட்டு, ஒரு கொதிவர எரித்து, சேங்கொட்டைகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு அவைகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒருபழகின நெய்குடுவையில் போட்டு, அதனில், பசுநெய்யேனும் கலப்பு நெய்யேனும், சரக்கு முழுகும் அளவிற்கு விட்டுக் காய்ச்சி, வடித்து நெய்யை மாத்திரம் பத்திரப் படுத்துக.

(4) பன்னிரண்டு பலம் நீரடி முத்தை ஒரு குடுவையிற் போட்டுச் சரக்கின்மேல் நாலுவிரற்கடை ஜலமிருக்க விட்டு, அதனோடு கொஞ்சம் ஓமமுஞ் சேர்த்து, ஒரு கொதிவர எரித்து, நீரடி முத்தின் ஓட்டை நீக்கிப் பருப்பைக் கல்வத்திலிட்டு நெகிழ அரைத்து வைத்துக் கொள்க.

செய்பாகம்:—கந்தகத்தை ஒரு ஓட்டிலுருக்கி இரசத்தை விட்டுக் கலக்கும்படி செய்து, கல்வத்திலிட்டு அதனுடன் இலிங்கத்தைச் சேர்த்து, ஒரு ஜாமம் நன்றாக அரைத்து, இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்டவைகளின் சூரணத்துடன் கலந்து, மூன்

றுவது நான்காவது அங்கத்திற் கூறப்பட்டவைகளையுஞ் சேர்த்துப் பிசிறி வைத்துக்கொள்க. பின்னர், ஒரு சுத்தமான கல்லுரலில் சூர்ணத்தையும் பன்னிரண்டு பலம் பனை வெல்லத்தையும் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுப் பூணில்லா உலக்கையால் இரண்டு ஜாமமிடித்துப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—வேளைக்குத் தேற்றாங் கொட்டைப் பிரமாணம் தினம் இருவேளை சாப்பிட்டுக் கொண்டுவர இருபது நாட்களில் குஷ்டம், திமிர், கண்டமாலை, மேகசூலை, கிரந்தி, அரையாப்பு, கரும்புள்ளி, மேகவூறல், படர்தாமரை, பௌத்திரம், குழிவிரணம், தொடைவாழை முதலிய பிணிகள் நீங்கும்.

பத்தியம்:—இச்சா பத்தியம்.

குறிப்பு:—ஒரே முறையாக இருபது நாட்கள் உட்கொள்வது கடினமாகக் காணப்படின் பத்து நாட்கள் முறையாக உண்டு பின்னர் ஸ்நாநம், சௌளம் முதலியன் செய்து மறுவலும் சாப்பிடலாம்.

## 142. வேறு முறை

சரக்கு:—பதினாறு பலம் சேங்கொட்டையை மூக்கு வெட்டிப் பசுவின் நீரில் அவித்துக் காயவைத்துக் குழித் தைலமிறக்கி அதனில் $3\frac{1}{2}$ பலம் எடுத்துக் கொள்க.

கந்தகத்தை உருக்கிப் பசுவின் பாலிலேனும் நெய்யிலேனும் ஏழுதரம் சாய்த்துச் சுத்திபடுத்தி அதில் ஒரு பலம் எடுத்துக் கொள்க.

இரசத்தைக் கல்வத்திலிட்டு எருக்கம்பால், சர்க்கரை, ஒட்டரை முதலியவைகளை ஒன்றன்பின் னொன்றாகச் சேர்த்தரைத்து ஜலம் விட்டு அலம்பிச் சுத்திசெய்து அதில் நான்கு தோலா எடுத்துக் கொள்க. எள்ளைத் தேய்த்து, வெண்ணிறமாகச் சுத்தப் படுத்தி அதனில் 5 பலம் எடுத்துக் கொள்க.

நல்ல வெல்லம் பலம் 5.

செய்பாகம்:—முதலில் கந்தகத்தையும் இரசத்தையும் கல்வத்திலிட்டு ஒருங்கு கலக்கும்படி அரைத்து, அதனோடு எள்ளைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்து அரைத்து, பிறகு தைலத்தையும் வெல்லத்தையும் சேர்த்துக் கல்வத்திலேயே புரட்டிப் புரட்டி ஒரு ஜாமம் இடிக்க.

பிரயோகம்:—வேளைக்குச் சிறு சுண்டக்காய் பிரமாணம் முன்பிரயோகத்திற் கண்டவாறே சாப்பிடச் சகல வியாதிகளும் தீரும்.

பத்தியம்:—புளியை நீக்கி இச்சா பத்தியமாக இருந்து பாலும் நெய்யும் அதிகமாகச் சேர்த்துக் கொள்க.

## 143. இடி பூர்ணாதி இலேகியம்.

சரக்கு:—ஒருபலம் கஞ்சாவை விதை, காம்பு முதலியவைக ளில்லாமற் சுத்திகரித்து, சுத்த ஜலம்விட்டு இரண்டொரு தடவை கசக்கிப் பிழிந்து, ஒரு குடுவையிலிட்டு, ஒருபடி இளநீரும் ஒருபலம் கடுக்காய்த் தோல் சூரணமும் சேர்த்து நீர் சுண்ட பக்குவமாக அடி பிடிக்காமல் வேகவைத்து உலர்த்துக. அதனை யே மறுவலும் ஒருகுடுவையிலிட்டு ஒருபடி பசுவின்பால் சேர்த்துப் பாலெல்லாம் சுண்ட எரித்து, எல்லாவற்றையும் கல்வத்தி லிட்டு நன்றாய் அரைத்து நாலைந்து பீங்கான் தட்டுகளில் விடுதி விடுதியாகவைத்து, நீரெல்லாம் வற்ற உலர்த்தி வைத்துக்கொள்க.

அதிமதுரம், சந்தனத்தூள், வெட்டிவேர், திப்பலி, ஏலம், கிராம்பு, மராட்டிமொக்கு, சிறுநாகப்பூ, ஜாதிக்காய், பச்சைக் கருப்பூரம், வகைக்கு விராகனெடை 1. இவைகளைத் தனித் தனியாகச் சூரணஞ்செய்து கொள்க.

செய்பாகம்:—முன் சித்தப்படுத்திய கஞ்சாவையும் சூரணத்தையும் ஒருங்கு சேர்த்து, இவைகள் எல்லாம் சேர்ந்த நிறைக்கு நல்லவெல்லம் சேர்த்துச் சிறிது சிறிதாகக் கல்வத்திலிட்டுக் குழவியால் புரட்டிப் புரட்டி இரண்டொரு நாள் இடித்து ஜாடியில் பதனம் செய்க.

பிரயோகம்:—இராக்கால போஜனத்திற்கு அரைமணிநேரத்திற்கு முன் தேற்றாங்கொட்டைப் பிரமாணமேனும் தேக சுபாவத்திற்கு ஏற்றவாறு குறைத்தேனும் அதிகப்படுத்தியேனும் சாப்பிட்டுப் பால் பருகல்வேண்டும். இதனால் வாதபித்த கபங்களின் ஒழுங்கினத்தா லுண்டாகிய பற்பல வியாதிகளைக் குணப்படுத்துவதோடு கைகால் பிடிப்பு, இரத்தமூலம், சீதபேதி, அஜீர்ணபேதி, கிராணி முதலிய பிணிகட்குச் சிறந்த ஔடதமாகவும் இருக்கும். இதனைக் 'கற்ப ஔடதம்' என்று முன்னோர் வியந்து கூறுவர்.

பத்தியம்:—பால், பழம், மிட்டாய், முதலிய நல்ல ஆகாரங் களை உட்கொள்ளல் வேண்டும்.

குறிப்பு:—இந்த இலேகியம் கூறிய அளவுபடி செய்யின் சிறி தேறத்தாழ இருபது பலம் ஆகும்.

தவாவுல் உஸ்மானி என்னும்

## 144 அமிருத சஞ்சீவினி இலேகியம்.

சரக்கு:—மஞ்சட் கடுக்காய்த்தோல், அரபிக் கடுக்காய்த் தோல், கறுப்புக் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், சோம்பு, நெல்லிவற்றல் வகைக்குப் பலம் 6, சூரிஞ்சான், இந்தி ராவன்,(தமட்டிக்காய்வற்றல்)குலேபனப்ஷா வகைக்குப் பலம் 2; அப்திமூன்பலம் 1, மொஹகல்அர்ஜக் (மைசாட்சி) தோலா 2, மக் ஜேபீலூஸ் (புளி) பலம் 2, கியாரஸ்சம்பர் (சரக்கொன்றைபுளி) பலம் 4, சாஜஜேபிந்தி பலம் 1, மஸ்தகி பலம் 1, முரபா ஆப்பில் பலம் 4, முரப்பாபிஹி பலம் 4, முரப்பா ஆமிலா பலம் 4, சீமை சிவதைவேர் பலம் 2, கசகசா பலம் 4, கமீலாபலம் 2, காக்நஜ் பலம் 4, பர்கேதுருப் (பச்சைமுள்ளங்கியிலை) பலம்1, பர்கேசுபீத் (சோகிக்கீரை)பலம் 1, பர்கேகாசினி பலம் 2, சர்தானே முகரக் (நண்டுமார்உலர்த்தியது) பலம் 2, ரோஜாமொக்கு பலம் 6, சிவ கரந்தைபுஷ்பம் பலம் 4, அழவனவிதை பலம் 2, உஷ்தக தோஷ் தோலா 2, ச்சோப் சின்னி தோலா 2, குலேகாவஸ்பான்பலம் 1, குலேசவுத்தி பலம் 1, ஜரிஸ் பலம் 2, விதையில்லாத் திராட் சை பலம் 6, மிசிதாஞ தோலா 5, ஊதேகற்கி பலம் 1, தணி யா தோலா 1, ஜர்நப் தோலா 2, பரங்கேமிஸ்க் தோலா 2, தரிஞ்சிபீன் அக்ருபி பலம் 1, பாதரஞ்சி போயா பலம் 1, புதிஞ பலம் 1, ஜடாமாஞ்சில் பலம் 1, சுத்திசெய்த வாளம் பலம் 4

செய்பாகம்:—இக்கூறியவைகளுள் இடித்துச் சூரணஞ்செய்ய வேண்டுவனவற்றை யிடித்தும், எண்ணெய் நிறைந்த வஸ்துக்க ளைக் கல்வத்திலிட்டு அரைத்தும் ஒன்றுபடகலக்கிப் பாதம் எண் ணெய் சேர் 1, சல்கூஜா எண்ணெய் சேர் $\frac{1}{2}$, பிஸ்தா எண்ணெய் சேர் $\frac{1}{2}$, கத்து எண்ணெய் சேர் $\frac{1}{4}$, விகிதம் விட்டுப் பிசறி ஒரு ஜாடியிற் போட்டு, வாய்மூடி, மெழுக்குச்சீலை செய்து பூமியில் மூன்றுமாதத்திற்குக் குறையாமலும் ஆறுமாதத்திற்கு அதிகப்

படாமலும் புதைத்துவைத்தெடுத்துக் கொள்க. பின்னர் சூரணம் எடைக்கு இரண்டுபங்குச் சீனிசர்க்கரையில் ஜலம்விட்டுப் பாகெடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சூர்ணத்தைக் கொட்டிக்கிளறி இலேகியபதமாக இறக்குக. இவ்வாறு செய்வதில் எண்ணெய் வகைகளுள் ஏதேனும் கிடைக்காவிடின் வேண்டுமான அளவுக்குச் சிற்றாமணக் கெண்ணெயைச் சேர்த்துக் கொள்ளலாம். இந்த இலேகியத்துடன் பூரப்பதங்கம் அல்லது பஸ்பம் வேளைக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$ அரிசி எடைவீதம் சேர்த்துக் கொடுத்தலும் உண்டு. வைத்திய வித்தையிற் பூரணபாண்டித்திய முள்ளார் தம் அறிவிற் கெட்டியவரை இதனைச்சிந்தூர பற்பங்களுடன் வியாதியின் குணத்துக் கேற்றபடி உணர்ந்து உபயோகித்துக் கொள்ளலாம்.

பிரயோகம்:—(1) இம்மருந்தைப் பிரதிதினமும் காலையில் மாத்திரம் உட்கொள்ளல் வேண்டும். அவசர நிமித்தமாக உட்கொள்ளவேண்டின் இரவு 12 மணிக்குமேல் சாப்பிடல்வேண்டும்.

(2) இதைச் சாப்பிடும்போது கவனிக்கவேண்டுவது யாதெனில், ஒவ்வொரு வியாதிபஸ்தரும் அடியிற் குறிப்பிட்டபடி அளவைச் சரிப்படுத்திக் காலையில் ஒரே தடவை சாதாரணமாய் மலம் போவதைப் பார்க்கிலும் இரண்டு மூன்று விசை அதிகமாகப் போகும்படியாக உட்கொள்ளல் வேண்டும்.

(3) மருந்தை அளவின்படி சாப்பிட்ட தினத்தில் மேற்கூறியபடி இரண்டு மூன்றுவிசை மலம் போகவில்லையென்றால் மறுநாள் தன் தேக ஸ்திதிக்குத் தக்கபடி மருந்தை $1\frac{1}{2}$ அல்லது இரண்டு பங்கு அதிகப்படுத்திச் சாப்பிடவேண்டும். அதனினும் மலம் ஒழுங்காகப் போகவில்லையாயின் சோம்பு தோலா $\frac{1}{2}$, சுக்கு தோலா $\frac{1}{4}$, சூரத்து நிலாவிரை தோலா $\frac{1}{4}$. இம்மூன்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கியாழமிட்டு வியாதி சொஸ்தமாகும் பரியந்தம் மேற்படி மருந்துடன் சாப்பிடவேண்டும்.

(4) இவ்விதமாய் கொண்ட ஔஷதத்தால் அதிகமாக விசர்ஜனமாகிச் சகிக்கக்கூடாமலிருப்பின் அன்னத்தில் குளிர்ந்த ஜலம்விட்டேனும் அல்லது மோர்விட்டேனும் கரைத்துக் கொடுக்கவேண்டும். அதில் பேதி நிற்கவில்லையாயின் வசம்பைச் சுட்டுக் கரியாக்கித் தேனிற் கலந்து கொடுக்க. மறுநாள் முன் சாப்பிட்ட அளவிற்குக் குறைத்துக்கொள்ளல் வேண்டும்.

(5) இம்மருந்தைச் சாப்பிட்டுப் பேதி நின்றபின் வயிற்று வலி, வயிற்றிரைச்சல், வயிறு முறுக்கல், மார்புநோய் முதலிய குறிகள் ஏதேனுங் காணப்படின் வெந்நீரில் அல்லது அன்னக் கொதி ஜலத்தில் நெய்விட்டுச் சாப்பிடுக.

(6) அவ்வவ் வியாதிக்குக் குறித்த நாட்களுக்குள் குண மாகாவிடில் மருந்தை நிறுத்தாமல் இரண்டுவாரம் இடைவிட்டு மறுவலும் முன்போலவே கொடுத்துவர வியாதி எவ்வளவு முதிர்ந்த நிலைமையி லிருப்பினும் குணப்படும் என்பது கடைப் பிடிக்க.

(7) தேகமிளைத்துப் பலஹீனப்பட்ட காலத்தில் மலம் போ கும்படி மருந்து அடிக்கடி சாப்பிடுதல் கஷ்டசாத்திய மாதலால் 3 நாள் அல்லது 5 நாட்களுக் கொருமுறை வியாதி குணமாகும் வரை சாப்பிடுதல் வேண்டும்.

(8) மேகவியாதி, சீழ், இரத்தம் முதலியவைகளையுடைய விரணம், சொறி, சிரங்கு, முதலியவை யுடையோர் அடியிற் குறி த்த கஷாயத்துடன் இதனை உட்கொள்ள அதி தீவிரத்திற் குண மடைவர்.

நிலவேம்பு, தூராவிலை, பிஞ்சிக் கடுக்காய், சந்தனத்தூள், சூரத்து நிலாவிரை, தணியா, காவுஸ்பான் அழுவனஇலை, ஒவ் வொன்றும் இருபது வயதுக்குட் பட்டவர்கட்கு $\frac{1}{4}$ தோலா வாக வும் 20 வயதுக்கு மேற்பட்டவர்கட்கு $\frac{1}{2}$ தோலாவாகவும் $\frac{1}{4}$ படி ஜலத்திற்போட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி இம்மருந்துடன் சாப்பிடல் வேண்டும்.

(9) பிணி ஒன்றுமில்லாத சுகதேகிகளும் சரீர ஆரோக்கிய நிமித்தம் இதனை மாதம் ஒருமுறையேனும் அல்லது மூன்று மாதத்திற் கொருமுறையேனும் சாப்பிடுவார்களாயின் திடுமென உண்டாகும் பாரிசவாயு, யானைக்கால், அண்டவாதம், வாந்தி பேதி, விஷஜ்வரம், பிளேக், அம்மை, ராஜக்கட்டி முதலியவை அணுகா.

(10) மருந்து சாப்பிடுவோர் அடியிற் கண்ட வஸ்துக்களைத் தள்ளிச் சாப்பிடின் அதி சீக்கிரத்தில் வியாதி தீரப்பெறுவர். கள்ளு, சாராயம், அபினி, கஞ்சா, முந்திரிப் பருப்பு, வாழைப் பழம், கத்திரிக்காய், புளிச்சக்கீரை, அகத்திக்கீரை, மாட்டுமாமி

சம், மீன், கருவாடு, முட்டை முதலியன. தைலஸ்நானம், பெண் போகம், கண்விழித்தல், கசரத்து, தேகப்பிரயாசையுள்ள அலைச்சல், திரிச்சல், வேலைகளும் இல்லாதிருத்தல் வேண்டும். விருப்பமிருப்பின் பிரீதியுள்ள ஜலத்தில் பேதியானபின் கண்ட ஸ்நானஞ் செய்யலாம்.

மருந்தினளவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | மீ | முதல் | 1 | ஔ வரை | 4 | குன்றிமிறைமுதல் | 8 | குன்றிவரை |
| 1 | ஔ | ... | 2 | ... | 5 | ... | 10 | ... |
| 2 | ... | ... | 5 | ... | 8 | ... | 16 | ... |
| 5 | ... | ... | 10 | ... | 10 | ... | 20 | ... |
| 10 | ... | ... | 20 | ... | 12 | ... | 24 | ... |
| 20 | ... | ... | 40 | ... | 28 | ... | 56 | ... |

இதனாற்றீரும்பிணிகள் (குழந்தைகட்கு)

குழந்தைகட்குண்டாகும் வயிற்றுநோய், மாந்த உப்புசம் மாந்த இருமல், மாந்தபேதி, பால்வாந்தி, சதாவாந்தி, கறுப்பான், உறக்கம், தூக்கத்தில் அலறுதல், பற்கடிப்பு முதலியன இரண்டு மூன்று வேளையிற் குணமாகும். மறுபடியும் கொடுக்க வேண்டிய ஆவசியகமின்றெனத் தோன்றினும் முன்போலவே சிலநாள் இடையிட்டு ஒருமுறை கொடுக்கப் பிணிகள் பற்றற நீங்கும்.

(பெரியவர்கட்கு) 3 நாட்களில் குணமாவன

வயிற்றுவலி, வயிற்றுப்புசம், மலச்சிக்கல், அஜீரணபேதி, மலத்தில் கிருமி உண்டாதல், பலவகைப்பட்ட வாந்தி, பசியின்மை, மூர்ச்சை, விஷஜவரங்கள் பிளேக்.

7 நாட்களில் குணமாவன

தலைநோய், ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல், ஈறு, கன்னம், உதடு, காது, நாக்கு, கழுத்து, தொண்டை, மூக்கு, இவைகளில் சீதள சம்பந்தத்தா லுண்டாகும் பலப் பல பிணிகள், மார்வலி, மார்வீக்கம், பக்கசூலை, பக்கவீக்கம், கபரோகங்கள், வாதரோகங்கள், சூதகவாயு.

15 நாட்களில் குணமாவன

பாரிசவாயு, கன்னவாயு, கைகால் பிடிப்பு, நரம்புதளர்ச்சி, கைக்கால் குடைச்சல், பீநசம், கண்டமாலை, சர்வாங்கப் பிடிப்பு,

கிரந்தி, சிரங்குசொறி, அரையாப்பு, ஆண்குறிவெடிப்பு, நீர் பௌத்திரம், பித்தபைத்தியம், காக்கைவலி.

40 நாட்களில் குணமாவன்

பெருவியாதி ஆரம்பம், வெண்குட்ட ஆரம்பம், சேமப் படைகள், பௌத்திரம், கைக்கால் திமிர், தேமல், மேகவிரணங் கள், கருமேகம், வாயுவினலுண்டாகும் ஸ்தூலதேகம், இரத்தக் கேட்டால் உண்டாகும் பல பிணிகள்.

குறிப்பு:—இம்மருந்தை உட்கொண்டால் இரண்டொரு தட வை மலம் போவதனல் பிணியாளருக்குப் பலஹீனத்தை உண் டாக்கு மென்பதில் ஐயுறவில்லை. ஆகவே, தேகதிடமறிந்து இர ண்டு, மூன்று அல்லது நான்கு நாட்களுக் கொருமுறையேனும் கொடுத்து வருதல் நலம். அங்ஙனம் உண்பது ஒருதரமேனும் நன்கு பேதியாகக்கூடிய அளவிற்ருக இருத்தல் வேண்டும்.

## 145. வேந்திய இலேகியம்

வெந்தியத்தை ஏழுதரம் கழுவிக் காயவைத்து பொன்மேனி யாக வறுத்து எந்திரத்திலரைத்து எடுத்தசூர்ணம் பலம் 20, கசகசா பலம் 5, ஜாதிக்காய் பலம 2½, ஜாதிப்பத்திரி பலம் ½, ஏலரிசி பலம் ½, குங்கமப்பூ தோலா 1, பச்சைக் கருப்பூரம் தோலா ¼, சர்க்கரை வீசை 1½, பசும்பால் படி 1.

செய்பாகம்:—சர்க்கரையில் பால்விட்டுத் தந்துபதம் வரக் காய்ச்சி மேற்கூறிய சரக்குகளில் அரைக்கத்தக்கவற்றை அரைத் தும், இடிக்க வேண்டுவனவற்றை இடித்தும் ஒன்று கலந்து சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறி 5 பலம் நெய், 5 பலம் தேன் இவை யிற்றைச் சேர்த்துப் பிசைந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் வேளைக்கு ½ தோலா விகிதம் காலை மாலை இருபதுநாள் சாப்பிடக் கணச்சூடு, மேக அழலை, கைக்கா லெரிச்சல், பித்தம் முதலியவை குணமாகும்.

பத்தியம்:—உஷ்ணமுள்ள பதார்த்த வகைகளை நீக்கி வேறு விருப்பமுள்ள வற்றை உண்க.

## 146. இடிகட்டுவாதி இலேகியம்

சரக்கு:—ஜாதிக்காய், அதிவிடயம், கற்கடகசிங்கி, கிராம்பு, சுக்கு, வால்மிளகு, மாசிக்காய், சன்னஇலவங்கப்பட்டை, மிளகு, காட்டாத்திப்பூ, குரோசானி ஓமம், கசகசா.

செய்பாகம்:—இக்கூறிய சரக்குகளைச் சமனெடையாக எடுத்துக்கொண்டு நெய்தடவிப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணஞ்செய்து பன்னிரண்டு பலம் பனைவெல்லத்துடன் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்திடித்துப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு 2 வராகனெடைமுதல் $2\frac{1}{2}$ வராகனெடைவரை தினம் மூன்றுவேளை உண்ணக் கிராணி, அதிசார பேதிகள் பரிகார மாகும்.

பத்தியம்:—காரசாரமான பதார்த்தங்களைத் தள்ளி, எளிதில் ஜீர்ணிக்கக் கூடிய ஆகாரங்களைக் கொடுத்துவருக. வியாதி கடினமானகாலத்தில் பார்லிஅரிசி, அரோரூட்மா, இவைகளின் கஞ்சி பால் முதலியவையே சிறந்தவையாம்.

## 147. திரிபலாதி இலேகியம்

சரக்கு:—கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய், வகைக்குப்பலம் 1. கடகரோகணி, வாய்விளங்கம், சுத்திசெய்த சிவதைவேர், வகைக்குப் பலம் $\frac{3}{4}$. ரேவல் சின்னி கிழங்கு, ரோஜா மொக்கு, நாட்டு நிலாவிரை, வகைக்குப் பலம் $\frac{1}{2}$. கிராம்பு, ஏலரிசி, சோம்பு, வகைக்குப் பலம் $\frac{1}{4}$ மூக்கரட்டைவேர் இடித்த சூரணம் பலம் $7\frac{1}{2}$. சர்க்கரை பலம் 15.

செய்பாகம்:—சர்க்கரையைப் பாகெடுத்து மேற்கூறிய சரக்குகளின் சூர்ணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக் கிளரி வேண்டுமான அளவிற்குத் தேனையும் நெய்யுங் கலந்து பிசைந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ தோலா இலேகியம் விகிதம் தினம் இருவேளை அயக்காந்தச் சிந்தூரத்துடன் சேர்த்துச் சாப்பிட்டு வரச் சகலவித வீக்கம் நீர் சுரப்பு, பாண்டு, சோகை, காமாலை, மகோதரம் முதலிய கொடும் பிணிகள் நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 148. மஹாவில்வாதி இலேகியம்

சரக்கு:—வில்வவேர் பலம் 10, இஞ்சிரசம் சேர் 1, பழரசம் சேர் 1, புளிப்பு மாதுளம்பழரசம் சேர் 1, வெல்லம் பலம் 16, ஏலம், இலவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பலி, செவ்வியம், தாளிசப்பத்திரி, சிற்றரத்தை, பேரரத்தை, அதிமதுரம், கோஷ்டம், அக்கரகாரம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு, வகைக்கு பலம் $\frac{1}{4}$.

செய்பாகம்:—வில்வவேரை மேல்தோல் சீவிக்கழித்து சிறு துண்டுகளாக நறுக்கி 2 படி ஜலத்திற் போட்டு நாலிலொன்றாகச் சுண்டக் காய்ச்சி வடித்து, அதில் இரசவர்க்கங்களைக் கூட்டி, வெல்லத்தைக் கரைத்துத் தந்துபதம்வரக் காய்ச்சி, மற்றைய சரக்குகளின் சூரணங்களைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக் கலந்து, ஆறின பின்னர் போதிய தேனும் நெய்யும் விட்டுப் பிசைந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் காலை மாலை சுண்டக்காய் பிரமாணமுண்டுவரப் பித்தவாயு, மயக்கம், கிறுகிறுப்பு, பிரசவித்த ஸ்த்ரீகட்குள்ள வாந்தி, வயிற்றுப்போக்கு முதலியன குணமாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 149. அஸ்வகந்தி இலேகியம்

சரக்கு:—அஸ்வகந்தி பலம் 20, பால் படி 2, நெய் படி 1, சர்க்கரை விசை $1\frac{1}{2}$, சீரகம், திராட்சை, பேரிச்சங்காய், சந்தனம், ஜாதிக்காய், கோரைக்கிழங்கு, கடுக்காய்ப்பூ, கூகைநீர், சுக்கு, மிளகு, திப்பலி, விலாமிச்சும்வேர், கிராம்பு, கண்டதிப்பலி, செவ்வியம், சித்திரமூலம், இலவங்கப்பட்டை, ஏலம், நாகேசுவரம், பச்சிலை வகைக்குப் பலம் $\frac{1}{4}$.

செய்பாகம்:—சர்க்கரையில் பாலைவிட்டுத் தந்துபதம்வரக் காய்ச்சி மேற்கூறிய சரக்குகளின் சூரணங்களைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக் கிளறி, ஆறினபின் நெய்விட்டுப் பிசறி வேண்டிய அளவிற்குத் தேனையுஞ் சேர்த்து வைத்துக் கொள்க.

பியோகம்:—தினம் காலை மாலை சுண்டக்காய் பிரமாணம் சாப்பிட்டுவர க்ஷயகாசம், சோகை, பாண்டு, காமாலை முதலிய

நோய்கள் பரிகரிக்கப்பட்டுத் தேகபுஷ்டி உண்டாகும். இதைக் கருப்பிணிமுதல் குழந்தைவரை கொடுத்தல் கூடும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 150. கந்தபுஷ்பி இலேகியம்

சரக்கு:—மெருகன்கிழங்குசமூலம் பலம் 15, கைக்கோளன் காடி அல்லது அன்னக்காடி (ஆறுமாதத்தது) படி 4, பசுவின்பால் படி $\frac{3}{4}$ சர்க்கரை பலம் 15, சுக்கு, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, விலாமிச்சுவேர், அமுக்கிராக்கிழங்கு, வாய்விளங்கம், கூகைநீர், கிராம்பு, சிவதைவேர், பொன்முசுட்டைவேர், கோரைக்கிழங்கு, நரியரிசி, கோரோசனை, வகைக்குப் பலம் $\frac{1}{2}$, நெய் பலம் 10.

செய்பாகம்:—மெருகன்கிழங்கு, இலை இவ்விரண்டையும் அரிந்து ஒரு பழகின மட்பாண்டத்திலிட்டுக் காடியை அதில் ஊற்றிச் சிறுதீயிலெரித்து, $\frac{3}{4}$ படியாகச் சுண்டுஞ் சமயத்தில் பிசைந்து வடிகட்டி, அதனோடு பசுவின்பாலுஞ் சர்க்கரையும் சேர்த்துத் தந்துபதம் வரக்காய்ச்சி மற்றைய சரக்குகளின் சூரணங்களைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறி, இறக்குந்தறுவாயில் நெய்விட்டுப் பிசைந்து கொள்க.

பிரயோகம்:—இதனைக் காலையில் மாத்திரம் சுண்டக்காய் பிரமாணம் நாற்பது நாள் உண்டுவர எல்லாவிதமான சுரங்கள் க்ஷயம், காசம், மூலம், அதிசாரம், மலபந்தம், அரோசிகம், மூர்ச்சை, பித்தம், வாந்தி, பித்தவாயு, தலையிடி, சூலை, சூதகவாயு சூதகத்தால் வரும் எரிச்சல், சூதகவலி முதலிய கடும் பிணிகள் நீங்கும். தவிர, வீரியவிருத்தி, தேஜஸ், சந்தானபாக்கியம் பசிதீபனம் முதலியவைகள் உண்டாகும்.

பத்தியம்:—பிணிக் கியைந்தவாறு பத்தியங் கோடல் வேண்டும்.

## 151. சந்தான இலேகியம்

சரக்கு:—(1) தண்ணீர்விட்டான் கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, கல்யாணப் பூசனிக்காய், நெல்லிக்காய், இவைகளின் சாறு வகைக்குப் படி 1, இளநீர் படி 1.

(2) உழுந்து பலம் 6, பூனைக்காலிவிதை பலம் 6, இவ்விரண்டினையுந் தனித்தனி நன்கிடித்து வெவ்வேறு பாண்டத்திலிட்டு ஒவ்வொன்றினும் இரண்டுபடி ஜலம்விட்டு எட்டி லொன்றாகக் காய்ச்சித் தனித்தனி வடித்து வைத்துக் கொள்க.

(3) ஏலரிசி, இலவங்கப்பத்திரி, கிராம்பு, அதிமதுரம், திராட்சை, இருப்பைப்பூ, அமுக்கிராக்கிழங்கு, ஓரிதழ்த்தாமரை, நீர்முள்ளிவிதை, நல்லபாலைவிதை, (கொடிப்பாலை) சிந்திற்சர்ககரை தனித்தனிச் சூரணம் வகைக்குப் பலம் 2½, திப்பலி சூரணம் பலம் 2, சீவினசுக்குச் சூர்ணம் பலம் 2, இப்பதின்மூன்று சரக்குகளின் சூர்ணங்களையும் ஒருங்கு கலந்து வைத்துக் கொள்க.

(4) நூறு பேயன் வாழைப்பழத்தைத் தோலுரித்து ஒரு பாண்டத்திலிட்டு இரண்டுபலம் சர்க்கரையைத் தூவிப் பிசைந்து ஓரிரவு மூடிவைத்து, மறுநாட் காலையில் மறுவலும் நன்கு பிசைந்து அதில்வரும் நீரைவடித்து வைத்துக் கொள்க.

செய்பாகம்;—முதலாவது அங்கத்தில் கூறப்பட்டுள்ள சாறு வகைகளை ஒரு பழகின மட்பாண்டத்திலிட்டுச் சிறுக எரித்து அரைபாகம் சுண்டின சமயத்தில் இரண்டாவது அங்கத்திற் கூறப்பட்ட கியாழங்களைச் சேர்த்து, ஒருவீசை சர்க்கரையைக் கலந்து தந்துபதம்வரக் காய்ச்சி அதனில் மூன்றாவது அங்கத்திற் கூறப்பட்ட சூர்ணங்களில் அரைப்பாகத்தைச் சிறிது சிறிதாகப் போட்டுக்கிளறி, நான்காவது அங்கத்திற் கூறப்பட்ட பேயன் வாழைப்பழச்சாற்றை விட்டு முன் நிறுத்திவைத்த அரைப்பாகத்தையுங் கொட்டி இலேகிய பதம் வரும்போது மூன்றாழாக்கு நெய்விட்டு இறக்கி ஆறவைத்து நான்கு பலம் தேனை விட்டுப் பிசைந்துகொள்க.

பிரயோகம்:—இவ் விலேகியத்தில் பிரதிகாலையிலும் ½ தோலாவிகிதம் 40 நாட்கள் சாப்பிட தாதுவிருத்தி நல்ல தேஜஸ் உண்டாவதுடன் சந்தான சித்திகை வலமாகும் அன்றியும் இரத்தபித்தரோகம், எலும்புருக்கிநோய், பெரும்பாடு, காமாலை, வறட்சி இருமல், மூத்திரகிரீச்சனம், பிரமியம், முதலியன தீரும்.

பத்தியம்:—கோழிக்கறி, நல்லெண்ணெய் இவற்றை ஆறு மாதத்திற்குச் சேர்த்தல் கூடாது. காலந் தவறுதலின்றி நல்ல ஆகாரங்கள் உண்டுவருதல் வேண்டும்.

## 152. வஜ்ஜிரகபாட இலேகியம்

சரக்கு:—(1) ஆலம்பட்டை, அத்திப்பட்டை, நாவல் பட்டை, மாம்பட்டை, விடதாரிவேர், தென்னம்பூ, ஆவாரம் பட்டை, கருவேலம்பட்டை, ஒதியம்பட்டை, அரசம்பட்டை, வெள்வேலம்பட்டை, வகைக்குப் பலம் 2

(2) தோலுரித்த ஒருதலை வெள்ளைப் பூண்டு பலம் 8, பனை வெல்லம் பலம் 4.

(3) ஜாதிக்காய், அபினி, ஓமம், அதிவிடயம், வகைக்கு வராகனெடை 2.

செய்பாகம்:—முதலங்கத்தில் கூறப்பட்டச் சரக்குகளை நன்றாய் இடித்து ஒரு மட்பாண்டத்திலிட்டு நான்குபடி ஜலம் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிவடித்து அதனை மீண்டும் ஒரு வாயகண்ட மட்பாண்டத்தி லிட்டு இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்ட பூண்டையும் இட்டு வெந்துக் குழையும் பதத்தில் கடைந்து பனைவெல்லத்தைப் போட்டு பாகுபதம்வர நோக்கி மூன்றாவது அங்கத்தில் கூறப்பட்டவைகளில் அபினியைப் பாலில்கரைத்தும் மற்றவையை சூரணித்தும் சேர்த்து போதிய நெய்விட்டுக் கிளரி வைக்கவும்.

பிரயோகம்.—தினம் இருவேளை கழற்சிக்காய் பிரமாணம் 20 நாள் சாப்பிட மூலம், மூலக்கிராணி, ஊஷ்ணபேதி முதலியவைகள் தீரும். இந்த இலேகியத்துடன் நாகச்சிந்தூரம் நாகபஸ்பம் கூட்டிக்கொடுத்தல் மிக்க நலம்.

பத்தியம்:—புளி, மிளகாய், மொச்சை, வெள்ளைப் பயறு, பச்சைக்கடலை, நீக்கவும். பச்சைப்பயறு, கத்திரிப்பிஞ்சு, வெள்ளாட்டு உப்புகண்டம், முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, காராக்கருணைக்கிழங்கு, மோர், தயிர், பால், நெய் முதலியவை கூட்டவும்.

# தைல இலப்பகம்

## குடித்தைல வகுப்பு

### 153. கண எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் வீசை ½, மணத்தக்காளிச்சாறு பலம் 2½, வெங்காயரசம் பலம் 2½, வெந்தயம் பலம் 1¼, வில்வ இலைக் கொழுந்தின் ரசம் பலம் 2½.

செய்பாகம்:—இக்கூறப்பட்ட வற்றுள் வெந்தயத்தை தைலஞ் செய்வதற்கு முன்னிரவே ஊறப்போட்டு வைத்து மறுநாள் நெகிழவரைத்து, மற்றவற்றோடு கலந்து மெழுகுபதம் வர, எரித்து வடிகட்டி, ஆறினபின் சீசாவில் பத்திரப் படுத்துக,

பிரயோகம்:—இதனைத் தேகத்துக்குத் தக்கபடி ஒருமுறை மலப்பிரவிர்த்தி யாகும்படி சாதாரண சிற்றாமணக் கெண்ணெய் சாப்பிடுவதுபோல் இரண்டு அல்லது மூன்றுநாளைக் கொரு முறையாகக் காலை நேரங்களி லுட்கொள்ள சிலநாளுபயோகத் திற்குள் கணச்சூடுதணிந்து குழைந்தைகள் புஷ்டியடையும். இவ் வெண்ணெயைத் தினம் சிற்றளவாகக் காலை மாலை துற்றெடை உட்கொண்டும் வரலாம்.

பத்தியம்:—பழையசாதம், மீன், கருவாடு, முதலியன உட்கோடல் கூடாது,

### 154. முலைப்பா லெண்ணெய்

முலைப்பால் படி 1½, சிற்றாமணக் கெண்ணெய் படி 1½, ஓரிலைன்கொடியிலைச்சாறு படி ½, வெள்ளைவெங்காயச்சாறு படி ½, கற்றாழைச்சாறு படி ½, சிவப்பு மணித்தக்காளிச் சாறு படி ½, பொன்னகத்திசாறு படி ½, பழச்சாறு படி ½.

செய்பாகம்:—இவைதம்மை ஒருமிக்கக் கலந்து ஒரு பழகிய மட்பாண்டத்திலிட்டு மூன்று கொதிவரக் காய்ச்சிய பதத்தில் 2 பலம் வெந்தயத்தை இளஞ்சூட்டில் வறுத்துக் கல்வத்திலிட்டு நன்றாயரைத்து மேற்படி எண்ணெயில்தூவிக் கிளறி ஆறவைத்து உபயோகிக்க.

பிரயோகம்:—பெரியோர்கள் தின மொருவேளை காலணு எடையில் காலை அல்லது மாலையில் உட்கொண்டுவர எலும்பு ருக்கி, கிராணி, அதிசாரம், சீதக்கடுப்பு, கணச்சூடு, மூலச்சூடு, நாட்பட்ட வெள்ளை, முதலியன தீரும்.

குழந்தைகட்கு ½ முதல் 1 காசெடை நாவில் தடவிக் கொண்டுவர உஷ்ணரோகங்கள் நிவர்த்தியாகித் தேகபுஷ்டி யுண் டாக்கும்.

பத்தியம்:—இச்சர்பத்தியம்.

## 155. வேறு.

முலைப்பால் சேர் 1, சிற்றாமணக் கெண்ணெய் சேர் 1, ஒணன்கொடியிலைக் கொழுந்து பலம் 2, வெள்ளை வெங்காயம் பலம் 2.

செய்பாகம்:—இக்கூறிய வற்றுள் பின்னிரண்டையும் நெகிழ வரைத்து எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலக்கி வண்டல் மெழுகு பதம் வருதற்கு முன் செவ்வையாய்க் காய்ச்சி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் காலை மாலை இரண்டு வராகனெடை வீதம் கற்கத்துடன் 10 நாளுட்கொள்ள கணைச்சூட்டினால் வெளி வந்த ஆசனம் உள்ளடங்கும். உஷ்ணத்தினால் கண்டபேதி, சீதம், இரத்தம், முதலியவைகளை நிறுத்தும்.

பத்தியம்:—காரசாரமான ஆகாரங்களை நீக்கி இலகுவில் ஜீரணிக்கக் கூடியவற்றை அருந்துக.

## 156. கர்ப்பவிருத்தி எண்ணெய்

சிற்றாமணக் கெண்ணெய் வீசை 1, நிலப்பனங்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, சத்திச்சாரணைக்கிழங்கு, மெருகன்கிழங்கு, வகைக்குப் பலம் 1, வெங்காயம் பலம் 5, தோல்சீவிக் கழுவிய குமரி பலம் 5, முடக்கொத்தானிலை பலம் 5.

செய்பாகம்:—முதலில் குமரிச்சாற்றையும் கிழங்கு வர்க்கங் களையும் சிறுதுண்டுகளாக ஒரேதிட்டமாக அரிந்து எண்ணெயில் போட்டுச் சிறுதீயிலெரித்து, அவை சிவந்துவரும்போது வெங் காயத்தையும் முடக்கத்தா னிலையையும் அரிந்துபோட்டு, வெங்

காயம் சிவக்கும் பதத்தில் வடித்தாறவிட்டுச் சீசாவில் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—இந்த எண்ணெயை 2 தோலா முதல் 3 தோலா வரை காலையில் ஒருவேளை கொள்ளுக. இதனால் மலஜலபந்தம், கைகலாசதி, வாயு உபத்திரவம், மேகத்தினால் சிசு சிதைதல் முதலிய குற்றங்கணீங்கிப் பூர்ணசந்திரன் போன்ற நல்ல அழகுடைய குழந்தை பிணியொன்றுமின்றிப் பிறக்கும்.

பத்தியம்:—புளி நீக்கி இச்சாபத்தியங் கொள்ளவேண்டும். மறுபத்தியத்தில் விருப்பமிருப்பின் சுட்டபுளி சேர்த்துக்கொள்க. கருப்பிணிகள் தேகவன்மை யிருப்பின் 7, 9 இம்மாதங்களில் மும்மூன்று நாளுட்கொளலாம். அது கூடாதாயின் இம்மாதங்களில் ஒருநாளேனு முட்கொள்க.

## 157. பூவரசங்காய் எண்ணெய்

(1) கொட்டைப் பூவரசங்காய்ச்சாறு, புதிதாகக் கொண்டு வந்து தண்ணீர் கலந்திடித்த பூவரசம் பட்டைச்சாறு, பூவரசம் பூவின்சாறு, சங்கங்குப்பிச்சாறு, அகத்திச்சாறு, கரிகாலைச் சாறு, வல்லாரைச்சாறு, உத்தாமணிச்சாறு, கோவைக் கிழங்கின் சாறு, நுணுவிலைச்சாறு இவைகள் வகைக்குப் படி $\frac{1}{4}$.

(2) சித்திரமூலம் வேர்ப்பட்டை, பறங்கிச் சக்கை, காரபோக அரிசி, கருஞ்சீரகம், வெட்பாலரிசி, அமுக்கிராக் கிழங்கு, காட்டுச் சீரகம், வகைக்குச் சூரணம் பலம் 1.

(3) சுத்திசெய்த கந்தகம் வராகனெடை 1, சுத்திசெய்த இலிங்கம் வராகனெடை 1, பூரம் வராகனெடை 1, தாளகம் வராகனெடை $\frac{1}{2}$, இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து வைத்துக் கொள்க.

செய்பாகம்:—ஒருபடி சிற்றாமணக் கெண்ணெயில் முதல் அங்கத்திற் சித்தப்படுத்தியவற்றைச் சேர்த்துச் சிறுதீயிலெரித்து எண்ணெய் கொதிக்குந் தறுவாயில், இரண்டாவது அங்கத்திற் குறிப்பிட்ட சூரணங்களைப் போட்டு மெழுகுபதம் வரும் வரை எரித்து, வடித்து, எண்ணெய் சுடுகையாக இருக்கும் போதே மூன்றாவது அங்கத்திற் குறிப்பிட்டதைப் போட்டுக்கிளறி ஆறின பின் சீசாவி லடைத்து கெற்புடம் வைத்தெடுக்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ பலம் விகிதம் நாளொன்றுக்கு இருமுறையேனும் $\frac{1}{2}$ பலம் விகிதம் ஒருமுறையேனும் இரண்டு மூன்று விசை பிரவிர்த்தியாகும்படி உட்கொள்ளல் வேண்டும். பிரவிர்த்தியாகாவிடின் எண்ணெய் அளவை அதிகப்படுத்தியும் அதிகமாக பிரவிர்த்தியாயின் அதைக் குறைத்தும் கொள்க. ஏழுநாள் ஒருமுறையாகக் கொண்டு சாப்பிட்டால் வெள்ளை, நீர்சுருக்கு, அரையாப்பு, கொறுக்கு கிரந்தி, கருமேகம், வெண் மேகம், கைக்கால் பிடிப்பு முதலிய பிணிகள் தீரும்.

பத்தியம்:—இச்சா பத்தியமாக வறுத்த உப்பு சுட்டபுளி சேர்த்து ஆகாரங் கொள்ளலாம் மாமிசம் கூடாது. வேண்டுமானால் வெள்ளாட்டிறைச்சி வற்றல் சேர்த்துக் கொள்க. புகையிலையை எவ்வகையினும் உபயோகித்தல் கூடாது. மூன்றுமாதம் வரை மாதர் போகம் கூடாது. ஒருமுறையில் குணப்படாவிடின் மூன்றும் மாதம் மறுமுறை உட்கொள்க.

## 158. வேறு

பூவரசங்காய் சாறுபடி 4, சங்கன் குப்பியிலைச்சாறு, கழற்சிக்கொடி சமூலச்சாறு, மெருகன் கிழங்கு ரசம், சித்திரமூலம் இலைச்சாறு, நரிவெங்காய ரசம், தழுதாழைச் சாறு, அஸ்வகந்தி ரசம், கருடன் கிழங்கு ரசம், கோழியவரைச்சாறு, பெருமரத்தி ரிலைச்சாறு வகைக்குப் படி 1.

காந்தம், தாளகம், கந்தகம், கருஞ்சீரகம், கார்போக அரிசி, கடகரோகணி, காட்டுச் சீரகம், வாலுழுவையரிசி வகைக்குப் பலம் $\frac{1}{2}$.

செய்பாகம்:—காந்தம் முதல் வாலுழுவை ஈறுகவுள்ள யாவற்றையுங் கல்வத்திலிட்டு மேற்கூறிய ஏதேனுமொரு மூலிகைச் சாற்றி லிரண்டு மணிநேரம் நன்றாயரைத்து 3 படி சிற்றாமணக் கெண்ணெவிட்டுச் சிறுதீயாயெரித்து, வண்டலானது மெழுகுபதம் வரும்போது வடித்து ஆறவிட்டு வாய்குவிந்த குப்பியி லடைத்து வாய்க்குப் பிரடைபோட்டு 20 நாள் தானியபுடம் வைத்தெடுத் துபயோகிக்க.

பிரயோகம்:—வேளைக்கு காலேயரைக்கால் முதல் அரை பலம் வரை தேகவன்மைக் கேற்றவாறு ஒருமுறை 5 நாள் கொடுக்க. இதற்குமேல் கொடுக்கலாகாது.

பத்தியம்:—கைப்பு, புளிப்பு, புகையிலே, போகம் கூடாது. பச்சைப்பயிறு, புடலம் பிஞ்சி, முளைக்கீரை, முருங்க விலேயுடன் சேர்த்து வறுத்த உப்பு, அவரைப்பிஞ்சி, அத்திப்பிஞ்சி, முருங் கைப்பிஞ்சி, நெய், சீரகம், முதலியவைகள் ஆகும். மேற்கண்ட எண்ணெயைச் சாப்பிட்டதனல் சூடு ஏற்பட்டிருப்பின் வெடித்த தென்னம்பாளை ஒன்றைக் கொண்டுவந்து, உள்ளிருக்கும் கதிர் களில் 5 எடுத்து, ஆழாக்கு பசுவின்பாலேக் கொஞ்சம் கொஞ்ச மாக விட்டிடித்து, மிகுதியான பசுவின்பாலே விட்டுப் விட்டுப் பிசைந்து வடிகட்டிச் சீரகச் சூர்ணம் பலம் $\frac{1}{4}$. பனங்கற்கண்டு பலம் $\frac{1}{2}$, இவைகளைப் போட்டு தினமிருவேளை சூடு தணியும் வரை யிலுட்கொண்டு வருக.

இதனல் அழுகிரந்தி, சொறிகிரந்தி, அத்திக்காய், ஆலங்காய், நுணுக்காய் கிரந்திகள், வெள்ளை, சூலே 18, மேகம் 21, பௌத் திரம், அண்டவாதம், மேகவாயு, ஆண்குறி சோர்வு, கையூறல், புள்ளிவிழுதல், கருமேகம் முதலியவைகள் தீரும்.

குறிப்பு:—இதனை உட்கொண்ட பின்னர் 3 மாதம் வரை ஸ்த்ரீ சங்கமம் கூடாது. வேறு ஔடதமுட்கொள்ளலாகாது. ஏனெனின் இதற்கு மூன்றுமாதம் வரை வேகமுண்டு. நன்காராய்ந்து மறுமுறை உட்கொள்ள வேண்டிய ஆவசியக மிருப்பின் கொள்க.

## 159. விஷ ராஜாங்கத் தைலம்

சரக்கு:—அழிஞ்சில் விதை, தட்டைப்புன்கன் பருப்பு, தான்றிப் பருப்பு, புன்னைப் பருப்பு, கடுக்காய்ப் பருப்பு, கார்போக அரிசி, எட்டி விதை, பெருநில வேம்பு, வசம்பு, வாய்விளங்கம், நீரடிமுத்து, கோஷ்டம், ஒட்டரை, வெங்காரம், சிவனார்வேம்பு, பெரிய இலவங்கப்பட்டை, கொல்லன் கோவைக்கிழங்கு, சிந்தில் கிழங்கு, கருடன் கிழங்கு, வேப்பம் பருப்பு, மகிழம் பருப்பு, ஊமத்தன்வித்து, பேரரத்தை, வன்னிப்பட்டை, காட்டுவாகைப் பட்டை, காட்டுச்சீரகம், பூண்டு, மிளகு, பெருங்காயம் வகைக்குப் பலம் 10.

செய்பாகம்:—இவை தம்முள் அழிஞ்சில் முதல் காட்டுச்சீரக மீறாக உள்ளசரக்குகளை அமுரியில் பிசரிப் பிசரி 20 நாள் தீக்ஷை முடித்து, அதனுடன் பூண்டு, மிளகு, காயம் இவைகளைச் சேர்த் திடித்து, 7 பங்காக்கி முறைப்படி குழித்தைல மிறக்குக. பின் எல்லாவற்றையும் ஒருங்கு கலந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினமிருவேளை 2 முதல் 5 துளி வரை சர்க் கரையிற் பிசரி கொடுத்தல் வேண்டும். அங்ஙனம் கொடுக்கும் போது தேக பலமும் வியாதிபலமு முணர்ந்து அளவை நிதானித் துக் கொள்வது அவசியம். இதனை ஒரு மண்டலம் உட்கொள்ள மேக சம்பந்தமான பல விரணங்கள், குழிவிழுந்தவிரணங்கள், மேகஊறல், படை, புரையோடும் விரணங்கள், விப்புருதி வாயு கட்டிகள், விஷஜந்துக்களா லுண்டான உபத்திரவங்கள், மூலமுளை, புற்று, கண்டமாலை, மார்பாணி முதலிய கடும்பிணிகள் தீரும்.

இம்மருந்தை உட்கொண்ட பின்னர் எத்தகைய, விஷஜந்துக் கள் தீண்டினும் கடித்தவைகள் விஷமேறி இறப்பதன்றி உண்டவருக்குத் தீங்கொன்றுமில்லை யென்பது திண்ணம். மேக விரணங்கட்கு மேற்பூச்சு மெண்ணெயாகவும் புரையோடும் விர ணங்கட்கு துளி எண்ணெயாகவும் உபயோகித்தலுங் கூடும்.

பத்தியம்:—புளி நீக்கி இச்சாபத்தியமாக இருத்தலுடன் ஸ்த்ரீபோகம் ஆறுமாதத்திற்கு கூடாது.

குறிப்பு:—அளவை நிதானிக்குமாறு.

முதல்நாள் ஒரு வராகனெடை சீனி சருக்கரையில் நான்கு துளி தைலத்தைவிட்டு மத்தித்து அதை இரண்டு வேளையாகப் பங்கிட்டுச் சாப்பிடுதல்வேண்டும். இதனால் மயக்க மிகுதியு முண் டாயின் அவ்வளவைக் குறித்தும், மயக்கஞ் சிறிது மில்லாவிடின் சிறிது அதிகப்படுத்தியும் தேகத்திற்கு இசைந்தபடி அளவை நிதா னிக்க. இத்தேகத்திற்கு இதுதான் மருந்தளவு என்பதை, மருந்து கொண்டபின் கால்நாழிவரை நிற்குஞ் சிறுமயக்கத்தின் குறியே அளவென் றுணர்க.

## 160. அண்டத்தைலம்

சரக்கு:—வாலைரசம், கந்தகம், தாளகம், மனோசிலை, இலிங்கம், காந்தம், வெங்காரம் இவைகள் வகைக்கு வராகனெடை 1. சுத்திகரித்த வாளம் பலம் 1, கறிமஞ்சள் சூரணம் பலம் $\frac{1}{4}$.

செய்பாகம்:—இவையிற்றை முறையே ஒன்றன்பின் னொன்றாய்ச் சேர்த்தரைத்துக்கொண்டு பின்னர் பத்துப்பலம் வேப்பெண்ணெயில் கொஞ்சங் கொஞ்சமாக மெழுகுபதம் வர அரைத்து, மிகுதியுள்ள எண்ணெயிற் கலக்கி வைத்துக்கொள்க. கனமும் நீளமுமுள்ள இரண்டு மூன்று வசம்பு துண்டுகளை ஒரு நீளமான இரும்புக் கம்பியினாலேனும் ஊசியினாலேனுஞ் செருகிப் பிடித்துக் கொண்டு முன் சித்தப்படுத்தியுள்ள எண்ணெயில் தோய்த்துக் கொளுத்தி மேற்படி எண்ணெயைச் சிறுகவிட்டு முறைப்படி சுடர்தைல மிறக்குக.

பிரயோகம்:—இவ்வாறு இறக்கிய ஐந்துபலம் தைலத்தில் இரண்டரைபலம் பூண்டின் தைலத்தையும் ஒன்றேகால் பலம் கோழிமுட்டையின் மஞ்சட் கருத்தைலத்தையும் கலக்கி வைத்துக்கொள்க.

அளவு

| | | | |
|---|---|---|---|
| உற்பவ முதல் | 3 மாதம் வரை | 2 | துளி |
| 4 மாதமுதல் | 1 வருடம் வரை | 3 5 | துளி |
| 2 வருஷமுதல் | 4 வருடம் வரை | 6 10 | துளி |
| 5 வருஷமுதல் | 7 வருடம் வரை | 10 15 | துளி |

இக்கூறிய அளவின்படி குழந்தைகட்குப் பச்சைவெற்றிலைச் சாற்றிலேனும் அல்லது முலைப்பாலிலேனும் கலக்கிக் கொடுப்பின் மாந்தம், ஜ்வரம், ஜன்னி, இழுப்பு (இசிவு) கபக்கட்டு முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—ஆகாத பதார்த்தங்களை நீக்கித் தக்கபெற்றி உணர்ந்து உண்க.

குறிப்பு:—பேதியதிகமாகவேனும் குறைவாகவேனும் ஆகுமாயின் அதற்கேற்றபடி மருந்தினளவைக்குறைத்தும் மிகுத்துங் கொடுத்தல் வேண்டும். பேதியை நிறுத்தவேண்டுமாயின் வசம்பைச்சுட்டு நன்றாய் கறியாக்கித் தேனில் குழைத்து நாவில் தடவிக் கொண்டுவர நின்றுவிடும்.

## 161. வேறு

தாளகம், மனோசிலை, இலிங்கம், பூரம், கந்தகம், சூரத்துக் கருப்பூரம், பொரித்த வெங்காரம், வகைக்கு வராகனெடை 1. சுத்திசெய்த வாளம் பலம் ½.

செய்பாகம்:—இவைகளை கல்வத்தில்போட்டு நன்றாய் அரைத்து ஒருபழகின மட்பாத்திரத்தில் செலுத்தி ¼ படி சிற்றாமணக் கெண்ணெயும் ¼ படி வேப்பெண்ணெயுமாக விட்டுக் கலக்கி சிறு தீயால் எரித்து எண்ணெய் கொதிக்கும் சமயம் ½ பலம் பூண்டின் தைலமும் 1 பலம் அண்டத்தைலமும் விட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—பெரியவர்கட்குக் காலைநேரத்தில் ஒரு உச்சிக் கரண்டி வீதமும் குழந்தைகட்கு வயதுக்குத் தக்கவாறு ⅛ முதல் ½ கரண்டியாககொடுக்க வலிசம்பந்தம், ஜன்னிமுதலியவை தீரும்.

பத்தியம்:—வறுத்தவுப்பு சுட்டபுளிக்கூட்டிச் சமைத்த அன்னம் பதார்த்தங்களைக்கொள்க. ஒருமுறை இத்தைலத்தை 5 நாளைக்குக் குறையாமல் 11 நாளைக்கு மேலிடாமல் கொடுத்தல் நன்று.

## 162. ஓணான் தைலம்

வீரம், பூரம் கந்தகம். இலிங்கம், தாளகம், மனோசிலை, பால் துத்தம், துருசு, வெள்ளைப்பாஷணம், பொரித்த வெங்காரம், நவாச்சாரம், படிகாரம் வகைக்கு வராகனெடை 1.

செய்பாகம்:—இவைதம்மைக் கல்வத்தில்போட்டு நன்றாயரைத்து ஐந்துபலம் உரித்த வெள்ளுள்ளியை கொஞ்சங்கொஞ்சமாகப் போட்டு மெழுக்குவண்ண மரைத்து வெண்மையும் சுத்தமுமான சீலையில் தடவி இரண்டு மூன்று ஓணானைக் கொண்டுவந்து தலை, தோல், கால், குடல், வால் முதலியவற்றை போக்கி அவைகளை ஒருங்குசேர்த்துத் தந்திகம்பியால் இரண்டொரு இடங்களில் கட்டி அதன்மேரில் சீலையைச்சுற்றி 15 பலம் வேப்பெண்ணெயை விட்டுச் சுடர்தைலம் வாங்கவும் இப்படி வாங்கின தைலத்தை மீண்டும் அதன் பேரிலேயேவிட்டு எரித்து மடக்கவும். இங்ஙனம் மூன்றுமுறை செய்து சீலையில்வடித்து அதனில் இரண்டு வராகனெடை சுத்திசெய்த வாளத்தைக் கல்வத்திலிட்டு இச்சுடர்தைலம்

விட்டு நன்றாய் அரைத்து மிகுதியுள்ள எண்ணெயில் கலக்கி வைத்துக் கொள்க.

பிரயோகம்.—தினம் ஒருநேரம் காலையில் வயதுக்குத்தக்கபடி 3 முதல் 6 துளிவரையில் முலைப்பாலில் சேர்த்துக் குலுக்கிக் கொடுக்கவும். ஒருமாதம் இரண்டுமாதக் குழந்தைகட்கு 1 முதல் 3 துளிவரையிலும் நாவிற்றடவவும். பெரியவர்கட்கு 12 துளிக்கு மேல் கொடுக்கவேண்டிய தவசியமில்லை. இதனால் காக்கைவலி, முயல்வலி, குமரகண்டவலி, பாரிசவாதம், குழந்தைகட்குண்டாகும் இசுவு, இளம்பிள்ளை வாதம், மாந்தம் முதலியவை தீரும்.

பத்தியம்:—குழந்தைகட்குக் கொடுக்கும்போது தாய் சுட்டபுளி, வறுத்த உப்பு, கத்தரிப்பிஞ்சி, முருங்கைப்பிஞ்சி, அத்திக்காய், வெள்ளாட்டு உப்புக்கண்டம், கோழி, புறா முதலியவைகளைக் கூட்டிக் கொள்ளலாம். பெரியவர்கட்கு இச்சாபத்தியம்.

குறிப்பு:—இத்தைலத்தை ஒருமுறை 5 நாள் வரையிலும் கொடுக்கலாம். மீண்டும் அவசியமாயின் இரண்டுவாரங் கழித்து 3 நாள் கொடுக்கவும். இப்படி குணமாகும் பரியந்தம் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை 3 நாள் கொடுத்துக்கொண்டு வருக. இசுவு முதலியவை உட்கொண்ட இரண்டுமணி நேரத்தில் குணமாகும்.

## 163. கோடிக்கள்ளி எண்ணெய்

சரக்கு:—கொடிக்கள்ளி வேர் பலம் 1, சித்திரமூலம் வேர் பலம் 1, எருக்கம் வேர் பலம் 1, அமுக்கிராக்கிழங்கு பலம் 1, கொடிக்கள்ளிச் சாறு படி $\frac{1}{2}$ (அரைக்கால்).

செய்பாகம்:—முதல் நான்கு சரக்குகளைச் சூரணித்து, அதனுடன் இரசம், கந்தகம், இரசச் சிந்தூரம் இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சி வீதம் கல்வத்திலிட்டு நன்றாயரைத்துக் கலந்து, * கொடிக்கள்ளி ரசத்தைவிட்டுப் பிசரி, ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயைவிட்டுப் பதமுறக் காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—தினந்தோறும் காலையில் தேக வன்மைக்கேற்றவாறு † மூன்று உச்சிக் கரண்டி வீதம் 5 அல்லது 7 நாள்

* கொடிக்கள்ளி என்பது கொம்புக்கள்ளி யன்று; பெரிதுங் கூர்ந்தறிந்து பாகத்துக்குச் சேர்த்துக்கொள்க. † 1 கரண்டி = 1 தோலா.

சாப்பிட ஆறாத மேகவிரணங்கள், பிடிப்பு, சூலை, அரையாப்பு, கொருக்கு, கண்டமாலை, பௌத்திரம், மார்பாணி முதலிய பிணிகள் தீரும். இரணங்கட்கு மேற்சிகிச்சை அவசியமாக வேண்டுமாயின் கஷாய இலம்பகத்திற் கூறப்பட்டுள்ள விரணப்பிரக்ஷாளன கஷாயத்தால் அலம்புதல் சாலும்.

பத்தியம்:—உப்பை வறுத்தும் புளியைச் சுட்டும் கூட்டிக் கொள்க.

## 164. கோரோசனை எண்ணெய்

சரக்கு:—சுக்கு, வால்மிளகு, லவங்கம், லவங்கப்பட்டை, ஏலரிசி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, இவைகளின் சூரணம் வகைக்கு பலம் $\frac{1}{4}$, பழரசத்தில் ஒருமணி நேரம் சுருக்குக் கொடுத்த பூரம் பலம் $\frac{1}{4}$, சிற்றாமணக்கெண்ணெய்யில் பொன் மேனியாகவறுத்த வாளம் பலம் $\frac{1}{4}$. நல்ல கோரோசனை வராகனெடை $\frac{1}{4}$, இவைதம்மைக் கல்வத்திலிட்டு நெகிழ அரைத்து, அரைப்பலம் வெந்தியம் போட்டுச் சிவக்கக் காய்ச்சி வடித்த $12\frac{1}{2}$ பலம் சிற்றாமணக்கெண்ணெய்யிற் சிறிது பாகம்விட்டு 4-5 மணி நேரம் அரைத்து மிகுதியுள்ள எண்ணெயிற் கலக்கிவைத்துக்கொள்க.

பிரயோகம்:—தேக திடத்திற்குத் தக்கவாறு தினம் ஒரு நேரம் காலையில் $\frac{1}{2}$ பலம் வீதம் 3 நாள் கொடுக்கவும். மறுமுறை தேவையாயின் 30 நாள் சென்றபின் முன்போல் ஒருமுறை கொடுக்கவும். இதனால் பைத்தியம், மூர்ச்சை, காக்கைவலி, நரிதலைவாதம், அண்டவாதம், சீதபேதி முதலியவை தீரும். தவிர, கருப்பிணிகட்கு 7-ம் மாதத்தில் விரோசனத்திற்காகவும் உபயோகப்படுத்த நன்று.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 165. கஸ்தூரி எண்ணெய்

சரக்கு:—கோரோசனை, கோஷ்டம், அதிமதுரம், சீரகம், திப்பலி, தேவதாரு, சந்தனம், ஏலம், மாசிக்காய், வெந்தயம், சுக்கு, வெள்ளுள்ளி, கஸ்தூரி, வசம்பு, கடுகரோகணி, பச்சை மூங்கில் தோல்.

செய்பாகம்:—இக் கூறப்பட்ட 16 சரக்குகளில் கோரோசனை, கஸ்தூரி இவ்விரண்டையும் நீக்கி மற்றவற்றை பொன்

மேனியாகவறுத்துத் தனித்தனி இடித்துச் சூர்ணம்செய்து வகைக்கு வராகனெடையாகக் கல்வத்தில்போட்டுக் கோரோசனை கஸ்தூரி வகைக்கு ஒவ்வொரு வராகனெடைக் கூட்டி எருமுட்டைப் பீநாரிச்சாற்றால் இரண்டு மூன்று ஜாமம் அரைத்து ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயில் கலக்கிப் பதமாக எரித்து வடித்துக்கொள்க.

பிரயோகம்:—இவ்வெண்ணெயைக் குழந்தைகட்குத் தினம் ஒருவேளை முலைப்பாலோடு குலுக்கிக்கொடுக்க. மாந்த வயிற்றுப் பிசம், சுழிமாந்தம், தனிச்சுரம், குளிர்சுரம், முக்குகணம், பட்சி தோஷம், பழஞ்சுரம், முதலியவைகள் எல்லாம் குணமாகும்.

பத்தியம்:—குழந்தையினது ரோகத்திற்கு இசைந்தவாறு இச்சாபத்தியமாகவும், புளித்தள்ளியும்வைப்பது நன்று பாலுண்ணும் குழந்தையாக இருப்பின் தாய் இப்பத்தியத்தைக் கவனித்தல் நன்று.

## 166. இலிங்கத் தைலம்

சரக்கு:—இரண்டு தோலா இலிங்கத்தை அரைக்கால்படி வெள்ளைப் பூண்டையிடித்துப் பிழிந்தசாற்றைச் சிறுகவிட்டரைத்து வில்லை செய்து வைத்துக்கொண்டு காலேயரைக்கால் சேர் வெள்ளாட்டுக் கழுத்துக் கறியைக் கொத்தி அதி லரைபாகம் ஒருசட்டியில் போட்டு அதன்மீது முன் சித்தஞ் செய்துள்ள வில்லையை வைத்து மிகுந்த வெள்ளைப் பூண்டின் இரசத்தையும் 1 பலம் நல்லெண்ணெயும் மேல்விட்டு அதன்மீது முன்னிறுத்தி வைத்த வெள்ளாட்டுக் கறியைப் போட்டமுத்தி மேல்சட்டி மூடிச் சீலைசெய்து, அடுப்பில்வைத்து நீர் சுண்ட எரித்து, அடிசட்டியின் தூரில் சிறு துவாரங்கள் 4, 5 போட்டுக் குழித்தைல மிறக்கும் விதிப்படி எருவடுக்கித் தைலம் வாங்கி யதனிலிறங்கியிருக்கும் ஆவி நீரைப் போக்கித் தைலத்தைப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—தாதுபுஷ்டியில் குறைவு நேரிடினும், அளவிற்குமேல் தாது செலவாகியிருப்பினும், இக்குழித்தைலத்தில் ஒருதுளிமுத லிரண்டுதுளிவரையில் சருக்கரையுடன் கலந்து தினமிருவேளை உட்கொள்க. இரவில் படுக்கைக்குப் போகும்போது இரண்டு மூன்று துளித் தைலத்தைக் கோசத்தின்மேல்பூசி, அதன்மேல் வெற்றிலையைச் சுற்றித் துணியால் கட்டிக்கொண்டுவாத்

தாதுபுஷ்டி விருத்தியாகும். இதனை உட்கொள்ளில் வாதஜ்வரம், வாதசம்பந்த பிடிப்பு, மதுமேகம் இவைகள் குணப்படும். பெண்கட்குக் கருவுயிர்த்தபின் கொடுத்துக் கொண்டுவர நல்ல தேஜசும் ஆரோக்கியமு முண்டாகிப் பால் சுரக்கும், கருவுற்றிருக்குங்காலத்து இதனைக் கொடுத்தலாகாது.

பத்தியம்:—நல்ல ஆகாரங்களைச் சாப்பிடவேண்டும். தவிர போதுமான வன்மையைப் பெறுங் காலம்வரையில் போகம் கூடாது.

## 167. வாதாங்குச எண்ணெய்

சரக்கு:—வெடியுப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, சவட்டுப்பு, வெங்காரம், சாரம், பெருங்காயம், துருசு, கந்தகம், இவைகள் வகைக்குப் பலம் 1.

செய்பாகம்:—இவை தம்மைக் கல்வத்திலிட்டுத் தேங்காய்ப் பால் படி 1, சதுரக்கள்ளிப்பால் பலம் 5. இவைகளைக் கலந்து, சிறிது சிறிதாகவிட் டரைக்கும்போது, இரண்டு பலம் சுத்தி செய்த வாளத்தைச் சேர்த்து நன்றுயரைத்து மிகுதிப்பட்ட பாலில் கலக்கிப் பதமாக வண்டல் வேறு நெய் வேருகப் பிரியு மாறு காய்ச்சி வடித்தெடுக்க.

பிரயோகம்:—5 துளிமுதல் 7 துளிவரை * காப்பியிலேனும் சருக்கரையிலேனும் கலந்து காலை நேரத்தில் கொடுக்க 5, 7 முறை பேதியாகிச் சகலவித வாதரோகங்களையும் நிவர்த்தி செய்யும்.

பத்தியம்:—இச்சா பத்தியம்.

## 168. கந்தகத் தைலம்

சரக்கு:—கந்தகம் பலம் 5, சாரம் பலம் 1, வீரம் வராகனெடை 2, இரசம் பலம் 1, வெடியுப்பு பலம் 1, அரிதாரம் வராகனெடை 3, இலிங்கம் பலம் $\frac{1}{2}$, பூரம் பலம் $\frac{1}{2}$, பசுவின் வெண்ணெய் படி $\frac{1}{2}$.

செய்பாகம்:—இந்த சரக்குகளைக் கல்வத்தில்போட்டு 2 அல்லது 3 நாள் ஈரம் வறள அரைத்து முழச்சீலையில் தடவிச்சுருட்டி ஒரு குரட்டினுல் திரியின் இடையில் பிடித்துக்கொண்டு அடிபாகத்

---

* பால்சேர்ந்த பானம்.

தில் கொளுத்தி எரியும்போது அதிலிருந்து வடியுந் தைலத்தைச் சேகரித்து மெல்லிய சீலையில் வடித்து புட்டியில் அடக்கம் செய்க.

பிரயோகம்:—இதனைத் தேகதிடத்திற்குத் தக்கவாறு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ காசு அகலம் பரவும்படியாகக் கையில் விட்டுச் சருக்கரையில் பிசரி 20 நாள் உட்கொள்ள தீராத குட்டம், காசம், குன்மம், வலி குன்மம், விரணம், பாரிசவாய்வு, கைகால் பிடிப்பு கொடிய மேகம், வாய்வு, ஜன்னி, திமிர் வாய்வு முதலியன குணமாகும்.

பத்தியம்:—இதற்குப் பத்தியம் இல்லை, புண்ணுக்கு முதல் எண்ணெய் எல்லாம் சேர்த்துக் கொள்ளலாம்.

## 169. மேருகன்கிழங் கெண்ணெய்

சரக்கு:—மேல்தோல் சீவின மெருகன் கிழங்கு பலம் 20, வெள்ளை வெங்காயம் பலம் 10, வெள்ளைப்பூண்டு பலம் 10.

செய்பாகம்:—இவைகளையெல்லாம் மொச்சைப்பருப்பு அளவாகச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒருவிசை சிற்றாமணக் கெண்ணெயில் சேர்த்து எரிக்க அவை சிவந்த பதமாக வரும்நேரம் வடித்துச் சீசாவிலிடுக.

பிரயோகம்:—தினம் காலையில் $\frac{1}{4}$ அல்லது 1 பலம் எண்ணெயைத் தேகவன்மை மென்மைக்குத்தக்கவாறு 3 தினம் கொடுக்கவும். இதனால் வாத சம்பந்தமான பிடிப்பு, வலி முதலிய ரோகங்களும் சொறி, சிரங்கு, ஆராத மேக விரணங்கள் எல்லாம் குணமாகும்.

பத்தியம்:—ரோகத்தின் சாத்தியா சாத்தியத்திற்குத் தக்கபடி உப்பை நீக்கியும் நீக்காமலும் அல்லது உப்பைச் சேர்த்துக் கொண்டு, புளியைநீக்கியும் நீக்காமலும் சமயோசிதமாய் ஆகாரஞ் செய்யவும்.

## 170. மேகத்தெண்ணெய்

சரக்கு:—துமட்டிக்காய்சாறு சேர் $\frac{1}{4}$, பூவரசம்பட்டைச் சாறு சேர் $\frac{1}{4}$, பச்சைமஞ்சள்ரசம் சேர் $\frac{1}{4}$, வேப்பம்பட்டைசாறு சேர் $\frac{1}{4}$, வெள்ளை வெங்காயச்சாறு சேர் $\frac{1}{4}$, ஆவின்நெய் பலம் 1, சிற்றாமணக்கெண்ணெய் சேர் $2\frac{1}{2}$.

செய்பாகம்:—எளிதில் சாறு கிடைக்கப் பெருவனவற்றி னின்று சாறு எடுத்தும், மற்றையவற்றிற் சலந்தெளித் திடித்துப் போதியவளவு எடுத்தும் ஒரு மட்பாண்டத்திலிட்டு நெய், எண் ணெய் முதலியவற்றைச் சேர்த்து, மீண்டும் முற்கூறப்பட்ட சரக்கு களில் வகைக்கு ஒரு தோலா விகிதம் குழி அம்மியிலிட்டு நெகிழவரைத்து ரவிமுகத்தில் ஒருநாள் வைத்து மறுநாள் பத முறக் காய்ச்சி வடித்து தானியபுடம் வைத்திடுக.

பிரயோகம்:—இதனை தினம் ஒருநேரம் காலையில் $\frac{3}{4}$ முதல் 1 பலம் வரை தேக சுபாவத்திற்குத் தக்கவாறு உட்கொள்ள 4-5 முறை மல பிரவர்த்தியாகும். இங்ஙனம் 5-7 நாளாயினும் அல் லது குறைந்தது 3 நாளாயினும் உட்கொண்டு அத்தனைநாள் மறு பத்தியமிருந்து முக்கூட்டு எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்து சிலதினம் கழித்தபின் மீண்டும் தினம் காலையில் துட்டெடை விகிதம் 20 நாள் சாப்பிட மேகப்பட்டை, மேகவிரணம், செம் படை, குட்டம் முதலியவைகள் குணமாகும்.

பத்தியம்:—பேதியாகும்படி எண்ணெய் கொள்ளும் கால முதல் மறுபத்தியம் வரை புளிதள்ளி இச்சாபத்தியமாகவும், பின்னர் சிறு அளவாகக் கொள்ளும் போது இச்சாபத்தியமாக வும் இருத்தல் வேண்டும்.

(முடித்தைல வதுப்பு)

## 171. ஆதண்டை யெண்ணெய்.

சரக்கு:—ஆதண்டம்வேர் பலம் 4, கருஞ் செம்பைப்பூ பலம் 2, பளிங்குசாம்பிராணி பலம் 2, வெள்ளுள்ளி பலம் 2, கம் மாறு வெற்றிலை கொடி பலம் 2, தும்பைப்பூ பலம் 1, கஸ்தூரி மஞ்சள் பலம் 1, சந்தனத்தூள் பலம் 1, அபினி வராகனெடை $\frac{1}{2}$, மிளகு வராகனெடை 2.

செய்பாகம்:—இக்கூறிய வற்றை யெல்லாம் பால்விட்டரை த்து அரைப்படி பசுவின்பாலில் கலக்கி அதனோடு ஒருவீசை என் ணெண்ணெயைச் சேர்த்துப் பதமுறக்காய்ச்சி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வாரத்திற்கு இருமுறை ஸ்நாநஞ்செய்ய எத் தகைய கொடிய தலைவலியேனும் இரண்டு மூன்று ஸ்நாநங்களில் நிவர்த்தியாகும்.

பத்தியம்:—பகல்துயில், அலைச்சல், திரிச்சல், கூடாது, சீதள பதார்த்தங்கள் உட்கொள்ளல் கூடாது.

## 172. ஆயி லெண்ணெய்

சரக்கு:—ஆயில்பட்டை வீசை ½, முட்சங்கன்வேர் வீசை ½, சித்திரமூலம்வேர் வீசை ½, ஆற்றுஜலம் படி 8.

செய்பாகம்:—இக்கூறிய மூன்று சரக்கினையும் நன்றாயிடித்து ஒருபாண்டத்தில் போட்டு, ஆற்றுஜலம் விட்டுச் சிறுதீயிலெரித்து, ஒருபடியாக வற்றக்காய்ச்சி வடித்து, அதில் இரண்டுபலம் கெட்டி மிளகை ஷை கஷாயத்தா லரைத்துக் கலக்கி ஒருபடி நல்லெண்ணெயும் கால்படி வேப்பெண்ணெயும் இரண்டுபடி பசுவின் வெண்ணெயும் கூட்டிப் பதமுறக்காய்ச்சி வடித்து ஆறவிட்டுச் சீசாவிலடைத்து தானியபுடம் வைத்திடுக.

பிரயோகம்:—மேக ரோகங்களுக்காக மண்டலக் கணக்காய்ச் சூரணங்கள், பற்பங்கள், சிந்தூரங்களைச் சாப்பிடும்போது ஸ்நானஞ் செய்யவேண்டிய காலங்களில் இதனை உபயோகிக்க விரைவில் குணப்படும்.

இத்தைலத்திற்கு மேகநீரை யகற்றும் வன்மை பெரிது. சூரண இலம்பகத்தில் கூறப்பட்ட பறங்கிப்பட்டைச் சூரணங்களைக் கொடுக்கும்போது இத்தைலத்தை உபயோகித்தல் சாலச் சிறந்தது.

பத்தியம்:—புளியின்றி ஆகாரங் கொண்டு, பகல் நித்திரையை ஒழித்து அலைச்சல் திரிச்சலின்றி இருத்தல் வேண்டும்.

## 173. நாரங்கத் தைலம்

சரக்கு:—கசப்பு நாரத்தம்பழம் ரசம், பழரசம், பச்சைமஞ்சள் ரசம், ஆதண்டைச்சாறு, பசுவின்பால், எள்ளெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், ஆவின்நெய், வகைக்குப் பலம் 8 அரத்தை, மஞ்சள், சதகுப்பை, வகைக்குச் சூரணம் பலம் 1½.

செய்பாகம்:—இக்கூறப்பட்டச் சரக்குகளில் சூரணம் நீங்கலாக மற்றவற்றை ஒருமிக்க கலந்து ஒருமட்பாண்டத்தி லிட்டுக் காச்சிப் பதம்வரும் சமயம் சூரணங்களைப் போட்டு இறக்கி வடித்து ஆறினபின் சீசாவில் பத்திரப் படுத்தவும்.

பிரயோகம்:—இதனை வாரத்திற்கு இருமுறை ஸ்நானம் செய்துகொண்டுவர காதில் சீழ்வருதல் மண்டைக் கரப்பான் முதலியவை குணமாகும் இதனையே துளைத்தைலமாகக் காதில் விட்டுக் கொண்டுவர நோய் விரைவில் குணப்படும்.

பத்தியம்:—அலைச்சல், பகல் நித்திரை, மீன் கருவாடு கசப்பான பதார்தம் கூடாது.

## 174. ஈஸ்வர சூடாமணித் தைலம்

செவ்விளநீர் படி 1, குமரிச்சாறு படி 1, செந்தாழை விழுதுச்சாறு படி 1, முசுமுசுக்கை சாறு படி $\frac{1}{4}$, பொன்னாங்காணிச் சாறு படி $\frac{1}{4}$, எலுமிச்சம் பழச்சாறுபடி $\frac{1}{4}$, ஈருள்ளிச்சாறுபடி $\frac{1}{8}$, பசுவின்பால் படி $\frac{1}{2}$, கருப்பூரவள்ளிச் சாறு படி $\frac{1}{8}$, நல்லெண்ணெய் படி 1.

சண்பகப்பூ, கறிமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், நற்சீரகம், வகைக்குப் பலம் $\frac{1}{4}$, விளா அரிசி, கிராம்பு, சிறுதேக்கு, வகைக்குப்பலம் $\frac{1}{8}$, வாலுழுவையரிசி பலம் 1, பிஞ்சுக்கடுக்காய் பலம் $\frac{1}{2}$, வெட்டிவேர் பலம் $\frac{1}{2}$.

செய்பாகம்:—கடைச் சரக்குகளைச் சூரணம் செய்து பால் விட்டு நெகிழ அரைத்து ஒருபாண்டத்தில் சாறு வகைகளையும், எண்ணெயையும்விட்டு அதில் கரைத்துப் பதமாகக் காய்ச்சி வடிக்கும்தருவாயில் இரண்டுவராகனெடை குங்குமப்பூவைப் பொடித்துப் போட்டு வடித்து அதனில் இரண்டு சவுரிப்பழத்தைப் பிட்டுப் போட்டுப் பத்திரப் படுத்தவும்.

பிரயோகம்:—இத்தைலத்தை வாரம் இருமுறை ஸ்நாநம் செய்து கொண்டுவர நேத்திர சம்பந்தமான பல நோய்களையும் குணப்படுத்தும்.

பத்தியம்:—ஸ்நாநம் செய்த தினம் மாத்திரம் புளித்தள்ளி ஆகாரஞ் செய்தல் மிக்க நன்று.

குறிப்பு:—கருப்பூரவள்ளிச் சாறு கிடைக்காதபோது அதனிலையையாவது அரைத்து எலுமிச்சம்பழம் அளவு சேர்க்கவும்.

## 175 சஞ்சீவித் தைலம்

சரக்கு:—கொத்துமல்லி விதை படி 8, சீரகம் படி 1.

செய்பாகம்:—முற்கூறப்பட்ட இரு சரக்குகளையும் ஒருபாண்டத்தில் இடித்துப் போட்டு 8 படி ஜலம் விட்டு ஒரு இரவு ஊர வைத்து 1 படியாகக் காய்ச்சி வடித்து, அதனில் ஒருபடி சுத்தமான எள்ளெண்ணெய் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்து உடனே கார்போகஅரிசி பலம் 2, சண்பகப்பூ பலம் 1, கிச்சிலிக் கிழங்கு பலம் $\frac{1}{2}$, பொடித்துப்போட்டு எண்ணெய் நன்றாய் ஆறின பின் மீண்டும் வடித்துக்கொள்க.

பிரயோகம்:—இத்தைலத்தை வாரம் இருமுறை ஸ்நாநஞ் செய்துகொண்டுவரப் பித்தசம்பந்தத்தால் நேர்ந்த சகலரோகங்களையும் கண்டிதமாகக் குணப்படுத்துவதுடன் கண்ணிற்கு ஒளியையும் நல்ல நித்திரையையும் உண்டாக்கும்.

பத்தியம்:—புளிநீங்கலாகக் காரசாரமாக அன்னங்கொள்க. சீதள சம்பந்தமானவைகளை அன்று சேர்க்கவே கூடாது.

## 176. குமரித் தைலம்

சரக்கு:—(1) குமரிசமூலச்சாறுபடி 4, நல்லெண்ணெய்படி 1, ஆவின்பால் படி 1, கோஷ்டம், மஞ்சிஷ்டிவேர், சந்தனம், திரிகடுகு, திரிபலை, ஜாதிக்காய், அதிமதுரம், சடாமாஞ்சில், விலாமிச்சுவேர், வெட்டிவேர், சாதுர்சாதம், கிரந்தித்தகரம், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், செங்கழுநீர்க்கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு, தக்கோலப்பொட்டு வகைக்கு வராகனெடை 3.

(2) பச்சைக்கருப்பூரம், புனுகுசட்டம், வகைக்கு வராகனெடை 3.

செய்பாகம்:—முதல் அங்கத்தில் கூறப்பட்டவைகளில் கடைச்சரக்குகளைச் சூரணம்செய்து பால் விட்டு நெகிழவரைத்துக் குமரிச்சாறு எண்ணெயுடன் கலந்து ஒரு மட்பாண்டத்தில் விட்டு பதமாகக் காய்ச்சி வடித்து இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்ட பச்சைக்கருப்பூரத்தைத் தூள்செய்தும் புனுகு சட்டத்தைச் சிறுசாக அரிந்தும் போட்டுச் சீசாவில் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—இத்தைலத்தை வாரம் ஒருமுறை ஸ்நானம் செய்ய மேகச்சூடு, மேகவெட்டை, கிரந்தி முதலிய ரோகங்கள் தீரும். நேத்திர ரோகங்கள் நீங்கிக் கண் பிரகாசிக்கும்.

பத்தியம்:—அன்று புளித் தள்ளி இச்சாபத்தியம் கொள்க.

(பிடித்தைல வகுப்பு)

## 177. பாஷாண அண்டத்தைலம்

கோழிமுட்டையின் சிதறாத மஞ்சட்கரு இருபத்தைந்தை ஒரு இரும்புக்கடாயில்விட்டு மிருதியான கரிநெருப்பின்மேலாயினும், கடாக்கினியான எரிதனலிலாயினும்வைத்து வறுத்துக்கொண்டு வந்து, கறுத்து எண்ணெய் கக்கும்பதத்தில் ஒரு பலம் வெள்ளைப் பாஷாணத்தைத் தூள்செய்து போட்டுக்கிளறி, உடனே தீயைவிட்டிறக்கி, ஒரு ஜல்லிக் கரண்டியால் கருகியிருக்கும் முட்டைக்கருவை ஒருங்கு சேர்த்து அதன்மீது ஜல்லிக் கரண்டியையாவது அல்லது ஜல்லித் தகட்டையாவது வைத்துக் கனத்த தடியைக் கொண்டாவது மத்தைக்கொண்டாவது ஒருவர் கடாயையழுத்திச் சாய்க்க, மற்றொருவர் சிறு கரண்டியைக்கொண்டு தைலத்தைமுகந்து அப்புறப்படுத்தல்வேண்டும், இப்படிச் செய்யும்போது ஜாக்கிரதையாகவும், தீவிரமாகவும், காற்றோட்டத்தை நன்குணர்ந்து, புகையை உட்கொள்ளாதபடி செய்தல் வேண்டும்.

இதனை மேல்தேய்ப்பதினால் ஒருவாரத்திற்குள் பாரிசவாதத்தால் சுவாதீனமற்ற கால் கைகள் ஒழுங்குற்று வரும். அப்படி நீண்டநாள் தேய்ப்பதில் சர்மம் புண்ணாயின் உடனேநிறுத்தல் வேண்டும்.

## 178. மயனத் தைலம்

மஞ்சள்மெழுகு பலம் 16, வெள்ளைக்குங்கிலியம் பலம் 16, ருமஸ்தகி பலம் 1, ஜடாமாஞ்சில், வாலுழுவையரிசி, கிராம்பு, நவாச்சாரம், நாய்க்கடுகு, ஓமம், திப்பலி, சுக்கு, மிளகு, கருப்பூரம், பளிங்கு சாம்பிராணி, இலிங்கம், வெள்ளைப் பாஷாணம், குரோசானி ஓமம், வீரம், பூரம், தாளகம் இவைகள் வகைக்குத் தோலா 1.

செய்பாகம்:—இக் கூறியவற்றை யெல்லாம் ஒன்றிரண்டாயிடித்து மெழுக்கைச் சிறுதுண்டுகளாக நறுக்கி யிவை சூரணத்தோடுபிசிறி, கடத்திலிட்டுப் பாக இலம்பகத்தில் கூறியபடி தைலமிறக்கவும்.

பிரயோகம்:—வேளைக்கு ஒரு துளியாகத் தினமிருவேளைச் சர்க்கரையுடன் கலந்துண்ண மூன்று அல்லது ஏழுநாட்களில் ஜன்னி, பாரிசவாயு, முதலிய கடும் பிணிகள் தீரும். இதனை மேல் தேய்த்தலினால் அர்த்தாங்க வாதம், பாரிசவாதம், வாதப்பிடிப்பு

குடைச்சல், குழந்தைகட்குண்டாகின்ற இசிவுகள், வீக்கங்கள், வெட்டுக்காயங்கள், நோயோடுங்கூடிய பீஜத்தின் வீக்கம், நரித் தலைவாதம், சில், எலும்பு, மாமிசம், நரம்பு என்னும் இவைகளைப் பற்றி அதிகரித்த வாயுவும் நீங்கும். இதனைப் * பட்டிகட்டின் கை கால் தளர்ச்சி நீங்கும் ஆண்குறித்துவளல், ஸ்தனத்தளர்ச்சி முதலியவற்றையும் நீக்கும்.

## 179. வேறு

தேன்மெழுகுப் பலம் 10, பேதாளு பலம் 3, நகம் பலம் 2, கௌலா பலம் 2, கார்போக அரிசி பலம் $1\frac{1}{2}$, வாலுழுவை அரிசி பலம் 1, கஸ்தூரி மஞ்சள் பலம் 1, குரோசானி ஓமம் பலம் 1, ஏலரிசி பலம் $\frac{1}{2}$, கருப்பூரம் பலம் $\frac{1}{4}$, சாம்பிராணி பலம் 1, தாளிசபத்திரி பலம் $\frac{1}{4}$, இலவங்கப்பத்திரி பலம் $\frac{1}{4}$, சேங்கொட்டை ஒன்று, மாசிப்பத்திரி பலம் $\frac{1}{4}$, பூநீர் தோலா $\frac{1}{2}$.

செய்பாகம்:—இக்கூறியவற்றுள் மெழுக்கைச் சிறுதுண்டுகளாக நறுக்கி, மற்றவைகளைச் சூரணித்துப் பிசரி, மட்கடத்திலிட்டு முறைப்படி தைலமிறக்குக.

பிரயோகம்:—இதனைத்தேய்ப்பதனால் பாரிசவாதம், குடைச்சல், வீக்கம், கைகால் பிடிப்பு ஆண்குறித் தளர்ச்சி, ஸ்தனத் தளர்ச்சி முதலியவைகள் குணப்படும். இதனை வெட்டுக் காயங்களுக்குத் தடவிப் பஞ்சிவைத்துக்கட்டச் சீழ்கொள்ளாமலாறும்.

பத்தியம்:—இல்லை.

## 180. வேறு

தேன்மெழுகு வீசை 1, பளிங்கு சாம்பிராணி பலம் 2, கருப்பூரம் பலம் 1, ஜாதிக்காய் தோலா 2, ஜாதிப்பத்திரி தோலா 1, குங்குமப்பூ தோலா $\frac{1}{2}$, பறங்கிச்சக்கை பலம் 2, சோற்றுப்புப் பலம் 2, பாஷாணம் பலம் $\frac{1}{2}$, உமி பலம் 2.

செய்பாகம்:—முன்னை முறையின்படி மெழுகைச் சிறுதுண்டுகளாக அரிந்து, மற்றவற்றை இடித்து மெழுக்குடன் பிசரி முறைப்படி தைல மிறக்குக.

* மெல்லிய சீலையைத் தைலத்தில் நனைத்து நோயுள்ள இடங்களிற் சுற்றுதலாம்.

பிரயோகம்:—இதனை நோயுள்ள இடங்களில் தேய்க்க அமித மான வேர்வையுண்டாகி, நோயைப் பரிகரித்து, நரம்புகட்கு வெப்பத்தைத் தந்து இரத்த ஓட்டத்தைக் கிரமப்படுத்தி, நரம்புக் கூடுகளின் பலஹீனத்தைக் குணப்படுத்திப் பாரிச வாதம்முதலிய மஹாவாத ரோகங்கள் பலவற்றையும் பரிகரிக்கும்.

## 181. மால்கிங்கினித் தைலம்

சரக்கு:—வாலுழுவையரிசி தோலா 20, பளிங்குசாம்பிராணி தோலா 2, ஜாதிக்காய் தோலா 2, குங்குமப்பூ தோலா 2, கிராம்பு தோலா 2, ஜாதிப்பத்திரி தோலா 2, சித்திரமூலம்வேர் தோலா 2, ஆளிவிரை தோலா 2, இவைகளை இடித்துப் புட்டியில் செலுத்திக் குப்பிப்புடத் தைலபாகமாக தைலம்வாங்கவும். இத் தைலத்தைக் கைகால் குடைச்சல் நோய் முதலியவைகட்கும், பாரிச வாதத்தால் நேர்ந்த கைகால் ஊனங்கட்கும், தேய்த்து நெருப்பனலில் காட்டக் குணமாகும்.

## 182. இரும்பிலித் தைலம்

இரும்பிலிவிதை பலம் 20, கந்தகம், வாலுழுவையரிசி, மயிலிறகு,கார்போக அருசி வகைக்குப் பலம் 5, இவைகளை ஒன்றிரண்டாய்த் தனித்தனி இடித்து ஒருமிக்கக் கலந்து குப்பிப்புடத் தைல விதியாக வாங்குக. இத்தைலத்தை ஆண் குறிக்கு இலேசாய்த் தடவி வெற்றிலையைச் சுற்றிப் பச்சைப் பட்டுத்துணியால் சுற்றிக் கட்டிக்கொண்டுவர சில தினத்திற்குள் நரம்பிற்கு வலுவுண்டாகிப் போக சக்தியை அதிகபடுத்தும்.

## 183. கோசபரிபாலன எண்ணெய்

கருப்பு ஊமத்தன் விதை, வெள்ளலரி வேர்பட்டை, வெண் குன்றிப்பருப்பு, வாலுழுவை அரிசி, பால் பெருங்காயம் இவை களைச் சமனெடையாக இடித்துக் கொள்ளும்வரையில் சுத்தமான எள்ளெண்ணெய் விட்டுச் சுவரப்பிசரிச் சீலைசெய்த குப்பியிலிட்டு வாய் மூடி ஒருநாளெல்லாம் குப்பை மேட்டில் புதைத்து வைத்து மறுநாள் குப்பிப்புடத் தைலம் முறைப்படி தைலம் வாங்கி இதனை ஆண்குறிக்குப் பூசி வெற்றிலையால் சுற்றி அதன்மேல் பட்டுத் துணியைக் கட்டிக்கொண்டு வர சில தினத்திற்குள்போக சத்தியை அதிகப்படுத்தி நரம்புகளின் பலவீனத்தைச் சரிபடுத்திப் புத்திரசந்தானத்திற்கு வேண்டிய பலனைக் கொடுக்கும்.

## 184. மயனத் தைலம்.

சரக்கு:—உப்பு படி $1\frac{1}{4}$, மஞ்சள்மெழுகு பலம் 25, பெருங் காயம் பலம் 2, ரசம் பலம் $2\frac{1}{2}$, குண்டுமணி பருப்பு படி $\frac{1}{4}$, ஆற்றுமணல் படி $\frac{1}{4}$.

செய்பாகம்:—இவையிற்றை ஒன்றிரண்டாக இடித்துப் போட்டு விதிப்படி தைல மிறக்குக.

பிரயோகம்:—இதனை மேலே தடவிவரப் பாரிசவாயு, ஆண் குறி துவளல், வாதக்குடைச்சல் முதலானவைகளைக் குணப்படுத் துவதன்றி மேகத்தினாலுண்டான தடிப்புகள் நீங்கும். இதனை மேற்பூசிக்கொண்டு வருதலோடு இந்நூலில் கூறப்பட்டுள்ள இடி வல்லாதி இலேகியமாகினும் அல்லது கருவங்கம், தாம்பிரம் முத லிய பஸ்பங்களையாகினும் அல்லது பறங்கிப்பட்டை சம்பந்தமான சூரணங்களில் ஏதாவதொன்றைச் சாப்பிட்டுக் கொண்டு வர வியாதி தீவிரத்தில் குணமாகும்.

பத்தியம்:—இல்லை.

## 185. கருங்கோழித் தைலம்

சரக்கு:—முதல் முதல் முட்டையிடுங் கன்னிப் பருவத்துக் கருங்கோழியைத் தோலுரித்துத் தலை, குடல், கால் முதலியவற் றைக் களைந்தொழித்து, வயிற்றின் நிறையக் கடுகைச் செலுத்திக் கல்லுரலி லிடித்து நன்கு மசிந்தபின் ஒரு மட்பாண்டத்திலிட்டு $\frac{1}{4}$ படி வேப்பெண்ணெயும், $\frac{1}{4}$ படித் தனித் தேங்காய்ப் பாலுஞ் சேர்த்துக் காய்ச்சக் கறிசிவந்து எண்ணெய் பிரியும். அச்சமயம் ஒரு சட்டுவத்தால் கசட்டை யழுத்தித் தைலத்தை வடித்துக் கொள்க.

பிரயோகம்:—பாரிசவாயு, முடக்குவாதம், குடைச்சல் முத லியவைகட்குத் தேய்க்க இரண்டொரு வேளையில் குணப்படும்.

## 186. நவபாஷாணத் தைலம்

சரக்கு:—வீரம், பூரம், இலிங்கம், தாளகம், இரசம், கந்தகம், வெள்ளைப் பாஷாணம், மனோசிலை, நாவி இவைகள் வகைக்கு வராகனெடை ஒன்றாகக் கல்வத்திலிட் டரைத்து, அதனுடன் மூன்றுபலம் எருக்கம் பூவையும் 5 பலம் பூநாகத்தையும் சேர்த்

தரைத்து மெழுகுபதமா யிருக்குஞ் சமயம் நோக்கிச் சீலையில் சன்னமாகத் தடவி, திரிபோல் திரட்டி அரைக்காற்படி வேப்பெண்ணெயில் நனைத்து, ஒரு குறட்டினாற் பற்றிக்கொண்டு ஒரு முனையைக் கொளுத்தி மற்றொரு முனையிற் சிறிது சிறிதாக மிகுந்த வேப்பெண்ணெயை வார்த்துச் சுடர் தைலம் வாங்குக. இது செந்நிறமாக விருக்கும்.

பிரயோகம்:—இதை மேலுக்குத் தேய்ப்பதினால் கைக்கால் பிடிப்பு, குடைச்சல் முதலான சகல வாதரோகமும் தீரும்.

(சீலைத்தைல வகுப்பு)

## 187. நாரிகேளத் தைலம்

சரக்கு:—தேங்காய் ஓடு பலம் 20, வெள்ளை வாதுமைக் கொட்டை ஓடு பலம் 10, காய்ச்சுக்கட்டி பலம் $\frac{1}{4}$, வெள்ளைப் பாஷாணம் தோலா $\frac{1}{8}$, நாவித் தோலா 1 கொட்டைப்பாக்குப் பலம் $\frac{1}{2}$, சுண்ணாம்பு சோப்பு பலம் 1.

செய்பாகம்:—ஓடுகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி மற்றவற்றை அரைத்து ஓட்டுடன் கலந்து ஒரு பழகின குடுவையிற் போட்டுக், குழித்தைல விதிப்படி தைலமிறக்குக. தீ மிகின் தைலம் குழம்புபத மாகவும், தீ யளவாகயிருப்பின் தைலரூபமாகவு மிருக்கும்.

பிரயோகம்:—இதனை மேல் தடவும் மருந்தாக உபயோகித்ததினால் ஊறலெடுத்துச் சொறியின் நீர்வரும் படைகளும், கஜசரும் படைகளும் தீரும். கன்னங்களிலுண்டாகும் வங்கு என்னும் தேமல் குணப்படும். இவ் வுபயோகத்தில் தைலத்தை இலேசாகப் பட்டதும் படாததுமாகத் தடவல் வேண்டும். அதனோடு மருந்தின் வெப்பம் கண்களிலுறைக்காதபடி $\frac{1}{4}$ மணி நேரம் கண்ணிரப்பையைத் திறவாமல் மூடிக்கொண்டிருந்து, தைலத்தின் காரமெல்லாம் தணிந்தபின் திறக்க. ஒருவார உபயோகத்திற்குள் ஒரு சிறிதும் துன்பமும் விரணமு மின்றித் தோலுரியும். பின்னர் சிலநாளுபயோகிக்க இருந்தவிடந் தெரியாமல் மறையும்.

பத்தியம்:—இல்லை.

## 188. வேறு

சரக்கு:—காடிகாரம் 1, நாய்ச்சுக்கட்டி 1, கொட்டைப் பாக்கு 5, சுண்ணாம்பு சோப்பு 4, நவாச்சாரம் 2, மயில்துத்தம் 2, எட்டிக்கொட்டை 4, நாவி 2, நாய்மலம் 5, இவைகள் வராகனெடையாகக் கொள்க. கொட்டாங்கச்சி வீசை 3.

செய்பாகம்:—தேங்காயின் ஓடுகளைச் சிறுதுண்டுகளாக நறுக்கி, மற்றவற்றை அரைத்துக் கலந்து குழித்தைல மிறக்குக.

பிரயோகம்:—மேகப் படைகட்குச் சொரிந்த பின்னர்த் தடவ எரிச்சலுண்டாகும். $\frac{1}{2}$ மணிநேரம் விசற அது தணியும். விஷநீரு மபரிமிதமாய் வரும். அதனை உடனுக்குடன் துடைத்தல் வேண்டும். மூன்றுநாள் படை உலர்ந்துவிடும்; மறுமுறை தோன்றாது. எரிச்சலைச் சகிக்கக் கூடாதவர்கள் இத் தைலத்தோடு சமனெடை வேப்பெண்ணெய் சேர்த்துபயோகிக்க. இனி இதனை முழங்காற்பிடிப்பு, கண்டமாலை, அரையாப்பு கட்கு இலேசாய்த் தடவிக் கொண்டுவர இருந்தவிடந்தெரியாது ஒழியும்.

பத்தியம்:—இல்லை.

## 189. விரண சஞ்சீவித் தைலம்

சரக்கு:—ரசம், கந்தகம், பூரம், பால்துத்தம், துருசு, மிருதார்சிங்கு, ஏலம், கருப்பூரம், கார்போக அரிசி, கஸ்தூரிமஞ்சள், நீரடிமுத்து, காட்டுச்சீரகம், (விஷசீரகம்-கசப்புச்சீரகம்) வகைக்கு வராகனெடை $\frac{1}{2}$, தேங்காய்ப்பால் படி 1.

செய்பாகம்:—முதலில் கல்வத்தில் கந்தகத்தையும், ரசத்தையும், போட்டு $\frac{1}{4}$ மணிநேரம் நன்றாய் அரைத்துப் பின்னர் முறையே ஒன்றின்பின் ஒன்றாக சகல சரக்குகளின் சூரணங்களையும் சேர்த்து அரைத்துத் தேங்காய்ப் பாலால் குழம்பு பதமாக அரைத்து மிகுதியுள்ள பாலில் கலக்கி நீர்வண்டி நெய் பிரியக் காய்ச்சி வடித்துப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—குஷ்டவிரணம் முதல் ஆறாத எவ்வித மேக விரணங்களுக்கும் பூசிக் கொண்டுவரச் சில தினத்தில் ஆறும்.

## 190. வதனகாந்தி எண்ணெய்

சுத்தமான கால்படி எள்ளெண்ணெயில் 3 பலம் நுத்தி வேர் பட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டுக் கரி

நெருப்பின் மீது வைத்து மெதுவாக விசிறிக்கொண்டிருந்து பட்டை சிவந்துவரும் பதத்தில் வடித்துப் பத்திரப் படுத்தவும். இதனை முகத்திலுண்டாகும் பருவுகளுக்குத் தினம் இரு வேளை தடவிக்கொண்டுவர ஒரு வாரத்திற்குள் மறைந்துவிடும்.

## 191. வேறு

சுத்தமான 50 கெட்டி மிளகை ஒருபலம் எள்ளெண்ணெயில் போட்டுச் சிறுதீயில்காய்ச்சி அவை சிவந்துவரும் சமயம் வடித்து எண்ணெயைப் பத்திரப்படுத்துக. இதனை முன்மாதிரி முகப் பருவின்மீது தடவிக்கொண்டுவர ஒரு வாரத்திற்குள் முகத்தை விகாரப் படுத்திய பருக்கள் இருந்தவிடம் தெரியாமல் ஒழியும்.

(சூளைத்தைல வதப்பு)

## 192. கர்ணமிர்த தைலம்

சுக்கு, இந்துப்பு, திப்பலி, முத்தக்காசு, செங்கழுநீர் கிழங்கு, கோஷ்டம், வசம்பு, வெள்ளை வெங்காயம், வகைக்கு வராகனெடை 4. இவைகளின் சூரணங்களைக் கல்வத்திற்போட்டு ஒருசேர் (24 தோலா) எருக்கிலைப் பழுப்புச் சாறுவிட்டு நன்றாயரைத்து $\frac{1}{2}$ படி சுத்தமான எள்ளெண்ணெயில் கலக்கிப் பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்க.

இதனைத் தினம் இருவேளை மும்மூன்றுதுளி காதில் விட்டுக் கொண்டுவர காதுநோய், காதில் சீழ்வருதல், ஜலம் வருதல், முதலியவை குணமாகும்.

## 193. வேறு

கால்படி சுத்தமான எள்ளெண்ணெயில் $2\frac{1}{2}$ பலம் பெரு மரத்துப்பட்டை (பீநாரி மரப்பட்டை) சூரணத்தைப் போட்டுச் சூரணம் சிவக்கக் காய்ச்சி வடித்துக் கொள்க இதனையும் முன் மாதிரி காதில் உண்டாகும் பலவித நோய்கட்கும் விட்டுக் கொண்டுவர விரைவில் குணமாகும்.

## 194. பீநசரோக சிகிச்சை

அதிகமாகச் செலவிட்டுச் செய்யும் கறிப்புலவி லிருந்து பிழிந்தெடுத்த நெய்யைச் சுமார் 1 பலம் சேகரித்து வைத்துக் கொண்டு நாசித் துவாரங்களின் வழியால் 2, 3 துளிகள் தினமிரு வேளை விட்டுக் கொண்டுவர 20 நாட்களில் எத்தகைய பீநசரோகமும் குணமாகும். மேலும், மேக சம்பந்தத்தாலான நாசி விரணங்களையும் பரிகரிக்கும். மகம்மதியர் பண்டிகை காலங்களில் செய்யும்போது அவர்கள் மூலமாக நெய்பெறுவது எளிதும் நல்லதுமாகும்.

# கிருத இலம்பகம்

## 195. ஆவாரை கிருதம்

சரக்கு:—பத்துப் பலம் ஆவிர சமூலத்தைப் பஞ்சுபோலிடித்து, ஒருபடி ஜலம்விட்டுக் கால்படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்த கஷாயம், இளந் தென்னம்பூவை யிடித்துப் பிழிந்த சாறு படி ¼, வாழைக்கிழங்கை இடித்துப் பிழிந்த சாறு படி வீசம், வாழைப்பூச்சாறு படி வீசம், பசுவின் நெய் படி 1.

(2) ஜாதிக்காய், சீரகம், மிளகு, கிராம்பு, இலவங்கப்பட்டை, அமுக்கிராக்கிழங்கு, சத்திச்சாரணைக்கிழங்கு, வகைக்கு பலம் ¼.

செய்பாகம்:—முதல் அங்கத்தில் குறிப்பிட்டவைகளை ஒருங்கு கலந்து, ஒருநாளெல்லாம் இரவியில் வைத்து, மறுநாள் சிறுதீயிலெரித்து, வண்டல் மெழுகுபதம் வரும்போது வடித்து, நெய் சூடாக இருக்கும்பொழுது இரண்டாவது அங்கத்தில் குறிப்பிட்டுள்ள சரக்குகளின் சூரணங்களையும், பொடிசெய்த 5 பலம் கற்கண்டு சூரணத்தையும் போட்டுக் கலக்கி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு ஒரு கரண்டி வீதம் தினமிருநேர முட்கொள்ள மதுமேகம், நீரிழிவு, அதிதாகம், மேக அழலை, மேக எரிச்சல், மேகக்குத்தல் முதலியன நிவாரணமாகும்.

பத்தியம்:—புகையிலை சம்பந்தம், ஸ்திரீபோகம் கூடாது.

## 196. சதாவரிக் கிருதம்

சரக்கு:—தண்ணீர்விட்டான் கிழங்கு ரசம் பலம் 5, தனித் தேங்காய்பால் பலம் 5. பசுவின்பால் பலம் 5, வெள்ளாட்டுப் பால் பலம் 5, பசுவின்நெய் பலம் 5, பறங்கிச்சக்கை சூரணம் பலம் 1, ஏலரிசி சூரணம் பலம் ½.

செய்பாகம்—ஒரு பழகிய மட்பாண்டத்தில் இவை தம்மைப் போட்டு, வண்டல் சிவந்து மெழுகுபதம் வருங்கால், நெய்யை வடித்துவைத்து 2½ பலம் கற்கண்டு சூரணத்தைப் போட்டுக் கலக்கிவைத்துக் கொள்க,

பிரயோகம்:—தினம் இருவேளை உச்சிக்கரண்டி வீதம் அல்லது துட்டெடை வயதிற்குத் தக்கபடி 20 நாள் அல்லது ஒரு மாதம் உட்கொண்டுவர கணச்சூடு தணிந்து குழந்தைகள் தேகம் கொழுமை பெற்று, நல்ல அழகும் ஒளியும் பெறும் என்பது திண்ணம்.

பத்தியம்:—பழய அன்னம், மீன், கருவாடு, எண்ணெய், கடுகு முதலியவை நீக்கவும்.

## 197. தூதுளைக் கிருதம்

(இருமலுக்கு)

சரக்கு:—தூதுளைவேர், கருந்துளசி வேர், இன்புராவேர், மணித்தக்காளிவேர், முசுமுசுக்கைவேர், மிளகரணைவேர், சிறுகீரைவேர், ஆடாதோடைவேர், அமுக்கிராக்கிழங்குவேர் இவைகள் வகைக்குப் பலம் 2.

செய்பாகம்:—இவைகளை இடித்துப் பாண்டத்திலிட்டு 4 படி ஜலம்விட்டு ½ படியாகக் காய்ச்சி நன்றாய்ப்பிசைந்து வடிகட்டி, அதனுடன் ½ வீசை பசுவின்நெய் விட்டு, பதமுறக்காய்ச்சி வடித்து, அந்நெய் சூடாக இருக்கும்போதே ஆர்க்கப் பொடிசெய்த இரண்டரைப்பலம் கற்கண்டைப் போட்டுக் கலக்கி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் இருவேளை ஒரு கரண்டியேனும் துட்டெடையேனும் உண்டுவர கபரோகங்கள், கைகாலெரிச்சல், புகைந்து புகைந்து கோழையின்றி வரும் இருமல், ஈளை, கர்சம், முதலியன குணப்படும்.

பத்தியம்:—இச்சா பத்தியம்.

## 198. மேகராஜாங்க கிருதம்

சரக்கு:—(1) அத்திப்பட்டை, நாவற்பட்டை, ஒதியம்பட்டை வகைக்கு வீசை ¼. இவைகளைச் சிறுதுண்டுகளாக நறுக்கிப் பஞ்சுபோலிடித்து 6 படி ஜலம்விட்டு, ¾ படியாகச் சுண்டக் காய்ச்சிய கஷாயம், கரும்புரசம், நெல்லிக்காய்ச் சாறு, எலுமிச்சம்பழ ரசம், எள்ளெண்ணெய், பசுவின்நெய், வகைக்குப் படி ½.

(2) தாளிசபத்திரி, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், சிற்றரத்தை, அதிமதுரம், நிலப்பனங் கிழங்கு, வகைக்குச் சூரணம் பலம் $\frac{3}{4}$.

செய்பாகம்:—முதல் அங்கத்தில் குறிப்பிட்டவைகளை ஒருங்கு கலந்து சிறுதீயிலெரித்து, கொதிக்குந்தறுவாயில் இரண்டாவது அங்கத்தில் சித்தப்படுத்தியவைகளை மூன்றுமுடித் தேங்காய்ப் பாலினாலரைத்துக் கலக்கி, முதிராப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் காலை மாலை ஒருகரண்டி வீதம் 9 நாள் உண்க. இவ்வாறு ஒரு மாதத்திற்குள் இருமுறை உண்ண, நீர் சுருக்கு, வெள்ளை, சதை அடைப்பு, பெரும்பாடு, எலும்புருக்கி, பாண்டு, முதலியன குணப்படும்.

பத்தியம்:—புளிநீக்கி இச்சாபத்தியங் கொள்க.

## 199. ஜம்பு கிருதம்

சரக்கு:—இருபத்தைந்துபலம் நாவற்பட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பஞ்சுபோலிடித்து, 4 படி ஜலம்விட்டு அரைப்படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்தகஷாயம், ஏலம், இலவங்கப்பட்டை, கற்கடகசிங்கி, காட்டாத்திப்பூ, சாய்ச்சுக்கட்டி, மரமஞ்சள், சீரகம், சிறுநாகப்பூ, அதிமதுரம், கோஷ்டம், விளாம் பிசின் இவைகளின் சூரணம் வகைக்குப்பலம் $\frac{1}{2}$. அபினி பலம் $\frac{1}{4}$.

செய்பாகம்:—இங்குக் கூறப்பட்ட கற்கங்களைக் கஷாயத்தால் நெகிழ அரைத்து, மிகுதியுள்ள கஷாயத்தில் கரைத்து அதனுடன் பசுவின்நெய் $\frac{1}{2}$ படி சேர்த்துப் பதமுறக்காய்ச்சிக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு அரை அல்லது ஒரு கரண்டி அளவாகக் காலைமாலைக் கற்கத்துடன் உட்கொண்டுவர, பெரும்பாடு, எலும்புருக்கி, மதுமேகம், நீரிழிவு முதலியன குணப்படும்.

பத்தியம்:—இச்சா பத்தியம்.

## 200. கல்யாண கிருதம்

பேய்த்துமட்டிக்காய் (வரித்துமட்டிக்காய்) கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், சுரைக்காய், தேவதாரு, வாலுழுவை, மூவிலைத்தாமரை, பூனைக்காய்ஞ்சொறி, மரமஞ்சள், கறிமஞ்சள்,

சிறுநன்னாரி, பெருநன்னாரி, (மாவிலிங்கக்கிழங்கு) ஓமம், நீலோற்பலம், ஏலம், மஞ்சிட்டி, வாளம், குமட்டி மாதளம்பழம், நாகேசுரம், வாய்விளங்கம், ஓரிலைத்தாமரை, கோஷ்டம், சந்தனம், தாமரை, தாளிசபத்திரி, கண்டங்கத்தரி, உலர்ந்தமல்லிகைப்பூ வகைக்குப் பலம் காலேவீசம்.

செய்பாகம்:—இவைகள் அனைத்தையு மிடித்து நான்குபடி ஜலத்திற் போட்டு, $\frac{1}{2}$ படியாகக் காய்ச்சிப் பிசைந்து வடித்துப் பின்னர் 1 படி பசுவின்நெய் சேர்த்துப் பதமாகக்காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—தினம் ஒருவேளை காலையில் கரண்டிவீதம் உட்கொள்ளின் அபஸ்மாரம், சுரம், சுவாசகாசம், பித்தப் பைத்தியம், க்ஷயம், மூத்திரக் கிரிச்சனம் முதலிய பிணிகள் குணப்படும். இதனை ஆண், பெண் இருதிரத்தாரு முட்கொள்ளின் மலடு நீங்கி மகப்பேறுண்டாகும்.

பத்தியம்:—இச்சா பத்தியம்.

## 201. சத்திச்சாரணைக் கிருதம்

நிழலிலுலர்த்திய சத்திச்சாரணை சமூலம் பலம் 100, இதனை 4 மரக்கால் தண்ணீர்விட்டு, நான்குபடியாகக் காய்ச்சி வடித்து, அதனுடன் ஒருபடி பசுவின்நெய் சேர்த்துச் சிறுதீயி லெரித்துக் கொதிக்குந்தறுவாயில் நிலவேம்பு சுத்திசெய்த கஞ்சா, சுக்கு, உலர்ந்த சத்திச்சாரணை, தேவதாரு இவைகளின் சூரணத்தில் தனித்தனி இரண்டுபலம் போட்டுப் பதமாகக் காய்ச்சி இறக்குக.

பிரயோகம்:—இதனைத் தேகக் கூறுக்குத் தக்கவாறு $\frac{1}{2}$ அல்லது 1 கரண்டி காலை மாலை உட்கொள்ளின், காசம், சுவாசகாசம், வீக்கம், சுரம் முதலியன குணப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 202. சிற்றாமுட்டிக் கிருதம்

சிற்றாமுட்டி, கறிமஞ்சள், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், நிலவேம்பு, இருப்பை வேர்ப்பட்டை வகைக்குப் பலம் 8.

செய்பாகம்:—இவற்றை ஒன்றிரண்டாக இடித்து 4 மரக்கால் ஜலத்தில்போட்டு, ஒருபடியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து அதனுடன் 4 படி பசுவின் பாலும் ஒருபடி பசுவின் நெய்யும் சேர்த்து பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு ஒரு கரண்டி வீதம் தினம் இருநேரம் உட்கொண்டுவரின், காமாலை, வீக்கம், பாண்டு, சுரம் முதலிய கடும்பிணிகள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 203. திராக்ஷாதி கிருதம்

திராக்ஷைப்பழம் வீசை 1, இருப்பைவேர்ப்பட்டை பலம் 8, திப்பிலி பலம் 2, இவைகளை ஒருமரக்கால் ஜலத்தில் போட்டுச் சிறு தீயிலெரித்து, ஒருபடியாகச் சுண்டக்காய்ச்சி, அதனுடன் 4 படி பாலும் 1 படி நெய்யும் சேர்த்துப் பதமுழக்காய்ச்சி ஆறின பின் எட்டுப்பலம் சர்க்கரை கலந்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினமிருநேரம் இதனைக் கலக்கி ஒரு கரண்டி வீத முண்டுவரின் தேகதுர்பலம், வாதபித்த சுரங்கள், சுவாசம், அம்மை, பெரும்பாடு, இரத்தபித்தம் முதலிய நோய்கள் தீர்ந்து பலம் உண்டாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 204. வியாக்கிரி கிருதம்

சரக்கு:—கண்டங்கத்திரி சமூலரசம் படி 1, நெய் படி 1, கற்கடகசிங்கி, சுக்கு, திப்பலி, மிளகு, கண்டுபாரங்கி வகைக்குப் பலம் 1. வாய்விளங்கம், சித்திரமூலம், புஷ்கரமூலம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், சாரணைவேர், கரிசிலாங்கண்ணி வகைக்குப் பலம் $\frac{1}{2}$.

செய்பாகம்;—கண்டங்கத்திரி சாற்றையும், நெய்யையும் ஒருமிக்கக்கலந்து அதனில் கடைச்சரக்குகளைச் சூரணம்செய்து போட்டு நீர்சுண்டக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு ஒருகரண்டி வீதம் தினமிருவேளை உட்கொள்ளின், காசம், குன்மம், மகோதரம் முதலிய கடும் பிணிகள் தீரும். குழந்தைகட்குண்டாகும் கக்குவாய் இருமலுக்கு இது சாலச் சிறந்தது.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 205. முயல் நெய்

சரக்கு:—(1) காலுந் தலையுந் தோலுங் குடலும் போக்கிய முயல் மாம்சம் எலும்பு உட்பட ஒருவீசை கல்லுரலில் போட்டு எலும்பு நறுங்க இடித்து ஒருமட்பாண்டத்தில் போட்டு 12 படி ஜலம்விட்டு 2 படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்துக் கொள்க.

(2) பெருங்குமழை, முன்னை, வாகை, கண்டங்கத்திரி, சிற்றுமுட்டி, பேராமுட்டி, வில்வவேர், நெருஞ்சிவேர், பாப்பாரமுள்ளி, தூதுளை, அமுக்கிராக் கிழங்கு, சங்கம்வேர், திப்பிலி, மிளகு, மஞ்சள், தேவதாரு, பேரரத்தை, தாளிசப்பத்திரி, ஆக பதினெண் சரக்கையும் பஞ்சுபோல் இடித்து 16 படி ஜலம் விட்டு இரண்டு படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்துக் கொள்க.

(3) திப்பிலி, மோடி, சுக்கு, கற்கடகசிங்கி, சித்தரமூலம், சிறுதேக்கு, குரோசாணி ஓமம், செவ்வியம், கருஞ்சீரகம், சீரகம், கிராம்பு, ஜடாமாஞ்சில், கடகரோகணி, மிளகு, கோஷ்டம், இந்துப்பு, வாலுழுவையரிசி, திராட்சை, ஏலம், அதிவிடயம், சிற்றரத்தை, ஆனைதிப்பலி வகைக்கு சூர்ணம் பலம் $\frac{1}{4}$ அம்மியிலிட்டு வெள்ளாட்டுப் பாலால் நன்றாய் அரைத்து இரண்டு படி வெள்ளாட்டுப் பாலில் கலக்கிவைத்துக் கொள்க.

(4) ஆடாதோடை ரசம்படி 4, ஆவின் நெய் படி 2.

செய்பாகம்:—இங்ஙனம் நான்கு அங்கங்களிலும் முடிக்கப் பெற்றவைகளை ஒருமிக்கச் சேர்த்துப் பெரும் பாண்டத்தில் விட்டு ரவியில் 3 நாள் வைத்துப் பதமாகக் காய்ச்சி வடிக்கவும்.

பிரயோகம்:—தினம் இருநேரம் கழஞ்சி நெய்புடன் $\frac{1}{2}$ கழஞ்சி நல்லத் தேனைக்கூட்டி வறுத்த திப்பலிச் சூரணம் சிறிது சேர்த்து மத்தித்துச் சாப்பிட்டுக் கொண்டுவரக் கப சம்பந்தமான க்ஷயம், காசம், ஈளை முதலிய ரோகங்கள் யாவும் குணமாகும்.

பத்தியம்:—இச்சாபத்திய விதியைக் கவனிப்பதுடன் முயல் கவுதாரி, உள்ளான், உப்புக்கண்டம், முதலியவைச் சேர்த்துக் கொள்ளலாம்.

## 206. மாதுளை நெய்

மாதுளஞ் செடியின்து பூ, பிஞ்சிக்காய், இலை, பட்டை வேர் இலைகள் வகைக்கு ஒருதோலா, சீந்தல்கொடி தோலா 5, இவை

களை ஒன்றுமிரண்டாய் இடித்து ஒருபழகின மட்பாண்டத்திலிட்டுப் பின்னர் ஒரு பச்சை நாமத் தவளையைத் தோல் குடல் முதலியவை நீக்கிச் சிறுதுண்டுகளாக நறுக்கிக் கழுவிப்போட்டு இரண்டுபடி சுத்தஜலம்விட்டு ½ படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்துக் கொண்டு அதனுடன் 5 பலம் பசும்நெய்கூட்டிச்சிறுதீயிலெரித்துக் கொதிக்குஞ் சமயம் ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு ஒருகழஞ்சி சூரணம் செய்து போட்டுப் பதமாகக் காய்ச்சி வடிக்கவும் குழந்தைகட்குத் தேக வன்மை மென்மையைப் பார்த்து வேளைக்கு ஒரு காசு எடை தினம் இருநேரம் கொடுத்துக்கொண்டு வரச் சவலையினாலேனும் கணச்சூட்டினாலேனும் வேறு எக்காரணத்தினாலேனும் நாளுக்குநாள் இளைத்துத் தோலும் எலும்புமாகக் காணப்படும் மக்களின் தேகம் கொழுமை யடைந்து, 3 மாதத்திற்குள் எல்லோரையும் ஆச்சரியப் படும்படிச் செய்யும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 207. லசுனாதி கிருதம்

ஒருதலைப்பூண்டு 100, மஞ்சள் கடுக்காய்த்தோல் 30, சுக்குப் பலம் 1, திப்பலி பலம் 1, மிளகு பலம் 1, உரோமத்தோடுங் கூடிய பசுவின் தோல் சுட்டக்கரி பலம் 16, இவற்றை இடித்து நான்கு மடங்கு கோமூத்திரத்தில் போட்டு நான்கி லொன்றாய்க் காய்ச்சிவடித்து அதனில் ஆவின்நெய் பதினாறுபலஞ் சேர்த்துப் பதமுறக் காய்ச்சி வடித்த பின்னர் நெய்யில் பொரித்துச் சூரணித்த ஒரு பலம் பெருங்காயத்தையும் எட்டுபலந் தேனையும் விட்டுக் கலக்கி ஒருவாரம் வரையில் தானியபுடம் வைத்து உபயோகிக்கவும்.

இதனை வேளைக்கு ¼ பலம் விகிதம் தினம் இருநேரம் உட்கொள்ள மூர்ச்சை, காக்கைவலி, பயித்தியம் முதலியவை தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 208. ஜீவந்தி கிருதம்

(க்ஷயத்திற்கு)

சரக்கு:—ஊசிப்பாலைசமூலம் (பச்சை) திராட்சைபழம், அதிமதுரம், வெட்பாலரிசி, கோஷ்டம், அக்கரகாரம், சுண்டக்காய் வேர் (பச்சை) நெருஞ்சிவேர் (பச்சை) நீலோற்பலக் கிழங்கு,

கீழ்வாய்நெல்லி (பச்சை) துராலெப்பை, அரிசி திப்பலி, வகைக்கு சேர் $\frac{1}{4}$.

செய்பாகம்:—இவைகளைப் பூணில்லாத உலக்கையால் இடித்துப் பாண்டத்தில் போட்டு 24 சேர் ஜலம்விட்டு ஒருநாள் ஊற வைத்து மறுநாள் சிறுதீயிலெரித்து 6 சேராகக் காய்ச்சி வடித்து அதனில் $2\frac{1}{2}$ சேர் ஆவின்நெய் முற்கூறப்பட்ட பன்னிரண்டு சரக்குகளில் ஒவ்வொன்றிலும் $2\frac{1}{2}$ வராகனெடை வீதம் பால்விட்டு நெகிழ அரைத்துக் கலக்கி 3 நாள் ரவியில் வைத்து 3-ம் நாள் பதமுறக்காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ வராகனெடை தினம் ஒருவேளை இரவு படுக்கைக்குப் போகும்போது சாப்பிட தொண்டைக்கம்மல், விலாவலி, புஜவலி, இளைத்தல், பித்தாதிக்கசுரம், உடம்புஎரிச்சல், கண்ணெரிச்சல், பேதி, இரத்தவாந்தி, கபம் வராது புகைந்து இருமல், கபம்விழ இருமல், அன்னத்துவேஷம், தாகதுவேஷம், தொண்டையில் முள்செருகியதுபோ லிருத்தல் ஆகிய குணங்களையுடைய க்ஷயரோகம் நீங்கும்.

பத்தியம்:—மிளகாய், கடுகு, கீரைத்தண்டு, பரங்கிக்காய் முதலியவைகளை நீக்கி இச்சாபத்தியமாகவும் தேகம் இளைக்கவொட்டாமல் புஷ்டியைக் கொடுக்கக்கூடிய நல்ல ஆகாரங்களை வேளைத்தவராமல் கொடுத்தல் நன்று.

## 209. ஸ்னுஹீ கிருதம்

சரக்கு:—கொடிக்கள்ளிச் சாறு பலம் 5, பத்துபலம் கறிமஞ்சளை $\frac{1}{2}$ படி ஜலம்விட்டு அரைத்துப் பிழிந்தெடுத்த ரசம், ஆவின் நெய் வீசை 1.

செய்பாகம்:—ஆவின் நெய்யிற் முற்கூறப்பட்ட இரண்டு ரசங்களையும் விட்டுக் கலக்கி ஒருபகல் இரவியில் வைத்து மறுநாள் பதமாகக் காய்ச்சி வடித்துக்கொள்க.

பிரயோகம்:—வேளைக்குக் கரண்டி வீதம் தினம் இருவேளை சாப்பிட்டு வருக. இதனால் ஸ்ரோதக தோஷத்தினால் உண்டாகும் தேகபலம் குன்றுதல், மூர்ச்சை, தலைநோய், மலபந்தம் முதலியவைகளையும் இடுப்பு; வயிர் முதுகு முதலான இடங்களி

லுண்டாகும் கொடிய வலியையும் நீக்கி மாத விலக்கத்தைக் கிரமப் படுத்திப் புத்ரோத்பத்தியை யுண்டாக்கும்.

பத்தியம்:—உஷ்ணத்தையும் வாயுவையும் உண்டாக்கத்தக்க ஆகாரங்களை நீக்கிப் புசித்தல் நன்று. இந்நெய்யைக்கொள்ளும் போதெல்லாம் ¼ படி பசும் பாலில் ஒரு தோலா வெந்தயத்தைப் போட்டுக் காய்ச்சி வடித்துச் சிறிது சூடாகச் சாப்பிடுதல் மிக்க நலம்.

## 210. பஞ்சதிக்தக் கிருதம்

சரக்கு:—(1) வேப்பம்பட்டை, சீந்தல்கொடி, ஆடாதோடை, (சமூலம்) பேய்ப்புடல், கண்டங்கத்திரி, வகைக்குப் பலம் 10.

(2) சிற்றரத்தை, வாய்விளங்கம், தேவதாரு, ஆனைத்திப்பலி, எவச்சாரம், சுக்கு, மரமஞ்சள், அதிமதுரம், செவ்வியம், கோஷ்டம், மிளகு, வெட்பாலரிசி, ஓமம், சித்திரமூலம் வேப்பட்டை, கடகரோகணி, தாமரைக்கிழங்கு, வசம்பு, மோடி, மஞ்சிட்டி, அதிவிடயம், சிவதைவேர், குரோசானி ஓமம், இவைகள் வகைக்கு வராகனெடை ½. மஹிஷாக்ஷி (குக்கிலு) பலம் 5.

செய்பாகம்:—முதல் அங்கத்தில் கூறப்பட்டவைகளை ஒன்றிரண்டாய் இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு எண்மடங்கு ஜலம் விட்டு ஒருபாகமாகக் காய்ச்சி வடித்து அதனில் அரைப்படி ஆவின் நெய்யை விட்டு இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்ட சரக்குகளைப் பால்விட்டு நெகிழ வரைத்துக் கலக்கிக் கிருதப் பதமுறக் காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—இதனை வேளைக்குக் கால்பலம் விகிதம் தினம் இருநேரம் காலை மாலை ஒரு மண்டலம் சாப்பிட நரம்பு, அஸ்தி, மஜ்ஜை தாதுவினில் சம்பந்தப்பட்ட வாயு குணப்படும். தவிர, குட்டம், நரம்புகளிலுண்டான ஆறாதவிரணம், கண்டமாலை, பவுத்திரம், குன்மம், மூலம், க்ஷயம், வீக்கம், பீநசம், இருமல், மார்பு துடிப்பு, வாதரக்த முதலிய பலபிணிகளையும் பரிகரிக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 211. பஞ்சகவ்யக் கிருதம்

சரக்கு:—(1) தசமூலம், திரிபலை, இருமஞ்சள், வெட்பாலரிசி, தினையரிசி, ஏழுஇலை (சரக்கொன்றை) நாயுருவி, அவுரியிலை,

கடகரோகணி, புஷ்கரமூலம், பூனைக்காய்ஞ்சொறி, காட்டாத்திப்பூ, சிற்றாமணக்குவேர் வகைக்குப் பலம் 2.

(2) கண்டுபாரங்கி, வட்டத்திருப்பி, திரிகடுகு, சிவதைவேர், மருள்கிழங்கு, மெருகன்கிழங்கு, நிலவேம்பு, சித்திரமூலம் பட்டை, இருநன்னாரி, கொடிப்பாலை, வசம்பு, மகரப்பூ, வகைக்கு பலம் $\frac{1}{8}$.

செய்பாகம்:—முதல் அங்கத்தில் கூறப்பட்ட சரக்குகளை ஒன்றிரண்டா யிடித்து மட்பாண்டத்தில் போட்டு எண்மடங்கு ஜலம் விட்டு நான்கிலொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொள்க. இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்ட சரக்குகளை முற்காய்ச்சிய கஷாயத்தில் சிறிதுவிட்டு நெகிழவரைத்து மிகுதியுள்ள கஷாயத்தில் கலக்கி அதனுடன் ஆவின்நெய் பலம் 16, பசுவின் சாணத்தின் ரசம் பலம் 16, புளித்த தயிர் பலம் 16, கோமூத்திரம் பலம் 16, ஆவின்பால் பலம் 16, இவைகளைச் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ பலம் விகிதம் இருநேரம் சாப்பிட்டுக் கொண்டுவர அபஸ்மாரம், உன்மாதம், வீக்கம், மகோதரம், குன்மம், மூலம், பாண்டு, காமாலை, பவுத்திரம், கிரகதோஷம், நான்காம் முறைக்காய்ச்சல் முதலியவை தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 212. குடஜாதி கிருதம்

சரக்கு:—இலவங்கப்பட்டை, மரமஞ்சள், வெட்பாலரிசி, அரிசிதிப்பலி, சுக்கு, கடகரோகணி வகைக்குப் பலம் 10.

செய்பாகம்:—இவைகளை ஒன்றிரண்டா யிடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 6 படி ஜலம்விட்டு $1\frac{1}{2}$ படியாகக் காய்ச்சி வடித்துக் கொள்க. மீண்டும் முற்கூறப்பட்ட சரக்குகளில் வகைக்கு $\frac{1}{2}$ பலம் விகிதம் சூரணம்செய்து கல்வத்திலிட்டு முன் சுத்தம்செய்த கஷாயத்தில் சிறிதுவிட்டு நெகிழ அரைத்து மிகுதியுள்ள கஷாயத்தில் கலக்கி அதனுடன் 15 பலம் எருமை நெய்யைச் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—இதனை வேளைக்கு ஒரு கரண்டிவீதம் தினம் இருவேளை சாப்பிட்டுக் கொண்டுவர கிராணி, அக்கினிமாந்தி

யம், அதிசாரம், வயிற்றிரைச்சல் தீரும். இதனை அன்னத்திலும் நெய்யிற்குப் பதிலாக உபயோகித்தும் வரலாம்,

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 213. ஆமலகாதி கிருதம்.

நெல்லிக்காய்ரசம், கரும்புரசம் வகைக்குப் படி 1. நெய் பலம் 10, கடுக்காய்த் தோல் சூரணம் பலம் $2\frac{1}{2}$.

செய்பாகம்:—கடுக்காய்ச் சூரணத்தை ஏதேனும் முற்கூறப் பட்ட ரசங்களி லொன்றால் நெகிழவரைத்து எல்லாவற்றையும் ஒரு மிக்க ஒரு மட்பாண்டத்தில் கலக்கிப் பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

பிரயோகம்:—இதனை வேளைக்குக் கரண்டிவீதம் தினம் இரு வேளை யுண்டுவர வயிற்று எரிச்சல், குன்மம், மார் எரிச்சல், வாந்தி முதலியவைகள் ஒருவார உபயோகத்திற்குள் குணமாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 214. நீலிங்யாதி கிருதம்

அவுரி, திரிபலை, மரமஞ்சள், சிற்றாமுட்டி, கடகரோகணி, வாய்விளங்கம், கண்டங்கத்திரி வகைக்குப் பலம் 1.

செய்பாகம்:—முற் கூறப்பட்டவைகளை ஒன்றிரண்டா யிடித்து ஒரு மட்பாண்டத்தி லிட்டு இரண்டுபடி ஜலம் சேர்த்து நான்கிலொன்றாய்க் காய்ச்சி வடித்துக்கொண்டு அதனுடன் ததிமஸ்து பலம் 16, ஆவின் நெய் பலம் 16, கள்ளிப்பால் பலம் 1, சைந்தலவணம் பலம் 1 சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்க.

பிரயோகம்:—இதனைப் புளித்தநீரில் தேகத்திடத்திற்குத் தக்கபடி 5-6 தடவை மலசோதனை யாகும்படி கொடுக்க குன்மம், குட்டம், மகோதரம், பாண்டு, வீக்கம், ஜ்வரம், ப்லீரோஹங்கள், உன்மாதம் முதலியவை குணமாகும். ஒருமுறை 3-5 நாளுக்கு மேல் கொடுக்க வேண்டியது ஆவசிய மில்லை.

பத்தியம்:—பேதி நன்றாய் ஆனபின்னர் மிளகுரசம் சூப்பு முதலியவைகள் கூட்டிக் கொள்க.

## 215. பல்லாதகாதி கிருதம்

பல்லாதகி பலம் 3, தசமூலம் வகைக்குப் பலம் $1\frac{1}{2}$, இவைகளை எல்லாம் இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு $1\frac{1}{2}$ படி ஜலம்விட்டு நான்கிலொன்றாய்க் காய்ச்சி வடித்து அதனில் திப்பலி, சுக்கு, வசம்பு, வாய்விளங்கம், சைந்தலவணம், பெருங்காயம், எவாச்சாரம், பூநீர், கச்சோரம், சித்திரமூலம், அதிமதுரம், மரமஞ்சள் வகைக்குப் பலம் $\frac{1}{8}$ ஆக அம்மிக்கல்லிலிட்டு முற்கஷாயத்தால் அரைத்துக் கலக்கி 16 பலம் ஆவின்நெய் கூட்டிப் பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்க. இதனை வேளைக்குக் கரண்டிவீதம் தினம் இருநேரம் சாப்பிட்டுவரக் கிராணி, பாண்டு, கபகுன்மம் முதலியவைகளைப் பரிகரிக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 216. கூழ்பாண்டக் கிருதம்

(1) ஆவின்நெய் படி 1, கலியாணப்பூசனிக்காய் சாறுபடி 1, நெல்லிக்காய்ச்சாறு படி $\frac{1}{2}$, தென்னம்பூச்சாறுபடி $\frac{1}{2}$, செந்தாழை விழுதுச்சாறு படி $\frac{1}{4}$, கற்றாழைச்சாறு படி $\frac{1}{4}$, செவ்விளநீர் படி $\frac{1}{2}$, பொன்னாங்காணிச் சாறு படி $\frac{1}{4}$.

(2) திரிகடுகு, நிலப்பனங்கிழங்கு, சதாவரிக்கிழங்கு, கமுகம்பூ, தென்னம்பூ, அதிமதுரம் வகைக்குப் பலம் $\frac{1}{2}$.

செய்பாகம்:—இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்ட கல்கங்களை முதல் அங்கத்தில் கூறப்பட்ட ஏதேனும் ஒரு சாற்றில் நெகிழ வரைத்து ஒரு பாண்டத்தில் போட்டு முதல் அங்கத்தில் குறிப்பிட்டவைகளை எல்லாம் சேர்த்துக் கலக்கிப் பதமாகக் காய்ச்சி வைத்திடுக.

பிரயோகம்:—இதனை வேளைக்குக் கரண்டிவீதம் தினம் இருவேளை உண்டுவர மேகப்பிரமியம், நீர்குத்து எரிவு, அஸ்தி வெட்டை, எலும்புருக்கி, தாது நட்டம் முதலியவைகள் குணமாகும்.

குறிப்பு:—அபினி, கஞ்சா, வாளம், கள்ளிப்பால் முதலியவை சம்பந்தமான கிருதங்களை யெல்லாம் தேகத்திடத்திற்குத் தக்கவாறு சிறு அளவாக முதலில் ஆரம்பித்து அவைகளின் குணம் மேலிடாது சிறிது ஏற்படின் அதனையே யுக்த அளவென்று உணர்க.

# பற்ப இலம்பகம்

## 217. கல்நார் பற்பம்

இரண்டு பலம் கல்நாரை சிறு துண்டுகளாக நறுக்கி இளநீரில் ஓரிரவு ஊறப்போட்டு, அலம்பி எடுத்துக் கல்வத்திலிட்டுச் சிறு செருப்படைச் சாற்றில் இரண்டுநாளரைத்துச் சிறுவில்லைகள் செய்துலர்த்தி அகலிலொன்றின்மீதொன்று தட்டாமற் பரப்பி மேலகல்மூடிச் சீலைசெய்து. காய்ந்தபின் இருபது வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் பத்துமுறை முன்போலரைத்துப் புடமிடத் திவ்வியமான பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்குப் பணவெடை வீதம் தினம் இருவேளை நெய்யிலேனும் வெண்ணெயிலேனும் இருபதுநாளுட்கொள்ள நீர் எரிச்சல், வெட்டை, தேககாங்கை முதலியவைகள் குணப்படும். ஆண்பாலாயின் விசேஷ போகத்தினலாகிய மர்மஸ்தானத்தின் நரம்புகளின் தளர்ச்சியையும், பெண்பாலாயின் மக்களுக்குப் பாலளித்ததனலாகிய ஸ்தன தளர்ச்சியையும் நீக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 218. வேறு

மூன்று பலம் கல்நாரைத் தாளித்த கற் சுண்ணத்திலும் குமரிச் சாற்றிலும் மும்மூன்றுநாளூறப்போட்டு ஏழாவது நாள் கல்வத்திலிட்டுப் புங்கம்வேர்ப்பட்டையைச் சீவிப் பிழிந்த பாலால் நான்கு ஜாமமரைத்து அரையணு அகலமும் கனமுமுள்ள வில்லைகளாய்ச்செய்துலர்த்தி அகலிலிட்டுச் சீலைசெய்து இருபத்தைந்து வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்.—வேளைக்கு ½ அல்லது 1 பணவெடை விகிதம் வெண்ணெயிலுண்ண எத்தகைய கடுமையான உஷ்ணமேனுந் தணியும். மேகத்தாலுண்டான நீர் எரிச்சல், சுருக்கு முதலியனவும் பற்றறும்.

பத்தியம்:—குணமுண்டாகும்வரை உஷ்ணமுள்ள ஆகாரங்களை ஒழித்தல் வேண்டும்.

## 219. சிலாசத்து பற்பம்

இரண்டு பலம் கருப்பூர சிலாசத்தை ஒரே கட்டியாகப் பனஞ்சாற்றில் மூன்றுநா ளூறப்போட்டுச் சிறுதீயி லெரித்துச் சாறெல்லாஞ் சுண்டினபின் கட்டியைச் சுத்திகரித்துப் புளியா ரைக் கீரையை அரைத்துத் தேங்காய்ப் பிரமாணம் கவசித்து 4-5 சீலைசெய்து 2 மணிநேரம் இரவியிலுலர்த்தி 35 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ முதல் 1 பணவெடை வரை தினம் காலை மாலை நெய் அல்லது வெண்ணெயிலுட்கொள்ள வெட்டை நீங்கும்.

இங்ஙனமே கேசரிநீரி லூறப்போட்டு எரித்தெடுத்த சிலா சத்துக்குக்கேசரி மலத்தைக் கவசித்துப் புடமிட்டது சீதள சம்பந்த இருமல் ரோகத்தையும், முள்ளிக்கீரைச் சாற்றிலூறப் போட்டெரித்தெடுத்த கட்டிக்கு முள்ளிக்கீரையைக் கவசித்துப் புடமிட்டது நீர் கோத்தலா லுண்டாகிய வீக்கங்களையுங் குணப் படுத்தும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 220. படிகார பற்பம்

நாயுருவி சமூலத்தை நன்குலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கி அதனெடைக்குப் பத்துப்பங்குத் தண்ணீர்விட்டுக் கரைத்து இரண்டுமணிநேரம் தெளியவைத்துக் கலங்காமல் மறுபாண்டத் தில்வடித்து நீர் சுண்டஎரிக்க, அடியிலுப்பாக உறையும். இதனை ஊத்தாமணி யிலைச்சாற்றி லிரண்டுமணி நேரமரைத்து வில்லை செய்து இருபுடம் போட்டெடுக்கக் காரமுடைத்தாகும். அதனை ஒருபீங்கான் தட்டில்வைத்துப் பனியில்வைக்க ஜெயநீராகும். இதனைப் புட்டியில் பத்திரப்படுத்துக. ஒரு பலம் படிகாரத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து ஒரு இருப்புக் கரண்டியில்வைத்து நெருப்பனலிற் பொரித்துக் கல்வத்திலிட்டு முன் சித்தப்படுத்திய ஜெயநீரால் ஒரு ஜாம மரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலடைக்கிச் சீலைசெய்து 15 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—1 முதல் 1½ குன்றிநிறை வெண்ணெயிற் கொடுக்க எத்தகைய வாந்தியினையும் உடனே நிறுத்தும். இரண்டு முறை கொடுக்கவேண்டிய ஆவசியக முண்டாகாது.

## 221. வேறு

ஒரு குடுவையில் 10 பலம் வெண்ணெயைப் போட்டு அதனிடையில் 5 பலம் படிகாரத்தை வைத்துக் குடுவையின் வாய் புறத்திற் சில்லிட்டுச் சீலைசெய்து 30 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—1 முதல் 2 குன்றிநிறை அனுபானங்களிற் கொடுக்க வாந்தி, உதரரோகம், வெள்ளை, எரிச்சல் முதலியன பரிகரிக்கப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 222. சங்கு பற்பம்

சங்கை சிறுதுண்டுகளாக நறுக்கி இரண்டுபலம் எடுத்துக் குப்பைமேனிச் சாற்றிலேனும் கீழ்வாய்நெல்லிச் சாற்றிலேனும் 3 நாளூறவைத்துப் பின்னர் ஒரு குடுவையிற்போட்டு அவை மூழ்க எச்சாற்றி லூறப்போடப்பட்டதோ அச்சாற்றைவிட்டுச் சில்லுமூடிச் சீலைசெய்துக் காய்ந்தவுடன் 50 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ அல்லது 1 பணவெடை தினம் காலை மாலை பழச்சாற்றிலேனும் வெண்ணெயிலேனு முட்கொள்ள இரண்டு மூன்று வேளையில் மார்நோய், மார்எரிச்சல், மாரடைப்பு, நீர்ச்சுருக்கு, வெள்ளை முதலியன பரிகரிக்கப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 223. வேறு

ஐந்துபலம் சங்குத் துண்டுகளைப் பழச்சாற்றி லூறப்போட்டுப் பழச்சாறுவிட்டு எரித்துப் பூக்கச்செய்து அதனைக் கல்வத்திலிட்டு அரைப்பதற்குத் திரவரூபமாகப் பிரண்டை யிலையைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு இரண்டுஜாம மரைத்து ஒரே வில்லையாகச் செய்துக் காயவைத்து அகலிலடக்கிச் சீலைசெய்து 50 வறட்டியிற் புடமிடச் சுன்னமாகும். இவ்வண்ணம் ஏழுமுறை அரைத்துப் புடமிட்டது விசேஷ குணந்தரக் கூடிய திவ்விய ஔஷதமாகும்.

பிரயோகம்:—முற்கூறியவையே,

## 224. ஆமையோட்டுப் பற்பம்

3 பலம் ஆமையோட்டைச் சிறுதுண்டுகளாக நறுக்கிப் பச்சைக் கோரைக்கிழங்கை நன்கரைத்துச் சுமார் சிறிய தேங்காய்ப் பிரமாணத்திற்குள் பொருத்திச் சீலைசெய்து 3 மணிநேரம் இரவியிலுலர்த்தி 50 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும். அல்லது கல்லரிதாரத்தைச் சுத்தஜலம்விட் டரைத்துத் துண்டுகளுக்குப் பூசி யுலர்த்தி அகலிலடக்கிச் சீலைசெய்து புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ முதல் 1 குன்றிநிறை வரையில் நெய்யிற் கொடுக்க அஜீர்ணம், மார்புநோய் முதலியன நீங்கிப் பசிதீபன மதிகரிக்கும், குழந்தைகட்கு அரிசிப்பிரமாண மளிக்கச் சகல மாந்தரோகங்களும் குணப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 225. வேறு

5 பலம் ஆமை யோட்டைப் பத்து வறட்டியின் நடுவில் வைத்துப் புடமிட்டு வெந்தபின் கல்வத்திலிட்டு வாதமடக்கி யிலைச் சாற்றி லிரண்டுஜாம மரைத்து வில்லைசெய் துலரவைத்து நச்சுக் கொட்டை யிலையை அரைத்து விளங்காய்ப் பிரமாணம் கவசம் செய்து மண்சீலைசெய்து சாம்பலிற் புரட்டி உடனே 30 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ அல்லது 1 பணவெடை அனுபானங்களிற் கொடுக்க வாயு, அக்கினிமந்தம், மார்புநோய், அஜீர்ணம் முதலியன குணப்படும். அன்றியும் குழந்தைகளுக்குப் பருவத்துக் கேற்றபடி 1 முதல் 3 அரிசிநிறை கொடுக்கலாம்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 226. இலவண பற்பம்

✓ 5 பலம் கறியுப்பைப் பெருங் கட்டிகளாகக் கல்வத்தி லிட்டுப் புளியாரைச் சாறுவிட்டு நெகிழ அரைத்து வழித்து ஒருபீங்கானிலிட்டு இரவியில் நீர் சுண்டப்பார்த்துச் சிறு வில்லைகளாய்ச் செய்து நன்றாகக் கடுவெயிலி லுலர்த்தி அகலில் ஒன்றின்மீதொன்று தட்டாமல்வைத்து மேலகல்மூடிச் சீலைசெய்து காய்ந்த

பின் 20 வறட்டிகளைப் பிட்டுப் புடமடுக்குவதைப்போல் அடுக்கி நெருப்பிட்டு வெந்து புகையடங்கிச் செந்தனலாக இருக்கும் போது குறட்டைக்கொண்டு அரைப்பாக வறட்டிகளை அப்புறப் படுத்தி, முன் சித்தப்படுத்திய அகலை வைத்து நான்கு பக்கமும் அனல்கொள்ளும்படி அப்புறப்படுத்திய வறட்டிகளை முன்போ லடுக்கிவருக. புடபமானது சாங்க சீதளமானபின் இலவணத்தை மீண்டும் கல்வத்திலிட்டு முற்கூறப்பட்ட மூலிகைச் சாற்றிலேயே அரைத்து வில்லைசெய்து முன்போல் புடம்வைக்க. இங்ஙனம் இரண்டு மூன்று புடமானபின் கிரமப்படி எருநடுவில் வைத்துப் புடமிடலாம். இதனால் உப்பு உருகாமலும் அதனெடை அதிக மாகக் குறையாமலும் பக்குவப்படும். இவ்வாறு 10 புடமிட்ட பற்பம் கையாடுவதற் குரித்தனவாம்.

பிரயோகம்:—பணவெடை பழச்சாற்றிலேனும் அன்னக் கொதி ஜலத்திலேனும் தினம் இருவேளை கொள்ள ஏப்பம், மலபந் தம், வயிறுப்பிசம், குடலிரைச்சல், வயிற்றுநோய், மார்நோய், அஜீரணம் முதலியவைகளைக் குணப்படுத்தும்.

அதுவேயுமன்றி, முற்கூறப்பட்ட பாகப்படி உத்தாமணி யிலைச்சாற்றிலரைத்துப் புடமிட்டது வாந்திபேதி, கொடும் வயி ற்றுவலி முதலியவைகட்கும், வாழைப்பூசாற்றிலரைத்துப் புட மிட்டது தீராதெனக்கருதிய குன்மரோகங்கட்கும், கொட் டைக் கரந்தைசாற்றிலரைத்துப் புடமிட்டது அசாத்தியமெனக் கைவிடப்பட்ட நீரடைப்பு ரோகங்களையும் பரிகரிக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 227. மான்கோம்பு பற்பம்

அரத்தினால் இராவி எடுத்த ஐந்து தோலா மான்கொம்பு பொடியுடன் சமனெடை ஓமம் சேர்த்து ஒரு குடுவையில் போட்டு நிறைய வெள்ளெருக்கன்பால் விட்டு 3 நாள் ஊற வைத்து நான்காவது நாள் ஓடுமூடி சீலைசெய்து காய்ந்தபின் 150 வறட்டியிற் புடமிடுக. ஒரு சமயம் கருத்திருப்பின் அதனை வெள்ளெருக்கன் பாலால் அரைத்து வில்லைசெய்து காய வைத்து ஓட்டி லடக்கிச் சீலைசெய்து 100 வறட்டியிற் புட மிடவும் நல்ல பற்பமாகும். இதனில் வேளைக்கு ½ குன்றியளவு தினம்

இருநேரம் 14 நாள் கொடுக்க; ஜ்வரம், இருமல், பேதி இத்தியாதி கூடிய க்ஷயரோகம் குணமாகும்.

பத்தியம்:—கோதுமை ரவையை நெய்யில் வறுத்துப் பாலிட்டுக் கஞ்சிசெய்து ஆகாரங் கொள்க. வேறொன்றும் ஆகாது.

## 228. வேறு

இரண்டு பலம் புள்ளிமான் கொம்பைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கோநீரிலொருநா ளூறப்போட்டு மறுநாள் அலம்பியெடுத்துப் பத்துவறட்டியின் நடுவில் வைத்துப்புடமிட்டு வெந்தபின் கல்வத்திலிட்டு நற்சங்க இலைச்சாற்று லிரண்டுஜாம மரைத்து வில்லைசெய்து காயவைத்துக் கழற்சி யிலையை அரைத்து விளங்காய்ப் பிரமாணம் கவசித்து மண்சீலைசெய்து சாம்பலிற் புரட்டி 40 வறட்டியிற் புடமிடப் பற்ப மாகும்.

பிரயோகம்:—வேளைக்குப் பணவெடை தினமிருவேளை நெய் வெண்ணெய் இவைகளில் கொள்ள நீரடைப்பு, நீர் எரிச்சல், க்ஷயம், ஈளை, மேககாங்கை, மார்நோய் முதலியவைகளைக் குணப்படுத்தும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 229. பஞ்சலவண பற்பம்

கறியுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, இந்துப்பு வகைக்குப் பலம் 1. 15 எலுமிச்சம்பழ ரசம், 16 துமட்டிக்காய் ரசம், ½ படி பசுவின்பால், ½ சித்திரமூலம் இலைச்சாறு, ¼ படி பப்பளிக்காய்ச் சாறு.

இவைகளில் உப்பு வகைகளைப் பொடிசெய்து ஒரு இரும்புக் கடாயில் போட்டு மூலிகை ரசங்களை ஒருமிக்கக் கலந்து அதனுட னிரண்டுபலம் பொரித்த வெங்காரமிட்டுக் கலக்கிக் கொஞ்சங் கொஞ்சமாக உப்பிற்கு விட்டுச் சிறுதீயிலெரித்துக் கிளறிக்கொண்டே வருக. கடையிற் சிறிது இரசத்தை நிறுத்திக் கொண்டு முன் சுருக்கிட்ட இலவணத்தைக் கல்வத்திலிட்டு நிறுத்திய இரசத்தினாலரைத்து வில்லைகள் செய்து இரவியிலுலர்த்தி அகலிற் பரப்பி மேலகல் மூடிச் சீலைசெய்து காய்ந்ததும் இருபது வறட்டியிற் புடமிடுக.

பிரயோகம்:—இதனை வேளைக்கு ½ அல்லது 1 பணவெடை தினம் இருவேளை மூன்றுநாளுட்கொள்ளச் சூதகக்கட்டு, வயிற்றுள்ளுண்டான கட்டி முதலியவைகளை உடைக்கும். மகோதரத்தையும் குணப்படுத்தும் கருவுயிர்த்த பெண்ணின் அழுக்கை வெளிப்படுத்தும். ஐந்து மாதத்திற்குட்பட்ட கருப்பிணிகள் இதனை உண்ணல் கூடாது. இதனாற் பிண்டஞ் சிதையும்.

பத்தியம்:—வறுத்த உப்பு சேர்த்து நெய் சேர்ந்த கிச்சடி சாதம் சாப்பிடுக. பாலருந்துவது நலம்.

## 230. புளிச்சுண்ணம்

கோது, கொட்டை நீக்கிய பழையபுளி பலம் 10, சூரத்துக் கருப்பூரம் காசெடை 1, சிற்றாமணக் கெண்ணெய் பலம் 1, அதிகமாய் உப்புக் கரிக்கின்ற கிணற்று ஜலம் ஆழாக்கு ½.

இவைகளை ஒருமிக்கக் கலக்கும்படி பிசைந்து கல்வத்திலிட்டிடித்து அடைதட்டி ஒரு புதுச்சட்டியில் வைத்துச் சிறுதீயாக எரிக்கச் சுண்ணமாகும். இச் சுண்ணத்தோடு ஒருகாசெடை கருப்பூரத்தைச் சேர்த்து அரை ஆழாக்குக் கிணற்று ஜலம்விட்டு மெழுகு பதத்திற் கரைத்து வில்லைசெய்து முன்போலெரிக்க. இங்ஙனம் ஒவ்வொரு எரிவிற்கும் முன்போல் கருப்பூரஞ் சேர்த்து உப்புக்கரிக்கின்ற கிணற்று ஜலத்தா லரைத்து வில்லை செய்து ஐந்துமுறை எரிக்கக் கடுங்காரச் சுண்ணமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ¼ அல்லது ½ குன்றி நிறை அடியிற்கண்ட அநுபானத்திற் கொடுக்க. சுக்கு, காய்ந்தபுதினா, சீரகம், துரிஞ்சிப்பழத்தோல், மிளகு, வகைக்குப் பலம் 1. கறுப்பு உப்புத் தோலா 2, கல்லுப்புத் தோலா 1, இவைகளைச் சூரணஞ் செய்து 15 எலுமிச்சம்பழ ரசத்திலூரப்போட்டு இரவியிற் சுண்ட உலர்த்திச் சூரணஞ் செய்துகொள்க.

வேளைக்கு ⅛ தோலா சூரணத்தில் புளிச்சுண்ணம் கூட்டித் தினம் இருவேளை போஜனத்திற்குப் பின்னுண்ணப் பித்தவாயு சம்பந்தமான சகல பிணிகளும் நீங்கும். அன்றியும் ஜீர்ணசக்தி அதிகரித்து வயிற்றுவலி, மார்நோய் முதலியவைகளும் தீரும்.

பத்தியம்:—ஜீர்ணிக்க கூடிய இலகுவான பதார்த்தங்களைக் கொள்ளுக.

## 231. பாஷாணச் சுண்ணம்

சுத்திசெய்த குஞ்சு பொரித்த சிற்றண்டத்தோல் பலம் 1, சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம் பலம் ½, இவ்விரண்டினையுங் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றினுல் நான்குஜாம மரைத்து வில்லை செய்து காயவைத்து அகலிலிட்டுச் சீலைசெய்து இரவியிலுலர்த்தி 10 அல்லது 15 வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் புடத்தினின் றெடுத்த மருந்துடன் மீண்டும் அரைப்பலம் பாஷாணம் சேர்த்து முன்போல் பழச்சாற்றில் நான்குஜாம மரைத்து வில்லை செய்து புடமிடுக. இவ்விதம் மருந்து இரண்டுபலம் எடையாகும் வரை ஒவ்வொரு புடத்திற்கும் பாஷாணம் ½ பலமாகக் கூட்டி யரைத்துப் புடமிட்டுக்கொண்டுவர 5, 6 புடத்தில் எடைகிற்கும்.

பிரயோகம்:—இரண்டு அரிசி எடை சுண்ணத்தை நெய்யிலேனும் தேனிலேனு முண்ண இரண்டொரு வேளையில் ஜன்னி தோஷ சுரங்களையுங் கண்டிப்பாய்ப் பரிகரிக்கும்.

பத்தியம்:—புளிநீக்கி இலகு போஜனஞ் செய்க. பாலும் பருகிவருதல் அவசியம்.

## 232. மேகராஜாங்க பற்பம்

கல்மதம், கல்நார், சிலாசத்து வகைக்குப் பலம் 1. இம் மூன்றனையும் ஒரு மட்பாத்திரத்தில் போட்டு அரைப்படி பனங்கள் வூற்றிச் சிறுதீயாக எரித்து ஆறவிட்டு, ஜலம்விட் டலம்பிக் கல்வத்தி லிட்டுக் கோங்கிலவம் பட்டைச்சாற்றில் எட்டு ஜாம மரைத்து வில்லைசெய்து காயவைத்து அகலிலடக்கிச் சீலைசெய்து, காய்ந்தபின் 25 வறட்டியிற் புடமிடுக. இம்மருந்துடன் கெட்டி முத்துப் பலம் ¼, நற்பவழம் பலம் ¼, கூட்டி புளிப்பு மாதுளம் பழச் சாற்றில் 8 ஜாம மரைத்துச் சிறு வில்லைகள்செய்து இரவியி லுலர்த்தி அகலில் பரப்பி, மேலகல்மூடிச் சீலைசெய்து காய்ந்த பின் 20 வறட்டியிற் புடமிடுக. இதனை மறுபடியும் புளிப்பு மாதுளம்பழச் சாற்றிலரைத்து முன்போல் 5 புடம்போடத் தாவள்ளியமான பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ அல்லது 1 பணவெடை தினம் இருவேளை வெண்ணெயி லுட்கொள்ள அஸ்திசுரமும், இளநீரி

னுண்ணக் கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பும், நெய் தேன் இவைகளிற் கொள்ள நாட்பட்ட க்ஷயம், காசம், புண் புரை, எனும்புருக்கி முதலியனவும் தீரும். இதனை பிணியாளன் எவ்வகை நிலையிலிருப்பினும் மெதுவாகக் கொடுத்துக் கொண்டு வரலாம். மருந்தினால் உபத்திரவம் ஒன்று முண்டாகாது.

பத்தியம்:—பிணிக்குத் தக்கபடி இச்சாபத்திய மாகவும் ஆகாத பதார்த்தங்களை நீக்கியும் ஆகாரம் உட்கொள்க.

## 233. வேறு முறை

கல்நார், கல்மதம், சிலாசத்து, பலகறை, காந்தம் வகைக் குப் பலம் ½.

இவைகளைக் கல்வத்திலிட்டு வெங்காரமும் வெடியுப்புஞ் சமனெடையாகப் பொடித்து வறுத்துப் பீங்கானிலிட்டுப் பனி யில் வைத்தெடுத்த ஜெயநீர்விட்டு இரண்டுஜாம மரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடிச் சீலைசெய்து காய்ந்தபின் 20 வறட்டியிற் புடமிடத் தாவள்ளியமான பற்ப மாகும்.

பிரயோகம்:—வேளைக்குப் பணவெடை தினம் இருவேளை நெய், வெண்ணெய் முதலியவற்றிற் குழைத்துண்ண நீர்ச்சுருக்கு, வெள்ளை, நீரடைப்பு, மேகஜ்வரம் முதலியன குணப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 234. நாக பற்பம்

இருப்பை எண்ணெயில் ஏழுதரம் உருக்கிச் சாய்த்த இரண்டு பலம் சிறுகண் நாகத்தை ஒரு இருப்புக்கடாயிற் போட்டுக் கொல்லுலையில் வைத்து ஊதி நாகம் உருகினவுடன் கொஞ்சங் கொஞ்சமாய் சிவகரத்தைச் சாற்றினாற் சுருக்கிடுக. இவ்வாறு ஒவ்வொரு முறையு முருக்கிச் சுருக்கிட உருண்டை யுடைச்சலா கப் போகும். அவ்வமயம் சுருக்கிடுதலை நிறுத்திக் கடாய் செந் நிறமாக நன்றாக ஊத நாகம் தீப்பற்றி மத்தாப்புவண்ண மெரி ந்து பூக்கத்துவங்கும் அதனைக் கீழ்மேலாக ஒரு ஜல்லிக்கரண்டி யால் புரட்டிக்கொண்டு வரல்வேண்டும். தேய்த்தல் கூடாது. தேய்ப்பின் பூக்குந்தன்மைமாறி நிறம்மங்கும். இவ்வாறே நெட் டைப் பிரமட்டைச்சாறு, ஆத்தலரிச்சாறு, கீழ்காய் நெல்லிச்

சாறு, உத்தாமணிச்சாறு முதலியவைகளிற் செய்து கொள்ள லாம்.

பிரயோகம்:—வேளைக்கு 1 அல்லது, 2 குன்றி பற்பம் நெய், வெண்ணெய் இவைகளில் தினம் இருவேளை உண்ண உஷ்ண பேதி, இரத்தபேதி, மூலம் முதலிய பிணிகள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 235. வேறு

இரண்டுபலம் சுத்திசெய்த சிறுகன் நாகத்தைக் கொல்லு லையி லுருக்கிக் கடாய் செக்கிறமான பக்குவத்தில் அந்த நாகத் திற்கு $\frac{1}{4}$ தோலா அபினியைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சிறிது சிறிதாகக் கிராசமிட்டு வேகமாக ஊதத் தீவிரமாய்ப்பற்றி எறிந்து பற்பமாகும். இவ்வாறு முடிந்ததைச் சாங்க சீதளமாக ஆறவிட்டு மெல்லிய துணியில் அரித்துத் திப்பியை நீக்கி உப யோகப் படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு 1 முதல் 2 குன்றிநிறை வரையில் நெய் அல்லது வெண்ணெயில் தினம்; இருவேளை உட்கொள்ளச் சீதபேதி, உஷ்ணபேதி, கிராணி முதலியன குணமாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம். இதனைக்கொள்ளுங்கால் நெய், பால் முதலியன ஆகாரங்களில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளு தல் அத்தியாவசியகம்.

## 236. வேறு

ஏழரைப்பலம் நாகத்தை இலுப்பை யெண்ணெயும் பசும் வெண்ணெயும் சமமாய்க் கலந்து கரண்டியில் தடவி அதனிலிட்டு உருக்கி வெள்ளாட்டுப்பாலில் 7 தடவை சாய்த்து 5 பலம் எடுத்து ஒரு புது சட்டியில் போட்டு அடுப்பேற்றி உருகும் போது வெடியுப்பு பலம் 5, ஓமம் பலம் $2\frac{1}{2}$, கறிமஞ்சள் பலம் $2\frac{1}{2}$, இம்மூன்றையும் நன்றாய் பொடித்துச் சிறுகச் சிறுக வதனில் தூவி வேப்பங் கட்டையால் கடையவும். இவையானபின் அரைப் பலம் அபினியைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஏழுமுறையாகப் போட்டுக் கட்டையால் தேய்க்க நாகம் பழுப்புநிறமாக பற்பமா கும். இதனை அரைத்த மஞ்சளிலிடச் சிவக்கும்படியானத் தன் மையைத் தெரிவிக்கும். இந்த பற்பத்தைப் பழச்சாற்றில் இரண்டு

ஜாமம் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி அகலில்வைத்து மேல் அகல்மூடிச் சீலைசெய்து காய்ந்தபின் 8 வறட்டியில் புடமிடவும். இங்ஙனம் ஒவ்வொரு முறையும் பழச்சாற்றில் அரைத்து வில்லை செய்து காயவைத்து அகலிலடக்கிச் சீலைசெய்து ஒவ்வொரு வறட்டி அதிகப்படுத்தி 15 புடம் போடவும். மீண்டும் அவ்வாறே ஒவ்வொரு வறட்டிக் குறைத்து 15 புடமிடவும் இந்தப் பற்பமானது காரமுடையதாகவும் பழுப்புநிற முடையதாகவுமிருக்கும் இதனில் வேளைக்கு ½ குன்றிப்பிரமாணம் தினம் இருநேரம் 7 நாள் நெய்யில் உட்கொள்ள நவமூலம், சீதபேதி, அஜீர்ணபேதி, வாந்திபேதி முதலியவை குணமாவதுடன் தாது பலப்படும் நாட்சென்ற வியாதியாயின் சிலநாள் இடைவிட்டு இரண்டு மூன்று முறை சாப்பிடவும்.

இந்த மருந்தை மண்டலங் கணக்காக வேளைக்கு ¼ குன்றி வீதம் தக்க அனுபானங்களில் கொடுக்க ஈளை, இருமல், பிரமேகம், கைகால் எரிச்சல், குன்மம், எலிக்கடி முதலியவை குணமாகும்.

பத்தியம்:—கடுகு, எள்ளெண்ணெய், புளி, புகையிலை, பூசனி, மீன், கருவாடு, போகம் முதலியது நீக்கவும்.

குறிப்பு:—வறுப்பினின்றெடுத்த பற்பத்தைப் பழச்சாற்றில் அரைத்து முதலில் புடமிடும்போது வில்லை உலராது இரண்டு மூன்று புடம் சிறிது கசிவுடன் புடமிடவேண்டி வரும்.

## 237. தாமிரநாக பற்பம்

ஒரு நாகூர்தாமிரகாசுக்கு அருகன்வேரை அரைத்து விளங்காய்ப் பிரமாணம் கவசம்செய்து மண்சீலை எழுசெய்து காயவைத்து 50 வறட்டியிற் புடமிடுக. மீண்டும் அந்தக்காசுக்கு முன்போல் குப்பைமேனியிலையை அரைத்துக் கவசமிட்டு ஒரு புடமும், குப்பைமேனியையும் அருகன்வேரையுஞ் சமனுக அரைத்துக் கவசமிட்டு ஒரு புடமும் போட்டு வைத்துக்கொள்க. இருப்பை எண்ணெயி லேழுமுறை உருக்கிச் சாய்த்துச் சுத்தி செய்த 1½ பலம் நாகத்தை ஒரு இருப்புக் கடாயிலிட்டுக் கன்னான் கொல்லுலையில் வைத்தூதி நாகமுருகினவுடன் இத்தாமிரக் காசைக் கொடுக்க சில நிமிடங்கட்குள் ஒருங்கு உருகிச் சேரும். இதற்கு முன்முறையில் கிராசம் கொடுத்தபடி ½ தோலா

அபினியைச் சிறு துண்டுகளாகச்செய்து கிராசமிட்டப் பூக்கும். பின்னர் சாங்க சீதளமாய் ஆறவிட்டு மெல்லிய துணியில் அரித்துத் திப்பியை நீக்கிப் பற்பத்தைக் கல்வத்திலிட்டு வெள்ளெருக்கன்பால், மேனிச்சாறு, சிறுசெருப்படை இவைகள் ஒவ்வொன்றினுந் தனித்தனி நான்குஜாமமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலடக்கிச் சீலைசெய்து 20 வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் மூன்று புடம்போட்டு முடிந்ததே பிரயோகத்திற்குத் தக்கதாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ முதல் 1 குன்றி நிறை வரையில் 3 அல்லது 5 நாள் தினம் இருவேளை நெய்யிலேனும் வெண்ணெயிலேனும் குழைத் துட்கொள்ள மூலமூலம், மேகம், குன்மம், தாதுவின் பலஹீனம் முதலியவற்றைப் பரிகரிக்கும். இதனை உட்கொண்டபின் ஒரு பருவம்வரை குணமுண்டாகா திருப்பின் மீண்டும் ஒருமுறை உண்ணுக. இங்ஙனம் குணமேற்படுங்காறும் 10 அல்லது 15 நாள் இடையில் விட்டுவிட்டுக் கொள்க.

பத்தியம்:—பிணிக்கு ஏற்றபடி. ஆகாத பதார்த்தங்களை நீக்கி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

## 238. பூநாக பற்பம்

ஒருவீசை செம்மண் பூநாகம் கொண்டுவந்து மோரில் போட்டு மண்ணெல்லாம் கக்கினபின் சுத்தமாயலம்பிக் காயவைத்திடித்துக் கல்வத்திலிட்டு ஆடுதின்னாப்பாலைச் சாற்றில் ஒருநாள் அரைத்து வில்லைசெய்து, காயவைத்து அகலிலிட்டுச் சீலை செய்து, 100 வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் 9 புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ அல்லது 1 குன்றிநிறை நெய் தேன் முதலியவற்றுள் தினமிருவேளை 15 நாள் கொள்ளக் கொடிய காசம், மேகசுரம், தாகம் முதலியவைகளைப் பரிகரிக்கும்.

பத்தியம்:—சமயத்துக் கேற்ற பெற்றியறிந்து பத்தியமிருத்தல் நலம்.

## 239. பவழ பற்பம்

ஐந்துபலம் பவழத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் மிதக்க 3 நாள்வரை ஊறப்போட்டு நான்காவதுநாள் நன்றாய் அலம்பி ஒரு சிறுகுடுவையிற் போட்டு வெள்ளெருக்கம் பால் பவழத்

திற்குமேல் ஒரு அங்குல மிருக்கும்படி விட்டுக் குடுவையின் வாய்க்குச் சில்லுமூடிச் சீலை செய்து காயவைத்துக் குழித் தோண்டி 35 வறட்டியிற் புடம் போடப் பற்பமாகும். இதனைக் கல்வத்திலிட்டுப் பூலாப்பழச் சாற்றில் 4 ஜாம மரைத்து வில்லை செய்து காயவைத்து அகலிலிட்டுச் சீலைசெய்து காய்ந்தபின் முன்போல் புடமிடுக. இது தாவள்ளியமாகப் பூத்திருக்கும்.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ குன்றி எடை நெய், வெண்ணெய் முதலியவைகளிற் கொடுத்துக் கொண்டுவரச் சர்வ கபரோகங் களையும், மேகசம்பந்தமான உடல் எரிச்சல், காங்கை, நீர் எரிச் சல், நீர்கட்டு முதலியவற்றைப் பரிகரிக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 240. வேறு

ஒரு குடுவையில் சுண்ணக் கற்களைப்போட்டு அதன்நடுவில் ஒருபலம் தாளகத்தை வைத்துப் பனங்கள் விட்டுத் தாளித்துச் சூடுதணிந்த பின்னர் அடுப்பேற்றிச் சிறுதீயில் $\frac{1}{4}$ மணிநேர மெரித்துத் தாளகத்தை ஜலம்விட்டலம்பி எடுத்துக் கொள்க. இங்ஙனம் 5 முறை ஆனபின் அதனைக் கல்வத்திலிட்டு வெள் ளெருக்கன் பாலால் 4 ஜாமமரைத்து வில்லை தட்டிக்காயவைத் துச் சிறுதுண்டுகளாக உடைத்து ஒரு சிறுகுடுவையிலிட்டு அதன் மேல் பழச்சாற்றிற் சுத்திசெய்த ஒருபலம் பவழத்தைப் போட்டு இவையாவும் மூழ்க வெள்ளெருக்கம் பால்விட்டு, வாய்க்கு ஓடு மூடிச் சீலைசெய்து 50 வறட்டியிற் புடமிடுக. குடுவையி லிருக் கும் மருந்தை ஒரு தட்டைப் பீங்காணிற் போட்டு மருந்து பூக் கும் வரையில் முலைப்பால் தெளித்துக்கொண்டு வருக. பின்னர் அந்தகாரம் நீங்க இரவியில் வைத்துச் சீசாவில் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ குன்றிநிறை நெய்யி லேனும் வெண்ணெயிலேனும் தினம் இருவேளை உண்ண, ஈளை, காசம் முதலிய கபரோகங்கள் நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 241. வெள்ளி பற்பம்

ஒருதோலா வெள்ளியைத் தகடடித்துப் பழுக்கக் காய்ச்சி இருபத் தொருமுறை மகிழம்பூச் சாற்றில் தோய்க்க. தகடு

வெட்டையாகும். இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மகிழம் பூச் சாற்றினாலேயே நான்குஜாம மரைத்து வில்லைதட்டிக் காய வைத்துப் பதினாறுபலம் முக்காவேளை வேரையரைத்து அதன் மத்தியில் வில்லைவைத்துச் சீலைசெய்து இரண்டு மணி நேர முலர்த்தி நூறு வறட்டியிற் புடமிட நல்ல பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு அரிசி எடை தினம் இருவேளை நெய்யிலேனும் தேனிலேனு முட்கொள்ள மேகப்படை, வெள்ளை முதலிய பிணிகள் தீர்தலோடு தாதுவிருத்தி உண்டாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 242. முத்துச்சிப்பி பற்பம்.

ஐந்துபலம் முத்துச்சிப்பியை 10 வறட்டியின் நடுவில் வைத்துப் புடமிட்டு வெந்தபின் கல்வத்திலிட்டுக் குமரிச்சாற்றி னிரண்டுஜாம மரைத்து வில்லைசெய்து இரவியி லுலர்த்திப் பொன்னாங்காணியிலையை அரைத்துச் சிறுதேங்காய்ப் பிரமாணம் அவ்வில்லைக்குக் கவசஞ்செய்து இரண்டு மூன்று சீலைசெய்துச் சாம்பலிற் புறட்டி 30 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ பணவெடை தினம் இருவேளை ஏழு அல்லது பத்துநாள் நெய்யிற் கொள்ள உஷ்ணத்தாலுண்டான கபரோகங்கள் நிவர்த்தியாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 243. பால்கருடக்கல் பற்பம்.

இரண்டுபலம் கருடக்கல்லை முன்போல் 5, 6 வறட்டியின் நடுவில் வைத்துப் புடமிட்டு வெந்தபின் சேதப்படாம லவற்றைக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றி லிரண்டுஜாம மரைத்து வில்லை செய்துலர்த்திப் பொடுதலையை யரைத்துப் பெரிய விளங்காய்ப் பிரமாணங் கவசித்து 2, 3 மண்சீலைசெய்துச் சாம்பலிற் புரட்டி 30 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்குக் குன்றி யெடையாகத் தினமிருவேளை நெய் அல்லது வெண்ணெயிற் கொள்ள கணச்சூடு, நீர்ப்பையின் கொதிப்பு, இவைகள் தணிந்து சுக்கிலவிருத்தி உண்டாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 244. வெங்கார பற்பம்

இரண்டு பலம் பொரித்த வெங்காரத்தைக் கல்வத்திலிட்டு வயல் நண்டுச்சாற்றினு லிரண்டு ஜாமமரைத்து வில்லைசெய்துலர்த்தி, முள்ளங்கியிலையை அரைத்து விளங்காய்ப் பிரமாணம் கவசமிட்டு மண்சீலை செய்து சாம்பலிற் புரட்டி 30 வறட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ அல்லது 1 குன்றி எடை சமயத்துக்கேற்ப அனுபானங்களிற் கொடுக்கச் சீதள சம்பந்தமான இருமல், சுரம் முதலிய பிணிகள் நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 245. மஹாபூபதி பற்பம்

பவழபற்பம் 1, வெங்கார பற்பம் 2, மான்கொம்பு பற்பம் 3, ஆமையோட்டுப் பற்பம் 4, முத்துச்சிப்பி பற்பம் 5, கருடக்கல் பற்பம் 6, படிகாரப் பற்பம் 7, சங்கு பற்பம் 8.

இவைகளை மேற்குறிப்பிட்ட பங்குகளாகக் கல்வத்திலிட்டரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு 1 அல்லது 2 குன்றி நிறை நெய், வெண்ணெய் இவைகளில் தினம் இருவேளை உண்ண நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு நீரெரிச்சல், நீர்கட்டும், மார்நோய், க்ஷயம், ஈளை, மேக காங்கை முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—பிணிக் கேற்ற பெற்றியறிந்து ஒவ்வாத பதார்த்தங்களை நீக்கி உண்க.

## 246. வெள்வங்க பற்பம்

(1) ஆவார சமூலத்தை உலர்த்தி ஒன்றிரண்டாக இடித்துச் சுமார் 8 படி சித்தப்படுத்திக் காற்றில்லா யிடத்தில் 4 படி சூர்ணத்தைப் பரப்பி அதன்மீது 3 பலம் சுத்திசெய்த வெள்வங்கத்தைப் புளியிலை கனத்துக்குத் தகடடித்து ஈசலிறகுபோல் துண்டுகளாக நறுக்கி ஒன்றன்மீது ஒன்றுபடாமற் பரப்பி மிகுதியுள்ள ஆவாரவிலைச் சூரணத்தைக் கொட்டிப் பரப்பிக் கையாலழுத்தி அதன்மேல் இரண்டல்லது மூன்றுவறட்டியை வைத்துத் தீபிடுக. தீ நன்ருய்ப் பிடித்து இனிது வெந்த பதத்தில்

4 படி உமியைப் புடஞ்சூழக் கொட்டிவிடுக. மூன்றாவது நாள் நிசாங்க சீதளமானபின் புடத்தை அசைக்காமல் மேல்சாம்பலைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தள்ளிப் பொரிந்திருக்கும் வங்கத்தை எல்லாஞ் சேதமின்றிச் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்து மெல்லிய துணியா லரித்து ஏதேனும் வங்கச்சத்து இருப்பின் அதனை நீக்கி, பற்பத்தைக் கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ முதல் 1 பணவெடை தினம் இருவேளை நெய்யிலேனும் வெண்ணெயிலேனும் உட்கொள்ள வெள்ளை தீரும், நீற்றுப்போன இந்திரியம் கடினப்படும், போக சக்தி அதிகரிக்கும்.

(2) இங்ஙனமே பூவரசம் பட்டையை ஒன்றிரண்டாக இடித்துச் சூரணஞ்செய்ததில் வங்கத் தகட்டைவைத்துப் பற்பஞ் செய்தது முன் குறிப்பிட்ட அளவு உட்கொள்ள சீழ்கொள்ளாத அரையாப்புக்கட்டி இருந்தவிடந் தெரியாதபடி கரைந்துவிடும். இதனை உட்கொள்ளின் மேல் பற்றொன்றும் வேண்டுவதின்று. சீழ்பிடித்த அரையாப்புக் கட்டியாக இருப்பின் அது உடைந்த பின் கொடுக்க விரணம் விரைவில்ஆறும். இக்கூறப்பட்ட முறை யான் முடிந்த பற்பத்தை ஆரம்பமான பாரிசவாயு, கீல்வாதம், நவமூலம், இவைகளுக்கும் கொடுக்கலாம்.

(3) நெல்லியிலையை உலர்த்தி யிடித்த சூரணத்தில் வைத்துப் பற்பஞ்செய்த வங்கத்தை முற்கூறிய அளவு உட்கொள்ள கருமேகம், வெண்குட்டம், மேகவாயு, க்ஷயம், பார்வை மந்தம் முதலிய பிணிகள் நீங்கும்.

(4) நொச்சியிலை, பூ இவைகளை உலர்த்தியிடித்துச் சூரணஞ் செய்ததில் வைத்துப் பற்பஞ்செய்த வங்கம் கப சம்பந்தமான நாட்பட்ட இருமல் ரோகங்களைப் பரிகரிப்பதுடன் தாதுவிர்த்தியையும் பசிதீபனத்தையும் உண்டாக்கும்.

(5) பருத்திக் கொட்டையை இடித்து அதன் மத்தியில் வைத்துப் பற்பஞ்செய்த வங்கத்தை முன்குறித்த அளவிற் கொள்ள மேகவெட்டை, மதுமேகம், அதிதாகம் முதலியவை கள் குணமாகும்.

பத்தியம்:—வாயு, சீதளமுள்ள பதார்த்தங்களை நீக்கி இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:—இப் பற்பத்தைத் தேகக்கூறுக்கு இசைந்தபடி நெய், தேன், வெண்ணெய், இலேகியம் இவைகளி லேதேனு மொன்றி லனுபானஞ்செய்து கொடுத்தல் நலம்.

247. கருவங்க பற்பம்

சுத்திசெய்த இரண்டு பலம் கருவங்கத்தை உருக்கி, வெள்ளைப்பூ, வாடாமல்லி சமூலத்தைச் சிறுக நறுக்கிக் கொஞ்சங் கொஞ்சமாய்ப்போட்டுக் கரண்டியாற் றேய்த்துக்கொண்டிருக்க, 2-3 மணி நேரத்திற்குள் மஞ்சள் வண்ணமான பற்பமாகும். இதனைக் கல்வத்திலிட்டு மேற்குறித்த மூலிகைச் சாற்றில் 4 ஜாம மரைத்து விரல்போல்திரட்டிக் காயவைத்துக் கல்லாலங்கட்டை (குருவி ஆலங்கட்டை) தொடைப் பிரமாணங் கனமுள்ளதாக ஒருமுழ நீளமுள்ளதாகவுங் கொண்டுவந்து நெடுச ஜாண் ஆழ மிறங்க நடுவில் தமரிட்டுக் குடைந்து அதில் முன்னே சித்தப் படுத்திய கருவங்கத்தைச் செலுத்தித் துவாரத்திற்கு முன் குடைந்தெடுத்த சக்கைகளைப் போட்டடைத்து கோணியினால் 5 சீலைசெய்துலர்த்திக் குழிவெட்டிக் கனபுடம் 800 வறட்டியில் கட்டைக்குக் கீழும்மேலும் ஒவ்வொரு பெருங்கூடை புளியம் புறணி போட்டுப் புடம் வைத்து 5-6 நாட்சென்றபின் கொஞ்சங் கொஞ்சமாக மேல் சாம்பலைத் தள்ளிச் சீலையின் மத்தியி லிருக்கும் பற்பத்தை ஜாக்கிரதையாக எடுத்துச் சீசாவிற் பதனஞ் செய்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ முதல் 1 குன்றிநிறைவரை தினம் இருவேளை நெய்யிலேனும் வெண்ணெயிலேனும் 7 நாள் குழைத் துண்ணக் கருமேகம், மேகவிரணம், வெள்ளை முதலிய கடும்பிணிகள் தீரும். இதன் குணத்தை மருந்துவிட்டது முதல் சற்றேறக் குறைய 15 நாள் வரையில் பொறுமையுடனிருந்துபின் போதிய குணமில்லையெனின் மறுமுறையும், அதனினும் முற்றும் குணமில்லையாயின், மற்றொரு முறையும் உட்கொள்ளல் வேண்டும். வியாதி எத்துணைக் கடினமுடையதேனும் இம்மூன்று முறையில் குணமாகும் என்பது தேற்றம். குட்டத்திற்கும் மேகத் தடிப்பிற்கும் 6 முறையாக 10 நாள் இடை விட்டு விட்டுச் சாப்பிடுதல் வேண்டும். தவிர, இந்தப் பற்பத்தை அதிசாரபேதி பிரசவித்திற்குப் பின் வரும் கிராணி, க்ஷயம், சுவாசம், இருமல், நீராவிக்கல்,

எலிக்கடி முதலிய பிணிகட்குத் தேனிலேனும் நெய்யிலேனும் குழைத்துக் கொடுக்க.

பத்தியம்:—இச்சாபத்தியங் கொள்ளல் நலம்.

## 248. வேறு

ஐந்து பலம் கருவங்கத்தைப் பஞ்சகவ்வியத்தில் 7 முறை உருக்கிச் சாய்த்துப் பின்னர் அதனை இலேசாக ஈசலிறகுபோல் தகடடித்துச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கல்வத்திலிட்டு அதனோடு, பூநீர்சேர்த் தெரித்தலம்பி யிடித்த பேரண்டச் சூரணத்தை ஐந்துபலஞ் சேர்த்து ஊமத்தையிலைச் சாற்றினுல் நான்கு ஜாமமரைத்து வில்லைசெய்து காயவைத்து அகலிலடக்கிச் சீலைசெய்து 50 வறட்டியிற் புடமிடுக. மறுபடியும் பழச்சாற்றி லரைத்து முன்போல் புடமிடுக. இவ்வாறு இம்மூலிகைகளால் மாற்றி மாற்றி 30 புடமிடக் குணந்தரத்தக்க பற்பமாகும்.

பிரயோகம்:—வேளைக்குக்குன்றிநிறை தினமிருவேளை நெய்யிற் குழைத்துண்ண, சீழ்பிரமேகம், இரத்தப்பிரமேகம், புலால்மேகம், மதுமேகம் முதலிய கடும்பிணிகள் தீரும்.

பத்தியம்:—புளி, மோர், புகை, போகம் முதலியனவற்றை விலக்குக.

## 249. வேறு

சுத்திசெய்த கருவங்கத்தை ஒரு இருப்புக்கடாயி லுருக்கி ஆடாதோடை இலையையும் ஓமத்தையும் சமபாகமாக அரைத்துப் பிழிந்த இரசத்தைச் சிறிது சிறிதாகவிட்டு ஆடாதோடைக் கட்டையால் நான்கு ஜாமந் தேய்க்கப் பற்பமாகும். மீண்டு மதனைக் கல்வத்திலிட்டு ஆடாதோடைச் சாற்றில் நான்குஜாம மரைத்து, வில்லைசெய்து உலர்ந்தபின் அகலிலடக்கிச் சீலைசெய்து, இருபத்தைந்து வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் மூன்று புடமிட்டதை முற்கூறப்பட்ட ரோகங்கட்கும், மஹா வாத வித்வம்சனி என்னும் மாத்திரைக்கு உபயோகித்துக்கொள்க.

## 250. தாமிர பற்பம்

கலப்பில்லாத தாமிர தகட்டிற்குப் பஞ்சலவணத்தைப் பழச்சாற்றி லரைத்துப் பூசிப் பழுக்கக் காய்ச்சி நொச்சியிலைச் சாற்றில் தோய்க்கவும். இவ்வாறு ஏழுமுறையானபின், முன்

போலவே திரிசாரத்தைப் பழச்சாற்றி லரைத்துத் தகட்டிற்குப் பூசிப் பழுக்கக்காய்ச்சி நொச்சியிலைச் சாற்றில் ஏழுமுறை தோய்க்கவும் இவ்வாறு சுத்தியான ஒரு பலம் தாமரைத் தகட்டிற்கு அரைப்பலம் கந்தகம், அரைப்பலம் இரசம் இவ்விரண்டையுங் கல்வத்தி லிட்டு எருக்கம்பாலா லரைத்துச் சமகனதியாகப் பூசிக் காய்ந்தபின் அகலிலடக்கிச் சீலைசெய்து கஜபுடமிடப் பற்பமாகும். அந்தப் பற்பத்துடன் தேன், வெல்லம், நெய், குண்டுமணி, வெங்காரம் இவைகளை ஒவ்வொரு வராகனெடையாகக் கூட்டி யரைத்து, சிறு வில்லைகளாகத் தட்டி நிழலிற் காயவைத்து அகலிலடக்கிச் சீலைசெய்து முன்போல் கஜபுடமிடுக. இவ்வாறு மூன்று புடமிட நல்ல பற்பமாகும். தாமிரத்திலுண்டான எட்டுவித தோஷங்களு மற்றதாகவிருக்கும்.

பிரயோகம்:—அரிசி எடை நெய், தேன் இவைகளில் தினமிருவேளைகொள்ளச் சுரம், குட்டம், பாண்டு, சூலை, வாதரோகம், அக்கினிமந்தம் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—நெய், பால் முதலியவைகளை அதிகமாகச் சேர்த்துக் கொண்டு நல்ல ஆகார முட்கொள்க.

## 251. அப்பிரக பற்பம்

ஐந்துபலம் அப்பிரக நவநீதத்தை ஆலம்பாலில் ஊறவைத்து அப்பாலினாலேயே எட்டுஜாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து அகலில் அடக்கிச் சீலச்செய்து உலர்ந்தபின் 100-வறட்டியிற் புடமிடுக. மீண்டும் அகலினின் றெடுத்த மருந்தைப் பீர்க்கங்கொடி சமூலச்சாற்றில் நான்குஜாமம் அரைத்து சிறு வில்லைகளாய்ச் செய்து அகலில்பரப்பி மேல் அகல் மூடிச் சீலைசெய்து உலர்த்தி முன்போல் புடமிடவும். இங்ஙனம் 5-6-புடம் தளுக்கு மாறும்வரையில் போடுக.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ முதல் 1 குன்றி தக்க அனுபானங்களில் கொடுக்க மேகத்தா லுண்டானப் பலநீர் தோஷங்களையும் பரிகரிக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## சிந்தூர இலம்பகம்

### 252. எஃகு சிந்தூரம்

எட்டியிலையுடன் * வெள்ளாட்டு நீர் விட்டிடித்துப் பிழிந்த சாற்றில் பத்துப்பலம் எஃகு தகட்டைப் பழுக்கக் காய்ச்சி இருபத்தொருமுறை தோய்க்க அதர்களுண்டாகித் தகடு வெட்டை பெறும். இவ்வதர்களில் ஐந்து அல்லது ஏழுபலம் கல்வத்தி லிட்டு, எட்டியிலைச்சாற்றில் மூன்றுநாளரைத்து அரையணு அகல மூங் கனமுமுள்ள வில்லைகளாகச் செய்து காயவைத்து ஒரு அகலி லொன்றன்மீதொன்று படாமற் பரப்பி, மேலகல்மூடி ஏழு சீலைசெய்து காய்ந்தபின் எண்பது வறட்டியில் புடமிடுக. இங்ஙனம் இருபத்தொரு புடம்போடத் திவ்வியமான சிந்தூர மாகும்.

பிரயோகம்:—இச் சிந்தூரத்தில் அரைப்பண வெடை, தின மிருவேளை தேனிலேனும் நெய்யிலேனுங் குழைத்து நாற்பதுநா ளுண்ண நரை திரை மாறும்; நரம்புகள் வலுப்படும்; இரத்தஞ் சுத்தி கரிக்கப்படும்.

பத்தியம்:—தேக நிலைமைக்கேற்ற பெற்றி யறிந்து புளி சேர்த்துஞ் சேர்க்காமலும் பத்தியம் இருத்தல் வேண்டும்.

### 253. அயச்சிந்தூரம்

(காசத்திற்கு)

கலப்பில்லாத சுத்தமான அயப்பொடியை நல்லெண்ணெய் விட்டு வறுத்துச் சிகைக்காயை கொதிக்கவைத் தெடுத்த ஜலம் விட்டு, எண்ணெய்போக அலம்பி எடுத்து, மூன்றுபலம் பொடி யைக் கல்வத்திலிட்டுப் பழரசம், கோநீர், வெள்ளாட்டு நீர், கேசரி நீர் இவைகளைத் தனித்தனி விட்டு நான்கு ஜாமமரைத்து, காசளவில் வில்லைகள் செய்து காயவைத்து, அடி கனமான ஒரு

---

* வெள்ளாட்டுக்கும் பள்ளாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நன் குணர்ந்து, காட்டினில் மனம்போல் பல மூலிகைகளையும் புசித்துவரும் வெள்ளாட்டின் நீரே இப்பாகத்திற்குச் சிறந்ததாகும்.

மட் பாண்டத்தில் நான்குபடி ஆலம் பழுப்பை ஒன்றிரண்டாக இடித்துச் சூரணம் செய்து போட்டு, அதன்மீது முன் சித்தப் படுத்திய வில்லைகளைப் பரப்பி, முன்போலவே சூரணத்தைக் கொட்டிக் கையாலழுத்தி, அடுப்பின்மேல் வைத்து 4 ஜாமம் முத் தீயாக எரித்து, ஓரிரவு ஆறவைத்து, மறுநாள் முன்போல் சூரணத்தினிடையில் ஷை வில்லைகளைக் கீழ் மேலாகத் திருப்பி வைத்து, 4 ஜாமம் எரிக்கச் சிந்தூரமாகும்.

பிரயோகம்:—1 முதல் $1\frac{1}{2}$ குன்றியளவு தேக வன்மைக் கிசைந்தபடி தேனிலுண்ணச் சுவாசகாசம், ஈளை, இருமல் முதலி யன தீரும். நல்ல இரத்தம் உண்டாகித் தேகம் அழகுறும்.

பத்தியம்:—புளி நீக்கி ஆகாரங் கொள்ளல் நன்று.

## 254. திரிமூர்த்தி சிந்தூரம்

அயப்பொடி, காந்தம், மண்டூரம், இவை தம்மை வகைக்கு இரண்டு பலம் எடுத்துக் கல்வத்திலிட்டுப் புளியங்காய்ச் சாற்றில் 4 ஜாமமும், புளிப்பு மாதளம்பழச் சாற்றில் 4 ஜாமமும், பிரண் டைச் சாற்றில் 4 ஜாமமுமரைத்து 10 அல்லது 12 வில்லைகள் செய்துலர்த்தி அகலி லொன்றன்மீதொன்று படாமற் பரப்பி மேலகல் மூடிச் சீலைசெய்து காயவைத்துக் குழித்தோண்டி, உலர்ந்த ஆவாரம் இலையால் கஜபுடம்போடுக. 5-6 நாள் சென்று தீயாறினபின் புடத்தினின்று மருந்தை எடுக்க நல்ல சிந்தூர மாக இருக்கும்.

பிரயோகம்:—1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை நெய்யிலேனும், தேனிலேனு முட்கொள்ளப் பாண்டு, சோகை, காமாலை முதலிய பிணிகளும், இரத்தக் குறைபாட்டாலுண்டாகிய பிணிகள் பல வும் பரிகாரமாகும்,

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 255. அயச் சிந்தூரம்

(கருவுயிர்த்த மாதர்கட்குப் பால்சுரக்க)

2 பலம் சுத்திசெய்த நயப்புள்ள அயப்பொடியைக் கல் வத்திலிட்டு, வரப்பு நண்டை பிடித்துப் பிழிந்த சாற்றில் 4 ஜாம மரைத்து வில்லைசெய் துலாவைத்து, அகலிலடக்கிச் சீலை செய்து

காய்ந்தபின் 20 வறட்டியிற் புடமிடுக. இவ்வாறு புடத்திற்குப் புடம் 5 வறட்டி யதிகப்படுத்தி 5 புடமிட நல்ல சிந்தூரமாகும். பின்னர், குமரிப்பால் விட்டரைத்து முன்போல் 3 புடம்போடுக.

பிரயோகம்:—இதனில் குன்றி யெடை தினம் இருவேளை தேனிற் கொள்ளக் கருவுயிர்த்த மாதர்கட்கு 5 நாட்களுக்குள் அமிதமான பால் சுரக்கும்; தவிர சீதள சம்பந்தமான சகல ரோகங்களையும் பரிகரித்து, நல்ல இரத்தத்தை உண்டாக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 256 சுத்த மண்டூரச் சிந்தூரம்

இரண்டு பலம் மண்டூரத்தைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு கறுப்புப் பூனைச்காய்ஞ்சொறி சாற்றினால் 7 நாளரைத்து, வில்லை செய்து, காய்ந்தபின் அகலில் வைத்து, மேல் அகல்மூடிச் சீலை செய்து, காய்ந்தபின் 30 வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் 15 புடமிட நல்ல சிந்தூரமாகும்.

பிரயோகம்:—1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை தேனிலேனும் நெய்யிலேனும் உட்கொள்ளச் சுவாசகாசம், பாண்டு, முதலிய பிணிகளும், உதிரக்குறைப்பாட்டினா லுண்டான எல்லா நோய் களும் நீங்கும்.

பத்தியம்:—கூடியவரை புளியைக் குறைத்து இச்சாபத்தி யுங் கொள்ளல் வேண்டும்.

## 257. மஹா மண்டூரச் சிந்தூரம்

10 பலம் மண்டூரத்தைச் சுத்திகரித்து, ஓர் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச்சாறு, பொற்றிலைக் கையாந்தகரைச்சாறு, பிரமித் தண்டுசாறு, பசுமஞ்சள் சாறு, உத்தாமணிச்சாறு, குமரிச்சாறு, ஆலம்விழுது ரசம், கருவேலம்பட்டைக் கஷாயம், நாவற்பட் டைக்கஷாயம், புளியிலைச்சாறு, பழச்சாறு, கம்மார் வெற்றிலைச் சாறு, பிரமியிலைச்சாறு, பேய்க்கருப்பஞ்சாறு, நீர்முள்ளிச்சாறு, முதலிய ஒவ்வொரு சாற்றிலுந் தனித்தனி 4 ஜாமமரைத்துக் காலணா அகலமுங் கனமுமுள்ள வில்லைகளாகச் செய்துலர்த்தி, அகலிற் பரப்பி மேலகல் மூடி, ஏழுசீலை செய்துலர்ந்தபின், ஒவ் வொரு புடமும் 60 வறட்டியிற் போட்டுக் கொண்டுவரப் பதி

னைந்து புடத்தில் நல்ல சிந்தூரமாகும் இதனையே உபயோகிக்கலாம். இதனையே முன்போல் முறைப்படி அச்சாற்றினாலேயே அரைத்து 15 புடம் போடச் சாலச் சிறந்த சிந்தூரமாகும்.

பிரயோகம்:—1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை தினமிருவேளை தக்க அனுபானத்தோடுண்ண வீக்கரோகங்கள் அதிசயிக்கும்படி குணப்படும். எத்தகைய ஔடதத்தாலும் எதிர்பார்க்கக் கூடாத இரத்தவிருத்தி உண்டாகும்.

பத்தியம்:—புளியைநீக்கி இச்சாபத்தியங் கொள்க.

குறிப்பு:—இரத்தக் குறைப்பாட்டினு லுண்டான அசாத்திய வீக்கங்களுக்குப் பாலன்னமாகப் பத்தியம் வைத்து, இச்சிந்தூரத்தை 3 அல்லது 5 நாளுட்கொள்ள அதி தீவிரத்தில் குணமுண்டாகும்.

## 258. காந்த சிந்தூரம்

சுத்திகரித்த காந்தத்தைக் கல்வத்திலிட்டு வெள்ளெருக்கன் புஷ்பச்சாற்றில் 4 ஜாமமரைத்துக் காசு பிரமாணத்தில் வில்லைகள் செய்து உலரவைத்து, அகலில்பரப்பி மேலகல்மூடி 7 சீலைசெய்து நன்றாய்க் காய்ந்தபின் 25 வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் 3 புடம்போட நல்ல நிறமுள்ள சிந்தூரமாகும்.

பிரயோகம்:—1 முதல் 2 குன்றி எடை தேனிலுண்ண, நளிர் சுரம், கைகால்வீக்கம், பாண்டு முதலிய பிணிகள் தீரும்.

பத்தியம்:—புளி, புகை, மீன், உலர்ந்தமீன், எண்ணெய், போகம் இவைகள் ஆகா.

## 259. அப்பிரகச் சிந்தூரம்

ஐந்துபலம் கிருஷ்ண அப்பிரகத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு குடுவையில் 5 பலம் படிகாரத்தைப் பொடிசெய்து அரைப்பாகம் பரப்பி அதன்மீது மேற்கண்ட துண்டுகளை வைத்து மேலும் மிகுதிப்பட்ட படிகாரத்தைப் போட்டமுத்திக் குடுவையின் வாய்க்குச் சில்லுமூடிச் சீலைசெய்து, காய்ந்தபின் 50 வறட்டியிற் புடமிடுக. பின்னர், படிகாரச்சத்துயாவும் நீங்கும் பொருட்டுச் சுத்தஜலம்விட்டு நன்கு கரைத்து மேல் தெளிவை வடித்துக் கொண்டுவர இரண்டு மூன்று முறையில் சுத்தமாகும். இதனைக் கல்வத்திலிட்டுப் பூனைக்காய்ஞ்சொறி சாற்றி லிரண்டுநாள்

8 ஜாமமரைத்து அரையணு அகலமுங் கனமுமுள்ள வில்லைகள் செய்துலர்த்தி ஒன்றின்மீ தொன்று படாமல் அகலில் பரப்பி மேல் அகல்மூடி ஏழுசீலை செய்து இரவியிலுலர்த்தி 100 வறட்டியிற் புடமிடுக. இவ்வாறு 15 புடம் போட்டபின் பனிக்குடநீரா லேனும் அல்லது நாவற்பட்டை, மாம்பட்டை, ஒதியம்பட்டை வகைக்குப் பத்துபலம் இடித்தொரு மட்கடத்திற் போட்டு 3 படி ஜலம்விட்டு ஓரிரவு ஊறப்போட்டு மறுநாள் அதனைக் காலே யரைக்காலாகச் சுண்டக்காய்ச்சி வடித்த கஷாயத்தாலேனும் முன்போலரைத்து 5 புடமிடுக. அப்போது தளுக்கற்ற சிந்தூர மாகும்.

பிரயோகம்:—வேளைக்கு 1 முதல் 1½ குன்றிநிறை தினம் இருவேளை தகுந்த இலேகிய முதலியவற்றுடன் சேர்த்துண்டுவர மதுமேகம், அதனைப் புலப்படுத்தும் தாகம், நீர்மிகுதி, அழலை, பலஹீனம் முதலியவை குணப்படும்.

பத்தியம்:—பிணி தீரும்வரை இனிய பண்டங்களை மிகுதியாகச் சேர்க்காமல், கத்திரிப்பிஞ்சு, முருங்கப்பிஞ்சு, அவரைப் பிஞ்சு, அத்திப்பிஞ்சு, துவரம்பருப்பு, நெய், சீரகம், வெங்காயம், வெள்ளாட்டிறைச்சி, காடையிறைச்சி, கவுதாரியிறைச்சி முதலியவற்றைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். பெண்போகத்தை மனதிலும் நினைத்தல் ஒண்ணாது.

## 260. வேறு

வெள்ளாட்டு நீரையும், ஆவினீரையு மொருங்கு கலந்து, தேவையுள்ள கிருஷ்ண அப்பிரகத்தைக் கொல்லுலையிற் பழுக்கக் காய்ச்சித் தோய்த்துக் கல்லுரலிற் போட்டுக் கடப்பாரையாலிடித்து, சூரணமானபின் நெல்லுடன் கலந்து லேகவைத்து, வலவல என்ற ரெட்டித் துணியிலேனும் கம்பிளியிலேனும் வைத்துக் கட்டி, அன்னக்காடியில் நன்கு பிசைந்து மறுநாள் தெளிவை இறுத்து, அடியிலுறைந்திருக்கும் அப்பிரக நவநீதத்தை இரவியிலுலர்த்தி வைத்துக் கொள்க.

இவ்வாறு சித்தப்படுத்திய 10 பலம் அப்பிரக நவநீதத்தைக் கல்வத்திலிட்டு அதனை அரசம்பட்டை, மாம்பட்டை, நாவற் பட்டை இவைகளை வகைக்குப் பத்துப்பலம் இடித்து ஒரு

மட்கடத்திற் போட்டு இரண்டுபடி ஜலம்விட்டுத் தினம் காலை மாலை 3 நாள் பிசைந்து நான்காநாள் வடித்த சாற்றில் 5 நாட்களுக்குக் குறையாம லரைத்துக் காலணு அகலமுங் கனமுமுள்ள வில்லைகளாகச் செய்துலர்த்தி அகலில் பரப்பி மேலகல் மூடி ஏழு சீலைசெய்து காய்ந்தபின் 100 வறட்டியிற் புடமிடுக.

இங்ஙனம் மேற்கண்ட சாற்றில் ஒவ்வொரு தரமும் நான்கு ஜாமத்துக்குக் குறையாமலரைத்து 7 புடமிட்ட பின்னர் சிவப்புப்பூ அகத்தியிலைச் சாற்றிலரைத்து முன்போல் 7 புடமிடச் சிந்தூரம் அருணச் சிவப்பாகும்.

பிரயோகம்:—வேளைக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ குன்றிஎடை தினமிருவேளை அனுபான பேதங்களுடன் உண்டுவரத் தந்திவெள்ளை அதிமூத்திரம், மதுமேகம், புலால்மேகம், அஸ்திசுரம், கைகால் எரிவு, தேகவரட்சி முதலிவவைகள் நீங்கும். நாற்பதுநாள் உபயோகிக்கத் தாதுவிருத்தியும், நல்ல தேஜசும் உண்டாகும்.

பத்தியம்:—மேல் கூறப்பட்டதே.

## 261. இரச சிந்தூரம்

(1) இரசம், கந்தகம், பால்துத்தம் வகைக்கு இரண்டுபலம் கல்வத்தி லிட்டு மஞ்சட் பத்திராக்ஷ புஷ்ப இரசத்தால் இரண்டு ஜாமமரைத்துக் கல்வத்தோடு காயவைத்துச் சேதப்படாமல் சுரண்டி ஏழுசீலைசெய்த குப்பியில் போட்டு வாய்க்குப் பலப்பக்கல்லா லடைத்துச் சீலைசெய்து காய்ந்தபின் வாலுகா யந்திரத்தில் வைத்து முதலிரண்டுஜாமம் தீபம் கமலாக்கினியாகவும், மற்றிருஜாமங் கடாக்கினியாகவும் எரித்து, ஓரிரவு ஆறவிட்டெடுக்க மருந்து குப்பியின் வாய்ப்புறத்தி லடைத்துக் கொண்டிருக்கும். குப்பியை ஜாக்கிரதையாக உடைத்துள்ளிருக்கும் மருந்தைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைக்க நிகரற்ற சிந்தூர நிறமுடையதாக விருக்கும்.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ பணவெடை தினமிருவேளை மூன்றுநாள் கொடுக்க அசாத்தியமான சுரங்களும், வாதரோகங்களும் தீரும்.

பத்தியம்:—பிணியின் தன்மைக் கேற்றவாறு இருத்தல் வேண்டும்.

(2) இரசம் பலம் 1, கந்தகம் ... 1, பூரம் ... 1 — மூலிகை இரசம் விடாமல் தனியாக அரைத்துக் குப்பியி லிட்டு முன்போல் எரித்து முன்னளவே கொடுக்கப் பவுத்திரம், புற்று, கிரந்தி, குழி விரணம் முதலிய பிணிகள் தீரும்.

(3) இரசம் பலம் 1, கந்தகம் ... 1, பொரித்தவெங்காரம் 1 — கருந்துளசி இரசம்விட்ட ரைத்துக் குப்பியிலிட்டு முன் போல் எரித்து முன்னளவே கொடுக்க, சாதாரண சுரங்கள், சீதளத்தாலுண்டான இருமல், ஜலதோஷம் முதலிய பிணிகள் நீங்கும்.

(4) இரசம் பலம் 1, கந்தகம் ... 1, தாளகம் ... 1 — கண்டங்கத்திரி இரசம்விட் டரைத்துக்குப்பியிலிட்டு முன் போல் எரித்து அளவின்படி கொடுக்கச் சுவாசகாசம், கபவாதசுரம், மேகவாயு முதலிய பிணி பரிகரிக்கப்படும்.

(5) இரசம் பலம் 1, கந்தகம் ... 1, சாரம் ... 1 — மூலிகை இரசம் விடாமல் தனியாகவே அரைத்துக் குப் பியிலிட்டெரித்து முன்னள வே கொடுக்கச் சுரம், சுரக்கட்டி, அதனாலுண்டாகும் வீக்கங்கள் குணப்படும்.

குறிப்பு:—இப்பாகங்களில் செந்தணலின்மீது ஒரு புதுமண் ஓட்டைவைத்து, அதனில் கந்தகம்போட்டு உருகும் சமயத்தில் இரசத்தைவிட்டுக் கிண்டி, இரசம் மடிந்து கறுப்பான பதத்தில், ஆறவைத்துப் பக்குவமாகச் சுரண்டிக் கல்வத்திலிட்டு மற்றச் சரக் கைச் சேர்த்தரைப்பதுதான் நல்ல வழி.

## 262. காளமேக நாராயண சிந்தூரம்

வாலைரசம் வராகனெடை 30, இலிங்கம் வராகனெடை 15, அரிதாரம் வராகனெடை 10, கந்தகம் வராகனெடை 12, மனோ சிலை வராகனெடை 4.

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து, தீ நீர் இலம்பகத்தில் கூறிய சங்கத் திராவகத்தால் நான்கு ஜாமமரைத்

துலாவைத்து ஏழு சீலை செய்து, காயவைத்த குப்பியில் போட்டு ஒருசட்டியில் நான்குவிரற்கடை பொடிமணலைக்கொட்டி, அதன் மீது குப்பியை வைத்து அதன்வாய்க்கு ஒரு புது ஓட்டை மூடி, அதன்கழுத்துவரை மணலைக்கொட்டி, சிந்தூர கிருதங்களுக்காக இந்நூலில் கூறப்பட்ட அடுப்பில் வைத்துத் தீபாக்கினியாக ஒரு ஜாமமும் கமலாக்கினியாக இருஜாமமு மெரித்துப் புகைகண்டவுடன் குப்பியின் வாய் ஓட்டை எடுத்துவிட்டுச் சலாகையாற் கிண்டிக் கொடுக்க. இங்ஙனம் ஒன்றரைநாழிகைக் கொருமுறை கிண்டிக் கொடுத்து வெவ்வேறு புதுமண் ஓட்டைமூடிக் காடாக்கினியாக எரித்துவர, 8 ஜாமத்திற்குள் குப்பியின் மேல்மூடிய ஓட்டை முகரக் கந்தகமணமில்லா திருப்பினும் மேல் ஓட்டில் வெண்மை படிந்திருப்பினும் சலாகை போட்டுக் கிண்டும்போது குப்பியின் அடி கரகரத்திருப்பினும் மருந்து முடிந்ததாக உணர்ந்து, உடனே தீயைநிறுத்தி அடுப்பின் அனலிலேயே ஆறும்படி விட்டுவிடுக. பிறகு குப்பியை உடைத்து இரச சிந்தூரத்தில் பக்குவப் படுத்தியவண்ணம் செய்க.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ குன்றி எடை தினமிருவேளை தூதுளைக் கிருதத்திலேனும் அல்லது வியாக்கிரி கிருதத்திலேனும் 15 நாட்கொள்ளச் சிலேத்தும ரோகம் இருபதும் தீரும். * பஞ்சதீபாக்கினி இலேகியத்தி லூட் கொள்ள குன்ம மெட்டும் தீரும். தேனில் மண்டலங்கொள்ள மேகம் இருபத்தொன்றும் தீரும் தவிர, பிணிக்கு இசைந்தவாறு அநுபானங்களி லுண்ண எத்தகைய கடின வாத ரோகங்களுந் நீங்கும்.

பத்தியம்:—பிணியின் வன்மை, மென்மைக்கு ஏற்ற வெற்றியும் பிணியாளனது மெய்நிலையைச்சேர்ந்த பெற்றியு மறிந்து பத்தியங் கொடல் வேண்டும்.

## 263. பஞ்சாக்கினிச் சிந்தூரம்

சுத்தமான அயப்பொடி பலம் 1, இரசம் பலம் 1, வீரம் பலம் $\frac{1}{2}$, கந்தகம் பலம் $\frac{1}{2}$, நவாச்சாரம் பலம் $\frac{1}{2}$.

இக்கூறப்பட்ட ஐந்து சரக்குகளில் முதலில் இரச சிந்தூர முறையிற் கூறியபடி கந்தகத்தோடு இரசத்தைத் தொங்கித்துப் பின்னர் மற்றவைகளோடு கூட்டிப் பொடித்துக் குமரிச் சாற்றில் நான்கு ஜாம மரைத்து, உலர்வைத்துக் குப்பியிலிட்டு வாய்க்குப்

* சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், ஓமம்.

பலப்பக்கல் அடைத்து முன் இரசசிந்தூரத்தை வாலுகா யந்திரத்தி லெரித்தவண்ண மெரித்து சிந்தூரத்தைப்பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ முதல் 1 குன்றிநிறை தினமிரு முறை பஞ்சதீபாக்கினி இலேகியத்துட னுட்கொள்ள வாயு, மார் நோய், சூதகவாயு முதலிய பிணிகள் நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியமாக ஆகாரங்கொள்ளுவதில் நெய் அதிகமாகச் சேர்த்துண்ணல் வேண்டும், இரவு படுக்கைக்குப் போம்போது அவசியம் பால் அருந்தல் வேண்டும்.

## 264. சுவர்ன புஷ்பரச சிந்தூரம்

வாலை இரசம் பலம் 1, கந்தகம் பலம் 1, வெள்வங்கம் பலம் 1, சாரம் பலம் 1.

முன்னர் வெள்வங்கத்தை உருக்கி அதனுடன் இரசத்தைத் தொந்தித்து மற்றவைகளோடு கல்வத்திலிட்டு நான்குஜாமம் நன்றாக அரைத்து ஏழு சீலைசெய்த குப்பியிலிட்டு, வாயைப் பலப்பக் கல்லாலடைத்துச் சீலைசெய்து, இரச சிந்தூரமுறையில் வாலுகா யந்திரத்தில் வைத்தெரிக்கக்கூறிய விதிப்படி நான்குஜாமமெரித்துச் சாங்கசீதளமானபின், குப்பியை உடைத்துப் பார்க்கக் குப்பியின் அடிப்பாகத்தில் தங்கசாயல் பொருந்திப் பதங்கத்திற் கொப்பான சிந்தூரமாகும். இதனைக்கல்வத்திலிட்டு கலியாணப் பூசனிக்காய் சாற்றால் ஒருசாமம் அரைத்து இரவியில் உலர்த்திப் பின்னர்பொடித்துக் குப்பிலிடுக. இன்னும் மேற்புறத்தில் மாதளம்பூ நிறத்தை ஒத்த சிந்தூரமு முண்டாகும். இதனை அரைத்து வேறு புட்டிகளில் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—தங்கநிறமுள்ள சிந்தூரத்தில் 1 அல்லது $1\frac{1}{2}$ குன்றி நிறை நெய், தேன் முதலியவற்றுள் தின மிருவேளை மூன்று நாளுட்கொள்ள நீர் எரிச்சலையும் உஷ்ண இருமலையும் பரிகரிக்கும். $\frac{1}{2}$ அல்ல ஒருமண்டலம் கொள்ள குட்டம், மேகரணம், கருமேகம் செம்மேகம் புண்புரைகள் குணமாகும் மற்றொரு சிந்தூரத்தைக் கந்தபுஷ்பி இலேகியம், ஆவாரசமூல கிருதம் முதலியவைகளில் கொடுக்க மதுமேகம், மேகசுரம் முதலிவை தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

இப்பாகத்திலேயே முற்கூறப்பட்ட நான்கு சரக்குகளுடன் வெள்ளைப்பாஷாணத்தையும் ஒரு பலமாகக் கூட்டி எரித்துச் சிந்

தூரம் செய்வதுமுண்டு. இம்முறைப்படி முடிந்த சிந்தூரத்தால் மேகவிரணங்கள், இலிங்கப்புற்று, யோனிப்புற்று, கன்னப் புற்று, கண்டமாலை, அரையாப்பு, மூலம், பௌத்திரம் முதலிய கடும்பிணிகள் நீங்கும்.

குறிப்பு:—இப்பாகத்தில் வெள்வங்கத்தை ஒரு ஓட்டிலுருக்கித் தீயினின்று மெடுத்து, அது ஆறி உறையும் பதம் வருமுன் இரசத்தைக் கொடுத்துக் கலக்கவேண்டும். ஏனெனின் அதி உஷ்ணமுள்ள ஓட்டில் இரசம்பட்டால் வெடிக்கும். சர்வ ஜாக்கிரதையோடு செய்தல் வேண்டும்.

## 265. நாகரச சிந்தூரம்

சுத்திசெய்த 12 தோலா நாகத்தை உருக்கி அதனோடு 6 தோலா வாலை ரசத்தைத் தொந்தித்து 3 தோலா கந்தகத்துடன் கல்வத்திலிட்டுக் குமரிப்பாலிலேனுஞ் சாற்றிலேனும் நான்கு ஜாம மரைத்துலர்த்திப் பொடிசெய்து, ஏழு சீலைசெய்த குப்பியி லடைத்து பாக இலம்பகத்தில் கூறப்பட்ட இரண்டாவது வாலுக யந்திரத்தில் வைத்தெரித் தெடுக்க நல்ல சிந்தூரமாகும்.

பிரயோகம்:—இதனை வேளைக்கு $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ குன்றிநிறை தின மிருவேளை தேகக் கூறுக்குத் தக்கவாறு நெய்யிலேனும் தேனிலேனும் 20 நாட்கள் கொள்ள மூலம், பௌத்திரம், மேகப் படை, ஆரம்பகுட்டம் முதலியன தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 266. அயவீர சிந்தூரம்

சுத்திசெய்த அயப்பொடி பலம் 5, வாலைரசம் பலம் 5, வீரம் பலம் 5, நவாச்சாரம் பலம் 5.

இவைதம்மைக் கல்வத்திலிட்டுத் தினமிரண்டு ஜாமத்திற்குக் குறையாமல் மூன்று வாரம் வரை யரைத்து ஒரு அகன்ற மட்சட்டியை அடுப்பின்மீது வைத்து, அதில் மருந்தைப் போட்டுச் சிறு தீயாக எரித்து வறுக்க, மேகம்போன்ற புகை எழும். இப் புகை மேலே படாவண்ணம் காற்றின் போக்கைக் கவனித்துச் செய்தல் நன்று. ஏனெனின், அப்புகை நெடியுடைமையின் கண்களிலும் சுவாச வாயில்களிலும் செல்லக்கூடாது. இங்ஙனம்

கறுப்புப் புகையடங்கி, வெண்புகை எழுந்து, மாதளம்பூ நிறம் வரும் செவ்வியில், வேறொரு மட்பாண்டத்தில் மாற்றிச் சிந்தூரம் சாங்கசீதள மானபின் கல்வத்திலிட் டரைத்துக் குப்பியி லிடுக.

பிரயோகம்:—வேளைக்கு 2 முதல் 4 அரிசி எடை தினம் இருவேளை தேன், நெய் முதலியவற்றிற் கொடுக்கப் பக்ஷவாதம், ஈளை, சுரம், விஷப்பாண்டு, மேக வாயுவினாலுண்டான பிடிப்பு, வலி முதலியன தீரும்.

பத்தியம்:—பிணிக்கேற்றபடி புளியைச் சேர்த்தும், நீக்கியும் இச்சாபத்தியங் கோடல் நலம்.

குறிப்பு:—இம்மருந்து செய்யும்போது வெண்புகை அதிகமாகச் செல்லவிடின் நிறம் மங்கலடையும். தவிர, குணமும் பேதப்படும். ஆகலின் பண்டிதர்கள் முன்னோக்கமா யிருந்து கறுப்புப் புகை முற்றும் நீங்கி, வெண்புகை எழுஞ் செவ்வியில் வேறு பாண்டத்திலிட்டு ஆறவைக்கவேண்டும்.

## 267. சப்தரச சிந்தூரம்.

வீரம் பலம் 1, பூரம் பலம் 1, இலிங்கம் பலம் 1, தாளகம் பலம் 1, கந்தகம் பலம் 1, இரசம் பலம் 1, அயப்பொடி பலம் 1.

இவையிற்றைக் கல்வத்திலிட்டு வெள்ளைக் காட்டாமணக் குப்பாலில் 4 ஜாமமரைத்துக் காசளவு வில்லைகளாகச் செய்துலர்த்தி, அகலில் பரப்பி, மேலகல் மூடிச் சீலை வலுவாகச் செய்து காயவைத்துக் குழிதோண்டி, ஒரு மூட்டை உலர்ந்த ஆவாரம் இலையாற் புடமிடுக. இதுசாங்கசீதள மானபின் வில்லைகளைப் பார்க்க நல்ல சிந்தூரமாயிருக்கும்.

பிரயோகம்:—இச் சிந்தூரத்தில் ½ முதல் 1 குன்றியெடை தினமிருவேளை நெய், தேன் முதலியவைகளில் கொடுக்கப் பித்தப்பாண்டு, பாரிசவாயு, பக்ஷவாதம், ஜன்னி, சூலை, சுரம், குன்மம் முதலிய பிணிகள் தீரும்.

பத்தியம்:—பிணிக்கிசைந்தபடி பத்தியங்கோடல்வேண்டும்.

## 268. பஞ்ச ரத்ந சிந்தூரம்.

அயம் தோலா 1, காந்தம் தோலா 1, தாளகம் தோலா 1, இரசம் தோலா 1, தங்கம் வராகனெடை 1.

இக்கூறப்பட்ட ஐந்து சரக்குகளில் முதலில் இரசத்துடன் தங்கத்தைச் சேர்த்தரைத்து நன்கு கலந்தபின் மற்றைச் சரக்குகளையுஞ் சேர்த்துக் குமரிச் சாற்றில் நான்கு ஜாம மரைத்து, ஒரே வில்லையாகத் தட்டிக் காயவைத்து, அகலிடலக்கிச் சீலை செய்து காய்ந்தபின் இருபத்தைந்து வறட்டியிற் புடம் வைக்க. மறுவலும் மருந்தைக் கல்வத்திலிட்டு மேனிச்சாற்றி லரைத்து முன்போல் புடமிடுக. இங்ஙனமே இம்மருந்தை முற்கூறப்பட்ட ஒவ்வொரு மூலிகையினாலும் மாற்றி மாற்றி ஐந்து புடமிட நல்ல சிந்தூர மாகும்.

பிரயோகம்:—வேளைக்கு ½ அல்லது 1 குன்றி எடை நெய்யிலேனும் தேனிலேனும் கொடுக்க க்ஷயம், சுவாசகாசம் முதலியவற்றையும் அதனாலுண்டான துர்ப்பலத்தையுங் குணப்படுத்தும். க்ஷயரோகத்தா லுண்டான சுரத்தையும் இது பரிகரிக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 269. தங்க சிந்தூரம்

தங்கரேக்கு வராகனெடை 2, வாலைரசம் வராகனெடை 2. இவை யிரண்டையுங் கல்வத்திலிட்டு ஒருங்கு கலக்கும்வரை அரைத்துப் பின்னர் மஞ்சட்பூ மலரும் வராமுள்ளி புஷ்பத்தின் சாற்றில் 4 ஜாமமரைத்து வில்லைசெய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி 7 சீலைசெய்து காய்ந்தபின் 20 வறட்டியிற் புடமிடுக. இங்ஙன மிரண்டு மூன்றுமுறை அரைத்துப் புடமிடச் சிந்தூர மாகும்.

பிரயோகம்:—இதனில் அரிசி எடை தாதுபுஷ்டிக் குரிய ஏதேனுமொரு இலேகியத்தில் வைத்துத் தினமிருவேளை 20 நாள் உட்கொள்ள இந்திரியமிறுகி நல்ல அழகுண்டாகும். அதுவேயுமன்றிப் பிணிக் கேற்றவாறு அநுபானங்களில் ஒரு மண்டலங் கொள்ள மதுமேகம், க்ஷயம் முதலிய கொடும் பிணிகள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 270. வேறு

தங்கரேக்கு வராகனெடை 5, வாலைரசம் வராகனெடை 5 இவ்விரண்டினையும் ஒற்றுமையுறக் கல்வத்திலிட்டரைத்துப் பின்னர் வெள்ளைக் காக்கட்டான் வேர்ப்பட்டைச் சாற்றில் 4 ஜாம

மரைத்து வில்லைசெய்து காயவைத்து அசலிலிட்டு 7 சீலைசெய்து நன்கு காய்ந்தபின் 25 வறட்டியிற் புடமிடுக. இங்ஙன மிரண்டு புடமிடச் சிந்தூர மாகும். இது தங்க சாயலாக இருப்பின் இரண்டொரு புடமிடவேண்டுவது ஆவசியகம்.

பிரயோகம்:—காலை மாலை உழுந்து பிரமாணம் பிணிக்கிசைந்தபடி அநுபானங்களில் கொள்ளப் பிரமேகம், அக்கினிமந்தம், நீரிழிவு, மேகம், காசம், க்ஷயம் முதலியவை நீங்குதலுடன் அதிக தேஜஸையும் தாதுவிர்த்தியையு முண்டாக்கும்.

பத்தியம்:—மருந்துண்ணும்போது ஸ்த்ரீ சங்கமத்தை நீக்கி இச்சா பத்திய மாகக் கொள்ளல் வேண்டும்.

## 271. வேறு

இரண்டு வராகனெடை தங்கரேக்கைக் கல்வத்திலிட்டு, * மக்காதிருநீற்றுப் பத்திரி முப்பத்திரண்டு இலையைக்கூட்டி இரண்டுமணிநேரம் அரைக்க மெழுகுபோலாகும். அவ்வமயம் வெள்ளைக் காக்கட்டான் இலை ரசத்தைவிட்டு நான்கு ஜாமம் நன்றாயரைத்து வில்லைசெய்து காய்ந்த பின் பொருத்தமான அகலில் வைத்து மேலகல்மூடி ஏழு சீலைசெய்து இருபத்தைந்து வறட்டியிற் புடமிடுக. இப்புடத்திலேயே சிந்தூர நிறத்தைக் காணபினுமதைக் கல்வத்திலிட்டுக் காக்கட்டானிலைச் சாற்றி லரைத்து வில்லைசெய்து முன்போலவே ஐந்து புடமிடத் திவ்வியமான சிந்தூரமாகும்.

பிரயோகம் }
பத்தியம் } முற்கூறப்பட்டதே.

## 272. வேறு

நெற்கதிர் பால் பிடிக்கும் சமயத்திலிரண்டு மரக்காலளவு கதிர்களைக் கொண்டுவந்து ஒரு பொருத்தமான மட்சாலிற் போட்டு, வாய்க்கு ஓடு மூடிச் சீலைசெய்து, அடிப்புறத்தில் 4, 5 சிறுதுவாரங்களமைத்து, ஈரமில்லாதவிடத்தில் குழிதோண்டிச்

* திருநீற்றுப் பத்திரியை இந்துஸ்தானியில் சப்ஜாவிலையென்று வழங்குவர். மக்காதேசத்து திருநீற்றுப்பத்திரி இத்தேசத்துத் திருநீற்றுப் பத்திரியினும் அதிக மணமுடையது; இலையின் விளிம்பு சின்னியிலை போலிருக்கும்.

சாலினை வைத்து வாய்ப்புறம் பூமி மட்டத்திற்குச் சரியாக விருக்கவும், வெயில்படவும் ஏற்றபடி நன்கு கவனித்துப் பின்னர் அக்குழியின் நடுவில் சிறு குழியொன்றுண்டாக்கி அதில் காலேயனரைக்காற்படி கொள்ளத்தக்க ஒரு கோப்பையாவது கண்ணாடி தம்ளரையாவது பதியவைத்து, அதன்மீது முன் சித்தஞ்செய்த சாலை வைக்கும்போது துவாரங்கள் கோப்பையின் வரம்புக்குள்ளடங்கச்செய்து, பொருத்துவாய்க்கு மண்சீலைசெய்து, சிறிது சிறிதாக மண்ணைத்தள்ளிக் கையாலழுத்திக் குழியை நிறைத்துவிடுக. இவ்வாறு 20 நாள் சமாதியிலிருந்தபின் 21 ஆவது நாள் வெகு ஜாக்கிரதையாகச் சால் அசையாமல் மண்ணைக் கொஞ்சங் கொஞ்சமாக வெளிப்படுத்திக் கோப்பைக்கும் சாலுக்கும் சீலை செய்ததைப் பக்குவமாக வெளிமண் கோப்பையில் வீழாவண்ணமெடுத்து, அதில் நிரம்பியிருக்கும் ஜயநீரை வடித்துக் கல்கார்க்குச் சீசாவில் பத்திரப் படுத்துக.

பின்னர், இரண்டு அல்லது மூன்று வராகனெடை தங்க ரேக்கைக் கல்வத்திலிட்டு முன்முடித்த ஜெயநீரால் இரண்டுமணி நேரம் கையோயாமலரைத்து வில்லைசெய்து காயவைத்து அகலிலிட்டு ஏழு சீலைசெய்து காய்ந்தபின் பதினைந்து வறட்டியிற் புடமிடுக. இவ்வாறு இரண்டு மூன்று புடமிட நல்ல சிந்தூரமாகும். வெள்ளி அரப்பொடியையும் இதைப்போலவே செய்துகொள்ளலாம்.

பிரயோகம்:—வேளைக்கு 1 முதல் $1\frac{1}{2}$ அரிசியெடை நெய், தேன் இவைகளிலனுபானஞ் செய்து உட்கொள்ள மேகரோகங்கள் பரிகாரப்பட்டுத் தாது விருத்தி உண்டாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 273. வெங்கலநிமிளை சிந்தூரம்

ஒரு பலம் வெங்கலநிமிளையைக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து, ஆகாயத்தாமரைச் சாற்றில் தினம் மூன்றுஜாமம் வீத மூன்றுநாளரைத்து 10 வில்லைகளாகச்செய்து காயவைத்து, ஒரு அகலில் பரப்பி மேலகல்மூடி, இரண்டு சீலைசெய்து, காய்ந்தபின் 15 வறட்டியிற் புடமிடுக. புடமானது சாங்கசீதளமானபின் மீண்டு மகலிலிட்ட வில்லைகளைக் கீழ்மேலாகப் புரட்டி

வைத்து, இரண்டொரு சீலைசெய்து முன்போல் புடமிடுக. இங்ஙனம் மறுபடியும் வில்லைகளைத் திருப்பிவைத்துப் புடமிட நல்ல சிந்தூரமாகும். ஒருகால் நல்ல நிறமில்லாதிருப்பின் பின்னொருமுறை மேற்கூறிய மூலிகைச் சாற்றினாலேயே அரைத்து வில்லைசெய்து புடமிட நன்றாகவிருக்கும். இதன்நிறம் பெரும்பான்மையாக அன்னபேதி சிந்தூரத்திற்குச் சமமாக விருக்க வேண்டும்.

பிரயோகம்:—விரேசனமாகும் பொருட்டு ஏதேனுமொரு அவிழ்தத்தை உட்கொண்டு, மறுநாட்டொடங்கி, இச்சிந்தூரத்தில் வேளைக்கு 1 அல்லது 2 குன்றி எடை தினமிருவேளை தேனிலனுபானஞ் செய்துண்ண 7 நாட்களில் பக்கசூலை, பித்தவாயு முதலியன குணப்படும். பித்தசுரங்கட்கு இதனை உண்டு பின்னர் ஏதேனு மொரு பித்தகஷாய முட்கொள்ள 3 நாட்களில் நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

### 274. நவமணிச் சிந்தூரம்

வீரம், பூரம், இலிங்கம், கந்தகம், படிகாரம், வெங்காரம், நவாச்சாரம், வெடியுப்பு வகைக்கு $1\frac{1}{2}$ தோலா விகிதம் கல்வத்திலிட்டு 2 ஜாமம் பழச்சாற்றி லரைத்துக் குழம்பு பதத்திலேயே வழித்து, ஒரு சிறு குடுவையில் விட்டு, அதில் 12 தோலா சுத்தமான புதிதாக அராவிய அயப்பொடியைப் போட்டுக் கலக்கி, வாய்க்கு ஓடுமூடிச் சீலைசெய்து காய்ந்தபின் 50 வறட்டியிற் படமிடுக.

பின்னர், குடுவையிலிருக்கும் மருந்தைச் சிதறாமலெடுத்துக் கல்வத்திலிட்டுப் பழரசத்தால் 4 ஜாமமரைத்து 16 வில்லைகளாகச் செய்துலர்த்தி ஒரு அகலில் பரப்பி மேலகல்மூடிச் சீலைசெய்து காய்ந்தபின் 30 வறட்டியிற் புடமிடுக. இவ்வாறு 5 புடமிடச் சிந்தூரமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு $\frac{1}{2}$ முதல் 1 குன்றிநிறை தேகவன்மைக்குத் தக்கவாறு தினமொரு வேளை தேனிலுண்டு, பின்னர் சீரகக் கஷாய முட்கொண்டுவர 7 நாளில் குதகக்கட்டி, பெருவயிறு இவைகள் குணப்படும். அன்றியும் குதகர்சிக்கல் அவைகள் 3 வேளையில் தீரும்.

பத்தியம்:—பாலன்ன முன்னால் சாலச்சிறந்தது அது கூடாத வர் புளிநீக்கி இச்சாபத்தியமாக இருத்தல்வேண்டும்.

## 275. தங்கச் சிந்தூரம்.

கந்தகம் வராகனெடை 16, பூநாகம் வராகனெடை 8, வெங்காரம் வராகனெடை 8.

இக்கூறிய வற்றைக் கல்வத்திலிட்டு உமிழ்நீரும், கோவை யிலைச்சாறுமாகவிட்டு 16 ஜாமமரைத்துக் கல்வத்தோடு காய வைத்துப் பொடிசெய்து, 3 வராகனெடை தங்கத்தை மூசையில் வைத்துருக்கிக் கண்விட்டாடும் போதெல்லாம் ஒவ்வொரு சிட்டிகைக்கிராசம் கொடுத்துக் கொண்டுவருக. மூசைபழுதுபடும் சமயமாக விருப்பின் தங்கத்தை ஆறவிட்டு மறுமூசையிற்போட்டு மீண்டு முருக்கிக் கண்விடும்போது கிராசம் கொடுக்க. இவ்வாறு மருந்தெல்லாம் முடிவுபெற்றபின் தங்கத்தைக் கல்வத்திலிட்டுச் சிறு செருப்படை அல்லது உப்பளாங்கொடிச் சாற்றில் 4 ஜாமமரைத்து வில்லைசெய்து காய்ந்தபின் அகலில்வைத்து மேலகல்மூடிச் சீலைசெய்து 20 வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் 3 புடமிட நல்ல சிந்தூரமாகும்.

பிரயோகம்:—வேளைக்கு அரிசி எடை தின மிருவேளை தாது விருத்திக் கேற்றமான ஏதேனுமொரு இலேகியத்துட னுட் கொள்ள 7, 15 தினங்களில் அபரிமிதமான போகசக்தியை உண்டாக்கும்; எனினும் 20 நாட்களுக் குறையாமல் சாப்பிட வேண்டும்.

பத்தியம்:—பூரணகுணம் ஏற்படும்வரை ஸ்த்ரீபோகம் இன்றி இச்சா பத்தியமாக நல்ல ஆகாரங்களைப் புசித்துவரல் வேண்டும்

## 276. கருவங்கச் சிந்தூரம்.

ஒரு அடிகனத்த சட்டியில் 5 பலம் சுத்திசெய்த கருவங்கத்தை உருக்கி எருக்கிலைப்பழுப்பைச் சிறுக அரிந்து, கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு, எருக்கங்கட்டையால் 3 ஜாமங் கடைந்து அதில் வீரம், பூரம், கந்தகம் வகைக்கு $1\frac{1}{4}$ பலம் பொடிசெய்து போட்டு, முன்னரே அடிசட்டிக்குச் சரிபார்த்து வைத்திருந்த மற்றொரு சட்டியைக் கவிழ்த்துப் புகைவெளிப்படாமல் பொருத்துவாய்க்கு ஈரத்துணியைச்சுற்றி $\frac{1}{4}$ மணிநேரம்

எரித்து மேல்சட்டியை நீக்கி மறுபடியும் ஒரு ஜாம முன்போல் கட்டையால் தேய்த்து ஒருநாளெல்லாம் ஆறவிட்டு மறுநாள் அச்சிந்தூரத்தைக் கல்வத்திலிட்டுப் பொற்றிலைக் கையாந்த கரைச்சாற்றில் 4 ஜாம மரைத்துக் காலணு அகலமுங் கனமுமுள்ள வில்லைகளாகச் செய்துலர்த்தி அகலிற்பரப்பி, மேலகல் மூடிச் சீலைசெய்து காய்ந்தபின் 25 வறட்டியிற் புடமிடுக. இவ்வாறே மற்றொரு புடமிட்டு, மூன்றுமுறை பழச்சாற்றிலரைத்துப் புடமிட்டுக் கொள்ளக் குற்றமற்ற சிந்தூரமாகும்.

பிரயோகம்:—அரிசி எடை தினமிருவேளை 5, 7 நாள், கொடுக்க மேகப்படை, நீரிழிவு, மதுமேகம், கருமேகம், புலால்மேகம், மேகவிரணம் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 277. தங்கஅயச் சிந்தூரம்.

5 பலம் நயப்புள்ள அயப் பொடியைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு, அதனோடு அரைப்பலம் கந்தகமும் $\frac{1}{2}$ பலம் இரசமுஞ்சேர்த்து * நாகப்பழக்காடிவிட்டு 8 ஜாமமரைத்து, மெழுகு பதத்தில் காலணு அகலமுங் கனமுமுள்ள வில்லைகளாகச் செய்துலர்த்தி அகலில் பரப்பி மேலகல்மூடிச் சீலைசெய்து காய்ந்தபின் 30, 35 வறட்டியிற் புடமிடுக. இங்ஙனமே ஒவ்வொரு புடத்திற்கும் முன்சேர்த்ததுபோல் இரசமுங் கந்தகமுஞ் சேர்த்து நாகப்பழக் காடியா லரைத்து 10 புடமிட நல்ல சிந்தூரமாகும் இதனைத் தனியாகவேனும் அல்லது சிந்தூரஎடைக்குச் சமமான பூநாகஞ் சேர்த்தேனுமரைத்து முன்போ லொருபுடம் போட்டுப் பின்னர் சிந்தூர எடையில் 10-க்கு ஒன்றாக தங்கரேக்கையும் இரசத்தையுங் கந்தகத்தையுஞ் சேர்த்து நாகப்பழக் காடியாலரைத்துப் புடமிடுக. இவ்வாறு இரசம், கந்தகஞ்சேர்த்தரைத்து 3 புடமிட நல்ல சிந்தூரமாகும்.

பிரயோகம்:—தினம் காலை மாலை, வேளைக்கு அரிசிஎடை ஏதேனும் தாதுவிருத்திக் குரிய இலேகியத்தி லனுபானஞ்

---

* நாகப்பழத்தைத் தண்ணீர் சேர்க்காமல் பிசைந்து பிழிந்து இரசம் வடித்துக் கொள்க. இது நாட்பட்டிருப்பினும் கெடாது. புளிப்புக் குணமும் மிக்கிருக்குமென அறிக.

செய்துட்கொள்ள விசேஷ தாதுவிருத்தி உண்டாகும். நெய் தேன் இவைகளில் ¼, ½ குன்றியளவு உண்ண பாண்டு, காமாலை, ஜ்வரம், அக்கினிமந்தம், பலஹீன முதலிய பிணிகள் அறவே நீங்கும். இச்சிந்தூரத்தைக்கொண்டு சுவர்ணபூபதி மாத்திரை செய்துகொள்க.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 278. கால்நார் சிந்தூரம்

எருமைக்கொம்பு கல்நார் பலம் 2, மிளகரணையிலை பலம் 2 இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடுதலைச் சாற்றில் நன்றாக அரைத்து வில்லைசெய்துலர்த்தி அகலில் வைத்துச் சீலைசெய்து காய்ந்தபின் 25 வறட்டியிற் புடமிடுக. இங்ஙனம் புடத்திற்குப் புடம் 5 வறட்டி அதிகப்படுத்தி 5 புடமிட நல்ல சிந்தூரமாகும்.

பிரயோகம்:—நாளொன்றுக்கு இருமுறை குன்றிஎடை நெய் யிற் குழைத்துண்ண மேகசம்பந்தமான அழலை, நீர் எரிச்சல், கைகாலெரிச்சல், எலும்புருக்கி, குத்தல் முதலியன நிவாரணமா கும். ஆண்டன்மை அதிகரிக்கும். மாதர்கட்குச் சிறப்பவயங்கள் சிறுத்து நரம்புக்கூடுகள் பெரிதும் வலுப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 279 அயகாந்தச் சிந்தூரம்

காந்தம் பலம் 5, அயப்பொடி பலம் 5, இவைதம்மைக் கல் வத்திலிட்டு, வாழைக்கிழங்கை இடித்துப் பிழிந்தசாற்றில் 8 ஜாம மரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்துலர்த்திப் பெரிய மூசையில் போட்டு வாய்க்குச் சில்லுமூடிச் சீலைசெய்து, மூசையினை ஊது யந்திரத்தில் வைத்தூதி ஆறவைத்து, மறுபடியும் முன்போல் கல் வத்திலிட்டு ஷை சாற்றிலரைத்து மூசையிலிட்டு ஊதுக. இவ் வண்ணம் 7 முறைசெய்தபின் வில்லைகளைப்பொடிசெய்து ஒரு இருப்புக் கடாயிலிட்டுக் * காடி ஜெயநீரைக் கொஞ்சங் கொஞ்ச மாகவிட்டு ஒருமணிநேரம் வறுத்துக் கல்வத்திலிட்டு ஜெய நீராலேயே இரண்டு மூன்று ஜாம மரைத்து வில்லை செய்து அக லில் பரப்பி மேலகல்மூடி 7 சீலைசெய்து 50 வறட்டியிற் புடமிடச் சிந்தூரமாகும்.

---

* இதனை எச்ச இலம்பகத்தில் கூறப்பட்டுள்ளது.

பிரயோகம்:—இச் சிந்தூரத்தை ½ முதல் 1 குன்றி நிறை தினமிருவேளை திரிபலாதி இலேகியத்தி லுட்கொள்ள பாண்டு, சோகை, மகோதரம் முதலிய கடும்பிணிகள் தீரும்.

பத்தியம்:—இனிப்பையும், புளிப்பையுந் தள்ளி ஏனையவற்றை இச்சாபத்தியமாக உண்ணல் வேண்டும்.

## 280. அயக்காந்த வப்பிரகச் சிந்தூரம்

சுத்திசெய்த அயப்பொடிபலம் 10, காந்தம் பலம் 10, அப்பிரக நவநீதம் பலம் 10.

இம் மூன்றனையுங் கல்வத்திலிட்டு ஆடுதின்னாப்பாளை ரசம் விட்டு 7 நாளரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்து, உலரவைத்து அகலிலிட்டு மேலகல்மூடி வஜ்வாய்ச் சீலைசெய் துலர்த்தியபின் 150 வறட்டியிற் புடமிடுக. பின்னர், பேயத்திப்பட்டைச் சாற்றிலேனும் கஷாயத்திலேனும் 4 ஜாமமரைத்து, ஒருபுடமும் சித்திரமூலம் வேர்ப்பட்டைக் கஷாயத்தில் அரைத்து ஒருபுடமும் போட்டு எடுக்கச் சிந்தூரமாகும். இதனை ஒரு அயச்சட்டியிலிட்டுக் காடி ஜெயநீரினால் கொஞ்சங் கொஞ்சமாக 16 மணிநேரம் சுருக்குக் கொடுத்தாறவிட்டுக் கல்வத்திலிட்டு மேற்படி ஜெயநீரால் 4 ஜாமமரைத்து ஒரே வில்லையாக அகலமாகத் தட்டிக் காயவைத்து ஜாண் உயரம் முழ அகலமுள்ள ஒரு சட்டியில் வைத்து, அதைப்போன்ற மற்றொரு சட்டியை அதன்மீது கவிழ்த்து 7 சீலைசெய்து காய்ந்ததன் பெருந்தீயாய் 4 ஜாம மெரித்து, ஒரு இரவு ஆறவிட்டு மறுநாட் காலை வில்லையைக் கீழ் மேலாகத் திருப்பிவைத்து முன்போலெரித் தெடுக்கச் சிந்தூரமாகும்.

பிரயோகம்:—தினமிருமுறை குன்றியளவு தக்க அனுபானங்களிலுண்ண விஷப்பாண்டு, மதுமேகம், நீரிழிவு, முதலியன நிவர்த்தியாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 281. பஞ்ச சத்துச் சிந்தூரம்

தாளகம், கௌரி, கந்தகம், வெள்ளைப்பாஷாணம், மனோசிலை இவைகளை வகைக்கு ஐந்து பலம் கல்வத்திலிட்டு 12½-பலம் இரசத்தாளி வாழைப்பழத்தைச் சேர்த்து மெழுகு பதமாக

அரைத்துத் திரட்டி ஒரு அகலில் வைத்து மேலே ஒரு செப்பு கிண்ணத்தைக்கவிழ்த்து சந்துக்கு மண்சீலைசெய்து பின்னர் அகலினையும் செப்புக் கிண்ணத்தையும் சேர்த்து ஏழு சீலை செய்து காய்ந்த பின் 30 வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் உள்ளே பார்க்கச் சத்திருக்கும் இதனைக் கல்வத்திலிட்டுக் காடி ஜெயநீரால் அரைத்து வில்லை செய்து காய்ந்தபின் அகலிலிட்டு மேல் அகல் மூடிச் சீலைச்செய்து 20 வறட்டியில் புடமிடவும் இவ்வாறு 5 புடமிடச் சிந்தூரமாகும்.

பிரயோகம்:—இதனை 1 அல்லது 1½ அரிசியெடை நெய்யிலேனும் தேனிலேனுங் குழைத்துண்ண சுரம், ஜன்னி, காசம், சுளை, சர்வாங்கவாதப் பிடிப்பு முதலியன நீங்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 282. அன்னபேதிச் சிந்தூரம்

மேல்தோல் சீவிஎடுத்த குமரிவீலை 1-க்கு ¼ படி கல்லின்றி ஆராய்ந்தெடுத்த கற்சுண்ணத்தையிட்டு 2, 3, நாள் சென்றபின் மத்தால்கடைந்து தெளியவைத்துத் தண்ணீரை வடித்து ஒரு புட்டியில் பத்திரப்படுத்துக. ஒரு புதுசட்டியை அடுப்பில் வைத்து அதில் 10 பலம் அன்னபேதியைப் போட்டுக் கமலாக்கினியாக எரித்து, முன்சித்தப்படுத்திய குமரிஜெய நீரில் ¼ படி கொஞ்சங்கொஞ்சமாக விட்டு அன்னபேதிக்கட்டிகளைப் புரட்டிக் கொடுத்துக்கொண்டிருந்து ஜெயநீரெல்லாம் முடிவு பெற்றபின் இவையடங்கக்கூடிய ஒரு அகலிலாவது அல்லது ஒரு குடுவையிலாவது போட்டு மேல் ஓடுமூடிச் சீலைசெய்து காய்ந்தபின் 30 வறட்டியிற் புடமிடுக. இச்சிந்தூரத்தின் நிறம் மாதுளம்பூவின் நிறத்தினுஞ் சிறந்து விளங்கும். அங்ஙனமின்றேல் மேற்படி ஜெயநீராலரைத்து வில்லைசெய்து இன்னுமொரு புடம்வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினமிருமுறை குன்றிஎடை உஷ்ணதேகிகள் நெய்யினும் சீதளதேகிகள் தேனினு முட்கொள்ள சீதபேதி, சுரம், பாண்டு, சோகை முதலியன தீரும். இதனைச் சீதபேதிக்கு ஆமைஓட்டுப் பற்பத்துடன் கொடுத்தலும் உண்டு.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 283. லிங்கக்கட்டுச் சிந்தூரம்

தாமிரத் தகட்டிற்குச் சமனெடையாகத் தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றில் நன்றாய் அரைத்து மூன்றுபங்காக்கி ஒருபங்கை தகட்டிற்கும்பூசி அகலில் அடக்கிச் சீலைசெய்து 20 வறட்டியிற் புடமிடுக. புடம் ஆறினபின்னர் தகட்டை எடுத்து அதன்மேல் ஏற்படும் சட்டையைத் தட்டி வாங்கிக்கொண்டு மீண்டும் ஒரு பங்கைத் தடவி முன்போல் புடமிட்டு மேல் சட்டையை வாங்கவும். இப்படி மூன்று முறையில் கிடைக்கப் பெறும் சட்டையை எல்லாம் நிறுத்து ஒரு பலம் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றில் நான்கு ஜாமம் அரைத்து மூன்று பங்காக்கி ஒருபங்கை ஒருபலம் லிங்கத்திற்கு அங்கிப்பூட்டி வெடிக்காமல் நிழலில் உலர்த்திச் சீலைமண்செய்து ஜான்அகலமும் ஆழமுள்ள குழியில் உமி அரைபாகம் நிறைத்து மேல் இலிங்கத்தை வைத்து உமிக்கொட்டித் தரைமட்டத்திற்குப் பரப்பி இரண்டு மூன்று வறட்டியைப் பிட்டு அடுக்கிப்புடமிடவும். புடமாறின பின்னர் லிங்கத்தைச் சார்ந்திருக்கும் அங்கியை விலக்கி மீண்டும் முன் நிறுத்திவைத்திருக்கும் இருபங்கைக் கொண்டு முன் மாதிரி இலிங்கத்திற்குக்கவசித்து இருபுடம்போட்டு எடுக்க இலிங்கமானது இறுகிக் கட்டிஊசிப் புகையுடைத்தாக விருக்கும்.

பிரயோகம்:—இதனைக் கட்டாக இழைத்தாவது அரைத்துச் சிந்தூரமாகக் குப்பியில் வைத்துக்கொண்டாவது வேளைக்கு இரண்டு அரிசிஎடை தேனில் தினம் 3 வேளைகொடுக்க ஜன்னி பாத சுரங்கள் குணமாகும் மற்றும் வாதசம்மந்தமான ரோகங்களையும் பரிகரிக்கும்.

பத்தியம்:—வியாதிக்குத்தக்கபடி ஆகாரஞ் செய்தல் நன்று.

## 284. வேறு

5 பலம் சேராங்கொட்டையை மூக்கு நறுக்கி 4 பிளவாக வெட்டிக் கரண்டியில்போட்டுத் தீயில்வறுக்கத் தைலம் காணும். அத்தருணத்தில் கொட்டையின் ஒட்டை வெளியாக்கித் தைலத்தில் கருப்பூரம், சாம்பிராணி, தாளகம், கந்தகம்வகைக்குக்கால் பலமாகப்பொடிசெய்து போட்டுப்பார்க்கச் சிறிதுநேரத்தில் தைலம் நீற்றுவிடும் அதனில் ஒருபலம் லிங்கத்தைப்போட்டுச் சுப்பலால் கிளறிக்கொடுத்துக் கொண்டிருக்கத்தைலம் சுண்டி அதனில்

இட்ட சரக்குகள்யாவும் லிங்கத்தைப் பிடித்துக்கொள்ளும் அந்த இலிங்கத்தை எடுத்து 10 நாள் வரையில் ஓர் இடத்தில்வைத்துப் பதினோராவதுநாள் நெருப்பனலில்காட்டிக் கத்தியைக்கொண்டு சீவியாவது சந்தனக்கல்லின்பேரில் சலம்விட்டுத் தேய்த்தாவது இலிங்கம் சேதப்படாமல் எடுத்து முன்போல் உபயோகப்படுத்துக. பூரத்தையும் இவ்வண்ணமேசெய்ய கட்டும். குழந்தைகட்கு சிற்றாமணக் கெண்ணெயில் ஒரு கோடு இழைத்துக் கொடுக்க மாந்தம் முதலியவை குணமாகும்.

## 285. வேறு

இரண்டுபலம் கொம்புகள்ளிப் பாலில் இரண்டு வராகனெடை துருசு பொடிசெய்து போட்டு அதனில் முட்டை ரூபகமாகத் தேய்த்துச் சுத்தப்படுத்திய ஒரு பலம் இலிங்கத்தைப் போட்டு 5 நாள் ஊறவைத்து 6 வது நாள் இலிங்கத்தை எடுத்து வைத்துக்கொண்டு அப்பாலுடன் புதிய கொம்புக்கள்ளிப்பால் இரண்டு பலமும் துருசுபொடி இரண்டுவராக னெடையுமாகக் கூட்டி லிங்கத்திற்குச் சுருக்குக் கொடுக்கவும். பின்னர் இலிங்கத்தின்பேரிலிருக்கும் கசடை யெல்லாம் சீவித்தள்ளிக் கொத்தமல்லியிலைச்சாற்றில் 4 ஜாமமும் தேனில் இரண்டு ஜாமமும், சுருக்குக் கொடுத்து மேலிருக்கும் கசடையெல்லாம் சீவித்தள்ளி ஒரு பலம் தாளகத்தைத் தேன்விட்டு மெழுக்குபதமாக நன்கு அரைத்து லிங்கத்திற்கு அங்கிப்பூட்டிக் குரட்டினால் பிடித்துக்கொண்டு கரிநெருப்பில் வாட்டவும் தாளகம் நன்று யுருகி இலிங்கத்தைக் கவசித்துக் கொள்ளும் நான்குநாள் பொருத்து மேலிருக்கும் தாளகத்தையெல்லாம் சந்தனக்கல்லின்பேரில் தேய்த்து இலிங்கத்தைச் சேதப்படாமல் எடுத்துக்கொள்க. இதனை கட்டாகவாவது அல்லது கல்வத்திலிட்டு அரைத்துச் சிந்தூரமாகவாவது முன்போல் உபயோகப் படுத்துக.

## 286. கௌரிச் சிந்தாமணிச் சிந்தூரம்

இரசம், கந்தகம், வகைக்கு ஒருபலமாகக் கல்வத்திலிட்டு நான்கு சாமம் அரைக்கக் கறுப்பாகும். அத்துடன் ஒருபலம் வெங்காரம் கூட்டி ஒருசாமம் அரைத்து 32 கிழியா முரட்டு துணியில் கட்டி இரண்டுபடி யளவுள்ள சட்டியில் முக்கால்பாகம் மணல் கொட்டிப் பரப்பி அதனில் ஒன்றின்மீது ஒன்று தட்டாமல் ஊன்றி வாய் வரம்புவரையில் மணல் நிறைத்து மேலோடுமூடிச்

சீலேசெய்து வைத்துக்கொள்க. பூமியில் குந்தாணியைப்போல் ஒருகஜ மாழமும், அடிப்பாகத்தில் ஜாண் அகலமும் மேற்பாகத்தில் கஜம் அகலமுமாக இருக்கும்படிக் குழிதோண்டி மண் இளகலாய் சலம்விட்டுப் பிசைந்து உட்புறத்தில் சுத்தமாகப்பூசி உலரவிட்டு அதனில் ஜாண் உயரம் எருவடுக்கி முன் சித்தப்படுத்திய சட்டியைக் கவிழ்த்து குழிநிரைய எருவடுக்கி அக்கினிப்பிரிதி செய்யவும். புடமானது சாங்கசீதளமானபின் சட்டியிலிருக்கும் மருந்தைப் பக்குவமாக எடுத்து மேல் சாம்பல் போகத் துடைத்துப் பார்க்கப் பூலாப்பழத்தைப்போல் கருஞ்சிவப்பாக இருக்கும்.

அனுபானம்.

திரிகடுகு சூரணத்தில் தேன்கூட்டி அதனில் சிந்தூரம் 1, அல்லது $1\frac{1}{2}$ குன்றிநிறை சேர்த்துத் தினம் இருநேரமாக 40 நாள் சாப்பிடச் சூலை 18, வாய்வு 26, குன்மம் 8, உளமாந்தை, எலிக்கடி, ஜுரம், சுவாசகாசம், க்ஷயம், யோனிசூலை, அரையாப்பு, காமாலை, அண்டவாதம், துடைவாழை, கண்டமாலை, கரப்பான் முதலியவைகள் நீங்கும்.

தவிர ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, அதிவிடயம், கிராம்பு, இவைகளைச் சமனெடையாகச் சேர்த் திடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு அதனில் திரிகடி பிரமாணத்தில் சிந்தூரமுங் கூட்டித் தேகசுபாவத்திற்கிணங்க நெய்யிலாவது தேனிலாவது மத்தித்துத் தினம் இருநேரம் 40 நாள் உட்கொள்ள அதிசாரம், கருமேகம், கிராணி முதலியவை குணமாகும்.

காட்டுக் கரணைக்கிழங்கு தோல்சீவி இலேசாக அரிந்து ரவியில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்ததுடன் சுக்கு, திப்பலிசூரணம் சமனாகக்கூட்டி வைத்துக்கொண்டு வேளைக்குத் திரிகடி பிரமாணம் சூரணத்தில் சிந்தூரங்கூட்டித் தேகத்திற்குப் பொருந்துமாறு தேனிலாவது நெய்யிலாவது மத்தித்துத் தினம் இருவேளை மண்டலம் கொள்ள நவமூலமும் பவுத்திரமும் குணமாகும்.

சிந்தூரத்தை ஆவாரந் தைலத்தில் கொள்ளச் சதையடைப்பு, நீரிழிவு, மூத்திரக்கிரிட்சனம், மூத்திரப் பிரளயம் மேகம் அஸ்தி சுரம் குணமாகும்.

சிந்தூரத்தை அழிஞ்சிவித்துத் தைலத்தில் கொள்ள வயிற்று நோய், புரண்டு திரண்டு குத்தும் வாய்வு, விப்புருதி தீரும்

சிந்தூரத்தை விசம்படி எருக்கிலைப் பழுப்புச்சாற்றில் தினம் ஒருநேரம் ஒன்றைவிட்டு ஒருநாளாகச் சாப்பிட்டுவர மலங்கழியும் மோர்சாதம் சாப்பிடவும். இதனால் விஷப்பாண்டு, சோகை, காமாலை, மயக்கம், பயித்தியம், பாண்டு, நீர்கோவை, ஜுரம் நீங்கும்.

பத்தியம்:—புளி, புகை, போகம், கூடாது வியாதிக்குத் தக்கவாறு பத்தியம் வைக்குதல் நன்று.

மாம்சபட்சணிகளாக இருப்பின் வெள்ளாட்டு உப்புக்கண்டத்தை நெய்யிற் பொரித்து உண்ணலாம்.

## 287. தசமுக வுதயாக்கினிச் சிந்தூரம்

ரசம் பலம் 1, கந்தகம் பலம் 2, காந்தம் பலம் 4, எஃகு அரப்பொடி பலம் 4 இவைகளைக் கல்வத்தில் ஒன்றின்பின் ஒன்றாகயிட்டுக் கற்றாழைச் சாற்றில் 3 நாள் அரைத்து 7-8 வில்லைகளாய்த்தட்டி ரவியில் உலர்த்திச் சிந்தூரம் எரிப்பதற்காகக் கூறப்பட்ட சட்டியில் ஆவிலையை ஒன்றிரண்டாய் இடித்த சூரணம் கொட்டிப் பரப்பி அதன்மீது வில்லையைவைத்து மேலும் முன்போல் ஒருபடி ஆவிலை சூரணமிட்டு மேல்சட்டிமூடிச் சீலைசெய்து நன்றாய் உலர்ந்தபின் அடுப்பேற்றி 12 மணிநேரம் முத்தீயாக எரித்து ஒருநாள் முழுமையும் ஆறவிட்டு எடுத்துப் பார்க்க சிந்தூரமாகும்.

பிரயோகம்:—சிந்தூரத்தில் பணவெடை வீதம் காலை மாலை ஒரு வராகனெடை சுக்குத்தூளுடன் சேர்த்துத் தேகத்திற்கு ஏற்றவாறு நெய் தேன் முதலியவற்றில் மத்தித்து உண்ண பெருவயறு காமாலை, சோகை, பாண்டு, பித்தம் முதலியன நீங்கும்.

பத்தியம்:—வியாதிக்குத் தக்கபடி புளிப்பையும் இனிப்பையும் குறைத்து இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

## 288. அயக்கட்டுச் சிந்தூரம்

புதிதாக இராவிய அரப்பொடி பலம் 5, வீரம் வராகனெடை 1, ரசம் வராகனெடை $\frac{1}{2}$, இம்மூன்றையும் கல்வத்திலிட்டுக் கையோயாமல் 6 மணி நேரம் இருவர் மாற்றி மாற்றி அரைத்துப் பின்னர் அரைக்கால் வராகனெடை சாரம் சேர்த்து ஒருமணிநேரம் அரைத்து வைத்துக்கொண்டு கனத்த கடிதாசியை எழுத்துக்கோலின்மேல் இரண்டு ஓலை கனமேறச் சுற்றி அழுத்தமாக இருக்கும்பொருட்டு ஒரு பலகையின்மீது உருட்டி

அதன்மீது நெடுக்கமாக மெல்லிய கயிற்றைச்சுற்றி மெதுவாக எழுத்துக்கோலை உருவிவிட குழைபோல் ஏற்படும். இதனை ஒரு பலகையின்மீது நிறுத்திச் சிறிது பஞ்சியையேனும் மெல்லிய கடிதாசியையேனும் செதுத்திக் கெட்டனைசெய்து மருந்தைக் கொஞ்சங் கொஞ்சமாகச் செலுத்திக் கெட்டித்து இரண்டு அங்குலம் மருந்து ஏறியபின் மீண்டும் சிறிது பஞ்சிட்டுக் கெட்டித்து முன் போல் மருந்திட்டுக் கெட்டிக்கவும். இவ்வாறு அரைத்துவைத்திருக்கும் மருந்தையெல்லாம் குழைகளில் செலுத்திக் காற்றுப் படாமல் வாயையும் அடைத்து மேலே துணியைச் சுற்றிக் கயிற்றால் கட்டி 90 நாள் வைத்துவிடவும். பின்னர் கடிதாசியை நீக்கிப் பார்க்க மருந்தானது உருக்கி வார்த்த சிட்டம்போலிருக்கும். இதனைக் கட்டாக வைத்துக்கொண்டாவது அல்லது ஒரு துண்டை அரைத்துச் சிந்தூரமாகச் செய்து கொண்டாவது குன்றி பிரமாணம் தேனில் கொடுக்க சூதகபந்தம், சூதகவலி, கைகால் முடக்கு, கணுக்கால் சூலை, பாண்டு முதலியவை குணமாகும். இச்சாபத்தியத்துடன் தினம் ஒருவேளை புசிப்பின் முடிவில் மோர் அன்னம் கொள்ளல் நன்று.

## 289. இரச சிந்தூரம்

7 ரூபாய் எடை கந்தகத்தை வெற்றிலைச்சாற்றால் 3 மணி நேரம் அரைத்து இரண்டு அகலுக்குள்பூசி நிழலில் காயவைத்து அதற்குள் இரண்டு ரூபா எடை ரசத்தைக் கற்றாழைச் சாற்றால் 4 ஜாமமரைத்துக் குழம்புபதத்தில் வழித்து விட்டுச் சீலைசெய்து காயவைத்து ஒரு சட்டியிற் 4 விரற்கடை மணல் கொட்டிப் பரப்பி அதன்மீது வைத்து மேலும் மணல்கொட்டி நிறப்பி இரண்டு ஜாமம் எரித்து எடுக்கச் சிந்தூரமாகும்.

இச்சிந்தூரத்தை மேகசுரங்களுக்கும், மேகத் தடிப்புக்கும் குன்றியளவு தேனில் தினம் இருநேரம் 20 நாள் கொடுக்கக் குணமாகும். தலைவலிக்கு ஒருகுன்றி சிந்தூரத்தை முலைப்பாலில் குழைத்து நெற்றியில்பத்திடச் சிறிதுநேரத்தில் வாங்கும். கடினமான சுரத்திற்கு முலைப்பாலில் குழைத்து உச்சியில் தடவக் குணமாகும்.

பத்தியம்:—ரோகத்தின் வன்மை மென்மைக்குத் தக்கவாறு ஆகாரம் கூட்டவும்.

## 290. தங்கச் சிந்தூரம்

இரண்டரை வராகனெடை தங்கரேக்கை சிவப்புப்பூ பூக்கும் அவுரையிலைச் சாற்றில் இரண்டு மூன்று நாள் நன்றாய் அரைத்து வில்லைசெய்து உலரவைத்து அகலில் இட்டுச் சீலைசெய்து 100 வறட்டியால் புடமிடவும். ஒருபுடத்திலேயே சிந்தூரமாகும். ஒருகால் நிறம் சரியாகக் காணாவிடின் மீண்டும் முன்போ லரைத்து ஒரு புடமிட நிறம் நன்றாயிருக்கும். இதனை வேளைக்கு இரண்டு அரிசி பிரமாணம் தினம் இருநேரம் 12 நாள் கொடுக்க இரத்த விருத்தி செய்து சப்த தாதுக்களைப் போஷிக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 291. சுவாசக்குடோரி சிந்தூரம்

சுத்திசெய்த தாளகம் தோலா 1, இரசச்சிந்தூரம் தோலா 1, சுத்திசெய்த வீரம் தோலா 1, இவைகளில் முதலிரண்டு சரக்கை கல்வத்திலிட்டு நன்றாய் ஒருஜாமம் அரைத்துப் பின்னர் மூன்றாவது சரக்கைச் சேர்த்து 3 ஜாமம் அரைத்துச் சிறு குடுவையில் போட்டு ஓடுமூடிச் சீலைசெய்து மூன்று சிறு கற்களை அடுப்புப் போல் வைத்து அதன்பேரில் குடுவையை வைத்துக் கீழே ஒரு அகலைவைத்து விளக்கெண்ணெய்விட்டு சுண்டுவிரல் கனதியுள்ள திரியால் 3 ஜாமம் எரித்து ஆறவிட்டுப் பார்க்க சிந்தூரமா யிருக்கும். இதனில் வேளைக்கு இரண்டு அரிசிப் பிரமாணம் தேனில் தினம் ஒருநேரம் 3 நாள் கொடுக்கவும். வியாதியின் நிலைமைக் கொடியதெனின் தினமிருநேரம் இரண்டுநாள் கொடுத்தல் போதுமானது. இவ்விதப் பிரயோகத்தினால் கபம் நிறைந்து வெளிக்கு வராமல் சுவாசந் திண்டாடி இழுப்புகண்டு பாதைப்படுங் கஷ்டத்தையுடைய சுவாசகாசமெனினும், எளிதில் கபத்தைக் கரைத்து வெளியாக்கி சுகமடையச் செய்யும். பின்னர் சுவாசகாசத்திற்காக இந்நூலில் கூறப்பட்டுள்ள வேறு எதனையாவது கொடுத்து பூரண குணம் உண்டாக்குக.

பத்தியம்:—புனல்பாகம், பால் சேர்ந்த கஞ்சி முதலியவை உத்தமம்.

## மெழுகு இலம்பகம்

### 292. இலவண மெழுகு

சரக்கு:—கறியுப்பு, கறுப்புப்பு, வளையலுப்பு, பொட்லுப்பு, கல்லுப்பு, இந்துப்பு, அட்டுப்பு, நவாச்சாரம், பூநீர், அப்ளா காரம், வெங்காரம், பெருங்காயம் இவை வகைக்குப் பலம் அரை. சுத்திசெய்த வாளம் பலம் 1.

செய்பாகம்:—இவைகளை நன்ருயரைத்து ஒரு முற்றின பெருந் தேங்காயின் கண்வழியாய் ஜலத்தைப் போக்கி, அதனுட் செலுத்தி, நிறைய உத்தாமணியிலைச் சாற்றைவிட்டு, வேப்பங்கொம்பிளுல் வாயை அடைத்துச் சமகனமாகச் சாணத்தை அப்பிக் காயவைத்துப் பத்துப் பதினைந்து வறட்டியிற் புடமிடுக.

தேங்காயின் ஓடுவெடித்து வாசனைவருஞ் சமயம் அதனை எடுத்து ஓட்டைநீக்கி, அம்மியில்வைத்து, நெகிழ அரைத்துச்சேதமின்றி யதனைக் கல்வத்திற்கு மாற்றி, மெழுகு பதத்துக் கரைத்து பீங்கானில் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—காலை நேரங்களில் வேளைக்குத் தேற்ருங் கொட்டைப்பிரமாணம் கொடுக்கப் பேதியாகும். பேதி யதிகமாயின் மறுநாள் மருந்தினளவைக் குறைத்தும், பேதி குறைவாக இருப்பின் அதனை மிகுத்தும் கொள்க. இதனல் குதகவாயு, மார்புநோய், இடுப்புவலி, கைகால் குடைச்சல், பிடிப்பு, மார்பெரிச்சல், அக்நிமந்தம் முதலியன தீரும். அதுவேயுமன்றி சந்தான சௌபாக்கியமுண்டாகும்.

பத்தியம்:—பேதியாகும் வரை எதுவும் உட்கொள்ளாது பின்னர் இச்சாபத்தியமாக ஆகாரங் கொள்க.

### 293. பஞ்சநவலோக மெழுகு.

சரக்கு:—(1) கறியுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, அமுரியுப்பு, மூங்கிலுப்பு, உவருப்பு, வளையலுப்பு, பாறையுப்பு, இவைகள் வகைக்குப் பலம் $\frac{1}{4}$.

(2) தும்மட்டிக்காய்ச்சாறு படி $\frac{1}{4}$, ஆவின்பால் படி $\frac{1}{4}$,

(3) வீரம் பலம் 1, பூரம் பலம் $\frac{1}{2}$.

செய்பாகம்:—முதல் அங்கத்தில் கூறப்பட்டவைகளை நன்கு அரைத்து ஒரு பழகிய புது சட்டியில் போட்டு, இரண்டாவது அங்கத்தில் கூறப்பட்டவைகளை ஒருமிக்கக் கலந்து கொஞ்சங் கொஞ்சமாய் விட்டுச் சிறுதீயாலெரித்துத் துத்திவேரால் கிண்டிக் கொண்டிருந்து, குழம்புபதம் வரும்போது, மூன்றாவது அங்கத்தில் குறிப்பிட்டவைகளை சன்னமாய்க் கல்வத்தி லரைத்துப் போட்டு, புகையவிடாமல் கிளறிக்கொண்டிருந்து, இலேகிய பதம் வருஞ்சமயத்தில் காலந் தாழ்க்காமல் கல்வத்திற்கு மாற்றித் திரிகடுகு சூரணம் வகைக்கு வராகனெடை 3, சுத்திசெய்த வாளம் பலம் அரை சேர்த்துத் திரிபலாதி கஷாயத்தால் ஒரு ஜாமமும் முலைப்பாலால் ஏழு ஜாமமுமரைத்துப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—மிளகு பிரமாணம் பனைவெட்டில் 3 அல்லது 5 நாள் காலைதோறு முட்கொள்ளின்; சூலை, மகோதரம், வலிகுன்மம், கிரந்தி, மேகம், நீர்க்கோவை, ருத்திரவாயு, விஷவாதம், அண்டவாதம், முடக்குவாதம், தமரகவாயு, அஷ்டகுன்மம், சூதகவாயு, பாரிசவாயு முதலியன தீரும்.

பத்தியம்:—வெந்நீர் சாதம். உப்பை வறுத்துபயோகிக்க. பசுவின்பால், பசுவின்மோர், துவரை, அவரைப்பிஞ்சு, கத்திரிப் பிஞ்சு முதலியவற்றைப் பிணியின் வன்மை யுணர்ந்து, சமயோசிதமாய்ச்சேர்த்துக்கொள்க. இதனால் குணம் புலப்படாவிடில் மீண்டும் மூன்று அல்லது ஐந்துநாள்விட்டு முன்போல் ஒருமுறை கொடுக்க எவ்விதத்தானும் குணப்படும்.

குறிப்பு:—சூலை ரோகத்திற்கு தேனிலும், ஜன்னிக்கு இஞ்சி சுரசத்திலும், ஜ்வரத்திற்கு பஞ்சமூலக் கஷாயத்திலும், தோஷத்திற்குச் சித்திரமூலம்வேர், தேன் இஞ்சி இவைச்சேர்ந்த சுரசத்திலும், கபரோகங்கட்குச் சித்தரத்தை சுரசத்திலும் கொடுக்க.

## 294. பஞ்சலவண மெழுகு

சரக்கு:—வெடியுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, கறியுப்பு வகைக்குப் பலம் 1.

செய்பாகம்:—இவைதம்மைக் கல்வத்திலிட்டுப் பிரண்டை இரசம், முருங்கப்பட்டை ரசம், குப்பைமேனி ரசம், நொச்சியிலை ரசம், குமரிரசம் இவைகளால் தனித்தனி இரண்டு ஜாமம் நெகிழ

அரைத்து, ஒரே வில்லையாகத் தட்டி இரவியிலுலர்த்திக் காய்ந்த பின் மேலகல்மூடிச் சீலைசெய்து 10 வறட்டியில் புடமிடுக இது சில சமயம் உருகியும், உருகாமலும் சிவந்துமிருக்கும். இதனைக் கல்வத்திலிட் டரைத்து, இதனெடைக்கு நான்கி லொருபங்கு பெருங்காயஞ் சேர்த்து மெழுகு பதம்வர எவ்வளவு தேன்வேண்டுமோ அவ்வளவிற்குக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டரைத்து வைத்துக் கொள்க.

பிரயோகம்:—தினமிருவேளை கால் அல்லது காலேயரைக்கால் கழஞ்சுவீதம் சாப்பிடின் சூலை 26, கிராணி 6, குன்மம் 8, வாத ரோகம் 80, குத்தல், குடைச்சல், வலி, அண்டவாயு, வயிற்றுப் புசம், குடல்வாதம் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—பிணிக்கேற்றபடி அறிந்து நடந்துகொள்க.

## 295. பஞ்சசூதமெழுகு

சரக்கு:—வாலைசரம், இலிங்கம், பூரம், வீரம், இரசசிந்தூரம் இவை வகைக்குப் பலம் $\frac{1}{4}$.

செய்பாகம்:—இவற்றை ஒன்றிரண்டாகப் பெருந்துண்டுகளாக நறுக்கி, ஒரு புது ஓட்டில் வைத்துச் சிறுதீயிலெரித்துச் சேங்கொட்டைத்தைலம், வெள்ளைப்பூண்டுத் தைலம், சிற்றண்டத் தைலம் இம்மூன்றையும் சமனெடையாகக் கலந்து இரண்டரை பலத்திற்குக் குறைவின்றி இரண்டு ஜாமம் சுறுக்குக் கொடுத்து அவைகளைச் சிதராமல் கல்வத்திலிட்டு, மிகுந்த மேற்படி கலவைத் தைலத்தால் மெழுகு பதத்திலேயே தினம் மூன்றுமணி நேரத்திற்குக் குறைவின்றி 5 நாளரைத்துப் பத்திரப் படுத்துக.

### குழந்தைகட்குப் பிரயோகம்

குழந்தைகட்குப் பருவத்துக் கேற்றபடி பயிறுபிரமாணம் பாலடையில் முலைப்பால் விட்டு முனையில் மெழுகை வைத்துக் கொடுக்க. இவ்வாறு நாளொன்றுக்கு இருமுறை மூன்றுநாள் கொடுக்க ஜ்வரம், இசிவு, மாந்த தோஷங்கள், வயிறுப்பிசம் கைகால்பிடிப்பு, இளம்பிள்ளைவாயு முதலிய கடும்பிணிகள் தீரும்.

குழந்தைகட்குப் பத்தியம்:—பால் உண்ணும் குழந்தையாயின் தாய் இச்சாபத்தியத்துடன் சீதள பதார்த்தங்களையும் புளியையும் தள்ளிப் பக்குவமாய் ஆகாரஞ்செய்யவேண்டும்.

பெரியோர்கட்குப் பிரயோகம்

மிளகு அல்லது குன்றிப்பிரமாணம் கருப்பட்டியில் வைத்துண்ண 3 நாள் 6 வேளையில் பாரிசவாதம், முகவாதம், பிடிப்பு, குடைச்சல் முதலியவைகள் குணப்படும்.

பத்தியம்:—பிணி மிக்கக் கடினமாக இருப்பின் புளி நீக்கல் வேண்டும். அத்துணை கடினமாக இல்லாவிடின் வறுத்த உப்பு சுட்டபுளி சேர்த்துண்க.

குறிப்பு:—இதனை நீண்டநாளுண்ணல் கூடாது. குணம் ஏற்படாவிடின் சிலநாள் இடைவிட்டுப் பின்னர் ஒருமுறை உட்கொள்வது சாலச்சிறந்தது. இந்த பாகத்தில் பூண்டுத்தைலத்திற்குப்பதில் பூண்டுச்சாறு சேர்த்துக் கொள்ளலாம்.

## 296. அக்கரகார மெழுகு

அக்கரகாரம் கழஞ்சு 10, திப்பிலி கழஞ்சு 7, கோஷ்டம் கழஞ்சு 4, சித்தரத்தை கழஞ்சு 8, கிராம்பு கழஞ்சு 7, இவைகளைத் தனித்தனிச் சூரணம் செய்து கல்வத்திலிட்டு அதனுடன் நன்றுயரைத்துச் சுத்திசெய்த பூரம் இரண்டு கழஞ்சு சேர்த்துத் தேன் விட்டுக் கையோயாமல் இரண்டு பேர் கல்வத்தி லுஷ்ணம் பிறக்க மாற்றி மாற்றி அரைக்க. இங்ஙனம் தினமிரண்டு ஜாம மிரண்டு மூன்றுநாளரைத்துப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—இதனைத் தூதுளங்காய்ப் பிரமாணம் மூன்று நாள் ஆறுவேளை உட்கொள்ளின் எரிகுன்மம், வலிகுன்மம். நாவின் சுரசுரப்பு, தோஷாதி ஜ்வரங்கள் தீரும்.

குறிப்பு:—இதனை நீடித்துண்ணக்கூடாது, குணந்தெரியாவிடின் இடைவிட்டு மறுமுறை உட்கொள்ள எத்தகைய கடும்பிணியும் குணப்படும் என்பதற்கு ஐயுறவில்லை.

பத்தியம்:—பிணியின் வன்மை மென்மைக்கேற்ற பெற்றி அறிந்து ஆவன உண்டு ஆகாதவற்றை நீக்கவேண்டும்.

## 297. தாமிரமெழுகு

சரக்கு:—சுத்திசெய்த தாமிர அரப்பொடி வராகனெடை 5, வீரம், பூரம், கந்தகம், ரசம், லிங்கம், தனித்தனி வராகனெடை 1,

செய்பாகம்:—இவைகளை யெல்லாம் கல்வத்திலிட் டரைத்து ஒரு பீங்கானிலிட்டு 7 அல்லது 10 எலுமிச்சம் பழரசம் விட்டு 24 மணிநேரம் வைத்திருந்து மிதக்கும் பழரசத்தை வடித்துவிடுக. மறுவலும் முன்போல் பழரசம் விட்டுக் கலக்கி 24 மணிநேரம் சென்றபின் பழரசத்தை வடித்து விடுக.

இங்ஙனம் 7 முறை செய்யப் பச்சைநிறமான களிம்பு பழ ரசத்தில் தோன்றுது. ஒருகால் ஐயமுண்டாயின் இரண்டொரு முறை அதிகமாகச் செய்துகொண்டு பின்னர் அதனை இரவியி லுலர்த்திக் கல்வத்திலிட்டுத் தேனைச் சிறிது சிறிதாக விட்டு மெழுகுபதமாக 8 ஜாம மரைத்துப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—தினமிருவேளை ½ முதல் ¾ குன்றிப்பிரமாணம் 5 அல்லது 7 நாள் பனைவெட்டில் வைத்துண்ணின் குன்மம், பெருவயிறு, பிடிப்பு, விரணம், சுவாசகாசம், திமிர், தடிப்பு, வாதரோகங்கள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 298. வேறு

சரக்கு:—சுத்திசெய்த தாமிர அரப்பொடி பலம் 2½ சுத்தி செய்த கந்தகம் பலம் ஒண்ணேகால்,

செய்பாகம்:—ஒரு பீங்கானில் தாம்பிரப்பொடியைப் போட்டு, அதன்மீது கந்தகத்தை 7 எலுமிச்சம் பழரசம் விட்டரைத் துக் குழம்பாக வழித்துவிட்டு, அதன்மேல் நாயுருவி, கருந்துளசி சமனெடையாகக்கலந்த அரைக்காற்படிச் சாறுவிட்டுத் தினந்தோ றும் இரவியில் வைத்துக்கொண்டுவந்து நீரெல்லாம் சுண்டினபதத் தில் கல்வத்திலிட்டு, அதனோடு ¾ வராகனெடை பச்சைக் கருப்பூரம் சேர்த்துத் தேன்விட்டு மெழுகு பதமாக 4 ஜாமத்திற் குக் குறைவின்றி யரைத்துப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—இதனைத் தினமிருவேளை மிளகு பிரமாணம் 3 அல்லது 5 நாளுண்ணின் குன்மம், பெருவயிறு, பிடிப்பு, விர ணம், சுவாசகாசம், திமிர், தடிப்பு, வாதம் முதலிய பலவுந்தீரும். ஒருமுறையில் குணமேற்படாவிடின் 14 நாளிடைவிட்டு மறுமுறை உட்கொள்க.

குறிப்பு:—இதனை ஒருமுறை உட்கொண்ட இரண்டுநாள் கழித்து தேகதிடத்துக் கேற்றபடி இருமுறை பேதியாகச் சிற்றுமணக்கெண்ணெய் உட்கொள்ளுதல் சாலவும் நன்று. தாமிரபூபதி மாத்திரைக்கு இம்மெழுகைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது மாத்திரை இலம்பகத்திற் காண்க.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 299. மிருத்திஞ் ஜெயரசம்

சரக்கு:—சுத்திசெய்த தாளகம், சுத்திகரித்த கந்தகம், சுத்திகரித்த இலிங்கம் வகைக்கு வராகனெடை 3. திப்பிலி, கிராம்பு, மிளகு வகைக்குச் சூரணம் பலம் 1, கோரோசனை வராகனெடை ஒண்ணறை, குங்குமப்பூ வராகனெடை 3, பச்சைக் கருப்பூரம் வராகனெடை $1\frac{1}{2}$ கஸ்தூரி வராகனெடை $\frac{1}{4}$.

செய்பாகம்:—தாளகத்தைக் கல்வத்திலிட்டுத் தளுக்குமாற நன்றாக அரைத்து அதனுடன் மற்றைச்சரக்குகளை மேலேகூறிய முறையே ஒன்றின்பின் ஞொன்றாய்க் சேர்த்தரைத்துத் தேன் விட்டு, மெழுகுபதமாய் 4 ஜாமமரைத்துச் சிமிழில் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—உளுந்து பிரமாணம் வெற்றிலையில் தடவி மென்று தின்னின், சர்வசீதளம், ஜ்வரம், ஜன்னி, கபசம்பந்த உபத்திரம், வாயுசம்பந்தமான ரோகங்கள் எல்லாம் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 300. கஸ்தூரி மெழுகு

சரக்கு:—கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கருப்பூரம், இரசசிந்தூரம் வகைக்கு வராகனெடை கால். திப்பிலி. மிளகு, கிராம்பு, சன்னராஷ்டகம், கண்டுபரங்கி, தாளிசபத்திரி, அதிமதுரம், அக்கரகாரம் வகைக்குத் தனித்தனிச் சூரணம் பலம் $\frac{1}{4}$.

செய்பாகம்:—இவையிற்றுள் திப்பிலி முதல் அக்கரகாரம் ஈறாக உள்ள சரக்குகளைக் கல்வத்திலிட்டு இரண்டுமணி நேரம் தேன்விட்டு மெழுக்கு பதத்திலேயே அரைத்துப் பின்னர் மற்றவற்றைச் சேர்த்து இரண்டுமணி நேரம் மெழுகுபதம் வரும் வரை அரைத்துப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—குன்றிப் பிரமாணம் தக்க அனுபானங்களிலுட் கொள்ள ஜலுப்பு, ஜ்வரம், வாயு, தொண்டைக்கட்டு, அஸ்தி ஜ்வரம் முதலிய பிணிகள் பரிகரிக்கப் படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

### 301. திரியாக்கே பாரோக்.

சரக்கு:—திப்பலிச் சூரணம் பலம் 1, கிராம்புச் சூரணம் பலம் 1.

செய்பாகம்:—மேற்கூறிய இரண்டு சூரணங்களையும் கல்வத்திலிட்டு 50 க்கு மேல் 100 க்கு அதிகப்படாமல் வெள்ளாட்டுப் பிச்சினுடைய ஜலத்தினால் எத்தனைநாளாயினும் பொருமையாயரைத்துப் பின்னர் 100 கம்மாறுவெற்றிலையை அனலில் வெதுப்பிப் பிழிந்த ரசம்விட்டு அரைத்து, நீரெல்லாம் வறண்டபின் தேனினால் மெழுகு பதத்துக்கரைத்துப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—பெரியோர்கட்கு மிளகுபிரயாண மாகவும் பருவத்துக் கேற்றபடி அனுபானங்களில் உண்ணின் மூன் கஸ்தூரி மெழுக்கினுக்குரிய குணங்கள் அனைத்தையும் கொடுக்கும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

### 302. மூசாம்பர மெழுகு.

சரக்கு:—சீமை மூசாம்பரம் பலம் 7, பாலேந்திர போலம் பலம் 4, குங்குமப்பூ பலம் 2, பழையவெல்லம் பலம் 4, கருப்பூரம் பலம் 1, பெருங்காயம் பலம் 2.

செய்பாகம்:—இவையிற்றைத் தேன் விட்டு மெழுகு பதமரைத்துப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்.—வேளைக்கு மணிப்புன்கங் கொட்டைப் பிரமாணம் பனைவெல்லத்தில் வைத்துத் தினமிருவேளை உட்கொண்ட உடனே சோம்பு அரக்கேனும் (தீநீர்) ஒரு தோலா சோம்பைக் கஷாயஞ்செய்தேனும் அருந்துதல் வேண்டும். இது பிரசவித்த ஸ்திரீகள் அழுக்கைத் தட்டுத்தடங்கலின்றி வெளிப்படுத்தும். மாதவிடாய் வழுவியிருப்பவர்களுட்கொள்ளின் அது ஒழுங்காய் நிகழ்ந்து அக்காலத் துண்டாகும் நோயும் நீங்கும்.

இதனைச் சாப்பிட்டு அழுக்கு வெளிப்படக் கண்டவுடன் மருந்தை நிறுத்திவிடுதல் வேண்டும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

### 303. வீர மெழுகு (பேதி)

சரக்கு:—வீரம் பலம் $\frac{1}{2}$, இரசம் பலம் $\frac{1}{2}$, பூரம் பலம் $\frac{1}{2}$, இலிங்கம் பலம் $\frac{1}{2}$, பளிங்குசாம்பிராணி பலம் 1, வெடியுப்பு பலம் 1, கருப்பூரம் பலம் 1, பொரித்த வெங்காரம் பலம் 1, நவாச்சாரம் பலம் 1.

செய்பாகம்:—இக்கூறப்பட்ட சரக்குகளோடு 7 பலம் சுத்தி கரித்த வாளத்தையுங் கூட்டித் தேன்விட்டு மெழுக்கு பதத்தி லேயே இரண்டு மூன்று நாளரைத்துப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—குன்றி அல்லது மிளகு பிரமாணம் தேகநிலை மைக் கிசைந்தவண்ணம் பனவெட்டில் வைத்துண்ண 4, 5 தடவை பேதியாகும். இதனாலே வாதபித்த சிலேத்துமக் கூட்டுறவினா லுண்டான பல பிணிகளும் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம், புளிநீக்குவது ஆவசியகம்.

### 304. வீர மெழுகு (சாதா)

சரக்கு:—வீரம், இரசம், பூரம், இலிங்கம் வகைக்கு வராக னெடை 1, பளிங்கு சாம்பிராணி, வெடியுப்பு, கருப்பூரம், பொரி த்த வெங்காரம், நவாச்சாரம் வராகனெடை 2, பச்சைக்கருப் பூரம், கோரோசனை வகைக்கு வராகனெடை $1\frac{1}{2}$, குங்குமப்பூ தோலா $1\frac{1}{2}$, குரோசானி ஓமம் சூரணம் தோலா 3, தாளிசபத்திரி சூரணம் தோலா $4\frac{1}{4}$.

செய்பாகம்:—இவையிற்றைக் கல்வத்திலிட்டுச் சிறிது சிறி தாக முலைப்பால்விட்டு 4, 5 மணி நேரத்திற்குக் குறைவின்றிக் கையோயாம லரைத்தேனும் தினமிரண்டு மூன்றுமணி நேரமாக இரண்டுநாளரைத்தேனும் பத்திரப்படுத்துக

பிரயோகம்:—இதனைக் குன்றிப்பிரமாணம் காலை மாலை 7 அல்லது 10 நாள் ஒரு முறையாக உட்கொள்ள மேகவாயு, கைகால் குடைச்சல், கைகால் பிடிப்பு, கீல்வாயு, மார்புநோய், முழங்கால் கணுக்கால் வாதம், பாரிசவாதம், அண்டவாதம்,

குடல்வாதம், நரித்தலைவாதம், வாதப்பிடிப்பு, தேகத்தை அசைக்கவும் முடியாது படுக்கையில் வீழ்த்தும் சர்வாங்கவலி, ஸ்தீரீகட்குண்டாகும் சூதகவாயு முதலிய கடும்பிணிகள் தீரும்.

குறிப்பு:—இதனைக் கொடுப்பதற்குமுன் உடம்பின் நிலைமைக்கேற்றவாறு பேதி மெழுகை 3 நாள் ஒழுங்காகவேனும் அல்லது இரண்டுநாட்களுக் கொருமுறையாகவேனும் 4-5 முறை மலப்பிரவர்த்தியாகும் வண்ணம் கொடுத்துவிட்டுப் பின்னர் இதனைக் கொடுத்துவருக. முதன் முறையில் குணந்தெரியாவிடின் ஒருவார மிடைவிட்டு இரண்டாமுறையு முட்கொள்க.

மருத்துவர்கள் அறிவின் நுட்பத்தால் ஆராய்ந்து மருந்தளிக்கும் காலவளவை வரையறுத்துக் கொள்ளல் வேண்டும். இதனை உட்கொள்வதால் உஷ்ணமதிகரிப்பின் கஷாய இலம்பகத்தில் கூறியுள்ள 57-வது கஷாயத்தை அருந்தின உடனே சாந்தியாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியத்தோடு எத்தனைநாள் புளிதள்ளி ஆகாரங் கொள்ளக்கூடுமோ அத்தனைநாள் கொள்க. முடியாதவர்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

## 305. தளரி வீரமெழுகு

தோலுரித்த வெள்ளைப்பூண்டையும் அதற்குச் சமமாக முருங்கைப் பூவையும் ஒருங்கு கலந்து, ஒரு சட்டியில் தண்ணீர் விட்டு மெல்லிய துணியால் ஏடுகட்டி அதன்மீது நடுவில் வைத்து பொருத்தமான மேல்சட்டி மூடி, ஈரத்துணியால் உள்ளாவி வெளிப்போகாமல் வாய்ப்புறத்திற்குச் சுற்றி, பூண்டு வேக எரித்து, பூண்டையும் முருங்கைப் பூவையுமிடித்து அரைக்காற்படிப் பிழிந்து ரசம் எடுத்துக்கொண்டு, அரைப்பலம் வீரத்தை யண்ணேட்டிலிட்டு அடுப்பேற்றி தீபம்போற் சிறுதீயாக எரித்து, சுருக்குக்கொடுத்து ஒரு சுப்பலால் கிளறிக் கொடுத்துக்கொண்டு ரசம் முடிந்தவுடன் மெழுகு பதத்தில் வழித்துப் பீங்கானில் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—பிரசவமானபின் அழுக்குத்தங்கி உண்டாகும் ஜன்னிக்குக் குன்றிப் பிரமாணம் கருப்பட்டியில் வைத்துண்ண உடனே குணப்படும். குணந் தெரியாவிடின் மீண்டும் முன் கொண்ட அளவிற்குப் பாதிகொள்க. 2, 3 நாட்கள் ஒவ்வொரு

காலையுமுட்கொள்ள அழுக்குத்தங்கி உண்டாகும் கைகால் எரிச்சல், குத்தல், முடக்கு முதலிய குணங்களுடைய கரவாத ஜன்னி குணமாகும். மற்றும் இதனை வாதரோகங்கட்குச் சமயோசிதமாய் உபயோகித்தல் கூடும்.

பத்தியம்:—புளிதள்ளி இச்சாபத்தியங் கொள்க.

## 306. வீரமெழுகு

சரக்கு:—வீரம் வராகனெடை $1\frac{1}{2}$, இந்துப்பு வராகனெடை 10, பெருங்காயம் வராகனெடை 8, சாரம் வராகனெடை 5, வாளம் (சுத்தி) வராகனெடை 10.

செய்பாகம்:—இவைகளை கல்வத்தில் போட்டு $\frac{1}{2}$ மணிநேரம் அரைத்துப் பெரியதாகவும் அதிக சிறியதாகவும் இல்லாத நடுத்தரமான தேங்காயைக் கண்திறந்து உள்ளிருக்கும் ஜலத்தை வெளியாக்கி அதனுள்செலுத்தி வேப்பங்குச்சியால் ஆப்பு அடைத்துப் பசுவின் சாணத்தை அதன்மேல் ஒரு அங்குலம் கனதியாகப்பூசி 7, 8 வறட்டியால் புடமிடவும். வெந்து தேங்காய் ஓடு வெடித்து வாசனைவரும்போது புடத்தினின்று விலக்கி ஓடு நீக்கி தேங்காய் சரக்கு உட்பட கல்வத்திலிட்டு மெழுகு பதம் வரும்வரையில் நன்கு அரைத்துப் பத்திரப்படுத்தவும் அரைப்புக்குப் போதிய பசையில்லாதிருப்பின் முலைப்பால் சிறிது சேர்த்துக்கொள்ளலாம்.

பிரயோகம்:—தினம் ஒருநேரம் காலையில் கடலைப்பிரமாணம் பனவெட்டில் வைத்து கொடுக்கவும். 4, 5 முறை பேதியாகும். இங்ஙனம் 3 நாள்கொடுக்க பாரிசவாய்வு, சூதகவாய்வு, விரைவாதம், ஆணைக்கால்சுரம், கைகால் பிடிப்பு, இன்னும் வாத உபரியால் காணும் பல ரோகங்களையும் குணப்படுத்தும்.

பத்தியம்:—புளி சேர்க்காமல் இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும். பேதி யதிகமாயின் மோர்சாதம் சாப்பிடவும்.

## 307. இலிங்க லேபன மெழுகு

ஒரு யௌவன சேவலைக் கொணர்ந்து தலை, கால், குடல், சிறகு முதலிய உறுப்புகளை நீக்கிச் சிறு துண்டுகளாக நறுக்கி, இரவியில் நீர் சுண்ட 4 மணி நேரம் உலர்த்திக் குழித்தைல விதிப்படி தைலம் வாங்குக.

பின்பு, அதன்கண் தங்கியிருக்கும் நீர் சுண்ட இரவியில் வைத்தேனும அல்லது பக்குவமாக வடித்தேனும் தைலத்தை எடுத்துக்கொண்டு, கல்வத்தில் ஒன்றன்பின் ஒன்றாய்க் கருப்பூரம் வராகனெடை ½, செம்மண் பூநாகம் தோலா 1, இந்திரகோபம் வராகனெடை ½, அக்கரகாரம் வராகனெடை 1, இவைகளைப் போட்டு ஷை தைலத்தாலரைக்க. மெழுகுபதமாவதற்குத் திரவம் போதியதாகக் காணப்படாவிடின் சிறிது தேன் கூட்டி அரைத்துக்கொள்க.

பிரயோகம்:—தேவையானபோது குன்றிப்பிரமாண மெழுகில் இரண்டொருதுளி தேன்விட்டு மத்தித்து, கோசத்தின் மேல் பூசியபின் மாதரை அநுபவிக்கப் பேரின்பத்தை விளைவிக்கும், பெண்டிற்குக் கணவன்மேல் நல்லன்பு உண்டாகும். மகப்பேறு வாய்க்கும்.

## 308. அய மெழுகு

அயப்பொடியை நல்லெண்ணெய் விட்டு வறுத்து, சிகைக்காய்க் கொதிஜலம் விட்டு நன்று யலம்பி எடுத்த அயத்தூள் பலம் 1.

செய்பாகம்:—இதனை ஒரு பீங்கானிலிட்டு அது முழுகும் வண்ணம் புளிப்புமாதுளம்பழ ரசம்விட்டு இரவியில் வைத்துக் கொண்டுவரக் கரையும். இங்ஙனம் கரைந்ததைக் கல்வத்திட்டு இலவங்கப்பட்டை, ஜாதிபத்திரி ஜாதிக்காய், ஏலம், கசகசா கிராம்பு, திப்பிலி, சுக்கு வகைக்கு ஒருபலம் சூரணம் சேர்த்துப் புளிப்பு மாதளம்பழச் சாற்றி விரண்டு மூன்று நாளரைத்துப் பதனஞ்செய்க.

பிரயோகம்:—இதனை வேளைக்குக் குன்றிப்பிரமாணம் தினமிருநேரம் சாப்பிட்டுவர தாதுவிருத்தியும், இரத்தப்பெருக்கமு முண்டாகும்.

பத்தியம்:—புளியைநீக்கி மற்றெல்லாவற்றையும் சேர்த்துக் கொள்க.

## 309 மேக சிந்தாமணி மெழுகு

சரக்கு:—கஸ்தூரிமஞ்சள், பூவரசம்பட்டை, அழிஞ்சல் பட்டை, சதுரக்கள்ளிப்பட்டை, கொம்புக் கள்ளிப்பட்டை வகைக்குப் பலம் 5.

எருக்கம்பட்டை, சிவனர் வேம்பு சமூலம், சித்திரமூலம் வேர்ப்பட்டை, பறங்கிப்பட்டை, கடுக்காய்த் தோல், கடகரோகணி, சூரத்து நிலாவாரை, காக்கட்டான்விதை வகைக்குப் பலம் 2½ கருஞ்சீரகம், கார்போக அரிசி, வால்மிளகு, முருங்க விதை, காட்டுச்சீரகம் வகைக்குப் பலம் ½.

செய்பாகம்:—இவையிற்றை இடித்துச் சூர்ணித்து, ஒரு பெரிய கல்வத்தில் வீரம், பூரம், இரசம், இலிங்கம், இரசசிந்தூரம் இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை யிட்டுத் தேன் விட்டரைத்துப் பின்னர், முன் சித்தஞ்செய்துள்ள சூர்ணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுத் தேன்விட்டு மெழுகு பதமாக அரைத்துப் பத்திரப் படுத்துக.

பிரயோகம்:—தினமிருவேளை சுண்டைக்காயளவேனும், அதிற் சிறிது குறைத்தேனும் உடம்பின் வன்மைக் கேற்றபடி 20 நாள் உட்கொள்ளின் கிரந்தி, வடுப்புண், அரையாப்பு, வெள்ளை, கருமேகம், குஷ்டம், நீர்ச்சுருக்கு, அண்டவாயு, குத்தல், குன்மம் 8, முடக்கு, சுவாசகாசம், வலி, இசிவு, கபாலசூலை, காமாலை முதலியன தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 310 கபரி மெழுகு

சரக்கு:—* கபரி 6, பால்துத்தம் 2, மயில்துத்தம் 1, அதிமதுரம் 1, அன்னபேதி 1, பறங்கிச்சக்கை 1, பெருங்காயம் 1, அக்கரகாரம் 1, பொரித்த வெங்காரம் 1, சித்தரத்தை 1, திப்பிலி 1, வால்மிளகு 1, தாளிசபத்திரி 1, குங்குமப்பூ ½, கோரோசனை ¼.

செய்பாகம்:—மேற்கூறப்பட்ட சரக்கின் அளவை தோலா எடையாக நிறுத்து இடித்துச் சூரணஞ்செய்யிற் பாலனவற்றைச் சூர்ணித்துக் கல்வத்திலிட்டுக் கரும்புரசம், பழரசம், இளநீர், வெள்ளை வெங்காய ரசம், இஞ்சிரசம் முதலிய ஒவ்வொன்றானும் அவ்வைந்துநா ளரைத்துப் பின்னர் பசுவின்வெண்ணெய் கொஞ்சம் கூட்டி யரைத்துப் பத்திரப்படுத்துக.

---

* கபரியைத் துத்தமெனக் கூறுவாருமுளர். கபரிக்கும் துத்தத்திற்கும் வேற்றுமைபெரிது, அதனை அறிந்து கொள்க.

பிரயோகம்:—இதனை மிளகுபிரமாணம் தினமிருநேரம் பிணியின் நிலைமைக்குத் தக்கபடி ஏதேனுமொரு அநுபானத்தினிலுட்கொள்ள குளிர் ஜ்வரம், ஜன்னி, சூதகவாயு, முதலியன தீரும்.

பத்தியம்:—தயிர், மோர் சேர்த்த ஆகாரமே கொள்க.

## 311. சிவப்பு மெழுகு

இரசம், வீரம், பூரம், இலிங்கம், இரசச்சிந்தூரம் வகைக்கு வராகனெடை 1, பொட்டுநீக்கி வறுத்த ஓமம் வராகனெடை 5, சீனகாரம் வராகனெடை 5, உள்நரம்பு போகச் சுத்திகரித்துச் சூரணித்த சித்திரமூலவேர் வராகனெடை 1, பூநீர் வராகனெடை $\frac{1}{2}$.

செய்பாகம்:—சீனக்காரத்தைப் பொடி செய்து, சிறிய குவிந்த அகலில் குவித்துச் சிறுதீயிற் பொரியும்படி வைத்து, முதற்கூறப்பட்ட ஐந்து சரக்குகளையும் ஒருங்கு பொடிசெய்து, ஒரு சிறிய உச்சிக்கரண்டியிலிட்டு, அதனைச் சீனகாரத்தின்மேல் உஷ்ணந் தாக்கும்படி வைக்க. சீனகாரம் பொரிந்தபின் காலந் தாழ்க்காமல் அதனையும் (சீனகாரத்தையும்) அதன்மேல்வைத்துள்ள இரசவர்க்கத்தையுங் கல்வத்திலிட்டு, அதனோடு ஓமத்தையும் சித்திரமூல சூரணம், பூநீர் முதலியவற்றையும் சேர்த்துச் சுத்த ஜலத்தாலரைத்துக் கல்வத்தோடு உலர்த்தித் தேன் சிறிது சிறிதாக விட்டு, மெழுகுபத மரைத்துப் பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—இதனை வேளைக்குக் குன்றிப் பிரமாணம் பனைவெட்டில் வைத்துக்கொடுக்க, விஷபேதி, சர்வாங்கவலி, ஜலதோஷம், ஜன்னி, சைத்தியம், தோஷம், மாந்தம், வயிறுப்புசம், கத்தல், கனைத்தல், இசிவு, அஜீர்ணகழிச்சல், எப்பம் முதலியன குணப்படும்.

பத்தியம்:—பிணிக்கேற்றவாறு ஆகாரம் உட்கொள்ளல் வேண்டும்.

## 312. கறுப்பு மெழுகு

சிவப்பு நெருஞ்சியைச் சுத்தஜலம் விட்டிடித்துப் பிழிந்து வடிகட்டின சாறுபடி 1,

இதனை ஒரு புதுபாண்டத்திலிட்டு, அதனோடு ஒருபலம் ஆலாத்தி கருப்பூரத்தையும், ஒரு வராகனெடை வீரத்தையும்,

தனித்தனிக் கட்டியாகப் போட்டு, அடுப்பேற்றி மூலிகை ரசம் சுண்டும்வரையி லெரித்துக் கொஞ்ச மீரமிருக்கும்போதே கல்வத்திலிட்டு, ½ வராகனெடை பூநீர்கூட்டித் தேன்விட்டு, மெழுக்கு பதமாக அரைக்க.

பிரயோகம்:—விஷபேதியினால் நாடி வலுவற் றிருக்குங் காலத்து, இம் மெழுகினை உட்கொள்ளின், தேகம் உஷ்ணம் பெற்றுச் சீதளத்தாலுண்டாகிய பல குறிகள் படிப் படியாகக் குறைந்து குணமுண்டாகும்.

குறிப்பு:—விஷபேதியைப் பரிகரித்தற் பொருட்டு சிவப்பு மெழுகு ஒருபங்கும், கறுப்பு மெழுகு இரண்டு பங்குமாகக் கூட்டி, முழு எடை 1 அல்லது 1½ குன்றிக்கு மேலிடாமல் கொடுத்து ½ பலம் சித்திரத்தைச் சுத்தஜலம்விட் டரைத்துப் பிழிந்து இருப்புக் கரண்டியைக் காயவைத்து, அதனில் தோய்த்து, வடித்து அருந்துக.

பத்தியம்:—முன்முறையிற் கூறியதே.

## 313. சர்ப ராஜ மைனம்

துருசு, ரசம், மணிப்புங்கன்காயின் மேல்தோல் வகைக்கு தோலா 1, சுத்திசெய்த வாளம் தோலா 3. இவை தம்மை கல்வத்தில் போட்டு 4 ஜாமம் நன்றாய் அரைத்துப் பின்பு இருப்பு வாணலியிலிட்டு நெருப்பனலில் வைத்துக் காந்தாமல் கருகாமல் எடுத்து கொம்பு டப்பியில் பத்திரப்படுத்துக. தேகதிடத்திற்குத் தக்கவாறு மிளகு குன்றிபிரமாணம் பனவெட்டில் கொடுக்கவும். ஒருவேளைக்குமேல் தேவை இராது. பிராணன் நீங்கிவிட்டதாக கூறினுஞ்சரி பிரம்பால் பலமாய் அடித்து தோல் தடிப்பெழும்பில் உச்சியைக் கீறி இந்த மெழுகில் குன்றியளவு எடுத்துத் தேய்க்க, சிறிது நேரத்தில் சுவாசமுண்டாகும். உடனே கடுகு அளவு மெழுக்கை முலைப்பாலில் மத்தித்து கண்களுக்கு கலிக்கந் தீட்டவும் பின்னர் குன்றியளவு மெழுகை உள்ளுக்குக் கொடுக்கவும்.

பத்தியம்:—உப்பில்லா வெருங் கஞ்சியை சிறு அளவாகக் கொடுத்தல்வேண்டும் அன்று நித்திரைசெய்யவிடக்கூடாது மறுநாள் தயிர்சாதம் கொடுக்கவும். உப்புக்கூட்டலாம் இவ்விதப் பரிகாரத்திற்காக யாதொரு சன்மானமும் பெறக்கூடாதென அறிக.

## 314. கிராணி கபாட மைனம்

முதலாவது:—10 படி பசுவின் பாலிற் 5 படி சுத்தஜலம் அதனோடு இளநீரில் கழுவி விதை, காம்பு இவைகள் நீங்கப்பெற்ற 10 பலம் கஞ்சாவைப்போட்டுக் காய்ச்சி, ஒருபடியாகச் சுண்டிய செவ்வியறிந்து பிசைந்து வடித்துப் பின்பு அப்பாலில் புரைவிட்டுத் தயிராகிய பின்னர் கடைந்து வெண்ணெயைத் திரட்டி நெய்யாக உருக்கி வைத்துக்கொள்க.

இரண்டாவது:—அபினி வராகனெடை 1, இலிங்கம் வராகனெடை 1, இவை இரண்டினையு மரைத்து 10 மாத்திரைகளாகச் செய்து, தனித்தனி குடையப்பட்ட 10 ஜாதிக்காயில் 10 மாத்திரைகளையுஞ் செலுத்திப் பின்னர் ஜாதிக்காயைக் குடைந்தது களாலடைத்து வைத்துக்கொள்க.

மூன்றாவது:—ஒரு கருங்கோழியின் மூக்கையும் முழங்காலுக்குக் கீழ்ப்புறத்தையும் நறுக்கிச் சிறகுகளைக் களைந்து, வயிற்றினைக் கீறிக் குடல், ஈரல் தீனிப்பை முதலிய உள்ளுறுப்புக்களை நீக்கி முன்னர்ச் சித்தஞ்செய்துள்ள ஜாதிக்காய்களைச் செலுத்திப் பட்டுநூலால் தைத்து, ஒரு இருப்புக் கடாயினில் முதலில் சித்தப்படுத்திய நெய்யை விட்டு ஷை கோழியைப் புரட்டிப் புரட்டிச் சிவந்து நெய் எல்லாம் சுவரவும், நீர் சுண்டிச் சிவக்கவும் ஏற்றபடி வறுத்துக் கல்லுரலிலிட்டு, என்புகளெல்லாம் மசியக் கடப்பாரையால் இடித்துப் பின்னரதனைக் கல்வத்திலிட்டு மெழுகு பதம் வரும்வரையி லரைத்துக்கொள்க. அதற்கு நெய் பசை போதுமானதாக இல்லாவிடின் வேறு பசுவின் நெய்யை வேண்டுமளவிற்குச் சேர்த்துக்கொள்க.

பிரயோகம்:—இதனைக் கடலைப்பிரமாணம் தினமிருவேளை கொள்ள கிராணி, உஷ்ணபேதி, இரத்தபேதி முதலியனவும் எத்தகைய பழைய பேதிகளும் குணமாகும்.

பத்தியம்:—காரசாரமான பதார்த்தங்களை நீக்கி, எளிதில் ஜீர்ணிக்கத்தக்கக் கஞ்சியையேனும், புனல்பாகமேனும், பால் சேர்த்துப் பருக. பிணி நடுவான நிலையிலிருப்பின் இருமுறை வடித்த அன்னத்தோடு காரமதிகஞ் சேராத முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு முதலியவற்றைப் பொரிக்குழம்பாகச் செய்துபயோகிக்க.

## ஷர்பத்து இலம்பகம்

### 315. ஷர்பத்தே தீனூர்

காசினி விதை தோலா 2, காசினிவேர் தோலா 4, ரோஜா மொக்கு தோலா 2, வெண்டாமரைப்பூ தோலா 1, குலேகாவுஸ் பான் தோலா 1, * கஸூஸ் விதை தோலா $1\frac{1}{2}$.

இவை தம்மை நறுக்கி $1\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு; 24-மணி நேரம் ஊறினபின் அரைபடியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து 20 பலம் சீனிசருக்கரைச் சேர்த்துத் தேன் பதமுறக் காய்ச்சுக.

வேளைக்கு 1 தோலாவிகிதம் இரண்டு பங்கு ஜலத்துடன் கலந்து, காலை மாலை உண்க.

### 316. வேறு

கஸூஸ்விதை தோலா 1, அனிஸூன் தோலா 3, சோம்பு தோலா 3, மணித்தக்காளிகாய் வற்றல் தோலா 3, குலே நீலோபர் (தாமரைப்பூ) தோலா 3, குலேகாவுஸ்பான் தோலா 3, ரோஜாமொக்கு தோலா 1, காசினிவேர் தோலா 5.

இவையிற்றை நறுக்கி 3 படி ஜலத்தில் போட்டு 24-மணி நேரம் ஊறவைத்து ஒரு படியாகக் காய்ச்சி வடித்து ஒரு வீசை சீனி சருக்கரையுடன் சேர்த்து, தேன் பதமாகக் காய்ச்சுக. தினம் ஒன்று அல்லது இரண்டு தோலா ஷர்பத்துடன் இரு மடங்கு தண்ணீர் கலந்து உண்க. இதனால் குடல், இரைப்பை முதலியவற்றின் மெலிவும், மலக்கட்டு, வீக்கம், பக்கநோய், ஈரல் நோய், வயிற்றுநோய், நீர்ப்பைச்சூடு, நீரடைப்பு, முதலிய பிணிகள் விரைவில் தீரும்.

---

* ஒவ்வொரு பாகங்களிலும் இதனைக் கஷாயமிடும்போதெல்லாம் கிழிகட்டிப்போட்டுப் போதிய அளவு கஷாயம் சுண்டியபின் கிழிகட்டிருப்பதை அழுத்திப் பிசைந்து சத்துவாங்காமல் வெளிப்படுத்தி மற்றவைகளைப் பிசைந்து வடித்துக்கொள்க.

### 317. ஜவாரிஷ் முஜியேமேதா

ரோஜாமொக்கு தோலா 3, விதையில்லாத திராக்ஷை தோலா 5, ஜெரிஸ் தோலா 5, கர்தேஸமாக் * மாஷா 4, தணியா மாஷா 4, மூங்கிலுப்பு தோலா $\frac{1}{4}$, ஜாதிப்பத்திரி தோலா $\frac{1}{4}$, ஏலக்காய்வித்துத் தோலா $\frac{1}{4}$, அப்புள்ளாஸ் தோலா $\frac{1}{4}$, ஜாஹர்மோரா தோலா $\frac{1}{4}$, ரோஜாமொக்குவிதை தோலா $\frac{1}{4}$, அகிற்கட்டைச் சூரணம் தோலா $\frac{1}{4}$, சந்தனத்தூள் தோலா $\frac{1}{4}$, ஜடாமாஞ்சில் தோலா $\frac{1}{4}$, ரூமஸ்தகி தோலா $\frac{1}{4}$, துருஞ்சிப்பழத்தோல் தோலா 1 தித்திப்பு மாதளம்பழ ரசம் சேர் 1, புளிப்பு மாதளம்பழ ரசம் சேர் 1, துருஞ்சிப்பழரசம் சேர் 1.

இவற்றுள் சூர்ணிக்க வேண்டுவனவற்றைச் சூர்ணித்தும் மற்றவற்றைக் கூறப்பட்ட ஏதேனும் ஒரு பழச்சாற்றிலரைத்தும், மூங்கிலுப்பு, ஜாஹர்மோரா, இவையிரண்டையும் பன்னீரால் 2, 3 நாளரைத்தும், 2 வீசை சீனி சருக்கரையுடன் மேல்கூறிய பழரசங்களை விட்டு, சூர்ணத்துடன் அரைத்துவைத்திருக்கும் சரக்குகளையும் இட்டுக்கலக்கித் தேன் பதமாகக் காய்ச்சி வைத்துக்கொள்க.

இதனில் $\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ தோலாவரை கையில்விட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக ஒருநாளைக்கு மும்முறை சுவைக்க இருதயம், மண்ணீரல், குண்டிக்காய், சம்பந்தமான சகல ரோகங்களும் நீங்கி அவைகள் பலஹீனமுந் தீர்ந்து பித்தவாயு சம்பந்தமான பிணிகளையும் அரோசிகத்தையும் மலபந்தத்தையும் பரிகரிக்கும்.

### 318. ஷர்பத்தே ஜூபா

ஜூபா தோலா $1\frac{1}{2}$, அதிமதுரம் தோலா $1\frac{1}{2}$, சோம்பு தோலா $\frac{1}{2}$, மையூர்சிகி தோலா $\frac{1}{8}$, கற்பஸ் தோலா $\frac{1}{2}$, அஞ்சூர் பழம் 10, விரையில்லாத திராக்ஷைப்பழம் 40, வெந்தயம் தோலா $\frac{3}{4}$, குல்கந்து பலம் 2.

இவைகளை இடித்து, 1 படி ஜலத்தில் நன்றாய்க்கரைத்து, $\frac{1}{2}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, அதனுள் 12 பலம் நாட்டுச் சருக்கரையும், 6 தோலா சீனாகற்கண்டையும் போட்டுக் கரைத்து, வடிகட்டி, தேன்பதமாகக் காய்ச்சுக.

---

* மாஷா 8 குன்றி.

இதனில் 1 தோலா ஷர்பத்தோடு 2 தோலா சுத்த ஜலம் சேர்த்துத் தினமிருவேளை உட்கொண்டுவர, சீதள சம்பந்தமான இருமல் குணப்படும்.

## 319, ஆளிவிரை ஷர்பத்து

ஐந்து பலம் ஆளிவிரையை 2 படி ஜலம்விட்டு விதை வேக எரித்து, வடித்துக் கஞ்சியை எடுத்து, அதனோடு 1 வீசை சீனி சருக்கரை சேர்த்து, தேன்பதமுறக் காய்ச்சி எடுத்துக்கொள்க. பின் $\frac{1}{2}$ தோலா உயர்ந்த சந்தன அத்தர் $\frac{1}{2}$ தோலா குங்குமப்பூ, இவைகளைக் கல்வத்திலிட்டுப் பன்னீர்விட் டரைத்து ஷர்பத்தோடு கலக்க.

இதனை வேளைக்கு $\frac{3}{4}$ பலம் விகிதம் இருமடங்கு ஜலத்துடன் கலந்து தினமிருவேளை உட்கொள்ள வயிற்றிலுண்டான விரணம், நீர் எரிச்சல், வெள்ளை முதலியன குணமாகும்.

## 320. வாதுமை ஷர்பத்து.

1 வீசை நல்ல வாதுமைக்கொட்டையை உடைத்துப் பருப்பெடுத்து வெந்நீரில் ஊறப்போட்டு மேல்தோலை உரித்தெடுத்துச் சிறிது வெந்நீர் தெளித்தரைத்து, தண்ணீர் பெய்து பிசைந்து பால் பிழிந்தெடுக்க.

இவ்வாறு பலமுறையாகக் கொஞ்சங் கொஞ்சமாக ஜலந் தெளித்தரைத்து, அதனிலுள்ள சத்தெல்லாம் கிடைக்கும்படியும் அரைப்படிக்கு மேற்படாமலும் பிழிந்தெடுத்து வடிகட்டி அதனோடு $1\frac{1}{2}$ வீசை ஆஸ்க்காசருக்கரை சேர்த்துத் தேன்பதமாகக் காய்ச்சுக.

இதனை வேளைக்கு 1 பலம் நான்குபங்கு பாலோடேனும் நீரோடேனும் கலந்து தினம் இருநேரம் பருகிவர, தாதுவிருத்தி உண்டாகும். உஷ்ணம் தணியும்.

## 321. அத்திப்பழ ஷர்பத்து

தேனில் பதப்படுத்திய சீமை அத்திப்பழம் பலம் 2, சோம்பு பலம் 2, ரோஜாமொக்கு பலம் 4.

இவைகளை 3 படி வெந்நீரில் 24 மணிநேரம் ஊறவைத்து, மறுநாள் சிறுக எரித்து $1\frac{1}{2}$ படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி, அதனுடன் 48 பலம் சீனி சருக்கரை சேர்த்துத்

தேன் பதமாகக்காய்ச்சுக மலப்பிரவர்த்தியாகவேண்டின் காலை நேரத்தில் 1 அல்லது 1½ பலம் ஷர்பத்துடன் 3 பங்கு தண்ணீர் கலந்து சாப்பிடின் இரண்டொருமுறை விரேசனமாகும்; சூடு தணியும். வேண்டுமாயின் இதனுடன் 1½ தோலா ரேவல்சின்னிப் பாலை வாதுமை எண்ணெய்விட்டு நெகிழ அரைத்து, நெய்விட்டு மத்தித்து ஷர்பத்தில் கலக்கி வைத்துக்கொண்டு முன்போல் கொள்ளலாம். இது 5, 6 முறை விரேசனமாதற்கு உரியதாகும்.

### 322. ஷர்பத்தே முறக்கம்

சுண்ணும்பு நீங்கிய இஞ்சிரசம் சேர் 1, எலுமிச்சம் பழரசம் சேர் 1, சீமைக்காடி சேர் 1. இவைகளுடன் 6 சேர் ஆஸ்கா சருக்கரை சேர்த்துத் தேன்பதமாகக்காய்ச்சி அதனுடன் ½ சேர் நல்ல தேனைக் கூட்டி 15 நாள் வரை உபயோகிக்காமல் வைத்திருந்து, பிரயோகிக்க.

வேளைக்கு ½ முதல் ¾ தோலா விகிதம் தினம் 3 முறைக் கையில் விட்டுச் சிறிது சிறிதாக நாவில் சுவைத்து வர, பித்தத்தால் உண்டான மார் எரிச்சல், மயக்கம், வாந்தி, அரோசிகம் தீரும்.

குறிப்பு:—இந்த ஷர்பத்தில் சைந்தலவணம், கறுப்புப்பு, வளையலுப்பு, லாகூர் உப்பு, சீரகம் வகைக்குத் தோலா 2, பொன் மேனியாக வறுத்த பெருங்காயம் தோலா ¼. இவைகளைக் கல்வத்திலிட்டு, பழச்சாற்றிலாவது காடியிலாவது நெகிழ அரைத்துக் கலக்கி முன்போல் உபயோகிக்க ஏப்பம், வயிற்றுவலி, அஜீர்ணம் வயிற்றுப்பிசம் முதலியன குணமாகும்.

### 323. நன்னாரி ஷர்பத்து

25 பலம் புதிய நன்னாரிவேரை ஒன்றிரண்டாய் இடித்து 2½ படி சுத்த ஜலத்தில் போட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் ஒரு படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசையாமல் வடிகட்டி இருபத்தைந்து பலம் சீனி கற்கண்டு கூட்டித் தேன் பதமாகக் காய்ச்சி சீசாவிலிடவும். இதனை வேளைக்கு இரண்டுதோலா விகிதம் இரண்டு பங்கு சுத்த ஜலத்தோடுகலந்து, தினம் இருவேளை சாப்பிட நீர் சுருக்கு, பிரமேகம், தேகக்காங்கை, கண்ணெரிவு முதலியவை நீங்கும்.

## 324. வெண்டாமரை ஷர்பத்து

நிழலிலுலர்த்திய நான்கு ராத்தல் * வெண்டாமரைப்பூவின் இதழைப் பாண்டத்திலிட்டு 2 † ராத்தல் சுத்த ஜலம் விட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் ¼ படியாகக் காய்ச்சி வடித்து இரண்டு ராத்தல் வெள்ளை சருக்கரை சேர்த்து தேன்பதமாகக் காய்ச்சி சீசாவிலிடவும். இதனை வேளைக்கு இரண்டு தோலா விகிதம் இரண்டுமடங்கு ஜலத்தோடுக்கலந்து தினம் இருநேரம் சாப்பிட மூலச்சூடு மேகக்காங்கை, தாகம் முதலியவை நீங்கும். நீண்ட நாள் உபயோகிப்பாராயின் நபும்சகத்திற்கு இடங்கொடுக்கும்.

## 325. சந்தன ஷர்பத்து

10 பலம் செஞ்சந்தனச் சிராவை ஒன்றிரண்டா யிடித்து 2½ படி ஜலத்தில் போட்டு ஒரு இரவு ஊறவைத்து ½ படியாகக் காய்ச்சி வடித்து பத்துபலம் பன்னீருடன் கலந்து ஒரு வீசை சருக்கரைக் கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலா விகிதம் இரண்டு பங்கு ஜலத்தோடு கலக்கி தினம் இருநேரம் சாப்பிட வெள்ளை, மூலச்சூடு, பிரமேகம் முதலியவை தீரும்.

## 326. துரிஞ்சிபழம் ஷர்பத்து

மேல் தோல் நீக்கிப் பிசைந்து வடிகட்டிய ½ படி துரிஞ்சிபழ ரசத்தோடு ஒரு வீசை சீனி கற்கண்டு கூட்டித் தேன் பதமாகக் காய்ச்சி சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலா விகிதம் இரண்டுபங்கு ஜலத்தோடு கலக்கித் தினம் இருநேரம் சாப்பிட பித்தக் குமட்டல், மார் எரிச்சல், மயக்கம் முதலியவை நீங்கும்.

## 327. துரிஞ்சி ஷர்பத்து

ஒரு சேர் துரிஞ்சிபழத்தோலை ஒரு படி ஜலத்தில் போட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் அரைபடியாகக் காய்ச்சி வடிகட்டி அதனுடன் ½ வீசை சருக்கரை சேர்த்துத் தேன்பதமாகக் காய்ச்சி சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலாவிகிதம்

---

* பச்சையாக இருப்பின் ஒரு ராத்தல் ஜலம் போதுமானது.

† ராத்தல் 12¼ பலம்.

இரண்டுபங்கு ஜலத்தோடு கலக்கித் தினம் இருநேரம் சாப்பிட்டு வர பித்தக் குமட்டல், மார் எரிச்சல், மயக்கம், அரோசிகம் முதலியவை தீரும்.

### 328. நாகப்பழம் ஷர்பத்து

நன்றாய்ப் பிசைந்து வடிகட்டிய தனி நாகப்பழரசம் ½ படியுடன் ஒருவீசை சீனைகற்கண்டு கூட்டித் தேன்பதமாகக்காய்ச்சி ஆறினபின் ஒரு வராகனெடை குங்குமப்பூவையும் ¼ வராகனெடை பச்சைக்கருப்பூரத்தையும் 2½ பலம் பன்னீர்விட்டுக் கல்வத்தில் அரைத்து ஷர்பத்தில் கலக்கிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலா விகிதம் இருபங்கு ஜலத்தோடு கலக்கித் தினம் இருநேரம் சாப்பிட இரத்தமூலம், பெரும்பாடு, அதிநீர் தாகம் முதலியவை குணமாகும்.

### 329. காடி ஷர்பத்து

அரைபடி பிரஞ்சிகாடியுடன் 1½ வீசை சருக்கரை சேர்த்துத் தேன் பதமாகக் காய்ச்சி ஒருபலம் ஏலக்காய் அரிசியை 5 பலம் பன்னீரில் நெகிழ அரைத்துக் கலக்கிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலா விகிதம் இருபங்கு ஜலத்தோடு கலக்கித் தினம் இருநேரம் சாப்பிட ஜீரணசக்தியை யுண்டாக்குவதுடன் பித்த மயக்கம், வாந்தி, குமட்டல், அரோசிகம் முதலியவற்றை நீக்கும்.

### 330. காவுஷ்பான் ஷர்பத்து

குலேகாவுஸ்பான் தோலா 2, குலேபனப்ஷா, குலேசுர்க். உஷ்தகதோஷ், துளசி விதை வகைக்கு மாஷா 9, பாதஞ்சி போயா தோலா 1. குலே நீலோபர் தோலா 1. இவை தம்மை அரைபடி ஜலத்தில் ஒரு இரவு ஊறப்போட்டு ¼ படியாகக் காய்ச்சி பிசைந்து வடிகட்டி 5 பலம் பன்னீருடன் கலந்து 15 பலம் சீனைகற்கண்டிட்டுத் தேன்பதமாகக் காய்ச்சிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலாவிகிதம் இருபங்கு ஜலத்தோடு கலக்கித் தினம் காலை மாலை சாப்பிட்டுவர, பித்த உபத்திரவங்கள் வாய் துர்நாற்றம் முதலியவை குணமாகும்.

### 331. ஆப்பில் ஷர்பத்து

தோலையும் விதையையும் போக்கி இரும்பு படாமல் அம்மியில் அரைத்துப் பிழிந்து வடிகட்டிய ½ படி ஆப்பில் ரசத்துடன்

காவுஷ்பான், ஏலக்காய், சீந்தல்கொடி வகைக்கு ஒரு பலமாக ½ படி ஜலத்தில்போட்டு ⅛ படியாகக் காய்ச்சி வடித்த கஷாயம் சேர்த்து அரைவீசை சருக்கரையுடன் கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலா விகிதம் இருபங்கு ஜலத்தோடு கலக்கித் தினம் இருநேரம் சாப்பிட மனோ வுற்சாகம், இருதயம், ஜீரணப்பை முதலியவைகட்கு வலுவைக் கொடுக்கும் தாதுவிருத்தியை விசேஷிக்கச் செய்யும்.

## 332. ஜரிஸ் ஷர்பத்து

ஜரிஸ்பழம் பலம் 5, பழயபுளி பலம் 7½ இவைகளை 4 படி வெந்நீரில் இரண்டுமணிநேரம் ஊறப்போட்டுச் சிறிது நேரங் காய்ச்சி பிசைந்து வடித்து அதனோடு ¾ வீசை சருக்கரை சேர்த்துத் தேன் பதமாகக் காய்ச்சிச் சீசாவிலிடுக இதனை வேளைக்கு இரண்டு தோலாவிகிதம் இருபங்கு ஜலத்தோடு கலந்து தினம் இருநேரம் சாப்பிட குமட்டல், வாந்தி, மயக்கம், அரோசிகம் முதலியவை தீரும்.

## 333. உஷ்தகதோஷ் ஷர்பத்து

உஷ்தகதோஷ் தோலா 2, அதிமதுரம் தோலா 1, சீமை துத்திவிதை தோலா 1, பர்க்கே பனப்ஷா தோலா 1, விரை திராட்சைபழம் 7, சிப்பிஸ்தான் பழம் (சீமை நருவிளம்பழம்) 40, உன்னாப்பழம் 30 இவை தம்மை நறுக்கி ½ படி ஜலத்தில்போட்டு ¼ படியாகச் சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி 12 பலம் சருக்கரையிட்டுத் தேன் பதமாகக் காய்ச்சி அதனோடு தேன் 6 பலங் கூட்டிக் குலுக்கிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டுதோலா விகிதம் இருமடங்கு ஜலத்தோடு கலந்து தினம் இருநேரம் சாப்பிட கபசுரம், மாரடைப்பு, மார்வலி, இருமல், நுரையீரல், தோஷம் முதலியவை நிவர்த்தியாகும்.

## 334. ஆல்பகரா ஷர்பத்து

ஆல்பகராபழம் 50, தோக்மே குருபா தோலா 1, தோக்மே கியாரெயின் தோலா 1, தோக்மேகாகூ தோலா 1, போஸ்தே துரிஞ்சி தோலா 1, ஜரிஸ் தோலா 2 இவைகளை 1 படி ஜலத்தில் ஊறப்போட்டு அரைபாகம் சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி வீசை சருக்கரை கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சி அதனுடன்

5 பலம் நல்லத் தேன்கூட்டிக் குலுக்கிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலா விகிதம் இருமடங்கு ஜலத்தோடு கலந்து தினம் இருநேரம் சாப்பிடப் பித்தம், கோபம், தலைவலி, தேக எரிச்சல், மயக்கம், மலபந்தம் தீரும்.

## 335. ரோஜாபூ ஷர்பத்து

ஒரு ராத்தல் ரோஜாபூவை நான்கு ராத்தல் பன்னீரிலிட்டு மூன்றுராத்தலாகும்படி சிறுதீயில் எரித்துப் பிசைந்து வடிகட்டி அதனில் மற்றொரு ராத்தல் புதிய ரோஜா புஷ்பத்தைச் சேர்த்து முன்போலெரித்து இரண்டு ராத்தலாகக் காய்ச்சி வடிகட்டி மீண்டும் மற்றொரு ராத்தல் புஷ்பத்தைக்கூட்டி ஒரு ராத்தலாகக் காய்ச்சி வடித்து ஒருராத்தல் சருக்கரைக் கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு மூன்று தோலா விகிதம் இருமடங்கு சுத்தஜலத்தோடுக் கலக்கிச் சாப்பிடச் சீதபேதி, மலபந்தம், மூலச்சூடு, நீர்பை கொதிப்பு முதலியவைகள் குணமாகும்.

## 336. ஷர்பத்தே குள்நார்

10 பலம் நாகப்பட்டையும் இரண்டரைப்பலம் தேவதாரு கட்டையையும் நன்றாய் இடித்து ஒரு பாண்டத்தில் போட்டு 4 படி ஜலம் விட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் இரண்டு படியாகக் காய்ச்சி வடித்து இரண்டு வீசை சருக்கரையுடன் சேர்த்துத் தேன் பதமாகக் காய்ச்சிச் சீசாவிலிடுக.

இதனை வேளைக்கு இரண்டு தோலா விகிதம் மூன்று பங்கு ஜலத்தோடுக் கலந்து தினம் இரண்டு நேரம் சாப்பிட்டு வர வெள்ளை அதிநீர், தாகம், சீதபேதி, பெரும்பாடு, இரத்தபேதி முதலியவை குணமாகும்.

## 337. ஷர்பத்தே ஈஜாஜ்

உன்னாப் பழம் 30, சிப்பிஸ்தான் பழம் 60, சுத்திசெய்த அதிமதுரம், துஃமேகபாஜி, துஃமேகித்மி, (சீமைதுத்தி விதை) குலே நீலோபர், (வெண்தாமரைப்பூ) பனப்ஷா, வகைக்கு தோலா $1\frac{1}{2}$, பேதானா தோலா $\frac{1}{2}$, கருவேலம்பிசின் மாஷா 9. இவையிற்றை ஒன்றிரண்டாய் நறுக்கி ஒருபடி ஜலத்தில் போட்டு

நான்கில் ஒன்ருய் காய்ச்சி வடித்து 15 பலம் வெள்ளை சருக்கரைச் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்து அதனில் 9 மாஷா ப்ாதம் பிசினை பொடிசெய்து போட்டுக் குலுக்கிச் சீசாவிலிடுக.

வேளைக்கு 1 முதல் 3 தோலா வரையில் இருமடங்கு ஜலத்துடன் கலந்து நினம் இரண்டு மூன்று வேளை சாப்பிட மேக ஜ்வரம், கைகா லெரிச்சல், கபம் வராது புகைந்து இருமல், க்ஷயம் முதலியவைகளை பரிகரிக்கும்.

## 338. ஷர்பத்தே காஜர்

அரைவீசை சிவப்பு முள்ளங்கியைச் சிறு துண்டுகளாக அரிந்து மட்பாண்டத்தில்போட்டு 4 படி ஜலம் விட்டு சிறுதீயில் எரித்து வெந்து குழையும் பதத்தில் நன்ருய் பிசைந்து இரண்டு மூன்று முறை வடித்து அரைவீசை சருக்கரைக்கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சிச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்கு ஒரு பலம் வீதம் இருமடங்கு ஜலம் சேர்த்து இரண்டு வேளை உண்டுவர இருதயத்திற்கு வலுவுண்டாக்கும். இரத்தம் சுத்தி கரிக்கப்பட்டு இந்திரியம் கட்டும். மனேநிடத்தை விசேடப் படுத்தும்.

## 339. ஷர்பத்தே பனப்ஷா

ஆறுபலம் பர்கே பனப்ஷாவை ஒரு ராத்தல் சுத்த ஜலத்தில் 4 ஜாமம் ஊறப்போட்டுச் சிறுதீயில்காய்ச்சி நான்கிலொன்ருய்ச்சுண்ட கவனித்து வடித்து 12 பலம் வெள்ளை சருக்கரைச் சேர்த்து தேன்பதமாகக் காய்ச்சுக. வேளைக்கு 1 முதல் 3 தோலா ஷர்பத்தை இருமடங்கு ஜலத்தில் விட்டுச் சாப்பிடப் பக்கசூலை, மார்நோய், தலைவலி முதலியவைகள் நிவர்த்தியாகும்.

## 340. ஷர்பத்தே பூஜூரி

துக்மே காஸ்னி, சோம்பு, சர்பூஜவிதை வகைக்குத் தோலா 1, காஸ்னிவேர், சோம்புவேர் வகைக்குத் தோலா $1\frac{1}{2}$ இவைகளை இடித்துப் பாண்டத்தில் போட்டு 1 படி ஜலம்விட்டு $\frac{1}{4}$ படியாகக் காய்ச்சி 12 பலம் வெள்ளை சருக்கரைச் சேர்த்துத் தேன் பதமாகக் காய்ச்சிச் சீசாவிலிடுக இதனில் வேளைக்கு 1 முதல் 3 தோலா இருமடங்கு ஜலத்தில் கலந்து தினமிருவேளை

சாப்பிட மண்ணீரல், குண்டிக்காய், மூளை முதலிய கருவிகளுக்குப் பலத்தைக் கொடுத்து அவைகளின் ஒழுங்கீனத்தைச் சரிபடுத்தும். அளவுக்குமிஞ்சி உற்பவித்த பித்தத்தைச் சமனப்படுத்தும் தேகத்திலுள்ள தூர்நீரை நீர்மூலமாக வெளிப்படுத்தும். இந்த ஷர்பத்து சம சீதோஷ்ன சரீரத்திற்குப் பொருத்தமானது.

341. வேறு

காஸ்னிவேர் தோலா 3, சோம்புவேர் தோலா 3, காஸ்னி விதை தோலா 2, சோம்பு தோலா 2, துஃமே கர்பஸ் பீக்கே கர்பஸ் தோலா 1, துஃமே கஸூஸ் தோலா ½, இவற்றுள் கஸூஸ்விதையை கிழிகட்டியும் மற்றவற்றை ஒன்றிரண்டாக இடித்தும் ஒரு பாண்டத்தில் போட்டு இரண்டுபடி ஜலம்விட்டு நான்கிலொன்றாகக் காய்ச்சி வடித்து ½ வீசை வெள்ளை சருக்கரைக் கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சி வேளைக்கு 1 முதல் 3 தோலா ஷர்பத்தில் இருமடங்கு ஜலம் சேர்த்து தினம் இரு வேளை சாப்பிட மண்ணீரல், குண்டிக்காய், மலப்பை முதலிய வற்றிற்கு லாபத்தை யுண்டாக்கி குளிர்சுரம் முதலியவைகளை குணப்படுத்தும். இந்த ஷர்பத்து உஷ்ண சரீரத்திற்கு உத்தமமானது.

342. வேறு

காஸ்னிவேர் தோலா 2, காஸ்னிவிதை தோலா 3, கர்பூஜா விதை, வெள்ளிரிவிதை, முலாம்பழ விதை வகைக்கு தோலா 1½ இவற்றுள் விதைகளை அரைத்துப் பால் எடுத்தும் மற்ற சரக்கை நறுக்கியும் ஒரு பாண்டத்தில் போட்டு ஒருபடி ஜலம்விட்டு ஊறவைத்து நான்கிலொன்றாகக் காய்ச்சி வடித்து 10 பலம் சருக்கரைக்கூட்டிப் பதமாகக் காய்ச்சிப் பத்திரப்படுத்துக. இதனில் வேளைக்கு 1 முதல் 3 தோலா விகிதம் இருமடங்கு ஜலம் கூட்டித் தினமிருவேளை சாப்பிடத் தேககாங்கை, இருதயத்துடிப்பு முதலியவற்றை குணப்படுத்தும். மண்ணீரல், குண்டிக்காய் முதலியவற்றிற்கு லாபத்தையுண்டாக்கும் இந்த ஷர்பத்து அதிக ஊஷ்ண சரீரத்திற்குப் பொருத்தமானது.

## தீநீர் இலம்பகம்

### (ஆவிநீர் வகுப்பு)

### 343. குலேகாவஸ்பான் அரக்

அரைவீசை காவுஸ்பான் புஷ்பத்தை ஒரு மட்பாண்டத்திலாவது ஈயம்பூசிய செப்பு பாத்திரத்திலாவது போட்டு 4½ படி சுத்தஜலம்விட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் பாக இலம்பகத்தில் கூறப்பட்ட முதலாவது திராவகவாலை யந்திரத்தில் விட்டுச் சிறு தீயாக எரித்து இரண்டேகால் படிக்குக் குறையாமல் தீநீர் வாங்கவும்.

பிரயோகம்:—வேளைக்கு 1 முதல் 2 அவுன்ஸ் தீநீரில் கலப்பில்லாத தங்கத் தகட்டையேனும், மோதிரத்தையேனும் காய்ச்சி காய்ச்சி ஏழுமுறை தோய்த்துப் பின்னர் தீநீரைச் சாப்பிடவும். இங்ஙனம் தினம் இரண்டு மூன்று வேளை உண்டுவர, அதிக உஷ்ணத்தாலுண்டான நாவறட்சி, பித்தம், நீர் எரிச்சல், நீர்சுருக்கு, மேககாங்கை, ஜ்வரம் முதலியவைகள் சொஸ்தமாகும். இவ்வாறே காவஸ்பான் இலையைப்போட்டு ஊறவைத்து தீநீர் வாங்குவது உண்டு. இவைகளின் குணங்கள் யாவும் சிறிது ஏறத்தாழ ஒன்றுயிருப்பினும் இலையினின்றிறக்கிய தீநீரைவிட புஷ்பத்தினின்றிறக்கியது சாலச் சிறந்தது ஆகும்.

### 344. தாழம்பூ அரக்

அரை வீசை நிழலில் உலர்த்திய தாழம்பூவை நார் நாராகக் கிழித்து ஒரு மட்பாண்டத்திலிட்டு அதனில் 5 படி சுத்த ஜலம் விட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் வாலையிலிட்டு 2½ படி தீநீருக்குக் குறையாமல் வாங்கவும்.

பிரயோகம்:—இதனை வேளைக்கு ஒரு பலம் விகிதம் தினம் இரண்டு மூன்று வேளை சாப்பிட்டுக்கொண்டுவர, உஷ்ண சம்பந்தமான பல பிணிகளையும் பரிகரிக்கும் அம்மை கண்டவர்களுக்குக்கொடுக்கத் தேகத்தின் கொதிப்பை யடக்கும். இங்ஙனமே நன்னாரி, காஸ்னியிலை, மணித்தக்காளி வற்றல் அல்லது இலை,

சந்தனக்கட்டை முதலியவைகளைச்செய்து முற்கூறப்பட்ட ரோகங்களுக்கெல்லாம் உபயோகிக்கலாம். வியாதி கடின நிலைமையில் இருப்பதாக புலப்பட்டால் இந்த நீரை தினம் 5, 7 வேளை வரையிலும் கொடுக்கலாம்.

### 345. ஓம அரக்

ஒருவிசை ஓமத்தை இடித்து ஒருமட்பாண்டத்தில்போட்டு 8 படி ஜலம்விட்டு ஒரு இறவு ஊறவைத்து மறுநாள் வாலையில் இட்டு 4 படிக்குக் குறையாமல் நீர் வாங்குக.

பிரயோகம்:—இதனை வேளைக்கு ஒரு பலமாக தினம் 4, 5 முறை சாப்பிட அஜீரணம், பேதி, வாந்தி முதலியவைகள் குணமாகும்.

### 346. கருப்பூராதி அரக்

ஒரு விசை ஓமத்தையும், 10 பலம் கருப்பூரத்தையும் இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 6 படி ஜலம்விட்டு ஒரு இரவெல்லாம் ஊறவைத்து மறுநாள் வாலையிலிட்டு 3½ படிக்குக் குறையாமல் நீர் வாங்குக. இதனில் வேளைக்கு 1 முதல் இரண்டு பலம் உட்கொள்ள இரண்டு மூன்று வேளையில் அஜீர்ணம் புளியேப்பம், வயற்றுப்பிசம்,வாந்திபேதி முதலியவைகள் தீரும். மாத்திரை இலம்பகத்தில் கூறப்பட்ட விஷபேதி சங்காரணி என்னும் மாத்திரையுடன் உட்கொள்ள வாந்திபேதி எவ்விதத்திலும் குணமாகும் என்றறிக.

### 347. சோம்பு அரக்

ஒருவிசை சோம்பை இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 12 படி ஜலம்விட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் வாலையிலிட்டு 6 படிக்குக் குறையாமல் ஆவிநீர் வாங்குக.

பிரயோகம்:—இதனில் வேளைக்கு ஒரு பலம் தினம் 4, 5 முறை உண்டுவர தாகத்தை அடக்கும். சிறுநீர் மலம் முதலியவைகளின் ஒழுங்கீனத்தைச் சரிப்படுத்தும். பிரசவித்த ஸ்த்ரீகட்கு வெள்ளி, தங்கம் முதலிய பாத்திரத்தைக் காயவைத்து அதில் விட்டு ஆறினபின் உபயோகப்படுத்த தண்ணீர் தாகம் அடங்கும். கருப்பிணியாக இருக்கும்போது இதனை உண்டுவர தேகத்தில் நீரேற்றம உண்டாகாது.

## 348. பாலரக்

மூங்கிலுப்பு பலம் $\frac{1}{2}$, சீந்தில் சருக்கரை பலம் $\frac{1}{2}$, காஸ்னி விதை பலம் $\frac{1}{4}$, மணித்தக்காளி வற்றல் பலம் $\frac{1}{4}$. இவைகளை ஒன்றிரண்டாக நறுக்கி ஒரு மட்பாண்டத்தில் போட்டு அதனில் $4\frac{1}{2}$ படி பசுவின்பால் விட்டு ஒருமணிநேரம் ஊறவிட்டு வாலையிலிட்டு இரண்டரைப்படிக்குக் குறையாமல் ஆவிநீர் வாங்குக. பால்பொங்கும் குணமுடையதாதலால் மெதுவாக எரித்து வாங்குவதுடன் வாலையின் அடிப்பாண்டம் சற்று பெரிதாக இருத்தல் வேண்டும்.

பிரயோகம்:—வேளைக்கு 1 முதல் 2 அவுன்ஸ் வீதம் தினம் இரண்டு மூன்று நேரம் உண்டுவர உட்காய்ச்சல், நாவறட்சி, நீர்பிரளயம், நீர்ப்பைச் சூடு முதலியவைகள் குணமாகும். பலவீனத்தையும் கண்டித்துத் தேகம் கொழுமைபெறச்செய்யும்.

## 349. ஆவாரம்பூ அரக்

உலர்ந்த ஆவாரம்பூ பலம் $3\frac{1}{4}$, காவுஸ்பான்பூ பலம் $3\frac{1}{4}$, ஏலக்காய் பலம் 1. இவைகளை ஒரு மட்பாண்டத்தில் போட்டு அதனில் பாலேனும் ஜலமேனும் அல்லது இரண்டுங் கலந்தேனும் $4\frac{1}{2}$ படி விட்டு இரண்டுமணிநேரம் ஊறவைத்து வாலையிலிட்டு முன்போல் தீநீர் இரண்டேகால் படிக்குக் குறையாமல் வாங்குக.

பிரயோகம்:—வேளைக்கு 1 முதல் 2 அவுன்ஸ்வீதம் தினம் இரண்டு மூன்று நேரம் உண்டுவர தாகம், உட்காய்ச்சல், மதுமேகத்தாலுண்டான அதிகதாகம், நீர் பிரளயம், தேக எரிச்சல் முதலியன குணப்படும்.

## 350. புதினா அரக்

அரைவிசை நிழலில் உலர்த்திய புதினாவை ஒரு மட்பாண்டத்தில் போட்டு 5 படி ஜலம்விட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் வாலையிலிட்டு இரண்டரைப்படிக்குக் குறையாமல் ஆவிநீர் வாங்குக.

பிரயோகம்:—இதனை ஆகாரத்திற்கு முன் ஒருபலம் ஆவிநீரைக் கொள்ள ஜீரணசக்தியை விசேஷப்படுத்தும். பித்தமதிகரித்தலையும், ஜ்வரத்தையும் குணப்படுத்தும்.

## 351. சஞ்சீவி அரக்

சுக்கு தோலா 10, திப்பலி தோலா 10, மிளகு தோலா 10, மஞ்சள் கடுக்காய்த்தோல் தோலா 12, நெல்லிவற்றல் தோலா 8, தான்றிக்காய்த்தோல் தோலா 4, ஓமம் தோலா 4, வாய்விளங்கம் தோலா 4, சித்திரமூல வேர்பட்டை தோலா 5, கோரைக்கிழங்கு தோலா 4, பனங்கற்கண்டு சேர் 3, இவைகளையெல்லாம் நன்றாய் இடித்து ஒருமட்பாண்டத்தில் போட்டு 9 படி ஜலம்விட்டு அதனில் 10 தோலா புதிதாய் அராவிய நயப்பு இரும்புப்பொடியைப் போட்டுக்கலக்கி ஒருவாரம் ஊறவைத்து எட்டாவது நாள் மண்வாலையில் விட்டு முறைப்படி தீநீர் வாங்கவும். இதனை ஆகாரத்திற்குப்பின் 1 முதல் இரண்டு அவுன்ஸ் தீநீர் தினம் இருவேளையாக உண்ண மஞ்சட்காமாலை, குன்மக்கட்டி, மகோதரம், மூலம், வெண்குட்டம், இருமல், சொரிசிரங்கு, இளைப்பு, மார்நோய் முதலியவைகள் நிவர்த்தியாகும். தவிர, மண்ஈரலுக்கு வலுவைக் கொடுத்து இரத்தத்தை விருத்தியடையச் செய்வதில் மிகச் சிறந்தது.

பத்தியம்:—புளி, போகம், புகை இம் மூன்றையும் நீக்கல் வேண்டும்.

## 352. மாவுலஹம்

1. வெள்ளாட்டுக்கறி சேர் 12 (288-பலம்) விடைச்சாவல் 2, ஆண்கவுதாரி 5, காடை 10, புறாக்குஞ்சி 3, இவைகளின் கறிகளிலுள்ள கொழுப்புகளை நீக்கி ஒரு ஈயம் பூசிய ஜோடுதவலையில் போட்டு இருபத்தைந்து படி சுத்த ஜலம்விட்டுப் பின்னர், ஒரு வெள்ளைத்துணியில் அரிந்த வெங்காயம் பலம் 10, ஒன்றிரண்டாக இடித்த இலவங்கப்பத்திரி தோலா $2\frac{1}{2}$, இலவங்கப்பட்டை தோலா $2\frac{1}{2}$, கிராம்பு தோலா $\frac{1}{2}$, ஏலக்காய் தோலா $1\frac{1}{4}$, தனியா தோலா $1\frac{1}{4}$, இவைகளைத் தளர்ச்சியாக முடிச்சுகட்டிப் போட்டு ஜோடுதவலையின் வாயிக்கு ஈயம்பூசிய தட்டொன்றால் மூடி ஈரத்துணியால் வாய்மூடியைச் சுற்றிக்கட்டி அடுப்பேற்றிச் சிறு தீயில் எரித்துவருக. இங்ஙனம் செய்வதில் மணிநேரத்திற்கு ஒருமுறை ஜல்லிக்கரண்டியால் துழாவிக்கொடுத்துக் கொண்டுவர மாம்சம் குழைந்து, விட்ட ஜலம் அரைபாகம் சுண்டின அளவில் அடுப்பினின் றிறக்கி ஆறவிட்டு மத்தால் கடைந்து (கைபடாமல்) ரெட்டுத் துணியில் வடித்துக்கொள்க.

2. முதலாவது அங்கத்தில் கூறப்பட்ட மாம்சங்களை வேகப் போடுந் தருணத்தில் மற்றொரு ஈயம்பூசிய பாண்டத்தில் ஐந்துபடி சுத்தஜலம் விட்டு அதனில் குலேகாவுஸ்பான், காவுஸ்பான், பனப்ஷா, நீலோபர், சாலாமிசிரி, சக்காகுள்மிசிரி, பஹமனேசுருக், பஹமனே சுபேத், தூதரி சுபேத், வெங்காயவிதை, சல்ஜம், காஜர்விதை, துத்திவிதை, துருப்புவிதை, ஜர்னபாத் வகைக்குப் பலம் $1\frac{1}{4}$, ரோஜாமொக்கு தோலா $2\frac{1}{2}$, முதலியவைகளை ஒன்றிரண்டா யிடித்துப் போட்டு 10 மணிநேரம் ஊறினபின் சிறுக எரித்து இரண்டரைப்படியாகச் சுண்டக்காய்ச்சி, வடித்துக் கொள்க.

3. முதல் அங்கத்தில் கறியை வேகப்போட்ட ஜோடுதவலை யை நன்றாய் அலம்பி அதனில் நான்குபடி பசுவின்பாலும், பதினைந்துபலம் தேனும்விட்டு கெடுதலில்லாத 50 கோழிமுட்டையை ஓட்டுடன் உடைத்துப் போட்டுக் கலக்கி மீண்டும் இரண்டு கரும்புக்கோலை மேல்தோல் சீவி சிறு துண்டுகளாக நறுக்கி இடித்தும், விதை, தோல் முதலியவைகளைக் கழித்த கமலா, ஆப்பில், சாத்துக்குடி, மாதுளம் வகைக்கு ஆறுபழம் வீதம் அம்மிக்கல்லின்மீது வைத்துச் சிதைத்துக் கூட்டி முதலிரண்டு அங்கங்களினும் சித்தப்படுத்தியவைகளை விட்டுக்கலக்கி இரண்டு மணிநேரம் எரித்து வடித்துக் கொள்க.

4. மூன்றுநாளுக்கு முன்னமே ஊறப்போட்டு வைத்திருந்த இரண்டுபலம் எட்டிவிதையைக் கழுவிச் சிறுதுண்டுகளாக நறுக்கி அதனுடன் ஒன்றிரண்டாய் இடித்த சந்தனம், தணியா, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, ஏலக்காய், நன்னாரிவேர், கிருஷ்ணஅகரு வகைக்குத்தோலா $1\frac{1}{2}$, கிராம்பு வராகனெடை 2, ஆக இவைகளை ஈயம்பூசிய பாண்டத்தில் போட்டு அதனில் அசல் பன்னீர் பலம் 10, தாழம்பூ அரக் பலம் 10, காவுஸ்பான் அரக் பலம் 10 விட்டு ஒரு இரவு ஊறவைக்கவும்.

5. சுமார் இருபத்தைந்துபடி பிடிக்கும்படியான ஈயம் பூசிய ஜோடுதவலையில் மூன்றாவது நாலாவது அங்கங்களில் சித்தமானவைகளை விட்டுக் கலக்கி அதனில் சிறிதுபாகமெடுத்து பாக இலம்பகத்தில் கூறப்பட்ட ஜோடுதலை சம்பந்தமான வாலையில் விட்டு முடிச்சுகட்டும் பாகத்தில் குங்குமப்பூ குன்றி 16, பச்சைக் கருப்

பூரம் குன்றி 5, கஸ்தூரி குன்றி 5, ஏலக்காய் அரிசி தோலா $\frac{1}{4}$ முதலியவைகளை அரைத்து சீலையில் முடிந்துகட்டிப் பாகப்படி தீநீர்வாங்கவும் விட்ட அளவிற்கு அரைபாகத்திற்குமேல் வாங்கு வது பிரயோசனப்படக் கூடியதல்ல தவிர, தீநீர்வாங்கின ஒவ்வொருமுறையும் ஜோடுதவலையை சுத்தப்படுத்தி மீண்டும் முன்போல் சிறிதுபாகம் விட்டுத் தீநீர் வாங்குக. இங்ஙனம் சேர்ந்த தீநீரையெல்லாம் ஒருமிக்கக் கலந்து வைத்துக்கொள்க.

பிரயோகம்:—வேளைக்கு 1 முதல் 2 அவுன்ஸ் வீதம் தினம் இரண்டு மூன்று நேரம் ஆகாரத்திற்குமுன் உட்கொள்ள மூளைக்கும் இருதயத்திற்கும் பலமுண்டாக்கும். தாதுவிருத்தியும் உதிர பெருக்கத்தையும் உண்டாக்கித் தேகம் கொழுமைப் பெறச் செய்யும். க்ஷயரோகத்தில் இளைத்தார்க்கும் நாட்பட்டு வியாதியால் மெலிந்தார்க்கும் இது விசேடமான உணவாகும்.

குறிப்பு:—இந்தப் பாகத்தை ஆரம்பிக்கும்போது இரவுகாலமாக இருத்தல் வேண்டும். ஏனெனில் மாம்சம், கஷாயம் முதலியவைகள் எல்லாம் நெடுநேரம் காய்ச்சவேண்டுவதாதலால் பொழுது விடிவதற்குள் முடித்துக்கொண்ட பின்னர் பகலில் தீநீர் வாங்கும் பொருட்டு ஆரம்பிக்கலாம். கஷாயமிடுவதைப் பார்க்கிலும் தீநீர் வாங்குவது கவனிப்பு அதிகம் வேண்டுவதால் பகல் நேரமாய் இருத்தல் வேண்டும்.

## 353. வேறு

முன் செய்ததுபோலவே ஒரு ஈயம் பூசிய ஜோடுதவலையில் 4 படி ஜலம்விட்டு அதில் வயதாட்டுக்கறி சேர் 6, புறுக்குஞ்சு 3, காடை 20, கவுதாரி 4, கூவாச்சாவல் 2, சிட்டுக்குருவி 50, இவைகளின் கறிகளிலுள்ள கொழுப்பு முதலியவைகளைக் கழித்துச் சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டு, ஒன்றிரண்டாய் இடித்த இலவங்கப்பட்டை பலம் 1, கிராம்பு தோலா 1, ஏலக்காய் தோலா 1, இலவங்கப்பத்திரி பலம் $\frac{1}{2}$, அரிந்தவெங்காயம் பலம் 10. இவைகளை ஒரு சீலையில் தளர்ச்சியாகமுடிந்துபோட்டு ஜோடு தவலையின் வாயிக்கிருபுறமும் ஈயம் பூசிய தட்டொன்றால்மூடி ஈரத்துணியால் உள்ளாவி வெளிசெல்லாமல் வாய்ப்பொருத்தத்திற்குச் சுற்றி அடுப்பிலேற்றி அரைமணி நேரத்திற்கு ஒருமுறை அடிபிடிக்காமல்

துழாவிக்கொண்டிருந்து கறிவெந்து குழையும் பக்குவத்தில் மத்தால் கடைந்து ரெட்டுத்துணியில் வடித்து, ஆறினபின் அதனுடன் 4 படி பசுவின்பாலை விட்டு வைத்துக்கொள்க. பின்னர் காவுஸ்பான், சப்பாத்திப்பூ, நெல்லிவற்றல், திராட்சை, கச்சூர் காய், பாதரஞ்சிபோயா, கொட்டைக்கரந்தை புஷ்பம் வகைக்கு பலம் 1, உன்னுப்பழம், தாமரைப்பூ, உஷ்தகதோஷ், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, ரோஜாமொக்கு, காஸ்னிவிதை, சிவப்பு சந்தனத்தூள், மஞ்சள் சந்தனத்தூள், புருதேஆம்பூஸ், ஆனை நெருஞ்சிமுள் இவை வகைக்குப் பலம் $\frac{3}{4}$, பஹமனேசுபீத், பஹமனேசுருக், தூதுரிசுபேத், தூதுரிசுருக், முஸ்லீன் வகைக்குத் தோலா 4, இந்தர்ஜோ தோலா 1, இவைகளை ஒன்றிரண்டாயிடித்து ஒரு பாண்டத்திலிட்டு 4 படி ஜலம்விட்டு இரண்டுபடியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து முன் சித்தப்படுத்திய பால் சேர்ந்த கறிவெந்த ஜலத்தில் கலந்து முறைப்படி தீநீர்வாங்க முயற்சிக்கும்போது தீநீர் சொட்டும் பாகத்தில் குங்குமப்பூ, ஏலக்காய் அரிசி, பச்சைக்கருப்பூரம், வகைக்கு $\frac{1}{8}$ தோலா எடை கல்வத்திவிட்டு அரைத்து சீலையில் முடிந்துக் கட்டவும். இதன் உபயோக முதலியவைகள் எல்லாம் முன்முறையில் கண்டவைகளே.

### 354. வேறு

(1) ஒரு ஈயம்பூசிய ஜோடுதவலையில் 5 சேர் வெள்ளாட்டுக் கறியைக் கொழுப்பு நீக்கிப்போட்டு 20 படி ஜலம்விட்டு அதனில் அரிந்த வெங்காயம் பலம் 5, ஏலக்காய் பலம் $\frac{1}{2}$, தணியா பலம் 3, பெரிய லவங்கப்பட்டை பலம் $\frac{1}{4}$, சன்ன லவங்கப்பட்டை பலம் $\frac{1}{4}$, இலவங்கப்பத்திரி பலம் $\frac{1}{4}$ வீதம் கிழிகட்டிப் போட்டு சிறுதீயில் எரித்து அரைபாகம் சுண்டினவுடன் ரெட்டுத்துணியில் பிசைந்து வடிகட்டி வைத்துக்கொள்க.

(2) காவுஸ்பான், காஜர், முஸ்லியே சுபேத், பாதரஞ்சி போயா, குலேமுண்டி, சிவப்பு சந்தனத்தூள், வெள்ளை சந்தனத்தூள் வகைக்கு $\frac{1}{4}$ பலம் வீதம் ஒன்றிரண்டாய் இடித்து 1 படி ஜலத்தில்போட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து ஆறினவுடன் ஒருபடி பசுவின்பாலும் முதல் அங்கத்தில் சித்தப்படுத்தியதையும் ஒருங்கு கலந்து முன்போல் வாலையிலிட்டுத் தீநீர் வாங்கும்போது சொட்டும் குழைக்கு 1 வராகனெடை குங்குமப் பூவைக் கட்டி வைக்கவும். இதனாலேற்படும் தீநீரை வேளைக்கு

1 அவுன்ஸ் வீதம் தினம் மூன்றுவேளை சாப்பிட மேக ஜ்வரம், காசம், தேகமெலிவு முதலியவை குணமாகும்.

355. வேறு

ஒரு ஈயம்பூசிய ஜோடுதவலையில் கொழுப்பு நீக்கிய இரண்டரைசேர் வெள்ளாட்டுக் கறியைப்போட்டு 10 படி ஜலம்விட்டு அதனில் வெங்காயம் பலம் $2\frac{1}{2}$, ஏலக்காய், லவங்கப்பத்திரி, குலேகாவுஸ்பான், இலவங்கப்பட்டை, ஷக்காகுல்மிசிரி, பஹமனேசுபேத், : பஹமனேசுரக் முதலியவைகளை ஒன்றிரண்டாயிடித்து வகைக்கு கால்பலம் வீதம் கிழிகட்டிப்போட்டு, அரைபாகம் சுண்டக் காய்ச்சி வடித்து முன்போல் தீநீர் வாங்குக. அத்தருணம் தீநீர் சொட்டுக் குழைக்கு $\frac{1}{4}$ வராகனெடை குங்குமப்பூவை முடிச்சுக்கட்டுக். இதன் உபயோகம் முதலியவைகளை முற்கூறியவாறே.

(திராவக வகுப்பு)

356. சங்கத் திராவகம்

அன்னபேதி தோலா 24. வெடியுப்பு தோலா 24, படிகாரம் தோலா 12, இந்துப்பு தோலா 12, கறியுப்பு தோலா 8, மயில்துத்தம் தோலா 8, நவாச்சாரம் தோலா 4, வெங்காரம் தோலா 4, பூநீர் தோலா 4.

இவைகளில் அன்னபேதியைச் சிவக்க வறுத்தும், மயில்துத்தத்தை வெளுக்க வறுத்தும், மற்றவற்றைக் கல்லுரலிலிட்டு இடித்தும், எல்லாவற்றையும் ஒன்றுகலந்து வாலையிலிட்டு திராவகம் வாங்கவும். இதனில் வேளைக்கு 5 முதல் 10 துளி வரையில் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் விளாவிக்கொடுக்க ஜ்வரக்கட்டி எனப்பெயர் மேவிய ஈரல்களின் வீக்கம் 40 நாள் உபயோகத்திற்குள் குணமாகும் இருபதுநாளில் குணமடையும் குறியைக் கவனிக்கலாம். இத்தகைய வீக்கத்தி நிமித்தம் அடிக்கடி வரும் ஜ்வரமும் குணமாகும். ஜ்வரமிருக்கும்போது மாத்திரம் அதனைப்பரிகரிக்கத்தக்க ஏதேனும் ஒரு அவிழ்தத்தைக் கொடுத்து நிவர்த்திச் செய்துகொண்டு பின்னர், திராவகத்தை ஆரம்பித்தல் வேண்டும். இங்ஙனம் இருபதுநாள் சாப்பிட்ட பின்னர் ஜ்வரம் இடையில் வருவதற்குச் சிறிதும் நியாயமில்லை. இதுவேயுமன்றி இத்திராவகத்தைக் குன்மம், வாயு, சூதகவாயு, வயிற்றுவலி முதலியவைகட்குக் கொடுக்கத் தீரும்.

பத்தியம்:—தேகத்திற்குத் தக்கபடி ஆகாத பதார்த்தங்களைத் தள்ளி மற்றவைகளைக் கொள்க. மருந்து சூடுசெய்வதாக உணர்ந்தால் இரவில் பால் தாராளமாய் விட்டு அன்னம் கொள்க. அதிலும் குணமில்லையாயின் மருந்தினளவைக் குறைத்துக் கொள்க.

### 357. வேறு

வெடியுப்பு பலம் 15, வெங்காரம் பலம் 1, படிகாரம் பலம் 10, துருசு பலம் $\frac{1}{2}$, நவாச்சாரம் பலம் $\frac{1}{2}$, இந்துப்பு பலம் $\frac{1}{2}$, பூநீர் பலம் 1, கறியுப்பு பலம் 1, அன்னபேதி பலம் $\frac{1}{2}$,

இவைகளில் முன்முறையிற் கண்டவாறு துருசை வெளுக்க வறுத்தும், அன்னபேதியைச் சிவக்க வறுத்தும், மற்றவற்றை இடித்தும் ஒன்று சேர்த்துக் கலந்து வாலையிலிட்டுத் திராவகம் வாங்கவும். இதினளவு, பிரயோகம், பத்தியம் முதலியவை முற் கூறப்பட்டவாறே. இந்த பாகத்தில் ஒருமுறை கிடைக்கப்பெற்ற திராவகத்தை மீண்டும் முன்னளவு சரக்குகளை மடக்குவாலையிலிட்டு எரிக்கும் சமயம் திராவகத்தைவிட்டு மடக்கி வாங்குவதுண்டு. இங்ஙனம் மூன்றுமுறை மடக்கியது வெகு காரமுடையதாகும். இதனையே காளமேக நாராயணச் சிந்தூரம் செய்வதற்காக உபயோகித்தல்வேண்டும். மடக்குவாலையினது உபயோகத்தைப் பற்றி பாக இலம்பகத்தில் கண்டுணர்க.

### 358. வேறு

சங்குச் சுண்ணம் தோலா 4, எவாச்சாரம் தோலா 4, சர்ஜ்ஜச்சாரம் தோலா 4, வெங்காரம் தோலா 4, இந்துப்பு, வளையலுப்பு, கறிஉப்பு, வெடியுப்பு, கல்லுப்பு இவை வகைக்குத் தோலா 8, உழமண் தோலா 4, நவாச்சாரம் தோலா 4.

இவைகளை முறைப்படி வாலையிலிட்டுத் திராவகம் வாங்கவும். இதில் 7 முதல் 12 துளிவரையில் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் விளாவி ஆகாரத்திற்குப்பின் கொடுக்க மூத்திரக்கிருட்சனம், சூதகவாயு, குன்மம், பிலிகம், அஜீர்ணம், கிராணி முதலியவை தீரும்.

### 359. மகா திராவகம்

ஆடாதோடை, புளியம்பட்டை, பூசனிக்கொடி, சாரணை வேர் இவைகளைச் சுட்ட சாம்பல் வெவ்வேறு பாண்டத்திலிட்டுச் சாம்பல் எடைக்கு நான்கு மடங்கு ஜலம் விட்டுக் கரைத்து மூன்றுவதுநாள் அசையாமல் தெளிவை வாங்கிக் காய்ச்சிக் குழம்பு பதத்தில் எலுமிச்சம்பழ ரசம்விட்டுக் கரைத்து ரெட்டுத்

துணியில்வடித்துப் பீங்கான் தட்டுகளில்விட்டுக் கடும் இரவியில் வைக்க * உப்பாகும். இங்ஙனம் சேகரித்த உப்பு ஒவ்வொன்றும் பலம் 2, எவாச்சாரம் பலம் 2, உழமண் பலம் 1, நவாச்சாரம் பலம் 1, சையிந்த லவணம் தோலா 4, வெங்காரம் தோலா 2, அன்னபேதி தோலா 1, சங்குச்சுண்ணம் தோலா 1, உள்ளிப் பாஷாணம் தோலா 1, கடல் நுரை தோலா 1 இவைகளை இடித்து வாலையில் போட்டுத் திராவகம் வாங்கவும். தேகத்திடத்திற்குத் தக்கவாறு 1 முதல் 3 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் விளாவிக் கொடுக்கக் குன்மம், பீலிகை, நீராமை, கவுசி, கெண்டை, பெருவயிறு, வாயுத்திரட்சி, சூதகவாயு, மகோதரம் முதலான ரோகங்கள் தீரும்.

### 360. வேறு

எருக்கு, கொடிக்கள்ளி, புளியம்பட்டை, எள்ளுச்செடி, சரக்கொன்றைப்பட்டை, சித்திரமூலம் வேர்ப்பட்டை, நாயுருவி சமூலம் இவைகளின் சாரம் வகைக்குத் தோலா 4, எவாச்சாரம் தோலா 4, சர்ஜ்ஜச்சாரம் தோலா 4, வெங்காரம் தோலா 4, கடல்நுரை தோலா 4, அன்னபேதி தோலா 4, இந்துப்பு, வளையலுப்பு, கறியுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு வகைக்குத் தோலா 8, இவைகளைப் பொடிசெய்து ஒரு பீங்கானில் போட்டுத் தூரிஞ்சிப்பழம் ரசம்விட்டுக் குழம்புப் பதமாகக் கரைத்து ஏழு நாள் சென்றபின் அதனுடன் சங்குச் சுண்ணம் தோலா 8 சேர்த்து வாலையிலிட்டுத் திராவகம் வாங்கவும். ஒரு அவுன்ஸ் ஜலத்தில் 2 முதல் 3 துளி தினம் இருவேளை விளாவிக் கொடுக்க குன்மம், சூதகவாயு, ஜ்வரக்கட்டு, மூத்திரக் கிருட்சனம், அதிசாரபேதி முதலியவை குணமாகும்.

### 361. கந்தகத் திராவகம்

கந்தகம், படிகாரம், வெடியுப்பு வகைக்குப் பலம் 5, இவைகளை இடித்து வாலையில்போட்டுத் திராவகம் வாங்கவும். வேளைக்கு 5 முதல் 10 துளிவரையில் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் விளாவி தினம் இருநேரம் உண்டுவர அஜீரணம், வயிற்றுநோய், வயிற்றுப்பிசம், அதிசாரபேதி, வாந்தி, குடல் இரைச்சல், குடல் முறுக்கல் முதலியவைகளைக் குணப்படுத்தும்.

---

* இவ்விதம் சித்தப்படுத்திய உப்பு வகைகளை இந்நூலில் சாரம் என்று கூறப்படும்.

# எச்ச இலம்பகம்.

## 362. படர்தாமரை சிகிச்சை

பொன் ஆவிரம்வேர் பட்டை பலம் 2, கந்தகம், மிருதார் சிங்கி, மனோசிலை, இரசகருப்பூரம், கருப்பூரம் வகைக்கு வராக னெடை $\frac{1}{4}$.

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பழச் சாற்றினால் 4 ஜாம மரைத்து, சிறுவில்லைகளாகச் செய்து, நிழலில் உலர்த்துக. வேண்டும்போது ஒருவில்லையைத் தண்ணீரில் சிறிதிழைத்துப் பூச இரண்டொரு வேளையில் எவ்வித விரணப்படைகளும் குணப்படும்.

## 363. வேறு

கந்தகம் பலம் $\frac{1}{2}$, மத்தாப்புச் சிட்டம் பலம் $\frac{1}{2}$, வெங்காரம் பலம் $\frac{1}{2}$ சீனைகற்கண்டு பலம் $\frac{1}{2}$, துருசு பலம் வீசம்.

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றால் நெகிழ அரைத்து வைத்துக்கொண்டு ஊறல் எடுக்கும் படைகளுக்குத் தினவு அடங்கும் மட்டும் நன்கு சொரிந்து, சிகைக்காய் அல்லது சவுக்காரக்கட்டி முதலியவைகளால் தேய்த்து அலம்பி, இம்மருந்தை இலேசாகப் பூச, இரண்டு மூன்று வேளைகளில் இருப்பிடம் தெரியாமல் மறையும்.

## 364. அரையாப்புக் கட்டிக்குச் சிகிச்சை

கருப்பூரம், சாம்பிராணி, மூசாம்பரம், பெருங்காயம், இவை சமனெடை.

முதலில் சாம்பிராணியைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து வஸ்திரகாயஞ் செய்து, அதனுடன் கருப்பூரம் சேர்த்து, கை ஓயாமலரைக்கும்போது அவைகள் இளகும் அக்கால் மிகுந்த சரக்குகளை முறையே ஒன்றன்பின் னொன்றாகசேர்த்து, அரைத்து அவ்விளகின பதத்திலேயே ஒரு புதுத்துணியில் தடவி வைத்துக்கொண்டு வேண்டும்போது நெருப்பு அனலில் காட்டிக் கட்டியின்மீது போட்டு, அதன்மேல் ஈயத் தகட்டையேனும்

மண்ணோட்டையேனும் வைத்துக் கச்சையால் வரிந்துக்கட்டி, மூன்றும்நா ளவிழ்த்துப் பார்க்கக் கட்டி கரைந்திருக்கும். ஒரு கால் கரையாவிடின் மறுபடியும் முன்போல் கட்ட திண்ணமாய்க் கரைந்துவிடும். கட்டி, சீழ்பிடித்துத் துன்பஞ்செய்யின் மேற்படி சரக்குகளை அரைக்கும்போது அரை அல்லது ஒரு மிளகு பிர மாணம் சங்குப்பாஷாணத்தைச் சேர்த் தரைத்துச் சீலையில்தடவி, கட்டிக்குப் போட மூன்றுநா ளுடைத்துக்கொள்ளும். அக்கா லத்திலுள்ள எரிச்சல், குற்றல், முதலிய பாதைகளையும் சமனஞ் செய்யும். பின்னர், விரண சிகிச்சைக் குரிய மருந்துகளால் ஆற்றிக்கொள்க.

## 365. வேம்பு கற்பம்

முற்றின வேப்பங்கொட்டையைக் கோநீரில் ஒரு பகலும் இரவும் ஊறப்போட்டு மறுநாள் தோலைநீக்கிப் பருப்பை ஒன்றிர ண்டாய் நறுக்கிப் புதுசட்டியில்போட்டு மஞ்சள் புகை கிளம்ப வறுத்து எண்மடங்கு கோநீர்விட்டு ஒருபங்காகக்காய்ச்சி வடித் துக் கொள்க. இதனில் வேளைக்கு $\frac{1}{4}$ பலம் வீதம் $\frac{1}{4}$ பலம் ஜலம் சேர்த்துக் கலக்கிச் சாப்பிடவும். இப்படி தினம் இருவேளை 20 நாள் சாப்பிடக் குட்டவிரணம், அதனாலுண்டான தடிப்புமுத லியவை குணமாகும். நீடித்து சாப்பிடுவது கஷ்டமென்று தோற் றினால் ஒருமுறை 7 நாள் சாப்பிட்டு இரண்டு மூன்றுதினம் விட்டு மீண்டும் ஒருமுறைசாப்பிடவும் இங்ஙனம் 3 முறை சாப்பிடவும்.

## 366. கட்டியை உடைக்கவும் உடைந்த எலும்பைக் கூட்டவும் சிகிச்சை

மைலாலக்கடி பலம் 1, கடல்நுரை பலம் 1, கிராம்பு பலம் 1, நீர்முள்ளி விதை பலம் $\frac{3}{4}$.

இவைகளை எல்லாம் தனித்தனியாகச் சூர்ணித்து, சிறிது நீர்விட்டுப் பிசைந்து, கல்வத்தில் புரட்டிப் புரட்டிக் கொடுத் திடிக்க மெழுகு போலாகும். அதனை நூல்கனத்திற்கு வேண்டு மான அகல நீளத்துக்கு அடைதட்டி, முரிந்த எலும்பை ஒழுங் காய்வைத்து, அதன்மீது அடையைவைத்து, புதுத்துணியால் வரிந்துக்கட்டி, தண்ணீர் விட்டுக்கொண்டே வருக. அஃதாவது அவ்விடம் எப்பொழுதும் ஈரமாக இருத்தல் வேண்டும். இங்ங னம் இரண்டு நாளைக்கொருமுறை புதிதாகக் கட்டிக்கொண்டுவா,

மூன்று கட்டில் உடைந்த எலும்பு கூடிவிடும். இங்ஙனமே கட்டிக்குக்கட்டிவர, இரண்டொரு தினத்தில் உடைத்துக்கொள்ளும்.

### 367. சிரசில் நீரேற்றத்திற்கும் மண்டைக்குத்தலுக்கும் சிகிச்சை

மிளகு தோலா 1, சாம்பிராணி தோலா $\frac{1}{2}$, கடுகு தோலா $\frac{1}{4}$, புழுங்கலரிசி தோலா $\frac{1}{4}$, கஸ்தூரி மஞ்சள் தோலா $\frac{1}{4}$.

இவைகளைக் கல்வத்திலிட்டு, முலைப்பாலால் அரைத்துச் சிரசில் பற்றிட்டு, நெருப்பனலிற் காய்ச்சின் உடனே வலி நீங்கும்.

### 368. பெரும்பாட்டுக்குச் சிகிச்சை

நறுவிளம்மரப்பட்டை, அத்திப்பட்டை, கருவேலம்பட்டை, நாவற்பட்டை இவைகளை நிழலிலுலர்த்தித் தனித்தனியாக இடித்துச் சூர்ணித்துச் சமபாகமாகக் கலந்து வைத்துக்கொள்க. வேண்டும்போது வீசம்படி காரரிசியை இரவியில் ஊறப்போட்டு, காலையில் தண்ணீரை நீக்கி, துணியின்மேல் சிறுதுநேரம் உலரப் போட்டு, இடித்து, மாவாக்கி முற்கூறிய சூர்ணத்தில் ஒருபலம் கலந்து, அவியந்திரத்தில்வைத்து மாவுவெந்தபின் தக்கபடி நெய்யும் சருக்கரையும் சேர்த்துச் சாப்பிடுக. இரண்டு மூன்றுநாள் உபயோகத்தில் பெரும்பாடு நிவர்த்தியாகும்.

### 369. மனோமகுட தூபப் பொடி

ஐவனவிதை, வாய்விளங்கம், பளிங்குச்சாம்பிராணி, பூண்டு தோல், ஓமப்பொட்டு, காட்டுச்சீரகம், அவுரிவேர், சந்தனத்தூள், மட்டிப்பால் இவைகளைச் சமனெடையாகச் சேர்த்து, ஒன்றிரண்டாக இடித்து வைத்துக் கொள்க.

ஸ்நானமானவுடன் வஸ்திரத்தால் கூந்தலைத் துடைத்துக் கொண்டு, நெருப்பில் கொஞ்சம் பொடியைத்தூவி நேராகவாவது அல்லது அதன்மேல் ஒரு சாணம் பூசாத புதுக்கூடையைக் கவிழ்த்து, அதன்மேல் கூந்தலை விரித்துப் புகை கூந்தலுக் கேற்றியாவது உலர்த்துக. எவ்விதத்திலும் சீதளம் சேரவிடாது. பிணியாளர்க்கும் குழந்தைகட்கும் பெரிதும் பயன்படத்தக்கது.

### 370. வெண்குட்ட சிகிச்சை

உலர்ந்ததும் உலராததுமான நடுத்தர இலந்தங் கட்டையை அடுப்பில் வைத்தெரிக்க, கட்டையின் மற்றொரு புறத்தில் ஜல

ரூபமாக ஒரு தைலம் காணும், அதனை வழித்துச் சேகரித்து வைத்துக்கொண்டு வெளுத்த இடங்களில் தடவிக்கொண்டுவர நிறம்மாறும்.

### 371. விக்கல் சிகிச்சை

பழைய செருப்பினின்று எடுத்த தோலைச் சுட்டுக் கரியாக்கிப் பாக்கு, மிளகு, திப்பிலி இவைகளையும் ஓட்டிலிட்டு வறுத்துக் கரியாக்கி, எல்லாவற்றையுஞ் சமமாகக் கலந்து, தேனிலிழைத்து, கால்மணி நேரத்துக் கொருமுறை நாவில் தடவிக்கொண்டு வர, அசாத்திய விக்கல், நாக்கறுப்பு, சுரசுரப்பு முதலிய தோஷங்கள் தீரும்.

### 372. அண்டவாத சிகிச்சை

கோரோசனை, கழற்சிப் பருப்பு, பளிங்கு சாம்பிராணி, பெருங்காயம், இவைகளை வகைக்கு வராகனெடையாக கல்வத்திலிட்டுச் சிற்றண்ட வெண்கருவால் அரைத்து, பீஜத்திற்குத் தடவி நெருப்பனலில் காட்டுக. இங்ஙனம் 2, 3 பிரயோகத்துக்குள் பீஜத்தடிப்பு, நோய் முதலியன குணமாகும்.

### 373. சுரக்கட்டி சிகிச்சை

கால் படி தனிப்பழரசத்தில் 12 பலகறையையும் 1 தோலா நாட்டு நவாச்சாரத்தையும் நன்றாக அரைத்துப்போட்டு ஒரு வாயகன்ற புட்டியிலிட்டு, குலுக்கிக்குலுக்கி இரவியில் ஒருவாரத்துக்குக் குறையாமல் வைத்து, வேளைக்கு ½ முதல் 1 தோலா வரையில் தினமிருநேரம் 20 நாள் சாப்பிடுக. இதனால் சுர்த்தாலுண்டான மண்ணீரல் வீக்கம் நீங்கும்.

### 374. வாதரோக சிகிச்சை

வெள்ளீயம் பலம் 1, இரசம் பலம் 1. இவை இரண்டையும் சேர்த்து, இதனோடு எட்டிக் கொட்டைச்சூர்ணம் தோலா 1, ஆளிவிதைச்சூர்ணம் தோலா 1, சிறுதேக்குச்சூர்ணம் தோலா 1, மூசாம்பரம் தோலா 1, குண்டுமணிப்பருப்பு தோலா 2, இவைகளைக் கூட்டிக் கல்வத்திலிட்டுச் சிற்றண்ட வெண்கருவாலரைத்து; நோயுள்ள இடங்களில் பூசி, நெருப்பனல் காட்ட. மூன்று பற்றுக்குள் எத்தகைய கடின நோயேனும் குணமுறும்.

## 375. கந்தக ரசாயனம்

பாலில் சுத்திசெய்து பத்துநாள் வரையில் இஞ்சி ரசத்தாலரைப்புண்ட அமரிசிலே கந்தகம் பலம் 10, திரிபலாதி, வாய் விளங்கம், திரிகடுகு, ஏலம், கிராம்பு, சந்தனத்தூள், வறுத்த கடலைமாவு, சித்திரமூலம் வேர்ப்பட்டை, பாலில் சுத்திசெய்த அஸ்வகெந்தி, பறங்கிச்சக்கை வகைக்குப் பலம் 5.

இவைகளை எல்லாம் தனித்தனியாக இடித்துச் சூர்ணம் செய்து, ஒரு பலம் சேங்கொட்டைத் தைலமிட்டுப் பிசரி, ஒரு வாயகன்ற மட்பாண்டத்தில் 10 பலம் சாம்பிராணியைப்போட்டு தூபயந்திரவிதிப்படி வாய்க்குச் சல்லாத்துணி கட்டி, அதில் சூர்ணத்தைக் கொட்டிக் குவித்து, மேல் சட்டிமூடிச் சீலைசெய்து, சிறுதீயாக 4 மணிநேரமெரித்து ஆறினபின் சூரணத்தைக் கல்வத்திலிட்டு, முன் சித்தஞ்செய்த கந்தகத்துடன் சேர்த்தரைத்து வைத்துக் கொள்க.

ஒருபலம் சூரணத்தோடு ஒருபலம் சீனிசருக்கரைச் சேர்த்து, பசுவின்நெய்விட்டு இலேகியபதமாக அரைத்து, வேளைக்கு 1 வராகனெடையாகத் தினமிருநேரம் 10 நாளுண்க. மறுமுறை அவசியமாயின் சிலநாள் பொறுத்து முன்போல் கொள்க. இங்ஙனம் ஒரு மண்டலம் உட்கொள்ளின், சொரி, சிரங்கு, மேகவிரணம், கருமேகம், படை, கிரந்தி முதலிய சரும ரோகங்கள் நிவாரணமாகும்.

• இதனை உண்ணும்போது இரவில் பசுவின்பால் பருகல் வேண்டும். ஆகாரங்களில் கூடியமட்டும் நெய் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். தவறின் தேகம் உஷ்ணப்படும்.

## 376. பித்தவாயு சிகிச்சை

மேல்தோல் சீவிச் சிறுதுண்டாக்கப்பட்ட இஞ்சி பலம் 5, சீரகம் பலம் $2\frac{1}{2}$. இவைகளிரண்டையும் ஒரு கோப்பையில் போட்டு சுண்ணும்பு நீங்கிய இஞ்சிரசம், பழரசம், புளியாரைக் கீரைச்சாறு, புதினாரசம், புளிப்பு மாதளம்பழரசம், துருஞ்சிப் பழரசம் இவைகளை வகைக்கு 5 பலம்வீதம் ஒன்றன்பின்னொன்றாக முறையாக விட்டு இரவியில் சுண்டவைத்துக் கல்வத்தி லிட்டு, தேன் சேர்த்துக் குழம்புபதமாக அரைத்து வைத்துக்கொள்க.

வேளைக்கு $\frac{1}{2}$ முதல் 1 தேக்கரண்டி விகிதம் தினம் மூன்றுவேளை கொள்ள மாரெரிச்சல், குமட்டல், வாந்தி, அஜீர்ணம், வயிற்று நோய் அரோசிதம் முதலியன நீங்கும்.

### 377. அக்பர் அரக்கே ஷீர்

கொழும்பு சாராயம் திராம் 8 (24-அவுன்ஸ்) இதை ஒரு வாயகன்ற புட்டியில் விட்டு, அதில் குங்குமப்பூ, கிராம்பு, ஏலக்காய், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கம்மார் வெற்றிலை, உலர்ந்த புதினா, ஜடாமாஞ்சில், சுக்கு, சந்தனத்தூள், இலவங்கபத்திரி, வகைக்குத் தோலா ஒன்றாக இடித்துப்போட்டு, அதனுடன் 10 தோலா சீனா கற்கண்டைத் தூள்செய்து போட்டு 3 நாள் இராப்பகல் ஊறும்படி வாயை அடைத்து, நான்காம்நாள் பட்டுத்துணியில் வடித்து வேளைக்கு ஒரு அவுன்ஸ் அளவு சூடான தேகத்துக்கு குலோகவுஸ்பான் அரக்கிலாவது சீதள சரீரத்திற்கு வெள்ளாட்டு எலும்பு சூப்பிலாவது தினமிருநேரம் உட்கொள்ள ஜீர்ண சக்தியை உண்டுபண்ணி, வாதரோகங்களைப் பரிகரித்து, இராஜகருவிகளைப் பலப்படுத்தும்.

### 378. மூஸ்சபியேகூன்

ஐந்து ராத்தல் பட்டைச்சாராயத்தில் கறுப்பு ஏலரிசி தோலா $1\frac{1}{4}$, சிவப்பு ஏலரிசி தோலா $1\frac{1}{4}$, கிராம்பு தோலா 1, இலவங்கப்பட்டை தோலா 1, மிளகு தோலா 1, குங்குமப்பூ தோலா $\frac{1}{2}$, இவைகளை தண்ணீர்விட்டரைத்து, சாராயத்தில் கலக்கி வைத்துக்கொண்டு, $1\frac{1}{2}$ இராத்தல் அப்பட்டமான தேனை ஒரு கடாயில் விட்டு, சிறுதீயில் மெதுவாக எரித்துக்கொண்டு சாராயத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக்கொண்டுவருக. (சுருக்குக்கொடுக்கும் விதமாகச்செய்தல்) இவ்வாறு முடிந்ததும் வடிகட்டிச் சீசாவில் பத்திரஞ்செய்க.

அரை அல்லது ஒரு தேக்கரண்டிவிகிதம் தேக திடம்போல் உண்ண நரம்புகள் வலுப்பட்டு, ஜீர்ணப்பை, மண்ணீரல், இருதயம் இவைகட்கு அருகிலுள்ள ஜவ்வைப்பற்றிய வியாதிகள் யாவும் குணப்படும் அன்றியும் மனோத்ஸாகம் உண்டாகிப் போகசக்தி அதிகரிக்கும்.

குறிப்பு:—குறித்த அளவு சிலர்க்கு மிகுதியாகவும் சிலர்க்குக் குறைவாகவும் தோன்றின் உண்பவர்கள் இரண்டொரு வேளை உண்பதற்குள் அளவின் திட்டம் அறிந்துகொள்வாராக. எங்ஙன மேனும் சாப்பிடும் அளவால் உற்சாகம் இருத்தல் வேண்டும்; புத்தி வேறுபடும்படி அதிக அளவு கொள்ளுதல் ஆகாது.

## 379. ஆடாதோடை ரசாயனம்

(குழந்தைகட்குண்டாகும் இருமலுக்கு)

ஆடாதோடை, தூதுளை, கண்டங்கத்திரி, கறுப்புப் பூனைக் காய்ஞ்சொறி இவைகளின் ரசம் வகைக்குப் பலம் 3, ஒரு பழகிய புதுச்சட்டியிலிட்டு ஆக இந்நான்கிற்கும் சமபாகம் தேன் சேர்த்து அதில் திப்பலி, ஆனைத்திப்பலி, அதிமதுரம், சித்தரத்தை, பேரரத்தை, சுக்கு, அக்ரகாரம், கடுக்காய் இவைகளின் சூர்ணம் வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடையாக நிறுத்துப் போட்டு சிறு தீயில் எரித்து இரசாயன முறைப்படி விரலழுந்தும் பாகு பதத்தில் காய்ச்சி வைத்துக்கொண்டு, குழந்தைகட்குண்டாகும் இருமல், இரைப்பு முதலிய கப சம்பந்தமான ரோகங்களுக்கு பருவத்துக்கேற்றபடி கடலை, மொச்சை பிரமாணம் தினமூன்று வேளை நாவில் தடவிக்கொண்டுவருக. இதனோடு ஆமை ஓட்டுப் பற்பஞ் சேர்த்துக் கொடுத்தல் சாலச்சிறந்தது; பத்தியம் அவசியமன்று.

## 380. சுவாசகாச நெய்

ஒரு பழகிய குடுவையின் அடியில் குழித்தைலம் இறக்கும் பொருட்டு 4, 5 துவாரஞ்செய்து, அதில் 60 அல்லது 80 வெள்ளெருக்கன் பழுப்பு இலைகளைக் கொண்டுவந்து அதனிரு பக்கங்களிலும் பசு நெய்யைத் தடவி வைத்துக்கொள்க. பின்பு, பிரமத்தண்டுவேர் $2\frac{1}{2}$ பலம் கொண்டுவந்து சிறு துண்டுகளாக நறுக்கி, அவைகளையும் பசுவின்நெய்யில் கொள்ளும்வரையில் புரட்டி, முன் சித்தப்படுத்திய குடுவையில் இலையும் வேருமாக அடுக்கடுக்காய்ப் போட்டு, வாய்க்கு அகல்மூடிச் சீலைசெய்து, குழித்தைலமிறக்கி, அதிலிருக்கும் வெப்புநீரை அப்புறப்படுத்தி வேளைக்கு 30 முதல் 60 துளி கற்கண்டுச் சூரணத்தில் பிசரி உண்க. இவ்வாறு 15 நாட்கள் கொள்ளக் குணமாகும்; பத்தியமின்று.

## 381. ஆசனவர்த்தி

2 பலம் தேன்; 2 பலம் உப்பைக் கரைத்த நீர்; இவ்விரண்டையுங் கலந்து ஒரு இருப்புக் கடாயில்விட்டுச் சிறு தீயிலெரிந்து மெழுகுபதம் வரும் சமயத்தில் ஆறவைத்துச் சேதப்படாமல் வழித்து, ஒரு பலகையின்மேல் விளக்கெண்ணெயைத் தடவி, அதன்மேலிதனைச் சுண்டுவிரல் கனமுள்ளதாகத் திரட்டிக் கூர் மழுக்கி, ஆறவிட்டுக் குதத்தில் விளக்கெண்ணெய் தடவி, இத் திரியை ஓர் அங்குலம் செலுத்திவைக்க, 2, 3 நிமிஷத்தில் மல சோதனையாகும். இதனைச் சாதாரணமாய் பேதிமருந்துகள் கொடுத்து மலங்கழியாமல் வயிற்றுப்புசம் முதலியன கண்டு துன்புறுங்காலத்தில் பிரயோகிப்பது நலம்.

## 382. வாதரோகப்பற்று

ஓமம், வாய்விளங்கம், கெட்டிமிளகு, பெருங்காயம், இரத்தப்போளம், சுக்கு வகைக்குத் தோலா ¼. இவைகளைக் கரு ஊமத்தைச் சாற்றிலரைத்து, குழம்புபதத்தில் நோயுள்ள இடங்களில்பூசி நெருப்பனலில் காட்ட 2, 3 பற்றில் எத்தகையநோயும் குணமாகும்.

## 383. நேத்திராஞ்சனம்

வெள்ளிரேக்கு, பீதரோகிணி, கடுக்காய்த்தோல், பச்சைக் கருப்பூரம், குங்குமப்பூ இவைகளைச் சமவெடையாகக் கல்வத்திலிட்டு, செவ்விளநீரால் ரேக்கின் பளபளப்பு மாறும்படி 10-12 நாள் நெகிழ அரைத்து மெழுகுபதத்தில் நல்ல தேன்விட்டுக் குழம்பு பதமாக அரைத்து, பிங்கானில் பத்திரப்படுத்துக.

உபயோகம்:—தினம் காலை மாலை கண்ணுக்கு மைபோல் தீட்டிவர கண்ணருவல், நீர்முட்டு, கண்கூசல், மாசுபடர்தல், பார்வைமந்தம், சதைவளர்ச்சி, ஆரம்பமான கண்பூ முதலியவைகள் குணமாகும். தவிர, இது 40 வயதுக்கு மேலுண்டாகும் பார்வைக்குறைவையும் நிவர்த்திசெய்து நல்ல பார்வையை மீண்டும் வரச்செய்யும்.

குறிப்பு:—செவ்விளநீர் மட்டையைச் சீவினால் உட்புறம் சிவந்திருத்தல் வேண்டும். இம்முறையில் உபயோகிக்கும் தேன் கள்ளிச் செடிகட்கு அருகில் கட்டிய தேன் கூட்டினின்றும் எடுத்ததாக இருத்தல் கூடாது.

384. வேறு

7 செங்கொட்டையை மூக்கை நறுக்கி, ஒட்டிவிட்டு, கருக்கிச் சாம்பலாக்கி, அதனை ஒரு தாமிரத் தாம்பாளத்தைச் சுத்தமாய்த் தேய்த்து ஈரமில்லாமல் துடைத்து, அதன்மேல் சாம்பலையிட்டு, எலுமிச்சம்பழம் அளவு பசுவெண்ணெயைக் கூட்டி 7 நாள் தாமிரத்தினால் செய்த பஞ்சபாத்திரத்தைக் கொண்டு, தேய்த்து எட்டாம் நாள் வெண்ணெயைத்திரட்டிச் சுத்த ஜலத்தில் 10, 15 முறைப் பிசைந்து சாம்பலெல்லாம் போகும்படி கழுவித் தாமிர டப்பியில் வைத்துக்கொண்டு முன்போல் உபயோகிக்க மேல் கூறிய பிணிகள் குணமாகும்.

385. வேறு

வேண்டிய செங்கொட்டையைக் கருக்கிச் சாம்பலாக்கி அதற்குச் சமனெடை பொரித்த படிகாரம் கூட்டி, வெண்மையாய்த் தேய்த்துக் கழுவி ஈரமில்லாமல் சுத்தப்படுத்திய அயத் தட்டிலிட்டு, பழச்சாற்றால் தினமிரண்டு மூன்று ஜாமம் விகிதம் 3 நாள் அயக்கோலால் கடைந்து, நான்காம்நாள் ஈரத்தை வறளவிட்டு, பின்பு பசுவின் வெண்ணெயைக் கலந்து, தாமிர டப்பியில் வைத்துக்கொண்டு முன்போல் பிணிகட்கு உபயோகிக்க.

386. வேறு

சுத்தி செய்த தாளகம், மனோசிலை, பொரித்த படிகாரம், உப்பு, சங்குச் சுண்ணாம்பு, மிளகு, மஞ்சள் இவைகளைச் சமனெடையாகக் கல்வத்திலிட்டு, பழச்சாற்றால் 2 ஜாமம் அரைத்து, மெழுகு பதத்தில் கம்பி மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்க. ஒரு இழை சுத்த ஜலத்தில் உரைத்துக் கண்ணுக்குத் தீட்ட முற்கூறப்பட்ட ரோகங்கள் தீரும்.

387. மன்மதாஸ்திரம்

காந்திவீசும் பானுவிந்து கதரச்செய்யும் கேதுவை
கண்டெடுத்து மூண்டம்விட்டுக் கண்டதுண்ட மாக்கிடு
* ஓந்திநான்கு காவரிந்துடலைத் தள்ளிச் சிரத்தைதான்
உலர்த்திவாகை நன்முருங்கை புய்த்த யேலம்ஜாதிக்காய்
எந்தநிறையும் வகைக்குப் பலந்தா னெடுத்தரையாய்ச் சேர்த்திடு
ஏற்றமான பாத்திரத்தி னேகமாகச் செய்யுமுன்
சாந்தமோடு மிடித்ததைச் சற்றுலர்த்தி வைத்தேநீ
சாரமான குழியினின்றுந் தைலந்தீயி லிறக்கிடே.

* பச்சை ஓந்தி.

இறக்கிவைத் தைங்கரர்க்குப் பூசைசெய்துக் கனிப்பனட்
இலகவோர் பணவெடையினிய வெள்ளிலையிலே
சிறக்கநீயும் அந்திசந்தி தீர்க்கமாக வுண்டபின்
செப்பமாய்த்தடவிப் பச்சைபட்டுத் தனிலேசுற்றிடு
முறைக்கும்பச்சை கச்சைவிட்டு மோகம்வாரா தொழித்திடு
மோகபோக மாகுமிதை முற்றுஞானி பொறுப்பரோ
அறைக்குள்ளே வளர்ந்தமாதர் அன்புகொண்டு பேடியை
ஆசைமயல் மோகங்கொண் டணைந்துமிகச் சேர்வரே.

### 388. உயர்ந்த பெருங்காயம்

சுக்கு, மிளகு, கடுகு, உளுத்தம்மாவு, வேப்பம்பட்டை முருங்கப்பட்டை, ஓமம் வகைக்கு ஒரு பலமாகக் கல்லுரலில் போட்டு ஒன்றிரண்டாக இடித்து அதனில் ஒரு பலம் கடுகு எண்ணெய் சேர்த்துப் பிசரி சதுரக்கள்ளிப்பால் ஒரு பலம் விட்டு உறவாகும்படி அம்மியின்மீது இட்டுப் புரட்டிப் புரட்டி இடித்து, ஒரு குடுவையில் போட்டு வாய்க்கு ஓடுமூடி சீலைசெய்து பூமியில் 3 மாதம் புதைத்து வைத்து எடுக்க மிகுந்த வாசனையுடையதாகவும் வாதரோகங்களைக் குணப்படுத்தக் கூடியதாகவு மிருக்கும்.

### 389. உயர்ந்த சாம்பிராணி

இலவங்கப்பட்டை பலம் 10, மைலாலக்கடி பலம் 5, சந்தனக்கட்டை பலம் 10, ரோசன் பலம் 10, குங்கிலியம் பலம் 5, சிலாரஸ் பலம் $2\frac{1}{2}$, இவைகளில் முதல் மூன்று சரக்குகளைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொஞ்சம் ஜலத்தில் ஊறப்போட்டு ஈரம் போக நிழலில் சற்றுலரப்போட்டு இடித்து வைத்துக் கொள்க. ரோசன் குங்கிலியம் இவை இரண்டையும் தீப்பற்றி எரியாமல் கரி நெருப்பின்மீது உருக்கி அதனில் தூளைக்கொட்டிக்கிளறி, சிலாரஸ் விட்டுக் கலக்கி ஆறவைக்க. இது சற்றேறக்குறைய டி, டி என்னும் வர்த்தகக் குறியையுடைய சாம்பிராணிக்குச் சமமானதாக இருக்கும்.

### 390. வெடியுப்புச் சிந்தூரம்

ஐந்துபலம் சதுரக்கள்ளிப்பாலில் 5 கோழிமுட்டை வெண்கருவிட்டுக் கலக்கி வைத்துக்கொள்க. 5 பலம் வெடியுப்பைக் கல்வத்திலிட்டு, மேல் கூறப்பட்ட பாலால் அரைத்து வில்லை செய்து உலர்வைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடிச் சீலை செய்து 4, 5 சிறுவறட்டியில் புடமிடுக. முன்மாதிரியே 5, 6 புடமிடச் சிறிது சிவந்த நிறமாகக்காணும். இஃதே இந்நூலில் கூறப்பட்ட காடி ஜெயநீரில் சேர்க்கப்படுவது.

## 391. காடி ஜெயநீர்

அரைப்பாகம் வழுக்கைப்பிடித்த இளநீரைக் கொண்டுவந்து சீவிக் கண்திறந்து ஜலத்தையும் உள் வழுக்கையையும் ஒரு வாயகண்ட பீங்கானில் விட்டு குழையும்படி நன்றாய் கரைத்து வடிகட்டி ஒருபடி ஜலத்திற்கு ¼ படி கல்லில்லாமற் பூத்த சுண்ணத்தைட்போட்டு இரண்டு ஜாமம் கலக்கிக்கொண்டிருந்து, பின்னர் தெளியவிட்டு வடித்து 7 நாளைக்கு ரவியில் வைத்துக்கொண்டு வருக. இங்ஙனம் செய்வதில் இரண்டுநாளைக்கு ஒருமுறைவடித்து அதனி லுண்டாகும் கசடையெல்லாம் நீக்கிக்கொண்டு வருக. இஃது அன்னக்காடியை யொத்திருக்கும்.

இங்ஙனம் சித்தப்படுத்திய ஒருபடிக்காடியில் இரண்டுபலம் வெடியுப்புச் சிந்தூரமும் ஒருபலம் வீரமும் சேர்த்து அரைத்துக் கலக்கிக் குப்பியிலடைக்க. இதனைக் கொண்டு சிந்தூர நிறத்திற்கு வராத எத்தகைய ஔஷதங்களையும் அரைத்துப் புடமிட்டுக் கொண்டுவர 5-6 புடத்தில் சிந்தூரமாகும்.

## 392. கம்பீர கற்பம்

ஒருவீசை அயச்சிட்டத்தைப் பழுக்கக் காய்ச்சி வெள்ளாட்டு நீரும் கரிசிலாங்கண்ணி ரசமும் சமமாகக்கூட்டி அதனில் தோய்த்துக் கொண்டுவர பொடிப்பொடியாகப் போம்; அதனுடன் சமனெடை கோதுக்கொட்டை முதலியவை ஆய்ந்து எடுத்த பழய புளிக்கூட்டிக் கல்லுரலில் போட்டு நன்றாய் இடித்து 40 நாள் மக்கும்படியாக வைத்து விடுக. பின்னர் அதனை 20-30 வில்லைகளாகச் செய்து சாணக்கைகளில் பரப்பி மேல் ஓடுமூடி சீலைசெய்து ஒவ்வொன்றையும் பெரும் புடத்திலிடுக. புடமாறினபின் மருந்தையெல்லாம் கல்வத்தி லிட்டு நன்றாய் அரைத்து 200 எலுமிச்சம்பழத்தை நான்குபிளவாக அறுத்து விதைநீக்கி உப்பு செலுத்தும் மாதிரியாக இம்மருந்தைச் செலுத்தி அசையாமல் ஒரு மட்பாண்டத்தில் ஒன்றின்மீது ஒன்றாகவைத்து அடுக்கி அவைகள் மூழ்க அசல் எள்ளெண்ணெயைவிட்டு வாய்க்கு ஓடுமூடிச் சீலைசெய்து வாய்ப்புறம் தெரிய தரைமட்டம் புதைத்து மேலே 20 வறட்டியை அடுக்கிப் புடமிடுக. இங்ஙனம் தினம் 3 புடம் விகிதம் 5 நாள் வரையில் 15 புடம்வைத்த பின்னர் பாண்டத்தின் வாயின்மீது மண்தள்ளி 40 நாள் விட்டு வைத்துப் பாண்டத்தை எடுத்து எண்ணெயை வடித்து வைத்துக்

கொள்க. பின்னர் பழத்தையும் சிட்டமும் உட்பட நெகிழ அரைத்து ஜாடியில் வைத்துக்கொள்க.

இந்தமெழுக்கில் வேளைக்குச் சுண்டக்காய் பிரமாணம் தின மிருநேரம் 40 நாள் சாப்பிடுக. முன்வடித்த தைலத்தை ஸ்நானத்திற்கு உபயோகப் படுத்துக.

இதனால் பாண்டு, சோகை, காமாலை, வெண்குட்டம், நரை திரை முதலியவை நீங்குவதுடன் இரத்தம் சுத்தமாய் நல்ல தேஜஸ் யுண்டாகும்.

பத்தியம்:—நல்லெண்ணெய், கடுகு, புளி, போகம், புகை முதலியன வாகா.

## 393. மஹா விரணரோபனம்

வேப்பெண்ணெய் ஆழாக்கு 1, தலைமயிர் தோலா 5, வெள்ளீயம் தோலா 5, ரசம் தோலா 3, இவைகளில் வெள்ளீயத்தை உருக்கி ரசத்தைக் கொடுத்துத் தொந்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடியாக அரைத்து அதனுடன் மயிரைச் சிறு துண்டுகளாகக் கத்திரித்துச் சேர்த்து எண்ணெயைக் கொதிக்கவைத்து அதனில் இவைகளைப் போட்டுக் காய்ச்சிப் பதத்திலிறக்கி ஆறினபின் சீசாவிலிடுக இதனை மேல் பூசுவதினால் மேகவிரணம் ஆறும். வெண்குட்ட வடிவு மாறும். புழுககளினால் மயிர் உதிர்ந்த இடங்களில் மயிர் முளைக்கச் செய்யும். இதனையே மிருகங்களுக் குண்டாகும் விரணங்களுக்கும் உபயோகிக்கலாம்.

## 394. மேகவிரணக் களிம்பு

பவழப்புற்று, ரசகருப்பூரம், வெள்ளைக்குங்கிலியம், காய்ச்சுக்கட்டி, களிப்பாக்கு சமனெடையாகக் கல்வத்தில் போட்டு அரைத்து வைத்துக்கொண்டு வேண்டும்போது நல்லெண்ணெய் விட்டுக்குழைத்து விரணங்களுக்குப்போட ஆறும். ஆறுதவிரணமாய் இருப்பின் விரணம் எந்தவிடத்தில் ஏற்பட்டதோ அவ்விடத்திற்குரிய எலும்பின் சாம்பலை மயானத்தினின்று கொண்டுவந்து களிம்போடு சேர்த்தரைத்துப் போடத் தவராமல் குணந்தரும்.

## 395. சந்தனாசவம்

சந்தனம், வெட்டிவேர், சோரைக்கிழங்கு, நிலப்பூசனி, நீலோற்பலகிழங்கு, கம்பு, தாமரைக்கிழங்கு, லோத்திரம், மஞ்சிஷ்டி, செம்மரத்துள், வட்டத்திருப்பி, நிலவேம்பு, பேய்புடல்,

அரத்தை, காஞ்ச நாகரம், மாம்பட்டை, ஆலம்விழுது, அரசம் பட்டை, கச்சோரம், மோச்சரசம், பற்பாடகம், அதிமதுரம், வகைக்குப் பலம் 1, காட்டாத்திப்பூ பலம் 16, திராட்சை பலம் 20, பழயவெல்லம் பலம் 50, நாட்டுச்சருக்கரை பலம் 100.

செய்பாகம்:—ஒரு பெரும்பானையை காரசாரமின்றிப் பழக்கி அதனை நன்றாய்க் கழுவிக் காயவைத்து சாம்பிராணி தூபங்காட்டி அதில் வெல்லத்தையும் சருக்கரையும்போட்டு 16 * நாழி சுத்த ஜலம்விட்டுக் கரைத்து சரக்குகளை யெல்லாம் ஒன்றிரண்டாய் இடித்துப்போட்டு வாயை சாணக்கைக்கொண்டு மூடி 30 நாள் அசையாமல் ஓர் இடத்தில் வைத்துவிடவும். பின்னர் அதை வடிகட்டி சீசாவிலிடுக.

உபயோகம்:—தினம் இருநேரம் வேளைக்கு ஒருபலம் விகிதம் சாப்பிட சுக்கிலமேகம், கைகால் எரிச்சல் முதலியன குணப்படுவதுடன் ஜீவாக்கினியை விருத்திசெய்து இருதயம் முதலான ராஜ கருவிகளுக்குப் பலமுண்டாக்கி இரத்தக்கொதிப்பை தணிக்கும். அப்ரகச் சிந்தூரத்துடன் இந்த ஆசவத்தைக்கொள்ள முற் கூறப்பட்ட வியாதிகள் தீவரத்தில் குணமாகும்.

பத்தியம்:—ஸ்திரீபோகம், இனிப்புப் பண்டம் முதலியன வாகாது.

### 396. கனகாசவம்

கறுப்பு ஊமத்தன் பஞ்சமூலத்தை நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்தது பலம் 4, ஆடாதோடை வேர்பட்டை பலம் 4, அதிமதுரம், திப்பலி, கண்டங்கத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, கண்டுபாரங்கி, தாளிசபத்திரி வகைக்குப் பலம் 2, காட்டாத்திப்பூ பலம் 16, திராட்சை பலம் 20.

செய்பாகம்:—இவைகளை யெல்லாம் ஒன்றிரண்டாய் இடித்து ஒரு மட்கடத்திற்கு முன்போல் சாம்பிராணிதூபம் காட்டி அதனில் போட்டு சுத்த மழை ஜலமாவது ஆவிநீராவது 32 நாழி விட்டு அதில் தேன் பலம் 50, சருக்கரை பலம் 100 விட்டுக் கலக்கி, சாணக்கைக் கொண்டு மூடி அசையாமல் ஒருபுறம் வைத்திருந்து 30 தினம் சென்றெடுத்து வடித்து சீசாவிலிடுக.

* 2½—நாழி ஒருபடி. (நாழி 1—க்கு 16 பலம்)

உபயோகம்:—வேளைக்கு ½ பலம் விகிதம் தினம் இருவேளை சாப்பிட சுவாசகாசம், இருமல், க்ஷயம், ஜுரம், இரத்தப் பித்தம் மார்நோய் முதலியவை குணமாகும்.

பத்தியம்:—வியாதிக்குத் தக்கபடி வைத்துக்கொள்க

## 397. லோஹாஸவம்

அயப்பொடி, திரிகடுகு, திரிபலை, குரோசானி யோமம், வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, சித்திரமூலம் வகைக்குப் பலம் 4, காட்டாத்திப்பூ பலம் 20, வெல்லம் பலம் 100, இவையனைத்தும் இடித்து ஒரு பழகிய மட்பாத்திரத்தில் சேர்த்து, 32 நாழி ஜலம்விட்டுக் கரைத்து வாயைமூடி மட்சீலைசெய்து ஒரு மாதகாலம் வைத்திருக்கவும்.

உபயோகம்:—இவ்வாஸவத்தை வேளைக்கு 1 பலம் தினம் 2 வேளை கொள்ள நன்கு பசியை எடுக்கச் செய்ய வல்லது; தவிர, பாண்டு, உடல்வீக்கம், குன்மம், மகோதர முதலிய வியாதிகளையும், குஷ்டம், ப்லீஹமென்னும் மண்ணீரலின் வீக்கம், சொரி, இருமல், சுவாஸம், பகந்தரம், அரோசகம், கிராணி, இருதய நோய் முதலியவைகளை நிவர்த்திக்கும்.

## 398. உசீராஸவம்

வெட்டிவேர், குருவேர், அல்லிக்கிழங்கு, பெருங்குமிழம்பூ, கருநெய்தல், ஞாழல், தாமரைக்கிழங்கு, வெள்ளைலோத்திரம், மஞ்சிஷ்டி, காய்ஞ்சொறி, வட்டத்திருப்பி, நிலவேம்பு, கடகரோகணி, ஆல், அத்தி, கச்சோரம், பற்பாடகம், வெண்தாமரை, பேய்ப்புடல், நாககேசரம், நாவல்பிசின், இலவம்பிசின் வகைக்குப் பலம் 1, திராக்ஷை பலம் 20, காட்டாத்திப்பூ பலம் 16, இவையிற்றை இடித்து 32 நாழி ஜலத்தில் சேர்த்து, சருக்கரை பலம் 100, தேன் பலம் 100 இவையிற்றையும் அதில் சேர்த்துக் கரைத்து, ஜடாமாஞ்சில், மிளகு இவற்றை யெரித்து அவற்றிலிருந்துண்டாகும் புகையை மட்பாத்திரத்திற்கு தூபங்காட்டி அதில் விட்டு 30 நாள்வரையில் மூடி ஓர்புறம் வைத்திருந்து எடுத்துக் கொள்ளவும்.

உபயோகம்:—வேளைக்கு ஒரு பலம் விகிதம் தினம் இருவேளை சாப்பிட இரத்த பித்தம், பாண்டு, குஷ்டம், பிரமேகம், கிருமிரோகம், சோகை முதலியவைகளைக் குணப்படுத்தும்.

## 399 அசோகாரிஷ்டம்

அசோகபட்டை (ஈரமுடையது) பலம் 100 ஒன்றிரண்டா யிடித்து 64 நாழி ஜலத்தில் போட்டு நான்கிலொன்ருய்க் காய்ச்சி வடித்து அதனில் 200 பலம் பழயவெல்லத்தைப் போட்டுக் கரைத்து பின்னர் காட்டாத்திப்பூ பலம் 16, ஓமம், கோரைக் கிழங்கு, சுக்கு, மரமஞ்சள், தாமரைக்கிழங்கு, திருபலே, மாங் கொட்டைப் பருப்பு, சீரகம், ஆடாதோடை, சந்தனம் வகைக்குப் பலம் 1 ஆக இடித்துப் போட்டுக் கலக்கி மேல் ஓட்டிருல் மூடிச் சீலேசெய்து 30 நாள் வரையில் ஓர் புறமாக வைத்திருந்து பின்பு வடித்துச் சேசாவிவிடுக.

உபயோகம்:—வேளேக்கு 1 பலம் விகிதம் தினம் இருவேளே சாப்பிட பெரும்பாடு, ஜுரம், ரத்தபித்தம், இரத்தமூலம், அரோ சகம், அக்கினிமந்தம், மேகரோகம், வீக்கம் முதலியவைகள் குணமாகும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 400. குடஜாரிஷ்டம்

வெட்பாலே வேர் பலம் 100, திராக்ஷை பலம் 50, இலுப் பைப்பூ பலம் 10, பெருங்குமிழம்பூ பலம் 10 இவையிற்றை 64 நாழி ஜலத்தில் சேர்த்து நாலிலொன்ருய்க் காய்ச்சி வடித்து அதனில் 20 பலம் காட்டாத்திப் பூவையும் 100 பலம் வெல்லத் தையும் சேர்த்துக்கரைத்து, ஒரு மட்பாண்டத்தில் விட்டு ஒரு மாதகாலம் வைத்திருந்து எடுக்கவும்.

உபயோகம்:—வேளேக்கு 1 பலம் விதம் தினம் இருநேர முட்கொள்ள சகல ஜ்வரங்களேயும் பரிகரிக்கும். கைகண்ட ஔஷதம்; தீபனமும் செய்யும்.

## 401. திராக்ஷாரிஷ்டம்

பெருந் திராட்சைப்பழம் பலம் 100 இதனுடன் 64 நாழி ஜலம்விட்டு 16 நாழியாகக் காய்ச்சிப் பிசைந்து வடித்து ஒருபழ கின மட்பாண்டத்திலிட்டு 50 பலம் தேனேயும், 100 பலம் கற் கண்டு சூரணத்தையும் போட்டுக் கரைத்து அதனில் காட்டாத் திப்பூ பலம் 20, தக்கோலம், லவங்கம், ஜாதிக்காய், மிளகு, இல வங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, திப்பலி, சித்திர

மூலம் வேர்பட்டை, செவ்வியம், மோடி, ரேணுகம் வகைக்குப் பலம் 1¼ ஆக இடித்துப்போட்டுக் கலக்கி மேல் ஓடுமூடிச் சீலை செய்து 30 நாள் ஒருபுறமாக வைத்துப் பின்னர் வடித்துச் சீசாவில் நிறப்பவும்.

உபயோகம்:—வேளைக்கு ½ பலம் விகிதம் தினம் இருநேரம் சாப்பிட அக்கினிமந்தம், மூலரோகம், குன்மம், மலபந்தம், மகோதரம், கிருமி ரோகம், விரணங்கள், நேத்திர ரோகம், சிர ரோகம், கண்டமாலை, ஆமைஜ்வரம், காமாலை, பாண்டு முதலியவை தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 402. வேறு

50 பலம் திராக்ஷையை 32 நாழி ஜலத்திற்சேர்த்து, நான்கிலொன்றாய்க் காய்ச்சி வடிகட்டி ஆறியபிறகு 200 பலம் வெல்லம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், நாககேசரம், மிளகு, திப்பலி, ஞாழல், வாய்விளங்கம் வகைக்கு ஒருபலம் சூரணம்செய்து, மேற்கூறிய கஷாயத்தில் ஒன்றாகச் சேர்த்து, நன்றாகக் கலக்கி, 30 நாள் மூடிவைத்து, பிறகு வடிகட்டி உட்கொண்டு வரவும்.

உபயோகம்:—வேளைக்கு 1 பலம் விகிதம் தினம் 2 வேளை சாப்பிட க்ஷயம், காசஸ்வாசம், தொண்டையிலுண்டாகும் வியாதிகள் முதலியவற்றைப் போக்கும்; சரீரத்தில் சேர்ந்துள்ள கெட்ட மலங்களையும் வெளிப்படுத்தும் தேகத்திற்கு வன்மையையுண்டாக்கும்.

## 403. பப்பூலாரிஷ்டம்

200 பலம் கருவேல்ம்பட்டையை 64 நாழி ஜலத்தில் சேர்த்து, 16 நாழியாகக் காய்ச்சி, ஆறியபிறகு வெல்லம் பலம் 300, காட்டாத்திப்பூ பலம் 16, திப்பலி பலம் 2, ஜாதிக்காய், தக்கோலம், ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, நாககேசரம், இலவங்கம், மிளகு வகைக்கு சூர்ணம் பலம் 1, இவ்வனைத்தையுமிட்டுக் கரைத்து 30 நாள் மட்பாத்திரத்தில் வைத்திருந்து, பிறகு எடுத்து வடிகட்டி யுபயோகிக்கலாம்.

உபயோகம்:—வேளைக்கு 1 பலம் விகிதம் தினம் 2 வேளை சாப்பிட க்ஷயம், குஷ்டம், அதிசாரம், பிரமேகம், சுவாசகாசம் முதலியவை குணப்படும்.

## பத்திய இலம்பகம்

நாம் உட்கொள்ளும் உணவு முதலிய வற்றனை ஒழுங்கு படுத்திப் பதார்த்தங்களின் தன்மைகளை இனிதுணர்ந்து, அதன்படி ஒழுகின் ஒருவருக்கு மருந்தென்பதே வேண்டுவதின்று என்பது மருத்துவ நூலோர் உட்கிடக்கை ஆசிரியர் திருவள்ளுவனாரும் இக் கருத்தேபற்றி 'மருந்தன வொன்று வேண்டாவாம் யாக்கைக், கருந்தியதற்றது போற்றியுனின்' என்றார். அங்ஙனம் ஆகாரங்களினாலேயே பிணிகளை வரவொட்டாமற் செய்வது சாத்தியமென்றிருக்கும்போது, பிணிவந்தபின் தடுப்பதற்காக அவிழ்தம் கொள்ளும்போது ரோகத்திற்கும் அவிழ்தத்திற்கும் தக்கபடி உணவுகளைக் கவனிக்க வேண்டுமாகலின் இந்நூலின்கண் பத்திய இலம்பகமும் சேர்க்கப்பட்டுள்ளது.

### இச்சாபத்தியம்

தேரையர் வெண்பா

உலகிலிச்சா பத்தியங்கண் டுர்கூர மாங்கா
யலகினமைக் காய்கொத் தவரை - கலகமுனி
மந்தவகை கூஸ்மாண்ட மாகடுகெள் ளென்றேது
மிந்தவகை நீத்துண்ப தே.

(கருத்து) பாகற்காய், மாங்காய், கத்திரிக்காய், கொத்தவரைக்காய், கல்யாணப்பூசினிக்காய், அகத்திக்கீரை, மந்தமுள்ள பதார்த்த வகைகள், கடுகு, எள் முதலியவற்றை நீக்கிப் பிறவற்றைக் கொள்வது இச்சா பத்திய மாகும்.

### இச்சாபத்தியம்

சுந்தரானந்தர் ஆயுள்வேதப் போதுலக்ஷணம்

கடுகுநற்றிலத் தெண்ணெய்கூழ்ப் பாண்டங்கள் கடலை
வடுவதாகிய தெங்குமா வருக்கைகற் காயம்
மடிவிலாதவெள் ளுள்ளிகொள் புகையிலை மதுபெண்
இடருபாகலோ டகத்தினீக் கிடலிச்சா பத்தியம்.

(க - து) கடுகு, எள்ளெண்ணெய், கல்யாணப்பூசினிக்காய், கடலை, தேங்காய், மாங்காய், பலா, பெருங்காயம், பூண்டு, புகையிலை, கள்ளு, போகம், பாகற்காய், அகத்திக்கீரை முதலியவைகளை நீக்கி இருத்தலாம்.

### கடும்பத்தியம்

தேரையர்

உப்பினு ளப்பாலு ளோட்டுப்புண் பின்போம
வப்பினு டப்பாலு ளாம்பிரமேற் - றப்பினு
டொப்பிராப் பாரதமீ துற்றதை லாதிகளுக்
குப்பிராப் பத்தியமீ தோர்.

(க - து) தனக்கு வமையில்லாப் பாதரசத்திற்கும் அதுசேர்ந்துள்ள தைல முதலியவற்றிற்கும் பத்தியம் வைத்த நாளளவும் மறுபத்திய மிருந்து பின்னாளில் உப்பை வறுத்துக் கூட்டி அதற்குப் பின் இரண்டுநாட்களில் முறையே ஓமப் பாலிட்டு முழுகிப் புளிசேர்த்துப் பசுவின் நெய்சேர்த்து ஸ்நாநஞ்செய்வதே கடின பத்தியமெனப்படும்.

### மிகு கடும்பத்தியம்

சுந்தராநந்தர் ஆயுள்வேத போதுலக்ஷணம்

கடுமைமிக்கிடு பத்தியமட்புதுக் கலத்தில்
அடுகைசெய்துண லுவரிநீர்புளிநிழ லவிர்கால்
படுகைமெய்யினி லிலாவகை படுத்திட லுவர்மண்
தொடுகை யாதிய நீக்குதலெனப் பலர் சொன்னார்.

(க - து) அதிக கடினமான பத்தியத்தை யுரைக்குமளவில் புது கலசத்தில் அன்னஞ்சமைத்து வெந்நீர்விட்டு சாப்பிடுதலாம்; புளி, உப்பு முதலியவைகளை நீக்குதலோடு அவைகளின் வாடையைத் தோற்றுவிக்கும் காற்று தேகத்தின்மீது படுதலும் உப்பை கையில் தொடுதலும் கூடாது.

### கடும்பத்தியம்

கடுமையென்றிடு பத்தியமுவர்வறுத் துண்டல்
அடைவிலாமறு பத்தியத்துவர்வறுத் தருந்தல்
கொடுமைசெய் புளிதனைச் சுட்டுக்கூட்டிட லன்றிப்
படியில்கத்தரி சிக்குருப் பிஞ்சினைப் பருகல்.

(க - து) கடும்பத்தியமென்று சொல்லப்படுவதாவது, உப்பை வறுத்து அன்னத்தில் சிறிது சேர்த்து வெந்நீர்விட்டு சாப்

பிடுதலாம்; மருந்துகொள்ளும் நாளளவு இங்ஙனமிருந்து பின்னர் மறுபத்தியத்தில் உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள்வதோடு சுட்ட புளியையும், கத்தரி, முருங்கைப் பிஞ்சி முதலியவற்றைக் குழம்பாகச் செய்து கூட்டிக்கொள்ளுதலாம்.

மருந்துதின்றிடின் பத்தியம் வகுத்திடா விடினும்
அருந்தவாகிடாப் பொருள்களை யகற்றவே வேண்டும்
பொருந்திடாது பெண் போகமோர் மருந்துக்கும் புவியில்
வருந்துவோருட லறிந்து பத்தியந் தனைவகுப்பாய்.

(க - து) நீடித்தமருந்து கொள்ளுங்காலத்தில் பத்தியமில்லையென்று கூறினும் வாத பித்த கப சம்பந்தமான தேக சுபாவத்திற்குத் தக்கபடி ஆகாத பதார்த்தங்களைத் தள்ளி ஆகுவன வற்றைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். போகம் மாத்திரம் எவ்வித மருந்திற்கும் ஆகாது யென்றறிக.

இனி முத்தோஷங்களா லுண்டாகும் பிணிகட்குத் தக்கவாறு பத்தியங் கூறுவோம்.

## வாதரோக பத்தியம்

### ப - சிந்தாமணி

செங்கழு நீர்கோட்டந் தேன்மிளகு நல்லெண்ணெய்
தங்குபெருங் காயந் தழுதாழை - யெங்கெங்குங்
கூட்டுசிறு முத்துநெய் கோதி லுழுந்திவைகள்
வாட்டுமெநி லத்தை மதி.

(இ - ள்.) செங்கழுநீர்க் கிழங்கு, கோஷ்டம், குறிஞ்சித் தேன், மிளகு, எள்ளெண்ணெய், பெருங்காயம், தழுதாலையிலை, சிற்றாமணக்கு யெண்ணெய், உழுந்து ஆகிய இவைகள் வாத ரோகத்தைப் பரிகரிக்கும் திரவங்களாம்.

மாட்டுப் பறங்கிவங்க மாமுருங்கை வெள்ளவரை
நாட்டுங்கூ ரப்பிஞ்சு நற்கருணை - காட்டுளுறை
மாகருணை யுங்கருவில் வாதத் தெழுந்துவந்த
தேகருணை நற்கறியாந் தேர்.

(இ - ள்.) கலியாணப் பூசினிக்காய், கத்திரிக்காய், வழுதுணங்காய், முருங்கைப்பிஞ்சு, வெள்ளவரைக்காய், மிதிபாகல் பிஞ்சு, காராக்கருணை, காட்டுக்கருணை முதலியவை வாத ரோகத்தை பரிகரிக்கும் கறிகளெனக் கூறப்படும்.

மேனிமுன்னை யாரைநறும் வேளைமனத் தக்காளி
யானைநெருஞ் சின்முசுக்கை யப்பைநெடுங் - கானிலுறை
மூக்குறட்டை நல்வசலை முன்பிவைக ளிற்கீரை
யாக்குவர்வா யுத்தேகர்க் காய்ந்து.

சக்கர வர்த்திவெள்ளைச் சாரடைபா கன்முருங்கை
தொக்கிலிளந் தண்டுநெறுந் தூதுணம்வார் - மைக்குழலே
சீதமுறு காணியிவை செந்தளிர்க ளிற்றினமும்
வாததே கர்க்கிரசம் வை.

(இ - ள்) குப்பைமேனி, முன்னை, ஆரை, நல்வேளை, மணித்தக்காளி, யானைநெரிஞ்சில், முசு முசுக்கை, அப்பைக்கோவை காட்டுமூக்குறட்டை, நல்வசலை, முதலிய கீரைகளை பதார்த்தங்களாகவும் சக்கிரவர்த்திக்கீரை, வெள்ளைச்சாரடை பாகல் முருங்கை, முளைக்கீரை, தூதுணம், பொன்னாங்காணி முதலிய கீரைகளை அவித்தெடுத்த ஜலத்தில் ரசம்வைத்துப் பத்தியங்கூட்டுக.

## பித்தரோக பத்தியம்

கொம்மட்டி வாழைப் பன்னங் கொளுத்திய கரியினோடே
விம்மிய தண்ணீர் விட்டான் வேரெனுங் கிழங்கு சாந்தஞ்
செம்மைசேர் நெல்லிமுள்ளி சேருமிம் மருந்தெல்லாமே
கம்மிய பித்தத்திற்குக் காலனென் றோதுவாரே.

சம்புநாவல் பீத்தாருச் சருமமு முத்தகாசுஞ்
செம்பருத் தியுஞ்செழித்த தெங்கிளம் பூவுங்கன்ன
லம்புயத் தாதினோடே யதனுறு வளையநெய்தல்
வெம்பிய சீலைச்சாம்பல் வெள்ளைப்பூ சினிக்காயென்னே.

(இ - ள்) குமட்டிமாதளம்பழம், வாழைச்சருகு, சுட்டக்கரி, தண்ணீர்விட்டான்கிழங்கு, சந்தனம், நெல்லிமுள்ளி, சம்புநாவல், பெருமரப்பட்டை, கோரைக்கிழங்கு, செம்பருத்தி, தென்னம்பூ, கரும்பு, தாமரைப்பூவினது மகரந்தம், ஷ வளையம் செங்குவளைக் கேசரம், வஸ்திரஞ் சுட்டசாம்பல் கல்யாணப்பூசினிக்காய் ஆகிய இவைகள் பித்தரோகங்களை பரிகரிக்கக் கூடியனவாம்.

வெள்ளரி யிரண்டுபாகல் விரிபுடல் பீர்க்குசிம்பை
முள்ளிபூ சினிகத்தாரி முருங்கைமா களவரம்பை
யெள்ளிவிக் காய்கள்வள்ளி யீருளிகதலிப் பூதன்
டள்ளியுண் ணுணஞ்செய்வ ரரும்பித்த தேகர்க்கென்றே.

(இ - ள்) பித்த தேகிகளுக்கு வெள்ளரி, கொம்புபாகல், மிதிபாகல், நீளப்புடல், பீர்க்கங்காய் பிஞ்சு, அவரை, ஆற்று முள்ளி, கல்யாணப்பூசினி, கத்திரிப்பிஞ்சு, முருங்கை, பெருங் களாக்காய், வாழை ஆகிய இக்காய்களையும் வள்ளிக்கிழங்கு வெங்காயம் வாழைப்பூ ஷை தண்டு இவைகளையும் பதார்த்தங் களாக கூட்டுவர்.

புளியாரை கோவை முருங்கை வசலைநற் பொன்முசுட்டை
மிளகப்பை யோரிதழ்த் தாமரை பாலை வெளிமுசுக்கை
வளர்தூது ணுஞ்சுரை வல்லாரை சில்லி மணத்தக்காளித்
தளிரிளங் கீரைகள் பித்தசுதேகிக டாமுண்பரே.

(இ - ள்) புளியாரை, கோவை, முருங்கை, வசலை, நல்ல பொன் முசுட்டை, மிளகு, அப்பைக்கோவை, ஓரிதழ் தாமரை, பாலை, காட்டுமுசுக்கை, தூதுணம், சுரை, வல்லாரை, சிறுகீரை, மணித்தக்காளி, ஆகியக் கீரைகளை பித்தரோகங்கட்கு போஜ னத்தில் பதார்த்தங்களாகச் சேர்ப்பாராக.

கொத்து வசலை கொடிவசலை நல்லகத்தி
தத்து புனல்வழுக்கை தைவேலை - நெய்த்ததராச்
சாகங் களையவித்துச் சாறுவைத்துண் பார்பித்த
தேகங் களையுடையார் தேர்.

(இ - ள்) கொத்துவசலை, கொடிவசலை, வெள்ளையகத்தி, பிரமிய வழுக்கை தைவேளை, தரா ஆகிய இவ்விலைகளை வேகவைத்து இறுத்த ஜலத்தில் செய்த ரசத்தை உண்பாராக.

## கபரோக பத்தியம்

ஆவி னதுபா லரத்தைமுள் ளங்கிமயிற்
றாவி நறுஞ்சாம்பல் தூதுளந்தேன் - மாவோமந்
தூய்ய சருக்கரை துழாய்விதைவி ளாம்பழமு
மையமதை யோட்டு மறி.

(இ - ள்) பசும்பால், தும்பராஷ்டம், முள்ளங்கி, மயிலிறகுச் சாம்பல், தூதுளைச்சமூலம், மலைத்தேன், ஓமம், வெள்ளைச்சருக் கரை, துளசிவிதை, விளாம்பழம், ஆகியவைகள் கபரோகத் தைப் பரிகரிக்கக் கூடியனவாம்.

கத்திரிபேய்ப் புடலவரை யிருபாகல் பருங்களா கண்டங்காரி [வேர்
யத்திக்காய் களும்வருக்கை மாபயற்றை சுரையால்பீர்க் கரும்பிஞ்சும்
மொய்த்தகு ரணங்கதலித் தண்டோடப் பூ முளங்கி முருக்கரும்பு
மத்திபூ சினிக்கா யீருள்ளிவள்ளி யுங்கபத் தோர்க் காணமாமே.

(இ-ள்) சிலேஷ்ம தேகிகட்கு கத்திரி. பேய்புடல் அவரை, கொம்புபாகல், மிதிப்பாகல், பெரியகளா, கண்டங்கத்திரி, அத்தி முதலிய காய்களையும்; பலா, பயற்றம்பிஞ்சு, சுரை, ஆல், பீர்க்கு இவற்றின் பிஞ்சுகளும்; கருணைக்கிழங்கு, வாழைத் தண்டு, அதன்பூவும், முள்ளங்கி, முள்முருக்கினரும்பு, கூஸ்மாண் டம், வெங்காயம், வள்ளிக்கிழங்கு முதலியவைகளும் ஆகும்.

வேளைமணத் தக்காளி மென்சிதை சக்கிரவர்த்தி
பீளை வசலைசுக்கு பெண்சுணங்கன் - வேளையிவைச்
செந்தளிர்க ளைக்கீரை செய்வர்கப தேகர்நிதம்
வந்தளி யுணத்தான் மகிழ்ந்து.

(இ-ள்) நல்வேளை, மணத்தக்காளி, பொன்னாங்காணி, சக்கிரவர்த்தி, பீளை, வசலை, சுக்கு, கற்றாழை, நாய்வேளை ஆகிய கீரைகளை சமைத்துண்பாராக.

கந்தவோ மஞ்செங் கடுகுசத குப்பைதரா
வெந்தியங் கொத்துமலி வேளைசுக்கு - முந்தகத்தி
தூறுகுறிஞ் சாபாக றும்பையிச்சா கங்கள்வெந்த
சாறுகப தேகர்க்காஞ் சாற்று.

(இ-ள்) ஓமம், செங்கடுகு, சதகுப்பை, வெந்தியம், கொத்து மல்லி, வேளை, சுக்கு, அகத்தி, குறிஞ்சு, பாகல், தும்பை இவைகளை அவித்தெடுத்த ஜலங்களில் ரசம் வைத்துண்பது கப ரோகங்கட்கு சாலச் சிறந்ததாகும்.

காரையிரு கோவைமுன்னை செம்பை புடோல் துயிலிவழுக் கைநெருஞ்சி
லாரைபுளி யாரைமுல்லை மருதநெய்தன் மேனிநல்வல் லாரைபொன்னு
வாரைமுசுக் கைமுருங்கை யிருபிண்ணாக் கோடுபண்ணை மணலீபிள்ளைக்
கீரைமுசுட் டையுங்காரா மணிமாடங் கடலைபுளிக் கிரிக்களாவே.

(இ-ள்.) கரை, அப்பைக் கோவை, வரிக்கோவை, பசும் முன்னை, கருஞ்செம்பை, பேய்புடல், துயிலி, பிரமியவழுக்கை, நெருஞ்சில், நீராரை, புளியாரை, முல்லை, மருதம், நெய்தல் குப்பைமேனி, வல்லாரை, பொன்னாவாரை, முசுமுசுக்கை, பெரும் பிண்ணாக்கு, சிறு பிண்ணாக்கு, பண்ணை, மணலி, முளைக்கீரை

முசுட்டை, காராமணி, உழுந்து கடலை, புளிப்புள்ள மலைக்களாக் காய், ஆகிய இவைகளை கபரோகத்தைக் குணப்படுத்தும் பத்தியப் பதார்த்தங்களாம்.

### அகஸ்தியர் வைத்திய கர்ம சூத்திரம்

உண்மையாய் மருந்துகொண்டால் பத்தியமுறையைக் கேளு
கண்மையா மிளகுமஞ்சள் சீரகங்கருதிக் கொள்ளு
தண்மையாய் கறிவகைகள் சாற்றுவேன் தாணியோர்க்கு
வண்மையாம் முருங்கைப்பிஞ்சு வழுதலைப் பிஞ்சுமாமே.

பிஞ்சோடு வாழைக்காயுஞ் துவரையும் பிரண்டைசுண்டை
தஞ்சமாஞ் சிறுபயறு தனிமுளைக் கீரைத்தண்டு
நஞ்சில்லாச் சிறுகீரை நவிலுவோம் நெல்லிக்காயும்
கொஞ்சிய முசுட்டைக்கீரைத் தாமது குணமதாமே.

### இறைச்சி வகைகளுள் பத்தியாபத்தியம்

குணமதாம் பால்நெய்மோரு குரும்பியிலுடும்புக் காடை
நிணமதாம்ஆமை விராலோடு நிகழ்த்தக் கேளு
முணவதாம் ஆடு கோழிமுட்டை வெள்ளெலியுமாகும்
உணவதாம் ஆரால்தேளி விராலோடு உளுவைக்காணே.

உளுவையும் சுருதிறட்டி நெத்திலி யுறுதியாகும்
பழுதிலா திவைகளெல்லாம் பகர்ந்திட்டோம் பொதுவாய்ப்பாரு
எழுதிய நோய்கள்கண் டெடுத்திடு மின்னதென்றும்
கொழுவிய நோய்கட் கேற்பக் கருதியே கூட்டிக்கொள்ளே.

### போகர் பத்தியமுறை

செப்பக்கே ளவிழ்தங்கள் கொள்ளும்போது
    திறமாகப் பத்தியங்கள் காக்கவேண்டும்
துப்புரவாய்ப் பத்தியங்கள் காத்திட்டக்கால்
    தொன்னூயு முன்னேபோ மில்லாவிட்டால்
கொப்புடனே மண்டலமே கொள்ளுவாய் முன்
    கொண்டாலும் நாட்செல்லும் நோய்கள்தீர
தப்பாதே பத்தியந்தான் சொல்லக்கேளு
    சாதியறிந் தினமறிந்து சொல்லாய் சொல்லே.

சொல்லுவது மாசாரமுள்ள பேர்க்குத்
    துவரை சிறுபயறு தூதுளை சமூலம்
புல்லுவது சிறுகீரைப் பொன்னாங்காணி
    புளியாரைக் கீரைபசரை யாரை

கல்லான வழுதுளங்காய் முருங்கைப்பிஞ்சு
கதலிப்பிஞ் சாகுமிகு மணத்தக்காளி
நல்லதொரு பழையநெல்லி வடகமாகும்
நாரத்தங்காய்க் கச்சல் பழையதாமே.

ஆமென்ற மற்றோர்க்கு வெள்ளாட்டு வற்றல்
ஆதொண்டைக் காய்வற்ற லவரைப்பிஞ்சு
வேமென்ற புடலங்காய்ப் பீர்க்கங்காய்
விதமான ஞானியண்டம் வெள்ளரியாம்
தாமென்ற முயலாகு முடும்புமாகும்
தப்பாது காடைகவு தாரியாகும்
நாதென்ற சிறுமீனு மாகுஞ்சொன்னோம்
நலமாகத்தளியோடு வுளுவையாமே.

உளுவையா மோர்க்குருவியாகுஞ் சொன்னோம்
உயராவின் நெய்பாலாங் கருவேம்பாகும்
பழுதில்லாச் சர்க்கரைதேன் கற்கண்டாகும்
பருவமாக் கதலிப்பழ மாகும்பின்பு
வழுதிலா மிளகுசீரகம் வறுத்த வுப்பு
மகிமை வெள்ளுள்ளி யாகுமன்றித்
தழுவியே தலைமுழுகத் தைலங்கேளு
தனியான விளக்கெண்ணெய்த் தானுமாமே.

அகஸ்தியர்

மருந்துண்ணும்போது அபத்தியம்

கொள்ளு காடி குமட்டிக்காய் கோழிபன்றி கொக்குடனே
முள்ளிற் பெரிய பாகற்காய் முதிருமவரை பயற்றங்காய்
பள்ளத் தெழுந்த மடற்சேம்பு படரும் வள்ளி பாலையிவை
யெள்ளத் தனைதான் றின்பீரே லெல்லா மருந்து மிழந்தீரே.

கடலையவரை பெரும்பயறு கானற்காட்டுப் பாகற்காய்
படரும்பசரை நெல்லிக்காய் பழுபாகற்காய் சுண்டக்காய்
அடரயிவைகட் கொண்டோருக் கனங்கன்மருட முலையாளே
யுடனேமுறியு மருந்தெல்லா முடலில்வியாதி பலத்திடுமே.

மாங்கா யிளநீர் மாதுளங்காய் மாவின்பண்டம் புளிகடுகு
தேங்காய் நெய்பால் கிழங்குபழந் தின்னுங்காயம் வெங்காய
மீங்கா தரிக்குஞ் சுராபான மீச்சங்கள்ளு பனங்கள்ளு
மாங்கே யிவற்று ளொன்றேனு மருந்தாதிருந்தான் மருந்தாமே.

---

* காங்கை.

### நீர் வாழ்வனவற்றுள் பத்தியா பத்தியம்

மயறி குறவை வரால் தேளி மற்றுங் குறவை காய்க்கெளிறு
அயிரை சன்னே பத்தியமா மாகா மீன்க ளினிக்கேளு
முயரும் வாளை யிருல்கூனி யோங்கும் கெளிறுவிலாங்கு கெண்டை
கயலோ டிவைக ளாகாவாங் காரார் குழலே கண்டுரையே.

### மருந்துண்ணும்போது பத்திய பதார்த்தம்

கிள்ளுக்கீரை * யிளவத்திக் கிளருமுருங்கை யிலைச்சாரம்
புள்ளிப்பரட்டை யிளவவரைப் பொன்னுங்காணிச் சிறுகீரை
† சுள்ளிக்கொழுந்து மிவையெல்லாஞ் சுகமாய்ப் புடலம்பிஞ்சுடனே
வள்ளைத்துளிரைத் சுண்டலுமாம் வகையாயறியும் உண்பவர்க்கே.

முருங்கையிலையு மதன்காயு முள்ளிப்பிஞ்சு தூதுவளை
அரும்பும் இலையும் அதன்காயு ஆவின்பாலுஞ் சுரைக்கொழுந்தும்
நெருங்குஞ்சிறிய வழுதுளையும் நிறைந்தகண்டங் கத்தரியும்
விரும்பியுண்ணு மிலைக்கறியாய் விட்டேயோடும் வியாதிகளே.

### வேறு

ப - சிந்தாமணி

பொன்னுங்காணி சிறுகீரை புதியநறுநெய் வரால்குறவை
சொன்னேன்கோவைக் காய்வற்றல் சுண்டையவரைப் பிஞ்சுடனே
பன்னுவப்பை வெள்ளுள்ளி பரியமுருங்கை யிளம்பிஞ்சும்
நன்னீர்விளைத்த சிறுபயறு நன்மாங்காய்க்குட் பிஞ்சுநன்றே.

அத்திப்பிஞ்சு கருவாழை யதன்றன்பிஞ்சு பூவாகுங்
கத்தித்திரியு மூர்க்குருவி காடையுடனே சிவலாமை
சுத்தமாங்காய் நறும்பருப்புஞ் சுறுமீன் றிருக்கைக் கருவாடாம்
பத்தியத்தி லிவைதவரப் பச்சைமீன்கள் பகையாமே.

வேண்டிய மருந்துண்பார்கள் விராலொடு குறவைதேளி
யாண்டிடு மயிரையூடா னுனைசன்னையுஞ் சுதும்பு
மீண்டிடுஞ் சிறுநெய்தோலி யிவைகளை யருந்துங்காலை
மீண்டிவை யுலர்ந்ததாகும் விரைமலர்க் குழலினளே.

காடையுடும்பு கவுதாரி காட்டினெலியு மூர்க்குருவி
ஆடுவிரும்பில் வெள்ளாடா மதுவுதுலர்த்திக் கறிகொள்ளு
நாடுதனில் வாழ்வரால் குறவை நலமாமிவையு முலர்த்திக்கொள்
கூடுங்கூடா தென்னுதே கூட்டின் மருந்துங் குணந்தருமே.

---

* அத்திப்பிஞ்சு. † மாந்துளிர்.

## சுரத்திற்கு ஆகாத பதார்த்தங்கள்

### பாலவாகடத் திரட்டு

பால்எண்ணெய் யிளநீர்போகம் பருகிடுங் குளிர்ந்தசோறு
கால்நடை தயிர் புளிப்புக் கடுவேலை இனிப்புபாகு
மால்தரும் மடமான்கன்றே வந்திடுஞ் சுரத்திற்காகா
ஞாலமேல் மனிதர்பேரில் நாட்டிடில் சன்னியாமே.

பச்சைமீன் இறைச்சிக்கோழி பழங்கறி தேங்காய் மாங்காய்
இச்சைநெய்ப் பருப்புமுட்டை எழிலுள புனுகுசந்தம்
நச்சுள இவைகள் எல்லாம் நாட்டிய சுரத்திற்காகா
கொச்சைமா னிடர்கட் கொண்டால் கொடியமரணம் வந்திடுமே.

தோசைப்பிட்டுப் பணியாரம் சொல்லும்பயறு அவல் பொரிகள்
வேசைஉறக்கம் மஞ்சள்வாடை வேண்டாம் பழங்கறி பழங்கஞ்சி
ஆசையுடனே பொருள்தேடல் யாக்கையுறக்கம் இவையாகா
தோஷம்மிகுந்து பலபிணியாய்ச் சொல்லில்மரணம் வந்திடுமே.

## அதிசாரம் கிராணிமுதலிய ரோகங்களுக்கு பத்தியம்

### ப - சிந்தாமணி

மானேவயிறு கழிவார்க்கு வாழைக்கச்ச லத்திக்காய்
கானேதிரியு மூர்க்குருவி காடையுடும்பு கவுதாரி
தானேயாகு முயலுலரிற் றக்ககுலத்துக் கருவாடா
மீனேவிரும்பித் தின்பீரேல் வீணேயுயிரை யிழந்தீரே.

### அபத்தியம்

காரா மணிக்கீரை காட்டுப் பறங்கியிலை
பேராம் பெரும்பயற்றின் பேரிலைகள் - சீரா
ரகத்திபருங் கத்திரிக்கா யாயிழையே மீன்கள்
பகைத்ததிக பேதிதரும் பார்.

## மூலரோக பத்தியம்

### ப - சிந்தாமணி

மருள்சா ரடைகருணை வச்ரவல்லி காட்டுக்
கருணை புளிநரளை காராக் - கருணை
மெருகோடு வெள்ளருகு வெண்சித்திர மூலம்
வருமூலம் போக்கு மருந்து.

## அயச்சிந்தூரத்தின் பத்தியம்

ப – சிந்தாமணி

புத்தியந் திலங்கூஸ் மாண்டம் பறங்கிகொள் கடுகுதோரை
கத்திரி பிரமபத்திரி கட்கஞ்சா வபினி மாதர்
சுத்தமாகாது பானெய் துய்த்திட லாம்புளிப்புப்
புத்தம மகற்றலானு லுத்தமம் பழுதுமின்றே.

(இ - ள்.) அயச்சிந்தூரத்திற்கு பூசனி, கொள், கடுகு, மூங்கிலரிசி, கத்திரி, புகையிலை, கெஞ்சா, அபினி, இவை யாகாவாம். புணர்ச்சியோவெனில் பரிச்சேதங்கூடாது பசுவின் நெய்யும் பாலும் ஆகும் இதில் புளியும் உப்பும் நீக்கினால் உத்தமமாம். அன்றியும் உத்தமமாகிய அம் மருந்தும் பழுதுபடாது.

## காந்தச் சிந்தூரத்தின் பத்தியம்

பத்தியம் புளியுப்பின்றேற் பலிதமாம் வாரத்துள்ளே
ஈத்திடி லிரண்டுவார நவிலுமிச்சா பத்தியங்கொள்
கத்திரிக் காயகத்திடு கடுகூஸ் மாண்டமென்னு
கொத்தவ ரைக்காய் மாங்காய் கூலக்கா யிவையாகாவே.

(இ - ள்.) காந்தச் சிந்தூரத்திற்கு புளி உப்பு நீக்கில் அது ஒரு வாரத்திற்குள் பயனைத்தரும் அவைகளை விரும்பினால் இச்சாபத்தியமாக கத்திரி, அகத்தி, கடுகு, பூசனி, கொத்தவரை, மாங்காய், பலாக்காய் இவைகளை நீக்கி யுண்பதாம்.

## பாதரச பத்தியம்

மற்சமுப்பு சீதோட்டின மந்தாதி வத்தெண்ணெய்
துற்சமத்தி யங்கைப்பு தொங்குபுளி - யைச்சற்றுங்
கூட்டாமற் சூதங் கொடுப்பருண்டா ரைச்சமன்பாற்
காட்டாமற் றுமிருத்தக் காண்.

(இ - ள்) இரசத்திற்கு மீன், லவணம், சீதள வெப்பமுள்ள பண்டம், அக்கினிமந்த வஸ்து, எண்ணெய்கள், கசப்பு, புளிப்பு இவை கூடாது.

## தாம்பர பஸ்பத்தின் பத்தியம்

புளியொன்று தவிரவெல்லாம் புசிக்கினும் நவையுறாதை
யிளைபெரு நெருப்புக்கீர மில்லையென்பது போலாகு

மலைமுச விருசங்காடி யாமில மடாதுபாகற்
கலையர மகட்பழம்நெய் சுதைசருக் கரைமாநன்றே.

(இ - ள்) தாம்பிர பஸ்பத்திற்கு புளிப்பு ஒழிந்த மற்ற சுவையுள்ள பதார்த்தங்கள் எல்லாம் உண்ணினும் குற்றமாகாது. ஏனெனில் நீரைவறட்டுகிற பெரு நெருப்பிற்கு ஈறமில்லையென்பதுபோலாம். ஆனல் புளித்தத் தயிர், முயற்கறி, எலுமிச்சம் பழம், காடி, நெல்லிக்காய் இவைகூடாது. பலாச்சுளை, வாழைப் பழம், பசும்நெய், பால், சருக்கரை இவை நலமாம்.

## பறங்கிப்பட்டைக்குப் பத்தியம்

மஞ்சளோ டெண்ணெய் பாக்கு மாங்கிச மலுவாகார
மிஞ்சிகார் கடுகுகைத்த விழிவுறு புளிமண்ணுப்பு
மஞ்சுறு வாளைகோலா மடவைமீன் சன்னைவெளவால்
கிஞ்சத மருந்தாலுங் கெடும்பறங் கித்தோன்மாதோ.

(இ - ள்) பறங்கிப்பட்டைக்கு, கறிமஞ்சள், நெல்லெண்ணெய், களிப்பாக்கு, மிருகமாமிசம், உறைப்பு, இஞ்சி கடுகு, கசப்பு, புளிப்பு, லவணம் இவைகளும்: வாளை, கோலா, மடவை, சன்னை; வெளவ்வால் முதலிய மீன்களும் சிறிதும் சேரலாகாது சேரில் அம்மருந்தின் குணங்கெடும்.

## ஸ்நாந தைலப் பத்தியம்

புலர்த்திய பின்பருந்து போஜனந் தனிற்புளிப்பு
சலத்தூறு ததிபால் பாகல் சாகம்மீ னிறைச்சியச்ச
நிலத்தெழு பிரமபத்திரி நித்திரை மடவா ரின்னு
நலத்துரு வகைநீக்கப் பின்னாளும் பத்தியத்து நில்லே.

(இ - ள்) தைலமாடி ஈரந்துவட்டியவுடன் நீ உண்ணும் உணவில் புளி, தயிர், பால், பாகற்காய், இலைக்கறி, மச்சவகை, மாமிசங்கள்; அகத்தி, புகையிலை, பகல்நித்திரை, புணர்ச்சி இன்னுந்தகாத நடத்தை இவைகளை நீக்குவதுந் தவிர மறுநாளும் பத்தியமாக இருக்கவேண்டும்.

**சம்பூர்ணம்**

# அட்டவணை

அ

அக்பர் அரக்கேஷீர் ... 298
அக்ரகாரமெழுகு ... 261
அக்னிமுகச் சூரணம் ... 124
அகத்தியனாரும் பதினெண் சித்தர் வணக்கம் ... 2
அசுவகந்தி சூரணம் ... 116
அசுவகந்தி லேகியம் ... 173
அசோகாரிஷ்டம் ... 307
* அடுப்பு ... 69
* அடுப்பு (புகை) ... 70
அண்டத் தைலம் ... 183
வேறு ... 184
அண்டவாதத்திற்கு ... 296
அதிசாரப் பத்தியம் ... 318
,, அபத்தியம் ... 318
அத்திப்பழ ஷர்பத்து ... 275
அபத்தியம் (பொது) ... 316
,, (சுரத்திற்கு) ... 318
அப்பிரக பற்பம் ... 231
அப்பிரகச் சிந்தூரம் ... 235
வேறு ... 236
அமிருத சஞ்சீவினி லேகியம் 167
அமிர்தாதிக் குளிகை ... 131
வேறு ... 131
அயக்கட்டுச் சிந்தூரம் ... 255
அயகாந்தச் சிந்தூரம் ... 249
அயகாந்த வப்பிரகச்சிந்தூரம் 250
அயச் சிந்தூரம் ... 232
வேறு ... 233
அயச் சிந்தூர பத்தியம் ... 319
அயத்தங்கச் சிந்தூரம் ... 248
அயத்தங்க மாத்திரை ... 139
அய மெழுகு ... 268
அயவீரச் சிந்தூரம் ... 241
அருதா மாத்திரை ... 125
அரைப்பு விதி ... 52
அரைப்பில் முன்பின்சேர்வன 53
அரையாப்பு சிகிச்சை ... 293
* அவியந்திரம் ... 43
அவை யடக்கம் ... 2
அன்னபேதி சிந்தூரம் ... 251
அஷ்டவிதப் பரிட்சை ... 14

ஆ

ஆசன வர்த்தி ... 300
ஆடா தோடை சூரணம் ... 117
ஆடா தோடை ரசாயனம் ... 299
ஆட்டுத்தலை லேகியம் ... 158
ஆட்டுக்கால் லேகியம் ... 159
ஆதண்டை யெண்ணெய் ... 190
ஆநந்த பைரவ மாத்திரை ... 126
ஆப்பில் ஷர்பத்து ... 278
ஆமலகாதி கிருதம் ... 211
ஆமையோட்டுப் பற்பம் ... 216
வேறு ,,
ஆயிலெண்ணெய் ... 191
ஆல்பகார ஷர்பத்து ... 279
ஆவாரைக் கிருதம் ... 201
ஆவாரம்பூ அரக் ... 285
ஆளிவிரை ஷர்பத்து ... 275

இ

இச்சாபத்தியம் ... 309
இடிகட்டுவாதி லேகியம் ... 172
இடிக்கும் பாகம் ... 55
இடிபூர்ணாதி லேகியம் ... 166
இடிவல்லாதி லேகியம் ... 164
வேறு ... 165
இந்திரியஸ்தம்பனகுளிகை ... 148
வேறு ... 148
இரசபாஷாண வீறுதணிய 103
இரசோத்மாதி ... 110
இரச சிந்தூரம் ... 257
வேறு ... 256
இரத்தக் காசத்திற்கு ... 93
இருமல் கஷாயம் ... 94
வேறு ... 92

இரும்பிலித் தைலம் ... 196
இலகுசுந்தர்சனச் சூரணம் ... 118
" கங்காதரச் சூரணம் ... 121
இலட்சுமி நாராயண
மாத்திரை ... 132
இலவங்காதிச் சூரணம் ... 123
இலவங்காதிக் குளிகை ... 131
இலவண பற்பம் ... 216
இலவண மெழுகு ... 258
* இலிங்கரச முறை ... 84
இலிங்கமாத்திரை ... 150
இலிங்கலேபன் மெழுகு ... 267
இலிங்கத் தைலம் ... 187
இலேகிய பாகம் ... 53
இலேகிய இலம்பகம் ... 156
இலைவகை சுத்தி ... 28

ஈ

ஈஸ்வர சூடாமணித்தைலம் 192

உ

உசீராஸவம் ... 306
உடைந்த எலும்புகூட ... 294
உபரச சுத்தி ... 39
உயர்ந்த பெருங்காயம் ... 302
உயர்ந்த சாம்பிராணி ... 302
உஷ்ண சுரக்கஷாயம் ... 90
உஷ்தகதோஷ் ஷர்பத்து ... 279

ஊ

* ஊது யந்திரம் ... 73

எ

எஃகுச் சிந்தூரம் ... 232
எச்ச இலம்பகம் ... 293
எண்ணெய் மிகுதியுடையவை
களை சூரணிக்கும் விதி ... 51
எண்ணெய் மிகுதியுடையவை
களை லேகியத்தில் சேர்க்
கும் விதம் ... 54
எருமிகினும் குறையினும்
நேருங் கெடுதி ... 66

ஐ

ஐங்காயச் சூரணம் ... 111
வேறு ... 112

ஒ

ஒஞ்ஞன்தைலம் ... 184
ஓம அரக் ... 284

க

கங்காசல குப்பிக்குப் பிரதி 71
கடும்பத்தியம் ... 310
கடைச்சரக்குச் சுத்தி ... 28
கட்டியை உடைக்க ... 294
கட்டுவாதி மாத்திரை ... 153
கண எண்ணெய் ... 177
கண்டேச கஷாயம் ... 100
வேறு "
வேறு "
வேறு "
கந்தகத் தைலம் ... 188
கந்தகத்திராவகம் ... 292
கந்தபுஷ்பிலேகியம் ... 174
கந்தக ரசாயனம் ... 297
கபசுர கஷாயம் ... 91
கபநாடி சூத்திரம் ... 8
கபரிமெழுகு ... 269
கபரோகபத்தியம் ... 313
கபாங்குச சூரணம் ... 107
கம்பீர கற்பம் ... 303
கருங்கோழித் தைலம் ... 197
கருப்பூர மாத்திரை ... 138
கருப்பூராதி அரக் ... 284
கருவங்கச்சிந்தூரம் ... 247
கருவங்கபற்பம் ... 229
வேறு ... 230
வேறு ... 230
கர்ப்பவிருத்தி எண்ணெய் ... 178
கர்ஞமர்த தைலம் ... 200
வேறு ... 200
கல்கம் ... 50
கல்கங்களை வழக்கும்பதம் ... 51
கல்நார் சிந்தூரம் ... 249
கல்நார் பற்பம் ... 213
வேறு ... 213
கல்யாண கிருதம் ... 203
கறுப்பு மெழுகு ... 270
கற்கத்திற்கு சருக்கரை அளவு 54
கற்கத்திற்கு பால் அளவு ... 55
கனகாசவம் ... 305
கஷாயம் இலம்பகம் ... 88
கஷாயம் (ஐந்து) ... 45
கஷாயம் (பதிஞைஞ்கு) ... 47
கஷாயம் (ஏழு) ... 48
கஷாய பாண்டம் ... 48

கஷாயம் பருகும்முறை 49
கஷாயம் அளவு ... 49
கஷாயம் இதனை யிப்படி காய்ச்ச வென்பது ... 49
கஷாயம் அளவிற்கு தைலம் ... 56
கஸ்தூரி மாத்திரை ... 127
வேறு ... 128
கஸ்தூரி எண்ணெய் ... 186
கஸ்தூரி மெழுகு ... 263

கா

காக்கட்டான் மாத்திரை ... 136
வேறு ... 137
காசிக்கட்டி சூரணம் ... 124
காடிக்கார மாத்திரை ... 146
காடி ஷர்பத்து ... 278
காடி ஜெயநீர் ... 303
காந்த சிந்தூரம் ... 335
காந்த் சிந்தூரபத்தியம் ... 319
காமாலைக்கு கஷாயம் ... 95
காயலேகியம் ... 156
காரசாரச் சுத்தி ... 35
காரமாத்திரை ... 134
வேறு ... 135
காவுஸ்பான் ஷர்பத்து ... 278
காளமேக நாராயணசிந்தூரம் 238

கி

கிராணி கேசரி குளிகை ... 152
கிராணிகபாடமைனம் ... 272
கிருத அளவு ... 65
கிருத இலம்பகம் ... 201
கிருத நெய் அளவு ... 65
கிருத பாகம் ... ,,
கிழங்குவகை சுத்தி ... 28

கு

குடஜாதிக் கிருதம் ... 210
குடஜாரிஷ்டம் .. 307
* குப்பிப்புடத் தைலம் ... 63
குப்பிகட்குச் சீலை ... 69
குப்பி எரிப்பில் பழுதாயின் ... 71
குமரி லேகியம் ... 157
குமரித் தைலம் ... 193
குலே காவுஸ்பான் அரக் ... 283
* குழித் தைலம் ... 61
*வேறு ... 62
குளிகுளித்தவர்களுக்கு கஷாயம் ... 97

கூ

கூழ்பாண்ட கிருதம் ... 212

கொ

கொடிக்கள்ளி எண்ணெய் ... 185

கோ

கோசபரிபாலனஎண்ணெய் ... 196
கோரோசன மாத்திரை ... 129
வேறு ... 130
கோரோசன எண்ணெய் ... 186

கௌ

கௌரி சிந்தாமணிச் சிந்தூரம் 253

ச

சங்கதிராவகம் ... 290
வேறு ... 291
வேறு ... 291
சங்குபற்பம் ... 215
வேறு ... 215
சஞ்சீவி அரக் ... 286
சஞ்சீவித் தைலம் ... 192
சதாவரிக்கிருதம் ... 201
சத்திச்சாரணைக்கிருதம் ... 204
சந்தனக் கஷாயம் ... 95
சந்தன ஷர்பத் ... 277
சந்தனுதிச் சூரணம் ... 110
சந்தனுதிக் குளிகை ... 149
வேறு ... 150
சந்தனுசவம் ... 304
சந்தான லேகியம் ... 174
சப்தரச சிந்தூரம் ... 242
சர்க்கரைக்கு ஜலம் அளவு ... 54
சர்பராஜ மையனம் ... 271
சர்வஜ்வரக்கஷாயம் ... 90

சா

* சாம்பிராணிப்பூ ... 85
* சாம்பிராணிப்பூ தைலம் ... 86
வேறு ... 87
சாம்பிராணி (வைப்பு) ... 302
சாலாமிசிரி லேகியம் ... 162

சி

சிட்டுக் குருவி லேகியம் ... 163
சிந்தூரம் ... 67
,, இலக்கனம் ... 72
,, இலம்பகம் ... 252
,, கட்டி ... 72
* சிந்தூரம், தைலம், கிருதம் காய்ச்ச அடுப்பு ... 69

சிந்தூரம் வீறுதணியகஷாயம் 103
வேறு ... 104
சிரசில் நீரேற்றம் ... 295
சிலாசத்து பற்பம் ... 214
சிலேத்தும பித்த தொந்தம்... 12
சிலேத்துமவாத தொந்தம் ... 13
சிவப்பிரான் வணக்கம் ... 2
சிவப்பு மெழுகு ... 270
சிற்றுமுட்டி கிருதம் ... 204

சீ

சீதோபலாதிச் சூரணம் ... 122
சீலை செய்யும் விகிதம் ... 66
சீலையின் தன்மை (திராவகவாலைக்கு) ... 77

சு

சுகபேதிக் கஷாயம் ... 88
சுகபேதிச் சூரணம் ... 105
* சுடர்தைலம் ... 64
சுத்தமண்டூரச் சிந்தூரம் ... 234
சுத்திக்கிரம இலம்பகம் ... 26
சுரக்கஷாயம் (ஷடங்கம்) ... 88
வேறு ... 89
வேறு (பித்தசீதலத்திற்கு ... ,,
சுரக்கஷாயம் (மலபந்தம்) ... 91
வேறு ... 91
,, (வீக்கம், மலம், ஜலக்கட்டுக்கு ... 91
சுரக்கஷாயம் ... 92
,, (கருப்பிணிக்கு) ... 94
சுரக்கஷாயம் (தாகமிருப்பின்) 94
சுரக்கட்டிச் சூரணம் ... 108
சுரக்கட்டிக்கு ... 296
சுரசகஷாயம் (அதிநீருக்கு) .. 98
சுவர்ணபூபதி குளிகை ... 143
சுவர்ணபுஷ்பரச சிந்தூரம் ... 240
சுவாசகாச மாத்திரை ... 151
சுவாசகாச குடோரி சிந்தூரம் 257
சுவாசகாச நெய் ... 299

சூ

சூதகத்தையுடைக்க கஷாயம். 96
சூரண இலம்பகம் ... 105
சூரணபாகம் ... 50
சூரணவிதி ... 50
சூரணத்திற்குசருக்கரைஅளவு 51
சூரண அனுபானம் ... 51

சோ

சோடச மாத்திரை ... 142
சோம்பு அரக் ... 284

த

தங்கச் சிந்தூரம் ... 243
வேறு ... 243
வேறு ... 244
வேறு ... 244
வேறு ... 247
வேறு ... 257
தங்க அயச் சிந்தூரம் ... 248
தசமுகவுதயாக்கினிச்சிந்தூரம் 255
தசதீபாக்கினிச் சிந்தூரம் ... 117
தந்துபாகம் ... 54
தபாஷீர் சூரணம் ... 123
தவாவுல் ஸ்மாணி ... 167
தனிவீர மெழுகு ... 266

தா

தாது ... 4
தாமிரபூபதி குளிகை ... 145
தாமிர நாகபற்பம் ... 223
தாமிர பற்பம் ... 230
தாமிர மெழுகு ... 261
வேறு ... 262
தாமிரபற்ப பத்தியம் ... 319
தாம்பூலமாத்திரை ... 141
தாழம்பூ அரக் ... 283
தாளிசபத்திரி சூரணம் ... 121

தி

திராவகம் ... 76
,, எடுக்கும் அளவு ... 77
திராவகம் இறங்காக்குறி ... 77
திராவகம் பாத்திரம் ... 77
திராக்ஷாதி கிருதம் 205
திராக்ஷாரிஷ்டம் ... 307
வேறு ... 308
திரிபலாதி லேகியம் ... 172
திரிமூர்த்தி சிந்தூரம் ... 233
திரியாக்கேபாரோக் ... 264

தீ

தீநீர் ... 76
தீநீர் இலம்பகம் ... 283
* தீநீர் திராவகவாலை ... 78
* வேறு ... 81
* வேறு ... 83

தீநீரின் அளவு ... 76
,, உட்கொள்ளும் அளவு 76
தீபாக்கினி மாத்திரை ... 146

து

துரிஞ்சிபழம் ஷர்பத்து ... 277
துரிஞ்சி ஷர்பத்து ... 277

தூ

தாது லக்ஷணம் ... 24
தாதுளைக் கிருதம் ... 202
* தூப யந்திரம் ... 52

தை

தைல இலம்பகம் ... 177
தைல சுத்தி ... 57
தைலத்திற்கு கஷாய விதி ... 55
தைல பாகம் ... 56
தைலபாக உபயோகம் ... 56
தைல பாண்டம் ... 57
தைலப் பிறப்பு ... 55
தைல விறகு ... 57
தைல வேறுபாடு ... 59

தொ

தொந்தசுரக் கஷாயம் ... 92
தொந்தநாடி இன்னதெனல் 11

தோ

* தோலா யந்திரம் ... 44
தோஷம் ... 4
தோஷக் குறிப்பு ... 19

ந

நரஸிம்ம லேகியம் ... 161
நவப்பாஷாணத் தைலம் ... 197
நவமணிச்சிந்தூரம் ... 246
நன்னாரி ஷர்பத்து ... 276

நா

நாகப்பற்பம் ... 221
வேறு ... 222
வேறு ... 222
நாகரச சிந்தூரம் ... 241
நாகப்பழம் ஷர்பத்து ... 278
நாசிகாபரண மாத்திரை ... 154
வேறு ... 154
நாடி இலக்கணம் ... 5
,, தொந்தம் ... 11
நாரங்கத் தைலம் ... 191
நாரிகேளத் தைலம் ... 198
வேறு ... 199

நீ

நீரிறங்கக் கஷாயம் ... 97
நீரெரிச்சலுக்கு கஷாயம் ... 97
நீர் பரீட்சை ... 18
நீர் பேதிச் சூரணம் ... 105
நீர்வகை சுத்தி ... 26
நீலிங்யாதி கிருதம் ... 211

நூ

நூற்பயன் ... 2

நெ

நெய்வகை சுத்தி ... 27

நே

நேத்திராஞ்சனம் ... 300
வேறு ... 301
வேறு ... 301
வேறு ... 301

ப

பச்சைக்கருப்பூர மாத்திரை 126
ப்ஞ்சகவ்யக் கிருதம் ... 209
பஞ்சசத்துச் சிந்தூரம் ... 250
பஞ்சசூத மெழுகு ... 260
பஞ்சதிக்தக் கிருதம் ... 209
பஞ்சநவலோக மெழுகு ... 258
பஞ்சபூதம் ... 3
பஞ்சரத்ந சிந்தூரம் ... 242
புஞ்சலவண பற்பம் ... 218
ஷை மெழுகு ... 259
பஞ்சாக்கினி சிந்தூரம் ... 239
படர்தாமரைக்கு சிகிட்சை ... 293
வேறு ... 293
படிகார பற்பம் ... 214
வேறு ... 215
பட்டைவகை சுத்தி ... 28
பதினென் சித்தர் வணக்கம் 2
பத்திய இலம்பகம் ... 309
பத்தியம் (அகஸ்தியர்) ... 315
,, (போகர்) ... 315
,, (ப. சிந்தாமணி) 317
பப்பூலாரிஷ்டம் ... 308
பல்லாகாதி கிருதம் ... 212
பல்வலிக்கு கஷாயம் ... 101
பவழ பற்பம் ... 224
வேறு ... 225

பறங்கிச்சக்கைச் சூரணம் ... 113
வேறு ... 115
வேறு ... 115
பறங்கிப்பட்டை பத்தியம் ... 320
பற்ப இலம்பகம் ... 213
பற்பம் ... 66

பா

பாக இலம்பகம் ... 45
பாண்டுக்கு கஷாயம் ... 98
பாதரச பத்தியம் ... 319
பாலசஞ்சீவி மாத்திரை ... 125
பாலரக் ... 285
பால்வகை சுத்தி ... 27
பால்கருடக்கல் பற்பம் ... 226
பால்பெருக (ஸ்திரிகளுக்கு) 97
பாஷாணச் சுண்ணம் ... 220
பாஷாணவகை சுத்தி ... 37
பாஷண அண்டத்தைலம் ... 194
பாஸ்கர லவணம் ... 109

பி

பிண்டோற்பத்தி ... 3
பித்தநாடிச் சூத்திரம் ... 7
பித்தவாத தொந்தம் ... 12
பித்தசிலேத்தும தொந்தம் ... 12
பித்தசுரக் கஷாயம் ... 90
பித்தவாந்திக் கஷாயம் ... 91
பித்தக் கஷாயம் ... 95
பித்தவாயுக்கு ... 297
பித்தரோகபத்தியம் ... 312
பிரசிவித்தவர்கட்கு அழுக்குத் தள்ள ... 96
வேறு ... 97

பீ

பீநசரோகச் சிகிட்சை ... 200

பு

* புகை அடுப்பு ... 70
புடபாகத்திற்குச் சீலை ... 66
புடம்வைக்கவேண்டியவிதி ... 67
புட்பவகை சுத்தி ... 28
புதினா அரக் ... 225
புளிச் சுண்ணம் ... 219

பூ

பூநாகச் சூரணம் ... 106
பூநாக பற்பம் ... 224
பூரமாத்திரை ... 137
பூவரசங்காய் எண்ணெய் ... 179
வேறு ... 180

பெ

பெண்களுக்குப் பால்பெருக 97
பெருங்காயம் ... 102
பெரும் பாட்டுக்குச் சிகிச்சை 295

ம

மகாசுதர்சன சூரணம் ... 119
மகாதிராவகம் ... 291
வேறு ... 292
* மடக்குவாலை யந்திரம் ... 79
,, பயன் ... 80
மணலின் இலக்கணம் ... 69
மண்டூர மாத்திரை ... 140
மண்டைக் குத்தலுக்கு ... 295
மதுமேக லேகியம் ... 158
மயனத் தைலம் ... 194
வேறு ... 195
வேறு ... 195
வேறு ... 197
மரகத மாத்திரை ... 142
மருந்துண்ணுங் காலம் ... 25
மருந்தின் வேகம் தணிய கஷாயம் ... 103
வேறு கஷாயம் ... 108
மருந்தின் வேகத்தாலுண்டான சீதபேதி ... 104
மருந்தின் வேகத்தாலுண்டான இரத்தபேதி ... 104
வேறு ... 104
மல்லிச் சூரணம் ... 120
மனோமகுடதூப பொடி ... 295
மன்மதாஸ்திரம் ... 301
மஹாபூபதி பற்பம் ... 227
மஹாமண்டூர சிந்தூரம் ... 234
மஹாமதன காமேசுர லேகியம் ... 160
மஹாவாத வித்வம்சனி ... 144
மஹாவிரண ரோபணம் ... 304
மஹாவில்வாதி லேகியம் ... 173

மா

மாதுளை நெய் ... 206
மாத்திரைபாகம் ... 52
மாத்திரைதிரட்டும் பாகம் ... 53
மாத்திரை இலம்பகம் ... 12

மால்கிங்கினித் தைலம் ... 196
மாவுலஹும் ... 286
வேறு ... 288
வேறு ... 289
வேறு ... 290
மானகொம்பு பற்பம் ... 217
வேறு ... 218

மி

மிருகடும் பத்தியம் ... 310
மிருத்திஞ்ஜெய ரசம் ... 263

மு

முகப்பிரக்ஷாளன கஷாயம் 101
முடித்தைலச் சிறப்பு ... 56
முடித்தைலச் சூரணம் ... 118
முத்துச்சிப்பி பற்பம் ... 226
முயல் நெய் ... 206
முருகர் வணக்கம் ... 1
முருங்கப்பூ லேகியம் ... 156
முலைப்பாலெண்ணெய் ... 177
வேறு ... 178
முஸ்சபியேகூன் ... 298

மூ

மூசாம்பர மெழுகு ... 264
மூர்ச்சாநிர்வாபன வடி ... 153
மூலரோக பத்தியம் ... 318

மெ

மெருகன் கிழங்கு எண்ணெய் 189
* மெழுகுத் தைலகருவி ... 58
* வேறு ... 60
மெழுகு இலம்பகம் ... 258
மெழுகு ... 74
,, கொள்ளும் முறை ... ,,
,, நாட்பட்ட குணம் ... ,,

மே

மேகசாந்தி சூரணம் ... 108
மேகசிந்தாமணி மெழுகு ... 268
மேகத்தெண்ணெய் ... 189
மேகராஜாங்க கிருதம் ... 202
மேகராஜாங்க பற்பம் ... 220
வேறு ... 221
மேகவிரணக் களிம்பு ... 304

ரோ

ரோகநிதான இலம்பகம் ... 8
ரோஜாபூஷர்பத்து ... 280

ல

லசுனாதி கிருதம் ... 207

லி

லிங்கக்கட்டு சிந்தூரம் .. 252
வேறு ... 252
வேறு ... 253
லக்ஷ்மிநாராயண மாத்திரை 132

லே

லேகியத்திற்கு எண்ணெய் மிகுந்த விதையினங்களை சேர்க்கும் வழி ... 54

லோ

லோகவகை சுத்தி ... 38
லோஹாஸவம் ... 306

வ

வதனகாந்தி யெண்ணெய் ... 199
வேறு ... 200
வமனகஷாயம் ... 101
வேறு ... 102
வழிபடு கடவுள் வணக்கம் ... 2
வனமூலிகை சுத்தி ... 32
வஜ்ஜிர கபாட லேகியம் ... 176

வா

வாசனை திரவியம் சேர்க்குங் காலம் ... 53
வாதகப தொந்தம் ... 12
வாதசுர கஷாயம் ... 89
வேறு ... 90
வாதநாடி (சூத்திரம்) ... 6
வாதபித்த தொந்தம் ... 11
வாதரோக சிகிச்சை ... 296
வேறு ... 30[illegible]
வாதாங்குச எண்ணெய் ... 18[illegible]
வாதுமை ஷர்பத்து ... 27[illegible]
* வாலுகா யந்திரம் ... 6[illegible]
* வேறு பற்று ... 6[illegible]

வி

விக்கல் கஷாயம் ... 9[illegible]
விக்கல் சிகிச்சை ... 29[illegible]
விநாயகர் வணக்கம் ...
வியாக்கிரி கிருதம் ... 2[illegible]
விரண சஞ்சீவித் தைலம் ... 199
விரணப்பிரக்ஷாளன கஷாயம் 9[illegible]
விஷபேதி சங்கரணி ... 14[illegible]
விஷராஜாங்கத் தைலம் ... 18[illegible]
விஷ்ணுசக்கிர மாத்திரை ... 139

வீ

வீக்கத்திற்கு(கருப்பிணிகட்கு) 96

வீரமெழுகு (பேதி) ... 265
(சாதா) ... 265
வீரமெழுகு ... 267

வெ

வெங்கல நிமிளைச் சிந்தூரம் 245
வெங்கார பற்பம் ... 227
வெடியுப்பு சிந்தூரம் ... 302
வெண்டாமரை ஷர்பத்து ... 277
வெண்குட்டம் ... 295
வெந்திய லேகியம் ... 171
வெள்ளிப் பற்பம் ... 225
வெள்வங்க பற்பம் ... 227

வே

வேது கஷாயம் ... 99
வேறு ... 99
வேம்பு கற்பம் ... 294
வேர்வகை சுத்தி ... 28

வ்

வ்ருத்த கங்காதர சூரணம் ... 122

ஷ

ஷர்பத்து ... 75
,, இலம்பகம் ... 273
,, பாகம் ... 75
,, சருக்கரை அளவு ... 75
,, கஷாய விதி ... 75
,, பாகம் முதிர்ந்தால் ... 75
ஷர்பத்தே தீனர் ... 273
வேறு ... 273
,, ஜாபா ... 274
வேறு முறக்கம் ... 276
,, குள் நார் ... 280
,, ஈஜாஜ் ... 280
,, காஜர் ... 281
,, பனப்ஷா ... 281
,, பூஜாரி ... 281
,, ,, ... 282
,, ,, ... 282

ஜ

ஜம்பு கிருதம் ... 203
ஜரிஸ் ஷர்பத்து ...
ஜலம் காய்ச்சும் முறை ... 49
ஜவாரிஷ் முஜியே மேதா ... 274
ஜன்னி கஷாயம் ... 96
வேறு ... 96

ஜீ

ஜீவந்தி கிருதம் ... 207

ஜா

ஜான்னு மாத்திரை ... 138

ஸே

ஸேக கஷாயம் ... 102
வேறு ... 102
வேறு ... 102
வேறு ... 102

ஸ்

ஸ்நாந கஷாயம் ... 101
ஸ்நாந தைல பத்தியம் ... 320
ஸ்வரஸம் ... 45
ஸ்னுஹீ கிருதம் ... 208

* இந்தக் குறியுள்ளவை சித்திரவாயிலாக வாலையந்திரங்களினல் விளக்கப்பட்டுள்ளது.

# கண்ணுசாமியம்

என்னும்

## வைத்திய சேகரம்.

---

ஆயுள்வேத அபிவிருத்தியையும், ஜீவகாருண்ணியத்தையும் முன்னிட்டுவெளியிட்ட "சிகிச்சாரத்ந தீபம்" என்னும் வைத்தியநூலின் ஆசிரியராகிய வைத்திய வித்வன்மணி கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் தமது பெயர் உலகில் எக்காலத்தும் நிலைபெறுமாறு பரமரகசியமாக தான் கையாண்டு வந்த பல அரிய பெரிய பாகங்களையெல்லாம் சூர்ணம், மாத்திரை, லேகியம், எண்ணெய், தைலம், கிருதம், பற்பம், செந்தூரம், ஆக்கிரா[illegible]தலி வைகளை அணிவகுத்து வெண்பா, விருத்தம் [illegible] வல் முதலியவற்றுலியற்றி, ஆசிரியர் கருத்துவேறு[illegible]மலிருக்கும் பொருட்டு ஆங்காங்கு உரையுடன் கைபாகம், செய்பாகம், சித்திரவிளக்கம் முதலியவற்றால் [illegible]ளிதில் உணரும்படி எழுதி[illegible]ள்ளார். இத்தகைய நூல் ஒவ்வொரு வைத்தியர்களுக்கும் மிக்க உதவியாக இருக்கும் என்பது சத்தியம். விலை ரூ 1-8-0.

வேண்டியவர்கள் கீழ்க்கண்ட [illegible]லாசத்திற்கு எழுதி வி. பி. மூலமாக வரவழைத்துக்கொள்ளலாம்.

B. இரத்தின [illegible] அண்டு சன்ஸ்,

புஸ்தக வியாபாரிகள்;

7/32, நைனியப்ப நாயக்கன் வீதி,

பார்க் டவுன், சென்னை.